வெளியீடு 11-9-2002 Issued 11-9-2002

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

சனிக்கிழமை, செப்டம்பர் 8, 2001 – தொகுதி 11 – எண் 2

**Saturday the 8th September, 2001 – Volume 11 – No. 2**

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

Legislative Assembly Secretariat, Chennai - 600 009

[Price Rs. 3.00

V 2 11, 1 1 1
224482

8-9-2001

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **1. இரங்கற் குறிப்பு—** | |
| முன்னாள் உறுப்பினர் மறைவு | 285 |
| **2. வினாக்கள்—விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 286-300 |
| **3. சிறப்புக் கவன ஈர்ப்பு—** | |
| (அ) சென்னை, அம்பத்தூர் அருகே மேனாம்பேடு பகுதியில் விஷச் சாராயம் அருந்தி சிலர் இறந்தது | 300-311 |
| திரு. ப. ரங்கநாதன் | 301-302 |
| திரு. சி. ஞானசேகரன் | 302-304 |
| திரு. ஐ. கணேசன் | 304-305 |
| திரு. போளூர் வரதன் | 305-306 |
| திரு. டி. மணி | 306-307 |
| திரு. வை. சிவபுண்ணியம் | 307-308 |
| திரு. லா. சந்தானம் | 309-310 |
| மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் | 310-311 |

பக்கங்கள்

**3. சிறப்புக் கவன ஈர்ப்பு**—தொடர்ச்சி

(ஆ) ஓசூர் அரசுப் பண்ணையில் சந்தன மரம் வெட்டிக் கடத்தப்பட்டது 311-318

திரு. இ. புகழேந்தி 311-312

திரு. சி. ஞானசேகரன் 313-314

திரு. ஐ. கணேசன் 314-315

திரு. கே.சி. கருணாகரன் 315-316

திரு. வை. சிவபுண்ணியம் 316

* மாண்புமிகு திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு 316-318

**4. தகவல் கோரல்—**

(அ) சென்னை, காசிமேடு பகுதி மீனவர்கள் ஆந்திரக் கடற்கொள்ளைக்காரர்களால் கடத்தப்பட்டது 319-320

(ஆ) உறுப்பினர்களின் முன்னறிவிப்புகள் 320, 329

(இ) கீழ்பவானி அணையிலிருந்து காவிரி ஆற்றுக்குத் தண்ணீர் திறந்து விடுவது குறித்த செய்தி 328

**5. கவன ஈர்ப்பு—**

மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் எம்பிஏ. அஞ்சல்வழிப் படிப்பிற்கு நுழைவுத் தேர்வு எழுதாமலே மாணவர்களைச் சேர்த்தல் 320-326

**6. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)—**

தமிழ்நாடு நகரமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்டச் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2001 327



பக்கங்கள்

**7. அறிவிப்புகள்—**

(அ) சட்டமன்ற உறுப்பினர்களுக்கான புத்தறிவுப் பயிற்சிக் கருத்தரங்கு தள்ளிவைப்பு 328

(ஆ) உறுப்பினர்களுக்குத் தேநீரும், மதிய உணவும் வழங்கல் 360

(இ) காவிரி நதிநீர்ப் பிரச்சினை குறித்து அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம் 428-429

**8. மானியக் கோரிக்கைகள், 2001—2002, விவாதமும் வாக்கெடுப்பும்**-தொடர்ச்சி 329-480

**(அ) கோரிக்கை எண் 35 - பாசனம்**

**(ஆ) கோரிக்கை எண் 36 - பொதுப் பணிகள் - கட்டடங்கள்**

**(இ) கோரிக்கை எண் 38 - சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து**

**(ஈ) கோரிக்கை எண் 54 - பாசனம் குறித்த மூலதனச் செலவு**

**(உ) கோரிக்கை எண் 55 - பொதுப் பணிகள், கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு**

**(ஊ) கோரிக்கை எண் 56 - சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு**

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம் 329-330, 336, 341, 351, 354, 356, 359-360, 362, 376, 377, 378-379, 380, 383-384, 413, 415, 438, 444, 445-462, 463

பக்கங்கள்


**8. மானியக் கோரிக்கைகள், 2001–2002, விவாதமும் வாக்கெடுப்பும்**-தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 35 - பாசனம்

(ஆ) கோரிக்கை எண் 36 - பொதுப் பணிகள் - கட்டடங்கள்

(இ) கோரிக்கை எண் 38 - சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து

(ஈ) கோரிக்கை எண் 54 - பாசனம் குறித்த மூலதனச் செலவு

(உ) கோரிக்கை எண் 55 - பொதுப் பணிகள், கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு

(ஊ) கோரிக்கை எண் 56 - சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு-தொடர்ச்சி

| | |
|---|---|
| திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் | 335, 343, 360 - 364, 366- 370, 373 - 376, 378 - 379, 381 - 383, 386 |
| *திரு. அ. பாப்பா சுந்தரம் | 386 - 393 |
| திரு. ரா. ஈஸ்வரன் | 332, 338, 348, 352, 355 - 356, 358 393 - 398 |
| *திரு. மு. அப்பாவு | 333, 340, 345, 352, 354 - 355, 359, 399 - 411, 413 |
| திரு. [illegible]கம் | 332, 339, 349,353, 353, 413 - 421 |


தமிழ்நாடு ஆவணக்காப்பகம்
224480
சென்னை-600 008



பக்கங்கள்


**8. மானியக் கோரிக்கைகள், 2001–2002, விவாதமும் வாக்கெடுப்பும்**-தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 35 - பாசனம்

(ஆ) கோரிக்கை எண் 36 - பொதுப் பணிகள் - கட்டடங்கள்

(இ) கோரிக்கை எண் 38 - சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து

(ஈ) கோரிக்கை எண் 54 - பாசனம் குறித்த மூலதனச் செலவு

(உ) கோரிக்கை எண் 55 - பொதுப் பணிகள், கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு

(ஊ) கோரிக்கை எண் 56 - சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு-தொடர்ச்சி

| | |
|---|---|
| *திருமதி நளினி மனோகரன் | 421 - 424 |
| திரு. ஜி. பழனிசாமி | 332, 339, 349, 353, 356, 359 425 - 428, 429 - 434 |
| திரு. டி. மணி | 434 - 437 |
| திரு. போளூர் வரதன் | 438, 439, 440 - 444 |

**9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** 480 - 481

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஆவணி 23, விசு – திருவள்ளுவர் ஆண்டு 2032

## 2001 செப்டம்பர் 8, சனிக்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனஇரண்டின்
நீள்வினையால் நீளும் குடி"

முயற்சி, நிறைந்த அறிவு என்று சொல்லப்படும் இரண்டினையும் உடைய இடைவிடாத செயலால் ஒருவனுடைய குடி உயர்ந்து விளங்கும்.

## 1. இரங்கற் குறிப்பு

### முன்னாள் உறுப்பினர் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர் திரு. ப. வெங்கடேச சோழகர் அவர்கள் 3-7-2001 அன்று மறைவுற்றதாக வரப்பெற்ற செய்தியினைப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ப. வெங்கடேச சோழகர் அவர்கள், 1952 முதல் 1957 வரை நீடாமங்கலம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு செவ்வனே பணியாற்றியுள்ளார்.

அவரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவை சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெரியவருக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்துநின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)*

[2001 செப்டம்பர் 8

## 2. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள். வினா எண் 62. திரு. ப.வெ. தாமோதிரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**62-**

### மருந்தாளுநர்

***5181-திரு. ப.வெ. தாமோதிரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனையில் மருந்தாளுநர் எண்ணிக்கை மூன்றாக உள்ளதை ஐந்தாக உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனையில் தற்போது 3 மருந்தாளுநர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். இப்பணியாளர்களின் எண்ணிக்கை அம்மருத்துவமனைக்குப் போதுமானதாக இருந்துவருகிறது.

(ஆ) வினா எழாது.

**திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம், உடுமலைப்பேட்டையில் மருந்தாளுநர்களின் எண்ணிக்கையை 5 ஆக உயர்த்திக் கொடுக்க அமைச்சர் அவர்கள் இங்கே அறிவித்ததற்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ. சிவசாமி.



2001 செப்டம்பர் 8]

**திரு. செ. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் நகராகத் திகழ்கின்ற திருப்பூர் நகரிலுள்ள அரசு மருத்துவமனைக்கு—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுந்தரம். உடுமலைப்பேட்டையா?

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவான கேள்விதான். பல அரசு மருத்துவமனைகளில் மயக்க மருந்து கொடுக்கின்ற டாக்டர்கள், அதாவது Anaesthetist என்ற—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்கு அமைச்சரிடம் பதில் இருக்காது.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் எல்லாக் கேள்விகளுக்கும் விளக்கமாக பதில் சொல்வார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்ல முடியும் என்றாலும்கூட, அமைச்சரிடம் கலைக்களஞ்சியம் ஒன்றும் இருக்காது. உடுமலைப்பேட்டையைப் பற்றிக் கேட்டால்தான் சொல்ல முடியும். திரு. சுந்தரம், உட்காருங்கள். தனிக் கேள்வியாகக் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடுமலைப்பேட்டை போன்ற மருத்துவமனைகளிலே மருந்தாளுநர்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது என்ன போன்ற? சரியாக வராது.

**திரு. சி. ஞானசேகரன்:** ஓரே ஒரு நிமிடம். அந்தக் கேள்விதான்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 63, திரு. டி. மணி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**63-**

### குடிநீர்

***398-திரு. டி. மணி:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2001 செப்டம்பர் 8

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், கடையல் கிராமம், வலிய ஏலா பகுதியில் குடியிருக்கும் விவசாய மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க அரசு என்ன நடவடிக்கை மேற்கொண்டுள்ளது?

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வலிய ஏலா பகுதியானது கடையல் பேரூராட்சியின் உட்கிடை குடியிருப்பு ஆகும். இப்பேரூராட்சியின் தற்போதைய மக்கள்தொகை 23,000 ஆகும். கடையல் பேரூராட்சி முழுமைக்கும் குடிநீர்த் திட்டம் நிறுவிட கோதை ஆற்றில் ஏற்கெனவே அமைக்கப்பட்ட இரண்டு நீர் உறிஞ்சு கிணறுகளை நீராதாரமாகக் கொண்டு, ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. ஆய்வுப் பணிகள் முடிவடைந்ததும், விரிவான திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, நிர்வாக ஒப்புதல் பெற்று, திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று பேரவைக்குத் தகவலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-05*

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வலிய ஏலாவிலே பாதுகாக்கப்பட்ட குடிநீர் வேண்டும் என்பது – ஏற்கெனவே கடையல் பேரூராட்சியிலே ஒரு குடிநீர்த் திட்டம் செயல்படுகிறது. ஆனால், அங்கிருந்து இங்கே தண்ணீரைக் கொண்டுவர வேண்டுமென்றால் 6 அல்லது 7 கிலோமீட்டர் இருக்கும். அதற்கு அருகில் கோதையாற்றினுடைய ஒரு கிளை செல்கிறது. அதிலே ஏதாவது check dam கட்டி அந்தத் தண்ணீரை எடுத்து, சுத்தம் செய்து, filter செய்து அந்தப் பகுதி மக்களுக்குக் கொடுப்பதற்கான புதிய ஒரு திட்டத்தை வகுத்து அதன் மூலமாக அதைச் செய்ய முடியுமா என்பதுதான் என்னுடைய கேள்வி. ஏனென்றால் அந்தப் பழைய திட்டத்திலே, இப்போது செயல்படுகின்ற திட்டத்திலே, ஏற்கெனவே ஆற்றுக்குள்ளே போட்டிருக்கின்ற கிணறுகளில் ஒரு கிணறு சரிந்துவிட்டது; ஒரு கிணற்றிலே சுத்தமான தண்ணீர் இல்லை. எனவேதான் இப்படிப்பட்ட ஒரு திட்டத்தை வகுத்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** அரசு பரிசீலிக்கும் என்பதை பதிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2001 செப்டம்பர் 8]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 64, திரு. எஸ். தாமோதரன், திரு. வது. நடராஜன். மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**64-**

## பனை மரத் தொழிலாளர் வாரியம்

***586-திரு. எஸ். தாமோதரன்:**
**திரு. வ.து. நடராஜன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) பனை மரம் ஏறும் பல இலட்சம் தொழிலாளர்கள் நலன் காக்க பனை மரத் தொழிலாளர் வாரியம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அரசாணை நிலை எண் 166, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 18-10-2000-ல் தமிழ்நாடு பனை மரத் தொழிலாளர்கள் நல வாரியத்தினை அமைத்து அரசு ஆணையிட்டுள்ளது.

(ஆ) 18 வயது நிரம்பிய மற்றும் 60 வயதுக்குட்பட்ட பனை மரம் ஏறும் மற்றும் பதநீர் தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள உடலுழைப்புத் தொழிலாளர்கள் இந்த வாரியத்தில் ரூ.100/- செலுத்தி பதிவுசெய்து கொள்ளலாம். பின்னர் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை ரூ.10/- செலுத்தி பதிவினைப் புதுப்பித்துக்கொள்ள வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பனை ஏறுகின்ற தொழிலாளர்களுக்கு வாரியம் அமைக்க வேண்டுமென்று கடந்த ஆட்சியிலே கேட்டபோது, பத்தோடு பதினொன்று, அத்தோடு இதுவொன்று என்று சேர்த்து மொத்தமாக வாரியம் அமைத்து விட்டார்கள். ஆனால் நாங்கள் கேட்டது, கேட்பது, பனை ஏறும் தொழிலாளர்களுக்குத் தனி வாரியம். பனை ஏறுகின்ற தொழிலாளர்கள் ஆந்திராவில் ஒரு பனைக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.10 செலுத்தி பதநீர்

இறக்கி, அவர்கள் விருப்பப்படி சுண்ணாம்பு போட்டும் பதநீர் இறக்கலாம். சுண்ணாம்பு இல்லாமலும் பதநீர் இறக்கி விற்பதற்கு அனுமதி அளிப்பதுபோன்று...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுண்ணாம்பு சேர்க்கவில்லை என்றால் கள் ஆகிவிடும்.

**திரு. மு. அப்பாவு:** அது அவர்களுடைய விருப்பம்; கள் ஆகாது. சுண்ணாம்பு சேர்க்காமல் இருந்தால் தனி பதநீர். பதநீர் என்பது பனை மரத்திலிருந்து எப்படி வருகிறதோ, அதை அப்படியே இறக்கிக் குடித்தால்தான் மிகப் பெரிய பிணி நீக்கக்கூடிய மருந்தாகவும், அமிர்தமாகவும் இருக்கிற காரணத்தால், ஆந்திராவில் இருப்பது போன்று, ஆண்டு ஒன்றுக்கு 10 ரூபாய் செலுத்தி பதநீரை இறக்கி, அந்தத் தொழிலாளர்கள் விருப்பப்படி விற்பதற்கு அனுமதி அளிப்பதுபோல, நமது மாநிலத்திலும் அனுமதி அளிக்க வேண்டும். அளிப்பீர்களா என்று தங்கள் மூலமாக அறிந்துகொள்வதோடு, பனை ஏறும் தொழிலாளர்கள், வீடு இல்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். மற்ற ஏழை எளியவர்களுக்கு, தாழ்த்தப்பட்டவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுவதுபோல அவர்களுக்கு அரசு இலவச வீடு கட்டிக் கொடுக்குமா என்பதையும் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வாரியம் அமைக்கப்பட்டது முதல் வாரியத்திற்குட்பட்ட அனைத்து உடலுழைப்புத் தொழிலாளர்களுக்கும் இருக்கின்ற எல்லாப் பயன்களையும் பனை ஏறும் தொழிலாளர்களும் பெற்று வருகிறார்கள். அதற்கு வேண்டிய நலத் திட்டங்கள் எல்லாம் வகுக்கப்பட்டு வருகின்றன. குழு மற்றும் தனி நபர் விபத்து உதவி, ஈமச் சடங்கு உதவித் தொகை, இயற்கை மரண உதவித் தொகை, திருமண உதவித் தொகை, கல்வி உதவித் தொகை என்று எல்லா உதவித் தொகைகளும் எல்லா நல வாரியங்களிலும் இருப்பதைப்போலவே அந்தப் பனை ஏறும் தொழிலாளர்களுக்கு என்று அமைக்கப்பட்டிருக்கிற அந்த வாரியத்திலும் இருக்கிறது என்பதையும் அது தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அப்படியே இறக்கிய, பனை மரத்திலிருந்து வருகின்ற பதநீரை நேரடியாகவே பருகுகின்ற அந்தத் திட்டம் என்பது கொள்கை முடிவு சம்பந்தமானது. அதை இந்த நேரத்திலே தெரிவிக்க இயலாது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தப் பனை ஏறும் தொழிலாளர்களுக்கு வாரியத்தை அமைத்து பல உதவிகளைச் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டு வருகிற நேரத்தில், குறிப்பாக, கன்னியாகுமரி மாவட்டத்தில் பனை வெல்லக் கூட்டுறவு சம்மேளனத்தினுடைய கட்டுப்பாட்டில் இருக்கின்ற பனை மரங்களை சமீபத்தில் முறித்து விற்றுவிட்டார்கள். அதுபோல் பல பகுதிகளிலும் பனை மரம் இல்லாத ஒரு சூழ்நிலை இன்று உருவாக்கப்பட்டுள்ளது. எனவே, பனை வெல்லக் கூட்டுறவு சம்மேளனத்தினுடைய கட்டுப்பாட்டில் இருக்கின்ற பனை மரங்களை முறிக்காமல் இருக்க, அதைத் தடை செய்வதற்கு அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்து பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பின்பு ஆய்ந்து முடிவு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொள்ளாச்சி ஜெயராமன்.

**திரு. வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனை ஏறும் தொழிலாளர்களுக்கு பனை ஏறும் வாரியத்தின் மூலம் என்னென்ன பயன்கள் கிடைக்கின்றனவோ, அவை அனைத்தும் தென்னை மரம் ஏறும் தொழிலாளர்களுக்கும் கிடைக்குமா என்பதைத் தங்கள் மூலம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கென தனியாக ஒரு வாரியம் இல்லை. ஆனால், தென்னை மரம் ஏறும் தொழிலாளர்களுக்கும் பனை மரம் ஏறும் தொழிலாளர்களுக்குக் கிடைத்து வருகின்ற எல்லாச் சலுகைகளும் பொருந்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வது. நடராஜன்.

**திரு. வது. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பசும்பொன், இராமநாதபுரம் மாவட்டங்களில், அந்த வாரியத்தில் இதுவரையில் எத்தனை உறுப்பினர்கள் சேர்ந்திருக்கிறார்கள் என்பதைத் தங்கள் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

[2001 செப்டம்பர் 8

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வாரியம் தொடங்கப்பட்டு இன்னும் ஓராண்டு முடியவில்லை. கடந்த ஆண்டு, 18-10-2000 முதல் உறுப்பினர்கள் பதிவு செய்யப்பட்டு வருகிறார்கள். மாவட்ட வாரியாக கணக்கு இல்லை. ஆனால், 31-7-2001 முடிய இந்த வாரியத்தில் மொத்தம் 7,837 பனை மரத் தொழிலாளர்கள் தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கா.பூ. முனுசாமி.

**திரு. கா.பூ. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனை ஏறும் தொழிலாளர்களுக்கு வாரியம் அமைத்ததற்கு நன்றி தெரிவித்துக்கொள்வதோடு, புதிதாக அமைக்கப்பட்ட அந்த வாரியத்தில், அந்தத் தொழிலாளிகள் தெரிந்துகொள்கின்ற வகையிலே, அந்தத் தொழிலாளிகள் இருக்கின்ற பகுதியிலே விளம்பரம் ஏதாவது செய்யப்படுகிறதா? அப்படி விளம்பரம் செய்யப்பட்டால்தான் நயக்கு என்று ஒரு வாரியம் அமைக்கப்பட்டிருக்கிறது என்று அந்தத் தொழிலாளிகள் அறிந்துகொள்வார்கள். அதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் என்ன கூறுகிறார்கள் என்பதை அவைத் தலைவர் வாயிலாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாரியம் அமைக்கப்பட்டது பற்றி சட்டமன்றத்திலே அறிவிக்கப்பட்டது. அதன் மூலம் அரசு தன்னுடைய இயந்திரங்களைப் பயன்படுத்தி, அந்த நல வாரியத்தில் உறுப்பினர்களைச் சேர்க்கின்ற முயற்சியிலே ஈடுபட்டுத்தான், எல்லோரும் அறிந்துதான் இவ்வளவு பேர் இதிலே சேர்ந்திருக்கிறார்கள். எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்து மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, இப்படி ஒரு நல வாரியம் அமைக்கப்பட்டிருக்கிறது, அதிலே எல்லோரும் சேரவேண்டும் என்று அறிவிக்கின்ற முயற்சிகளை எடுத்து, துறையின் அலுவலர்கள் மூலமாக அந்தத் தொழிலாளிகளுக்குத் தெரிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மரபுசாராத் தொழிலாளர்கள் வாரியத்திலே அரசினுடைய ஆணைப்படி என்றைக்குத் தங்கள் பெயரைப் பதிவு செய்துகொள்கிறார்களோ, அன்றைக்கு மறுநாளோ, அதற்குப் பிறகோ



2001 செப்டம்பர் 8]

இறந்துவிட்டால், அவர்களுக்கு ஒரு இலட்சம் ரூபாய் நஷ்டஈடு தருவதாக அறிவிக்கப்பட்டும், அப்படி இறந்த பல பேர்களுக்கு அந்தத் தொகை அளிக்கப்படாமல் இருக்கிறதே, அதை இந்த அரசு அளிக்க முன்வருமா? அப்படி எத்தனை பேர் பட்டியலில் இருக்கிறார்கள் என்பதைத் தங்கள் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை நலத் திட்ட உதவிகள் கோரி 29 மனுக்கள் பெறப்பட்டிருக்கின்றன. அவற்றில் 8 மனுக்கள் தவறுதலாக இருந்ததால் திருப்பி அனுப்பப்பட்டுவிட்டன. மீதியுள்ள 21 மனுக்களில் 19 மனுக்கள், சம்பந்தப்பட்ட--Field Officers--களை அலுவலர்களின் தீவிர ஆய்வில் இருக்கின்றன. 2 மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு, அவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ. சிவசாமி.

**திரு. செ. சிவசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனை மரத் தொழிலாளர்கள் வாரியம் என்று இருப்பதை, பனை மற்றும் தென்னை மரத் தொழிலாளர்கள் வாரியம் என்று பெயர் மாற்றி, தென்னை மரம் ஏறுகின்ற பல இலட்சக்கணக்கான தொழிலாளர்களுடைய நலனையும் பாதுகாக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் ஆலோசனை நிச்சயமாகப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்.

**திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனை மரம் ஏறுகின்ற தொழிலாளர்கள் வருடத்திலே 5 மாதங்கள்தான் பனை மரம் ஏறுகின்றார்கள். மீதம் 7 மாதங்கள், அவர்கள் அந்த 5 மாதங்களில் சம்பாதித்த பணத்தை வைத்துக்கொண்டுதான் அவர்களுடைய குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பனை ஏறுகிற தொழிலாளர்களுடைய வறுமையைப் போக்குகிற வகையிலே, ஏழு மாதங்களுக்கு ஓய்வெடுக்கிற நிலையிலே இருக்கிறவர்களுக்கு, அந்த ஏழு

மாதங்கள் அரசினுடைய உதவிகள் ஏதாவது கிடைப்பதற்கு வாய்ப்புண்டா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-15*

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனைத் தொழிலாளர்களுக்கு பனை ஏறுகின்ற தொழில் மட்டுமல்ல, அதைவிட பனை சம்பந்தப்பட்ட, பனை மரத்திலேயிருந்து கிடைக்கக்கூடிய பொருள்கள் சம்பந்தப்பட்ட, ஏராளமான தொழில்கள் இருக்கின்றன. அந்தத் தொழில்கள் எல்லாம் வருடம் முழுவதும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆஸ்டின்.

**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனை மரத் தொழிலாளர் வாரியம்போல, கட்டடத் தொழிலாளர்களுக்கும் தனியாக வாரியம் அமைக்கப்பட்டிருக்கிறது. இப்படிப் பல்வேறு தொழில்களைச் செய்யக்கூடிய தொழிலாளர்களுக்காக தனி வாரியம் அமைக்கப்பட்டிருப்பதைப்போல, கடலிலே மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்களுக்கு, அந்த மீன் பிடிக்கும்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆஸ்டின், இது பனை மரம் சம்பந்தப்பட்டது. அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனை மரத் தொழிலாளர்கள் வாரியத்தில் பல இலட்சக்கணக்கானவர்கள் இருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. ஆனால், 7,000 பேர்தான் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, அதிலே தீவிர கவனம் செலுத்த அரசு முயற்சிக்குமா? அதுமட்டுமல்லாமல், பாக்கு மரம் ஏறும் தொழிலாளர்களையும் இந்த நல வாரியத்திலே உறுப்பினர்களாகச் சேர்க்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை நான் சொன்ன கணக்கின்படி 7,837 பேர் இதிலே தங்களை உறுப்பினர்களாகச் சேர்த்துக்கொண்டிருக்கிறார்கள். மேலும் ஏராளமான உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கு, அந்தத் தொழில் செய்கின்றவர்களை இதிலே சேர்த்து, அந்தப் பலன் அவர்களுக்குக் கிடைப்பதற்கு வேண்டிய முயற்சிகளை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 65, திரு. நா. சந்திரமோகன், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர்.

**65–**

## மீன்பிடித் துறைமுகம்

***3685–திரு. நா. சந்திரமோகன்:**

*மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–*

*(அ) சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசல் மீனவர் கிராமத்தில் மீன்பிடித் துறைமுகம் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத், மீன் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசல் மீனவர் கிராமத்தில் மீன்பிடித் துறைமுகம் அமைக்க அரசிடம் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சீர்காழி தொகுதியிலுள்ள திருமுல்லைவாசல் மீனவர் கிராமத்தில் இயற்கையாக அமைந்துள்ள முகத்துவாரத்தில் சுமார் 100 விசைப் படகுகளும், 50 சிறிய படகுகளும் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றன. அந்த கிராமத்துக்குப் பக்கத்திலுள்ள கிராமங்களான தொடுவாய், கூழையார், கீழமூவர்கரை, மேலமூவர்கரையைச் சேர்ந்த மீனவர்களின் விசைப் படகுகள் அனைத்தும் திருமுல்லைவாசலிலிருந்துதான் மீன்பிடித் தொழில் செய்து வருகின்றன. மீன் வளத் துறையின்மூலம் சிறிய மீன்பிடித் துறைமுகம் அமைத்துத் தர அரசிடம் இந்த ஆண்டு திட்டம் இல்லையென்றாலும், மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் அனுமதியோடு சிறிய மீன்பிடித் துறைமுகத்தை அடுத்த நிதியாண்டில் அமைத்துத் தர அரசு முன்வர வேண்டுமென்று மீனவ மக்களின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கையை இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2001 செப்டம்பர் 8

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 66, திருமதி கே. பவானி கருணாகரன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

**66**-

### உருட்டாலை

***960-திருமதி கே. பவானி கருணாகரன்:**

*மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-*

*(அ) அரக்கோணம் நகரத்தில் உள்ள எஃகு உருட்டாலை* (Rolling Mill) *மூடப்பட்டுள்ளதை மீண்டும் செயல்படுத்த திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அரக்கோணம் நகரத்திலுள்ள தமிழ்நாடு எஃகு ஆலையை மீண்டும் செயல்படுத்த திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திருமதி கே. பவானி கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைத் தொட்டு வணங்கி, என் தொகுதி மக்களின் சார்பாக இந்த வினாவைக் கேட்டுக்கொள்கிறேன். அரக்கோணம் நகரத்தில் இயங்கிக்கொண்டிருந்த எஃகு ஆலை கடந்த ஆட்சியிலே மூடப்பட்டுவிட்டது. இன்றைக்கு 2,000 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மூடப்பட்ட ஆலையில் உருக்காலை, உருட்டாலை என இரு பிரிவுகள் உள்ளன. அதில் உருட்டாலையை மட்டும் திறந்தால் 800 குடும்பங்களாவது பிழைக்கும். அதனால் உருட்டாலை திறக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10—20*

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்நிறுவனம் 1993-94 ஆம் ஆண்டு வரை இலாபத்தை



2001 செப்டம்பர் 8]

ஈட்டி வந்தது. பிறகு அது நஷ்டத்தில் இயங்க ஆரம்பித்தது. இந்த நிறுவனத்திற்கு புத்துயிர் ஊட்டும் பணி பல வழிகளிலும் ஆய்வு செய்யப்பட்டது. இதுசம்பந்தமாக நியமிக்கப்பட்ட மிக்கான் நிறுவனம், ரூபாய் 270 கோடி முதலீட்டில் ஒரு சிறிய ஊதுலையை அமைப்பதற்கான சாத்திய அறிக்கையை அளித்தது. இருப்பினும், இது அதிகப்படியான முதலீடு மற்றும் குறைந்த I.R.R. காரணமாக தமிழ்நாடு எஃகு நிறுவனத்தால் நிறுவ இயலாமல் போனது. இதுபோன்ற மிக்கானின் இன்னொரு கருத்தான உருளை ஆலைக்கு புத்துயிர் அளிப்பதற்கான குறிப்பும் உயர்ந்த முதலீடு மற்றும் குறைந்த I.R.R. காரணமாக செயலாக்கம் பெறவில்லை. அரசினால் அமைக்கப்பட்ட திரு. S.V.S. ராகவன் தலைமையிலான வல்லுநர் குழு மேற்படி நிறுவனத்தை மூடி அதன் சொத்துக்களை விற்பனை செய்ய அறிவுறுத்தியது. ராகவன் குழு அறிக்கையின்படி, மேற்படி நிறுவனத்தின் 1996-97 வரையிலான மொத்த நஷ்டம் ரூ. 12 கோடியாகும். Equity மூலதனம் ரூ.3.92 கோடியாகும். இதன்படியான எதிர்மறை மதிப்பு ரூ. 8 கோடிக்கு மேலாகும். தமிழ்நாடு எஃகு நிறுவனம் வெளிச் சந்தையில் ஏனைய போட்டியாளர்களிடையே போட்டியிட முடியாது என்பதையும், குறைந்த நிலையிலான இறக்குமதியால் இது சாத்தியமில்லை என்பதையும் இந்தக் குழு அறிந்தது. மேலும் அரசுத் துறைகளை அந்நிறுவனத்தின் தேவைகளுக்குக் கூடுதல் விலையில் மேற்படி நிறுவனத்திடமிருந்துதான் வாங்க வேண்டும் என்று வற்புறுத்த முடியாது என்பது ஒன்றாகும். அதனால் கடந்த ஆட்சியில் 16-6-1998-ல் தமிழ்நாடு எஃகு நிறுவனத்தின் செயல்பாட்டை நிறுத்தவும், அதில் பணியாற்றிய பணியாளர்களை தன்னிச்சை ஓய்வில் செல்லவும் அனுமதித்தது. பணியாளர்கள், ஆலை மூடப்படுவதால் ரூபாய் 2 இலட்சம் வரைக்கும் கூடுதலான நஷ்ட ஈடும் குறைந்த தொகையாக நபர் ஒருவர் 50 ஆயிரமும் பெற்றனர். தமிழ்நாடு எஃகு நிறுவனத்தின் இயக்குநர் குழுவும் மேற்படி நிறுவனத்தை மூடிவிட அனுமதித்தது. இந்நிறுவனம் தனது உற்பத்தியை எஃகு உருக்கும் பகுதியில் 26-6-1997 முதலும், உருளை ஆலையில் 17-8-1997 முதலும் நிறுத்தியது. மேற்படி நிறுவனத்தை மூடுவதற்கான அனுமதியை அரசு அளித்ததன் பேரிலும் இந்நிறுவனம் உயர் நீதிமன்றத்தில் ஒரு மனுவை தாக்கல் செய்தது. இதற்கிடையில் திரு. ரங்கநாதன் மற்றும் கம்பெனி உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த இன்னொரு மனுவில் உயர் நீதிமன்றம் மேற்படி நிறுவனத்தை மூடிவிட உத்தரவிட்டது. மேலும் சென்னை உயர் நீதிமன்றம் C.P.N.402/2000 நாள் 24-1-2001-ல் தனது C.P.N.378/97-ல் அளித்த ஆணையை உறுதிப்படுத்தி, எஃகு நிறுவனத்தை மூடிவிடவும் கலைத்தல் அதிகாரியை நியமித்தும் அவர்களை இந்நிறுவனத்தின் சொத்துக்களை ஏற்றுக்கொள்ளவும் ஆணையிட்டது. இது....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இனிமேல் திறப்பதற்கு உத்தேசம் இல்லை என்று சொல்லி முடித்துவிடுங்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** காரணத்தைச் சொல்லிவிடுகின்றேன். இது, தொழில் வளர்ச்சிக் கழகத்தை, எஃகு நிறுவனத்தின் சொத்துக்களை விற்பதற்கும் ஆணையிட்டது. இதன்படி கலைத்தல் அதிகாரி எஃகு நிறுவனம் மற்றும் அதன் சொத்துக்களை 2-5-2001 மற்றும் 3-5-2001-ல் ஏற்றுக்கொண்டார். இதனால் இந்த ஆலை மீண்டும் திறக்கப்பட சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைப் பேரவைத் தலைவர் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.எம். நரசிம்மன்.

**திரு. பி.எம். நரசிம்மன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த எஃகு உருட்டாலை மூடப்பட்டுவிட்டதால், அதில் பணியாற்றிய வேலை இழந்த தொழிலாளர்களுக்கு மீண்டும் வேறு இடங்களில் பணி கொடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த உருக்காலையில் பணிபுரிந்தவர்கள் மொத்தம் 727 பேர். தன்னிச்சையாக ஓய்வில் சென்ற பணியாளர்கள் 722 பேர். மற்ற அரசுத் துறைகள், நிறுவனங்களில் பணியமர்த்தம் செய்யப்பட்ட பணியாளர்கள் 126 பேர் என்று பேரவைத் தலைவர் மூலமாக அறிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மாவட்டத்தில் அரசுத் துறை சார்பாக இயங்கி வந்த ஆலைகள் இரண்டு. ஒன்று இந்த அரக்கோணம் ஸ்டீல் ப்ளாண்ட். இன்னொன்று அரியூர் கூட்டுறவு நூற்பாலை. 1996 டிசம்பரிலே அரியூர் கூட்டுறவு நூற்பாலையும் மூடப்பட்டுவிட்டது. அதேபோல 1996-ல் இந்த எஃகு ஆலையும் மூடப்பட்டுவிட்டது. அதற்காக என்று infrastructure நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன, கட்டடங்கள் இருக்கின்றன. ஒருவேளை இந்த எஃகு ஆலையை இந்த அரசால் நடத்தமுடியாவிட்டாலும்கூட, தொழில் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கலந்து ஆலோசித்து வேறு ஒரு தொழிற்சாலையை, அந்த இடத்திலே நிறுவி, அங்கிருக்கக்கூடிய





எங்களுடைய மாவட்ட மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்கு முன்வருவாரா? வேறு எந்தத் தொழிலை அங்கே தொடங்கினால் சாத்தியக்கூறுகள் இருக்கும் என்பதைப்பற்றி இந்த அரசு ஆராய்ந்ததா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைக் கலந்து ஆலோசித்து மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதை உங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10—25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரக்கோணம் உருட்டாலை மூடப்பட்டது பற்றிய கேள்வி. உருக்காலை, உருட்டாலை, இரும்பாலைகள் தமிழகத்திலே மூடப்படுவது என்பது மிகவும் வேதனைக்குரிய ஒன்று. ஆகவே, இப்படிப்பட்ட தொழில்கள் பாதிக்காதவண்ணம் நம்முடைய தமிழ்நாடு அரசு, குறிப்பாக தொழில் துறை அமைச்சர் அவர்கள் இதிலே சிறப்புக் கவனம் எடுத்து, இப்படிப்பட்ட பாதிப்புகள் ஏற்படுவதற்குரிய உண்மையான காரணத்தைக் கண்டறிந்து, அதை நிவர்த்தி செய்வதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும். குறிப்பாக, அரசுத் துறை அல்லது பொதுத் துறை சார்பில் இருக்கின்ற நிறுவனங்கள் நசிவடைகின்றபோது, அதிலே இருக்கின்ற தொழிலாளர்களும் பாதிக்கப்படுகின்றார்கள். ஆகவே, இப்படிப்பட்ட நிறுவனங்களை மூடிவிடாமல் பாதுகாப்பதற்கும், தொழிலாளர்களுடைய வாழ்க்கைக்கு உத்தரவாதம் அளிப்பதற்குமான முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனம், கூட்டுறவுத் துறை நிறுவனம், அரசுத் துறை நிறுவனம் போன்றவை நஷ்டத்தில்தான் இயங்குகின்றன. இதற்கு என்ன காரணம் என்று ஒரு குழுவை நியமித்து, அந்தக் குழுவின் பரிந்துரைப்படி இந்த ஆலைகளுக்குப் புத்துயிர் கொடுப்பதற்கு முழு அளவிலான செயல்பாடுகளை இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் செயல்படுத்த அறிவுரை கூறியிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[2001 செப்டம்பர் 8

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. சேலம் உருக்காலை சம்பந்தமாக கடந்த ஆட்சிக் காலத்தில் ஒருமனதாக இந்தச் சட்டமன்றத்திலே ஒரு தீர்மானம் நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டு இரண்டு மூன்று வருடங்கள் கடந்த பின்னாலும்கூட, அதுபற்றி எந்தவிதமான மறுபரிசீலனையும் செய்யாத நிலையில், இப்போதைய நம்முடைய அரசு அதேபோன்றதொரு ஒருமனதான தீர்மானத்தை எடுக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே, 16-6-1998 அரசாணை எண் 222-லே இதை மூடும்படியான ஒரு சூழ்நிலை ஏற்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் கருணாகரன் கேட்பது சேலம் உருக்காலைபற்றி, அமைச்சரிடம் இருப்பது அரக்கோணம் உருட்டாலைபற்றி. அமைச்சர் உட்காருங்கள். திரு. கருணாகரன் இதற்குத் தனிக் கேள்வி கேளுங்கள்.

வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 3. சிறப்புக் கவன ஈர்ப்பு

### (அ) சென்னை, அம்பத்தூர் அருகே மேனாம்பேடு பகுதியில் விஷச் சாராயம் அருந்தி சிலர் இறந்தது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சென்னை அம்பத்தூர் அருகே மேனாம்பேடு பகுதியில் விஷச் சாராயம் அருந்தி சிலர் இறந்தது குறித்து ஒத்திவைப்புத் தீர்மானமாக திரு. சி. ஞானசேகரன், திரு. ஜி.கே. மணி அவர்களும், கவன ஈர்ப்பு அறிவிப்பாக திரு. டி. மணி, திரு. ப. ரங்கநாதன் அவர்களும், சிறப்புக் கவன ஈர்ப்பாக திரு. ஐ. கணேசன், திரு. வை. சிவபுண்ணியம், திரு. போளூர் வரதன், திரு. லா. சந்தானம் அவர்களும் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்ள அனுமதி அளிக்கிறேன். இதுபற்றிச் சுருக்கமாக எடுத்துக் கூறுமாறு கேட்டுக்கொள்கிறேன். திரு. ப. ரங்கநாதன்.



2001 செப்டம்பர் 8]

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைக்கு அருகிலுள்ள அம்பத்தூர் பகுதிக்குட்பட்ட மேனாம்பேடு, இந்திரா நகரில் குடியிருக்கின்ற ஒருவருடைய வீட்டுத் திருமணத்திலே பங்குகொள்வதற்காக கும்மிடிப்பூண்டி பகுதியிலேயிருந்து அவர்களுடைய உறவினர்கள் அங்கே வந்திருக்கிறார்கள். நேற்று அந்தப் பகுதியிலே வந்த உறவினர்கள் கள்ளச் சாராயம் அருந்தி அதனால் 6 நபர்கள் இறந்துள்ளார்கள். 17-க்கும் மேற்பட்டவர்கள் பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பெற்றுள்ளார்கள், மிகவும் கவலைக்கிடமான நிலையில். ** (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரங்கநாதன், குறிப்பிட்ட இந்த மேனாம்பேடு பகுதியிலே நடந்த விஷச் சாராய சம்பவம் குறித்து மட்டும் நீங்கள் கவன ஈர்ப்பாகக் கொண்டுவாருங்கள். அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவாருங்கள். (குறுக்கீடுகள்) திரு. ரங்கநாதன், இது ஒன்றும் கள்ளச் சாராய மானியக் கோரிக்கையல்ல. சென்னை, மேனாம்பேடு பகுதியிலே விஷச் சாராயம் அருந்தி செத்தவர்கள், அதைப்பற்றிக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** ** (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனைவரும் அமருங்கள். நீங்கள் சிறப்புக் கவன ஈர்ப்பாக இதைக் கொண்டுவந்திருக்கிறீர்கள். இதைப்பற்றி மட்டும் சொல்லுங்கள். இதைப்பற்றி விளக்கிச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** அதனுடைய அங்கமாகத்தான் அம்பத்தூர் மேனாம்பேடு பகுதியிலேயும் விஷச் சாராயம் விற்கப்பட்டு அதனால் 6 பேர் இறந்துள்ளார்கள். 17-க்கும் மேற்பட்டவர்கள் பொது மருத்துவமனையில் கவலைக்கிடமாக உள்ளார்கள் என்பதைத் தெரிவிப்பதோடு, இதுபோன்ற விஷச் சாராயம் அம்பத்தூர் பகுதியிலே விற்பதற்குக் காரணம் என்னவென்றால், காவல் துறையினுடைய கவனக் குறைவு. காவல் துறை அதிகாரிகளை விசாரிக்கிறபோது, காலையிலே நான் தொடர்புகொண்டு அதிகாரிகளை விசாரிக்கிறபோது அவர்கள் கூறுகிறார்கள். **

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

[2001 செப்டம்பர் 8

*முற்பகல் 10—30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரங்கநாதன், உங்களுடைய கருத்தைச் சொல்வதற்கு அல்ல இது நேரம். அரசினுடைய கவனத்திற்கு, அமைச்சருடைய கவனத்திற்கு இந்தப் பிரச்சினையைக் கொண்டுவர வேண்டும். அதைச் சொல்லுங்கள்.

**திரு. ப. ரங்கநாதன்:** ** *(கூச்சல்–குழப்பம்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரங்கநாதன், முடித்துக்கொள்ளுங்கள். *(குறுக்கீடு)* இல்லை, இல்லை. தனிப்பட்ட பாதிப்புகளையெல்லாம் பேசுவதற்கு இது நேரம் அல்ல. திரு. ரங்கநாதன் உட்காருங்கள். நீங்கள் அமைதியாக உட்காருங்கள். பிரச்சினையை அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்துவிட்டீர்கள். அத்தோடு உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று அம்பத்தூர்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன் சொன்னதில் இது சம்பந்தப்பட்ட பிரச்சினையைத் தவிர, மற்ற வாசகங்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையை அடுத்திருக்கிற அம்பத்தூர் மேனாம்பேடு, இந்திரா நகர் பகுதியிலே நேற்று ஒரு திருமண வரவேற்பு நிகழ்ச்சிக்காக வந்திருந்த விருந்தினர்கள் அங்கு விஷச் சாராயத்தை அருந்தி, ஐந்து பேர் மாண்டுபோயிருக்கிறார்கள். 15 பேர் உயிருக்குப் போராடுகின்ற நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். விஷச் சாராயம் - பொதுவாக சாராயத்தையே இந்த அரசு முழுமையாக எல்லாப் பகுதிகளிலும் தடுத்து நிறுத்தி, I.M.F.L. மூலமாக அரசுக்குக் கூடுதலான நிதியைத் திரட்ட வேண்டுமென்று பல முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிற இந்த வேளையில், சாராயத்திற்குப் பதிலாக இன்னும் விஷச் சாராயம் வந்து, அந்தப் பகுதியிலே ஒரு பெரிய பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது. இப்படிப்பட்ட விஷச் சாராயச் சாவுகள் தமிழகத்தில் ஏன் ஏற்படுகின்றன என்கிற ஓர் ஆய்வினை இந்த அரசு மிகத் தீவிரமாக மேற்கொள்ள வேண்டுமென்று நான் பணிவன்புடன் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



2001 செப்டம்பர் 8] [திரு. சி. ஞானசேகரன்]

குறிப்பாக, 1991 ஆம் ஆண்டு, இன்றைய முதலமைச்சர் அவர்கள் முதன்முதலாக முதலமைச்சராக பதவிக்கு வந்தவுடன் ஓர் ஆணையைப் போட்டார்கள். அதுவும் பர்கூரிலே, அவர்கள் ஒரு கூட்டத்திலே பேசும்போது, அந்த ஆணையை அங்கேயே அறிவித்தார்கள். பொதுவாக சாராயம் எந்த எல்லையில் விற்கப்படுகிறதோ, அந்த எல்லைக்கு சம்பந்தப்பட்டு இருக்கிற உதவி ஆய்வாளரும், கிராம நிர்வாக அலுவலரும் – ஏதாவது அங்கே சாராயம் இருக்குமானால் – உடனடியாக அவர்கள் suspend செய்யப்படுவார்கள் என்ற ஓர் ஆணையை முதன்முதலில் 1991 ஆம் ஆண்டு பிறப்பித்தார்கள். அப்படி பிறப்பித்தவுடன் முதன்முதலில அதனுடைய தாக்கம் எங்களுடைய மாவட்டத்தில் காட்பாடி தொகுதியிலே உதவி ஆய்வாளராக இருந்த திரு. இலட்சுமணன் என்பவர்தான் முதன்முதலாக suspend செய்யப்பட்டார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன், குறிப்பிட்ட பிரச்சினைக்கு வாருங்கள். பொதுவான விளக்கம் சொல்வதற்கான குறிப்புகள் அமைச்சரிடம் இருக்காது.

**திரு. சி. ஞானசேகரன்:** அரசுக்கு ஆலோசனையாக ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், இப்போது இருக்கக்கூடிய காவல் துறையினுடைய கண்காணிப்பு ஏனோ கொஞ்சம் குறைந்துவிட்ட காரணத்தால், முதலமைச்சர் 1991 ஆம் ஆண்டு போட்ட உத்தரவின் காரணமாக, ஆறு மாத காலம் எங்கேயும் சாராயத்தைப் பார்ப்பதே அருபொருளாக இருந்தது. அந்த அளவுக்குக் கடுமையாக தமிழகத்திலே அந்த provision-ஐ அங்கு enforce செய்ய வேண்டிய சூழ்நிலை உருவாகியது. ஆகவே இந்த அரசை நான் பணிவன்புடன் கேட்டுக்கொள்வதெல்லாம், சாராயம் எங்கேயாவது கண்டுபிடிக்கப்படுமே யானால், உடனடியாக S.I., V.A.O. போன்றவர்கள் சஸ்பெண்ட் செய்யப்படுவார்கள் என்ற கடுமையான உத்தரவை மீண்டும் நீங்கள் அங்கே கொண்டு வந்தீர்கள் என்று சொன்னால்தான், சாராயத்தை நீங்கள் முழுமையாக தமிழகத்தில் தடுத்து, அரசுக்கு வர வேண்டிய வருவாயை ஏற்கெனவே பிராந்திக் கடைகள் மூலமாக விற்பனையைக் கொஞ்சம் அதிகமாகப் பெருக்கி உங்களால் பெற முடியும். ஆகவே, இந்த விஷச் சாராயத்தைத் தடுத்து நிறுத்துவதற்கு, இந்த விஷச் சாராயம் எப்படி வந்தது என்பதற்கு, காவல் துறை அதிகாரிகள்கூட இன்று பேட்டி கொடுத்திருக்கிறார்கள். அதிலே ஆந்திராவிலிருந்து வந்த விருந்தினர்கள் அங்கேயிருந்து எடுத்து வந்துவிட்டார்கள் என்ற ஒரு காரணத்தை இங்கே சொல்லியிருக்கிறார்கள். ஆந்திராவிலிருந்து இந்த விஷச் சாராயம் உள்ளே

இருக்கின்றன. இதைத் தடுப்பதற்கு எந்த அரசு வந்து சட்டத்தைக் கடுமையாகப் போட்டாலும், காவல் துறையிலே இருக்கின்ற உயர்மட்ட அதிகாரிகள் முதல், கீழ்மட்டத்திலே இருக்கின்ற காவலாளிகள் வரை திருந்துகின்ற வரையில் இந்தச் சாவுகள் தடுக்கப்பட முடியாது என்ற ஓர் உண்மையை அனைவரும் அறிந்து இருந்தாலும், தமிழகத்தினுடைய உயிர்கள் இப்படி மாண்டுகொண்டிருக்கின்றன. அதைத் தடுக்கின்ற விதத்திலே தமிழகத்தின் முதலமைச்சர் அம்மா அவர்கள், கடுமையான சட்டத்தைக் கொண்டுவந்து, இப்படிப்பட்டவர்கள் எந்தப் பகுதிகளிலேயிருந்தாலும், எந்தக் காவல் துறை அதிகாரியாக இருந்தாலும் சரி, அல்லது revenue துறையைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சரி, இதற்கு உறுதுணையாக இருந்தவர்கள் யாராக இருந்தாலும் சரி, அவர்களுக்கு கடுமையான தண்டனையை வழங்குவதோடு, அங்கே பாதிக்கப்பட்டிருப்பவர்கள் 6 பேர் இறந்து இருந்தாலும், 20-க்கு மேற்பட்டவர்கள் இன்றைக்கு உயிருக்குப் போராடிக்கொண்டிக்கிறார்கள், அவர்களை அரசு செலவிலே நல்ல மருத்துவமனையிலே சேர்த்து, அவர்களின் உயிரைக் காப்பாற்றுவதற்கு அரசு முன்வர வேண்டுமென்று அரசின் கவனத்தை ஈர்த்து அமைகிறேன்.

*முற்பகல் 10—40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பத்தூரிலே இந்திரா நகர் பகுதியிலே திருமண வீட்டிற்கு வந்தவர்கள், விஷச் சாராயத்தைக் குடித்து 6 பேர் இறந்து, 15-க்கும் மேலானவர்கள் மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். விஷச் சாராயம் என்பது-இப்போது சாராயம் என்பதைக் காய்ச்சுகிறார்களா என்று கேட்டால், அது பல சந்தேகங்களை உருவாக்குகின்றது. தண்ணீரிலே 2 pills-ஐப் போட்டால் அதைச் சாராயமாக மாற்றுகின்ற ஒரு சம்பிரதாயத்தை, திருட்டுத்தனமாக சாராயத்தை உற்பத்தி செய்கின்றவர்கள் செய்துவருகின்றார்கள். எனவே, அதிலே அதனுடைய வெறி அதிகமாவதற்கு, 'கிக்' அதிகமாவதற்கு, அதிக மருந்துகளைப் போட்டால் சாவதைத் தவிர வேறு வழியில்லை. இது இன்றைக்கு நேற்றைக்கு ஆரம்பிக்கப்பட்டதா என்று கேட்டால், இல்லை. இது பல வருடங்களாக தமிழ்நாட்டிலே நடந்துவருகின்ற ஒரு தொடர்கதை. அது நேற்றைக்கா, இன்றைக்கா என்ற பிரச்சினைக்கே இங்கு இடம் இல்லை. நேற்றைக்கும் நடந்திருக்கிறது, இன்றைக்கும் நடந்துகொண்டிருக்கிறது. இதற்கு முன்னாலும் நடந்திருக்கிறது. எனவே அந்த வட்டாரத்திலே





இருக்கின்ற காவல் துறை, உரிய நடவடிக்கைகளை, கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்கிறபோதுதான் நம்முடைய மாநிலத்தில் இந்த விஷச் சாராயத்தை தடுத்து நிறுத்தி, அப்பாவி மக்களைப் பாதுகாக்க முடியும். அந்த வகையிலே அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்வதோடு, மருத்துவமனையிலே உயிர் ஊசலாடிக்கொண்டிருக்கிற அந்த மக்களை நல்ல மருத்துவமனையிலே, நல்ல மருத்துவம் செய்வதற்கு உரிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பத்தூர் பகுதி, மேனாம்பேடு, இந்திரா நகர் பகுதியிலே விஷச் சாராயம் அருந்தியதாக 6 பேர் மரணமுற்ற சம்பவம் மிக வேதனைக்குரியது. இங்கே பேசியவர்கள் குறிப்பிட்டுச் சொன்னதைப்போல, முதலாவதாக இந்த விஷச் சாராயத்தைப் பற்றி ஓர் ஆய்வு செய்ய வேண்டிய அவசியம் இருப்பதாகக் கருதுகிறேன். விஷச் சாராயமாக எப்படி மாற்றப்படுகிறது என்பதே விந்தையாக இருக்கிறது அல்லது மர்மமாக இருக்கிறது. இதைப்பற்றி அரசு கவனத்திலேகொள்ள வேண்டும். ஏன் நான் இதைக் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால், இப்படிப்பட்ட அனுபவம் என்னுடைய சொந்தக் கிராமத்திலே சென்ற ஆண்டு ஏற்பட்டது. 4 பேர் விஷச் சாராயத்தினாலே இறந்துபோனார்கள். அதில் விஷம் கலக்கப்பட்டதா அல்லது சாராயமே விஷமாக மாறியதா என்பதெல்லாம் கேள்விக்குரியதாக்கப்பட்டு, காவல் துறையாலே அதற்குரிய முறையிலே தக்க பதிலைச் சொல்ல முடியவில்லை. உயிர் போவதுதான் மிச்சம். பின்னாலே பரிசீலிக்கிறபோது அதிலே விஷம் கலந்தது என்று அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே உண்மை நிலையை இந்த நாட்டிற்குச் சொல்ல முடியாத ஓர் இக்கட்டான நிலை இருக்கிற காரணத்தினாலே, இப்படிப்பட்ட விஷச் சாராய சாவுகள் வருகிறபோது மட்டும் பேசுகிறோம். ஆகவே இந்த விஷச் சாராயம் எப்படி ஏற்படுகிறது, எந்த மாதிரியான பாதிப்பு வருகிறது அல்லது உள்நோக்கத்தோடு அல்லது பகைமை உணர்வோடு எல்லாம் இப்படி ஏதாவது கலந்து விடுகிறார்களா என்ற பிரச்சினை இருக்கிற காரணத்தினாலே, ஒட்டுமொத்தமாக கள்ளச் சாராயத்தை ஒழித்தால் ஒழிய, இதற்குத் தீர்வு காண இயலாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே இது முன்னாலா, பின்னாலா என்ற பிரச்சினை இல்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைக் குறிப்பிட்டுச் சொல்கிறபோது, சில செய்திகளைச் சொல்லாமல் இருக்க முடியாது. ஒருவரையொருவர்

வருகிறவரையில், ஏன் நம்முடைய காவல் துறை அதைச் சரியாக கண்காணிக்கவில்லை? ஆந்திரா, கர்நாடகா, பாண்டிச்சேரி போன்ற பகுதிகளிலிருந்து நம்முடைய தமிழகத்திற்குள்ளே சாராயம் வருமேயானால், எல்லையிலே அதைத் தடுத்து நிறுத்துவதற்கான முழு முயற்சியை இந்த அரசு எடுத்து, விஷச் சாராயமோ அல்லது கள்ளச் சாராயமோ இல்லாத ஒரு பகுதியாக தமிழகத்தை மாற்றுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பத்தூர், மேனாம்பேடு பகுதியிலே மிகக் கொடுமையான முறையிலே-- இந்த அவையிலே நான் நிதிநிலை அறிக்கையிலே பேசும்போது மிகத் தெளிவாகச் சொல்லியிருந்தேன். கள்ளச் சாராயம் மிக அதிகமாக விற்கப்படுகிறது. குறிப்பாக, பல்வேறு மாவட்டத் தலைநகரங்களிலே மிக அதிகமாக விற்கப்படுகிறது என்று குறிப்பிட்டிருந்தேன். அந்த வகையிலே, நான் குறிப்பிட்ட அன்றே, சேலம் மாவட்டத்தில் கள்ளச் சாராயம் குடித்தோர் சாவு. அதேபோல் இன்று சென்னையிலே அம்பத்தூர் பகுதியிலே — 6 பேர் இறந்திருப்பதாக தொலைபேசியிலே தொடர்பு கொண்டு, டி.வி., மற்ற நிகழ்ச்சிகளிலே எல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது.

*முற்பகல் 10—35*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களைப் பொறுத்தவரை, இந்த அரசு கள்ளச் சாராயத்தை முற்றிலுமாக நிறுத்த வேண்டும். அப்படி நிறுத்த முடியவில்லையென்றால் அந்தக் கள்ளச் சாராயத்தைக் குடித்து சாவோர்களைத் தடுக்க, நல்ல சாராயத்தையே அரசாங்கம் விட்டுவிடுவதிலே எங்களைப் பொறுத்தவரை எந்த ஆட்சேபணையும் இல்லை.

பல்வேறு மாவட்டங்களிலே இதுபோன்று ஆயிரக்கணக்கான மக்கள் விஷச் சாராயத்தைக் குடித்து சாகிறார்கள். இதற்கு ஒரு முடிவை நீங்கள் கொண்டுவர வேண்டும்.

திரு. ஞானசேகரன் சொன்னதைப்போல், சென்ற முறை உங்களுக்குத் தெரியும். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சியிலே அவர் போட்ட உத்தரவு, எந்தப் பகுதியிலே கள்ளச் சாராயத்தைக் குடித்து இறக்கிறார்களோ, அந்தப் பகுதியினுடைய காவல் துறையினரும், கிராம நிர்வாக அதிகாரிகளும், கடுமையாகக் கண்டிக்கப்படுவார்கள், தண்டிக்கப்படுவார்கள் என்று அந்த உத்தரவில் இருந்தவுடனே, அனைத்து மாவட்டங்களிலேயும் கள்ளச் சாராயம் கட்டுப்படுத்தப்பட்டிருந்தது. அதே வழியிலே, இந்த அரசு கொண்டு வருமா என்பதை இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து, இதுபோன்ற சாவுகளைத் தடுக்க தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதனைச் சொல்லி பரிதாபத்திற்குரிய இன்னும் 15 உயிர்கள் அங்கே துடித்துக்கொண்டிருக்கின்றன. அதற்கு தீவிர சிகிச்சை அளிக்க இந்த அரசு ஆவன செய்யுமா என்று சொல்லி, இந்த அவையினுடைய கவனத்தை ஈர்க்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. போளூர் வரதன்.

**திரு. போளூர் வரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம், அம்பத்தூருக்கு அருகிலே மேனாம்பேடு கிராமத்திலே நடைபெற்ற ஒரு திருமண நிகழ்ச்சியிலே இந்தக் கோரச் சம்பவம் நடைபெற்றிருக்கிறது.

ஏற்கெனவே தொடக்கத்திலேயே இந்த அவையிலே நான் பேசுகின்றபோது சந்தை, காய்கறிச் சந்தை இருக்கின்ற பகுதிகளிலே காய்கறிகள் விற்பது இல்லை. அம்பத்தூரிலே கள்ளச் சாராயத்தைத்தான் விற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் மூன்று மாதத்திற்கு முன்பே இந்த அவையிலே சொல்லியிருந்தேன். கல்யாணத்திற்கு வந்தவர்கள் கும்மிடிப்பூண்டியிலேயிருந்து கொண்டு வந்தார்கள் என்று இப்போது காவல் துறை அதிகாரிகள் சொல்கிறார்கள்.. இது நம்பத்தகுந்தது அல்ல. இந்த அரசிற்குக் கெட்ட பெயர் ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகவே காவல் துறையில் சில அதிகாரிகளும் **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. போளூர் வரதன், அதாவது குறிப்பிட்ட பிரச்சினையின் மேலே மட்டும் நீங்கள் கவனத்தை ஈர்க்கலாம். ** என்று சொல்லப்படுகிற அந்த வாசகம் அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. போளூர் வரதன்:** காவல் துறை அதிகாரிகள் இன்றைக்குச் சொல்கிறார்கள். காவல் துறை அதிகாரிகளுக்கு நிச்சயம் கள்ளச் சாராயம் எங்கெங்கு விற்கப்படுகிறது, எந்தத் தெருக்களிலே விற்கப்படுகிறது, எந்தக் குடும்பங்கள் விற்கிறார்கள், யார் விற்கிறார்கள் என்பது தமிழகத்திலே நன்றாகத் தெரியும். அப்படியிருந்தும்கூட, இப்படிப்பட்ட கள்ளச் சாராயச் சாவுகள் அடிக்கடி தமிழகத்திலே தொடர்ச்சியாக வந்துகொண்டுதான்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

பாதிப்பதாகவும் அதை எடுத்துக்கொள்ளக் கூடாது. ஆகவே இப்படிப்பட்ட பிரச்சினை இருந்தது. முன்னாலே சொன்னார்கள், துப்பாக்கிக் குண்டுகள் கள்ளச் சாராயப் பானைகள்மீது பாயும் என்று சென்ற ஆட்சியில் சொல்லப்பட்டது. சொன்னதற்குப் பின்னாலே என்னுடைய சொந்த கிராமத்தில் 4 உயிர்கள் போனதுதான் மிச்சமே தவிர, கள்ளச் சாராயம் தடுக்கப்படவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) இது உண்மை. ஆகவே இது குற்றச்சாட்டு இல்லை. இதைச் சொல்லாமலும் இருக்க முடியாது. கவன ஈர்ப்பு வருகிறபோது இப்படிப்பட்ட செய்திகள் எல்லாம் கடந்த காலத்தில் பேசப்பட்டன. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் எல்லாவற்றையும் நிறுத்தினால் சில செய்திகளைச் சொல்ல இயலாமல் போய்விடும். அதைக் குற்றச்சாட்டிற்குரியதாக எடுத்துக்கொள்ளக் கூடாது. சில காரணங்களையும், சம்பவங்களையும் இத்தோடு இணைத்து சொல்ல வேண்டிய அவசியம் இருக்கிற காரணத்தினாலே சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அதையெல்லாம் விளக்கமாகப் பின்னாலே சொல்லலாம். நீங்கள் குறிப்பிட்ட சம்பவத்திலே அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவாருங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** ஆகவே இதைப்பற்றி ஒரு தீவிரமான ஆராய்ச்சி மூலமாக இதைத் தடுத்து நிறுத்த முயற்சிக்க வேண்டும். அதிலே குறிப்பாக காவல் துறையினுடைய செயல்பாட்டைப் பற்றி ஒரு சந்தேகம், அச்சம் தொடர்ந்திருக்கிறது. இது அரசியலா, ஆட்சியா என்பதல்ல, காவல் துறையின் செயல்பாட்டின்மீது தனிக் கவனம் செலுத்தினால் ஒழிய, இது தீர்க்கப்பட முடியாது. ஆகவே இந்தக் கள்ளச் சாராயத்தை கிராமங்களிலும், மற்ற இடங்களிலும் ஒழிக்க வேண்டுமானால், காவல் துறை, வருவாய்த் துறை, மக்கள் பிரதிநிதிகள் இவர்கள் மூவரையும் கொண்ட குழுக்களை கிராமங்களிலே அமைத்து, தீவிரமான நடவடிக்கை எடுப்பதன் மூலம்தான் இதை ஒழிக்க முடியுமே தவிர, வெறும் காவல் துறை மூலமாக மட்டுமே ஒழித்துவிட முடியாது. எனவே அதற்கான முயற்சியை எடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டு அமைகிறேன்.

*முற்பகல் 10-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.





**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்கு சென்னையை அடுத்துள்ள அம்பத்தூர் பகுதியிலே ஒரு திருமண நிகழ்ச்சியிலே கலந்துகொள்ள வந்தவர்களில் 6 பேர் தாங்கள் அருந்திய விஷச் சாராயத்தின் காரணமாக இறந்துவிட்டார்கள் என்கின்ற செய்தி இன்று பத்திரிகைகளிலே வந்திருக்கிறது.

இங்கே எனக்கு முன்னால் பேசியவர்களெல்லாம் காவல் துறையும் அரசும் இதிலே கடுமையான நடவடிக்கைகள் எடுத்து, இதைப்போன்ற கள்ளச் சாராயச் சாவுகள் இல்லாமல் தடுக்க வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். இதைப்போல சென்ற ஆட்சிக் காலத்திலே சாத்தூர் பகுதியிலே, சேலம் பகுதியிலே விஷச் சாராயத்தைக் குடித்து 20-க்கும் மேலானவர்கள் இறந்த நேரத்திலேகூட, அது இந்த அவையிலே பேசப்பட்டது. அப்போது நான்கூடச் சொன்னேன். இந்தக் கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்கு அரசும், காவல் துறையும் நடவடிக்கை எடுப்பதோடு, மக்களுக்கும் விழிப்புணர்ச்சி ஏற்பட வேண்டுமென்றும், அதன் மூலமாகத்தான் இதை முழுமையாக ஒழிக்க முடியும் என்றும் சொன்னேன். ஒரு பாட்டுகூட என் நினைவுக்கு வருகிறது.

"திருடனாய்ப் பார்த்து திருந்தாவிட்டால்

திருட்டை ஒழிக்க முடியாது."

(மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போல மக்களுக்கும் அந்த விழிப்புணர்ச்சி இருக்க வேண்டும். ஆண்டாண்டு காலமாக காவல் துறையும் அதன் செயல்பாடுகளும் இருந்துகொண்டிருந்தாலும்கூட, கொலைகள், கொள்ளைகள், திருட்டு இவற்றையெல்லாம் ஒழிக்க முடியவில்லை. அதற்குக் காரணம், மன வளர்ச்சி சமுதாயத்திலே இல்லை என்பதுதான். எனவே மக்கள் பிரதிநிதிகளாக இருக்கின்றவர்கள்கூட, அந்தந்தப் பகுதிகளிலே தங்களுடைய கடமையாக இதனை எடுத்துக்கொண்டு, இந்தக் கள்ளச் சாராயத்தை ஒழிப்பதற்கு முன்வர வேண்டுமென்ற ஆலோசனையைச் சொல்கின்றபோது, அதை அன்றைக்கு இருந்த முதலமைச்சர்கூட எடுத்துக்கொண்டு, 'அவர் சொல்கின்றதிலே ஒரு நியாயம் இருக்கிறது; அப்படிச் செய்வதற்கு முன் வருவீர்களானால், அப்படிப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நான் தனியாக ஒரு பாராட்டு விழா நடத்தி பரிசுகள்கூட வழங்குகிறேன்' என்று இதே அவையிலே கூறினார்கள். அதைப்போல இன்றைக்கு அரசும் காவல் துறையும் இதிலே கவனம் செலுத்துவதோடு, மக்களுக்கும் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி, அதன் மூலம் முழுமையாக கள்ளச்

சாராயத்தை ஒழிப்பதற்கு எல்லோரும் உறுதுணையாக இருந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்கிற என்னுடைய கருத்தைக் கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு சரகம், அம்பத்தூர் மேனாம்பேடு கிராமத்தில் கள்ளச் சாராயம் அருந்தியதில் ஏற்பட்ட உயிரிழப்புகள் குறித்த அறிக்கை.

அம்பத்தூர் காவல் நிலைய சரகத்தைச் சார்ந்த, மேனாம்பேடு கிராமத்தில், 7–9–2001 அன்று, திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி, பெரியநத்தம் பகுதியைச் சேர்ந்த பாஸ்கரன் மற்றும் வனிதா ஆகியோருக்கு திருமண நிகழ்ச்சி நடந்துள்ளது. அப்போது மேனாம்பேடு கிராமத்தில் விற்ற கள்ளச் சாராயத்தைக் குடித்த நபர்களில் 14 நபர்கள் உடல்நிலை பாதிக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து, கிராமத்தில் இருவரும், சென்னை தலைமை அரசு மற்றும் கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டவர்களில 7 பேரும் மொத்தம் 9 பேர் இறந்துள்ளார்கள். மற்றும் 5 நபர்கள் இன்னும் உள்நோயாளிகளாக தீவிர சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

இறந்துபோன 9 பேர்களில் மேனாம்பேடு பகுதியைச் சேர்ந்த டில்லி, மாசிலாமணி, தகப்பனார் பெயர் ஜெகந்நாதன் ஆகியோர் கள்ளச் சாராய வியாபாரிகள் என்றும், அவர்கள் தமிழ்நாடு மதுவிலக்கு அமல் சட்டத்தின்கீழ் பல வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்கள் என்றும் தெரிய வந்துள்ளது. அவர்களும் தாங்கள் கொண்டு வந்த சாராயத்தைக் குடித்து இறந்திருக்கிறார்கள். ஆரம்ப கட்ட விசாரணையில், செங்கல்பட்டு (கிழக்கு) மாவட்டத்தில் மதுவிலக்கு அமல் தீவிரப்படுத்தப்பட்டு இருந்ததால் உள்ளூரில் கள்ளச் சாராயம் கிடைக்காமல் போனதால், மேற்கண்ட இருவரும் வெளியூரிலிருந்து கொண்டுவரப்பட்ட எரிசாராயத்தை, அதாவது Rectified Spirit–ஐ கள்ளச் சாராயத்தில் கலந்து விநியோகம் செய்துள்ளார்கள் என்று தெரிய வந்துள்ளது. ரவி–வயது 36, மாசிலாமணி–வயது 30, தகப்பனார் பெயர் ஜெயராமன், சுப்பிரமணி–வயது 40, சௌந்தர்ராஜன்–வயது 52, குப்புசாமி கவுண்டர்–வயது 55, சீனிவாசன்–வயது 40, செல்லம்மாள்–வயது 45 ஆகியோர் இறந்துபோன மற்ற ஏழு நபர்கள் ஆவார்கள். சதாசிவம், ராஜேந்திரன், குட்டி, கிருஷ்ணன் மற்றும் செல்வராஜ் ஆகிய 5 பேரும் உள்நோயாளிகளாக சிகிச்சை பெற்று





வருகிறார்கள். அவர்களுடைய உடல்நிலை தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருகிறது.

*முற்பகல் 10—50*

போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று கிராமத்தில் மேலும் யாராவது பாதிக்கப்பட்டுள்ளார்களா என்று பார்வையிட்டும், அவ்வாறு இருந்தால் அவர்களை சிகிச்சைக்கு அனுப்ப ஏற்பாடு செய்தும் வருகிறார்கள். செங்கல்பட்டு காவல் துறை துணைத் தலைவர் மற்றும் காவல் துறை கண்காணிப்பாளர் ஆகியோர் மதுவிலக்குப் பிரிவு அதிகாரிகளுடன் முகாமிட்டு, தீவிர நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். அம்பத்தூர் காவல் நிலைய குற்ற எண் 658/2001–ல் வழக்கு பதிவு செய்யப்பட்டு, அம்பத்தூர் காவல் துறை கண்காணிப்பாளர் புலன் விசாரணை மேற்கொண்டுள்ளார். ஆந்திரா மற்றும் எல்லையோர மாவட்டங்களுக்கு காவல் துறை குழுக்கள் அனுப்பப்பட்டு, எரிசாராயம் வாங்கப்பட்ட இடம், இதர குற்றவாளிகள் சம்பந்தப்பட்டுள்ளார்களா என்பது தொடர்பாக தீவிர புலன் விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகின்றது என்பதனை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

## (ஆ) ஒசூர் அரசுப் பண்ணையில் சந்தன மரம் வெட்டிக் கடத்தப்பட்டது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஓசூரில் உள்ள அரசுக்குச் சொந்தமான பண்ணையிலிருந்து சந்தன மரத்தை வெட்டிக் கடத்தியது குறித்து ஒத்திவைப்புத் தீர்மானமாக திரு. இ. புகழேந்தி, திரு. சி. ஞானசேகரன் ஆகியோரும், கவன ஈர்ப்பாக திரு. கி. பாரிமோகன், திரு. ஜே. ஹேமச்சந்திரன், திரு. கே.சி. கருணாகரன், திரு. டி. மணி ஆகியோரும், சிறப்புக் கவன ஈர்ப்பாக திரு. ஐ. கணேசன் அவர்களும் அறிவிப்புக் கொடுத்துள்ளனர். இதை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்ள அனுமதி அளிக்கிறேன். அதன்மீது சுருக்கமாகப் பேச அழைக்கிறேன். திரு. இ. புகழேந்தி.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓசூர் அருகே மத்தகிரியில் அரசு கால்நடைப் பண்ணைப் பிரிவு ஒன்று இயங்கி வருகின்றது. அந்தப் பண்ணையில் புல்வெளி பிரிவு அலுவலகம் எதிரே இருந்த 200 ஆண்டு வயதுள்ள, பழமையான ஒரு சந்தன மரத்தை 100 பேர் கொண்ட ஒரு மர்ம கும்பல் வெட்டி எடுத்துக்கொண்டு போயிருக்கின்ற நிலையின் மூலமாக, அந்த மரத்தை வெட்டுகின்ற கும்பல்

35 இலட்ச ரூபாய்க்கு மேலே மதிப்புள்ள சந்தன மரத்தை சந்தனக் கடத்தல் என்ற வகையில், வெட்டி வைக்கப்பட்டிருந்த சந்தன மரங்களை எடுத்துக்கொண்டு போனார்கள் என்ற தகவல்களை எல்லாம்விட நன்கு விளைந்திருந்த, ஓங்கி உயர்ந்திருந்த மரத்தையே வெட்டிச் சாய்க்கின்ற அளவுக்கு ஒரு சம்பவம் நடைபெற்று இருக்கிறது என்கின்றபோது, இதுகுறித்து விசாரணைகள் நடத்தப்பட்ட நிலையிலே அந்த அதிகாரிகள் அங்கே சொல்லியிருப்பது, இதை ஒரே நாளில் வெட்டியிருக்க முடியாது. இதை திடீரென்று எல்லோரும் வந்து சாய்த்திருக்க முடியாது, 2, 3 நாட்களாக தொடர்ந்து செய்திருக்கக்கூடிய ஒரு வேலை என்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அப்படிப் பார்க்கிறபோது இந்த மிகப் பெரிய கொள்ளை, சந்தன மரத்தை சாய்த்திருக்கின்ற இந்தக் கொள்ளை தொடர்ந்து நடந்துகொண்டிருக்கின்ற ஒரு திருட்டாக, இந்த Theft-ல் ஒரு continuity நடந்து இருக்கிறது என்றால் இந்த மரம் மட்டும்தானா அல்லது இதைப்போல தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறதா? இது மட்டும் தெரிய வந்த காரணத்தால் நடவடிக்கை எடுக்கப்படுகிறதா என்பதோடு, மேலும் இதிலே அரசு எடுத்திருக்கிற நடவடிக்கை என்பது ஏதோ மேம்போக்காக, சாதாரணமானதாக இருந்துவிடுமானால் இவை தொடர்கின்ற சூழ்நிலை, அபாயங்கள் ஏற்படும். அதுமட்டுமல்லாது, இவற்றின் பாதுகாப்பு நிலைகளாக என்னென்ன வகுக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் தெரிவிக்க வேண்டும். இது தொடர்பாக அங்கே பணியாற்றிக் கொண்டிருந்தவர்கள் 7 பேர் suspend செய்யப்பட்டதாகச் சொல்லியிருக்கிறார்கள். மேலும் பண்ணையைச் சேர்ந்தவர்களுடைய ஒத்துழைப்பு இல்லாமல் அந்த மரம் வெட்டப்பட்டு இருக்க முடியாது என்பதும் தெரிய வந்திருக்கிறது. ஆகவே முழுமையான ஒரு விசாரணை தேவைப்படுகிறது. இதிலே வெளியே இருக்கக்கூடிய சக்திகளின் ஆசீர்வாதம் ஏதாவது இருக்கிறதா? ஏனென்றால் வெட்டப்பட்டிருக்கின்ற அந்த இடத்தில் ஒரு லாரி வந்து போவதற்கான தடயம் கிட்டத்தட்ட 1-1/2 கிலோ மீட்டர் தூரத்திற்கு இருக்கிறது. 1-1/2 கிலோ மீட்டர் தூரத்திற்கு லாரி தடயம் இருக்கிறது, 2, 3 நாட்கள் தொடர்ந்து நடைபெற்றதற்கான சூழ்நிலை இருக்கிறது. ஆகவே இதற்குக் காரணம் வெளியே இருக்கக்கூடிய சக்தியா? இதற்கு யார் ஆசீர்வாதம் செய்கிறார்கள் என்பது குறித்தும் முழுமையான விசாரணை தேவைப்படுகிறது. அதற்கான நிலைகளையும் வகுக்க வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை எடுக்க இந்த அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் மூலமாக அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.







**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக நம்முடைய வேலூர், தருமபுரி, திருவண்ணாமலை மாவட்டங்களில் உள்ள காடுகளில் இருக்கக்கூடிய சந்தனம்தான் உலகத்திலேயே மிகவும் விலை உயர்ந்த சந்தனமாகக் கருதப்படுகிறது. ஜவ்வாது மலை சந்தனம் என்பதுதான் இன்று உலகத்திலேயே தலைசிறந்த சந்தனமாக இருந்துகொண்டிருக்கின்ற நிலையில், அந்த சந்தனம் என்பது எதிர்காலத்தில் நாம் ஏதோ பொருட்காட்சிக்குச் சென்று, எங்கேயாவது மியூசியத்தில்தான் போய்ப் பார்க்கமுடியும் என்ற நிலை இன்றைக்கு தமிழகத்தில் வந்து சேர்ந்துவிடுமோ என்ற அச்சம் இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. புகழேந்தி அவர்கள் சொல்கிறபோது, தொடர்ந்து இதுபோன்று சந்தன மரங்கள் வெட்டப்படுவதாக, கடத்தப்படுவதாகச் சொன்னார்கள். இது உண்மைதான். ஜவ்வாது மலையில் இப்போது சந்தன மரங்களே இல்லை. ஏற்கெனவே வெட்டி வைத்திருந்த சந்தன மரங்களாவது கிடங்கில் இருக்கிறதா என்று பார்த்தால், திருப்பத்தூர் சந்தன மரக் கிடங்கில் ரூ.500 கோடி மதிப்புள்ள சந்தன மரங்கள் இருந்து, ரூ.6800 கோடி மதிப்புள்ள சந்தன மரங்கள்தான் எரிந்தன, மீதியெல்லாம் இல்லையென்று சொல்லிவிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் உண்மையிலேயே இராமன் கமிஷனிலே சொல்லப்பட்டதைப்போல, அதிலே அதிகாரிகளுடைய negligence இருக்கிறது. சில சதிவேலை இருக்கிறது. அது உண்மையில்லை என்று அந்தக் கமிஷனிலே சொல்லப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், ஓசூர் பண்ணை, அதிலேயுள்ள சந்தன மரம். (குறுக்கீடு) அமைச்சர் அவர்களிடம் அதுகுறித்து மட்டும்தான் விவரங்கள் இருக்கும். நீங்கள் இதைத்தான் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டும். அதற்காகத்தான் நீங்கள் சிறப்புக் கவன ஈர்ப்புக் கொடுத்திருக்கிறீர்கள். இது பொதுவான விவாதம் அல்ல.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் மூலமாக நான் அரசைக் கேட்டுக்கொள்ள விரும்புவது என்னவென்றால், சந்தனம் என்பது இப்போது தமிழகத்திலே முழுக்க முழுக்க வெட்டி கடத்தப்படக்கூடிய நிலை வந்துகொண்டிருக்கிறது. ஆகவே ஆசியாவிலே மிகப் பழமையான சந்தன மரம், 200 ஆண்டு கால

வயதுள்ள அந்த சந்தன மரத்தை 100 பேர் கொண்ட கும்பல் வெட்டி எடுத்துக்கொண்டு போகிறார்கள் என்று சொன்னால், இதிலே நம்முடைய காவல் துறை தங்களுடைய கட்டுப்பாட்டை இழந்துவிட்டதா? அதேபோல இந்த சந்தன மரக் கடத்தலைத் தடுப்பதற்காக, வனத் துறை மூலமாக பல team-களை வைத்திருக்கிறோம். அவர்களும் இதைக் கண்டுபிடிப்பதாக இல்லை. என்னுடைய நிலத்திலேகூட, ஜவ்வாது மலையில் இருக்கக்கூடிய, அந்த சந்தன மரங்களையெல்லாம்கூட சில பேர் வெட்டி எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள்.

சந்தன மரங்களை தனியார்கூட வளர்க்கலாம் என்று சொல்கிறார்கள். ஆனால் நம்முடைய தமிழ்நாடு அரசு சட்டத்தைப் போட்டு, சந்தன மரங்களை தனியார் வளர்க்க முற்பட்டார்கள் என்று சொன்னால், அந்த சந்தன மரங்களை எதிர்காலத்திலே–இப்படிப்பட்ட பண்ணைகளிலே இருக்கக்கூடிய சந்தன மரங்கள், காவலாளிகள் பல பேர் இருக்கக்கூடிய சூழ்நிலையில் திருடு போகிறபோது - absentee landlord–ஆக இருக்கக்கூடிய நாங்களெல்லாம், நிலத்தை வைத்துக்கொண்டு, சந்தன மரங்களை எல்லாம் வைத்து கட்டிக் காப்பாற்ற முடியாது. காடுகளில் இருக்கக்கூடிய சந்தன மரங்களையும் இந்த அரசு காப்பாற்ற வேண்டும். அதேபோல தனியார் இடங்களிலே வளர்ந்து வரக்கூடிய சந்தன மரங்களையும் கட்டிக் காப்பாற்றக்கூடிய நிலையை அரசு உடனடியாக எடுக்க வேண்டும்.

சந்தனக் கடத்தலில் யார் ஈடுபட்டாலும்–இன்னும் நாம் வீரப்பனையே பிடிக்கவில்லை, இதுபோன்ற சாதாரண கொள்ளையை நாட்டிலே இருக்கக்கூடிய கொள்ளையையும் நாம் பிடிக்க முடியாமல் இருந்துகொண்டிருக்கிறோம் – அரசு இதுபோன்ற சந்தன மரக்கடத்தலைத் தடுத்து நிறுத்துவதற்கு என்ன திட்டத்தை வைத்திருக்கிறது? இனியாவது இருக்கக்கூடிய சந்தன மரங்களைக் கட்டிக் காப்பாற்றுவதற்கும், எதிர்காலத்திலே சந்தனக் கன்றுகளை ஜவ்வாது மலையிலே நட்டு வளர்ப்பதற்கும் அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓசூரிலே கிட்டத்தட்ட 1640 ஏக்கர் பரப்பளவிலே, மிகப் பிரம்மாண்டமான முறையிலே, ஆங்கிலேயர் காலத்திலிருந்து பராமரிக்கப்பட்டு வந்த, அந்தப் பண்ணையிலே கிட்டத்தட்ட ஆசியா கண்டத்திலே மிகப் பழமைவாய்ந்த ஒரு மரம் மட்டுமல்ல, மிக முதிர்ந்த, கிட்டத்தட்ட 30, 35 இலட்சம்



ரூபாய் மதிப்புக்கு மேலே இருக்கக்கூடிய அந்த மரத்தை, சில விஷமிகள், 100 பேருக்கு மேலே வந்து, அந்த மரத்தை வெட்டி லாரியிலே எடுத்துச் சென்றதாகவும், அங்கே பக்கத்திலே குடியிருந்த காவலர்களையெல்லாம், ஒரு வீட்டிலே கட்டிப் போட்டுவிட்டு, எடுத்துச் சென்றதாகச் செய்திகள் இங்கே வந்திருக்கின்றன.

*முற்பகல் 11—00*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் சென்ற முறை பல்வேறு கமிட்டிகள் சார்பாக அந்தப் பண்ணைக்குச் சென்றோம். அந்த மரத்தைக் கண்டபோது, அந்த மரத்தைச் சுற்றிலும் மின்சார வேலிகள் எல்லாம் அமைக்கப்பட்டிருந்தன. அதுமட்டுமல்ல, இரவு பகலாக காவலுக்கு ஆட்கள் வைத்திருப்பதாகச் சொல்லப்பட்டது. அப்படிப் பாதுகாப்போடு இருந்த அந்த மரத்தை, ஒருவர், இருவர் அல்ல, 100-க்கும் மேற்பட்டவர்கள் வந்து வெட்டிச் சென்றிருக்கிறார்கள் என்றால், இது ஒரு சாதாரண கொள்ளையாகத் தெரியவில்லை. தயவுசெய்து இந்த அரசு தீவிர கவனம் செலுத்தி, ஆசியாவிலேயே பழமைவாய்ந்த அந்த சந்தன மரத்தை வெட்டிய கும்பலை நிச்சயமாக இந்த அரசு கண்டுபிடிக்க வேண்டுமென்று சொல்லி, இந்த அவையினுடைய கவனத்தை ஈர்க்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களைப் பொறுத்தவரைக்கும் இது ஒரு திருட்டு என்ற நிலையிலே பார்க்க முடியவில்லை. இது திட்டமிட்ட கடத்தல். 1-1/2 கிலோ மீட்டர் தூரம் லாரி போயிருக்கிறது. 100 பேர் அணி திரண்டு போயிருக்கிறார்கள். அங்கிருந்த இரவு நேரக் காவலர்களைக் கட்டிவைத்து வீட்டைப் பூட்டியிருக்கிறார்கள். பல மணி நேரம் அறுத்திருக்கிறார்கள். சாதாரணமாக எடுத்துக்கொண்டு போயிருக்கிறார்கள் என்று சொன்னால், இது திருட்டு என்பது சரியல்ல, திட்டமிட்ட கடத்தல். நீண்டகாலமாக திட்டமிடப்படாமல், தயாரிக்கப்படாமல், இது நிச்சயமாக நடந்திருக்க வழியில்லை. ஆகவே இப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிற அந்த 7 பேர் பகடைக் காய்கள்; சாதாரண ஊழியர்கள். இதிலே உயர் மட்ட அதிகாரிகளுக்குச் சம்பந்தம் இருக்கிறதா அல்லது வெளியார்களுக்கு சம்பந்தம் இருக்கிறதா? மாண்புமிகு உறுப்பினர் புகழேந்தி அவர்கள் சொன்னதைப்போல, யார் அதிலே சம்பந்தப்பட்டிருந்தாலும் அவர்கள்மீது உரிய நடவடிக்கை எடுப்பதற்கும், சம்பந்தப்பட்ட கும்பலைக் கைது

செய்வதற்கும், கடத்தப்பட்டதை மீட்பதற்குமான உரிய நடவடிக்கையை அரசு எடுக்க வேண்டும் என்பதும், இதன்மீது ஒரு தீவிரமான புலன் விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்பதும் என்னுடைய கருத்தாகச் சொல்லி, அரசின் கவனத்தை இதன்மூலம் ஈர்க்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம் அவர்களும் இப்போது கொடுத்திருக்கிறார்கள். அவர்களையும் சுருக்கமாகச் சொல்ல அழைக்கிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓசூர் அருகிலே சந்தன மரம் வெட்டப்பட்டிருப்பது ஒரு திட்டமிட்ட செயலாகத் தெரிகிறது. கால்நடைப் பண்ணையினுடைய இரவுக் காவலர்கள் 7 பேர் பணிநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். இருந்தாலும் உயர் அதிகாரிகளுடைய தொடர்பு இல்லாமல் இது நடைபெற்று இருக்க முடியாது என்ற வலுவான சந்தேகம் எழுவதற்குரிய வாய்ப்பு அதிலே இருக்கிறது. ஆகவே அரசு இதிலே உரிய முறையிலே கவனம் செலுத்த வேண்டும். குறிப்பாக, 30 இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள இந்த மரத்தை அறுத்து, வெட்டி, லாரியிலே ஏற்றி கடத்துவதற்குரிய, அவ்வளவு பெரிய அவகாசம் இருக்கிறபோது, யார் அதைச் செய்தார்கள் என்பதுகூட தெரியாமல் இருப்பது மர்மமாகவே இருக்கிறது. ஆகவே சந்தன மரம் என்று சொன்னாலே வீரப்பனை நினைத்து போய், இப்போது நவீன வீரப்பன்கள் நாட்டிற்குள்ளே வந்து விட்டார்களா என்ற அச்சம் வந்திருக்கிறது. ஆகவே அரசு கவனித்து உரிய நடவடிக்கை எடுத்து, இதன்மீது புலன் விசாரணை செய்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி-விளம்பரம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சந்தன மரம் என்றாலே எல்லோரும் இது வனத் துறைக்குச் சொந்தமானது என்ற அடிப்படையிலே இங்கே இந்த கவன ஈர்ப்பு அறிவிப்பைக் கொடுத்துள்ளார்கள். ஆனால் இந்த சந்தன மரத்தைப் பொறுத்தமட்டில் இது வனத் துறைக்குச் சொந்தமானது அல்ல. இது கால்நடைப் பண்ணையிலே அமைந்துள்ளது. ஆகையால், இந்த சந்தன மரம் அமைந்துள்ள இடம் தருமபுரி மாவட்டம், ஓசூர் வனக் கோட்டம் அலுவலகம் அருகிலுள்ள மத்தகிரி கால்நடைப் பண்ணையில் உள்ளது. இந்தக் கால்நடைப் பண்ணை, கால்நடைப் பண்ணைத் துறையின்



கட்டுப்பாட்டில் உள்ளது. இந்தப் பண்ணையில் 5-9-2001 மற்றும் 6-9-2001 புதன் மற்றும் வியாழன் இரவு அன்று ஒரு பெரிய சந்தன மரத்தை சுமார் 50 நபர்கள் பயங்கர ஆயுதங்களுடன் வந்து, அந்த சந்தன மரத்தைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டிருந்த 7 தற்காலிகக் காவலர்களைத் தாக்கி, அந்த சந்தன மரத்தின் அடிப் பகுதியையும், பெரிய கிளைகளையும் வெட்டியெடுத்துச் சென்றுள்ளார்கள். சந்தன மரத்தின் சுற்றளவு 235 செ.மீ. சந்தன மரத்தின் மதிப்பு சுமார் 20 இலட்சம் ரூபாய். திருட்டுப் போன சந்தன மரத்தின் மதிப்பு சுமார் 12 இலட்ச ரூபாய். விட்டுவிட்டுப் போன சந்தன மரத்தின் அடிப்பாகம், வேர்கள் மற்றும் கிளைகளின் மதிப்பு சுமார் 8 இலட்சம் ரூபாய். இந்தப் பண்ணையில் இருந்த ஒரேயொரு சந்தன மரம் இதுதான். 1996-ல் பாதுகாப்பின் பொருட்டு, மேலே சொன்ன திருட்டுப்போன சந்தன மரத்தைத் தவிர, மற்ற மரங்கள் வனத் துறைக்குக் கொடுக்கப்பட்டு, கடந்த ஆண்டு சுமார் 26 மெட்ரிக் டன் எடையுள்ள சந்தனக் கட்டைகள் சத்தியமங்கலம் வனக் கிடங்கிற்கு அனுப்பப்பட்டன. இந்த சந்தன மரங்களைப் பாதுகாத்திட 1996 ஆம் ஆண்டு வரையில் இரண்டு வனக் காவலர்கள் பணியில் இருந்தனர். ஆனால் அதற்குப் பிறகு கால்நடைப் பண்ணைத் துறையின் இயக்குநர், வனக் காவலர்கள் தேவையில்லை என்று சொன்னதனால், வனக் காவலர்கள் வனத் துறைக்கு திரும்பப் பெறப்பட்டனர். இந்தப் பெரிய சந்தன மரத்தைப் பாதுகாப்பதற்காக, வனப் பாதுகாப்பினை கால்நடை துறையினர் கேட்டபோது, ஓசூர் கோட்டத்தில் ஏற்கெனவே 22 வனக் காவலர்கள் பணியிடங்கள் காலியாக இருந்ததால், வனக் காவலர்களை மாவட்ட வனக் காவலரால் அனுப்ப இயலவில்லை. அதற்குப் பின் இந்த மரத்தை வெட்டி எடுத்துச் செல்லுமாறு கால்நடைத் துறையினர் கேட்டபோது, பச்சை மரத்தை வெட்டக் கூடாது என்றும், இந்த மரம் ஆசியாவிலேயே பெரிய சந்தன மரம் என்ற காரணத்தினால் இந்த மரத்தை வெட்டவில்லை. திருட்டுப் போன இந்த மரத்தைத் தவிர, வேறு பெரிய சந்தன மரங்கள் இல்லை. பெரிய கன்றுகள்தான் உள்ளன. இந்த இடம் கால்நடைத் துறைக்குச் சொந்தமானது. வனத் துறைக்குச் சொந்தமானது அல்ல. இந்தத் திருட்டு சம்பந்தமாக கால்நடைப் பண்ணை துணை இயக்குநர் மத்தேரி காவல் நிலையத்தில் 6-9-2001 அன்று புகார் கொடுத்து, அதன்பேரில் வழக்கு பதிவு செய்து, குற்ற எண் 236/2001 என்ற வழக்கினைப் பதிவு செய்துள்ளார்கள்.

காவல் துறை துணைத் தலைவர், தருமபுரி மாவட்ட காவல் துறைக் கண்காணிப்பாளர் மற்றும் ஓசூர் மாவட்ட வன அலுவலர், ஓசூர் உதவிக்

காவல் துறைக் கண்காணிப்பாளர், ஓசூர் வனச் சரகர் ஆகியோர் ஆய்வுக்கை செய்தனர். காவல் துறையினரும், வனத் துறையினரும் இந்தத் திருட்டு சம்பந்தமாக தீவிர புலன் விசாரணை செய்து வருகின்றனர் என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன்.

*முற்பகல் 11—05*

அடுத்ததாக, இங்கே மாண்புமிகு உறுப்பினர் புகழேந்தி பேசும்போது தொடர்ந்து இரண்டு, மூன்று நாட்களாக இந்தச் செயல்பாட்டைச் செய்துள்ளார்கள் என்று சொன்னார்கள். இரண்டு, மூன்று நாட்கள் அல்ல, ஒரே நாள் இரவிலே, அதுவும் நடுசாமத்திற்குப் பிறகுதான், இந்தப் பணியைச் செய்து முடித்துள்ளார்கள் என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்ததாக, மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் பேசும்போது சந்தன மரத்தைப் பாதுகாக்க என்ன திட்டங்கள் என்று கேட்டார். வன இலாக்காவிலே உள்ள சந்தன மரங்களையெல்லாம் பாதுகாப்பதற்கு எங்களிடம் காவல் துறையினர் இருக்கின்றனர். அவர்களைக் கொண்டு நாங்கள் தக்க நடவடிக்கை எடுக்கின்றோம்.

அடுத்ததாக, மாண்புமிகு உறுப்பினர் கருணாகரன் அவர்களும், சிவபுண்ணியம் அவர்களும் திட்டமிட்ட கடத்தல் என்றும் உயர் அதிகாரிகள் இதிலே ஈடுபட்டுள்ளதாகத் தகவல் கிடைத்துள்ளது என்றும் சொன்னார்கள். இது போலீஸ் விசாரணையிலே உள்ளதால் இது திட்டமிட்ட சதியா அல்லது உயர் அதிகாரிகளுடைய தொடர்பா என்பது நிச்சயமாக இந்த உலகிற்குத் தெரியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 55-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த...

**திரு. மு.பெ. சாமிநாதன்:** ஒரு clarification.

**திரு. பரிதி இளம்வழுதி:** தலைவர் அவர்களே,...

**திரு. இ. புகழேந்தி:** ஒரு point of order. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் விளக்கம் தந்தார்கள். சந்தன மரம் என்பது அரசிடம் அனுமதி பெற்ற....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பதிலுரை கொடுத்த பிறகு அதிலே விவாதம் இல்லை. (குறுக்கீடு) பரிதி, நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடு)

**திரு. மு.பெ. சாமிநாதன்:** அவைக்குத் தவறான தகவலைச் சொல்லியிருக்கிறார்.



## 4. தகவல் கோரல்

### (அ) சென்னை, காசிமேடு பகுதி மீனவர்கள் ஆந்திரக் கடற்கொள்ளைக்காரர்களால் கடத்தப்பட்டது

***திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு சென்னையிலே காசிமேடு, மாட்டாங்குப்பம், அயோத்தியாகுப்பம், நடுகுப்பம், ஊரூர்குப்பம், ஓடகுப்பம் போன்ற பகுதிகளிலே மீனவ மக்கள் வசித்து வருகிறார்கள். அவர்கள் எல்லாம் கடலையே நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு அந்த மக்கள் மத்தியிலே ஒருவிதமான அச்சம் பரவி இருக்கிறது. நேற்றைக்கு முன்தினம்கூட, மீன் பிடிக்கச் சென்ற நேரத்திலே ஆந்திரக் கடற்கொள்ளைக்காரர்களால் அவர்கள் கடத்தப்பட்டு, சிறை வைக்கப்பட்டு, அந்தச் செய்தியைக் கேள்விப்பட்ட பிறகு இங்கேயிருந்து பணம் எடுத்துச் சென்று கொடுத்து, அவர்களை மீட்டு வருகின்ற சூழ்நிலை இருக்கிறது. இது அடிக்கடி நடக்கிறது. நேற்றைக்கு முன்தினம்கூட 60 மீனவர்கள் அப்படிச் சிறைப்படுத்தப்பட்டார்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஒரு கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்திருக்கின்றீர்கள். அது என்னுடைய ஆய்விலே இருக்கிறது. ஆந்திர அரசோடு பேச்சுவார்த்தை நடப்பதாகக் கேள்விப்பட்டேன். அதனை திங்கட்கிழமை எடுத்துக்கொள்ளலாமா?

***மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** அது, என்னுடைய இராயபுரம் தொகுதி. அது என்னுடைய தொகுதி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுபற்றிய முழு விவரத்தையும் திங்கட்கிழமை எடுத்துக்கொள்ளலாமா என்று கேட்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** தலைவர் அவர்களே...

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** அந்தப் பிரச்சினை முடிந்தது. மீனவர்கள் திரும்பி வந்துவிட்டார்கள். அது என்னுடைய தொகுதி, இராயபுரம் தொகுதி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர்.

[2001 செப்டம்பர் 8

***மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுசம்பந்தமான பிரச்சினையில் மீனவர்கள் விடுதலை ஆகிவிட்டார்கள். இதுசம்பந்தமான முழு விவரங்களையும் திங்கட்கிழமை எடுத்துக்கொள்ளலாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதனை திங்கட்கிழமையன்று எடுத்துக்கொள்ளலாம்.

**திரு. சி. ஞானசேகரன்:** நானும் இதுகுறித்து கொடுத்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுதான், திங்கட்கிழமை எடுத்துக்கொள்ளலாம்.

### (ஆ) உறுப்பினர்களின் முன்னறிவிப்புகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 35ன்கீழ்...

**திரு. மு.பெ. சாமிநாதன்:** ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து ஒரு வாரம் ஆகிறது. ஒரு விளக்கத்தைக் கேட்கிறேன், தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது ஆய்விலே இருக்கிறது. என்னுடைய அறைக்கு வாருங்கள் அங்கே பேசிக்கொள்ளலாம்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** ஒரு விளக்கத்தைக் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, விளக்கமெல்லாம் இங்கே சொல்ல முடியாது.

## 5. கவன ஈர்ப்பு

### மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தில் எம்.சி.ஏ. அஞ்சல் வழிப் படிப்பிற்கு நுழைவுத் தேர்வு எழுதாமலே மாணவர்களைச் சேர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 55–ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. வி.கே. லட்சுமணன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார்.



2001 செப்டம்பர் 8]

முற்பகல் 11-10

***திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று தமிழகத்திலுள்ள பல்கலைக்கழகங்களில், மூன்றுவிதமான கல்வி முறைகள் பின்பற்றப்பட்டு வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை வாசித்தால் போதும். அதை வாசிக்க வேண்டும். அதற்கு அமைச்சர் பதில் சொன்னதற்குப் பிறகு கேள்வி கேட்கலாம்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"அஞ்சல் வழிக் கல்வித் தேர்வுகள் எல்லாம் மற்றத் தேர்வுகளைப் போலவே இருக்க வேண்டும் என்ற கருத்து வலுவாக உருவாகி வரும் நேரத்தில், மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம், எம்சிஏ. அஞ்சல் வழிப் படிப்பிற்கு நுழைவுத் தேர்வு எழுதாமலே மாணவர்கள் சேரலாம் என 4–6–2001 ஆம் நாளிட்ட 'இந்து' நாளேடு விளம்பரம் செய்திருப்பது" குறித்த அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. லட்சுமணன் அவர்கள் சொன்னதைப்போல—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள், அவைமுன் அறிக்கை வைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் மட்டும் போதும்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

### அறிக்கை

மற்ற பல்கலைக்கழகங்களில் நுழைவுத் தேர்வு நடத்தப்படாததுபோல், மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகத்திலும் எம்.சி.ஏ., அஞ்சல் வழிக் கல்விக்கு நுழைவுத் தேர்வு நடத்தப்படுவதில்லை.

அஞ்சல் வழிக் கல்வித் தேர்வுகள் எல்லாம் மற்ற தேர்வுகளைப் போலத்தான் நடத்தப்படுகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லட்சுமணன், கேள்வி கேளுங்கள். அதுசம்பந்தமாக கேள்வி இருந்தால் கேளுங்கள்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே இருக்கிற பல்கலைக்கழகங்களிலே நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, மூன்றுவிதமான கல்வி முறைகள் பின்பற்றப்பட்டு வருகின்றன. ஒன்று, வழக்கமாக இருக்கிற University education பல்கலைக்கழக கல்வி முறை. இன்னொன்று, Distance education அஞ்சல் வழிக் கல்வி முறை. இன்னொன்று, Open University Education அதாவது, திறந்த நிலை பல்கலைக்கழகக் கல்வி முறை – நான் திறந்தவெளி என்று சொல்லமாட்டேன்; திறந்த நிலை பல்கலைக்கழகக் கல்வி முறை. இந்தப் பல்கலைக்கழகங்களுக்கு நிதிப் பற்றாக்குறை காரணமோ என்னவோ தெரியவில்லை; அந்தப் பல்கலைக்கழகங்களிலே, மற்றப் பல்கலைக்கழகங்கள் நடத்துகின்ற மற்ற கல்வி முறையைப்போல அந்தப் பாடத் திட்டங்களை அமைக்காமல், தேர்வுகளை அமைக்காமல் இப்போது அவர்கள் எல்லாம் பட்டங்கள் கொடுக்கிறபோது, அந்தப் பட்டங்களிலே, 'இந்தப் பட்டம் அஞ்சல் வழி முறையிலே பெறப்பட்டது' என்றோ, அல்லது 'Open University மூலமாகப் பெறப்பட்ட பட்டம்' என்றோ குறிப்பிடப்படாமல், எல்லாப் பட்டங்களும் ஒரேமாதிரியாகத்தான் வழங்கப்படுகின்றன. ஆனால் இந்த மாணவர்கள் தனித்தனியாகத் தேர்வுகள் எழுத வேண்டிய நிலைமை இருக்கிறது. தனித்தனியாக கேள்வித் தாள்கள் இருக்கின்றன. தனித்தனியாக பாடத் திட்டங்கள் இருக்கின்றன. நான் ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால், இதன் மூலமாகக் கல்வியின் தரம் குறைந்துவிடுமோ என்று நான் அஞ்சுகிறேன். Flexibility என்ற பெயரிலே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. லட்சுமணன், கேள்வியை மட்டும் கேளுங்கள்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** அதற்கு என்ன காரணம் இருக்கிறது என்பதற்காகச் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியை மட்டும் கேளுங்கள். மற்றவைகளை விளக்கமாக அமைச்சரிடத்திலே அவருடைய அறையிலே போய்க் கேட்டுக்கொள்ளலாம்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** நான் கவன ஈர்ப்பிலேயே சொல்லி விடுகிறேன். Flexibility என்ற பெயரிலே, இப்போது இந்தப் பட்டங்களை எளிதாக வழங்குவதன் மூலமாக, முறையாகப் படித்துப் பட்டம் பெறுகின்ற





மாணவர்களும், இவர்களும் சமமாகிவிடுவார்கள் என்று சொல்ல முடியாது. இப்போது A.I.C.T.E., எல்லாப் பல்கலைக்கழகங்களிலேயும் M.C.A. படிப்பதற்கு நுழைவுத் தேர்வு எழுதித்தான் அவர்களை M.C.A. படிக்க அனுமதிக்க வேண்டும் என்ற நிலை வைத்திருக்கிறபோது, மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக்கழகம் மட்டும் நுழைவுத் தேர்வு எழுதாமலேயே படிக்கலாம் என்று 'இந்து' பத்திரிகையிலே 4–6–2001 ஆம் தேதியன்று ஒரு விளம்பரம் செய்திருப்பதை நான் பார்க்க முடிந்தது. அதற்கு அமைச்சர் அவர்கள் அந்தப் பல்கலைக்கழகத்திற்குத் தக்க அறிவுரைகள் வழங்க முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வியில், சமீபகாலமாக பல்வேறு மாறுதல்கள், சமுதாயத்தில் மாறி வருவதைப் பார்த்து வருகிறோம். பள்ளிக்கூடத்திலும், கல்லூரியிலும் சேர்ந்து படிப்பது ஒரு கல்வியாக இருந்தாலும், பல காலமாக கல்லூரிக்குச் செல்லாமலும், பள்ளிகளுக்குச் செல்லாமலும் படிப்பதற்குக்கூட வசதிகள் இந்த நாட்டிலே உருவாகி வருகின்றன. அதேபோல், பல்கலைக்கழகங்கள் பட்டங்களைத் தருவதற்கு இதுபோல முன்வருவதற்குக் காரணம், நாம் கல்லூரிகளை அதிகமாக வைத்திருந்தாலும்கூட, பல ஏழைகள், வசதியற்றவர்கள் போன்றவர்கள் எல்லாம் கல்லூரிகளுக்குச் சென்று படிக்க முடியாத நிலைமை இருக்கும்போது. அதுபோல், correspondence course என்ற course-ஐ ஒவ்வொரு பல்கலைக்கழகமும் நடத்துகிறது. இதை நடத்துவதன் மூலமாக, ஏதோ கல்வியின் தரம் குறைந்துவிட்டதாகக் கருதமுடியாது. ஏனென்றால் அந்தப் பல்கலைக்கழகமானது, தேர்வு வைத்துத்தான் அவர்களுக்குப் பட்டம் தருகிறது. ஆகவே தேர்வு முறைப்படி எப்படி மற்ற மாணவர்கள் பெறுகிறார்களோ, ஒரு பல்கலைக்கழகத்திலே, ஒரு வகுப்பறையிலே படித்துப் பெறுகிறார்களோ, அவர்களுக்கு எத்தகைய தேர்வுகள் வைக்கப்படுகின்றனவோ, அத்தகைய தேர்வுகள்தான் இவர்களுக்கும் வைக்கப்படுகின்றன. ஆகவே, தேர்வைப் பொறுத்தவரையில் அவர்கள் அறிவை பரிசோதிப்பதற்காக நடத்தப்படும் முறையானது தவறு என்று நாம் சொல்ல முடியாது. ஆகவே சென்னை பல்கலைக்கழகமாகட்டும், மதுரை பல்கலைக்கழகமாகட்டும் எதுவாக இருந்தாலும், அவர்கள் நடத்துகின்ற அந்தத் தேர்வானது ஒரு முறைப்படி நடத்தப்படுகின்றது. இது சமுதாயத்திற்காக மக்களுக்காக உதவி செய்கின்ற முறையே தவிர, இந்தக் கல்வித் துறையிலே அவர்கள் தரும் பட்டத்திலே அவர்களுக்கு வித்தியாசம் காண்பிப்பது என்ற தேவை கிடையாது.

*முற்பகல் 11—15*

பல அறிஞர்கள் உங்களுக்குத் தெரியும், தமிழ் அறிஞர்கள் பல பேர் கல்வி நிலையங்களுக்குச் செல்லாமலேயே பல புத்தகங்களை எழுதியிருக்கிறார்கள். பல பட்டங்களைப் பெற்றிருக்கிறார்கள். இந்தப் பல்கலைக்கழகங்களுடைய Vice Chancellor–ஆக இருக்கிறார்கள். அத்தகைய அறிஞர்களைப் பெற்றிருக்கிறோம். ஆகவே கல்வி நிலையத்திற்குச் சென்றால்தான் அவர்கள் அறிவைப் பெற்றுவிடுவார்கள் என்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சொல்வது ஏற்கக்கூடிய வாதமாக கருதிக்கொள்ள முடியாது. உண்மையிலேயே அவர்களுக்கு ஒரு திறமை இருக்கிறது என்றால் அந்தத் திறமையை எந்த வயது இருந்தாலும் இந்தப் பல்கலைக்கழகம் நடத்துகின்ற தேர்வின் மூலமாக அறிந்துகொள்ளலாம். அந்தத் தேர்வை வைத்துத்தான் அவர்களுக்குப் பட்டம் தரப்படுகின்றது. அந்தச் சூழ்நிலையில் நான் இங்கு சொன்னதுபோல தனித்தனியாக Correspondence Course -க்கு ஒரு certificate தரமுடியாது. ஆனால் நீங்கள் வித்தியாசம் கண்டுபிடிக்க வேண்டும் என்று விரும்பினீர்கள் என்றால் அவர்கள் T.C. இருக்கிறது. அந்த T.C. மூலமாக எங்கு படித்தார்கள் என்று அவர்களுக்குத் தெரிந்துபோய்விடுகிறது. ஆகவே உங்களுக்கு அதிலே சந்தேகம் இருந்தால் – ஏனென்றால் நேரடியாக கல்லூரியில் படித்தால்தான் அறிவு இருக்கும். இல்லை என்றால் இருக்காது என்பது நாம் ஏற்றுக்கொள்ளக்கூடிய வாதமாக இருக்கமுடியாது. இது ஒன்று.

இரண்டாவது நீங்கள் சொல்ல வந்தது -M.C.A. பற்றி சொல்லியிருக்கின்றீர்கள். M.C.A.-க்கு நுழைவுத் தேர்வை வைத்துத்தான் பல்கலைக்கழகங்கள் Correspondence Course-ஆக இருந்தால்கூட செய்யப்பட வேண்டும் என்பது மாண்புமிகு உறுப்பினருடைய எண்ணம். அதைத்தான் வலியுறுத்த வருகின்றார்.

All India Council for Technical Education அகில இந்திய தொழில் கல்வி குழுமம் இருக்கிறதே, அது சில வரைமுறைகளை வகுக்கின்றது. உண்மைதான். அவர் சொன்னதுபோல இதுபோன்ற M.C.A., M.B.A., B.E., போன்ற எந்த ஒரு தொழிற் கல்வியைப் படிக்க வேண்டும் என்றாலும் அந்த மாணவர்களைச் சேர்க்கும்போது நுழைவுத் தேர்வை வைத்துத்தான் நடத்த வேண்டும். அதுதான் உண்மை. ஏன் நுழைவுத் தேர்வைப் பொதுவாக நடத்துகிறோம் என்றால் நிறைய பேர் கேட்கும்போது அங்கு 50 சீட்தான் இருக்கும். 100 சீட்தான் இருக்கும் ஒரு சில காலேஜில். அப்படி இருக்கும்போது அந்த நேரத்தில் யாருக்குக்



கொடுப்பது என்று வரும்போது அவர்கள் தகுதி அடிப்படையில் தர வேண்டும். ஏனென்றால் 50 இடம் 60 இடம் இருக்கிறது என்றால் ஒரு கல்லூரியிலே M.C.A.-க்கு ஆயிரம் பேர் மனு செய்கிறார்கள் என்றால், அப்பொழுதுதான் தேர்வு நிலைமை வருகிறது. யாருக்குக் கொடுப்பது? ஒரு மெரிட். தகுதியின் அடிப்படையிலே மாணவர்களுக்கு இடம் கொடுப்பதற்காகத்தான் நுழைவுத் தேர்வு கொண்டுவருகிறோம். வேறு ஒன்றும் கிடையாது. ஆக தகுதி இருந்து, 60 பேர் இருக்கிற இடத்தில் 50 பேர்தான் application போடுகிறார்கள். என்ன செய்ய முடியும்? பேருக்குத்தான் பரிட்சை வைக்க முடியுமே தவிர 50 பேருக்கும் கொடுத்தாக வேண்டும். ஏனென்றால் அவர்களுக்குத் தகுதி இருந்தால் basic qualification இருந்தால் இல்லை என்று சொல்ல முடியாது. கொடுத்துதான் ஆக வேண்டும். ஏனென்றால் கடைசி ரேங்கிலே இருப்பவன் 50–தாவது. இன்னும் 10 சீட் vacant இருக்கிறது. அதுபோல் இந்த correspondence distance education–னிலே அவர்கள் ஒரு limit வைத்திருந்தால் அதற்கு மேலே application வந்தால் தேர்வு வைப்பது முறை. நீங்கள் சொல்வது, A.I.C.T.E. சொல்வதெல்லாம் தேர்வு முறை வைத்துத்தான் எடுக்க வேண்டும். ஆனால் இப்பொழுது பொதுவாக distance education நடத்துகின்ற பல்கலைக்கழகங்களில் எல்லாம் எல்லோருக்கும் ஏறக்குறைய ஏற்றுக்கொள்கின்றார்கள். யார், யார் போடுகிறார்களோ அவர்களுக்குக் கொடுத்துவிடுகிறார்கள். இதைக் கண்காணிக்க வேண்டும் என்றால் All India Council தான் வர வேண்டும். Standard இருக்கிறதா, இல்லையா, இந்த முறை சரியா என்று அவர்கள்தான் சொல்ல வேண்டும்.

எங்களைப் பொறுத்தவரையில் அரசு எங்கேயாவது தவறு, முறைகேடு நடந்தால் நாங்கள் நடவடிக்கை எடுப்போம். ஆனால் நுழைவுத் தேர்வை வைத்துத்தான் தேர்வு நடத்த வேண்டும், அப்பொழுதுதான் முறைப்படி இருக்கும் என்று மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல் செயல்படுத்த வேண்டும் என்றால், நான் அகில இந்திய கவுன்சிலுக்கு இதைக் கொண்டு வந்து உங்களுடைய எண்ணத்தை அரசு வலியுறுத்தும். சொல்ல இருக்கின்றோம். முடிவு எடுக்க வேண்டியது அவர்கள் கையிலே இருக்கிறது. Regular–ஆக இருப்பதிலேயே சில இடத்தில் entrance exam நடப்பது இல்லை. பல புகார்கள் வந்துகொண்டிருக்கின்றன. பல கல்லூரிகளிலே நன்கொடையை வாங்கிக் கொண்டுதான் இடம் தருகிறார்களே தவிர, அங்கு தேர்வு வைத்து எடுக்கிற மாதிரி தெரியவில்லை. நீங்கள் distance education பற்றிச் சொல்கின்றீர்கள். இது regular–லேயே இருக்கிறது.

இதெல்லாம் All India Council தான் பார்க்க வேண்டும். நமக்கும் உரிமை உண்டு. இல்லை என்று சொல்லவில்லை. எங்களுக்கும் அதில் பொறுப்பு உண்டு. இதுபோல பல புகார்களை அடிக்கடி நாங்கள் சொல்லிக்கொண்டுதான் இருக்கிறோம். அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை.

நான் சொன்னேன். போன மானியத்திலே பேசும்போதுகூட சொன்னேன். In charge-ஆக இருக்கிற All India Council Chairman இங்கு வந்து என்ன சொல்கிறார்? புகார்கள் வருகின்றன. அரசு சொல்வதற்கு எங்களுக்கு ஆதாரம் தரவேண்டுமென்று சொல்கிறார்கள். அரசே ஒரு புகார் செய்கிறது என்றால் ஆதாரம் இல்லாமல் செய்யாது ஓர் அரசு. அத்தகைய ஒரு பொறுப்பிலே இருக்கும் ஒரு நபர் இங்கு வந்து சொல்லும்போது அரசு தருகின்ற அந்தப் புகார் எங்களுக்கு ஆதாரம் சரியான முறையில் தரவில்லை என்று சொல்லிவிட்டு, இங்கு இருக்கிற போலீஸ் அதிகாரிகளை வைத்துச் செயல்பட வேண்டுமென்று சொல்கிறார். அத்தகைய நிலைமைக்கு இந்த நாடு சென்றிருக்கிறது. அரசு சொல்லுகின்ற ஓர் உணர்வுக்குக்கூட மதிப்பு தராமல் அதிகாரி -- இங்கே வந்து போலீசை வைத்து நடவடிக்கை எடுங்கள் என்று சொல்கின்றார். அந்த அளவுக்குச் சென்றிருக்கிறது. ஆகவே உங்களுடைய உணர்வை நான் மத்திய அரசின் மூலமாக—ஏனென்றால் கவுன்சிலுக்கு நேராகச் சொன்னால் அவர்கள் response பண்ணுகிற மாதிரி தெரியவில்லை. அவர்கள் எதையுமே மதிப்பதில்லை. அதுதான் உண்மை. ஆகவே நான் மாண்புமிகு முரளி மனோகர் ஜோஷியை சந்திக்கும்போது இதைச் சொல்கின்றேன். நான் டெல்லிக்குப் போவதற்கு வாய்ப்புகள் கிடைக்கும். அப்படிப் போகும்போது உங்களுடைய கருத்தைச் சொல்லி நடவடிக்கை எடுப்போம் என்று சொல்லி அமர்கிறேன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

*முற்பகல் 11—20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவாக விளக்கம் சொல்லிவிட்டார். இன்னும் வேண்டுமென்றால், அவருடைய அறையிலே போய் கேட்டுக்கொள்ளுங்கள்.





## 6. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

### தமிழ்நாடு நகரமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்டச் (திருத்த) சட்டமுன்வடிவு, 2001

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல். 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகரமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்டச் (திருத்த) சட்டமுன்வடிவு. மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சாமிநாதன், கொஞ்சம் இருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லி முடித்துவிடட்டும்.

***மாண்புமிகு திரு. ஏ.கே. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகரமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்டச் (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஏ.கே. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவினை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

[2001 செப்டம்பர் 8

## 7. அறிவிப்புகள்

### (அ) சட்டமன்ற உறுப்பினர்களுக்கான புத்தறிவுப் பயிற்சிக் கருத்தரங்கு தள்ளிவைப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று காவிரி நதிநீர்ப் பிரச்சினை குறித்து அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெறவிருப்பதால் தலைமைச் செயலகத்தில் உள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையில் பத்தாவது தளத்தில் உள்ள மாநாட்டுக் கூட்ட மண்டபத்தில் இன்று நடைபெறுவதாக இருந்த புத்தறிவுப் பயிற்சிக் கருத்தரங்கு தள்ளி வைக்கப்பெறுகிறது என்றும், அந்தக் கருத்தரங்கு *10-9-2001 அன்று மாலை 4-30 மணிக்கு* மேற்படி மண்டபத்தில் நடைபெறும் என்றும் அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 4. தகவல் கோரல்-தொடர்ச்சி

### (இ) கீழ்பவானி அணையிலிருந்து காவிரி ஆற்றுக்குத் தண்ணீர் திறந்துவிடுவது குறித்த செய்தி

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சாமிநாதன், என்ன சொல்லப் போகிறீர்கள்? (குறுக்கீடு) சொல்லுங்கள்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டத்திலுள்ள கீழ்பவானி அணைத் திட்டத்திலிருந்து கடந்த மாதம் 15 ஆம் தேதி பாசனத்திற்காக தண்ணீர் திறந்துவிடப்பட்டது. அதை நம்பி அங்கே பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் நெல் நடவு நடுவதற்காக ஆயத்தப் பணிகளில் ஈடுபட்டிருக்கின்றார்கள். ஆனால் கடந்த வாரம் அங்கே ஒரு செய்தித் தாளிலே அணையிலிருந்து காவிரி ஆற்றிற்கு காவிரி டெல்டா பகுதி பாசனத்திற்காக தண்ணீர் திறந்துவிடப்படுவதாக செய்தி அறிந்து அங்கே விவசாயிகள் மத்தியிலே பதட்ட சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. அப்படி ஏதாவது பரிசீலனை அரசிடம் உள்ளதா? அல்லது வெறும் வதந்தியா என தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மானியக் கோரிக்கையிலே பேசும்போது இதற்கும் பதில் சொல்லுங்கள்.



2001 செப்டம்பர் 8]

### (ஆ) உறுப்பினர்களின் முன்னறிவிப்புகள்-தொடர்ச்சி

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேலு, என்னுடைய அறைக்கு வாருங்கள். ஒரு நல்ல டீ வாங்கிக் கொடுத்து, உங்களுக்கு விளக்கம் சொல்கிறேன்.

## 8. மானியக் கோரிக்கைகள், 2001-2002, விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 35 – பாசனம்

(ஆ) கோரிக்கை எண் 36 – பொதுப் பணிகள் – கட்டடங்கள்

(இ) கோரிக்கை எண் 38 – சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து

(ஈ) கோரிக்கை எண் 54 – பாசனம் குறித்த மூலதனச் செலவு

(உ) கோரிக்கை எண் 55 – பொதுப் பணிகள் – கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு

(ஊ) கோரிக்கை எண் 56 – சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு

### (அ) கோரிக்கை எண் 35 – பாசனம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2001-2002* ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் *35* – பாசனம். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவரும் தமிழகத்தினுடைய முதல்வருமான மாண்புமிகு அம்மா அவர்களின் பொற் பாதங்களை வணங்கி, இந்த மானியக் கோரிக்கையை இந்தப் பேரவையில் சமர்ப்பிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பாசனம் பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.417,37,64,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 3620. திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒட்டன்சத்திரம் ஊராட்சி ஒன்றியத்தில் புதிய குளங்கள் அமைக்க திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவரால் ஏற்கெனவே பரிந்துரை செய்யப்பட்ட, ஜோதிப்பட்டி, புலியூர்நத்தம், பெரியப்பூர் ஆகிய ஊர்களில் குளங்கள் அமைக்க அரசு நடவடிக்கைகள் எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.417,37,64,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்"

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 687. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டத்தில் புத்தூர் அணை, வெள்ளக்கல் அணை, மேல் அரசம்பட்டு அணை ஆகியவற்றை உடனடியாகக் கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.417,37,64,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2323, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.417,37,64,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2583, திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.417,37,64,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3272, திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.417,37,64,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்"

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1943, திரு. க. முருகவேல் ராஜன், இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 2927, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.417,37,64,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்"

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3213, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.417,37,64,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2608, டாக்டர் தே. குமாரதாஸ், இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 883, திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.417,37,64,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 757, திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 2017, திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருக்கழுக்குன்றத்தில் உள்ள பொதுப் பணித் துறை ஏரிகளைப் பராமரிக்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து"விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.417,37,64,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3103, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.417,37,64,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3095, திரு. துரை. கி. சரவணன்.

**திரு. துரை. கி. சரவணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதிய வீராணம் திட்டத்தின்கீழ் சென்னை மாநகருக்குக் குடிநீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வீராணம் ஏரியிலிருந்து தண்ணீர் கொண்டுவரும்போது சிதம்பரம் தொகுதியிலுள்ள விவசாயிகளின் பாசனத்திற்குப் பாதிப்பு இல்லாமல் கொண்டுவர வேண்டியதன்



அவசியம் குறித்து"விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.417,37,64,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3584, திரு. மு.பெ. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், வெள்ளக்கோவில் தொகுதி, நல்லத்தங்காள் ஓடை அணைத் திட்டப் பணிகளை விரைவாக முடிக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் மேலும் திட்டப் பணிக்கு நிலம் தந்த நில உரிமையாளர்களுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.417,37,64,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்"

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 727, திரு. எஸ்.கே. வேதரத்தினம், இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 1445, திரு. கே.என். சேகரன்.

**திரு. கே.என். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவெறும்பூர் பகுதியில் உள்ள பாசனக் குளங்களைத் தூர் வார வேண்டியதன் அவசியம் குறித்து"விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.417,37,64,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1771, திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், ஆவரைகுளம் பகுதியில் உள்ள சாலை புதுக்குளம், சிவகங்கை குளம், மேல்/கீழ் பாலார் குளம், பழவூர் பெரிய குளம், பிள்ளையார் குடியிருப்பு குளம், செம்பி குளம், மதகனேரி குளம், குமார குளம், குரும்பியார் குளம் ஆகிய குளங்களை ஆழப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.417,37,64,000/- ல் ரூ.100/- குறைக்க வேண்டும்"

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1967, திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடந்த பல வருடங்களாக மண் வாரப்படாமல் இருக்கும் பூண்டி சத்யமூர்த்தி சாகர் ஏரியை உடனடியாக ஆழப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.417,37,64,000/- ல் ரூ.100/- குறைக்க வேண்டும்"

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 744, திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,"தாம்பரம் தொகுதி, சித்தாலப்பாக்கம், பெரும்பாக்கம் ஆகிய பகுதிகளிலுள்ள பாசன ஏரிகளைச் செப்பனிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.417,37,64,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்"

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 839, திரு. எ.வ. வேலு.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சாத்தனூர் மேல் மட்டக் கால்வாய் மூலம் 45 கிராமங்களின் பாசன வசதியை மேம்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.417,37,64,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்"

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1417, திரு. கு. பிச்சாண்டி.



**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டம், சாத்தனூர் அணை இடது புறக் கால்வாய்த் திட்டப் பணிகளை உடனடியாகத் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.417,37,64,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்"

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1697, திரு. ஆஸ்டின்.

**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாகர்கோவில் தொகுதியிலுள்ள அத்திக்கடை, தெங்கம்புதூர், சம்பக்குளம் ஆகியவற்றின் கால்வாய்களைத் தூர் வாரி பாசன வசதியை மேம்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து"விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.417,37,64,000/- ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

முற்பகல் 11-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 834, திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்.

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இருக்கன்குடி அணைத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.417,37,64,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1854, திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,"பாண்டியாறு புன்னம் புழா மற்றும் அவிநாசித் திட்டங்களை நிறைவேற்ற உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து"விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.417,37,64,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

## (ஆ) கோரிக்கை எண் 36 – பொதுப் பணிகள்–கட்டடங்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 36, பொதுப் பணிகள்–கட்டடங்கள். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பொதுப் பணிகள் – கட்டடங்கள் பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.91,62,63,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 3618, திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒட்டன்சத்திரம் தொகுதியில் உள்ள, வட்டாட்சியர் அலுவலகத்திற்கும், ஒட்டன்சத்திரம் அரசு மேல்நிலைப் பள்ளி ஓடைப்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளி, இடையகோட்டை அரசு உயர்நிலைப் பள்ளி, சத்திரப்பட்டி உயர்நிலைப் பள்ளி, மஞ்சநாயக்கன்பட்டி உயர்நிலைப் பள்ளி, தொப்பம்பட்டி உயர்நிலைப் பள்ளி, பெரியக்கோட்டை உயர்நிலைப் பள்ளி, முத்துநாயக்கன்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளி, மார்க்கம்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளி, கீரனூர் அரசு மேல்நிலைப் பள்ளி ஆகிய பள்ளிகளுக்கும் சுற்றுச் சுவர்கள் கட்டித்தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணிகள்–கட்டடங்கள் பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.91,62,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 684, திரு. சி. ஞானசேகரன்.



**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூரில் கூடுதல் சுற்றுலா மாளிகை ஒன்று கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணிகள்–கட்டடங்கள் பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.91,62,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2480, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணிகள்–கட்டடங்கள் பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.91,62,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2588, திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் உள்ள சேரிங் கிராஸ் (Charing Cross) பகுதியில் கோத்தகிரி சாலை, குன்னூர் சாலை, சர்ச் ஹில் சாலை, கார்டன் சாலை, கமர்சியல் சாலைகளை இணைக்கும் வகையில் சுரங்கப் பாதை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணிகள்–கட்டடங்கள் பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.91,62,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்"

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3146, திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம், அமரகுந்தி ஊராட்சி, அமரகுந்தி பஞ்சாயத்து மேல்நிலைப் பள்ளிக்குக் கட்டடம் கட்ட

வேண்டியதன் அவசியம் குறித்து"விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணிகள்–கட்டடங்கள் பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.91,62,63,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்"

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1929, திரு. க. முருகவேல் ராஜன், இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 2917, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணிகள்–கட்டடங்கள் பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.91,62,63,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3216, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி"விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணிகள்–கட்டடங்கள் பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.91,62,63,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்"

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2007, டாக்டர் தே. குமாரதாஸ் இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 801, திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி"விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணிகள்–கட்டடங்கள் பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.91,62,63,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்"



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 759, திரு. சு. சிவராஜ். இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 2015, திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணிகள்–கட்டடங்கள்" பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.91,62,63,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2968, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணிகள்–கட்டடங்கள் பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.91,62,63,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3115, திரு. துரை. கி. சரவணன்.

**திரு. துரை. கி. சரவணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிதம்பரம் தொகுதிக்கு உட்பட்ட பொது மருத்துவமனை, மகப்பேறு மருத்துவமனை, ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடங்கள் ஆகியவற்றின் மராமத்து குறித்தும், சில மருத்துவமனைகளில் புதிய கட்டடங்கள் கட்ட வேண்டியது குறித்தும் சிதம்பரம் நகர கோர்ட் வளாகத்தில் புதிய கட்டடங்கள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணிகள்–கட்டடங்கள் பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.91,62,63,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 728, திரு. எஸ்.கே. வேதரத்தினம், இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 1831, திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணிகள்—கட்டடங்கள் பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.91,62,63,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்"

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 750, திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தாம்பரம் தொகுதி, கொட்டிவாக்கம், பாலவாக்கம், நீலாங்கரைப் பகுதியில் பக்கிங்காம் கால்வாயில் பாலம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணிகள்—கட்டடங்கள் பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.91,62,63,000/-ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1435, திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டம், சாத்தனூர் அணைக்கு பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் சுற்றுலாப் பயணிகள் ஆண்டு முழுவதும் வருவதால், சென்னையில் உள்ள எம்.ஜி.எம்., கிஷ்கிந்தா போன்ற இடங்களில் அமைக்கப்பட்டுள்ள தீம் பார்க் (Theme Park) போல் சாத்தனூர் அணைப் பகுதியில் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணிகள்—கட்டடங்கள் பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.91,62,63,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1693, திரு. ஆஸ்டின்.

**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாகர்கோவில் தொகுதிக்குட்பட்ட பெருங்குளம், சம்பக்குளம், பால்குளம்,



பறக்கை குளம் உள்ளிட்ட குளங்களை தூர் வார வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணிகள் கட்டடங்கள் பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.91,62,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1457, திரு. அன்பில் பெரியசாமி.

**திரு. அன்பில் பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருச்சி நகர மக்கள் ஆண்டுதோறும் மழைக் காலங்களில் ஏற்படும் வெள்ளப் பெருக்கால் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். அதனைத் தடுக்க வெள்ளத் தடுப்பு அணை கட்டும் பணியினை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப் பணிகள்—கட்டடங்கள் பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.91,62,63,000/—ல் ரூ.100/— குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1254, திரு. வே. கிருஷ்ணமூர்த்தி, இருக்கையில் இல்லை.

## (இ) கோரிக்கை எண் 38 – சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 38, சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.4,36,30,99,000/—க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 748, திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தாம்பரம் தொகுதி, மதுரைப்பாக்கம் ஓடைப் பாலத்தை அகலப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவாத்து பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,36,30,99,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 680, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூரிலிருந்து காட்பாடிக்குச் செல்லும் சாலையில் பாலாற்றின் குறுக்கே உள்ள உடைந்த பழைய பாலத்தை சரிசெய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,36,30,99,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்"

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2470, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,36,30,99,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2520, திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாகப்பட்டினம் முதல் கர்நாடகா மாநிலம் மைசூர் வரையிலான சுமார்



610 கிலோமீட்டர் தூரமுள்ள நெடுஞ்சாலையை தேசிய நெடுஞ்சாலையாக மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,36,30,99,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3320, திரு. ஜே. ஹேமச்சந்திரன், இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 843, திரு. டி.பி.எம். மைதீன்கான்.

**திரு. டி.பி.எம். மைதீன்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பாளை சட்டமன்றத் தொகுதி, வண்ணார்பேட்டை பகுதியில் பைபாஸ் ரோடும், திருநெல்வேலி தூத்துக்குடி ரோடும் சந்திக்கும் (முன்னாள் சபாநாயகர் செல்லப்பாண்டியன் உருவச் சிலை ரவுண்டானா) இடத்தில் போக்குவரத்து இடையூறைத் தவிர்க்க அந்த இடத்தில் மேம்பாலம் கட்ட ஏற்பாடுகள் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,36,30,99,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 833, திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்.

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சாத்தூர் நகரில் வைப்பார் நதியில் கட்டப்பட்ட பழைய பாலத்தை விரிவுபடுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,36,30,99,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1794, திரு. க. பாரமலை.

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மானாமதுரை தொகுதி, வேதியாரேந்தல் முதல் மானாமதுரை-இளையாங்குடி சந்திப்பு வரை மிகவும் பழுதடைந்துள்ள சாலையை மேம்பாடு செய்வதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,36,30,99,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 789, திரு. இ. புகழேந்தி.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடலூர் நகர் கெடிலம் ஆற்றில் தரைப்பாலம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,36,30,99,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1416, திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை நகராட்சிப் பகுதியில் உள்ள நெடுஞ்சாலைகளை ஒருங்கிணைக்கும் வகையில் ஓர் ஆரச் சாலை (ரிங் ரோடு) அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,36,30,99,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3580, திரு. மு.பெ. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டத்தையும், கரூர் மாவட்டத்தையும் இணைக்கும் வகையில் க. பரமத்தி, சின்னதாராபுரம் அருகில் அமராவதி ஆற்றின் இடையே பாலம்



அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,36,30,99,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்"

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3387, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம், பேராவூரணி தொகுதி, பேராவூரணி ஒன்றியம், பட்டத்துரணி முதல் மேற்பளைகாடு இணைப்பு சாலையை தார் சாலையாக மேம்படுத்துவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,36,30,99,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 780, திரு. எஸ்.கே. வேதரத்தினம், இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 1772, திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரியில் இருந்து அஞ்சி கிராமம் வழியாக விஸ்வநாதபுரம் விலக்கு, செட்டிகுளம், கூடன்குளம், உவரி கிராமங்களின் வழியாக திருச்செந்தூர் செல்லும் கிழக்கு கடற்கரைச் சாலையை அகலப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,36,30,99,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

*முற்பகல் 11—30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1682, திரு. ஆஸ்டின்.

**திரு. ஆஸ்டின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாகர்கோவில் தொகுதிக்குட்பட்ட மணக்குடி - பள்ளம் மீனவர் கிராமங்களை இணைக்கும் இணைப்புச் சாலைப் பணியினை உடன் முடிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,36,30,99,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1671, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வால்பாறையில் அட்டகட்டி முதல் சோலையார் வரையுள்ள பழுதடைந்த சாலைகளை உடனடியாக பழுதுபார்க்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,36,30,99,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3054, திருமதி எஸ். மகேஸ்வரி.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை ஆத்துப்பாலம் பகுதியில் ஏற்கெனவே இருந்த பாலத்தைச் சற்று அகலப்படுத்திவிட்டு அதற்காக ஒரு நாளைக்கு இரண்டு நுழைவு என்று வாகன உரிமையாளரிடம் சுங்கவரி வசூலிப்பதைத் தடுத்து கோவை மக்களின் பெரும் பிரச்சினையைத் தீர்க்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவாத்து பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,36,30,99,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3117, திரு. துரை. கி. சரவணன்.



**திரு. துரை. கி. சரவணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிதம்பரம் நகரம் மற்றும் அண்ணாமலை நகரை இணைக்கும் இரயில்வே மேம்பாலத்தைக் கட்ட அதன் பணிகளைத் துரிதப்படுத்துவது குறித்தும், தொகுதியின் மேற்குப் பகுதியிலுள்ள குமாரக்குடி முதல் பாளையங்கோட்டை, சோழத்தரம் முதல் திருமுட்டம், திருமுட்டம் முதல் ஆனந்தக்குடி கிராமம் வரையிலுள்ள சாலை வசதிகள் செப்பனிடப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,36,30,99,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3457, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,36,30,99,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3294, திரு. கி. பாரிமோகன், இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 3231, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,36,30,99,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 886, திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,36,30,99,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1956, திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவள்ளூர் தொகுதியில் நெமிலியகரம் - கலியனூர் கண்டிகை இடையில் கொசஸ்தலை ஆற்றில் தரைப்பாலம் ஒன்று கட்டுவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,36,30,99,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3615, திரு. ஆர். சக்ரபாணி.

**திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒட்டன்சத்திரம் தொகுதியில், தாழையூத்து - கள்ளிமந்தயம் சாலை, வேலம்பட்டி - கூத்தம்பூண்டி சாலை, கள்ளிமந்தயம் - கூத்தம்பூண்டி சாலை, கூத்தம்பூண்டி - மூலனூர் சாலை, கேதையுரம்பு - இடையகோட்டை சாலை, வடமதுரை ஒட்டன்சத்திரம் சாலையிலிருந்து வெரியம்பூர் செல்கின்ற சாலை, வெரியம்பூர் - ஜவ்வாதுபட்டி சாலை, ஜவ்வாதுபட்டி - சின்னக்காம்பட்டி சாலை, கள்ளிமந்தயம் - இடையகோட்டை சாலை ஆகிய சாலைகளை நபார்டு திட்டத்தில் அகலப்படுத்தி மேம்படுத்துவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,36,30,99,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2011, திரு. கே. ஆறுமுகம்.



**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருக்கழுக்குன்றம் தொகுதி திருமணி மோசிவாக்கம், அம்மணம்பாக்கம், தாழம்பேடு, ஒத்திவாக்கம் மணப்பாக்கம், வீராபுரம், மனமை-குன்னத்தூர், பிலி களத்தூர்-சாலூர்-மாம்பாக்கம், நடுவக்கரை-பெரும்பேடு பகுதிகளில் சாலைகள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,36,30,99,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1187, திரு. அ. இரா. மலையப்பசாமி.

**திரு. அ. இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,36,30,99,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2966, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,36,30,99,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்"

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3057, திரு. செகு. தமிழரசன், இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 809, டாக்டர் பி. வள்ளல்பெருமாள், இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 806, திரு. அ. அசோகன்.

**திரு. அ. அசோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவாரூர் தொகுதி, கொரடாச்சேரியில் இரயில்வே கீழ்பாலம் அமைக்க

வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,36,30,99,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 836, திரு. எ.வ. வேலு.

**திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வெறையூர் முதல் மதுராம்பட்டு, சிறுபாக்கம் முதல் சாத்தனூர் வரையிலுள்ள மாவட்டச் சாலைகளை மேம்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,36,30,99,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 827, திரு. ஜெ. அன்பழகன்.

**திரு. ஜெ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தியாகராய நகர் தொகுதியில் உஸ்மான் சாலை, பனகல் பார்க், ஆற்காடு சாலை, 100 அடி சாலை சந்திப்பு ஆகிய இடங்களில் பாலங்கள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,36,30,99,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

### (ச) கோரிக்கை எண் 54 – பாசனம் குறித்த மூலதனச் செலவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 54 – பாசனம் குறித்த மூலதனச் செலவு, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.



**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பாசனம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.521,31,56,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1557, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டத்தில், வேலூர் நகரம், சத்துவாச்சாரி பேரூராட்சி பகுதி மற்றும் மாவட்டத்தின் பிற பகுதிகளில் உள்ள மழை நீர்க் கால்வாய்களை தூர் வாரி, பாலாற்றிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.521,31,56,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2163, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.521,31,56,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2647, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.521,31,56,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3128, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.521,31,56,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 898, திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.521,31,56,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1843, திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.521,31,56,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2064, திரு. கே. ஆறுமுகம்.



**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.521,31,56,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2239, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.521,31,56,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 650, செல்வி க. பாலபாரதி.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டுக்கல் தொகுதிக்குட்பட்ட ஏ. வெள்ளோடு பகுதியில் அணை கட்டுவதற்காக நிலம் கையகப்படுத்தும் பணிகள் முடிவடைந்துவிட்டதால், பாசனத்திற்காக உடனடியாக அங்கு அணைகட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.521,31,56,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

## (உ) கோரிக்கை எண் 55 - பொதுப் பணிகள் - கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 55 - பொதுப் பணிகள் - கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பொதுப் பணிகள் - கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 55 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.220,69,32,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1556, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டத்தில் உள்ள தொரப்பாடி, சத்துவாச்சாரி, பெருமுகை, அலமேலுமங்காபுரம், வேலூர் விநாயக முதலியார் பெண்கள் பள்ளி, வேலூர் ஈ.வே.ரா. நாகம்மை பெண்கள் மேல்நிலைப் பள்ளி, வேலூர் முஸ்லிம் மேல்நிலைப் பள்ளி ஆகிய உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளுக்குக் கூடுதல் வகுப்பறைகள் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப்பணிகள்- கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 55 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.220,69,32,000/-ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2592, திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப்பணிகள்- கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 55 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.220,69,32,000/-ல் ரூ.100/-- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1844, திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"பொதுப்பணிகள்-கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 55 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.220,69,32,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2124, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப்பணிகள்-கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 55 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.220,69,32,000/-ல் ரூ.100/-- குறைக்க வேண்டும்"

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2657, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப்பணிகள்–கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 55 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.220,69,32,000/-ல் ரூ.100/-, குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3130, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப்பணிகள்-கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 55 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.220,69,32,000/-ல் ரூ.100/-- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 899, திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப்பணிகள்-கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 55 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.220,69,32,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2938, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப்பணிகள்-கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 55 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.220,69,32,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3283, திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பொதுப்பணிகள்-கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 55 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.220,69,32,000-/ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

*முற்பகல் 11-35*

**(ஊ) கோரிக்கை எண் 56 – சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கை எண் 56 – சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு பற்றிய 56ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.489,67,37,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1554, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், குடியாத்தத்தில் இருந்து பரதராமி செல்லும் சாலையைச் செப்பனிட வேண்டியதன் அவசியம் குறித்து"விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு பற்றிய 56ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.489,67,37,000/-ல். ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2173, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு பற்றிய 56 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.489,67,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2593, திரு. எச்எம். ராஜு.

**திரு. எச்எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு பற்றிய 56 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.489,67,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1733, திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தாரமங்கலம் தொகுதி, வேளக்கவுண்டனூர் ஊராட்சி ஒன்றிய சாலையிலிருந்து கலர்பட்டி வரை மண் சாலையை தார்ச் சாலையாக மாற்றுவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு பற்றிய 56 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.489,67,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1881, திரு. க. முருகவேல் ராஜன், இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 3467, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு பற்றிய 56 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.489,67,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3133, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு பற்றிய 56 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.489,67,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 900, திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு பற்றிய 56 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.489,67,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2937, திரு. ஜி. பழனிசாமி.



**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு பற்றிய 56 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.489,67,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்,"

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1848, திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு பற்றிய 56 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.489,67,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3339, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம், பேராவூரணித் தொகுதி, சங்கமங்கலம் மாவடுக்குறிச்சி இணைப்புச் சாலையைத் தார்ச்சாலையாக மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு பற்றிய 56 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.489,67,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாசனம், பொதுப் பணிகள்—கட்டடங்கள், சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து, பாசனம் குறித்த

மூலதனச் செலவு, பொதுப் பணிகள் – கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு மற்றும் சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை @ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பேரவைப் பதிவேட்டில் அவற்றைப் பதிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துக்களைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 7. அறிவிப்புகள்–தொடர்ச்சி

### (ஆ) உறுப்பினர்களுக்கு தேநீரும் மதிய உணவும் வழங்கல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பொதுப் பணித் துறை சார்பாக இப்பொழுது தேநீரும் பிறகு மதிய உணவும் சட்டமன்றப் பேரவை மண்டபத்தையொட்டிய பகுதியில் உறுப்பினர்களுக்கு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 8. மானியக் கோரிக்கைகள், 2001-2002, விவாதமும் வாக்கெடுப்பும்–தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்.

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்றத்திற்கு வருகிற ஒரு வாய்ப்பை மீண்டும் எனக்குக் கொடுத்த எங்கள் தலைவர், மரியாதைக்குரிய டாக்டர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதேபோல, இன்றைக்குச் சட்டமன்றத்திலே எங்களை வழிநடத்திக் கொண்டிருக்கிற

@ 483 முதல் 634 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் I மற்றும் II ஆக அச்சிடப்பட்டுள்ளது.



மரியாதைக்குரிய எங்களுடைய பேராசிரியர் அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைச் சொல்லியும் திராவிட முன்னேற்றக் கழகத்திலே சேர்ந்த நாளிலேயிருந்து அரசியலிலே எனக்கு உறுதுணையாக இருக்கிற என்னுடைய அருமைச் சகோதரர், எங்களுடைய தளபதியாருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, மீண்டும் இந்தச் சட்டமன்றத்திற்கு வரக்கூடிய வாய்ப்பை எனக்கு வழங்கிய சாத்தூர் தொகுதி மக்களுக்கும் என்னுடைய நன்றியை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விழைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்திருக்கிறேன். நேற்றையதினம் இந்தப் புத்தகங்களையெல்லாம் மாற்றி, மாற்றி படித்துப் பார்த்தேன். அமைச்சர் அவர்கள் ஏதாவது புதிய திட்டங்களைச் சொல்லியிருப்பாரா என்று எண்ணி, நானும் தேடித் தேடிப் பார்க்கிறேன் ஒன்றும் கிடைக்கவில்லை. எங்களுடைய அமைச்சர் மரியாதைக்குரிய அருமை அண்ணன், பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்த திரு. துரைமுருகன் அவர்களும், மரியாதைக்குரிய நெடுஞ்சாலைத் துறை அமைச்சராக இருந்த திரு. தா. கிருட்டிணன் அவர்களும் அறிவித்த திட்டங்களுடைய தொடர்ச்சிதான் இந்தக் குறிப்பிலே இருக்கிறதே ஒழிய, வேறு ஒன்றும் நீங்கள் புதியதாய் கண்டுபிடித்து நீண்ட தொலைநோக்குத் திட்டங்கள் ஏதாவது சொல்லியிருப்பீர்கள் என்று பார்த்தால் நிச்சயமாக இல்லை என்பதை நான் இந்த நேரத்திலே கொஞ்சம் வருத்தத்தோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக நீங்கள் ஆட்சி செய்த காலத்திற்கும், எங்களுடைய தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சி செய்த காலத்திற்கும் உள்ள வித்தியாசங்களை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற அந்த உணர்வை இந்தச் சட்டமன்றத்திலே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையை நாம் எடுத்துக்கொள்வோம் என்று சொன்னால், பொதுப் பணித் துறையிலே நீங்கள் ஆட்சி செய்த காலத்திலே மொத்தம் சிறு பாசனத் திட்டங்களுக்கும் வேறு பாசனத் திட்டங்களுக்கும் நீங்கள் ஒதுக்கிய தொகை 568 கோடியே 56 இலட்சம் ரூபாய்தான்.

முற்பகல் 11-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர்., மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர், ஏதோ உங்களிடத்திலே கேட்க வேண்டுமென்று சொல்கிறார்.

***மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள், பொதுப் பணித் துறை அமைச்சராக தான் பதவி வகித்ததாகச் சொன்னார். அவர் எப்போது, எந்த ஆண்டுக் காலத்தில் இந்த அவையிலே பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்தார் என்பதைத் தங்கள் மூலமாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** சொல்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் டாக்டர் எம்ஜிஆர், புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக் காலத்தில்தான் நான் அமைச்சராக இங்கே இருந்தேன். அது உங்களுக்கும் தெரியும். என்னை இந்தக் கட்சியிலே இணைத்துக்கொண்ட எங்கள் தலைவர் டாக்டர் கலைஞருக்கும் தெரியும், உலகத்திற்கும் தெரியும்.

பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய ஆட்சிக் காலத்திலே 568 கோடியே 56 இலட்சம் ரூபாய்தான் நீங்கள் ஒதுக்கியிருந்தீர்கள். ஆனால், கடந்த 4–1/2, 5 ஆண்டு காலத்திலே சுமார் 1902 கோடியே 51 இலட்சம் ரூபாயை பொதுப் பணித் துறையிலே பாசனத்திற்கான திட்டங்களுக்கு மட்டும் எங்களுடைய ஆட்சிக் காலத்திலே பணத்தை ஒதுக்கி, மிகச் சிறப்பாக இந்தப் பொதுப் பணித் துறை அந்த 5 ஆண்டு காலத்திலே இருந்திருக்கிறது. அதற்குக் காரணம், தலைவர் அவர்களே, எங்களுடைய தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் முதலிலே அமைச்சர் பொறுப்பை ஏற்ற நேரத்திலே பொதுப் பணித் துறையிலே அமைச்சராக இருந்த காரணத்தால் இந்தத் துறையிலே ஆர்வத்தோடு, இந்தத் துறையை அவருடைய அந்த 5 ஆண்டு கால ஆட்சியில் மிகச் சிறப்பாக உன்னிப்பாகப் பார்த்து இந்த வேலைகளையெல்லாம் செய்து கொடுத்திருக்கிறார்கள்.

பேரவைத் தலைவர் அவர்களே, அதுமட்டுமல்ல, பொதுப் பணித் துறையிலே 5 ஆண்டு காலம் நீங்கள் ஆட்சி செய்த காலத்தில், கட்டடங்களுக்காக நீங்கள் ஒதுக்கிய பணம் 326 கோடியே 43 இலட்சம்தான். ஆனால், எங்களுடைய ஆட்சிக் காலத்திலே 1004 கோடியே 86 இலட்சம் ரூபாயை கட்டடங்களுக்காக எங்களுடைய முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் அன்றைக்கு ஒதுக்கியிருந்திருக்கிறார்கள். அதுபோக, தலைவர் அவர்களே, உங்களுடைய ஆட்சிக் காலத்திலே நீங்கள் கொண்டுவந்த அந்தப் பாசனத் திட்டங்கள் மூலமாக 11,809 எக்டேர் நிலங்கள்தான் அன்றைக்குப் புதிதாக பாசனம் பெற்றன. ஆனால், எங்களுடைய ஆட்சிக் காலத்திலே 10,033 எக்டேர் நிலங்கள் அப்போது புதிதாகப் பாசனத்திற்காக எடுக்கப்பட்டிருக்கிறது.



தலைவர் அவர்களே, தூர் வாரும் திட்டத்தை இன்றைக்கு இந்தியா பூராவும் வியக்கிற அளவிற்கு, எல்லோரும் பாராட்டும் அளவிற்கு டாக்டர் கலைஞர் அவர்கள் அவருடைய ஆட்சிக் காலத்திலே அதைச் செய்து கொடுத்தார்கள். அப்படிச் செய்ததன் மூலமாக பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய ஆட்சிக் காலத்தில் ஆறுகளிலும், வாய்க்கால்களிலும் மொத்தம் 7,523 கிலோமீட்டர் அளவிற்கு தூர் வாரும் பணி மிகச் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டது.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் அமைச்சரும், சட்டமன்ற உறுப்பினருமான மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தூர் வாரும் திட்டத்தைப் பற்றி இங்கே கூறினார்கள். இந்தத் திட்டம் 1995 ஆம் ஆண்டு உலக வங்கி நிதி உதவி மூலமாக மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்திலே தீட்டிய திட்டம் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் எங்கள் ஆட்சிக் காலத்திலே செய்த சாதனைகளைச் சொல்லியிருக்கிறோம். சகோதரர், நம்முடைய அமைச்சர் அவர்கள் பதிலுரை தந்திருக்கிறார்கள். நீங்கள் நன்றாகச் செய்தால் எங்களுக்கு சந்தோஷம்தான். ஏனென்று சொன்னால், நான் இன்றைக்கு இந்த இயக்கத்திலே இருந்தாலும், நீங்கள் எல்லாம் ஒரு காலத்திலே சகோதரர்களாக இருந்தவர்கள்தான். நீங்கள் சிறப்பாகச் செய்தால் நாங்கள் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்; ஆனால் அதற்காக முழுவதுமாக உங்களைப் பாராட்ட முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சகோதரர் என்றால் எல்லா காலத்திலும் சகோதரர்தான். ஒரு காலத்திலே சகோதரர் என்றால், பிறகு என்ன மச்சினரா? (சிரிப்பு)

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய ஆட்சிக் காலத்திலே சட்டமன்ற உறுப்பினர்களுக்கென ஒரு தொகுதிக்கு ஒரு ஏரி என்று சொல்லி ஏறத்தாழ 381 ஏரிகளில் தூர் வாரும் பணி முடிந்திருக்கிறது. நீங்கள் ஆட்சி செய்த காலத்தில் இளநிலைப் பொறியாளர்கள் 13 பேர் புதிதாகப் பணி நியமனம் செய்யப்பட்டார்கள். ஆனால், டாக்டர் கலைஞர் ஆட்சிக் காலத்திலே மொத்தம் 297 பேர் புதிதாக அன்றைக்கு Service Commission மூலமாக நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள். எங்களுடைய ஆட்சிக் காலத்திலே

புதிதாக நியமனம் செய்கிற அக்கறை இல்லாமல் இருந்த அந்தச் சூழ்நிலையை மாற்றி அன்றைக்கு 297 பேரை நாங்கள் நியமனம் செய்திருக்கிறோம்.

அதேபோன்று தினக் கூலிகளாக இருந்த 305 பேரைத்தான் நீங்கள் பணி நிரந்தரம் செய்தீர்கள். ஆனால், டாக்டர் கலைஞர் ஆட்சியிலே 1184 பணியாளர்கள் அப்போது பணி நிரந்தரம் செய்யப்பட்டார்கள். அதுமட்டுமல்ல. 204 தொழில்நுட்ப உதவியாளர்களும் அப்போது பணி நிரந்தரம் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய ஆட்சிக் காலத்திலேதான் தமிழ்நாட்டிலே புதிதாக 10 மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டடங்கள் எல்லாம் கட்டப்பட்டன. நீங்கள் ஆட்சி செய்த காலத்தில் ஒரு இடத்திலேகூட புதிதாக மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டடங்கள் கட்டப்படவில்லை.

*முற்பகல் 11-45*

அதுமட்டுமல்ல, பேரவைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைத் துறையை எடுத்துக்கொள்வோம் என்று சொன்னால், 1991–லேயிருந்து 1996 வரை உங்கள் ஆட்சியில் அன்றைக்கு 1632 கோடியே 41 இலட்சம் பணத்தை நீங்கள் ஒதுக்கி இருந்தீர்கள். ஆனால், எங்களுடைய ஆட்சியிலே, 3728 கோடியே 56 இலட்சம் பணத்தை எங்களுடைய தலைவர் அவர்கள் இந்தத் துறைக்கு ஒதுக்கிக் கொடுத்திருந்தார்கள்.

அதேபோல எங்கள் ஆட்சிக் காலத்திலே புதிய பாலங்கள் 247 கட்டி, திறக்கப்பட்டன. அதற்காக 292 கோடி ரூபாயை எங்களுடைய முதலமைச்சர் ஒதுக்கிக் கொடுத்திருந்தார்கள். அதுபோக 200 பாலங்கள் புதிதாகக் கட்டுகின்ற பணியும் அன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஆனால், உங்கள் ஆட்சிக் காலத்திலே இணைப்புச் சாலைக்கு நீங்கள் வெறும் 186 கோடி ரூபாய்தான் ஒதுக்கியிருந்தீர்கள். ஆனால், எங்களுடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் அன்றைக்கு 433 கோடி ரூபாய் இணைப்புச் சாலைகளுக்காக ஒதுக்கிக் கொடுத்திருந்தார்கள்.

அதேபோல உங்களுடைய ஆட்சிக் காலத்திலே நெடுஞ்சாலைத் துறைக்கு 118 கோடி ரூபாய்தான் ஒதுக்கப்பட்டது. ஆனால், எங்களுடைய ஆட்சிக் காலத்திலே 6,537 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது...

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** பேரவைத் தலைவர் அவர்களே...



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடித்துவிடட்டும்.

***மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** ஒரே ஒரு நிமிடம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு பட்டியலைப் போட்டுக் கொண்டு, 1991–96–ல் அப்படி நடந்தது. இப்போது இப்படிச் செய்திருக்கிறீர்கள் என்று சொல்கிறார்கள். 1991–96–ல் செய்த திட்டங்கள் என்னவோ அதைத்தான், 1996–க்குப் பின்னாலே அவர்களும் செய்திருக்கிறார்கள். பணத்தை ஏன் அதிகம் காண்பித்திருக்கிறார்கள் என்றால், சிமெண்ட் விலை ஏறிப்போய்விட்டது. 80 ரூபாய் என்றிருந்த சிமெண்ட் விலை 200 ரூபாய் என்று ஏறிப்போய்விட்டதால் இப்படி ஒதுக்கப்பட்டதே தவிர, வேறொன்றுமல்ல. திட்டங்கள் எல்லாம் ஒன்றுதான். எனவே, பட்டியலைப் போட்டுச் சொல்வதை எல்லாம் நம்புவதற்கில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், அவர்களுடைய ஆட்சிக் காலத்திலுடைய சாதனைகள் என்ன என்பதைத் தொகுத்துக் கூறுகிறார்கள். அமைச்சரவர்கள் அதற்குப் பதிலுரையிலே பதில் சொல்லட்டும்.

**திரு. வா. சந்தானம்:** பேரவைத் தலைவர் அவர்களே, 1991–96 என்பதற்கும், 1996 லிருந்து 2001 என்பதற்கும், ஒவ்வோர் ஆண்டிலும் நிதி வரவிலே மாற்றங்கள் இருக்கின்றன. இதே அவையிலே காங்கிரஸ்காரர்கள் ஆட்சி செய்தபோது 100 கோடி ரூபாய்க்கு பட்ஜெட் போட்டபோது திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள், நாங்கள் century அடித்துவிட்டோம் என்று பெருமையாகச் சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதுபோல 1996 ல்கூட அந்த ஆட்சி வந்த முதல் ஆண்டிலே 8,000 கோடி ரூபாய்க்குத்தான் பட்ஜெட் போடப்பட்டது. அதுவே, 1996–க்குப் பின்னால் 2001–ல் பட்ஜெட் போடும்போது 21,000 கோடி ரூபாய்க்குப் போடப்பட்டது. (குறுக்கீடுகள்) எனவே, அன்றைக்கு இருந்த நிதிநிலை என்பது வேறு. இன்றைக்கு இருக்கிற நிதி நிலை என்பது வேறு. எனவே, அதிலே நிதி நிலைகளின் காரணமாக சில மாறுபாடுகள் இருக்கும் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

***பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இந்த அவையிலே உள்ள எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், எல்லோரும் தமிழ்நாட்டவராதலின் ஒருவகையில்

உறவுடையவர்கள், நட்புடையவர்கள். ஒருவரை ஒருவர் மதித்து பழகித் தீரவேண்டியவர்கள். இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். அவர்கள் பேசுகிறபோது, கடந்த காலத்தைவிட, முதல் ஐந்தாண்டு காலத்தைவிட, அடுத்த ஐந்தாண்டு காலத்தில் எந்தெந்தத் துறையில் அதிக வேகமான பெரிய வளர்ச்சி ஏற்பட்டது என்பதை அவருக்குள்ள ஆர்வத்தோடு எடுத்துச் சொல்கிறார்கள். அதிலே வெறும் தொகை மட்டும் குறிப்பிடப்பட்டால் அது வேறு. தொகை மட்டும் என்றால், 10 கோடி, 15 கோடி ஆயிற்று என்றால், நாளுக்கு நாள் விலைவாசி வளர்கிறது, அதன் காரணமாக செலவுத் தொகை உயர்வு ஏற்படுகிறது என்று மறுத்துச் சொல்வதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், 100 பாலங்கள் கட்டப்பட்ட இடத்தில் 300 பாலங்கள் கட்டப்பட்டன என்று சொன்னால் (மேசையைத் தட்டும் ஒலி) அல்லது 10 பள்ளிக்கூடங்கள் கட்டப்பட்ட இடத்தில் 20 பள்ளிக் கூடங்கள் கட்டப்பட்டன என்று சொன்னால் அந்த வளர்ச்சி வரவேற்கப்பட வேண்டியது அல்லவா? அந்தப் போட்டி கட்சிகளுக்கிடையில் ஏற்படுவது சமுதாயத்திற்கு நன்மை செய்வதற்குப் பயன்படும் என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், பேச்சைத் தொடருங்கள்.

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) நான் சொல்ல வருகிறேன். அதற்குள் திரு. சந்தானம் அண்ணன் அவர்கள் அவசரப்பட வேண்டாம். இந்த ஆண்டிலே அவர்கள் எவ்வளவு ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதற்கான கணக்கு வைத்திருக்கிறேன். பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய ஆட்சிக் காலத்திலே N.H. – National Highways-ல் 9 கோடியே 54 இலட்சம் ரூபாய்க்கு வேலைகள் நடந்திருக்கின்றன, பாலங்கள் கட்டியிருக்கிறீர்கள். ஆனால் எங்களுடைய ஆட்சிக் காலத்திலே – 120 கோடியே 82 இலட்சம் ரூபாய்க்கு பாலங்கள் வேலைகள் நடந்திருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, பாலங்கள் மட்டுமல்ல, தலைவர் அவர்களே, 1996-க்கு முன் N.H. Road-ன் நீளம் 2002 கிலோமீட்டர்தான். ஆனால், எங்களுடைய ஆட்சிக் காலத்தில் 3864 கிலோமீட்டராக உயர்த்தி 1862 கிலோமீட்டரை புதிதாக நாங்கள் N.H. ல் சேர்த்துக் கொடுத்திருக்கிறோம். நாங்களும் ரோடு போட்டோம், நீங்களும் ரோடு போட வேண்டும் என்பதற்காக விவரத்தைக் கொடுத்திருக்கிறேன். (குறுக்கீடு) பிறகு நீங்கள் பேசுங்கள். நான் ஒன்றும் Controversial-ஆகப் பேசவில்லையே! நீங்கள் பிறகு



சொல்லுங்கள். அதேபோல, பேரவைத் தலைவர் அவர்களே, 1996-க்கு முன்னாலே மாநில நெடுஞ்சாலைத் துறையிலே போட்ட அந்த ரோடுகள் 2258 கிலோமீட்டர்தான். தற்போது 4192 கிலோமீட்டர் இன்றைக்குப் புதிதாக மாநில நெடுஞ்சாலையாக எடுத்திருக்கிறோம்.

*முற்பகல் 11.50*

பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நிதி ஒதுக்கத்தை நாம் எடுத்துக்கொள்வோம் என்று சொன்னால், பாரபட்சமாக இன்றைக்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். காலத்திலே சோத்துப்பாறை, சண்முகா நதி, சின்னம்பட்டி என்று சொல்லி அன்றைக்கு இந்த 3 அணைக்கட்டுத் திட்டங்கள் அவர் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டன. அதற்குப் பின்னாலே இருக்கங்குடி, மலட்டாறு, வடக்குப் பச்சையாறு, கொடுமுடியாறு என்று சொல்லி இன்றைக்கு இருக்கிற முதலமைச்சருடைய ஆட்சிக் காலத்திலே அன்றைக்கு ஆரம்பிக்கப்பட்டது. ஆனால், இந்தத் திட்டங்களையெல்லாம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆரம்பித்தார் என்பதற்காகவோ, இன்றிருக்கிற முதலமைச்சர் ஆரம்பித்தார் என்பதற்காகவோ, திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் பாரபட்சமாக நடக்கவில்லை. எங்களுடைய முதலமைச்சர் அவர்கள் அதற்கெல்லாம் பணம் ஒதுக்கிக் கொடுத்து இன்றுவரைக்கும் வேலைகள் செய்து, அந்த வேலைகளையெல்லாம் முடித்துக் கொடுத்திருக்கிறார்கள். இன்றைக்கு உங்களைப் பொறுத்த அளவிற்கு நீங்கள் எப்படி நடந்து கொண்டிருக்கிறீர்கள் என்று சொன்னால், டாக்டர் கலைஞர் அவர்கள் ஆரம்பித்த திட்டம் என்பதற்காக நீங்கள் பணத்தை ஒதுக்காமல் இருக்கிறீர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கொஞ்சம் குறித்துக்கொள்ள வேண்டும். அந்தத் திட்டங்கள் - மாம்பழத்துறையாறுக்கு நீங்கள் பணம் ஒதுக்கவில்லை. அதேபோல, மிருகண்டாறு நதிக்குப் பணம் ஒதுக்கவில்லை. நிலையூர் சேனலுக்கு நீங்கள் பணம் ஒதுக்கவில்லை. பதினெட்டாம் கால்வாய்க்கு நீங்கள் பணம் ஒதுக்கவில்லை. பத்திரப்பள்ளி திட்டத்திற்கு நீங்கள் பணம் ஒதுக்கவில்லை. குப்பநத்தத்திற்கு நீங்கள் பணம் ஒதுக்கவில்லை. கண்டி ஓடைக்கும் நீங்கள் பணம் ஒதுக்கவில்லை. ஆகவே, பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே பாரபட்சமாக, நாங்கள் ஆரம்பித்த திட்டங்கள் என்று நீங்கள் இந்தத் திட்டங்களுக்குப் பணம் ஒதுக்காமலிருக்கிறீர்கள். தயவுசெய்து அமைச்சர் அவர்கள் இதிலே பாரபட்சம் இல்லாமல் தமிழ்நாடு முன்னேற வேண்டுமென்ற உணர்வோடு நீங்கள் இவற்றிற்குப் பணம் ஒதுக்க வேண்டுமென்று சொல்லி இந்த நேரத்திலே பணிவோடு நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு மரியாதைக்குரிய அருமை அண்ணன் சந்தானம் அவர்கள் விளைவாசியிலே, வேறு வேறு திட்டங்கள் மூலமாக பணம் கூடியிருக்கும் என்று சொன்னார்கள். மரியாதைக்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறையிலே 3 விதமான திட்டங்கள் நடந்துகொண்டிருக்கின்றன. ஒன்று, உலக வங்கி உதவியோடு கொண்டுவரப்படுகிற திட்டங்கள். இரண்டாவது, மாநில நிதி உதவியோடு செய்யப்படுகிற திட்டங்கள். மூன்றாவது, நபார்டு வங்கியினுடைய உதவியோடு செய்யப்படுகிற திட்டங்கள். ஆக, மூன்றுவிதமாக, இன்றைக்கு பண உதவியோடு பொதுப் பணித் துறையிலே திட்டங்கள் எல்லாம் செய்துகொண்டிருக்கிறோம். எங்களுடைய ஆட்சிக் காலத்திலே, போன ஆண்டிலே 342 கோடி ரூபாய்தான், உலக வங்கித் திட்டத்திலேயிருந்து செயல்படும் திட்டத்திற்கு நாங்கள் ஒதுக்கியிருந்தோம். ஆனால், நீங்கள் 374 கோடி ரூபாய் ஒதுக்கியதாக உங்களுடைய குறிப்பிலே இருக்கிறது. எனக்குக் கூட சந்தோஷம். பரவாயில்லை, 32 கோடி ரூபாய் நீங்கள் அதிகமாக ஒதுக்கியிருக்கிறீர்கள் என்று சொல்லி நாங்கள்கூட சந்தோஷப்பட்டோம். ஆனால், உள்ளே பார்க்கிற நேரத்திலேதான், அது 23-வது Empowered Committee யிலே போன ஆட்சிக் காலத்திலேயே இந்த 32 கோடி ரூபாயையும் நாங்கள் ஒதுக்கி வைத்திருக்கிறோம். காரணம், என்ன என்று சொன்னால் இந்தத் திட்டம், உலக வங்கித் திட்டம் 31-3-2002 உடன் இந்தத் திட்டம் முடிவடைகிற காரணத்தினாலேதான் இந்த 32 கோடி ரூபாயும் அதிகமாக ஒதுக்கியிருக்கிறீர்கள். அதுவும் எங்களுடைய ஆட்சிக் காலத்தில் Empowered Committee-யிலே அந்தப் பணத்தை நாங்கள் அதிகமாக ஒதுக்கியிருந்தோம்.

இதிலே இன்னொரு வேடிக்கை, பேரவைத் தலைவர் அவர்களே, மாநில நிதியோடு செய்யப்படுகிற திட்டங்களுக்கு 130 கோடி ரூபாயை நாங்கள் ஒதுக்கியிருந்தோம். ஆனால், இன்றைக்கிருக்கிற உங்களுடைய ஆட்சியிலே 166 கோடி ரூபாயை நீங்கள் ஒதுக்கியிருக்கிறீர்கள். எனக்கு ஒரு சந்தோஷம். பரவாயில்லை, 36 கோடி ரூபாய் அதிகமாக ஒதுக்கியிருக்கிறார்கள், பணம் இல்லை என்று சொல்கிற நேரத்தில் இவ்வளவு பணம் ஒதுக்கியிருக்கிறார்களே என்று சொல்லி நாங்கள் பார்க்கிற நேரத்தில், அதிலேயும் பார்த்தோம் என்று சொன்னால், அந்த அதிகமாக இருக்கிற 36 கோடி ரூபாயில் நபார்டு வங்கியிலிருந்து வருகிற பணத்தையும் சேர்த்துக் கொண்டார்கள். கடையமேரி, காடாநதி, சாஸ்தாகோயிலுக்காக மொத்தம் 31 கோடியே 21 இலட்சம் ரூபாய் நபார்டு வங்கியிலேயிருந்து வருகிற பணம். அதை நீங்கள் மாநில நிதி உதவி செய்யப்படும் திட்டத்திலே சேர்த்திருக்கிறீர்கள். அதுபோக, 2



கோடியே 83 இலட்சம் ரூபாய் மத்திய அரசுப் பணம். அந்தப் பணம் எங்கே எதற்கு ஒதுக்கப்பட்ட பணம் என்று சொன்னால், எண்ணூர், வட சென்னை கடல் அரிப்புத் தடுப்புக்காக 2 கோடியே 83 இலட்சம் ரூபாய் மத்திய அரசாங்கம் ஒதுக்கியிருக்கிறது. அதையும் சேர்த்திருக்கிறீர்கள். ஆனால், கூட்டிக் கழித்துப் பார்த்தால் நீங்கள் ஒதுக்கியிருக்கிற அதிகப்படியான பணம் 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் தான் இந்த நிதியாண்டிலே பொதுப் பணித் துறையிலே இந்த அரசாங்கம் அதிகமாக ஒதுக்கியிருக்கிறது. இதை மரியாதைக்குரிய அமைச்சர் அவர்கள் சரியாக்க வேண்டும். மரியாதைக்குரிய அருமை அண்ணன் சந்தானம் அவர்களும் இதைக் குறித்துக்கொள்ள வேண்டும். 2.50 கோடி ரூபாய்தான் அதிகமாக ஒதுக்கியிருக்கிறார்கள். ஆக, பேரவைத் தலைவர் அவர்களே, இதெல்லாம் ஒரு பட்ஜெட்டிலே - இன்னும் வெளிப்படையாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால் ஒரு ஏமாற்றுத்தனமான பட்ஜெட், அதிகமான பணம் ஒதுக்கியதாகச் சொல்லி, கணக்கிலே உள்ளபடியே குறைவாக இருக்கிறது. இன்னும் சொல்ல வேண்டுமென்று சொன்னால், பேரவைத் தலைவர் அவர்களே.....

முற்பகல் 11-55

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நபார்டிலிருந்து வருகின்ற பணமாக இருந்தாலும்கூட, அது மாநில அரசுக்குக் கடனாக வருகின்ற பணம். நாம்தான் அதைத் திருப்பித் தரவேண்டும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் சொல்கிற அந்தக் கருத்து எனக்கு உடன்பாடல்ல. நபார்டு வங்கியிலே கடன் வாங்குகிற அந்தப் பணம் வேறு—உங்களுடைய நிதியிலிருந்து—நம்முடைய மாநில நிதியிலிருந்து கொடுக்கின்ற பணம் வேறு.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில நிதியிலிருந்து வருகிற பணத்தில் 94 சதவிகிதம் சம்பளத்திற்கே செலவாகிவிடுகிறது. திட்டங்களை ஈடேற்ற வேண்டுமென்றால் மைய அரசிடமிருந்தும் கடன் வாங்க வேண்டும், பிற Financial Institutions மூலமாகவும் கடன் வாங்க வேண்டும். External Financc என்று சொல்லக்கூடிய அளவிற்கு வெளிநாட்டுப் பணத்தையும் கடன் வாங்கி, கடன் மூலமாகத்தான் நாம் திட்டங்களை ஈடேற்ற வேண்டும். இதுதான் நிதி நிலையின் உண்மை நிலை. (மேசையைத் தட்டும் ஒலி)

[2001 செப்டம்பர் 8

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒத்துக்கொள்கிறேன். அப்படி என்றால், மாநகராட்சியிலே கடன் வைத்துவிட்டுப் போனதாகச் சொன்னது சரியா? தப்பா? அதை நீங்கள்தான் முடிவு செய்ய வேண்டும். ஏனென்றால், மாநகராட்சியிலே மரியாதைக்குரிய மேயர் அவர்கள் இங்கே நிறைய development works செய்து கடன் வைத்துவிட்டுப் போய்விட்டார்கள் என்று நீங்கள் சொல்கிறீர்களே. (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சி நிர்வாகத்தைப் பொறுத்தவரைக்கும், திட்டச் செலவைவிட திட்டங்களுக்கு அல்லாத வீண் செலவுகள் அதிகமாகச் செய்யப்பட்டுவிட்ட காரணத்தால் ஆங்கே தொய்வு. அதைத்தான் நாங்கள் சொன்னோம். இதுதான் உண்மை. (குறுக்கீடு) அதுதான் உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு உறுப்பினர் கேட்கின்ற கேள்வி என்னவென்றால் ஒரு ஆட்சி கடன் வாங்காமல் நடத்த முடியாது. அதிலே மாறுபட்ட கருத்து இல்லை. அதை அவர் ஒத்துக்கொள்கிறார். ஆனால், அதே நேரத்திலே அன்றைக்கு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பேசுகிறபோது மாநகராட்சிக்காரர்கள் கடன் வாங்கிவிட்டார்கள், கடன் வாங்கிவிட்டார்கள் என்று சொன்னார்கள். ஒரு பஞ்சாயத்திலே, முனிசிபாலிட்டிகூட கடன் வாங்குகிறது. ஆனால், திருப்பித் தர வேண்டும். கடன் வாங்கி யாரும் வீட்டிற்கு எடுத்துக்கொண்டு போய்விடவில்லை. திட்டத்திற்குச் செலவு செய்திருக்கிறார்கள். ஆகையால், அதேமாதிரி நீங்கள் கடன் வாங்கியிருக்கலாம். திட்டத்திற்கு எல்லாம் செலவு பண்ணியிருக்கலாம். ஆனால், அதைத்தான் கேட்கிறார். மாநகராட்சி கடன் வாங்கினால் குற்றம் என்று கூறுகிறீர்கள். ஆனால் நீங்கள் இங்கே வாங்கியது குற்றம் என்று சொல்லாமல் திட்டம் என்று கூறுகிறீர்களே; இது நியாயமா? என்கிறார், (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். பேச்சுக்கு துரைமுருகன் பொழிப்புரையா? (சிரிப்பு)

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...



2001 செப்டம்பர் 8]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன, சொல்லுங்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் இங்கே ஒரு விளக்கம் சொல்கிறபோது வீண் செலவு என்பதைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அது என்ன வீண் செலவு என்பதை ஆதாரத்தோடு சொன்னால், அதற்கு நான் விளக்கம் தருவதற்கு வாய்ப்பாக இருக்கும்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்துகூடச் செல்ல முடியாத அளவிற்கு, சென்றாலும் விபத்து என்ற அளவிற்கு அடையாறில் ஒரு மேம்பாலம் கட்டப்பட்டதே அது முழுக்க முழுக்க வீண் செலவு. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) சொல்லி முடிக்கிறேன். ஆளுநர் மாளிகையிலிருந்து கோட்டைக்கு வருகிற வழியிலே அண்ணா யூனிவர்சிட்டிக்கு முன்னாலே அகலமான சாலை, தாராள போக்குவரத்து கடந்த காலத்திலே. அதைத் தடை செய்து ஒருவழிச் சாலையாகச் செய்து பலகோடி வீணாக்கப்பட்டதே. அதுவும் ஒரு வீண் செலவு. (மேசையைத் தட்டும் ஒலி) பெரம்பூர் மேம்பாலத்தைப் பொறுத்தவரைக்கும், தரையினுடைய தன்மை என்ன, பூமிக்குள்ளே இருக்கிற மண்ணின் தன்மை என்ன என்பதனைத் தக்க முறையில் ஆராயாமல் பலகோடி செலவு செய்து, பிறகு மீண்டும் தொடர் செலவாக பலகோடி செலவு ஏற்பட்டதே, அதுவும் ஒரு வீண் செலவு. (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, கேபிள் போடுவதாகப் பல பகுதிகளிலே L & T Contract எடுத்து கடல் மணலைக் கொண்டு அதன்மீது கொட்டி Contractor ஒட்டுமொத்த Contract-ஐ அவர்கள் எடுத்துக்கொண்டு Sub-contract-ஐ பலருக்குக் கொடுத்து கிட்டத்தட்ட 40 சதவிகிதம் அதிகமாக கார்ப்பரேஷன் பணத்தை Contractors-க்கு அள்ளிக் கொடுத்ததும் வீண் செலவு என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கத்தைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தப் பாலங்கள் எல்லாம்–சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையில் கட்டப்பட்டிருக்கக்கூடிய பாலங்கள் எல்லாம்—முறைப்படி High Level Committee, Traffic Improvement Committee-யில் அதிகாரிகளைக் கலந்தாலோசித்து அதற்குப் பிறகு மன்றத்திலே ஏகமனதாகத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுத்தான் அந்தப் பாலங்கள் எல்லாம் உரிய இடத்திலே கட்டப்பட்டிருக்கின்றன.

எனவே தவறான தகவலை நம்முடைய அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல. அந்தப் பாலங்களைப் பொறுத்தவரையிலே வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரணையில் இருக்கிறது. எனவே, அந்த விசாரணை முடிவுறுகிற நிலையில் நிச்சயம் மக்களுக்கு உண்மை தெரியவரும் என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். பேசுங்கள். (குறுக்கீடு) திரு. துரைமுருகன், அதாவது அமைச்சருடைய பார்வையிலே அது வீண் செலவு. மேயருடைய பார்வையிலே அது ஒரு அத்தியாவசியச் செலவு. வழக்கு முடியட்டும், உண்மை வரட்டும் என்று சொல்கிறார். (குறுக்கீடு)

*நண்பகல் 12—00*

**திரு. துரைமுருகன்:** இந்த மன்றத்திலே இன்றைக்குப் பலகோடி ரூபாய்க்கு ஒப்புதல் தரப்போகிறோம். இந்த மன்றம் ஒப்புக்கொண்ட பிறகு, சாலைகள் அல்லது பெரிய ஏரிகள், டேம்கள் கட்டுகிறோம். ஆனால், நாளைக்கு ஓர் அமைச்சர் வந்து, பாலம் கட்டியது, டேம் கட்டியது எல்லாம் வீண் செலவு என்றால், இந்த மன்றம் ஒத்துக்கொள்கிறதா? அதேபோல...(கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்வதற்கு உரிமை இருக்கிறது. கடந்த ஆட்சிக் காலத்திலேகூட, சட்டமன்றத்திலே தீர்மானம் போட்டுத்தான் கொண்டுவந்தீர்கள்.

**திரு. துரைமுருகன்:** ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்று ஒத்துக்கொண்டு, நிறைவேற்றப்பட்டு, போக்குவரத்தைச் சரி செய்வதற்காகக் கட்டப்பட்ட பாலத்தை, வீண், விரையம் என்று மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சொல்வாரேயானால் முழுக்க முழுக்க அரசியல் கண்ணோட்டத்துடன்தான் அவர் பிரச்சினையை அணுகுகிறார் என்று பெயர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன் அவர்களே, மதிப்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர் மேயர் அவர்களே சொல்லிவிட்டார்கள். மேயர் என்ன சொல்கிறார் என்றால், வழக்கு முடியட்டும் அதுபற்றிய உண்மை நிலவரம் தெரியட்டும் என்று சொல்கிறார்கள். நீங்கள் எதற்கு அதில் சிக்கல்பட வேண்டும்? மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். அவர்களே, பேசுங்கள். திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இரண்டு நிமிடத்தில் உரையை முடித்துக்கொள்ளுங்கள். (கூச்சல்-குழப்பம்)



**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** அண்ணே, என்ன அண்ணே, பூராவும் பஞ்சாயத்தாக நடந்துகொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 10, 15 பேர் பேச வேண்டும். இன்று மதியத்தோடு மானியக் கோரிக்கைகள் முடிய வேண்டும். மாலையில் அனைத்துக் கட்சிகள் கூட்டம் வேறு இருக்கிறது. ஆகவே இரண்டு மூன்று மணித் துளிகளில் முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படியே ஒவ்வொன்றாகப் போய்க் கொண்டிருந்தால், நீங்கள், நேரு ஸ்டேடியத்தை டெண்டர் விடாமல் கட்டியதை நாங்கள் சொல்ல வேண்டும். இப்படி ஒவ்வொரு பஞ்சாயத்தாக நடந்து கொண்டிருக்கும். நீங்கள் நேரு ஸ்டேடியத்தை டெண்டர் விடாமல் கட்டினீர்கள். (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுக்குப் பேச உரிமை உண்டு. அதற்காகப் பேசவேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. மு. தம்பிதுரை சார், அவர் இரண்டு நிமிடத்தில் முடித்துக்கொள்ளட்டும்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** பேசட்டும், யார் வேண்டாம் என்று சொன்னது? அதற்காக நாங்கள் பேசக்கூடாது என்று சட்டம் இருக்கிறதா? நீங்களும் பேசுங்கள், நாங்களும் பேசுகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களே, அமருங்கள். பிரச்சினை முடிந்துவிட்டது. உட்காருங்கள். கே.கே.எஸ்.எஸ்.ஆர். அவர்களே, தொடர்ந்து பேசுங்கள், 3 மணித்துளிகள் மட்டும் பேசுங்கள்.

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் பணம் ஒதுக்கியதில்கூட, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நாங்கள் எப்படி ஒதுக்கினோமோ அப்படியேதான் ஒதுக்கியிருக்கிறீர்கள். நாங்கள் ஒதுக்கியதில் ஒரு ரூபாய்கூடக் கூடுதலாக ஒதுக்கவில்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் அமர்ந்துகொண்டு பேசக்கூடாது.

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** தூர் வாரும் பணி என்று சொன்னால்...(குறுக்கீடு) உங்கள் அப்பாவிடம் போய் சண்டை போடப்பா.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். அவர்களே, அமர்ந்துகொண்டு பேசக்கூடியவர்களுக்குப் பதில் சொல்லக் கூடாது. இன்பத் தமிழனுடைய தந்தை உங்களுக்கு எவ்வளவு நெருக்கமானவர் என்பது தெரியும். ஆகவே, நீங்கள் அந்தப் பிரச்சினைக்கு உள்ளே போக வேண்டாம்.

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உதாரணத்திற்கு எடுத்துக்கொள்வோம் என்று சொன்னால், தூர் வாரும் பணிக்கு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே நாங்கள் 3.5 கோடி ரூபாய் அன்றைக்கு ஒதுக்கியிருந்தோம். நீங்களும் அதே 3.5 கோடி ரூபாயைத்தான் ஒதுக்கியிருக்கிறீர்கள். பெரியாறு திட்டத்திற்கு நாங்கள் 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கினோம், நீங்களும் 50 இலட்சம்தான் ஒதுக்கியிருக்கிறீர்கள். அதேபோல, மலட்டாறு திட்டத்திற்கு நாங்கள் 2 கோடி ரூபாய் ஒதுக்கியிருந்தோம், நீங்களும் 2 கோடி ரூபாய்தான் ஒதுக்கியிருக்கிறீர்கள். அதேபோல, இருக்கன்குடி திட்டத்திற்கு 3 கோடியே 18 இலட்சம் ரூபாயை நாங்கள் ஒதுக்கினோம். நீங்களும் அதே 3 கோடியே 18 இலட்சம் ரூபாயைத்தான் ஒதுக்கியிருக்கிறீர்கள். 18 ஆம் கால்வாய்த் திட்டத்திற்கு நாங்கள் டோக்கன் பணமாக ஒரு ரூபாயை ஒதுக்கினோம். நீங்களும் அதே ஒரு ரூபாயைத்தான் ஒதுக்கியிருக்கிறீர்கள். ஆகவே இதிலிருந்து என்ன தெரிகிறது என்று சொன்னால், நாங்கள் செய்த அந்த வேலையை, அப்படியே அந்தப் பக்கத்தை மட்டும் மாற்றிவிட்டு, அந்த வருடத்தை மாற்றிவிட்டு அந்த வேலைதான் நடந்து கொண்டிருக்கிறதேயொழிய புதிதாக நீங்கள் செய்தது ஒன்றும் இல்லை. அது போதாதா? மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் ஆரம்பித்த திட்டங்கள் என்று நான்கு திட்டங்கள் அறிவித்திருக்கிறீர்கள். வயலூர் கிராமத்திலே பாலாற்றிலே ஒரு ரெகுலேட்டர், பள்ளிக்கரணையிலே ஒரு நிர்த்தேக்கம், ஜமீன் கொரட்டூரில் ஒரு ரெகுலேட்டர், திருநீர்மலையில் ஒரு நீர்த்தேக்கம் என்று சொல்லி, நான்கு திட்டங்களை நீங்கள் அறிவித்திருக்கிறீர்கள். அதற்கும் token provision ஒரு ரூபாய்தான் ஒதுக்கியிருக்கிறீர்கள். அதற்கும் பணம் ஒதுக்கவில்லை. ஆகவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் திட்டங்களைச் சொல்லியிருக்கிறீர்கள். இது ஒன்று. நாங்கள் அறிவித்த திட்டங்களுக்கு நீங்கள் பணம் கொடுக்கவில்லை. (குறுக்கீடு)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களே, நீங்கள் பதிலுரையில் விளக்கமாகச் சொல்லுங்கள். திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இன்னும் இரண்டு நிமிடங்களில் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்று நாங்கள் அறிவித்த திட்டங்களுக்கும்–(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடித்துக்கொள்ளட்டும், உட்காருங்கள்.

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் அறிவித்த திட்டங்களுக்கும் நீங்கள் பணம் ஒதுக்கவில்லை, அதேபோல், நீங்கள் அறிவித்த திட்டங்களுக்கும் பணம் ஒதுக்கவில்லை. ஏற்கெனவே இருக்கும் திட்டங்களுக்கும், நாங்கள் ஒதுக்கிய அளவுக்குத்தான் நீங்கள் பணம் ஒதுக்கியிருக்கிறீர்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டங்களையெல்லாம் நடைமுறைப்படுத்துவதற்கு, எப்படி பணத்தைப் பெறப்போகிறீர்கள், என்ன செய்யப்போகிறீர்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தங்களுடைய பதிலுரையில் சொல்ல வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் பணிவுடன் கேட்கிறேன். மொத்தத்திலே இந்த அரசாங்கத்தினுடைய நிதியிலேயிருந்து 2-1/2 கோடி ரூபாய்தான் அதிகமாக, நாங்கள் அறிவித்ததைவிட (குறுக்கீடு) கடைசியிலே நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடு) முதலில் நான் சொல்வதைக் கேட்டுக்கொள்ளுங்கள். 2-1/2 கோடி ரூபாய்தான் அதிகமாக ஒதுக்கியிருக்கிறீர்கள் என்பதை நான் இந்த நேரத்திலே உங்களுக்குப் பணிவன்போடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இரண்டாவது, பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேச்சை முடித்துவிடுங்கள்.

*பிற்பகல் 12-05*

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு) ஒன்று அல்ல. இரண்டு மானியங்கள் இருக்கின்றன. கடந்த ஆட்சிக் காலத்திலே பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சிக்கு நல்லது சொல்ல வேண்டும் என்றுதான் நான் இதைச் சொல்கிறேன். எங்களுடைய ஆட்சிக் காலத்திலே tender நடத்துகிற நேரத்திலே அதற்காக ஒரு கமிட்டி அமைத்து, அந்தக் கமிட்டியிலே இரண்டு தலைமைப்

பொறியாளர்கள், இரண்டு கண்காணிப்புப் பொறியாளர்கள், நிதித் துறைச் செயலாளர் என்று சொல்லி ஒரு கமிட்டி அமைத்து, அந்தக் கமிட்டியிலேயிருந்துதான் tender–களை approval செய்தோம். அந்தக் கமிட்டி இருக்கிறதா, இல்லையா? அது நடைமுறையிலே இருக்கிறதா என்பதை நீங்கள் சொல்ல வேண்டும்....

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கமிட்டி இருக்கிறது.

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** அப்படி இருக்குமென்று சொன்னால், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது tender எல்லாம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உச்சக் கட்டத்திற்கு வாருங்கள்.

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** வந்தாகிவிட்டது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது Highways Department–லே நடக்கிற Tender–களிலே tender schedule அங்கே தருவது இல்லை. நாங்கள் கேட்டால் தர முடியாது என்று சொல்கிறார்கள். 'வேதாளம் முருங்கை மரம் ஏறிய' கதையைப் போலத்தான் அந்தப் பேச்சு இருக்கிறது. அங்கே அதிகாரிகளைக் கேட்டால், நாங்கள் தர முடியாது என்று சொல்லிவிட்டு, அங்கு அன்றைக்கு இருக்காமல் ஓடிவிடுகிறார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நான் ஏதோ வேண்டுமென்றே சொல்வதாக நீங்கள் நினைக்க வேண்டாம். இங்கே நெடுஞ்சாலைத் துறையிலே ஒரு tender நடந்திருக்கிறது. Tender நடந்ததிலே, அதிலே Paver Machine இருந்தால்தான் tender கொடுக்க வேண்டுமென்று சொல்லி condition இருந்திருக்கிறது. அந்த ஒரு நபருக்கு, யார் சொல்லிக் கொடுத்தார்கள் என்று தெரியவில்லை. Paver Machine இல்லாத ஒரு நபருக்கு நீங்கள் tender கொடுத்திருக்கிறீர்கள். 4,5 பேர் High Court–லே போய் writ போட்டுத்தான் அங்கே Schedule Form வாங்கியிருக்கிறார்கள்.

நாங்கள் கேட்டால், பேரவைத் தலைவர் அவர்களே, சொல்ல வேண்டிய இடத்திலேயிருந்து எங்களுக்குச் சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் அப்படித்தான் செய்வோம் என்று சொல்லி இன்றைக்குச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அவ்வாறு சொல்ல வேண்டிய நபர் யார் என்று நாங்கள் அழுத்திக் கேட்டால், leave போட்டுவிட்டு ஓடிவிடுகிறார்கள். (கூச்சல்–குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பேசுகிறார்.



**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் கூறிய டெண்டரிலே (குறுக்கீடு) நியாயப்படிதான் நடந்திருக்கிறது. அங்கே சட்டமன்ற உறுப்பினர், அந்தத் தொகுதிக்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே, அவர் நீதிமன்றத்திலேயானாலும் சரி, அலுவலகத்திலேயானாலும் சரி, பல அடாவடித்தனங்களைப் பண்ணியதன் காரணமாக, அவருடைய அந்த அடாவடித் தனங்கள் அங்கே நடக்கக்கூடாது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதன் காரணமாக, அவர்கள் அந்த இடத்திற்குச் செல்வார்கள் என்று எண்ணித்தான், அதை முறைப்படி நடத்த வேண்டும் என்றுதான் நான் அங்கே ஆணையைப் பிறப்பித்திருக்கிறேன். அதையும் மீறி (குறுக்கீடு) கையைக் காண்பிக்க வேண்டாம். (குறுக்கீடு) நீங்கள்தான் அந்த இடத்திற்குச் சென்றிருக்கிறீர்கள். இங்கே இருக்கிற திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள் அந்த அலுவலகத்திற்குச் சென்று தகராறே பண்ணியிருக்கிறார்கள். (குறுக்கீடு) கையைக் காண்பிக்க வேண்டாம். (கூச்சல்)

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பன்னீர்செல்வம், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** கையைக் காண்பிக்க வேண்டாம். (குறுக்கீடு) கையைக் காண்பிக்க வேண்டாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பன்னீர்செல்வம், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** ஆகவே கடந்த ஆட்சியிலேதான்.... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பன்னீர்செல்வம், பேசிக் கொண்டிருப்பவர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன். நீங்கள் எதற்குக் கையைக் காட்டுகிறீர்கள்?

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** கடந்த ஆட்சியிலே (குறுக்கீடு) கையை நீட்ட வேண்டாம்....

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமருங்கள்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** கையை நீட்ட வேண்டாம்.

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடத்திலே பேச்சை முடித்துவிடுங்கள்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** கையை நீட்ட வேண்டாம் என்றுதான் நான் கூறினேனேயொழிய.....

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமருங்கள்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்....

**திரு. எம்.ஆர்.கே பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...(கூச்சல்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அமருங்கள். அமைச்சர் விளக்கம் சொல்லட்டும். (கூச்சல்) ஆளும் கட்சி உறுப்பினர்கள் அமருங்கள் (கூச்சல்) (குறுக்கீடுகள்) ஆளும் கட்சி உறுப்பினர்கள் அமைதியாக அமருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் அமர்ந்தால்தான் யார் தவறு செய்கிறார்கள் என்று தெரியும். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) ஆளும் கட்சி உறுப்பினர்கள் அமைதியாக அமருங்கள். அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்கிறார்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறையாகக் கூறவில்லை.

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** சட்டமன்ற உறுப்பினர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள் அங்கேயிருந்து கையைக் காண்பித்தார். கையைக் காண்பிக்க வேண்டாம் என்றுதான் கூறினேன்.



அங்கேயிருந்து கையைக் காண்பித்தபோது தயவுசெய்து நீங்கள் கையைக் காண்பிக்க வேண்டாம் என்றுதான் கூறினேன். முறைப்படிதான் கூறினேன். நான் தவறாக ஒன்றும் கூறவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், ஒரு நிமிடத்திலே பேச்சை முடித்துவிடுங்கள்.

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** கையைக் காண்பிக்க வேண்டாம்.

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** எனக்கு வந்திருக்கிற.....

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அமருங்கள். அமைச்சர் விளக்கம் சொல்லிவிட்டார். நீங்கள் உட்காருங்கள்.

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அமருங்கள். அமைச்சர் விளக்கம் சொல்லிவிட்டார். (குறுக்கீடு) நீங்கள் அமருங்கள்.

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசுகிறார், நீங்கள் உட்காருங்கள். அமைதியாக உட்காருங்கள். திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். ஒரு மணித் துளியிலே பேச்சை முடியுங்கள்.

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள் (குறுக்கீடு) பன்னீர்செல்வம், உட்காருங்கள். (குறுக்கீடு) அமைச்சர் தவறாகச் சொல்லவில்லை. பன்னீர்செல்வம், அமைச்சர் கையைக் காட்ட வேண்டாம் என்று சொன்னார். அதிலே என்ன தவறு?

*பிற்பகல் 12—10*

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் கையைக் காண்பிக்க வேண்டாம் என்றுதான் கூறினேன். (குறுக்கீடுகள்) (கூச்சல்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும், மீண்டும் நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருப்பது என்னவென்றால் அங்கேயிருந்து கையைக் காண்பிக்க வேண்டாம் என்றுதான் கூறுகிறேன். மிரட்டலாகக் கையைக் காண்பிக்க வேண்டாம் என்றுதான் நான் கூறினேன். (குறுக்கீடுகள்) (கூச்சல்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பன்னீர்செல்வம், சட்டமன்றத்திற்கு என்று ஒரு முறை இருக்கிறது. அவர் சொன்ன குற்றச்சாட்டு உங்களைப் பற்றியதாக இருந்தால், நீங்களே எழுந்து ஒலிபெருக்கியிலே என்னுடைய அனுமதியைக் கேட்டு மறுப்புச் சொல்லலாம். அதிலே தவறு ஒன்றும் இல்லை. (குறுக்கீடுகள்) நீங்கள் எழுந்து என்னிடத்திலே அனுமதியைக் கேட்டு மறுப்புச் சொல்லலாம். ஏன் என்றால், அமைச்சர் ஒரு குற்றச்சாட்டு சொல்கிறபோது. அதிலே தொடர்புடையவர்கள் யாராவது இருப்பார்களேயானால், அவர்கள் எழுந்து அனுமதி கேட்கிறபோது நான் அனுமதி மறுக்கப்போவதில்லை. (குறுக்கீடுகள்) (கூச்சல்) முன்னாள் அமைச்சர் பொன்முடி இருக்கிறார். கோ.சி. மணி போன்றவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். பொதுவாக ஏதாவது ஒரு குற்றச்சாட்டு பழைய அரசின் மீது, குடிநீர்த் துறை சம்பந்தமாகச் சொன்னால், கோ.சி. மணி அவர்கள் எழுந்து விளக்கம் சொல்ல எழுந்தால், நான் அனுமதிக்கிறேன். அதைப்போல பொன்முடி அவர்கள் வகித்த துறையைப் பற்றி ஒரு குற்றச்சாட்டு வருகிறபோது, பொன்முடி எழுந்து மறுப்புச் சொல்ல விரும்பினால், நான் அனுமதிக்கிறேன். அதைப்போல மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் குறித்து ஒரு குற்றச்சாட்டு சொன்னால், பன்னீர்செல்வம் எழுந்து, என்னிடத்திலே அனுமதி கேட்க வேண்டுமே தவிர, இவரே அமைச்சரை முஷ்டியைத் தூக்கிக் கொண்டு பயமுறுத்துவது என்பது முறையல்ல. எழுந்து என்னிடத்திலே அனுமதியைக் கேட்டு நீங்கள் விளக்கம் ஏதாவது சொல்வதாக இருந்தால் தாராளமாகச் சொல்லலாம். இப்பொழுது நீங்கள் விளக்கம் சொல்வதற்கு விரும்புகிறீர்கள் என்றால் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) கே.கே.எஸ்.எஸ்.ஆர். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்) கே.கே.எஸ்.எஸ்.ஆர். பேசி முடியுங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் சார்பாக கே.கே.எஸ்.எஸ்.ஆர். பதில் சொல்லட்டும். நீங்கள் உட்காருங்கள். அவ்வளவுதான். (குறுக்கீடு)



**திரு. துரைமுருகன்:** Tender விட்ட இடத்திற்கு இவர் போனதாக அமைச்சர் சொல்கிறார். இவர் இல்லை என்கிறார். அதைச் சொல்லட்டும். (குறுக்கீடுகள்) (கூச்சல்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) ஆளுங்கட்சி உறுப்பினர்கள் அமைதியாக அமருங்கள். (கூச்சல்) ஆளுங்கட்சி உறுப்பினர்கள் அமருங்கள். (குறுக்கீடுகள்) பன்னீர்செல்வம் விளக்கம் சொல்ல வேண்டுமா? (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) அவர் விளக்கம் சொல்லட்டும். (குறுக்கீடுகள்)

**திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் என்னுடைய பெயரைக் குறிப்பிட்டு, முன்னாள் அமைச்சர் அவர்கள் Tender நடக்கின்ற இடத்திற்குச் சென்று தகராறு செய்தார் என்ற வார்த்தையைக் கூறினார். நான் அந்த இடத்திற்குச் செல்லவில்லை. அப்படிப்பட்ட பழக்கமே எனக்குக் கிடையாது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவ்வளவுதான். பிரச்சினை தீர்ந்தது. அதை எதற்காக நீங்கள் நேரடியாகப் பேச வேண்டும்? (குறுக்கீடுகள்) திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். ஒரு நிமிடத்திலே பேசி முடியுங்கள்.

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்கு நான் கொண்டுவருகிறேன். அந்த tender–ரிலே Paver Machine இல்லாத ஒருவருக்கு Tender கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுபோக அங்கே 5 நபர்கள் சென்னையிலே இருக்கிற உயர் நீதிமன்றத்திலே Writ போட்ட பிறகுதான் அவர்களுக்கு Schedule வழங்கப்பட்டு இருக்கிறது. அதை எதற்காக அப்படிச் செய்தார்கள்? யார் சொல்லிச் செய்தார்கள்? இது எங்கேயிருந்து சொல்லப்பட்டது, செய்யப்பட்டது என்பதை எங்களுக்கு நீங்கள் தெரிவிக்க வேண்டும். அதற்குரியது உங்களிடம் இருக்கிறது. உங்களுக்கே தெரியும். ஆதாரம் எங்களிடம் இருக்கிறது. அதைப் பார்த்துத்தான் கேட்கிறேன். பொதுவாக பேரவைத் தலைவர் அவர்களே (குறுக்கீடு) முடித்துவிடுகிறேன், போன ஆட்சி காலத்திலே Tender Schedule யார் கேட்டாலும் கொடுக்கப்பட்டது. (குறுக்கீடுகள்) அதேபோல.(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதியாக அமருங்கள். (குறுக்கீடுகள்) அவர் பேசுவதற்கு உரிமை இருக்கிறது. பேசுவதற்கு அவருக்கு உரிமை இருக்கிறது, மறுப்பு சொல்வதற்கு அமைச்சருக்கும் போதுமான அவகாசம் இருக்கிறது. மறுப்பை அவர் சொல்வார். (குறுக்கீடுகள்)

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** இந்த ஆட்சியிலே open tender-ஆக தபாலிலே நாங்கள் அனுப்பினால், அதை அனுமதிப்பதற்கு நீங்கள் தயாராக இருக்கிறீர்களா? அதேபோல Fax கொடுத்தால் நாங்கள் அதை ஏற்றுக்கொள்வதற்குத் தயாராக இருக்கிறோம் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடைசியாக பேசுகிற நேரத்திலே அதற்குப் பதில் சொல்ல வேண்டும். இன்னொன்று, பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) முடித்துவிடுகிறேன். மிக முக்கியமான பிரச்சினை நம்முடைய மேட்டூர் அணை. மாலை கூட்டம் இருக்கிறது. பேரவைத் தலைவர் அவர்களே, ஜூன் 12 ஆம் தேதி மேட்டூரிலே தண்ணீர் திறந்தீர்கள். அப்படித் திறக்கிற நேரத்திலே அங்கு நிலைமை சரியில்லை என்பது உங்களுக்குத் தெரியும். ஆனால் இந்த 3 மாதங்களிலே என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்? கடைசியிலேதான் இன்றைக்குப் பேப்பரிலே பார்த்தேன். நீங்கள் தபால் எழுதியிருக்கிறீர்கள். (குறுக்கீடு) இன்றைக்கு பேப்பரிலே காலையிலே நான் பார்த்தேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** காவிரிப் பிரச்சினை சம்பந்தமான அனைத்துக் கட்சிக் கூட்டம் இருக்கிறது. அதிலே எல்லா தலைவர்களும் பேசுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. (குறுக்கீடு) மேட்டூர் அணை என்பது காவிரியோடு தொடர்புடையது. (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுக்கு ஒரு விளக்கத்தைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். 21-6-2001 அன்று தலைமைச் செயலாளர் அவர்களால் மத்திய நீர்வள ஆதாரச் செயலாளருக்கு கடிதம் அனுப்பப்பட்டது. 23-7-2001 அன்று தலைமைச் செயலாளரிடமிருந்து மத்திய நீர்வள ஆதார அமைச்சருக்கு மீண்டும் கடிதம் அனுப்பப்பட்டது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் 27-7-2001 அன்று மாண்புமிகு பிரதமருக்குக் கடிதம் எழுதினார். மீண்டும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் கர்நாடக முதல்வருக்கு 27-7-2001 அன்று கடிதம் எழுதினார். 27-7-2001 அன்று மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அனுப்பிய கடிதத்திற்கு பாரதப் பிரதமரிடமிருந்து பதிலும் வந்திருக்கிறது. காவிரி கண்காணிப்புக் குழுக்



கூட்டத்தை அவசரமாகக் கூட்ட வேண்டி, தலைமைச் செயலாளரிடமிருந்து மத்திய நீர்வள ஆதார அமைச்சகச் செயலாளருக்கு கடிதம் அனுப்பப்பட்டிருக்கிறது. 3-8-2001 அன்று ஒரு கடிதம் வந்திருக்கிறது. மேலும் காவிரி நதிநீர்க் கண்காணிப்புக் குழுக் கூட்டத்தை அவசரமாகக் கூட்ட வேண்டி தலைமைச் செயலாளரிடமிருந்து மத்திய நீர்வள ஆதார அமைச்சகத்திற்கு மீண்டும் கடிதம் 14-8-2001 அன்று அனுப்பப்பட்டிருக்கிறது. ஆக, கிட்டத்தட்ட தொடர்ந்து இந்தக் காவிரி நதிநீர்ப் பிரச்சினை சம்பந்தமாக மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறார்கள் என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12-15*

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்காகத்தான் அனைத்துக் கட்சிக் கூட்டம் கூட்டப்பட்டிருக்கிறது. ஒரு பொதுப் பிரச்சினை. அதற்குள்ளே போய் ஏன் சிக்கலை உண்டாக்க வேண்டும்? திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். பேசி முடியுங்கள். (குறுக்கீடுகள்) இதோடு பேசி முடியுங்கள்.

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 3 மாத காலமாக அங்கு நிலைமை சரியில்லை என்பது நம்முடைய முதலமைச்சருக்கும் தெரியும்; அமைச்சருக்கும் தெரியும்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுடைய அனுமதியோடு ஒரு விளக்கம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அரசு எடுத்திருக்கின்ற முயற்சிகளை தேதிவாரியாக தெரிவித்தார்கள். அதிலே மாண்புமிகு பிரதமருக்குக்கூட நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் கடிதம் எழுதியிருக்கிறார்கள் என்று தெரிவித்தார்கள். நான் அமைச்சர் அவர்களிடத்திலே தெரிந்துகொள்ள விரும்புவது-205 டி.எம்.சி. தண்ணீர் தர வேண்டுமென்பது நடுவர் மன்றத்தினுடைய தீர்ப்பு. அந்தத் தீர்ப்பை அமல்படுத்துவதற்காக ஒரு திட்டம், scheme இருக்கிறது என்று சொன்னால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை துரைமுருகன்.

**திரு. துரைமுருகன்:** அந்த ஆணையத்தை—காவிரி ஆணையத்தை— அதனுடைய தலைவர் பாரதப் பிரதமர். அந்த ஆணையத்தைக் கூட்டும்படி நம்முடைய முதலமைச்சர் பாரதப் பிரதமருக்கு கடிதம் எழுதினாரா? ஆனால் (குறுக்கீடு) கண்காணிப்புக் குழு Monitoring Committee என்பது facts-களை collect பண்ணுவது. Collect செய்து ஆணையத்திற்கு அதைக் கொடுக்கும். ஆணையம்தான் அதில் முடிவெடுக்கும். எனவே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், நீங்கள் கேட்பது....

**திரு. துரைமுருகன்:** எனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையத்தைக் கூட்டும்படி பாரதப் பிரதமருக்கு கடிதம் எழுதி இருக்கிறாரா என்பதுதான் நான் கேட்கிற கேள்வி.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் இதற்குப் பதில் சொல்ல வேண்டியதில்லை. ஏனென்றால் அனைத்துக் கட்சிக் கூட்டம் இன்றைக்கு நடைபெறுவதாக இருக்கிறது. இந்தப் பிரச்சினை ரொம்ப சிக்கலான பிரச்சினை, இதிலே போய் நீங்கள் குட்டையைக் குழப்ப வேண்டிய அவசியமே இல்லை. மேட்டூர் அணை என்று கே.கே.எஸ்.எஸ்.ஆர். ஆரம்பித்த காரணத்தால் இதிலே 3 மாதங்களாக என்ன செய்தீர்கள் என்று கேட்ட காரணத்தால் அமைச்சர் அவர்கள் தேதிவாரியாக எழுதப்பட்ட கடிதங்களைப் பற்றி தொகுத்துக் கூறினார்கள். ஆகவே, பிரச்சினை இன்னும் முடிவடையவில்லை. நாம் சிக்கலிலே மாட்டிக்கொண்டிருக்கிறோம். (குறுக்கீடு) ஆகவே—

**திரு. துரைமுருகன்:** சிக்கலுக்குள்ளே போகவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சிக்கலுக்குள்ளே நீங்கள் போகிறீர்கள் என்று அல்ல. காவிரிப் பிரச்சினை சம்பந்தமாக இப்போது எதுவும் வேண்டாம். கே.கே.எஸ்.எஸ்.ஆர் அவர்கள் பேச்சை நிறைவு செய்துவிட்டீர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...



**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் உட்கார வேண்டும். திரு. துரைமுருகன், நீங்கள் முன்னாள் பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்தவர்கள். உங்களுக்கும் இந்த நாட்டு நலனிலே அக்கறை இருக்கிறது. திரு. கோ.சி. மணி அவர்கள் அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர். அவர்களுக்கும் இதிலே பாதிப்பு இருக்கிறது. ஆகவே இது பொதுப் பிரச்சினை என்கின்ற அந்த உணர்வோடு நீங்கள் தயவுசெய்து அந்த விவாதத்திற்குள் இப்போது போக வேண்டாம். நாம் இதுபற்றி எல்லோரும், எல்லா கட்சிகளும் பேசி முடிவு செய்யக்கூடிய ஒரு கட்டத்தில் இந்தப் பிரச்சினைகளைக் குழப்ப வேண்டாம். (குறுக்கீடு) உட்காருங்கள்.

**திரு. துரைமுருகன்:** இந்தக் கேள்வியைக் மட்டும் மறுப்பதேன்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தக் கூட்டம் இன்றைக்கு நடக்கட்டும். அனைத்துக் கட்சிக் கூட்டம் இன்றைக்கு நடைபெறுவதாக இருக்கிறது. அதிலே ஏதாவது முடிவுகள் செய்யப்படட்டும். அதற்குப் பிறகு மற்றவற்றைப் பற்றிப் பேசலாம்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்வகட்சிக் கூட்டத்தைவிட இந்த மன்றம் பெரியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் ஒத்துக்கொள்கிறேன். அனைத்துக் கட்சிக் கூட்டத்திலேகூட நான் கலந்துகொள்ள முடியாது. நான் இதிலேதான் கலந்துகொள்ள முடியும். நான் சொல்வது-(குறுக்கீடு)

**திரு. பி.எம். நரசிம்மன்:** எங்களுடைய நேரத்தை எடுத்துக்கொள்கிறார்கள்.

**திரு. துரைமுருகன்:** அரசுக்கு ஒரு பெரிய நிர்பந்தத்தைத் தர வேண்டுமென்று நான் இதைக் கேட்கவில்லை. ஆனால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர்., உரையை முடியுங்கள்.

**திரு. துரைமுருகன்:** ஆனால் இந்த மன்றம் என்பது சர்வகட்சிக் கூட்டத்தைவிடப் பெரியது. ஆகவே அதைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். பேசி முடியுங்கள். (குறுக்கீடுகள்) அடுத்த உறுப்பினர் பாப்பா சுந்தரம். (குறுக்கீடுகள்) திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர்., முடிந்தது. கடைசியாக வாக்கியத்தை முடிப்பதாக இருந்தால் நான் அனுமதி தருகிறேன். இறுதி வாக்கியத்தைச் சொல்லி முடிப்பதாக இருந்தால் அனுமதி தருகிறேன். (குறுக்கீடு) நிறைவு வாக்கியத்தைச் சொல்லி முடியுங்கள்.

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடத்தில் பேசி முடித்து விடுகிறேன். 1999-லேயும் டாக்டர் கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது இதேபோல ஒரு பிரச்சினை வந்தது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை.

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** வேறு ஒன்றும் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் பாப்பா சுந்தரம் (குறுக்கீடு) திரு. பாப்பா சுந்தரம், பேசுங்கள்.

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. திரு. பாப்பா சுந்தரம், பேசுங்கள்.

*பிற்பகல் 12-20*

***திரு. அ. பாப்பா சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கையின்மீது பேச அனுமதித்த தங்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

வெண்தாடி வேந்தன் தந்தை பெரியார் அவர்களுடைய சமூக நெறியையும், பேரறிஞர் அண்ணா அவர்களுடைய கண்ணிய நெறியையும் மறைந்தும் மக்களிடத்திலே வாழ்ந்துகொண்டிருக்கிற புரட்சித் தலைவர் அவர்களுடைய கருணை நெறியையும் அதற்கும் மேலாக வாக்களித்த மக்களுக்கெல்லாம் நல்ல பல பணிகளைச் செய்திட வேண்டும் என்ற கடமை நெறியையும் ஒருங்கே கொண்ட எங்கள் இதய தெய்வம்



மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவை வணங்கி, 6 கோடி மக்களின் நல்வாழ்வுக்காகப் பாடுபடும் இந்த மாமன்றத்தில் என்னையும் ஓர் உறுப்பினராக்கி, வாய்ப்பளித்து, வாக்குகளைச் சேகரித்த அம்மா அவர்களை வணங்கி, பல்வேறு இடுக்கண்களுக்கு இடையே இன்றைக்கு எதிர்க்கட்சியாக விளங்குபவர்கள் ஆளுங்கட்சியாக இருந்த நேரத்திலே நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு அடுக்கடுக்காகப் பல இடுக்கண்களைக் கொடுத்தாலும், பல்வேறு தொல்லைகளை, பொய்யான வழக்குகளைப் புனைந்து தொடுத்தாலும், ஆட்சிப் பொறுப்பை ஏற்ற உடனேயாவது நிம்மதியாக விட்டார்களா என்றால், இல்லை. ஒரு சர்வாதிகாரி நாட்டை நடத்தியதுபோல் முன்பு நடத்திவிட்டு, இந்த ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பிறகு, அவர்கள் மத்திய அரசின் துணையோடு பல்வேறு மிரட்டல்களை விடுகின்ற இந்த நேரத்திலேகூட மக்கள் பணி ஆற்ற வேண்டும் என்ற ஒரு சீரிய சிந்தனையிலே, வாக்களித்தவர்களுக்கு நம்பிக்கையோடு இருக்க வேண்டும், தமிழ்நாட்டினுடைய வாக்காளப் பெருமக்களும், ஒட்டுமொத்த மக்களும் நிம்மதியாக வாழ வேண்டும் என்ற அடிப்படையோடுதான், தற்போது நிதி நிலைமை மோசமாக இருந்தாலும் நல்லதொரு நிதிநிலை அறிக்கையை தயார் செய்து கொடுத்திருக்கிறார்கள்.

இங்கு மாமன்றத்தில் பேசியவர்கள் குறிப்பிட்டார்கள். நாங்கள் விட்டுச் சென்ற பணிகளைத்தானே தொடர்ந்திருக்கிறீர்கள், நாங்கள் புரட்டிப் பார்த்தோம், அந்த வேலைகளுக்கு நாங்கள் ஒதுக்கிய அளவுதானே நீங்களும் பணம் ஒதுக்கியிருக்கிறீர்கள் என்று கேட்கிறார்கள். நான் அவர்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நீங்கள் விட்டுச் சென்ற ஆட்சியில் எவ்வளவு கோடி கடனை விட்டுச் சென்றீர்கள்? இந்த நிதிநிலை அறிக்கையில எவ்வளவு கோடி பற்றாக்குறை இருக்கிறது என்பதை நீங்களும் அறிவீர்கள். அதையெல்லாம் சரிசெய்ய ஆட்சிப் பொறுப்பேற்ற காலத்திலிருந்து பல்வேறு துறைகளை ஆராய்ந்து ஒரு நல்ல நிதிநிலை அறிக்கையைக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை நீங்கள் ஒத்துக்கொள்ள மறுப்பது ஏன் என்பதுதான் எங்களுக்குத் தெரியவில்லை. பல பேர் சென்ற ஆட்சியில் விட்டதைத்தான் தொடருகிறீர்கள், தொடருகிறீர்கள் என்று சொல்லுகிறார்கள். வேறு என்ன திட்டங்களைப் போட முடியும்? (மேசையைத் தட்டும் ஒலி) இங்கிருந்து ஆந்திராவிற்குச் சென்று திட்டங்களைப் போட முடியுமா? இருக்கின்ற நிலைகளுக்குத்தான் அதிகமாகப் போட முடியும். இருக்கின்ற பாலங்களைத்தான் கட்ட முடியும். தமிழகத்தில் உள்ள குளங்களைத்தான் வெட்ட முடியும்.

1996-ல் புரட்சித் தலைவி விட்டுச் சென்ற நிதிநிலையையும், இன்றைக்கு இருக்கின்ற நிதிநிலையையும் நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். நான் அதிகமாக உங்களைச் சாடிப் பேச வேண்டுமென்று விரும்பவில்லை என்றாலும், இன்று மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இங்கே பேசும்போது சொன்னார். எங்கள் ஆட்சிக் காலத்தில் நீதிதேவன் நடத்தியதைப்போல, நாங்கள் tender-களை நியாயமாகக் கொடுத்தோம், நீங்கள் ஏன் single tender கொடுக்கிறீர்கள் என்று கேட்டார். நான் ஒன்றைச் சொல்லுகிறேன். நீங்கள் மனசாட்சியோடு எண்ணிப் பார்க்க வேண்டும். பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு துரைமுருகன் அவர்களுக்குத் தெரியுமோ, தெரியாதோ, எனக்குத் தெரியாது. பல்வேறு மாவட்டங்களில் அமைச்சர்களின் பக்கத்திலே அவர்களுடைய உறவினர்கள் நின்று கொண்டு, நீங்கள் யாரும் இங்கே tender போட்டுவிட்டு தப்பித்துப் போக முடியாது என்று சொன்ன காட்சிகளை நான் பார்த்திருக்கிறேன். இது உண்மை. இதை இல்லை என்று யாரும் மறுக்க முடியாது. எனவே, இதையெல்லாம் நாம் ஆராய்ந்து கொண்டிருப்பதிலே அர்த்தம் இல்லை என்பதை இந்த நேரத்திலே சொல்லி, நீங்கள் single tender என்று சொல்வதை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது. பொதுப் பணித் துறை ஒரு விசாலமான துறை. அதில் பல்வேறு வகையிலே...

**திரு. ஆர். சக்ரபாணி:** Point of Order.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் உங்களைச் சொல்லவில்லை. முன்னாள் பொதுப் பணித் துறை அமைச்சருக்கு சொல்கிறார். உட்காருங்கள். திரு. பாப்பா சுந்தரம், நீங்கள் பேசுங்கள்.

**திரு. அ. பாப்பா சுந்தரம்:** பல்வேறு துறைகளை இணைத்துக்கொண்ட துறை பொதுப் பணித் துறை. இதனால் விவசாயிகள் நலன் அடைந்திருக்கிறார்கள். 'நீரின்றி அமையாது உலகு' என்பதற்கு ஏற்ப, அந்த நீரைத் தேக்கி, அதை வழிப்படுத்தி பல்வேறு விவசாயிகளுக்குத் தரும் திட்டங்களை இத்துறை தீட்டுகிறது. ஆகவே அந்த வகையிலும் பொதுப் பணித் துறை விவசாயிகளுக்கான முக்கியத் துறையாகக் கருதப்படுகிறது. டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சியில் இந்த மாமன்றத்திலே அநேக உறுப்பினர்கள் பேசும்போது நான் பார்க்கிறேன். 70 சதவீதத்திற்கு மேலான சட்டமன்ற உறுப்பினர்கள் நான் விவசாயக் குடும்பத்தைச் சார்ந்தவன், சார்ந்தவன் என்றுதான் பேசுகிறார்கள். ஆகவே அந்த அளவிற்கு விவசாயிகள் தமிழகத்தில் வாழ்வார்கள் என்று புரிந்துகொண்டுதான் புரட்சித் தலைவி அவர்கள் ஒரு நீண்ட தொலைநோக்குப் பார்வையோடு,



இன்றைக்கு 20 இலட்சம் எக்டேர் தரிசு நிலங்களை மேம்படுத்த வேண்டும் என்று ஒரு திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதை நீங்கள் எண்ணிப் பார்த்திட வேண்டும். ஏதோ இது நாளைக்கு மக்களுக்குப் பயன்படும் திட்டம் அல்ல. இன்னும் 10, 20 ஆண்டுகள் கழித்து தமிழகத்தை எந்த அளவிற்கு முன்னேற்ற வேண்டுமென்ற தொலைநோக்கோடு கொண்டுவந்த திட்டமாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12-25*

அதேபோல புரட்சித் தலைவி அவர்கள் தொட்டில் குழந்தைத் திட்டத்தைக் கொண்டுவந்தார்கள். அதுவும் ஒரு தொலைநோக்கு பார்வைத் திட்டம். தொட்டில் குழந்தைத் திட்டத்தைக் கொண்டு வந்தது, மக்கள் வாக்களிப்பார்கள் என்ற நோக்கத்தோடு அல்ல. அதுபோல மகளிர் காவல் நிலையங்கள். இதுபோன்ற பல்வேறு தொலைநோக்குத் திட்டங்களோடு 20 இலட்சம் எக்டேர் தரிசு நிலங்களை மேம்படுத்தும் திட்டத்தையும் கொண்டுவந்திருக்கிறார்கள்.

உங்களுக்குத் தெரியும், கிராமத்தினுடைய பொருளாதாரம் சீர்பட்டால்தான், இந்த நாட்டினுடைய பொருளாதாரம் சீரடையும். கிராமத்திலே பொருளாதாரம் வளர்ந்தால், கிராமத்திலே இருக்ககூடிய மக்களுக்கு வேண்டிய வருமானம் கிடைத்தால், அவர்களுக்கு வேண்டிய நிலைமைகள் கிடைத்தால், நகரத்தை நோக்கி வரமாட்டார்கள். வேலைவாய்ப்பிற்கும் அவர்கள் அலையமாட்டார்கள். அப்போது நகரத்தினுடைய நெருக்கடி குறையும். நாட்டிலேயுள்ள வேலைவாய்ப்புப் பிரச்சினைகளும் குறையும் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதனால்தான் கிராமங்களுடைய பொருளாதாரத்தை வளர்ச்சியடையச் செய்ய வேண்டுமென்று புரட்சித் தலைவி அவர்கள் விரும்பி, இந்தத் தொலைநோக்குத் திட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். அந்தப் பார்வையில்தான், கிராமத்து மக்கள் நிம்மதியோடு வாழவேண்டுமென்ற காரணத்தினால்தான், 310 கோடி ரூபாய் அளவிற்கு கிராமத்திலே கூட்டுறவுக் கடன்களுக்கான வட்டி மற்றும் அபராத வட்டியைத் தள்ளுபடி செய்துள்ளார்கள் என்ற நல்ல செய்தி, இன்றைக்கு தமிழகத்திலேயுள்ள விவசாயிகள் வயிற்றிலே பால் வார்த்திருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்கு இதுபோன்ற பல்வேறு திட்டங்கள். எதிர்க்கட்சி நண்பர்கள் என்ன சொன்னாலும்கூட இந்த நிதிநிலை அறிக்கையிலே

பல நல்ல அம்சங்கள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்கள் சென்ற ஆட்சியிலே காவிரியில் தூர் எடுத்தோம் என்று சொன்னார்கள். காவிரியில் தூர் எடுத்தல் என்பது, 1994-95-ல் புரட்சித் தலைவி அவர்கள் கொண்டுவந்த திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) அதன்மீது படிப்படியாக நடவடிக்கை எடுத்துத்தான், காவிரியில் தூர் எடுத்திருக்கிறார்கள் என்பதை நாங்கள் ஒத்துக்கொள்கிறோம். ஆனால் காவிரியில் தூர் எடுத்தது எப்படி என்பதை அவர்கள் கண்டறிந்தார்களா, கண்டறியவில்லையா என்பது எனக்குத் தெரியாது. ஆனால், குறிப்பாகச் சொல்கிறேன். குளித்தலைப் பகுதியிலே காவிரியில் தூர் எடுத்திருக்கிறார்கள். அந்தப் பகுதியை இன்றைக்கு மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் சென்று பார்த்தாலும்கூட, தூர் எடுத்த அடிச்சுவடே தெரியாது. (மேசையைத் தட்டும் ஒலி) அங்கேயிருக்கின்ற காட்டாமணிச் செடிகள் அபபடியே இருக்கின்றன. அப்பகுதி தீவுத் திடல் திட்டு போல் காட்சியளிக்கிறது, அப்படியே இருக்கிறது. இதை யார் tender எடுத்தார்கள், எப்படி என்பதையெல்லாம் அவர்கள்தான் விளக்க வேண்டும். ஆகவே அந்த அடிப்படையில் இல்லாமல், வருகின்ற காலங்களில் வடிகால் பகுதிகளிலே மராமத்து செய்வதற்கு ரூ.40.00 கோடியை நமது ஆட்சி ஒதுக்கியிருக்கிறது. தஞ்சாவூரில் மட்டும் காவிரி ஓடுகிறது என்ற நினைப்பு இல்லாமல், தயவுசெய்து நான் கேட்டுக்கொள்ள விரும்புவதெல்லாம், திருச்சி மாவட்டத்திலும் கரூர் மாவட்டத்திலும் காவிரி ஓடிக்கொண்டிருக்கிறது. அதாவது காவிரியினுடைய கிளை வாய்க்கால்கள் ஓடுகின்றன. ஆகவே அதிலேயும் நீங்கள் கவனம் செலுத்தி, இதில் 25 கோடி ரூபாயை தஞ்சாவூர் பகுதிக்கு ஒதுக்கியிருந்தாலும்கூட, 15 கோடி ரூபாய் பல்வேறு இடங்களுக்குச் செய்யப்படும் என்று சொல்லியிருப்பதால், இதிலே கரூர், திருச்சி மாவட்டங்களுக்கும் ஒதுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல இன்றைக்கு குளங்களை வெட்டுகிறீர்கள். நல்ல திட்டங்களைக் கொண்டுவந்திருக்கிறோம். அம்மா அவர்கள் பல்வேறு குளங்களை வெட்ட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். முன்பிருந்த மன்னர்கள் காலத்தில் ஆலயங்கள் கட்டுவது, குளங்கள் வெட்டுவது போன்றவற்றைச் செய்தார்கள். குளங்களை வெட்டுவதால் கிராமத்தினுடைய நீராதாரம் கூடும் என்ற காரணத்தால்தான், அந்தக் காலங்களில் அரசர்கள் அறிந்து குளங்களை வெட்டியிருக்கிறார்கள். ஆகவே அந்த அடிப்படையிலே குளங்களையும் சரியாகத் தூர் வாரச் செய்ய வேண்டும். குளங்களைத் தூர் வாரும்போது, ஒன்றைச் சொல்லக்



கடமைப்பட்டிருக்கிறேன். குளங்களை வெட்டினால் மட்டும் போதாது. குளங்களின் நீராதாரங்களைக் கண்டுபிடித்து, அதற்கு வருகின்ற வரத்துவாரிகளைக் கண்டுபிடித்து சரிசெய்து, ஆக்கிரமிப்புகளை அகற்றி, நீங்கள் அதைச் செம்மையாகச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நமது நாட்டிலே 50 சதவிகித நிலங்கள் வாய்க்கால் மூலமாக நீர்ப் பாசனம் பெற்றாலும், 50 சதவிகித நிலங்கள் குளங்கள் மூலமாகவும், கிணறுகள் மூலமாகவும் பாசனம் பெறுகின்றன என்பது உங்களுக்கெல்லாம் தெரியும். ஆகவே அந்த அடிப்படையிலே குளங்களைப் பெருக்குவதற்கு நீங்கள் 60 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியிருப்பதற்காக நான் இந்த நேரத்திலே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அம்மா அவர்கள் எந்த அளவிற்கு விவசாயிகள்மீது பற்று வைத்திருக்கிறார்கள் என்பதை இந்த ஒதுக்கீட்டிலேயிருந்து நாம் தெரிந்துகொள்ளலாம். அதேபோன்று பல்வேறு திட்டங்கள் தொலைநோக்கிலே சொல்லப்பட்டிருக்கிறது என்றாலும்...(மணியடிக்கப்பெற்றது) இரண்டு நிமிடம்; தொகுதி பிரச்சினைக்கு வந்துவிடுகிறேன்.

*பிற்பகல் 12-30*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நிறைய பேர் பேச இருக்கிறார்கள்.

**திரு. அ. பாப்பா சுந்தரம்:** இன்றைக்கு ஒரு முக்கியமானப் பிரச்சினை; இங்கே பல பேர் பேசிய பிரச்சினை. இருந்தாலும் எனக்குச் சரியான தகவல்களை அவர்கள் சொல்ல வேண்டும். முன்பு இருந்த ஆட்சியில் எது எதற்கோ கோர்ட்டுக்குச் சென்று முறையீடு செய்தவர்கள் – கோர்ட்டிலே தடையாணை பெறுகிறவர்கள், கோர்ட்டிலே மேல்முறையீடு செய்கிறவர்கள், தனியார் கரும்பு ஆலைகள் ஒரு stay வாங்கி இருக்கிறார்கள். அதாவது, மத்திய அரசு சொல்கிற விலையைத் தவிர, மாநில அரசு சொல்கிற விலையை நாங்கள் கொடுக்க முடியாது என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்காக ஒரு தடையாணையைப் பெற்றிருக்கிறார்கள் என்று சென்ற அரசு கூறியது. நான் கேட்டுக்கொள்வதெல்லாம், புரட்சித் தலைவர் அவர்கள் காலத்திலிருந்து, இன்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலம் வரையிலே என்ன நிலை என்பதைத் தெரிவிக்க வேண்டும். இங்கே இருக்கின்ற அரசு அப்போது கரும்புகளை ஆலைகளுக்கு அனுப்பும். அந்த அடிப்படையிலே ஒவ்வோர் ஆலைக்கும் ஒரு விலை என்று தனியார்

ஆலை உள்பட அறிவிப்பு கொடுப்பார்கள். தனியார் ஆலைகளாக இருந்தாலும், கூட்டுறவு சர்க்கரை ஆலைகளாக இருந்தாலும் ஒரு விலை போட்டுக் கொடுப்பார்கள். அதன்படிதான் நடைமுறையிலே இருந்தது. ஆனால் 1998 ஆம் ஆண்டிலிருந்து தனியார் ஒரு தடையாணையைப் பெற்று, அதன் மூலம் இந்த அரசை முடக்கிவிட்டார்கள். அதை ஏன் அந்த அரசு கண்டுகொள்ளவில்லை? எது எதற்கோ கோர்ட்டுக்குச் செல்கிறார்கள். இந்தத் தடையாணையை இரத்து செய்திருக்கக் கூடாதா அல்லது அந்த ஆலையாளர்களை அழைத்து ஒரு compromise ஆக அதாவது, ஒரு சமாதானமாகப் பேசி, முத்தரப்பு மாநாட்டைக் கூட்டி, விவசாயிகளும், தொழிற்சாலைகளும் அரசும் கலந்து ஒரு நல்ல விலையை அறிவித்திருக்கக் கூடாதா என்பதைக் கேட்டு, அம்மா அவர்கள் கருணைகூர்ந்து, தனியார் ஆலைகளுடைய பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)* முடித்துவிடுகிறேன்.

குளித்தலை பகுதியிலே மகளிர் காவல் நிலையத்தை அறிவித்திருக்கிறார்கள். அதற்காக அம்மா அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியினை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அதேபோன்று நகராட்சிகளில், பேருந்து நிலையமே இல்லாத நகராட்சி குளித்தலை நகராட்சி. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் குறித்துக்கொள்ள வேண்டும். பேருந்து நிலையம் இல்லாத நகராட்சிக்குப் பேருந்து நிலையத்தினை நீங்கள் வழங்கிட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று தோகை மலையில் ஒரு பேருந்து நிலையம். மணப்பாறையிலே செவலூர் என்ற இடத்திலே ஒரு ஆறு குறுக்கே போகிறது. மழை வந்துவிட்டால் அங்கே பாலம் இல்லாத காரணத்தால் 30, 40 கிராம மக்கள் அந்த ஊருக்கு வர முடியாமல், செல்ல முடியாமல், மணப்பாறை நகரத்திற்கு வரமுடியாமல் இருக்கிற காரணத்தால், செவலூர் பாலம், மணப்பாறை நகராட்சியில் இருக்கிற பாலத்தைக் கட்டித்தர வேண்டுமென்று பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக மணப்பாறை-குளித்தலை சாலை. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் குறித்துக்கொள்ள வேண்டும். அம்மா அவர்கள் அன்றைக்கு தேர்தல் பிரச்சாரத்திற்கு வரும்போதுகூட, அந்தச் சாலையிலே வரமுடியாமல் திரும்பிப் போய்விட்டார்கள் என்பதுதான் உண்மை. ஆகவே அந்த வகையிலே அந்தச் சாலையை, மணப்பாறை-குளித்தலை சாலையை



நீங்கள் எடுத்து, சீர்செய்து தர வேண்டுமென்று கேட்டு, இந்த வாய்ப்பை நல்கிய, இன்றைக்கு இவ்வளவு திட்டங்களைத் தந்த சரித்திர நாயகியாக விளங்கும் தமிழகத்தின் ஜோதியாக விளங்கும் எங்கள் அம்மா அவர்களை வணங்கி, தமிழக முதல்வர் அவர்களை வணங்கி இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ரா. ஈஸ்வரன். உங்களை வணங்குவதுபோல, நீங்கள் விரைவில் பேசி முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை ஆகியவற்றில் பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுப் பணித் துறையில் என்னுடைய தொகுதியில் உள்ள ஒரு நீண்ட நாள் பிரச்சினை; உள்ளாறு நீர்த்தேக்கத் திட்டம் என்ற திட்டம். சுமார் 39 கோடியே 20 இலட்சத்திற்கு மதிப்பீடுகள் எல்லாம் தயார் செய்து, ஆணைகளெல்லாம் வழங்கப்பட்டு. அந்த வேலை துரிதமாக இன்னும் நடைபெறவில்லை. இந்த திட்டப் பணிகள் நிறைவேறினால் சுமார் 12,000 ஏக்கருக்கு மேல் பாசன வசதியை ஏற்படுத்த முடியும். அதுமட்டுமல்லாமல்... *(குறுக்கீடு)*

*பிற்பகல் 12-35*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு திரு. ஈஸ்வரன் அவர்களே, திரு. பாப்பா சுந்தரம் அவர்கள் ஒன்றைச் சொல்ல விட்டுவிட்டார் போலிருக்கிறது.

**திரு. அ. பாப்பா சுந்தரம்:** சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரிலே என்னைப் போன்ற கொஞ்சம் வளர்ந்தவர்களுக்கு இந்த ஸ்பீக்கரை ஒரு மூன்று அங்குலம் உயர்த்தி வைப்பார்கள். அந்த வகையிலே ராஜு அவர்களுக்கும் தங்க. தமிழ்ச்செல்வன் போன்றவர்களுக்கும் மிகவும் குனிந்து பேச முடியாத நிலை இருப்பதால், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் உதவிட வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஆமாம், நானே சொல்ல வேண்டுமென்று நினைத்தேன். அப்பாவுகூட இருக்கிறார். சரி, திரு. ஈஸ்வரன், நீங்கள் பேசுங்கள்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** உள்ளாறு திட்டம் என்பது ஒரு நீண்ட நாள் பிரச்சினை. சுமார் 100 ஆண்டுகளுக்குமேல் பிரச்சினையாக இருந்தது. அந்தத் திட்டத்தை இரண்டு பக்கங்களிலேயும் பேசி முடிவு செய்து, அந்த அணையினுடைய மதிப்பீடுகளைத் தயார் செய்து சுமார் 39 கோடியே 20 இலட்சம் ரூபாய்க்கு 1–7–1999–ல் தமிழக அரசு ஆணை வழங்கியுள்ளது. ஆக, அந்தப் பணிகள் வேகமாகச் செயல்பட வேண்டும். அந்தத் திட்டம் நிறைவேறினால் சுமார் 12 ஆயிரம் ஏக்கர் பாசன வசதி ஏற்படும். அதுமட்டுமல்லாமல் நிலத்தடி நீர், உணவு உற்பத்தியைக் கூட்டுவதற்கு ஒரு வாய்ப்பு கிடைக்கும்.

அதேமாதிரி செண்பகவல்லி அணைத் திட்டம். இந்த செண்பகவல்லி அணைத் திட்டமானது, சுமார் 100 ஆண்டுகளுக்கு மேல் கேரள அரசும் தமிழ்நாடு அரசும் ஒரு ஒப்பந்தம் ஏற்பாடு செய்து, கேரள எல்லையில் சுமார் 5 ஆயிரம் அடிக்கு மேல் Retaining Wall தடுப்புச் சுவர் கட்டப்பட்டு, அதிலே ஒரு உடைப்பு ஏற்பட்டது. அந்த உடைப்பை அடைப்பதற்காக தமிழ்நாடு அரசு கேரள அரசுக்கு 26–2–1985–ல் சுமார் 5 இலட்சத்து 15 ஆயிரம் ரூபாய் வழங்கியுள்ளது. ஆனால் கேரள அரசு இதுவரைக்கும் அந்தப் பணிகளைச் செய்து முடிக்கவில்லை. கேரள அரசு என்ன நினைக்கிறது என்றால், ஏதோ நம்முடைய கேரளாவிலே இருக்கக்கூடிய நீர் தமிழ்நாட்டிற்குக் கேட்கிறார்கள். ஆகவே இதைக் கொடுக்கக்கூடாது என்கின்ற எண்ணத்தோடு இதுவரைக்கும் சுமார் 40, 50 நினைவூட்டுக் கடிதங்களை தமிழக அரசு கேரள அரசிற்கு எழுதியும்கூட அதைக் கேரள அரசு இதுவரைக்கும் பொருட்படுத்தவில்லை. ஆகையினால் அந்தத் திட்டம் நிறைவேறினால் தமிழ்நாட்டிற்கு, என்னுடைய தொகுதிக்கு, உள்ளாறு நீர்த் தேக்கத் திட்டத்திற்கு அது பிரயோஜனமாக இருக்கும். அந்தத் திட்டம் நிறைவேறினால் அங்கேயிருக்கக்கூடிய வாசுதேவநல்லூர் சட்டமன்ற தொகுதி, சங்கரன்கோவில் சட்டமன்றத் தொகுதி இவற்றுக்கெல்லாம் விவசாயத்திற்கு பயனுள்ளதாக இருக்கும். அந்தத் திட்டத்தை முந்தைய அரசில் பல நேரங்களில் பல முயற்சிகளை எடுத்து, அரசினுடைய கவனத்திற்கு, முன்னாள் பொதுப் பணித் துறை அமைச்சரிடம் ஒவ்வொரு மானியக் கோரிக்கையிலும் சொல்லியும்கூட, அதை அவர் துரிதமாக எடுக்கவில்லை. கேரள அரசுடன் பேச்சுவார்த்தை நடந்ததாக எனக்குத் தெரியவில்லை. ஆகவே மீண்டும் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கு நான் இந்த உள்ளாறு நீர்த் தேக்கத் திட்டத்தைப்பற்றியும் செண்பகவல்லி அணைத் திட்டத்தைப்பற்றியும் அதிலுள்ள குறிப்புகள் முழுவதையும் நேரிடையாகக் கொடுத்திருக்கிறேன்.



ஆகையினால் அதுகுறித்து நீங்கள் நடவடிக்கை எடுத்துவிட்டால், நேரடியாக இந்த செண்பகவல்லி அணைத் தண்ணீர் இந்த உள்ளாறு நீர்த் தேக்கத்திற்கு வரும். அப்படி வரும்போது, சுமார் 12 ஆயிரம் ஏக்கர் பாசனத்திற்கு ஏற்பாடு செய்ய முடியும்.

அதேமாதிரி வாழுமலையார் திட்டம். வாழுமலையார் திட்டத்திற்கு ஆய்வுகள் எல்லாம் செய்யப்பட்டு, சுமார் 10 கோடி ரூபாய்க்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு இருக்கின்றன. அதனால் 3 ஆயிரம் ஏக்கருக்கு பாசன வசதி வரும். அந்தத் திட்டம் வந்தால் நிச்சயமாக விவசாயிகளின் நீண்ட கால பிரச்சினை தீரும். இந்த இரண்டு தாலுகாக்களுக்குமே அது பயனுள்ளதாக இருக்கும். வாசுதேவநல்லூர் சட்டமன்றத் தொகுதி, சங்கரன்கோவில் சட்டமன்றத் தொகுதி வரைக்கும் நிலத்தடி நீர் கொடுப்பதற்கும், உணவு உற்பத்தியைக் கூட்டுவதற்கும் அந்தத் திட்டங்கள் நிறைவேறினால் நலமாக இருக்கும்.

அதேமாதிரி கோட்டமலையான் திட்டம். அது ஒரு சாதாரண திட்டம்தான். அதற்கு 40 இலட்சம் ரூபாய்தான் மதிப்பீடு. அதிலே மாவட்ட ஆட்சித் தலைவர் பரிந்துரை செய்து அனுப்பிவிட்டார்கள். அந்தத் திட்டம் நிலுவையில் உள்ளது. ஆகவே அந்தத் திட்டத்திற்கு மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரிமை கொடுத்துச் செய்ய வேண்டும். ஏனென்றால் அணைத் திட்டங்கள் இருந்தால்தான், நீங்கள் நிலத்தடி நீரையும் வளப்படுத்த முடியும், விவசாய உற்பத்தியையும் செய்ய முடியும். ஆகவே இதற்காக நீங்கள் நிச்சயமாக முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12—40*

அதேமாதிரி கோம்பையார் அணைக்கட்டுத் திட்டம். இது இராஜபாளையத்திற்கும் வாசுதேவநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்கும் பொதுவாக அருகிலே இருக்கிறது. அந்தத் திட்டத்தை ஆய்வு செய்து–அதுவும் பரிசீலனையில் இருக்கிறது–நிறைவேற்றினால் என்னுடைய வாசுதேவநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்கு முழுமையான பாசன வசதி செய்து கொடுக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படும். இதுவரைக்கும் வட மாவட்டத்திலேதான் பொதுப் பணித் துறை அமைச்சர்கள், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்கள் எல்லாம் இருந்திருக்கிறார்கள். எவ்வளவோ சொல்லியும்கூட, முந்தைய அரசு காதிலே வாங்கின மாதிரியே தெரியவில்லை. பல முயற்சிகளும் எடுத்திருக்கிறோம். ஒவ்வொரு சட்டமன்ற நிகழ்ச்சியிலும் அந்தத் துறை மானியக் கோரிக்கையிலேயும்' பேசியிருக்கிறேன். அதைச் செய்தது மாதிரி

தெரியவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தென் மாவட்டத்திலேயிருந்து இப்போது இந்தப் பொறுப்பை ஏற்று இருக்கிறார்கள். ஆகையினால் இப்போது இதற்கு முன்னுரிமை கொடுத்து நீங்கள் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி நெடுஞ்சாலையைப் பொறுத்தவரையில், இராஜபாளையத்திலேயிருந்து திருநெல்வேலி வரை சுமார் 80 கிலோ மீட்டருக்கு மேலே தூரம் இருக்கிறது. இந்த 80 கிலோ மீட்டரிலே, 50 கிலோ மீட்டருக்கு இருவழிச் சாலை இருக்கிறது. மீதி 30 கிலோ மீட்டர் சாலை இன்னும் ஒருவழிச் சாலையாகவே இருக்கிறது. நாடு சுதந்திரம் பெற்றபோது போட்டது. இன்னும் ஒருவழிச் சாலையாகத்தான் இருக்கிறது. முந்தைய அரசிடம் பல்வேறு நேரங்களிலே வலியுறுத்திச் சொல்லியும்கூட அதைச் செய்யவில்லை. அந்தச் சாலைக்காக முந்தைய அரசு 330 இலட்சம் ரூபாய் அனுமதி வழங்கியதுமாதிரி இந்தத் துறையைச் சார்ந்த அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது எந்த அளவிலே இருக்கிறது என்று தாங்கள் தங்கள் பதிலுரையிலே தெரிவிக்க வேண்டுமென்று நான் எதிர்பார்க்கிறேன்.

அதேமாதிரி புளியங்குடி நகராட்சி. அங்கு சுமார் ஒன்றரை இலட்சம் மக்களுக்கு மேலே இருக்கிறார்கள். அதேபோல் சங்கரன்கோவில் நகராட்சி. அதிலேயும் ஒன்றரை இலட்சம் மக்களுக்கு மேலே இருக்கிறார்கள். இந்த இரண்டு நகராட்சிகளையும் இணைப்பதற்கு 15 கிலோ மீட்டர் தூரம்தான் உள்ளது. ஏற்கெனவே 3 கிலோ மீட்டர் இருவழிச் சாலையாக இருக்கிறது. அதுபோக 12 கிலோ மீட்டர்தான் நீங்கள் இருவழிச் சாலையாக ஆக்க வேண்டும். அப்படி ஆக்கும்போது, திருநெல்வேலிக்கு சுலபமாக ஒன்றரை மணி நேரத்திற்குள் போய்விடலாம். நாங்கள் தென்காசி வழியாக திருநெல்வேலிக்குப் போக வேண்டுமென்றால், 2 மணி நேரத்திற்கு மேல் ஆகிறது. ஏனென்றால் 2, 3 நகராட்சிகளைக் கடந்து செல்ல வேண்டியிருக்கிறது. போக்குவரத்திற்கு இடைஞ்சலாக இருக்கிறது. ஆகவே இதையெல்லாம் கருத்திற்கொண்டு, 2 நகராட்சிகளுக்கு மையத்திலே இருக்கக்கூடிய அந்த ஒருவழிச் சாலையை இருவழிச் சாலையாக அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல—குளங்கள், பெரிய பெரிய குளங்களாக இருக்கின்றன. எல்லா குளங்களையும் எடுத்திருக்கிறீர்கள். என்னுடைய தொகுதியிலே சில குளங்கள் விடுபட்டு இருக்கின்றன. என்னுடைய தொகுதியிலே



உள்ள தென்மலை குளம், நெற்கட்டும்செவல்குளம், பெரியகுளம், வாசுதேவநல்லூர், கூடலூர்குளம், குலசேகரம், பெரியராசிகபேரிகுளம் (மணியடிக்கப்பெற்றது) இந்த 6 குளங்களும் சுமார் ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட குளங்கள். பெரிய ஆயக்கட்டுதான்; பெரிய குளங்கள். இந்தக் குளங்களுக்காக நீங்கள் மராமத்து வேலை செய்வதற்கு நிதி வழங்க வேண்டும். அதைச் செய்தால்தான் அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய மக்களுக்கு வாய்ப்பாக இருக்க முடியும். அதேமாதிரி, இராஜபாளையத்திலிருந்து தென்காசி தேசிய நெடுஞ்சாலை, தரணி சர்க்கரை ஆலை பக்கத்திலே இருக்கிறது. அந்த ரோடு 7 கிலோ மீட்டர்; 1986-லே போட்டது. இதுவரைக்கும் அந்த ரோடு சரியில்லாமல் மிகவும் மோசமாக இருக்கிறது. அந்த 7 கிலோ மீட்டருக்கும் உடனடியாக அந்த வேலையை முடிக்க வேண்டும். ஏனென்றால் 2 மாவட்டங்களிலே இருந்து வரவேண்டும். கரும்புகள் எல்லாமே டன்னேஜ்-10, 10 என்று 20 டன்களாக டம்ப் செய்து, டிரெய்லர்களிலே போட்டு, கொண்டுவர வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்களுடைய அமைச்சருடைய மாவட்டத்தைப்பற்றி பேசிக்கொண்டிருக்கிறீர்கள். வாங்கவும் முடியாது; வாழ்த்தவும் முடியாது போல இருக்கிறதே?

**திரு. ரா. ஈஸ்வரன்:** தொகுதி பிரச்சினைதான்; வேறொன்றும் பேசவில்லை. எனக்கு கொஞ்சம் time கொடுங்கள். தொகுதி பிரச்சினைதான், வேறு பிரச்சினைக்குப் போகவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடித்து விடுங்கள். பேச வேண்டியவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** ஆகையினால் அந்தப் பணிகளை எல்லாம் நீங்கள் எடுக்க வேண்டும்.

அதேமாதிரி திராவிட முன்னேற்றக் கழக அரசு கடுமையாக விளம்பரம் செய்தார்கள். என்ன விளம்பரம் என்றால், சாலைகள் எல்லாம் மிகச் சிறப்பான முறையிலே போட்டிருக்கிறோம்; பாலங்கள் எல்லாம் தமிழ்நாடு முழுவதும் கட்டியிருக்கிறோம் என்று சொன்னார்கள். இன்னும் 70 சதவிகிதம் என்னுடைய தொகுதியிலே, 5 வருடங்களாக சாலையைப்பற்றிச் சொல்லியிருக்கிறேன், செய்யவில்லை. பாலங்கள் கட்டவில்லை. ஆகையினால் விட்டுச் சென்ற அந்தப் பணிகளை மீண்டும் அமைச்சர் அவர்கள் முன்னுரிமை கொடுத்து செய்ய வேண்டும்.

உதாரணத்திற்கு கரிவலம் வந்த சாலை, விசுவநாதபேரியிலிருந்து ராகிரி இராமநாதபுரம் சாலை, கூடலூர் சாலை, வெள்ளானகோட்டையிலிருந்து தாருகாபுரம், தளவங்கோட்டை சாலை, இந்தச் சாலைகள் எல்லாம் மிக மோசமாக போக்குவரத்து போக முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. மிகவும் குண்டுங்குழியுமாக இருக்கிறது. ஆகையால் அந்தச் சாலைகளுக்கு எல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மிக முன்னுரிமை கொடுத்து பணம் ஒதுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்த அரசு-

*பிற்பகல் 12-45*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 10 நிமிடத்திற்கு மேல் ஆகிவிட்டது, பேசி முடியுங்கள்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** இந்த அரசு பொறுப்பேற்றவுடன் நல்ல பல திட்டங்களைச் செய்திருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன். ஏனென்றால், நீண்ட நாள் பிரச்சினை, கூட்டுறவுக் கடன் வட்டி, அபராத வட்டி எல்லாம் தள்ளுபடி செய்திருக்கிறீர்கள். அதேமாதிரி ஆசிரியர்களுக்கு கல்வித் துறையில் இருக்கக்கூடிய அதிகாரிகள் ஊடே இருக்கக்கூடிய இடைத்தரகர்களால் பெரிய பிரச்சினை இருந்துகொண்டு இருந்தது. ஆசிரியர் பெருமக்களுக்கு, சிறந்த முறையில், கல்வித் துறையில் counselling system கொண்டு வந்து செய்திருக்கிறீர்கள். அதை மக்களெல்லாம் பாராட்டுகிறார்கள். நானும் பாராட்டுகிறேன். அதேமாதிரி மதுவிலக்குத் துறையைப் பொறுத்தவரையில் open-ஆக நீங்கள் ஏலம் விட்டீர்கள். எந்தப் பிரச்சினையும் இல்லை. எல்லோருக்கும் ruling party-க்குக்கூட எங்கள் மாவட்டத்திலே கிடைக்கவில்லை. எதிர்க்கட்சி எல்லோருக்கும் கட்சி சார்பற்ற முறையில்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடித்து விடுங்கள்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** இந்த அரசு பொறுப்பு ஏற்றவுடன் நல்ல திட்டங்களைச் செய்திருக்கிறது. ஆகையால் இந்த பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை மானியக் கோரிக்கைகளை வரவேற்று என்னுடைய உரையை முடித்துக்கொள்கின்றேன். நன்றி, வணக்கம், ஜெய்ஹிந்த்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.



***திரு. மு. அப்பாவு:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1996 ஆம் ஆண்டு முதன் முறையாக இந்தச் சட்டமன்றத்திற்கு என்னை அனுப்பி வைத்த மறைந்த மக்கள் தலைவர் ஐயா அவர்கள் இன்று நம்மிடையே இல்லை. இருந்தாலும் அவர்களை நினைவுகூர்ந்து அவர்களுக்கு இந்த நேரத்திலே என்னுடைய அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழக வரலாற்றில் சுயேச்சையாகப் போட்டியிட்ட என்னை ராதாபுரம் சட்டமன்றத் தொகுதி மக்கள் நெல்லை மாவட்டத்திலேயே மிக அதிகமான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற சட்டமன்ற உறுப்பினர் என்ற ஒரு பெருமையை எனக்குத் தந்து இந்த மாமன்றத்திற்கு அனுப்பியிருக்கின்ற என்னுடைய தொகுதி மக்களுக்கு இந்த நல்ல வேளையிலே என்னுடைய அன்பான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று இன்றைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இலட்சக்கணக்கான மக்கள் சக்தியோடு அவர்களுடைய ஆதரவோடு மீண்டும் முதல்வராகப் பொறுப்பு ஏற்று, 100 நாட்களில் பல அரும்பெரும் சாதனைகளைப் புரிந்த இன்றைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

1967-க்குப் பின்பு ஆட்சிப் பொறுப்பிலே திராவிட இயக்கங்கள் அமர்ந்துகொண்டு, பெருந்தலைவர் காமராஜர், ஆளும் கட்சியிலும் எதிர்க்கட்சியிலும் இருந்தபோது-எதிர்க்கட்சி வரிசையிலே அமர்ந்தபோது 1967-லே ஆட்சிப் பொறுப்பிலே ஏறிய திராவிட முன்னேற்றக் கழகத்திற்குப் பலவிதமான திட்டங்களில் குளறுபடிகள் இருந்தபோதிலும்கூட, பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் பெருந்தன்மையோடு ஓராண்டுகாலம் அவர்கள் ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்து, அமைதியாக மக்கள் பணியில் ஈடுபடட்டும், தொந்தரவு செய்யாதீர்கள் என்று பெருந்தன்மையோடு சொன்ன காலங்கள் எல்லாம் அனைவருக்கும் நினைவு இருக்கும் என்று எண்ணுகின்றேன். ஆனால் நாளடைவில் வரவர அந்தப் பாணியே சற்று மாறி, தற்போது ஒருவர் ஆட்சிக் கட்டிலிலிருந்து இறங்கினால், அடுத்தவர், சென்றவர் மீது என்ன வழக்குகளைப் பதிவு செய்யலாம் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற ஒரு நிலைதான் ஏற்பட்டுவிட்டதே தவிர, மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்ற உணர்வு சற்று குறைந்துவிட்டது.

உதாரணமாக, 1987 ஆம் ஆண்டு அன்றைய செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்த ஒருவர், மீனம்பாக்கம் ஏர்போர்ட்டுக்கு எதிரே இருக்கின்ற நிலத்தில் 1.7 ஏக்கர் நிலத்தை தன்னுடைய மகனுக்கு

assignment செய்துவிட்டார். அதற்கு அன்றைய முதல்வர் மாண்புமிகு மறைந்த எம்.ஜி.ஆர். அவர்கள் நடவடிக்கை எடுத்து அவரை தற்காலிகமாக வேலைநீக்கம் செய்தார். 1989-ல் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பில் ஏறியது. அவர் தன்னுடைய மகனுக்கு சொத்தை எழுதி வைத்தது நியாயம்தான் என்பது போன்ற நிலையில் அவருடைய தண்டனைகள் எல்லாம் இரத்து செய்யப்பட்டு, அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் தற்போது பணியிலிருந்து ஓய்வு பெற்று ஓய்வூதியங்கள் எல்லாம் பெற்று அனுபவித்து வருகிறார்.

அதேபோன்று 1991-96—லே டான்சி நில வழக்கிலே முறைகேடுகள் நடந்ததாகக் கூறி அதே முதல்வர் ஒரேவிதமான இரண்டு தவறுகளுக்கு ஒன்றில் தவறு செய்ததை நிவர்த்திசெய்து அவரை மீண்டும் பணி அமர்த்துகின்றார். ஆனால், இன்றைய முதல்வர் அவர்கள்மீது அந்த டான்சி நில வழக்கிலே தவறான முறைகேடு நடந்தது என்று கூறி வழக்குப் பதிவு செய்து தனி நீதிமன்றம் வரை அமைத்திருக்கிறார்கள். ஒரே முதல்வர் இரண்டு விதமான கொள்கை முடிவு எடுத்தது நியாயமா என்பதை நான் இந்த நேரத்திலே நினைவுபடுத்துவதோடு, (மேசையைத் தட்டும் ஒலி) இதே சட்டமன்றத்தில் 24-11-1986—ல் சபாநாயகராக வீற்றிருந்த பி.எச். பாண்டியன் அவர்கள் இந்திய அரசமைப்புச் சட்டத்தை எரித்த குற்றத்திற்காக இன்றைய எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட 10 பேரை இந்திய அரசமைப்புச் சட்டத்தின்மீது சத்தியம் செய்து உறுதிமொழி எடுத்த நீங்கள் அதையே எரித்த குற்றத்திற்காக தேசத் துரோகிகள் என்று அவர்கள்மீது முத்திரை பதித்து சட்டமன்றத்திலேயிருந்து பதவியை இரத்து செய்து வெளியே அனுப்பினார். ஆனால் அவர்களே மீண்டும் தேர்தலில் போட்டியிட்டு இந்தச் சட்டமன்றத்திலே இருக்கிறார்கள்.

*பிற்பகல் 12—50*

அதேபோன்று நம்முடைய ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்கள் அன்றைய பாரதப் பிரதமர் வி.பி. சிங் அவர்களிடம் ஒரு வேண்டுகோள் விடுத்தார். மறைந்த மரியாதைக்குரிய பூலான் தேவி அவர்கள்மீது பல வழக்குகள் நிலுவையில் இருந்தும் தண்டனைகள் பெற்ற அத்தனை வழக்குகளையும், அவர்மீது போடப்பட்ட அத்தனை வழக்குகளையும் இரத்து செய்துவிட்டு அவரைப் பாராளுமன்றத் தேர்தலில் நிற்க அனுமதிக்க வேண்டும் என்று கேட்டார்கள். அதை நம்முடைய மாண்புமிகு முன்னாள் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய நெருங்கிய நண்பர், அன்றைய பாரதப் பிரதமர் வி.பி. சிங் அவர்கள் அனைத்து வழக்குகளையும் இரத்து செய்து, அந்த அம்மா



நாடாளுமன்றத்திலே போட்டியிட்டு நாடாளுமன்றத்திலே உறுப்பினராவதற்கு வழிவகை செய்து கொடுத்தார்கள்.

தமிழகத்திலே தற்போது நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் தமிழகமே, ஏன் இந்தியாவே எதிர்பார்க்காத வண்ணம் இன்றைய முதல்வர் அவர்கள் சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட முடியாத ஒரு நிலை ஏற்பட்ட பிறகும் (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள்மீது நம்பிக்கை வைத்து இவ்வளவு பெரிய மாபெரும் வெற்றியைக் கொடுத்திருக்கிறார்கள் என்றால்—நானும் ஒரு கருத்தை, உண்மைச் சம்பவத்தைச் சொல்ல விரும்புகிறேன். பல வழக்குகள், ஆட்சியில் இருக்கின்றவர்கள் எதிர்க்கட்சிகள் மீது தவறான வழக்குகள் போடுவது வழக்கம், சகஜம். ஆனால் மீண்டும் ஆட்சிப் பொறுப்பில் இருக்கிறவர்கள் அந்த வழக்குகளையெல்லாம் இரத்து செய்துவிட்ட பல முன்னுதாரணங்கள் இருக்கின்றன. நிறைய வழக்குகள் இதே மாதிரி இருக்கின்றன. ஒரு காலத்திலே போடப்பட்டிருக்கிற வழக்குகள் திரும்பவும் இரத்து செய்யப் பட்டிருக்கின்றன. சதுரஅடி வரி விதிப்பிற்காக மறியல் போராட்டம் செய்தபோது என்மீது வழக்குப் பதிவு செய்தார்கள். திருச்சி சிறையில் கொண்டுபோய் என்னை அடைத்தார்கள். எங்களுடைய மக்கள் தலைவர் ஐயா அவர்கள் முதல்வர் அவர்களை 'இவ்வாறு என்னுடைய சட்டமன்ற உறுப்பினரை அடைத்துவிட்டீர்களே' என்று கேட்ட மறுநிமிடமே, அந்த வழக்கை இரத்து செய்தது கடந்த முன்னாள் முதல்வர் மாண்புமிகு கலைஞர் அவர்கள் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன். அந்த அடிப்படையில் யார்மீது தவறான வழக்குகள் பதிவு செய்யப்பட்டாலும் அல்லது இந்த மாமன்றம் மக்களுடைய தீர்ப்பிற்கு தலைவணங்கினால் அல்லது இந்த நாட்டில் ஒரு நல்லது நடக்க வேண்டும் என்று விரும்பினால், மக்கள் யாரை நம்புகிறார்களோ, யாரை விரும்புகிறார்களோ அவர்களை இந்த நாட்டை ஆளவிட வேண்டும் என்று விரும்பினால், (மேசையைத் தட்டும் ஒலி) அந்த ஜோடிக்கப்பட்ட பொய் வழக்குகளையெல்லாம் இரத்து செய்வதற்கு இந்த மாமன்றத்திற்கு அதிகாரம் இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று மரியாதைக்குரிய வி.பி. சிங் அவர்கள் பூலான் தேவி அவர்களுடைய வழக்குகளை எல்லாம் இரத்து செய்ததைப் போன்று, இந்தத் தமிழகத்திலே ஒரே சுயேட்சை வேட்பாளராக வெற்றி பெற்று, பஸ் சின்னத்திலே, மிக அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று

இந்தச் சட்டமன்றத்திற்கு வந்த என்னுடைய கோரிக்கையை ஏற்று தமிழக முதல்வர்மீது கடந்த கால ஆட்சியில் போடப்பட்ட அத்தனை வழக்குகளையும் இரத்து (மேசையைத் தட்டும் ஒலி) செய்து, கடந்த கால ஆட்சியில் அமைக்கப்பட்ட தனி கோர்ட்டையும் கலைத்துவிட்டு, ஏற்கெனவே இருக்கின்ற உயர் நீதிமன்றம், உச்ச நீதிமன்றம் ஆகியவற்றில் போடப்பட்ட பொய் வழக்குகள் அத்தனையும் இந்த மாமன்றம் இரத்து செய்து ஆணை வழங்க வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12–55*

அடுத்து, வருகின்ற ஆண்டில் பெருந்தலைவர் காமராஜருடைய 100-ஆவது பிறந்த தின விழா வருகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் ஓர் அன்பு வேண்டுகோள். பெருந்தலைவர் காமராஜர் அவர்களைக் கௌரவப்படுத்தும்வண்ணம் கல்விக் கண் திறந்த பெருந்தலைவர் காமராஜருடைய 100-ஆவது பிறந்த தின விழாவை முன்னிட்டு, வருகின்ற 2002 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 15 ஆம் தேதி முதல் ஒவ்வோர் ஆண்டும் அந்த நாளை மாணவர்கள் தினமாகக் கொண்டாட அரசு விடுமுறை அளிக்க வேண்டுமென்று இந்த அரசை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதுபோன்று செக்கிழுத்தச் செம்மல் வ.உ. சிதம்பரம் பிள்ளை அவர்களுக்கு திருநெல்வேலியிலே ஒரு மணிமண்டபம் அமைத்துத் தர வேண்டுமென்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த 5 ஆண்டு காலத்தில் ராதாபுரம் சட்டமன்றத் தொகுதியிலுள்ள திசையன்விளையை தலைநகரமாகக் கொண்டு ஒரு தனித் தாலுகா அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டு, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும் இந்தச் சட்டமன்றத்திலே ஒப்புக்கொண்ட பின்பும், அந்தத் தனித் தாலுகா இன்னும் அமைத்துத் தரப்படவில்லை. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் திசையன்விளையைத் தலைநகராகக் கொண்டு ஒரு தனி தாலுகா அமைத்துத் தர வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை 7–7–2001 அன்று சந்தித்தபோது, தாமிரபரணி–பணகுடி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றித் தருவதாக உறுதியளித்து, அதற்கு tender



விடுவதற்கும் அனுமதி அளித்திருக்கிறார்கள். அதற்கு இந்த நல்ல நேரத்திலே நன்றியைத் தெரிவித்து, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடம் ஏற்கெனவே 90 கிராமங்களுக்கு குடிநீர் இல்லாத நிலையைத் தெரிவித்து அவர்களது கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். அதில் குறைந்தபட்சம் 13 கிராமங்கள் எடுக்கப் பட்டிருக்கின்றன. மிக வறண்ட ராதாபுரம் பகுதியில் மீண்டும் 50 கிராமங்களில், இந்த ஆண்டே மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி எங்களுக்குத் தண்ணீர் தர வேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

கடந்த கால ஆட்சியில் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களைப் பலமுறை கேட்டும், என்னுடைய ராதாபுரம் சட்டமன்றத் தொகுதியில் உள்ள மீனவக் கிராமங்களுக்கு தூண்டில்வளைவு கட்டித் தருவதற்கு மதிப்பீடு தயாரிக்கக் கேட்டு, ஒரேயொரு கிராமத்திற்கு மட்டும் மதிப்பீடு தயார் செய்து தந்தார்கள். அதையும் கிடப்பிலே போட்டுவிட்டுச் சென்று விட்டார்கள். ஆகவே மீனவக் கிராமங்களான கூட்டப்புளி, பெருமணல், கூத்தங்குளி, இடிந்தகரை, உவரி, கூட்டப்பனை, தோமையார்புரம், கூடுதாழை, பெரியதாழை ஆகிய கிராமங்களில் தூண்டில்வளைவு கட்டுவதற்கு விரைவாக மதிப்பீடு தயாரிக்க உத்தரவிட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் இந்த நல்ல வேளையிலே நன்றியைத் தெரிவித்து, விரைவாகக் கட்டித்தர அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து, மீனவ மக்கள் மண்ணெண்ணெய் வெளி விலையிலே ஒரு லிட்டர் 20 ரூபாய் வரை வாங்குகிறார்கள், அவர்களுடைய அவல நிலையை மனதில் வைத்து மாதந்தோறும் அவர்களுக்கு 300 லிட்டர் மண்ணெண்ணெய் ரேஷன் விலையில் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். அவர் கனிவோடு, அதற்கான பரிந்துரை வைத்திருக்கிறீர்களா என்று கேட்டார்கள், ஆம் என்றேன். விரைவிலே தருவதாக உறுதி அளித்திருக்கிறார்கள். அதிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏழை மீனவர்களுக்கு, Out Board Engine வைத்திருக்கிற அத்தனை பேர்களுக்கும் மாதம் 300 லிட்டர் மண்ணெண்ணையை ரேஷன் விலையில் தரும்படி அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், ரோஸ்மியாபுரத்தில்–மாண்புமிகு கல்வி அமைச்சர் எங்கிருந்தாலும்

கேட்டுக்கொள்ளுங்கள்--ஒரு நடுநிலைப் பள்ளி அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

6, 7, 8 ஆம் வகுப்புகளில் இடைநிலை ஆசிரியர் பணியிடங்களில் பட்டதாரி ஆசிரியர்களை நியமிக்கும் முறை ஏற்கெனவே இருந்தது. அது இரத்து செய்யப்பட்டுவிட்டது. மீண்டும் 6, 7, 8 ஆம் வகுப்புகளில் இடைநிலைப் பணியிடங்களில் பட்டதாரி ஆசிரியர்களை இடைநிலை ஊதியத்தில் அமர்த்துவதற்கு நீங்கள் ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

1996-க்குப் பிறகு கிட்டத்தட்ட 500-க்கும் மேற்பட்ட உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகள் தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. தனியாரால் நடத்தப்படும் உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகள் 154 பள்ளிகள் இருக்கின்றன. அந்த 154 பள்ளிகளுக்கும் நிதி உதவி வழங்க அன்போடு கேட்டுக்கொள்கிறேன். பட்டதாரி, முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடத்தில், அதாவது, நீங்கள் நேர்முகத் தேர்வு மூலம் மதிப்பெண் போடுவதாக அறிவித்திருக்கிறீர்கள். இடைநிலைப் பணியிடத்தை நிரப்புவதுபோல, பணிமூப்பு அடிப்படையிலேயே செய்துதர வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைத் துறை மானியக் கோரிக்கைகள்மீது ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்த நாட்டிலே பொதுப் பணித் துறை அதிகாரிகளும், நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகளும் எந்த அளவில் செயல்படுகிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். நம்முடைய மாண்புமிகு முன்னாள் பொதுப் பணித் துறை அமைச்சரும், மாண்புமிகு நம்முடைய கே.கே.எஸ்.எஸ்.ஆர். அவர்களும் மிக அதிகமான நிதியை நாங்கள் ஒதுக்கினோம் என்று சொன்னார்கள். நிச்சயமாக உங்களுக்கு அதிகமான நிதி தேவைப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1-00*

மாண்புமிகு முன்னாள் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் இந்த இடத்திலே அமர்ந்திருந்து பேசியது எனக்கு நினைவுக்கு வருகிறது. கடந்த கால ஆட்சியில், 1991 முதல் 1996 வரை ஆட்சிப் பொறுப்பில் இருந்தவர்கள் ஏற்கெனவே ஒரு மதிப்பீடு தயாரித்து, அதற்கு above போட்டு, 20 சதவிகிதம், 30 சதவிகிதம் above போட்டு எடுத்துவிட்டார்கள் என்றும், (மேசையைத் தட்டும் ஒலி) அதன்படி நாங்கள் செய்யமாட்டோம் என்றும் உறுதியளித்திருக்கிறார்கள். சொன்னதைச் செய்கின்ற மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும் அதன்படிதான் எல்லா tender-களையும் below-ஆகப் போட்டார்கள். குறைவாகத்தான் போட்டார்கள். 100 ரூபாய் என்றால், 90 ரூபாய்தான். ஆனால் விஞ்ஞான பூர்வமான ஓர் யுக்தியைக் கையாண்டார்கள்.



என்னுடைய தொகுதியிலே உள்ள வடக்கன்குளத்திலிருந்து ராதாபுரம் செல்லும் சாலையில் ஒரு பாலம். 30 இலட்சம் ரூபாய் மதிப்பீடு. அதே அளவு பாலம் ஏர்வாடியிலிருந்து நாங்குநேரி செல்லும் பாலம், ஆலங்குளம் அருகே பாலம், 35 இலட்சம் ரூபாய். அதே அளவு பாலம் ஏர்வாடி அருகே, அரசு மேல்நிலைப் பள்ளி அருகில் ஒரு பாலம். 110 இலட்சம் ரூபாய் மதிப்பீடு. 30 இலட்சம் ரூபாய் பாலத்தை 110 இலட்சமாக உயர்த்தி (மேசையைத் தட்டும் ஒலி) 10 சதவிகிதம் குறைத்தே tender விடப்பட்டது. மாண்புமிகு முன்னாள் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். நான் பொய் சொல்லமாட்டேன். உண்மையைத்தான் சொல்வேன். உண்மையைச் சொல்லிவிடுவேன் நான். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர், சீக்கிரம் பேச்சை முடியுங்கள்.*

**திரு. மு. அப்பாவு:** ஐந்து வருடத்திற்கு முன்னாலே ஏன் இதைச் சொல்லவில்லை என்று கேட்பீர்கள். ஐந்து வருடத்திற்கு முன்னாலே இதே பிரச்சினையை நாங்கள், திரு. அழகிரியும், நானும் சேர்த்துக் கிளப்பினோம்.

ஸ்ரீவைகுண்டம் அருகே 36 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒரு பாலம். அதே பாலத்திற்கு மதிப்பீடு ரூ. 144 இலட்சத்திற்குத் தயாரித்து (மேசையைத் தட்டும் ஒலி) இவ்வாறு 106 பாலங்கள் கட்டப்பட்டன.

அதுமட்டுமல்ல. திருநெல்வேலி மாநகராட்சியிலே 5,000 மரக் கன்றுகள் நடப்பட்டதாக 6 இலட்சத்து 90 ஆயிரம் ரூபாய் கொண்டுபோயிருக்கிறார்கள். எங்கேயாவது ஒரு இடத்தில் ஒரு மரத்தைக் காட்டுங்கள் பார்ப்போம் என்று உங்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேமாதிரி திருநெல்வேலி மாநகராட்சியில் "choke" வாங்கும்போது, copper choke வாங்குவதற்கென்று quotation கேட்பது; ஆனால் copper choke-க்கு quotation கொடுத்து அலுமினியம் choke வாங்குவது. copper

choke 78 ரூபாய்; அலுமினியம் choke 28 ரூபாய். (மேசையைத் தட்டும் ஒலி) இதை ஏற்கெனவே இந்தச் சட்டமன்றத்திலே நான் சொல்லியிருக்கிறேன். என்னிடம் இருக்கிற ஒரு கெட்ட பழக்கம், எனக்கு உண்மை தெரிந்தால் சொல்லிவிடுவேன். அதன்படி நான் ஏற்கெனவே இதே சட்டமன்றத்திலே இந்தக் குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறேன். அதற்கு மாண்புமிகு முன்னாள் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும், எதிர் வாதங்கள் எல்லாம் வைத்து, திரும்ப அது கிடப்பிலே போடப்பட்டிருக்கிறது. ஆகவே பொதுப் பணித் துறை அதிகாரிகள் எதையும் ரொம்ப ஆழமாகச் சிந்திக்கமாட்டார்கள். அந்த percentage கணக்கிலேதான் இருப்பார்கள், பொதுப் பணித் துறையும், நெடுஞ்சாலைத் துறையும். ஆகவே, நம்முடைய அமைச்சர் அவர்கள், அவர்களிடம் கவனமாக இருக்க வேண்டுமென்று அன்போடு இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த கால ஆட்சியிலே ஒவ்வொரு நாளும் தண்ணீருக்கு நாயாக அலைந்திருக்கிறோம். என்னுடைய தொகுதி ராதாபுரம் பக்கத்தில் கன்னியாகுமரி மாவட்டம். கன்னியாகுமரி மாவட்டத்தில் பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, சித்தாறு I & II இப்படி 4 அணைகள் இருக்கின்றன. இந்த 4 அணைகளினுடைய மொத்தக் கொள்ளளவு 7400 Mcft. கிட்டத்தட்ட 7.9 TMC தண்ணீர் கடலில் கலக்கிறது. நான் அமைச்சர் அவர்களிடம் 100 தடவை, ஐயா, ஐயா என்று பின்னாலே அலைந்தேன். மதிப்பீடு போட்டுவிடுங்கள் ஐயா என்றேன். போட்டே தரவில்லை. மழைக் காலத்தில் வீணாகக் கடலில் கலக்கின்ற தண்ணீரைச் சேமிக்க தோவாளை சேனலுக்கு இணையாக Flood Carrier Canal ஒன்று புத்தனாறு அணையிலிருந்து வெட்ட ஒரு மதிப்பீடு பண்ணித் தாருங்கள் என்றேன், தரவில்லை. ஆனால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை 7–7–2001 அன்று சந்தித்த 24 மணி நேரத்தில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டு (மேசையைத் தட்டும் ஒலி) பழையாற்றில் வீணாகக் கடலில் கலக்கின்ற தண்ணீரை Lift Irrigation மூலம் கொண்டுவருவதற்கு மதிப்பீடு தயாரிக்க ஆணை பிறப்பித்து இருக்கிறார்கள். பேச்சிப்பாறை அணையிலிருந்து, புத்தன்தருவை அணையிலிருந்து தோவாளை கால்வாய்க்கு இணையாக ஒரு Flood Carrier Canal அமைப்பதற்கு மதிப்பீடு தயாரிக்கவும் உத்தரவிட்டிருக்கிறார்கள்.

தாமிரபரணியிலிருந்து வீணாகக் கடலில் கலக்கின்ற, ஸ்ரீவைகுண்டம் அணைக்குக் கீழே கடலில் கலக்கின்ற தண்ணீரை, எங்களுடைய வறண்ட பகுதியான திசையன்விளை அருகே இருக்கின்ற எம். எல். தேரி,



ஆயன்குளம் படுகை, ஆனைகுடி படுகை இவற்றிற்குத் திருப்பி விடவேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். அதற்கும் மதிப்பீடு தயாரிக்க உடனடியாக ஆணை பிறப்பித்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு இந்த நல்ல நேரத்திலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1—05*

அதேபோன்று நம்பியாறு அணையைத் திறந்து வைத்தாகிவிட்டது. நானும் அந்த நிகழ்ச்சிக்குப் போயிருந்தேன். அணையைக் கட்டித் திறந்தாகிவிட்டது. ஆனால் கால்வாய் இருக்கிறதா என்றால் கால்வாய் கிடையாது. வலதுபுறக் கால்வாய் இன்னும் வெட்டவில்லை. இடதுபுறக் கால்வாய் வேலை இன்னும் முடியவில்லை. வலதுபுறக் கால்வாயிலே கிட்டத்தட்ட 40 குளங்கள் இருக்கின்றன. மூன்று குளங்களுக்கு 58 கியூசெக்ஸ் வீதம் தண்ணீர். மீதியிருக்கிற குளங்கள் அவ்வளவுக்கும் 12 கியூசெக்ஸ் வீதம் தண்ணீர் – 12 கன அடி வீதம் நாற்பது குளங்களுக்குக் கொடுத்தால் கிட்டத்தட்ட ஒன்பது மாதங்களிலே அவ்வளவு குளங்களும் போய்விடும். இப்படி ஒரு திட்டத்தை வடிவமைத்து அந்த அடிப்படையிலே நம்பியாறு அணையினுடைய வலதுபுறக் கால்வாய் வெட்டப்பட்டிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அந்த நம்பியாற்றினுடைய வலதுபுறக் கால்வாயை – எல்லாக் குளங்களுக்கும் விரைவிலேயே தண்ணீர் செல்கிறவண்ணம் அதனுடைய வடிவம் மாற்றியமைக்கப்பட்டு, திருவம்பலபுரம் வரையிருக்கிற மேலும் 7 குளங்களையும் சேர்த்து அந்தக் கால்வாயை வெட்டித் தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு மேலும் ஒன்று. பொதுப் பணித் துறை குளங்கள் எல்லாம் எப்படியிருக்கின்றன என்று உங்களுக்குத் தெரியும். காரணம், யார் காலத்திலே வெட்டினார்களோ, அந்தக் குளங்களை மராமத்து பண்ணுவதற்கு மட்டும் ஏகப்பட்ட சண்டை. அது என்ன என்றே எனக்குத் தெரியவில்லை. நீங்கள் வேறு ஒன்றும் செய்ய வேண்டாம். 20 இலட்சம் ரூபாயில் ஒரு குளத்திற்கு மராமத்து பண்ணுகிறோம். 2 இலட்சம் ரூபாய் செலவு பண்ணிவிட்டு, அங்கே மண் அள்ளிப் போடுவதற்கு போடுகிற சண்டை– tender அன்றைக்குப் போய்ப் பாருங்கள், தெரியும். நான் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரைக் கேட்டுக்கொள்வது, 20 இலட்சம் ரூபாயை குளத்திற்கு மண் அள்ளிப் போடக் கொடுக்கிறீர்கள். 20

இலட்ச ரூபாய்க்கு ஒரு ஜே.சி.பி., ஒரு பொக்ளைன் வாங்குங்கள், ஒரு டிரைவரைப் போடுங்கள். ஒரு மாவட்டத்திற்கு நீங்கள் 5 வாங்கினால் வெறும் ஒரு கோடி ரூபாய்தான் செலவு வரும். தொடர் செலவு வருடத்திற்கு வெறும் 50 இலட்சம் ரூபாய்தான் வரும். தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய அத்தனை குளங்களுக்கும் தூர் வார முடியும். கடந்த கால ஆட்சியிலே செய்தது போல, மண் அள்ளிப் போடுவதற்கு இந்த tender--க்கு கூட்டமே வராது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொண்டு, அதை நிறைவேற்றித் தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று பொதுப் பணித் துறை குளத்திலே மண்பாண்டம் செய்கிறவர்கள், செங்கல் செய்கிறவர்கள், ஓடு செய்கிறவர்கள் மண் எடுக்கவில்லை என்றால் அங்கே குளமே இருக்காது. ஒரு மண்பாண்டத் தொழிலாளியோ, ஒரு செங்கல் உற்பத்தி செய்பவரோ, லாரியிலோ, டிராக்டரிலோ மண் அள்ளிக்கொண்டு போனால் அவர்களைப் பிடித்து 25 ஆயிரம் ரூபாய் penalty போடுகிறீர்களே, சொந்தமாகத் தொழில் பண்ணுகிறவர்கள் எப்படி முன்னேற முடியும்? மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செங்கல், மண்பாண்டம், ஓடு தயாரிக்கிறவர்கள், பொதுப் பணித் துறை குளத்தில் எந்தக் குளத்தில் வேண்டுமானாலும் மண் எடுத்துக்கொள்ளலாம், ஆண்டுக்கு ஐந்தாயிரம் ரூபாய், பத்தாயிரம் ரூபாய் கட்டி ஆண்டு முழுவதும் எவ்வளவு மண் வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளலாம் என்ற ஓர் உத்தரவைப் பிறப்பிக்க வேண்டுமென்று இந்த நல்ல நேரத்திலே உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நெடுஞ்சாலைத் துறையிலே ஒரே ஒரு கருத்தைச் சொல்லிக்கொள்கிறேன். இங்கே நம்முடைய தேசிய நெடுஞ்சாலைத் துறையிலே நிறைய அதிகாரிகள் இருக்கிறார்கள், வந்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். அதேமாதிரி கேரளாவிலேயும் இருக்கிறார்கள். இந்த தேசிய நெடுஞ்சாலைத் துறை இருக்கிறதா என்று எனக்கு ஞாபகமே இல்லை. அவர்கள் எல்லோரும் என்ன வேலை பார்க்கிறார்களோ எனக்குத் தெரியவே இல்லை. தயவு செய்து அதிகாரிகள், அதிகாரிகள் மாதிரி நீங்கள் நடந்துகொள்ள வேண்டும். அன்பாக வேண்டுகோள் விடுக்கிறேன். காரணம், கேரளாவிலே நம்முடைய மத்திய அரசிடமிருந்து Surface Transport Cess on fuel அதாவது, Surface Transport Cess என்பது பெட்ரோல் கொடுக்கும்போது ஒரு ரூபாய் கிடைக்கும். அதுமாதிரி Railway Improvement Safety Works, Surcharge from passenger fares, அதிலேயிருந்தும்



வரக்கூடிய பணத்திலே இரயில்வே லைனும், தேசிய நெடுஞ்சாலையும் வரக்கூடிய இடத்திலே மேம்பாலம் கட்டுவதற்கு அனுமதி வழங்குகிறார்கள். கேரளாவிலே 2001–2002 ஆம் ஆண்டில் 65 மேம்பாலங்கள் கட்டுவதற்கு அனுமதி பெற்று, 130 கோடி ரூபாய் நிதியைப் பெற்று வந்திருக்கிறார்கள். நீங்கள் விழுப்புரம் பக்கத்திலேயெல்லாம் போய்ப் பாருங்கள். போக்குவரத்திற்கு எவ்வளவு சங்கடம் இருக்கிறது என்று. மேம்பாலம் நீங்கள் கட்டித் தருகிறீர்களா? கன்னியாகுமரி ரோட்டிலே காவல்கிணறு விலக்கை தாண்டினால் அதிலே ஒரு மேம்பாலம் கட்டலாம். நான் சின்ன பிள்ளையாக இருக்கும்போதே land acquisition செய்து அப்படியே போடப்பட்டிருக்கிறது. இன்னும் வேலை முடியவில்லை. மாண்புமிகு நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சரிடம்—அந்த காய்கறி மார்க்கெட் வழியாக ஒரு பைபாஸ் போடப்பட்டிருக்கிறது. அந்த ரோட்டையும் இந்த ஆண்டு போட்டுத் தாருங்கள். மத்திய இரயில்வேயிடமிருந்து, கேரளாவிலே 65 மேம்பாலங்களை வாங்கியதைப்போன்று, நம்முடைய தமிழகத்திற்கு 65 என்பதை 70 ஆக நாம் வாங்க வேண்டும். ஐம்பது பாலங்களையாவது இந்த ஆண்டு வாங்கித் தர வேண்டுமென்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி நிறைய பாலங்களுக்கு நம்முடைய Surface Ministry--யிலிருந்து அனுமதியளித்தும், land acquisition பண்ணிக் கொடுக்கமாட்டேன் என்கிறார்கள். நான் கடந்த கால ஆட்சியிலே நம்முடைய மாண்புமிகு திரு. தா. கிருட்டிணன் அவர்கள் வந்திருக்கும்போதுகூடச் சொன்னேன். இந்தமாதிரி நம்முடைய திருநெல்வேலிக்கு ஒரு ரிங்ரோடு. தாழையூத்திலிருந்து ஆரம்பித்து தெற்கே என்ஜினியரிங் கல்லூரி வரை உள்ள ஒரு இடத்திற்கு மத்திய அரசு அனுமதி கொடுத்தது. நிதியெல்லாம் கொடுத்தார்கள். Land acquisition பண்ண வேண்டுமென்று கேட்கிறார்கள். நான் முன்னாள் மாவட்ட ஆட்சித் தலைவரிடமும் சொல்லிவிட்டேன். அமைச்சரிடமும் சொல்லிவிட்டேன். அவர்கள் அந்தப் பணியை இன்னும் செய்து முடிக்கவில்லை.

*பிற்பகல் 1—10*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. ஆறுமுகம் (குறுக்கீடு) அப்பாவு, உரையை முடித்துக் கொள்ளுங்கள். (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

**திரு. மு. அப்பாவு:** நான் இதுவரை பேசவில்லை. 10 மானியங்கள் முடிந்துவிட்டன. ஐந்து நிமிடங்கள் கூடக் கொடுத்தால் என்ன தவறு?

என்னவெல்லாமோ பேசி இந்தச் சபையின் நேரத்தை வீணாக்குகிறீர்கள். அப்பாவு பேசும்போது மட்டும் உங்களுக்கு நேரம் ஆகிவிட்டதா? கொஞ்சம் பேசாமல் இருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் அனுபவம் உள்ள உறுப்பினர். நீங்களே இப்படிச் சொன்னால் எப்படி? சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. மு. அப்பாவு:** ஆகவே அதேமாதிரி திருநெல்வேலி—தூத்துக்குடி சாலையிலே வல்லநாடு பக்கத்தில் ஒரு பாலம் கட்டிப்போட்டு 5 வருடம் ஆகிறது. அந்தப் பாலத்திற்குப் பக்கத்திலே 5 சென்டு நிலம் ஆர்ஜிதம் செய்ய முடியவில்லை. அதேமாதிரி, சுசீந்திரம் பக்கத்திலே இருக்கிற பாலத்திற்கு மத்திய அரசினுடைய அனுமதி கிடைத்த பிறகும் நீங்கள் நிலம் இன்னும் ஆர்ஜிதம் பண்ணிக் கொடுக்கவில்லை. அதேமாதிரி, குழித்துறை பாலத்திற்கும் அனுமதி பெற்றும் இன்னும் நிலம் ஆர்ஜிதம் செய்து கொடுக்கவில்லை. ஆகவே நம்முடைய நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகள் விரைவாக வருவாய்த் துறை அதிகாரிகளைச் சந்தித்து, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களைச் சந்தித்து, - இப்போது திருநெல்வேலிக்கு, தென் பகுதிக்கு நமக்கு நல்ல அமைச்சர்கள் இரண்டு பேர் கிடைத்திருக்கிறார்கள். இதுவரை கிடைக்கப்பெறாத, அதுவும் நம்முடைய ஈஸ்வரன் அவர்கள் சொன்னதுமாதிரி, நெடுஞ்சாலைத் துறை, பொதுப் பணித் துறை, போக்குவரத்துத் துறை அமைச்சர்கள் எல்லாம் கிடைத்திருக்கிறார்கள்—நீங்கள் இந்தப் பகுதியை முன்னேற்றுவீர்கள் என்ற முழு நம்பிக்கை எங்களுக்கு உண்டு.

அதேமாதிரி நல்ல மாவட்ட ஆட்சித் தலைவர்களும் அந்தப் பகுதியிலே இருக்கிறார்கள். அவர்களிடம் இந்தக் கருத்தைச் சொல்லி விரைவாக இந்த நிலங்களை எல்லாம் ஆர்ஜிதம் செய்துதர வேண்டும் என்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தூத்துக்குடி—கன்னியாகுமரி சாலை, கடந்த ஆட்சியில் மாண்புமிகு நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்த பொன்முடி அவர்கள் E.C.R.-ல் இருக்கிறது; (மணியடிக்கப்பெற்றது) முடித்துவிட்டேன். East Coast Road-ல் இருக்கிறது; கன்னியாகுமரியிலிருந்து 3-வது phase ஆரம்பிப்பேன் என்றார்கள். முடித்துவிட்டார்கள். அடுத்தது R.S.P.-யில் இருக்கிறது என்று சொன்னார்கள். Road Sector Project-ல் அதுவும் ஆரம்பிக்கவில்லை. அந்த ரோடு எப்படியிருக்கிறது என்று உங்களுக்குத் தெரியும். எனவே தயவுசெய்து கன்னியாகுமரியிலிருந்து திருச்செந்தூர்



வரையுள்ள கடற்கரைச் சாலையை விரைவிலேயே, இந்த ஆண்டே போட்டுத் தரும்படி உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். காவல்கிணறு நான் பிறந்த ஊர், நான் வேலை பார்த்த ஊர், நான் இப்போது வாழ்கின்ற ஊர்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. ஆறுமுகம் (குறுக்கீடு) திரு. அப்பாவு, உரையை முடித்துக் கொள்ளுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இவரும் அவர்கள் கட்சிக்காரர்தான். (குறுக்கீடு) அவர் எங்கே பேசுகிறார், உரையை முடித்துவிட்டார். (குறுக்கீடு) நன்றி சொல்லப் போகிறாரா? சரி, அப்பாவு நன்றி சொல்லி முடியுங்கள்.

**திரு. மு. அப்பாவு:** நன்றி சொல்கிறேன். காவல்கிணறுக்கு வடக்கிலுள்ள அந்தச் சாலையை முடித்துத்தர வேண்டும். வள்ளியூர்—திருச்செந்தூர் சாலையை இருவழிப் பாதையாகவும் அமைத்துத்தர வேண்டும் என்று இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொண்டு, இந்த அருமையான வாய்ப்பைத் தந்த உங்கள் அத்தனை பேருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நம்பியாற்றின் குறுக்கே ஒரு பாலம், பணகுடி, சேரன்மாதேவி...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. ஆறுமுகம். (குறுக்கீடு) என்ன clarification? சரி, சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அப்பாவு அவர்கள் இங்கே குறிப்பிட்டதுபோல P.W.D. ஏரியாக இருந்தாலும் சரி, பஞ்சாயத்து ஏரியாக இருந்தாலும் சரி, ஆந்திராவில் என்ன செய்கிறார்கள் என்று சொன்னால், எந்த விவசாயியாக இருந்தாலும், எந்தக் கைவினைத் தொழிலாளர்களாக இருந்தாலும், அவர்கள் free-யாக, அவர்கள் இஷ்டத்திற்கு அந்த மண்ணை வெட்டி எடுத்துக்கொண்டு போகலாம் என்று அவர்கள் விட்டிருக்கிறார்கள். ஆகவே, எல்லா ஏரிகளும் அங்கே தூர் வாரப்பட்டிருக்கின்றன. அதேபோல, நம்முடைய தமிழகத்திலே—ஏனென்றால் நாம் இலட்சம் இலட்சமாக, கோடி கோடியாக பணத்தைக் கொடுத்துத்தான்—அதுவும் துறையே, அரசு செலவு செய்வதைவிட எந்த

விவசாயி வேண்டுமானாலும் வண்டல் மண்ணை எந்த ஏரியிலிருந்து வேண்டுமென்றாலும் எடுத்துக்கொண்டு போகலாம் என்று அதற்கு நீங்கள் earmark பண்ணிக் கொடுத்து மண்ணை இந்த இடத்திலிருந்து எடுக்க வேண்டுமென்று கொடுத்துவிட்டீர்கள் என்றால் நிதியே இல்லாமல் எல்லா ஏரிகளும் தூர் வாரப்படக்கூடிய திட்டத்தை நம்முடைய அரசும், ஆந்திராவைப் போல செய்ய முன்வருமா? அளவிற்கு அதிகமாக 25,000 ரூபாய் fine போடுவதை நிறுத்துமா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் கடைசியாக பதிலுரையில் இதற்குப் பதில் சொல்லலாம்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது இங்கே மாண்புமிகு உறுப்பினர், ராதாபுரம் உறுப்பினர் அப்பாவு அவர்கள் எங்களுடைய அருகிலுள்ள மாவட்டத்திலுள்ள உறுப்பினர். அவருக்கு நன்றாகத் தெரியும். அங்கே தொழிற்சாலைகள், தொழில் அதிகாரிகள் எல்லாம் எந்த அளவிற்கு செங்கல் சூளை வைத்திருக்கிறார்கள் என்றும் அங்குள்ள ஏழை மக்கள் எல்லாம் எவ்வாறு வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் என்றும் நன்றாக சட்டமன்ற உறுப்பினருக்குத் தெரியும். ஆனால் அங்கே அந்தக் குளத்திலே மணல் எடுக்கும்போது, களிமண் எடுக்கும்போது, உரிய ஆதாரங்கள், அதாவது தொழில் துறையிடமிருந்து உரிய சான்றிதழ் இருந்தால் எந்தக் காலத்திலும் பொதுப் பணித் துறை, அதைத் தடுப்பதில்லை. சமீபகாலத்தில்கூட எனது சொந்த ஊரிலே அந்தப் பிரச்சினை வருகிற போதுகூட மாவட்ட ஆட்சியாளர்கள் அதற்கு ஒரு உத்தரவிட்டிருந்தார்கள். A.D. Mines அவர்களிடமிருந்து நீங்கள் உத்தரவைப் பெற்று வர வேண்டுமென்று உத்தரவிட்டிருந்தார்கள். அவர்கள் அந்த நேரத்திலே அந்த ரசீதைக் கையிலே வைத்திருந்தால் எந்தவித தடையும் வராது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1—15*

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்றமுறை நான் பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்தபோது, மாண்புமிகு உறுப்பினர் அப்பாவு அவர்கள் என்னிடம் அதிகமாகக் கேட்டது, தொகுதிக்குத்தான், சொந்த நலத்துக்காக அவர் வந்ததே கிடையாது, பொது நலத்துக்காக என்னை அதிகமாக உபயோகப் படுத்திக் கொண்டவர். அவர் கேட்டதையெல்லாம் என்னால் முடிந்த அளவுக்குச் செய்து கொடுத்திருக்கிறேன். ஆனால் அவரே இன்றைக்கு குறை சொல்கிறார் என்றால் காலத்தின் கோலமே தவிர, வேறல்ல.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. ஆறுமுகம். (குறுக்கீடு) திரு. அப்பாவு உட்காருங்கள்.

**திரு. கே. ஆறுமுகம்:** எனக்கு, 40, 45 நிமிடங்கள் கொடுத்தால் போதும்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முன்னாள் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் நான் கேட்டதையெல்லாம் செய்து கொடுத்தேன் என்று சொன்னார்கள். ரொம்ப நன்றி. நான் என்ன கேட்டேன் என்றால், ஒரே ஒரு மெயின் கோரிக்கை, அதைத்தான் வைத்தேன். பழையாற்றில் வீணாகத் தண்ணீர் போகிறது. அதற்கு Lift Irrigation மூலம் மதிப்பீடு தயார் செய்து தாருங்கள் என்று 5 வருடங்களாக ஐயா, ஐயா என்று ஒரு ஆயிரம் தடவை ஐயா என்று சொல்லியிருப்பேன். இதுவரை போட்டுத் தந்திருக்கிறார்களா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம், பேசுங்கள்.

***திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற பாசனம், பொதுப் பணிகள், கட்டடங்கள், சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து மற்றும் அதற்கான மூலதனச் செலவு குறித்த, பொதுப் பணிகள்—கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு குறித்த மானியக் கோரிக்கைகளிலே எனக்குப் பேச வாய்ப்பு அளித்த தங்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்து, பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனத் தலைவர் டாக்டர் ஐயா அவர்களையும், பசுமை நாயகன் டாக்டர் சின்ன ஐயா அவர்களையும், அவர்கள் இருக்கும் இடம் நோக்கி வணங்கி என்னுடைய கருத்துக்களைச் சொல்கிறேன்.

முதலிலே சாலைகளைப் பற்றி ஒருசில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். இன்றைய விஞ்ஞான யுகத்தில், கணினி யுகத்தில், தகவல் தொழில்நுட்ப யுகத்தில், சாலைகள் பங்கு மிகவும் முக்கியமானது. ஒரு நாடு முன்னேற வேண்டுமானால், தொழில்கள் பெருக வேண்டுமானால், மக்கள் பொருளாதார முன்னேற்றம் காண வேண்டுமென்றால், தேவையான infrastructure அமைக்கப்பட வேண்டும். இதிலே முதலிடம் வகிப்பது சாலைகள்தான். சாலைகள் ஒரு மாநிலத்தில் சிறப்பாக அமையுமென்றால், மற்ற வளங்கள் தானாக வந்து சேரும் என்பது அனைவரும் முற்றிலும் ஏற்றுக்கொள்கிற ஒரு கருத்து. தேசிய நெடுஞ்சாலைகள் N.H.45 சென்னை-திண்டுக்கல் சாலையில், திருச்சி

வரையிலே நான்கு வழிச்சாலை திட்டம் அமலாக்கப்பட்டிருக்கிறது. இப்போது தாம்பரத்திலிருந்து குப்பத்துறை வரையிலே அந்தத் திட்டம் நடைபெற்று, இரண்டாவது கட்டமாக திண்டிவனத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது. அதை திருச்சி வரையிலே மிக விரைவிலே முடிக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சென்னை நகர போக்குவரத்து நெரிசல் மிகவும் அபாயகரமான நிலைக்குச் சென்றுகொண்டிருக்கிறது. ஆகையினால், சென்னையிலே விரைவுச் சாலைத் திட்டத்தை அமைப்பதற்கு ஒரு சிறந்த ஏற்பாட்டை இந்த அரசு செய்ய வேண்டுமென்று கேட்டு, அதிலே என்னுடைய பாட்டாளி மக்கள் கட்சி கருத்தாக, சென்னை பாரிமுனையிலிருந்து தாம்பரம் வரையிலேயும், அதேபோல சென்னை பாரிமுனையிலேயிருந்து கோயம்பேடு வரையிலேயும், சென்னை பாரிமுனையிலேயிருந்து செங்குன்றம் வரையிலேயும், சென்னை பாரிமுனையிலேயிருந்து எண்ணூர் வரையிலேயுமான விரைவுச் சாலைத் திட்டப் பணியை விரைந்து செயல்படுத்திட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சென்னை, மதுரை, திருச்சி, கோவை, சேலம், திருநெல்வேலி உள்ளிட்ட மாநகரப் போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்தவும், வழிமுறைப்படுத்தவும், வல்லுநர்களை உள்ளடக்கிய குழு அமைத்து, தொலைநோக்குப் பார்வையில் நிரந்தரத் தீர்வு காண வேண்டுமென்று தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

செங்கல்பட்டில் இருக்கின்ற கோட்டப் பொறியாளர் அலுவலகம் தொடர்ந்து அங்கே இயங்கி வருகிற அலுவலகம். அந்த அலுவலகத்திற்கு இப்போது ஒரு பிரச்சினை வந்திருக்கிறது. அந்த அலுவலகத்தை காஞ்சிபுரத்திற்கு மாற்றுவதாக ஒரு தகவல். அதற்கான ஏற்பாடு நடைபெறுவதாகக் கேள்விப்படுகிறோம். பேரறிஞர் அண்ணா அவர்கள் முதல்வராக இருக்கும்போது, காஞ்சிபுரம் செங்கல்பட்டு மாவட்டத்தினுடைய தலைமையிடமாக மாற்றப்பட வேண்டும் என்று சொன்னபோது, செங்கல்பட்டு பகுதியிலே இருக்கின்ற மக்கள் எல்லாம் மதுராந்தகம், அச்சரப்பாக்கம், திருப்போரூர், தாம்பரம் பகுதியிலே இருக்கின்ற மக்கள் எல்லாம் அன்றைக்குக் கேட்டார்கள். செங்கல்பட்டு தலைநகராக இருக்க வேண்டுமென்று சொன்னபோது, காஞ்சிபுரம் தலைநகராக இருந்தாலும், செங்கல்பட்டில் இயங்குகின்ற மாவட்ட அலுவலகங்கள் அந்த இடத்திலேயே இருக்குமென்று மாவட்டத் தலைநகரை அறிவிக்கின்ற அன்றைக்கு அப்போதைய முதல்வராக இருந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் கொடுத்த உறுதியைத் தொடர்ந்து, ஆண்டாண்டு காலமாக நடைமுறைப்படுத்தி வருகிற சமயத்திலே, இப்போது...



*பிற்பகல் 1—20*

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுசம்பந்தமாக நாங்கள் எந்தவிதமான G.O.-வும் போடவில்லை.

**திரு. கே. ஆறுமுகம்:** நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் சொன்னதற்கு மிக்க நன்றி. அவர்களுக்கு செங்கல்பட்டு, திருப்போரூர், அச்சரப்பாக்கம், மதுராந்தகம், தாம்பரம் சட்டமன்றத் தொகுதிக்குள் அடங்கிய மக்கள் சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். அதேபோன்று மாநில சாலைகளாக இருப்பதை தேசிய நெடுஞ்சாலைகளாக ஆக்க வேண்டும். இப்போது மாமல்லபுரம்-திருக்கழுக்குன்றம்-செங்கல்பட்டு- காஞ்சிபுரம்-அரக்கோணம்- திருத்தணி-திருப்பதி சாலைகள், மாநிலச் சாலைகளாக இருக்கின்றன. அந்தச் சாலைகளை தேசிய நெடுஞ்சாலைகளாக்க வேண்டும். அந்தப் பகுதிகளில் சுற்றுலாத் தலங்கள், தெய்வ வழிபாட்டுத் தலங்கள் அதிகமாக இருக்கின்றன. அதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வேலூரிலிருந்து கடலூர் செல்லும் மாநில நெடுஞ்சாலையை தேசிய நெடுஞ்சாலையாக ஆக்க வேண்டும். தூத்துக்குடி - திருச்செந்தூர் - சாயல்குடி, இராமநாதபுரம் - நெடுஞ்சாலைகளை இருவழிச் சாலைகளாக மாற்ற வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் ஒரு பெரிய பிரச்சினை. எங்கள் தொகுதியிலே இருக்கிற, மணல் குவாரிகள், கல் குவாரிகள், சுரங்கங்கள், செங்கல் சேம்பர்கள் இருக்கும் இடங்களில் சாலைகள் மிக அதிக அளவிலே மோசமாக இருக்கின்றன. இதற்கு நிரந்தரத் தீர்வு காண நடவடிக்கையும், தரம் வாய்ந்த சாலைகளை அமைக்கவும், வருடாவருடம் சாலைகளைப் பழுதுபார்க்கவும், தனியாக சிறப்பு செயல் திட்டம் ஒன்றை அமைக்க வேண்டுமென்று இந்தச் சமயத்தில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதற்கு உதாரணம் ஒன்று சொல்ல வேண்டுமென்று சொன்னால், எங்களுடைய தொகுதியில் இருக்கிற, பாலாற்றிலிருந்து ஒரு நாளைக்கு 5,000 முதல் 10,000 லாரிகள் மணலை எடுத்துச் செல்கின்றன. அந்தப் பகுதியில் இருக்கிற நெரும்பூர் - வயலூர் சாலை, நெரும்பூர் - விட்டலாபுரம் - புதுப்பட்டினம் சாலை, நெரும்பூர் - திருக்கழுக்குன்றம் சாலை, போன்ற சாலைகளெல்லாம்

கடந்த 10 ஆண்டுகளாக மிக மோசமாக இருக்கின்றன. அதனாலே, அந்தப் பகுதியிலே பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டு, கடந்த ஆட்சியிலே பல்வேறு போராட்டங்கள் நடந்து, கடந்த ஆட்சியிலே 6 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கி, இதுவரையிலும் டெண்டர்கூடக் கோரவில்லை. அதற்குப் பலமுறை நாங்கள் பல அதிகாரிகளிடம் முறையிட்டும் இதுவரை நடைபெறவில்லை என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று இன்னுமொன்று. செங்கல்பட்டு, பாலாற்றங்கரையிலே ஒரு பாலம், U.P. State Corporation-ஆல் கட்டப்பட்டது. 10 ஆண்டுகளுக்கு மேலாகக் கட்டப்பட்டு அதற்கு இன்னும் சுங்கம் வசூலித்துக் கொண்டிருக்கிறார்கள். நிலைமை என்னவென்று தெரியவில்லை. எவ்வளவுதான் இன்னும் அரசாங்கத்திற்கு வர வேண்டும்? அதிலே வருமானம் வருவதாக இருந்தாலும், அங்கே போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கிறது. இதையெல்லாம் நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் கண்டறிய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, கபிலர் மலைத் தொகுதியிலே N.H.7-லிருந்து நாமக்கல் - பனமரத்துப்பட்டி - வேலூர் இடையிலே உள்ள ஆற்றுப் பாலத்தில் பல ஆண்டு காலமாக சுங்கம் வசூலித்துக் கொண்டு வருகிறார்கள். அதையும் உடனடியாக முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நெடுஞ்சாலைத் துறையிலே பல்வேறு பிரச்சினைகள் என்னுடைய தொகுதியிலே இருக்கின்றன. அதற்குப் பின்னால் வருகிறேன்.

அடுத்து, சொட்டு நீர்ப்பாசனம். நம்முடைய தமிழக அரசு 18 கோடி ரூபாயை ஒதுக்கியுள்ளது. பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக நாங்கள் இதை வரவேற்கிறோம். காவிரியை நம்பி வாழ்கிற தமிழகத்தில் இருக்கிற 4.50 இலட்சம் விவசாயிகள் பயிரிடுகிற 9 இலட்சத்து 32 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்களிலுள்ள பயிர்களைக் காக்க, நம்முடைய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்தச் சமயத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்திலே பெரும்பாலான ஏரிகளை ஆழப்படுத்தும் திட்டத்தின்கீழ் நடைபெறும் பணிகள் சரியாக நடைபெறுவதில்லை என்று பல்வேறு புகார்கள் வந்துகொண்டிருக்கின்றன. இதற்கு நிரந்தரத் தீர்வு காண அரசு அதிகாரிகள், அலுவலர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், சம்பந்தப்பட்ட கிராமத்திலே இருக்கிற நீர்ப்பாசன அதிகாரிகளை அழைத்து, கூட்டுக் குழு அமைக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ளக்



கடமைப்பட்டிருக்கிறேன். இவற்றையெல்லாம் செய்தால் அத்தகைய நிலை அங்கே இருக்காது என்று நினைக்கிறேன்.

அதேபோன்று நீர் ஆதாரத்தைப் பெருக்குவதற்கு கங்கை-காவிரியை இணைப்போம் என்று சுதந்திரம் அடைந்த காலத்திலிருந்தே சொல்லி வருகிறார்கள். அதை எப்போது கொண்டுவருவார்கள் என்று தெரியவில்லை. இன்னும் ஒன்று, தேசிய தொலைநோக்குத் திட்டத்திலே குறைந்தது, தென் இந்திய நதிகளை இணைக்க வேண்டுமென்று ஒரு திட்டத்தை இந்த அரசு செயல்படுத்த வேண்டும். இதற்கு மத்திய அரசு ஒரு infrastructure-ஐச் செய்திருக்கிறது. அதிலே குறிப்பாக தென்னக நதிகளாக இருக்கிற, மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா, பெண்ணாறு, பாலாறு, காவிரி, வைகை மற்றும் குண்டாறு ஆகிய நதிகளை இணைக்கும் திட்டம் குறித்து தேசிய நீர்வளக் குழுமம் ஆய்வு அறிக்கையைத் தயாரித்துள்ளது. இதை முந்துகிற வகையில் ஓர் ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இன்னுமொரு பாராட்டை தமிழக அரசுக்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். காவிரிப் பகுதிகளில் தனியார் பங்கேற்கும் நபார்டு வங்கியின் 200 கோடி ரூபாய் செலவிலே 204 பாலங்கள் கட்டப்படுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். இதற்கு பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே எங்களுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அதேபோல நீர்வளப் பாதுகாப்பு, நீர் கசிவுக் குட்டைகளையும் தடுப்பு அணைகளையும் கட்ட தமிழக அரசு உத்தேசித்து இருப்பதை பாட்டாளி மக்கள் கட்சி வரவேற்கிறது. இதைப்பற்றி ஆளுநர் உரையிலே நடைபெற்ற விவாதத்தின்போது எங்கள் கட்சியின் தலைவர் திரு. ஜி.கே. மணி அவர்களும் நானும் இங்கே பேசினோம். அதற்கிடையிலே நம்முடைய முதல்வர் அவர்கள் சுதந்திர தின விழாவிலும், பட்ஜெட் உரையிலும் சொல்லியிருந்தார்கள். பாலாறு போன்ற ஆறுகளில் உபரியாகச் செல்கின்ற தண்ணீரைத் தேக்கி அதிலிருந்து சென்னை நகருக்குத் தண்ணீர் வழங்க இருக்கிறோம் என்று சொன்னார்கள். எங்கள் பகுதியிலே கல்பாக்கம் அருகிலே அந்த அணை கட்டப்படவிருக்கிறது. அது நீர்ப்பாசனத்திற்கும் வர வேண்டும். என்னுடைய தொகுதியிலே எப்போதும் நிரந்தரத் தீர்வு காணப்படாத பிரச்சினையாக குடிநீர்ப் பிரச்சினை இருக்கிறது. அதையும் தீர்ப்பதற்கு நம்முடைய அரசு முன்வர வேண்டும் என்று இந்தச் சமயத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1—25

அடுத்து நீர் ஆதாரத் தொகுப்புத் திட்டம் - Water Resources Consolidation Project Phase-II - நீர் ஆதாரத் தொகுப்புத் திட்டத்திற்கு உலக வங்கியை இந்த அரசு கேட்டுக்கொண்டிருக்கிறது என்று நம்முடைய மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையிலே சொல்லியுள்ளார்கள். அதற்கு நாங்கள் எல்லாம் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். அதிலே பாசனத் திட்டங்கள், பாசனத்தின்கீழ் வராத ஏனைய ஏரிகளையும் நவீனப்படுத்தும் திட்டத்தையும் உடனடியாக அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக அரசு, தமிழ்நாடு கடல்சார் வாரியம் அமைத்து செயல்பட்டு வருவதை நாங்கள் வரவேற்கிறோம். அதிலே நம்முடைய மாநிலத்திலே மூன்று பெரிய துறைமுகங்கள் இருக்கின்றன. அவை, சென்னை, தூத்துக்குடி, எண்ணூர் ஆகியவையாகும். அதேபோன்று தனியார் மூலமாக இயங்குகிற 14 சிறிய துறைமுகங்களையும் – captive ports – அமைத்திருக்கிறீர்கள். அதற்கு எங்களுடைய (மணியடிக்கப்பெற்றது) நன்றியையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

மாமல்லபுரம் ஒரு சுற்றுலாத் தலமாக இருக்கிறது. அதுமட்டுமல்லாமல் அந்தப் பகுதி தொழிற்சாலை இல்லாத, அதாவது சென்னைக்கும், பாண்டிச்சேரிக்கும் இடையிலே தொழிற்சாலையே இல்லாத East Coast Road-ல் இருக்கிறது. அந்தப் பகுதியிலே பல்வேறு தொழிற்சாலைகளை அமைக்க வேண்டும் என்று சொன்னால், அந்தப் பகுதியிலே ஒரு புதிய துறைமுகம் மாமல்லபுரம் அருகே அமைக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல் அதிலே சுற்றுலாப் படகு விடவேண்டும்; சென்னை–மாமல்லபுரம்–பாண்டிச்சேரி–பூம்புகார் ஆகிய பகுதிகளுக்குச் செல்வதற்கு ஏற்பாடு செய்து, அங்கே அதற்கான துறைமுகம் அமைக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டம். இராமேஸ்வரமும், பாக் ஜலசந்தியும் சந்திக்கிற மன்னார் வளைகுடாவிலே கப்பல் செல்லும் வகையிலே அமையவுள்ள கால்வாய்த் திட்டம் அது. அதற்கு இப்போது 400 கடல் மைல்கள் சுற்றி வந்து, 36 மணி நேரம், அதிக நேரம் பயணம் செய்து, இலங்கையைச் சுற்றி வரவேண்டியிருக்கிறது. எனவே, பல ஆண்டு காலமாக நிலுவையிலிருந்து வந்த இந்தத் திட்டத்திற்கு இப்போது மத்திய அரசு 5 கோடி ரூபாய் கொடுத்து, அதிலே நீர்வழிப் பாதையை மட்டும் கண்டுபிடித்ததாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அடுத்த கட்ட



நடவடிக்கைக்கு நம்முடைய அரசாங்கம் மத்திய அரசை வலியுறுத்த வேண்டுமென்று இந்தச் சமயத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, பழமைவாய்ந்த பள்ளிக் கட்டடங்கள் தமிழகம் முழுவதும் பழுதுபார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

செங்கற்பட்டு மருத்துவமனையிலே போதிய படுக்கைகளுடன்கூடிய அறைகள் இல்லை. அதையும் கட்டித் தரவேண்டுமென்று இந்தச் சமயத்திலே சொல்லிக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியிலே பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. குறிப்பாக திருக்கழுக்குன்றத்தில் பாலங்கள் என்று சொல்கின்ற வகையிலே செங்கற்பட்டு சூரப்பன் சாலையிலே, மாமல்லபுரம், கல்பாக்கம், திருப்போரூர் சாலையிலே, - இரயில்வே சந்திப்பில் ஒரு மேம்பாலம் அமைக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

N.H. 45-யையும், N.H.4-யையும் இணைக்கிற ஒரு சாலை சிங்கப்பெருமாள் கோவிலிலேயிருந்து ஸ்ரீபெரும்புதூர் வரை செல்கிறது. ஸ்ரீபெரும்புதூரிலே நம்முடைய மறைந்த முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களுடைய நினைவிடம் இருக்கிறது. தென் மாவட்டங்களிலேயிருந்து வருகிறவர்கள் அந்த வழியில்தான் செல்ல வேண்டும். அதுமட்டுமல்லாமல் Ford கார் கம்பெனியையும், Hyundai கார் கம்பெனியையும் இணைக்கிற சாலையாக அந்தச் சாலை இருக்கிறது. அதற்கு சிங்கப்பெருமாள் கோவிலிலே இரயில்வே மேம்பாலம் ஒன்று கட்டித் தர வேண்டுமென்று இந்தச் சமயத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று தாம்பரத்தில் இரயில்வே மேம்பாலப் பணிகள் தொடங்கப்படாமலே இருக்கின்றன. அதையும் கண்ணுற வேண்டும் என்று இந்தச் சமயத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

செங்கற்பட்டு தொகுதியிலே சாலைகள் மிக மோசமாக உள்ளன. குறிப்பாக, திருக்கழுக்குன்றம் - கருங்குழி சாலை, திருக்கழுக்குன்றம் - பொன்விளைந்தகளத்தூர் - செங்கற்பட்டு சாலை, திருக்கழுக்குன்றம் - ஈகை - பட்டிக்காடு - கடும்பாடி - மாமல்லபுரம் செல்லும் சாலை, செங்கற்பட்டு - பி.வி. களத்தூர் - வல்லிபுரம் சாலை - செங்கற்பட்டு - திருப்போரூர் சாலை ஆகியவை மிகப் பழமை வாய்ந்த சாலைகள். அவை ஒருவழிச் சாலையாக இருக்கின்றன. அவற்றை இருவழிச் சாலையாக மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடித்து விடுங்கள்.

**திரு. கே. ஆறுமுகம்:** அதேபோல் சிங்கப்பெருமாள்கோவில்–சென்னேரிச் சாலையையும் சீர்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பாலாற்றின் குறுக்கே சிற்றணையை, திருக்கழுக்குன்றம் வட்டம், எடையாத்தூர் அருகே கட்டினால் அந்தக் கிராமத்திற்குச் சாலை வசதி கிடைக்க வாய்ப்பாக இருக்கும் என்று இந்தச் சமயத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பக்கிங்காம் கால்வாயினை ஆழப்படுத்தி, சென்னையிலேயிருந்து மாமல்லபுரம் வரை படகுப் போக்குவரத்தை ஏற்படுத்திக் கொடுக்க நம்முடைய அரசு முயல வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்குப் புதிய கட்டடம் அதிகமாகத் தேவையாக இருக்கிறது. அங்கே ஒரு நாளைக்குக் குறைந்தது 3,000 பேர் வரை புற நோயாளிகளாக வருகிறார்கள். அதேபோல் ஒரு நாளைக்கு 1,000 பேர் முதல் 2,000 பேர் வரை வரும் உள் நோயாளிகளுக்குப் படுக்கை வசதி இல்லாமல் இருக்கிறது. எனவே, அதிக அளவிலே படுக்கை அறைகளைக் கட்டித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் பாலாற்றின் குறுக்கே கட்டப்பட்டிருக்கிற காஞ்சிபுரம்–வந்தவாசி சாலையிலே ஒரு பாலம், காஞ்சிபுரம்–உத்திரமேரூர் கீழ்ச்சாலையிலே ஒரு பாலம் கட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது. அது முடியாமல் இருக்கிறது. அதைத் துரிதப்படுத்தி, வருகிற மழைக்காலத்திற்கு முன்பாக போக்குவரத்திற்காகத் திறக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், செங்கற்பட்டு – காஞ்சிபுரம் பை–பாஸ் சாலையிலே, கடந்த ஆட்சியிலே மேம்பாலம் கட்டப்பட்டு, அது இன்னமும் போக்குவரத்திற்குத் திறக்கப்படாமலே இருக்கிறது. அந்தப் பாலத்தைத் திறக்க வேண்டும் என்று இந்தச் சமயத்திலே சொல்லிக்கொள்கிறேன்.

திருக்கழுக்குன்றம் வட்டாட்சியர் அலுவலகத்திற்குக் கட்டடமே இல்லை. திருக்கழுக்குன்றம் வட்டாட்சியர் அலுவலகம், கருவூலம், நீதிமன்றம், கிளைச் சிறைச்சாலை, மருத்துவமனை, தீயணைப்பு நிலையம் ஆகியவற்றை ஒரே இடத்திலே அமைப்பதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



*பிற்பகல் 1—30*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திருமதி நளினி மனோகரன். (குறுக்கீடு) திரு. ஆறுமுகம், அமைச்சர் பதில் சொல்ல வேண்டும், சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. கே. ஆறுமுகம்:** நன்றி சொல்லி முடித்துக்கொள்கிறேன். இந்த மானியக் கோரிக்கைமீது பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி, விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி நளினி மனோகரன், 2 நிமிடங்களுக்குள் பேசி முடித்துவிட வேண்டும்.

***திருமதி நளினி மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வணக்கம். சாதாரண குடும்பத்தில் பிறந்திட்ட என்னை போளூர் தொகுதியின் வேட்பாளராக நியமித்து திருவண்ணாமலையில் இருந்து கொளுத்தும் வெயிலிலும் மதிய உணவுகூட உண்ணாமல் மக்களைச் சந்தித்து வாக்குகள் சேகரித்து என்னை வெற்றிபெறச் செய்து, சட்டமன்ற உறுப்பினராக ஆக்கி இந்த அவையில் பேச வாய்ப்பை ஏற்படுத்தித் தந்தவர் எனது புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

'மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா' என்ற கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை பாடலுக்கேற்ப விளங்கும் புரட்சித் தலைவி, பொன்மனச் செம்மலின் பொற்கால ஆட்சியை மீண்டும் தமிழகத்தில் கொண்டுவந்த தென்னகத்து ஜான்ஸி ராணி, மாண்புமிகு இதய தெய்வம் (மேசையைத் தட்டும் ஒலி) டாக்டர் புரட்சித் தலைவி தமிழக முதல்வர் அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்கி எனது நெஞ்சம் நிறைந்த நன்றியை இந்தப் பொன்னான நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன் என்று கூறிக்கொண்டு, எனது கன்னிப் பேச்சைத் தொடங்குகிறேன்.

தமிழகத்திலே மீண்டும் அம்மா அவர்களையே முதல்வராக அமர்த்த வேண்டும் என்றும், என்னைச் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்வு செய்த போளூர் தொகுதி மக்களுக்கும், நல்ல உள்ளங்களுக்கும், அமைச்சர்

பெருமக்களுக்கும், சக சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், கழகத்தினருக்கும் மற்றும் பத்திரிகையாளர்களுக்கும், காவல் துறையினருக்கும், தொலைக்காட்சியினருக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிற பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கைகளிலே பல்வேறு கருத்துக்களை பலர் சொல்கின்ற நிலையிலே நானும் இதிலே கலந்துகொண்டு கருத்தைச் சொல்வதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைச் சொல்லிக்கொண்டு. பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைகள், பாலங்கள், நீர் வளங்கள் ஆகியவற்றை மேம்படுத்த பல்வேறு வகையில் கொள்கைகளையும் வகுத்தளித்து அடிப்படை அறிவிப்புகளையும் அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். குறிப்பாக, பெண்களுக்கு அதிக முக்கியத்துவம் தந்து பெண்களுக்கென்று மகளிர் காவல் நிலையம், தொழிற்பேட்டை, கல்வியிலும் வேலைவாய்ப்பிலும் அதிகமாக திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள். அவை எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதிலே மாநில நெடுஞ்சாலைகள், முக்கிய மாவட்டச் சாலைகள் ஆகியவற்றை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு தமிழ்நாடு சாலைத் துறை திட்டத்திற்கு உதவி செய்யுமாறு இவ்வரசு 1994-ல் உலக வங்கியைக் கேட்டுக்கொண்டது. மீண்டும் ஐந்தாண்டு இடைவெளிக்குப் பின்னர் புதிய எழுச்சியுடன் ரூ.1,900 கோடி திட்டச் செலவில் இத்திட்டம் மேற்கொள்ளப்படுவது வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

என்னுடைய தொகுதியைச் சேர்ந்த பல்வேறு கோரிக்கைகளை இங்கே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த கால தி.மு.க. ஆட்சியின்போது போளூர் தாலுகா, படவேடு கிராமம் அருகில் செண்பகத்தோப்பு அணையைப் பொதுப் பணித் துறை மூலம் கட்ட 4 ஆண்டுகளுக்கு முன்பு அடிக்கல் நாட்டப்பட்டு, அதற்கென அலுவலகம் ஒன்று நிறுவியும், அலுவலகம் மட்டும் ஏட்டு அளவில் செயல்பட்டு வருகிறது. கல்வெட்டு பெயர் பதிப்பதுதான் கடந்தகால ஆட்சியாக இருந்தது. (மேசையைத் தட்டும் ஒலி) அணை கட்டுமானப் பணிகள் ஒன்றும் நடைபெறவில்லை. இவ்வணை கட்டப்பட்டால் போளூர் மற்றும் ஆரணி தொகுதியைச் சேர்ந்த பலதரப்பட்ட விவசாயிகள் நன்மை அடைவார்கள். அம்மா அவர்கள் இப்பணியை மேற்கொள்ள தகுந்த ஆணைகள் வழங்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.



மேலும், கடந்த தி.மு.க. ஆட்சியில் கள்ளச் சாராயம் பெருக்கெடுத்து ஓடியது என்பதற்கு ஆதாரமாக போளூர் தாலுகா கலசப்பாக்கம் காவல் நிலையம் எல்லைக்குட்பட்ட படியம்பட்டு கிராமத்தில் கல் உடைக்கும் கூலித் தொழிலாளர்கள் 13 பேர் விஷச் சாராயம் அருந்தி மருத்துவமனையிலே உயிர் நீத்தனர். (மேசையைத் தட்டும் ஒலி) அன்றைய ஆட்சியாளர்கள் அவர்களின் துயரைப் போக்க வாய்மொழியில் அவர்களுக்கு அரசிடமிருந்து நிவாரணத் தொகை பெற்றுத் தருகிறோம் என்று கூறி, இதுநாள் வரையில் அத்தொகையை அவர்களுக்குப் பெற்றுத் தரவில்லை. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அருள்கூர்ந்து அந்த 13 ஏழைக் கூலித் தொழிலாளர் குடும்பங்களுக்கும் முதலமைச்சர் நிவாரணத் தொகையிலிருந்து நிதி வழங்கி உதவுமாறு அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

போளூர் பேரூராட்சியை நகராட்சியாக மாற்றுவதற்கு அனைத்து ஆவணங்களும் தகுந்த முறையில் இருப்பதால் போளூர் பேரூராட்சியை நகராட்சியாக மாற்றுவதற்கு கோரிக்கையை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். போளூர் பகுதியில் மாணவ மாணவிகள் மேல்நிலைப் படிப்பை முடித்துவிட்டு மேல்படிப்பிற்குச் செல்ல சுமார் 50 கிலோ மீட்டர் தூரம் சென்று படிக்கும் நிலை இருந்து வருகிறது. இந்நிலை மாற, போளூரில் ஓர் அரசு கலைக் கல்லூரி அமைக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1—35*

போளூர் தாலுகா களம்பூர் பேரூராட்சியில் அதிகமாக பால் உற்பத்தி செய்யப்படுவதால், பால் குளிரூட்டும் நிலையம் ஒன்றை அமைக்க அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேசி முடித்துக் கொள்ளுங்கள்.

**திருமதி நளினி மனோகரன்:** திருவண்ணாமலை ஒரு புண்ணியஸ்தலம் என்பதால் மாதந்தோறும் பௌர்ணமி அன்று நெடுந்தூரத்திலிருந்து பக்தர்கள் வருவதாலும், காட்பாடி முதல் விழுப்புரம் வரை உள்ள குறுகிய இரயில் பாதையை அகல இரயில் பாதையாக மாற்ற மத்திய அரசுக்கு மீண்டும் பரிந்துரை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காலை, மாலை இரயில் வரும் நேரங்களில் போக்குவரத்து தடைக்குள்ளாகி பயணிகள் வெகு சிரமமாகச் செல்கின்றனர். இதனால் சுமார் ஒரு மணி நேரம் காலதாமதம்

ஏற்படுகின்றது. இதனைச் சீரமைக்கும் வகையில் போளூர் இரயில்வே லெவல் கிராசிங்கில் இரயில்வே மேம்பாலம் அமைக்கவும் அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

போளூரில் அரசு மருத்துவமனை இரண்டு இடங்களில் செயல்பட்டு வருகிறது. ஓரிடத்தில் புற நோயாளிகளையும், மற்றோரிடத்தில் உள் நோயாளிகளையும் பார்த்து வருகிறார்கள். இடையிலே மக்கள் 3 கிலோ மீட்டர் தூரம் சென்றுவரச் சிரமப்படுகிறார்கள். எனவே, நவீன வசதிகளுடன்கூடிய ஒரே கட்டடமாக அமைத்துத் தருமாறு அம்மா அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

போளூர் தொகுதி, கன்னியம்பாடி ஒன்றியத்தில் தெள்ளை கன்னியம்பாடி சாலை மிகவும் பழுதடைந்து உள்ளது. அச்சாலையை சீர்செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன். கன்னியம்பாடி ஒன்றியத்தில் அமிர்தி சுற்றுலா தலம் உள்ளது. அமிர்தி, நாகநதி ஆற்றின் குறுக்கே பாலம் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். கன்னியம்பாடியில் இருக்கும் மக்கள் காவல் நிலையம் செல்ல வேண்டுமென்றால் 20 கிலோ மீட்டர் தூரத்தில் வேலூரில் இருக்கும் டோல்கேட் காவல் நிலையம் செல்ல வேண்டும். அதனால் அங்கு ஒரு காவல் நிலையம் அமைத்துத் தர வேண்டும் என மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஜவ்வாது மலையில் ஜமனாமரத்தூரில் செயல்பட்டு வந்த தேன் சேகரிப்பு நிலையத்தில் போலி தேன் வழங்கியதை நமது டி.வி. படம் பிடித்துக் காட்டியவுடன், சென்ற அரசு விழித்துக்கொண்டு வெளியில் தெரிந்தவுடன் சங்கத்தைக் கலைத்துவிட்டது. ஆனால் இன்றுவரை மீண்டும் அச்சங்கத்தைச் செயல்பட வைக்கவில்லை. அத்தொழிலை நம்பியிருக்கும் மலைவாழ் மக்களின் வாழ்க்கையில் அம்மா அவர்கள் ஒளியேற்றிட வேண்டுகிறேன்.

மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு. மக்கள் தீர்ப்பைப் பெருவாரியான அளவில் பெற்று, மக்களுக்காக, குறிப்பாக மகளிருக்காகப் பணியாற்ற வந்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மக்களால் புறக்கணிக்கப்பட்டவர்கள் ஏற்படுத்தும் தடைகள் பலவும், கதிரவனைக் கண்ட பனி போல் நீங்கி பேரறிஞர் அண்ணா வகுத்த நெறியில், புரட்சித் தலைவர் ஆட்சியை நடத்தும் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் மீண்டும் ஒருமுறை நன்றியைக் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நன்றி, வணக்கம்.





**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. பழனிசாமி, 5 நிமிடங்களில் பேசி முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** நான் இன்னும் பேசவே இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை. நீங்கள் பேசுவதிலே எங்களுக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. (குறுக்கீடு) நேரம் ஆகிவிட்டது. அமைச்சர் பதில் சொல்லிவிட்டு அனைத்துக் கட்சிக் கூட்டத்திலே கலந்துகொள்ள வேண்டும். காவிரிப் பிரச்சினை பற்றிய கூட்டம்.

**திரு. ஜி. பழனிசாமி:** காவிரிப் படுகைகளிலே இருக்கிற நாங்கள் உருப்படியாக 2 திட்டங்களைப்பற்றிச் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** சட்டமன்றத்தை சண்டைமன்றமாக்கி, உள்ளதையும் உருப்படியாகப் பேசவிடாமலாக்கி, தொடர்புள்ளதைப் பேசுகிறவர்களுக்கு நீங்கள் இப்படிச் சொன்னீர்கள் என்றால், நாங்கள் பேசவே இல்லை. நீங்கள் வேறு யாரையாவது பேசச் சொல்லுங்கள். நான் காலையிலே பெயர் கொடுத்தேன். என் பெயர் இருக்கிறதா, இல்லையா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவை உறுப்பினர் அவர்கள் இதை serious-ஆக எடுத்துக்கொள்ள வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். நேரம் குறைவு என்ற காரணத்திற்காகச் சொன்னாரே தவிர, வேறல்ல. 5 மணித் துளிகள் என்பது கட்டாயமான ஒன்றல்ல. நல்ல கருத்துகளைச் சொல்லக்கூடிய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அதிகமான நேரத்தை அவையினுடைய துணைத் தலைவர் தருமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, நீங்கள் பேசுங்கள். மாண்புமிகு உறுப்பினருக்கு நான் பணிவோடு சொல்லிக்கொள்கிறேன். (குறுக்கீடு) இல்லை, இல்லை, நான் சொல்கிறேன். எந்த உறுப்பினராக இருந்தாலும் மூத்த உறுப்பினர்கள், இளைய உறுப்பினர்களுக்கு வழிவிட வேண்டும்.

**திரு. ஜி. பழனிசாமி:** நான்தான் பேசவில்லை என்கிறேனே! நான்தான் உட்கார்ந்துகொள்கிறேன் என்று சொல்கின்றேனே!

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** புதிய உறுப்பினர்கள் (குறுக்கீடு) தயவுசெய்து, புதிய உறுப்பினர்கள் நிறைய பேர் பேச முடியவில்லை என்கிறார்கள். (குறுக்கீடு) நீங்கள் பேசுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** நான் பேசவில்லை, நீங்கள் யாரையாவது பேசவிடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) ஒரு கருத்தைத்தான் சொன்னேன். (குறுக்கீடு) பேசவிடக்கூடாது என்பதற்காக அல்ல. (குறுக்கீடு) பேசவிடக்கூடாது என்பதற்காக இந்தக் கருத்தைச் சொல்லவில்லை. (குறுக்கீடு) சரி, பேசுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** நாங்கள் அலுவல் ஆய்வுக் குழுவிலே பேசுகிறோம். இல்லையென்றால் இப்படியெல்லாம் பேசிக்கொண்டிருக்க முடியாது. பத்திரிகைகள் ஆக்கபூர்வமான...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, இந்த நேரத்தில் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** நாங்கள் ஆக்கபூர்வமான கருத்துகளைப் பேசுகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேசுங்கள், பேசுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** பத்திரிகைகளிலே எங்களுக்கு சமீபத்திலே என்ன பெயர் தெரியுமா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, பேசுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** உண்மையான கருத்துகளைச் சொல்கின்ற கம்யூனிஸ்ட்டுகள்கூட இந்தச் சட்டமன்றத்திலே பேசவில்லை என்று பாக்ஸ் கட்டி செய்தி போடுகிறார்கள். நாங்கள் சட்டமன்றத்தை சண்டைமன்றமாக்க வேண்டுமென்றால் தினமும் செய்துவிட்டுப் போகலாம். அதற்காகவா நாங்கள் வந்துகொண்டிருக்கிறோம்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இந்த நேரத்தை இதிலே பயன்படுத்திக்கொள்ளுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** ஆகவே, உண்மையான கருத்துகளைப் போட்டால்—நம் நாட்டுப் பத்திரிகைகள் எப்படி இருக்கின்றன என்றால், உண்மையான கருத்துகளை, தேவையான கருத்துகளை, ஆக்கபூர்வமான



கருத்துகளை, நாட்டு மக்களுக்குத் தேவையான கருத்துகளை, சொல்ல வேண்டிய கருத்துகளை அந்தப் பத்திரிகைகள் எழுதாது; அந்தப் பேனா எழுதாது. ஆனால் அதற்கு மாறாக மக்களுக்குத் தேவையான கருத்துகளைச் சொல்லும்போது...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அப்படியே மானியக் கோரிக்கைக்கு வந்துவிடுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** எங்கள் மீது விமர்சனங்கள் எழுதி, கட்டம் கட்டி செய்திகள் போடுகின்றன. அவையாவது நாட்டுக்கு உண்மையைத் தெரிவிக்கட்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மானியக் கோரிக்கைக்கு வந்துவிடுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** நாங்கள் என்ன இப்போது புதிதாகப் பேசப் போகிறோமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற மானியக் கோரிக்கைகளின்மீது நான் சில கருத்துகளை முடிந்த அளவுக்குச் சுருக்கமாகச் சொல்லி முடிக்கலாம் எனக் கருதுகிறேன்.

குறிப்பாக, காவிரியினுடைய படுகையிலே உள்ள விவசாயிகளினுடைய கோரிக்கைகளைச் சொல்ல வேண்டிய அவசியமும், பிரதானமான பொதுப் பணித் துறை சம்பந்தப்பட்ட கோரிக்கைகளைச் சொல்ல வேண்டிய அவசியமும் எங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

*பிற்பகல் 1—40*

காவிரி நதி நீர்ப் பிரச்சினை பற்றி இன்று மாலை நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் அனைத்துக் கட்சிக் கூட்டத்தை நடத்தி, தமிழகத்தினுடைய உயிர்நாடிப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டிய அவசியத்தில் உள்ளதை நான் உணர்ந்தவன். அதை மறுப்பவன் அல்ல. இருந்தபோதிலும்கூட, தற்போது காவிரி நதி நீர்ப் பிரச்சினையில் விவசாயிகள் மிகவும் எதிர்பார்ப்போடு இருந்தார்கள். அந்த Monitoring Committee–யில் நம்முடைய அதிகாரிகள் கலந்துகொண்ட கூட்டத்தில் ஒரு தீர்வு காணப்படவில்லை என்ற ஒரு மிகப் பெரிய கவலை, ஒரு கொந்தளிப்பு தஞ்சை மாவட்டத்தில் ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் ஏதோ தேவை இல்லாமல் செய்வதாக

நான் சொல்ல விரும்பவில்லை. தற்போது 100 கோடி ரூபாய்க்கு மேலாக முதலீடு செய்து வேளாண்மைத் தொழிலிலே ஈடுபட்டிருக்கின்ற விவசாயிகளுக்கு இன்னும் 10, 15 நாட்களில் காவிரி நதி நீர்ப் பிரச்சினை தீரவில்லை என்று சொன்னால், காவிரிப் பகுதியிலே தண்ணீர் கிடைக்கவில்லை என்று சொன்னால், நிச்சயமாக, மிகப் பெரிய கவலைக்குரிய நிலைமைகள் அந்த மாவட்டத்தில் ஏற்படும் என்பதைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

ஆளுங்கட்சித் தரப்பிலும் சரி, எதிர்க் கட்சித் தரப்பிலும் சரி, இதை எவ்வளவு பொறுப்போடு பார்க்கிறீர்கள் என்பது எங்களுக்குக் கவலைக்குரிய விஷயம். பேசக்கூடிய ஒவ்வொரு கருத்தும் நாட்டு மக்களுக்குப் பத்திரிகைகள் வாயிலாகச் செல்கிறது. ஒவ்வொரு கட்சியைப் பற்றியும் பொதுமக்கள் புரிந்துகொள்ள ஒரு வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

## 7. அறிவிப்புகள்- தொடர்ச்சி

### ( இ) காவிரி நதி நீர்ப் பிரச்சினை குறித்து அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பழனிசாமி, ஓர் அறிவிப்பை மட்டும் சொல்லிவிடுகிறேன். காவிரி நதி நீர்ப் பிரச்சினை குறித்து அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம் பிற்பகல் நடைபெறவுள்ளது. கட்சித் தலைவர்கள் கலந்துகொள்ள வேண்டியிருக்கிறது. அதனால் நிறைய உறுப்பினர்கள் பேசுவதற்கு வாய்ப்பு இல்லை என்று வருத்தப்படுகிறார்கள். அந்த வருத்தத்திலும் நியாயம் இருக்கிறது. நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் நிலைமையைக் கொஞ்சம் கருத்திலேகொண்டு, திரு. பழனிசாமி அவர்களுக்குப் பிறகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொன்னால்தான் முடியும். அவர் சென்ற பிறகு மற்ற தலைவர்கள் எல்லாம் கலந்துகொள்ள வேண்டியிருக்கிறது. அதுதான் இருக்கின்ற சூழ்நிலை. சூழ்நிலையை விளக்கிச் சொல்லியிருக்கிறேன். இதனால் பெரும்பாலும் பாதிக்கப் படக்கூடியவர்கள் ஆளுங்கட்சி உறுப்பினர்கள்தான். திரு. பழனிசாமி அவர்களுடைய உரைக்குப் பிறகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் – ஏனென்றால், இது அவர் சம்பந்தப்பட்ட பிரச்சினை – முன்னாலே சென்று அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய



வேண்டியிருக்கிறது. ஆகவே உங்களுடைய பேச்சுக்குப் பிறகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களை பதில் சொல்ல அனுமதிக்கலாமா என்று நான் அவையினுடைய அனுமதியைக் கேட்க விரும்புகிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** எங்கள் உறுப்பினருக்கு 5 நிமிடங்கள் கொடுத்தால் போதும்.

*(உறுப்பினர் திரு. கே.சி. கருணாகரன் எழுந்து நின்றார்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லா கட்சி உறுப்பினர்களுக்கும் இந்த பாதிப்பு இருக்கிறது. பெரும்பாலும் இதிலே ஆளுங்கட்சி உறுப்பினர்கள்தான் பாதிக்கப்படுகிறார்கள். இறுதியில் நீங்கள் ஏதேனும் கேள்வி கேட்க வேண்டுமென்றால் கேட்டுக்கொள்ளலாம்.

**திரு. பீ.எம். நரசிம்மன்:** தலைவர் அவர்களே, தினந்தோறும் நாங்கள் 7 சட்டமன்ற உறுப்பினர்களின் பெயர்களைக் கொடுக்கிறோம். அவர்களில் இரண்டு, மூன்று பேர்களுக்குத்தான் வாய்ப்பு கிடைக்கிறது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் இருங்கள். திரு. பழனிசாமி அவர்கள் பேசி முடிக்கட்டும். பிறகு மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இயக்கத்தின் சார்பில் நீங்கள் 5 மணித்துளிகள் பேசி முடித்து விடுங்கள். பிறகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களை பதில் சொல்ல அனுமதிக்கலாம். (குறுக்கீடு) திரு. ஞானசேகரன், ஏற்கெனவே உங்களுடைய கட்சியின் சார்பாகப் பேசியிருக்கிறார்கள். திரு. ரா. ஈஸ்வரன் பேசியிருக்கிறார். ஓர் இயக்கத்தின் சார்பாக சொல்லப்பட வேண்டிய கருத்துகள் சொல்லப்பட்டுவிட்டன. அனைத்துக் கட்சிக் கூட்டம் இருக்கிறது. அதுதான் பிரச்சினை. வேறு காரணம் எதுவும் இல்லை. பொதுப் பணித் துறை அமைச்சர் சம்பந்தப்பட்ட பிரச்சினை. திரு. பழனிசாமி அவர்கள் பேசி முடித்ததற்குப் பிறகு உங்கள் கட்சியின் சார்பில் 5 மணித்துளிகள் பேசி முடித்துவிடுங்கள்.

## 8. மானியக் கோரிக்கைகள், 2001-2002, விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் தஞ்சை மாவட்டத்தினுடைய கால்வாய்களை நவீனப்படுத்துவதற்கு ஒரு நல்ல திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். நான் அதை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன், பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம்,

இது ஒரு நல்ல திட்டம். நீண்ட காலத்திற்குப் பிறகு, அவருடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே, இது ஒரு Master Plan-இலே கொண்டுவரப்படும் என்று சொல்லியிருக்கிறார். நீண்ட காலமாக இதுகுறித்து சட்டமன்றத்திலே நாங்கள் உரையாற்றியிருக்கிறோம். ஆனால், இம்முறை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்திற்கு முன்னுரிமை கொடுத்து, அந்த Master Plan-ஐக் கொண்டுவருவேன் என்று சொல்லியிருப்பதை நான் உண்மையிலேயே வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இது ஒரு நீண்ட காலத் திட்டம். காவிரிப் படுகையில் கடந்த காலங்களில் என்ன நடந்திருக்கிறது என்று சொன்னால், பாசனமும் வடிகாலும் ஒன்றாகவே இருக்கின்றன. இரண்டும் ஒன்றாக இருக்கிற காரணத்தால் வெள்ளக் காலங்களில் மழை நீரைத் தேக்கி வைக்கக்கூடிய நிலைமை அந்த மாவட்டத்தில் இல்லை. அதனால், வரக்கூடிய தண்ணீரை விவசாயிகள் சிக்கனமாகப் பயன்படுத்தக்கூடிய நிலைமையும் இல்லாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதற்காக வடிகால் என்ற முறையிலே தனியாக ஒரு பிரிவை உருவாக்கி, அதற்கான கால்வாயை நீங்கள் வெட்ட வேண்டும். அதற்காக ஒரு பொறியாளருடைய திட்டத்தை உருவாக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் சொல்லப்போவது என்பது—ஏதோ விவசாயிகளுக்கு மட்டும் அந்த காவிரி நீர் வேண்டும், நீர் ஆதாரம் வேண்டும் என்பதற்காக போராடவில்லை—இன்றைக்கு இருக்கக்கூடிய நிலையை நாம் பார்த்தோம் என்று சொன்னால், தொழிற்சாலைகளுக்கு, குடிநீருக்கு முற்றிலுமாக அதைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டிய அவசியம் இருக்கிறது. 40 சதவிகிதம்தான் விவசாயிகள் பாசனத்திற்காகப் பயன்படுத்துகிறார்கள். 60 சதவிகிதம் குடிதண்ணீருக்கும், ஆலைகளுக்கும், கட்டடப் பணிகளுக்கும் மக்களுடைய உயிர்நாடிப் பிரச்சினைகளுக்கும் தேவையானதுதான். இந்த நிதிநிலை அறிக்கையை ஆதாரமாகக் கொண்டு பல கோரிக்கைகள் இதிலே வைக்கப்பட்டிருக்கின்றன. அந்த வகையில் அந்தப் பணிகளை விரைந்து மேற்கொண்டு அந்த வடிகாலை—இரண்டு முறைகளை—உருவாக்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 1—4.5*

நான் ஒட்டுமொத்தமாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால், 30 கால்வாய்களை, அணைகளை, நீர்நிலைக் குட்டைகளை அமைப்பதற்கான திட்டங்கள் பொதுப் பணித் துறையினுடைய



நிதியாதாரங்களிலே இருக்கின்றன. சென்ற அரசு இதைச் செய்யவில்லை என்று சொல்லமுடியாது. அநேகமாக, இவற்றைத் தொடங்கி, பாதியிலேயே விட்டிருக்கிறார்கள். மீதத்தை முழுமையாக நிறைவேற்றினோம் என்று சொன்னால், தமிழ்நாட்டிற்கு நிரம்ப நீர் ஆதாரங்களைக் கொண்டுவருவதற்கான வாய்ப்புகளை உருவாக்க முடியும். நான் வரிசையாகப் படிப்பதற்கு நேரமில்லை.

அதேபோன்று இன்றைக்கு தமிழ்நாட்டில் இருக்கிற 8939 ஏரிகளில் பொதுப் பணித் துறையின் பராமரிப்பில் 8866 ஏரிகள் இருப்பதாகக் கணக்கிலே இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. இதைப் பார்த்தோம் என்று சொன்னால், பல கால்வாய்கள் இருக்கின்ற இடமே தெரியாது. இந்தக் கணக்கை பழைய குறிப்பிலேயிருந்து நம்முடைய பொதுப் பணித் துறையினுடைய பொறியாளர்கள் இந்த Policy Note-லே கொடுத்திருப்பதாக நான் கருதுகிறேன். பல இடங்களில், இதுபோன்று அந்த ஏரிகள் இருக்கின்ற இடமே தெரியாத அளவிற்கு, ஆக்கிரமிப்புகள் செய்து, கட்டடங்களும் கட்டப்பட்டதன் விளைவாக, அவை பழுதாகிவிட்டன. அவற்றை மீண்டும் கண்டறிந்து, ஆக்கிரமிப்புகளை அகற்றி, கரைகளை நீங்கள் பலப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோன்று கிணறுகள் குறித்து ஒரு கணக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆழ்துளைக் கிணறுகள் பற்றி எடுக்கப்பட்ட கணக்குகளில், அநேகமாக 1848 கிணறுகள் தமிழ்நாட்டிலே இருப்பதாகவும், 140 கிணறுகள் மட்டுமே வறண்டு போய் இருப்பதாகவும், ஒரு கணக்கு சொல்லப்பட்டிருக்கிறது. இதை எந்த அடிப்படையிலே நம்முடைய பொறியாளர்கள் சொல்கிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. இது உண்மை நிலைக்கு மாறாக அமைந்திருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், முற்றிலும் பல ஆயிரக்கணக்கான கிணறுகளை தமிழகத்திலே மூடிவிட்டார்கள். கிணறுகள் பயன்படுத்தாமல் வறண்டுபோய் இருக்கின்றன. அதற்கு மாற்றுத் திட்டங்களை நீங்கள் உருவாக்க வேண்டும்.

அதுபோன்று கிருஷ்ணா குடிநீர் வழங்கும் திட்டம். அரசு இன்று அதற்கான ஏற்பாட்டை அறிவித்திருப்பதை நான் வரவேற்கிறேன். எனவே அதுகுறித்து உள்ளுக்குள்ளே போய் நான் நீண்ட நேரம் பேச விரும்பவில்லை. அதுகுறித்து நீண்ட நேர விவாதம் இங்கே நடைபெற்றிருக்கிறது. நம்முடைய தமிழக அரசு வழங்க வேண்டிய பங்கான ரூ. 554.13 கோடியில், ரூ. 512.00 கோடி வழங்கப்பட்டிருப்பதாக

[திரு. ஜி. பழனிசாமி] [2001 செப்டம்பர் 8

அரசினுடைய கொள்கைக் குறிப்பிலே இருக்கிறது. இதிலே, நான் கேட்டுக் கொள்ள விரும்புவது, இந்த உண்மை நிலையை அறிய, பொறியாளர்கள், சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருக்கின்ற குழு ஒன்று, நேரடியாகச் சென்று பார்த்து, அரசுக்கு உண்மை நிலையை அறிவித்து ஓர் அறிக்கையையும் சமர்ப்பிக்க வேண்டும். அதற்கு ஆளும்கட்சி, எதிர்க்கட்சி என்ற பேதமில்லாமல், சட்டமன்றத்திலே இருக்கின்ற பொறுப்பான கட்சிகளின் சார்பாக நேரடியாக அந்த கிருஷ்ணா நதிநீர்த் திட்டத்தைப் பார்வையிடுவதற்கு அரசு ஒரு குழுவை அனுப்ப வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய கணக்கிற்காக நான் ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு தமிழ்நாட்டிலே இருக்கிற மொத்த பரப்பளவு, அநேகமாக விவசாயத்திற்குத் தேவையானது 325 இலட்சம் ஏக்கர். இன்றைக்கு சாகுபடிக்கு 150 இலட்சம் ஏக்கர் நிலங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. இதிலே, பாசனம் இல்லாமல், பூர்த்தி செய்யாமல் இருப்பது 85 இலட்சம் ஏக்கர் நிலங்களில் குறைந்தும், கூடியும் இருக்கிறது. ஆக, 65 இலட்சம் ஏக்கர் பாசன வசதிக்காக, கிணறு பார்த்த நிலத்திலே பாசனம் செய்யக்கூடிய நிலங்கள் இருக்கின்றன. இதிலே, காவிரிப் பாசனத்தைப் பொறுத்தமட்டில், 25 இலட்சம் ஏக்கர் சாகுபடிக்கு லாயக்காக இன்றைக்குப் பாசன திட்டங்களில் இருந்துகொண்டிருக்கின்றன. இதிலே, பாசனக் குறைவால், ஏற்பட்டிருக்கின்ற அபாயத்தினால், இன்று காவிரி நதி நீர்ப் பாசனப் பிரச்சினைகள் தீராத காரணத்தினால், பல ஆறுகளும், ஏரிகளும் இன்றைக்கு முற்றிலுமாகப் பயன்படாத நிலையிலே இருந்துகொண்டிருக்கின்றன.

*பிற்பகல் 1—50*

சமீபத்தில், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்த காலத்தில், இந்தப் பாசனத் திட்டங்களைச் செயல்படுத்தி, ஆழப்படுத்த வேண்டும், அகலப்படுத்த வேண்டும், தூர்வார வேண்டும் என்று கோரிக்கைகள் முதலிலே கொடுக்கப்பட்டு, அதை என்னுடைய தொகுதியிலே தொடக்கமாகச் செய்தார்கள். அதில் வளவனாறு என்ற ஒரு ஆறு. அந்த ஆற்றிலே முதலிலே இதைச் செய்வதற்கான நடவடிக்கையில், இயந்திரத்தைப் பயன்படுத்தியதன் மூலமாக இன்றைக்கு தமிழ்நாடு முழுவதும் திட்டங்களைச் சரியாகச் செயல்படுத்த முடியும் என்ற ஒரு நிலை வந்தது. அப்படி வந்த பின்னால், இன்றைக்கு இருக்கிற



2001 செப்டம்பர் 8] [திரு. ஜி. பழனிசாமி]

நிலை என்னவென்று சொன்னால், கடந்த காலத்தில் செய்யப்பட்ட பணிகள் முதல் ஆண்டு சரியாக நடைபெற்றன. அடுத்த ஆண்டுகளில் முறையாக நடைபெறாமல் போனதன் விளைவாக, அந்தக் காவிரிப் படுகையிலே இருக்கக்கூடிய ஆறுகள், கால்வாய்கள், முற்றிலும் சரியாகத் தூர்வாரப்படாமல் போயின. ஆண்டுதோறும் செய்யவேண்டுமென்று சொன்னால், அரசாங்கம் tender மூலமாக அந்தப் பணிகளை விடக்கூடாது. அதிகாரிகள், நம்முடைய department மூலமாக இன்றைக்கு புல்டோசர், பொக்ளைன் போன்ற இயந்திரங்களைப் பயன்படுத்தி அரசாங்கத்தின் மூலமாக செய்தால்தான் ஆறுகளையும், குளங்களையும் கால்வாய்களையும் முற்றிலுமாகச் சரியாகத் தூர்வார முடியும். அந்த வகையிலே அதை நீங்கள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்று தமிழ்நாட்டில் ஒரு பக்கத்தில் வறட்சி, ஒரு பக்கத்தில் வெள்ளம் என மாறி, மாறி இன்றைக்குத் தொடர்ந்து வந்துகொண்டிருக்கின்றன. இன்றைக்கு மட்டுமல்ல; தமிழ்நாட்டு மக்களிடத்திலே பல ஆண்டு காலமாக இந்தப் பிரச்சினை இருந்துகொண்டிருக்கிறது. இதற்கு மத்திய நீர் ஆராய்ச்சிக் கழகத்தின் சார்பாக ஏற்கெனவே தமிழக அரசுக்கு எச்சரிக்கையாக, கடிதங்கள் அனுப்பப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. தமிழ்நாட்டில் தண்ணீர் குறைவாக வருகின்ற காரணத்தால், தமிழ்நாட்டினுடைய வறட்சி நிலைமையைப் போக்க மத்திய, மாநில அரசுகள், குறிப்பாக இதுசம்பந்தமான நீண்ட ஆய்வுகளைக் கடந்த 50 ஆண்டு காலமாகச் செய்யாததனுடைய விளைவு, இன்றைக்கு மத்தியிலே இருக்கிற ஆட்சியும் சரி, அல்லது மாநிலத்திலே வந்த ஆட்சிகளும் சரி, ஆட்சியைப் பாதுகாப்பதிலே குறியாக ஐந்தாண்டு காலம் இருந்தார்களே தவிர, இதுபோன்ற நீண்ட காலத் திட்டங்களை நிறைவேற்றுவதிலே முழுக் கவனம் செலுத்தப்படாததன் விளைவுதான் இன்றைக்கு நாம் தண்ணீருக்குத் தத்தளிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. இதில் அமைச்சர் அவர்கள் முழுமையாகக் கவனம் செலுத்தி, எல்லா அணைகளையும் பூர்த்தி செய்து, அணைகளைக் கட்டி, மழை நீர் வீணாகக் கடலிலே சேர்வதைத் தடுப்பதற்கு ஒரு திட்டத்தைக் கொண்டு வந்திருப்பதை உண்மையிலேயே பாராட்டுகிறோம். அந்த வகையிலே ஒரு நல்ல திட்டத்தை இன்றைய தினத்திலே கொண்டு வந்திருக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) முடித்துக்கொள்கிறேன். 1967-க்குப்பிறகு தமிழகத்திலே இருக்கிற நீர்நிலைக் குட்டைகள் முற்றிலுமாக ஆக்கிரமிக்கப்பட்டு வந்திருக்கின்றன. சென்னையிலே பல்வேறு இடங்களிலே இருக்கக்கூடிய அணைகளெல்லாம் இன்றைக்கு குடிமராமத்து செய்யாமல்

மூடப்பட்டிருக்கின்றன. அவற்றையெல்லாம் நான் இப்போது பேச முடியாது. நேரம் இல்லை. ஆகையினாலே வார்த்தையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள். நீங்கள் வழக்கமாகவே சுருக்கமாகப் பேசக்கூடியவர். இன்று இன்னும் கொஞ்சம் சுருக்கமாகப் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகச் சுருக்கமாக பல்வேறு விஷயங்களையெல்லாம் சொல்ல வேண்டியிருந்தாலும், இந்த அறிக்கையிலே இருக்கிற பல விஷயங்களிலே பல்வேறுவிதமான கருத்துகள் இருந்தாலும், அதைச் சொல்வதற்கு நேரம் இல்லாத காரணத்தினால், சுருக்கமாக அந்த மாவட்டத்திலே இருக்கக்கூடிய சிலவற்றை மட்டும் இங்கே மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

குறிப்பாக, பூந்துறை பாலம். அது ஒரு முக்கியமான பிரச்சினை. அதுபோல பரக்குன்று என்ற இடத்திலே ஒரு பாலம் உடைந்து இரண்டு ஆண்டுகள் ஆகின்றன. அதைச் சீரமைப்பதற்கான உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். அதுபோன்றுதான், சாலைகளைப் பொறுத்தமட்டில் ஏற்கெனவே கடந்த ஆட்சிக் காலத்திலே பல முறை இங்கே சொல்லியிருக்கின்றோம். நம்முடைய தேசிய நெடுஞ்சாலையானாலும் சரி, நம்முடைய நெடுஞ்சாலையானாலும் சரி, கிராமச் சாலைகளானாலும் சரி, ரப்பரைப் பயன்படுத்தி, இந்தச் சாலைகளை மேம்படுத்தினால் 10 ஆண்டு காலம் அந்தச் சாலைக்கு எந்தவிதமான சிதைவும் இல்லாமல், அந்தச் சாலைகள் பாதுகாக்கப்படும். அந்த வகையிலே, பரீட்சார்த்தமாக சென்னை மாநகருக்குள்ளே அந்தச் சாலைகளைப் போடுவதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். அந்தச் சாலைகளைப் போடும்போது, ஒரு 'Arc'-ஐப் போல அதைச் செய்ய வேண்டும். மேலே ஒரு மழைத் துளி விழுந்தால் பக்கத்திலே செல்ல வேண்டும். அந்த வகையிலே நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோன்றுதான் கடலோரக் கிராமத்திலே, மார்த்தாண்டம் துறையிலிருந்து, பூந்துறை, சின்னத்துறை, தூத்தூர், வெள்ளவிளை பகுதிகளிலே கடலரிப்பைத் தடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். நம்முடைய துறைமுகத்தைப் பொறுத்தமட்டிலே இருக்கக்கூடிய முக்கியமான பிரச்சினை குளச்சல் துறைமுகம். அது ஒரு சிறிய துறைமுகம் அல்ல. இயற்கையாகவே ஆழமான பகுதி. சரியாகக்



கட்டினால், நம்முடைய கொச்சின் துறைமுகத்தைவிட மிகப் பெரிய துறைமுகமாக இருக்கும். அதற்கு B.O.T. Scheme என்றெல்லாம் சொன்னார்கள். ஆனால், மத்திய அரசாங்கம் இதற்கு எவ்வளவு நிதியைத் தருகிறது என்பதுதான் என்னுடைய கேள்வி. அதற்கு மத்திய அரசாங்கத்தை அணுகி தேவையான நிதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அந்த வகையிலே நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பிற்பகல் 1—55

பேச்சிப்பாறை அணை 100 ஆண்டைத் தாண்டிவிட்டது. அதற்குப் பக்கத்திலே சார்-அணை என்று சொல்லக்கூடிய ஒரு பாதுகாப்பு அணையைக் கட்ட வேண்டும். தூர் வாருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

அதுபோன்று நம்முடைய கோவை மாவட்டத்திலே ஒன்றிபுதூர் இரயில்வே மேம்பாலம் கட்டுவதற்குத் தீர்மானித்திருக்கின்றார்கள். ஆனால் அது நீண்ட காலமாகக் கிடப்பிலே உள்ளது. வாலாங்குளம் மேம்பாலம் கட்டுவதற்கும் அதுபோன்று உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

திண்டுக்கல், வெள்ளோடு பகுதியிலே அணை கட்டுவதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். மதுரை பேருந்து நிலையத்திலிருந்து இரயில்வே நிலையம் போகும் இணைப்புப் பாலம் கட்ட உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். மதுரையில் மாரியம்மன் தெப்பக்குளத்தில் மழை நீரைப் பாதுகாப்பதற்கான உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

அதுபோன்று நீலகிரி பகுதியிலே மலைப் பகுதியான இடத்தில் ஆதிவாசிகள் குடியிருக்கின்ற பகுதியில் சாலைகள் வேண்டும்.

அதுபோன்று நம்முடைய துறையிலே வேலை செய்கின்ற ஊழியர்கள் 36 பேர் நிரந்தரமாக்கப்படாமல் இருக்கிறார்கள். அதற்கு மேலே சாலைப் பணியாளர்கள் என்று நாம் ஆயிரத்திற்கும் அதிகமானவர்களை எடுத்திருக்கின்றோம். அவர்களை நிரந்தரமாக்கி, சாலை பழுதுபடும்போதெல்லாம் அவற்றைப் பாதுகாப்பதற்கான உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அவர்களை நிரந்தரமாக்க வேண்டும். இப்போது அவர்களுக்குத் தொகுப்பு ஊதியம் கொடுத்து வருகின்றோம். அதற்குப் பதிலாக அவர்களுடைய சம்பளத்திலே சற்று உயர்வை ஏற்படுத்தி அந்த வேலைகளையும் துரிதப்படுத்த வேண்டும். அவர்களையும் பாதுகாக்க வேண்டும்.

அதுபோன்று சாலைகளைப் பொறுத்தமட்டிலே, நெடுமண்காடு சாலை, அதாவது ஆரல்வாய்மொழி-நெடுமண்காடு சாலை என்று சொல்லியிருக்கின்றார்கள். நெட்டாரிலிருந்து களியல் வரையுள்ள சாலை என்பது, ஏற்கெனவே இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலே அதனுடைய estimate எல்லாம் எடுக்கப்பட்டு, tender முடிக்கப்பட்ட பின்னாலும் அந்த வேலைகள் நடைபெறவில்லை. இப்படிப் பல்வேறு சாலைகள். அதிலே இன்னொரு விஷயம் என்னவென்று சொன்னால், நபார்டு வங்கியிலிருந்து நாம் கடனைப் பெற்றுச் செய்கின்றபோது, அதனுடைய பொறியாளர்கள், இந்த வகையிலேதான் சாலைகள் இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். அதிலே கோடிவளை பகுதியிலிருந்து மங்காடு வரையிலும் அப்படி ஒரு வேலையைச் செய்தார்கள். ஒரு வருடம் முடிவதற்கு முன்னாலேயே அந்தச் சாலைகள் முழுமையாக இன்று சாலைகளாக இருக்கின்றனவா அல்லது ஓடைகளாக இருக்கின்றனவா என்று கேட்கக்கூடிய ஒரு நிலை இருக்கிறது.

அதேபோன்று நம்முடைய கடலோரச் சாலை. அது இன்று கைவிடப்பட்ட நிலையில் முழுமை பெறாமல் உள்ளது. அதுபோன்று மங்காடு பகுதியிலே சாலையிலே மூழ்குபாலத்தை நம்முடைய கட்டுமானக் கழகம் செய்து அம்போ என்று விட்டிருக்கிறார்கள். யார் செய்வது என்பதுதான் கேள்வி.

அதேபோன்று நம்முடைய குழித்துறை ஆற்றின் குறுக்கே வருகின்ற ஒரு செக்-டேமைக் கேட்டிருக்கின்றோம். சம்பாத்துப் பகுதியிலே குழித்துறையிலே ஒரு செக் டேம். அதன் காரணமாக நிலத்தடி நீரை அதிகப்படுத்த முடியும். பல்வேறு திட்டங்களையெல்லாம் நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவித்திருந்தாலும்கூட, அதிலே கானஞ்சேரியிலே ஒரு திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். எந்தவகையிலே நீரைப் பயன்படுத்துவது என்பது யோசனைக்குரிய விஷயம் என்பதுதான் என்னுடைய கருத்து. ஏனென்றால், கானஞ்சேரிக்கும் ஆற்றுக்கும் ரொம்ப தூரம் இருக்கிறது. அந்தப் பகுதியிலே எப்படி அது சாத்தியம் என்பது தெரியவில்லை. பழைய ஒரு திட்டம் இருக்கிறது. விளாத்துறையிலே இருக்கின்ற நீர் ஏற்றும் திட்டம். மீண்டும் அதனைப் பரிசீலனை செய்து அதனைச் செய்வதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

அதேபோல இங்கே எனக்கு முன்னால் பேசியவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அப்பாவு அவர்கள், குழித்துறை ஆற்றுப் பாலத்திற்கான நில ஆர்ஜிதம்



செய்யவில்லை என்று சொன்னார்கள். தவறான தகவல். நில ஆர்ஜிதம் செய்து இரண்டு ஆண்டுகள் முடிந்தபின்னாலும் அந்தப் பாலத்திற்கு மத்திய அரசாங்கம் கொடுக்க வேண்டிய நிதியைத் தரவில்லை. Estimate, sanction வரவில்லை. அந்தவகையிலே அதையும் பார்க்க வேண்டும். எனவேதான், இந்த வகையிலே பல்வேறு பிரச்சினைகளை நான் பல கடிதங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம், அந்த மாவட்டத்தினுடைய பொதுவான பிரச்சினைகள் என்ற முறையிலே கொடுத்திருக்கின்றேன்.

மாம்பழத்துறை அணையைப் பற்றிச் சொன்னார்கள். 3 ஆண்டுகளுக்கு முன்னாலே அதனைத் தீர்மானித்திருந்தாலும், அந்தக் காலகட்டத்திலே நிதி ஒதுக்கப்படவில்லை. அதற்கான நிதியை இந்த அரசு, இந்த ஆண்டிலே இல்லையென்றாலும், அடுத்த ஆண்டிலாவது ஒதுக்கித் தர ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன.

பொதுவாக, குளங்களை ஆழப்படுத்துவது, ஏரிகளைப் பலப்படுத்துவது என்ற ஒரு திட்டம் இருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்திலே மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரவர்களுடைய தொகுதியிலே நூற்றுக்கணக்கான குளங்கள் இருக்கின்றன. அங்கேயிருக்கின்ற குளங்களினுடைய அளவுகள் என்னவென்பது எல்லாம் அவருக்குத் தெரியும். எனவேதான், அவற்றை ஆழப்படுத்துவதும், அகலப்படுத்துவதும் தேவையாக இருக்கிறது.

அதுபோன்றுதான் நம்முடைய இன்னொரு பகுதியிலே இருக்கின்ற குளங்களினுடைய நிலையும் இருக்கிறது. எனவே, குளங்களை ஆழப்படுத்துவது, அகலப்படுத்துவது, ஏரிகளை ஆழப்படுத்துவது, அகலப்படுத்துவது போன்ற இப்படிப்பட்ட நிலைகளைக் கையாள வேண்டும். நெய்யாறு இடைநிலைக் கால்வாயில் ஒன்றேகால் கோடியிலே உலக வங்கியிலிருந்து கடனைப் பெற்று சற்று வேலை நடந்தது. அது முழுமைபெற வேண்டுமென்று சொன்னால் 6 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. அதனுடைய அனுமதியையும் வழங்க வேண்டுமென்று கேட்டு, இந்தக் குறுகிய நேரத்திலே இந்த விஷயங்களைச் சொல்வதற்கான வாய்ப்பைத் தந்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

*பிற்பகல் 2-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் பதிலுரை. (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கட்சி உறுப்பினர் பேச வாய்ப்பு கோருகிறார்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு கேள்வி மட்டும் கேட்க வேண்டுமென்றால் கேளுங்கள். *(குறுக்கீடுகள்)* அமைச்சர் பதில் சொன்ன பிறகு வேண்டுமென்றால் கேளுங்களேன்! அமைச்சர் பதில் சொன்ன பிறகு கேளுங்கள். ஏதாவது விளக்கம் இருந்தால் கேளுங்கள்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தென் சென்னை மாவட்ட வழக்கறிஞர் பிரிவின் இணைச் செயலாளராக இருந்த என்னை... *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் உரையை முடித்துவிட்டுப் போக வேண்டும் என்கிறார்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** சென்னை மாவட்ட வழக்கறிஞர்கள் சங்கச் செயலாளராகவும்... *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பேசி முடித்ததற்குப் பிறகு, ஏதாவது பிரச்சினை இருந்தால் கேள்வியாக கேட்கச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாநில அளவிலே, வழக்கறிஞர்கள் பிரிவின் இணைச் செயலாளராக இருந்த என்னை மாநிலச் செயலாளராகவும்... *(குறுக்கீடுகள்)*

**திரு. போளூர் வரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வரதன், ஏதாவது பிரச்சினை இருந்தால் கேளுங்கள். அவையிலே அறிவித்தாகிவிட்டது.

**திரு. போளூர் வரதன்:** பிரச்சினையைப் பற்றி எல்லாக் கட்சிகளையும் பேச விட்டிருக்கிறீர்கள். காங்கிரஸ் கட்சி என்ற முறையிலே எங்களுக்குப் பேசுவதற்கு நீங்கள் வாய்ப்புக் கொடுக்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லாக் கட்சிகளும் பேசவில்லை. *(குறுக்கீடுகள்)*



**திரு. போளூர் வரதன்:** எல்லாக் கட்சிகளும்தானே இங்கே பேசினார்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் ஏதாவது கேள்வி கேட்க வேண்டுமென்றால் கேளுங்கள்.

**திரு. போளூர் வரதன்:** இல்லை, அப்படி ஒன்றும் பேச வேண்டுமென்ற அவசியம் எங்களுக்கு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படி என்றால் இரண்டு நிமிடங்கள் பேசுங்கள். *(குறுக்கீடு)*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** த.மா.கா. ஏற்கெனவே பேசியாகிவிட்டது.

**திரு. போளூர் வரதன்:** த.மா.கா.வும், காங்கிரசும் ஒன்று அல்ல. *(குறுக்கீடு)*

**திரு. சி. ஞானசேகரன்:** எங்கள் கட்சி உறுப்பினருக்குப் பேச வாய்ப்புக் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதை அவை அலுவல் ஆய்வுக் குழுவில் வைத்து இனிமேல் விகிதாச்சாரவாரியாக, ஆளுங்கட்சிக்கு இத்தனை பேர் பேசலாம்; த.மா.கா.விலே இத்தனை பேர் பேசலாம்; தி.மு.க.விலே இத்தனை பேர் பேசலாம் என்று வரையறை செய்து, ஒரு முடிவு செய்துவிடுவோம். (மேசையைத் தட்டும் ஒலி) அதுவரைக்கும் நான் உங்களுக்குப் பெருந்தன்மையோடு அனுமதி வழங்கியிருக்கிறேன். திரு. போளூர் வரதன், இப்போது ஏதாவது பிரச்சினையை மட்டும் பேசி முடியுங்கள் நீங்கள். *(குறுக்கீடு)*

**திரு. சி. ஞானசேகரன்:** எங்கள் கட்சியில் ஒருவர்தான் பேசியிருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்றைக்கு ஒரு கட்சியின் சார்பாக ஒருவரைத்தான் பேச அழைத்திருக்கிறேன். தி.மு.க. சார்பாக ஒருவர்தான் பேசியிருக்கிறார். (குறுக்கீடு) தி.மு.க. உறுப்பினர்கள் உங்களைவிட அதிகம். அந்தக் கட்சியில் ஒருவர்தான் பேசியிருக்கிறார்.

**திரு. சி. ஞானசேகரன்:** ஒரு மணி நேரம் பேசியிருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படியில்லை. ஒரு மணி நேரம் எல்லாம் அவர் பேசவில்லை. அவர் குறுக்கீடுகள் எல்லாம் போக கடைசியாக, கூட்டிக் கழித்துப் பார்த்தால் 13 நிமிடங்கள்தான் பேசியிருக்கிறார். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. நான் அதை அனுமதிக்க முடியாது. திரு. போளூர் வரதன் 2 நிமிடங்களிலே பேசி முடியுங்கள். (குறுக்கீடு) அனுமதிக்க முடியாது.

**திரு. போளூர் வரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பேசி முடித்ததற்குப் பிறகு ஏதாவது கேள்வி இருந்தால் கேட்கலாம். நான் அதற்கு அனுமதித்திருக்கிறேன். அமைச்சர் முடித்ததற்குப் பிறகு ஏதாவது சிக்கல் இருந்தால் கேட்கலாம்.

**திரு. போளூர் வரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறை, கட்டடங்கள், சாலைகள், நீர்ப் பாசனத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகள்மீது பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம், இந்தத் துறைகளிலே இருக்கிற நிறைகள் குறைகளைப் பற்றிப் பேசினார்கள். மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் சாத்தூர் இராமச்சந்திரன் அவர்கள் பேசுகின்றபோது, கலைஞர் அவர்கள், பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்த நேரத்தில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வரதன், கொஞ்சம் நான் சொல்வதைக் கேளுங்கள். சிக்கல்களுக்குள் ஏதும் போகாமல், ஆக்கபூர்வமாக ஏதாவது சொல்ல வேண்டிய கருத்தை மட்டும் சொல்லி முடியுங்கள். அமைச்சர் காவிரி நீர்ப் பிரச்சினை குறித்த கூட்டத்திற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். ஆகையினால் சொல்ல வேண்டிய கருத்துகளை மட்டும் சொல்லி முடியுங்கள்.

**திரு. போளூர் வரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்ல வருவது அதுதான். Controversy-க்கு நான் போகவில்லை. சொல்வதற்குக் காரணம், உங்களுடைய நிலைமை எனக்குப் புரிகிறது. 3 நிமிடங்களுக்குள்ளே முடித்துக் கொள்கிறேன். 5 நிமிடங்கள்கூட தேவையில்லை.



பல திட்டங்களை அவர்கள் கொண்டுவந்தார்கள். உண்மைதான். 100 கோடி ரூபாயை வைத்துக்கொண்டு, இந்த அவையிலே, பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் உருவாக்கிய திட்டங்கள், படிப்படியாக வளர்ந்து இன்றைக்கு 27 ஆயிரம் கோடி ரூபாய் நிதிநிலை அறிக்கையாக தமிழகம் பெற்றிருக்கிறது என்று சொன்னால், இது தமிழகத்தினுடைய சாதனை அல்ல; இந்த நாட்டினுடைய வரலாறு, இந்த நாட்டினுடைய ஜனநாயகம் எந்த அளவுக்கு முன்னேறி இருக்கிறது என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். அப்படிப் பார்க்கிறபோது, நீங்கள் குறிப்பேட்டிலே சொல்லியிருக்கிறீர்கள். 500 பேரிலே இருந்து ஆயிரம் பேர் மக்கட்தொகை இருக்கின்ற கிராமங்களுக்கு ஒன்றரை கிலோ மீட்டருக்கு உள்ளாக தார்ச் சாலை அமைத்துக் கொடுப்போம் என்று சொல்லியிருக்கிறீர்கள். அதிலேயும் 50 சதவிகிதம் தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்கின்ற பகுதியாக இருக்க வேண்டுமென்று இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், இதே குறிப்பிலே நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். கடந்த ஆண்டு வெறும் 94 கிராமங்கள் மட்டுமே அதிலே எடுக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்லியிருக்கிறீர்கள். 12,619 கிராமப் பஞ்சாயத்துக்கள் இருக்கின்ற இந்த நாட்டில், 40 ஆயிரம் கிராமங்கள் நிறைந்து இருக்கின்ற இந்த நாட்டில், 94 ஊர்களுக்கு மட்டும்தான் இது செயல்படுத்தப்பட்டிருக்கிறது என்று சொன்னால், இது சாதாரண ஏழை மக்களுக்கு நாம் செய்கிற துரோகமா, இல்லையா? எதை எடுத்துக்கொண்டாலும், நகர்ப்புறங்கள். இங்கே சொல்லப்பட்டிருக்கிறது 4 ஆயிரம் கிலோ மீட்டர் National Highways, 7 ஆயிரம் கிலோ மீட்டர் Highways, 7,500 கிலோ மீட்டர் District Highways என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் கிராமங்கள் என்று பார்க்கிறபோது, 94 கிராமங்கள் ஏற்கெனவே செய்யப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டில் 110 கிராமங்கள் மட்டும்தான் எடுப்போம் என்று இந்தக் கொள்கைக் குறிப்பிலே சொல்லியிருப்பதைப் பார்க்கும்போது, கிராமங்கள் புறக்கணிக்கப்பட்டிருப்பதாக நான் நினைக்கிறேன்.

*பிற்பகல் 2—05*

எங்கள் அருமைத் தலைவர் ராஜீவ் காந்தி அவர்கள் பஞ்சாயத்து ராஜ் சட்டத்தைக் கொண்டுவருகின்றபோது, கிராம முன்னேற்றம் இந்த நாட்டினுடைய முன்னேற்றம் என்று கருதினார்கள். ஆகவேதான் பல சட்டங்களைக் கொண்டுவந்து பஞ்சாயத்து ராஜ் சட்டத்தை உருவாக்கி, இன்றைக்கு பஞ்சாயத்து, பஞ்சாயத்து என்று பேசுகின்றோம், பணம் என்று பேசுகின்றோம், திட்டங்கள் என்று பேசுகின்றோம். அந்தத் திட்டம் உரிய முறையிலே இதிலே மதிக்கப்பட்டிருக்கிறதா என்று சொன்னால் கிராமங்கள் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன.

அதுமட்டுமல்ல. என்னுடைய தொகுதியிலே கொப்பநத்தம் அணை. கடந்த கால ஆட்சியிலே நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு, பணம் பட்டுவாடா செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், அணை கட்டுவதற்கு பணம் ஒதுக்கவில்லை. நீங்கள் ஆட்சிக்கு வந்த பின்னாலும் அதைப் புறக்கணித்துவிட்டால் அந்த கிராமத்தில் இருக்கின்ற மக்கள் நிலை என்ன? அது மலைப் பகுதி, தண்ணீர் இல்லாத பகுதி. அந்த ஜவ்வாது மலையிலிருந்து வருகின்ற தண்ணீர் எல்லாம் இன்றைக்கு செய்யாற்றின் வழியாகக் கடலிலே கலக்கின்றது. அங்கே அணை ஏற்படுத்துவதன் மூலம் செய்யாறு, போளூர், திருவண்ணாமலை போன்ற தாலுகாக்களுக்கு குடிநீர் கொடுக்க முடியும். விவசாயத்தைப் பெருக்க முடியும். அந்த அணைத் திட்டத்தை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

செங்கம் நகர் மலையை ஒட்டி இருக்கின்ற நகரம். Bazaar வழியாக, ஒரே வழியாகத்தான் எல்லோரும் போக வேண்டும். பள்ளிக்குப் போனாலும் அப்படித்தான், வெளியூருக்குப் போனாலும் அப்படித்தான் பெங்களூர் போனாலும், ஈரோடு போனாலும், தருமபுரி போனாலும், சேலம் போனாலும் ஒரே வழியிலேதான் போகவேண்டும். அங்கு பெரிய நெரிசல் இருக்கிறது. அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுகின்றன. பலமுறை எனக்கு முன்னால் இருந்தவர்கள் வற்புறுத்தியிருக்கிறார்கள். நானும் வற்புறுத்தியிருக்கிறேன். அந்தக் கிராமத்திற்கு ஒரு புறவழிச் சாலையை By–pass road–அவசியம் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். போளூர்–செங்கம் சாலை மாவட்ட அளவில் இருக்கின்ற சாலை. அந்தச் சாலைக்கு கடந்த 3 வருடமாக estimate போட்டுக்கொண்டிருக்கிறார்கள். கடந்த கால ஆட்சியிலே, ஒரு சாலையை widen பண்ணுவதற்கு 3 வருடமாக அவர்கள் estimate போடுகிறார்கள். இந்த ஆண்டும் நீங்கள் என்ன பண்ணப் போகிறீர்கள் என்று எனக்குத் தெரியவில்லை. இப்படி கிராமச் சாலைகளை இணைக்கின்ற மாவட்டச் சாலைகள், estimate, estimate என்று சொல்லி ஒரு ஆட்சியே முடிந்து போயிற்று. இந்த நிலைமைகளை மக்கள் மத்தியிலே நாங்கள் செல்கின்றபோது எப்படிச் சொல்வது? அந்தச் சாலையிலே கடந்த காலத்திலே பொதுமக்கள் ஏர் கட்டி உழுது எள்ளு விளைவித்திருக்கிறார்கள். அந்தச் சாலையில் அப்படிப்பட்ட நிலை இருக்கிறது. அந்தச் சாலையை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. பொதுவாக மலைப் பகுதி. செங்கத்திலிருந்து ஜமுனாபுரம் போக வேண்டுமென்றால் 54 கிலோ மீட்டர். அந்த 54 கிலோ மீட்டரும் மலைப் பகுதி என்பதனால் சாலைகளே கிடையாது.



கிராமங்களுக்கு மின்சாரம் கிடையாது, குடிதண்ணீர் கிடையாது, மருத்துவமனை கிடையாது, ரேசன் கடை கிடையாது. மலையிலே வாழ்கின்ற மக்கள், அன்றைக்கு காட்டுமிராண்டியாக வாழ்ந்தார்கள் என்று சொன்னால், சுதந்திரம் அடைந்து 54 ஆண்டுகள் ஆனபின்னாலும்கூட, இன்றைக்கும் அவர்கள் அதே நிலையில்தான் இருக்கிறார்களே தவிர, நாட்டு மனிதர்களாக ஆக்குவதற்கு நாம் முயற்சிக்கவில்லை. அவர்களுக்கு சாலை வசதி அவசியம் தேவை என்பதை வலியுறுத்துகிறேன்.

வேறு ஒன்றையும் சொல்ல விரும்புகிறேன். கடந்த காலத்தில் அண்ணன் துரைமுருகன் இங்கே இருந்தார். நான் controversy–க்குப் போகவில்லை. ஒன்றை மட்டும் சொல்லி முடிக்கிறேன். தூர் எடுத்தல். ஏரிகளில் தூர் வாருதல், கால்வாய் தூர் வாருதல், நதிகளில் தூர் வாருதல் எல்லாம் மழைக் காலத்திலே மட்டும் செய்ய வந்தார்களே, ஏன்? (மேசையைத் தட்டும் ஒலி) ஒன்றை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். தூர் எடுக்க வேண்டும் என்றால் வெயில் காலத்திலே, கோடை காலத்திலே, கிராமங்களில் இருக்கின்ற ஜனங்களுக்கு வேலைவாய்ப்பு இருக்காது. அந்த நேரத்திலே போய் அந்த வேலையைச் செய்வார்கள். ஆடி, ஆவணி மாதத்திலே போய் ஒரு மழை பெய்த பின்னாலே ஈரம் இருக்கும் என்று சொல்லி மண் அள்ளிப் போடுவார்கள். இவர்கள் எப்பொழுது பார்த்தாலும் செப்டம்பர், அக்டோபர் மாதத்தில் போய் தூர் எடுத்திருக்கிறார்களே ஏன்? எனக்குத் தெரியவில்லை அது. அந்த technic என்ன என்பதை அந்த அதிகாரிகள்தான் சொல்ல வேண்டும். அதுமட்டுமல்ல. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வரதன் 7 மணித்துளிகள் ஆயிற்று. சீக்கிரம் பேசி முடியுங்கள். திரு. துரைமுருகன் உட்காருங்கள். அவர் உரையை முடிக்கப் போகிறார். அவர் சொல்லி முடித்துவிடட்டும். திரு. வரதன் கருத்தைச் சொல்லி முடியுங்கள்.

**திரு. போளூர் வரதன்:** ஒரே ஒரு பாயின்ட், முடித்துவிடுகிறேன். நம்முடைய நிர்வாகத்திலே, தமிழ்நாட்டில் 11 தலைமைப் பொறியாளர்கள் இருக்கிறார்கள். அந்தத் தலைமைப் பொறியாளர்கள் எல்லாம் ஒரே P.W.D. Building–ல் அடைபட்டிருக்கிறார்கள். தனியாக ஆபீசே கிடையாது. ஆயிரக்கணக்கான அதிகாரிகள் இருந்தும்கூட, பொறியாளர் என்று ஒருவர் இருக்கிறார் என்றால், அவருக்கு ஒரு அலுவலகம், அதற்கு ஒரு நிர்வாகம் இருக்க வேண்டும். ஒரே கட்டடத்தில் போட்டு அவர்கள் எல்லாம் சுற்றி வருவதால் அந்த நிர்வாகம் சரிவர செயல்பட முடியவில்லை, எனவே ஒரே இடத்திலேயே எல்லா நிர்வாகப் பொறியாளர்களும் இருப்பதற்கு

அரசு புதிய கட்டடங்களைக் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக சாலைப் பணியாளர்கள். அந்தச் சாலைப் பணியாளர்கள் 8 கிலோ மீட்டருக்கு 2 பேர் என்று போட்டிருக்கிறார்கள். கிட்டத்தட்ட 16,000 பேர்; 64 கோடி ரூபாய் விரயமாக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் செய்த சாதனை என்ன? எண்ணிப் பாருங்கள். கர்நாடகா போங்கள். 'Private Agency' வைத்து அவர்களுக்கு N.M.R. போட்டிருக்கிறார்கள். நம் அரசாங்கத்திலே இன்றைக்கு 64 கோடி ரூபாய் விரயம் செய்து இந்தச் சாலைகளையும் நாம் சரி செய்யவில்லை என்பதுதான் உண்மை. அப்படிப்பட்ட நிலையை மாற்றி, ஒரு புதிய உத்வேகத்தோடு புரட்சித் தலைவியினுடைய ஆட்சி இந்தத் துறையை நல்ல நிலைக்குக் கொண்டுவர வேண்டுமென்று கோரி, வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் நன்றி கூறி அமர்கிறேன்.

*பிற்பகல் 2—10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், அவர் ஒன்றும் தவறாகச் சொல்லவில்லை.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் தவறாக ஒன்றும் சொல்லவில்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. போளூர் வரதன் ஒரு தவறான தகவலைச் சொன்னார். அப்படியில்லை என்றுதான் நான் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தென் சென்னை மாவட்ட வழக்கறிஞர் பிரிவுச் செயலாளராக இருந்த என்னை... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** துரைமுருகன், அதனாலேதான் நான் அன்றைக்கு தொட்டால் சிணுங்கி என்று சொன்னேன். அவர் ஒன்றும் சொல்லவில்லை.



**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பேச்சிற்கு நான் குறுக்கே நிற்பதற்காக வருத்தப்படுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் போளூர் வரதன் அவர்கள் ஏதோ வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ என்பது மாதிரி, மழைக் காலத்திலே தூர் எடுத்தார்கள் என்று சொன்னார்கள். இன்றைக்கும் அதிகாரிகள் இருக்கிறார்கள். எந்த ஏரியிலேயும் தண்ணீர் இருக்கிறபோது தூர் எடுக்கமாட்டார்கள். அந்த விவரம்கூட புரியாமல் சொல்வது நியாயமல்ல. அதைத்தான் நான் சொல்ல வந்தேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் பேசட்டும். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதற்கு மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்களும் அதற்கு விளக்கம் சொல்லிவிட்டார். உட்காருங்கள். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவை நடவடிக்கைகளுக்கு மூத்த உறுப்பினர்கள் கொஞ்சம் ஒத்துழையுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசி முடித்தவுடன் கேளுங்கள். உட்காருங்கள். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** நாடாளுமன்ற உறுப்பினராகவும், இன்று கன்னியாகுமரி சட்டமன்றத் தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினராகவும், அதற்கு மேலாக பொதுப் பணித் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறையினுடைய அமைச்சராகவும் அமர்த்திய மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய பொற் பாதங்களுக்கு காணிக்கையைச் செலுத்தி, இன்று இந்த மாமன்றத்திலே சில கருத்துக்களை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய சட்டமன்ற உறுப்பினர்களெல்லாம், திட்டங்களையெல்லாம் நாங்கள்தான் தீட்டினோம் என்று கூறினார்கள். முன்னாள் பொதுப் பணித் துறை அமைச்சரும் கூறினார். இரு முன்னாள் பொதுப் பணித் துறை அமைச்சர்கள் இங்கே இருக்கிறார்கள். ஒன்றே ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். பொதுப் பணித் துறையிலே அணைகள் எந்தக் காலத்திலே கட்டப்படுகின்றன, அங்கே என்னென்ன பிரச்சினைகள் என்று உங்களுக்கு நன்றாகவே தெரியும். கடந்த ஆட்சிக்

காலத்திலே இங்கே இருந்த முன்னாள் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் 7–4–1999 அன்று தமிழ்நாடு சட்டப் பேரவையிலே நடைபெற்ற, 1999–2000 ஆண்டு பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது கீழ்க்கண்டவாறு அறிவித்துள்ளார். "திருவண்ணாமலை மாவட்டம், சாத்தனூர் நீர்த்தேக்கத்திலிருந்து மழைக் காலங்களிலே உபரியாக கடலுக்குச் செல்லும் நீரை, சமுத்திர ஏரிக்குத் திருப்பி அனுப்ப வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள்." அவரும் அந்தத் திட்டத்தை அறிவித்து "கிட்டத்தட்ட ரூபாய் 27 கோடி செலவிட மாண்புமிகு முதல்வர் இசைந்துள்ளார் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்" என்று சொன்னார். ஆனால், இதற்கு நீங்கள் Single அதாவது ஒரு பைசாகூட ஒதுக்கியது கிடையாது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு மேலாக முன்னாள் முதல்வரும், முன்னாள் உணவுத் துறை அமைச்சரும் அன்று திருச்சியிலே வெள்ளத் தடுப்புப் பணிகள் என்று அங்கே நேரடியாகச் சென்று 50 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே வெள்ளத் தடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன என்றும், அதற்கு ஒரு G.O.–வும் – அவர்கள் நேரடியாகப் பார்த்தது மட்டுமல்லாமல் அதற்கு கிட்டத்தட்ட ரூபாயை ஒதுக்கியது மாதிரி ஒரு G.O.–வும் – போட்டிருக்கிறார்கள். ஆனால் பணம் ஒதுக்கவில்லை. ஆக, திட்டத்தைத் தீட்டிவிட்டார்கள். பணம் ஒதுக்கவே இல்லை. *(மேசையைத் தட்டும் ஒலி)*

பொதுப் பணித் துறையிலே கடந்த ஆட்சிக் காலத்திலே நாங்களெல்லாம் திட்டங்களைத் தீட்டினோம், தீட்டினோம் என்று கூறினீர்கள். இரண்டு தடவை நீங்கள் தெளிவாக G.O. போட்டிருக்கிறீர்கள். ஆனால், G.O.–வினுடைய நிலை என்ன? அதற்கு மேலாக, உங்களுடைய முரசொலி பத்திரிகையிலே, மக்களுக்காகத் தீட்டப்பட்ட திட்டங்களுக்கு எங்களுடைய அரசு தடையாக இருக்கிறது என்று ஒரு Article–ஐ நீங்கள் எழுதியிருக்கிறீர்கள். இதையெல்லாம் நினைத்துப் பார்க்கிறபோதுகூட, முன்னாள் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் பேசும்போது, திட்டங்களை எல்லாம் நாங்கள் தீட்டினோம் என்று சொன்னார். உங்கள் திட்டங்களை நாங்கள் ஒன்றும் கெடுக்கமாட்டோம். இது மக்களுக்குச் செய்கின்ற திட்டம். கண்டிப்பாக அந்தத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்பதுதான் எங்களுடைய தலைவியின் ஆணை. அதுதான் எங்களுடைய கடமை என்பதை இங்கே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*



*பிற்பகல் 2–15*

மாண்புமிகு முன்னாள் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றாகவே தெரியும். நாட்டிலே தூர் வாருவதற்காக எவ்வளவு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது? இந்த ஆட்சி வந்தவுடனே நாங்கள் அந்த tender–ஐ cancel பண்ணினோமா அல்லது அந்த tender-க்குத் தடை விதித்தோமா? ஒன்றுமே செய்யவில்லை. யார் எந்த ஆட்சிக் காலத்தில் திட்டத்தைத் தீட்டினாலும், அதை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும் என்பதுதான் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆணை. *(மேசையைத் தட்டும் ஒலி)* அன்று பேசும்போதுகூட சொன்னார்கள். மாண்புமிகு முன்னாள் அமைச்சரும் சட்டமன்ற உறுப்பினருமான கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்களுக்கு ஒன்றே ஒன்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இருக்கங்குடியில் ஒரு திட்டம் தீட்டியிருக்கிறார்கள். உங்களுக்கு நன்றாகவே தெரியும். 1996–லே ஆட்சி முடிந்தவுடனே, அங்கு இருக்கக்கூடிய tender–ஐ cancel பண்ணியது யார் என்பது உங்களுக்கு எல்லாம் நன்றாகவே தெரியும். அதுமட்டுமல்ல. அந்தத் திட்டத்திற்குத் தடையாக இருந்தது யார் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியம். இந்த ஆட்சியைப் பொறுத்தவரையிலே, உங்களால் தீட்டப்பட்ட எந்தத் திட்டத்திற்கும் நாங்கள் எந்தக் காலத்திலும் தடையாக இருக்கமாட்டோம் என்று ஆணித்தரமாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த ஆட்சிக் காலத்திலே நிமிடத்திற்கு நிமிடம், கடந்த சட்டமன்றப் பேரவையிலே மாண்புமிகு முன்னாள் பொதுப் பணித் துறை அமைச்சர் பேசும்போதுகூட, நாங்கள் எல்லாம் கோப்புகளை நிறுத்தி வைக்கமாட்டோம். கோப்புகள் தூங்கிவிட்டன. அதைத் தட்டி எழுப்பி விட்டோம் என்றெல்லாம் கூறியிருந்தார்கள். என்னிடம் 3 கோப்புகள் 5 ஆண்டுகள் 6 ஆண்டுகளுக்கும் மேலான கோப்புகள் என்னிடம் வந்திருக்கின்றன. கோப்புகள் வாரியாகச் சொல்ல வேண்டுமென்றால், அதற்கு இப்போது எனக்கு நேரமும் இல்லை. ஆக, கடந்த 5 ஆண்டுக் காலம் சட்டமன்றத்தினுடைய விவாதத்தை நான் கவனித்துப் பார்த்தேன். கோப்புகளை இவர்கள் தூங்க வைத்துவிட்டார்கள். முன்னாள் முதலமைச்சர் எனக்கு உத்தரவிட்டார்கள்; உடனே கோப்புகளை எல்லாம் நான் தூசியைத் தட்டி, எடுத்து உடனுக்குடன் கையெழுத்து போட்டேன் என்று கூறினார்கள். இதற்கு மேலாக இந்த கோப்புகளைப் பற்றி நான் சொல்ல வேண்டுமென்றால், இன்னும் எனக்கு நேரம் தேவைப்படுகிறது.

[திரு. ந. தளவாய் சுந்தரம்] [2001 செப்டம்பர் 8

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீர்ப் பாசன வசதி என்பது மக்களுக்கு இன்றியமையாத வசதியாகும். அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதில் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 1995 ஆம் ஆண்டு பல திட்டங்களை எல்லாம் தீட்டியிருக்கிறார்கள். குறிப்பாக, நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டம் என்ற இச்சிறப்பு திட்டமானது ரூ.807.49 கோடி திட்ட மதிப்பீட்டில் உலக வங்கி உதவியுடன் 1995 செப்டம்பர் மாதத்திலிருந்து தமிழகத்திலே செயல்பட்டு வருகிறது. இந்தத் திட்டங்களை எல்லாம் பார்க்கும்போது – அதிலே பல திட்டங்கள் தீட்டியிருக்கிறார்கள் – இங்கே இருக்கக்கூடியவர்கள் சொன்னார்கள். இந்தத் திட்டத்தை எல்லாம் நாங்கள்தான் தீட்டினோம் என்று சொன்னார்கள். கண்டிப்பாக இந்தத் திட்டத்தைத் தீட்டியவர் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் என்பதை நான் ஆணித்தரமாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதற்கு மேலாக இங்கே குளங்களைப் பற்றி எல்லாம் தெளிவாகவும், சுருக்கமாகவும் கூறியிருக்கிறார்கள். ஆக தமிழ்நாட்டிலே பொதுப் பணித் துறையின்கீழ் உள்ள குளங்கள் 10,540. இதிலே non–system tanks 5,249. இந்த 5,249 டேங்குகளில் பல ஆண்டு காலமாக தூர் வாரும் பணிகள் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்தில்தான் செம்மையாக நடைபெற வேண்டுமென்ற எண்ணத்தில்தான் இந்தத் திட்டங்களையெல்லாம் தீட்டியிருக்கிறார்கள். மேலும் மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் பல கோரிக்கைகளை இங்கே வைத்திருக்கிறார்கள். நீங்கள் எல்லாம் திட்டங்களைச் சரிவரச் செய்ய வேண்டுமென்று அருமை சட்டமன்ற உறுப்பினர் அப்பாவு அவர்கள் சொன்னார்கள். தூர் வாருவதிலே பிரச்சினை இருக்கிறது. தூரை எப்படியெல்லாம் எடுக்க வேண்டுமென்று இங்கே பல கேள்விகளை எல்லாம் கேட்டார்கள். ஒரு குளத்திலே எவ்வாறு தூர் வார வேண்டுமென்று உலக வங்கி எங்களுக்குச் சில நிபந்தனைகளை நிர்ணயித்து இருக்கிறது. அந்த அடிப்படையிலே கண்டிப்பாக இந்த ஆண்டு சிறந்த சீரிய முறையிலே தூர் வாரப்படும் என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதற்கு மேலாக தற்போதைய நிலவள ஆதாரங்கள் தொகுப்புத் திட்டத்தின் தொடர்ச்சியாக ரூ.2600 கோடி திட்ட மதிப்புத் தொகையிலே 2003–2010 ஆகிய ஆண்டுகளில் செயல்படுத்தும் திட்டம் என்ற வகையிலேயும் நீர்வளத் தொகுப்புத் திட்டம்–2, W.R.C.–2 என்ற



2001 செப்டம்பர் 8] [திரு. ந. தளவாய் சுந்தரம்]

திட்டத்தையும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் எந்தெந்த வகையிலே எவ்வாறெல்லாம் பயன்பெற வேண்டுமென்ற அளவில் சில திட்டங்களைத் தீட்டி வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே இருக்கக்கூடிய திட்டங்கள் எல்லாம், ஒவ்வொரு திட்டமும், கடந்த ஆட்சிக் காலத்திலே எதை எதை எல்லாம் அவர்கள் சொன்னார்களோ, அந்தத் திட்டங்கள் எல்லாம் முந்தைய ஆட்சிக் காலத்தில் தீட்டிய திட்டம்தான். அங்கே சில பிரச்சினைகள் இருந்தன. அங்கே நிலங்கள் கையகப்படுத்துவதிலே சில குறைகள் இருந்தன. நாட்டிலே ஒரு கட்சி ஆட்சி செய்யும்போது, அடுத்த ஆட்சி வரும்போது, இந்தத் திட்டத்தையெல்லாம் நாங்கள் திட்டியிருக்கிறோம்; நீங்கள் அந்தத் திட்டத்தை தயவு செய்து தடுத்து விடாதீர்கள் என்று கூறியிருக்கிறார்கள்; தவறான தகவலைக் கூறி இருக்கிறார்கள். எந்தத் திட்டங்களாக இருந்தாலும் இந்த அரசாங்கம், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய அரசு நுண்ணிய கணிப்புடன் மக்களுக்குச் சேவை செய்ய வேண்டுமென்ற எண்ணத்தில்தான் பல நல்ல திட்டங்களையெல்லாம் தீட்டியிருக்கிறார்கள். இங்கே சட்டமன்ற உறுப்பினர்கள் நிறைய பேர், கிட்டத்தட்ட அனைவருமே குளத்தைக் கண்டிப்பாகத் தூர் வாரவேண்டுமென்ற ஒரு குறையைக் கூறியிருக்கிறார்கள். குளங்களிலே தூர் வாருவதற்கு பல்வேறு பணிகள் நடைபெறுவதற்காக நபார்டு வங்கியின் உதவியுடன் இப்பொழுது நாங்கள் அந்தத் திட்டத்திற்காக பல திட்டங்களைத் தீட்டி, அதற்கு எவ்வளவு தொகை கிடைக்கும், எந்தெந்த இடங்களில் தூர் வார முடியும் என்பதற்காக இப்போது நாங்கள் சில ஒப்பந்தங்களையெல்லாம் செய்துகொண்டிருக்கிறோம்.

*பிற்பகல் 2-20*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால ஆட்சியிலே, நாங்கள் ஆறுகளில் பாசன வசதிக்கு சில திட்டங்களையெல்லாம் தீட்டியிருக்கிறோம் என்று இங்கே இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் கூறினார்கள். ஒன்றை மட்டும் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். தீட்டிய திட்டங்கள் எதுவாக இருந்தாலும் சரி, பொதுமக்களை அடையும் அளவுக்கு அந்தத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கியது எங்கள் ஆட்சிக் காலத்தில்தான் என்பதை நீங்கள் மறந்து விடக்கூடாது. ஆக நீங்கள், பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்த நீங்கள், நெடுஞ்சாலையிலும் சில குறைகளைக் கூறினீர்கள். நமது கல்வி அமைச்சரவர்கள் அங்கே மத்தியிலே நெடுஞ்சாலைத் துறை அமைச்சராக இருந்தார். எந்த அளவுக்கு

நாங்களும் மத்தியிலே அங்கம் வகித்திருந்தோம் தெரியுமா? அப்போது தமிழகத்திலே 1997-லே தேசிய நெடுஞ்சாலையின் மொத்த நீளம் 2002 கிலோ மீட்டர் ஆகும். மத்தியிலே தி.மு.க. அங்கம் வகித்தபோது, 9-2-1998-லே தேசிய நெடுஞ்சாலைக்குக் கூடுதலாக அறிவிக்கப்பட்ட நீளம் 585 கிலோ மீட்டர். ஆனால் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியினுடைய நல்லாசியுடன் இங்கிருக்கக்கூடிய கல்வி அமைச்சரவர்கள் அங்கே அமைச்சராக இருந்தபோது, 6-1-1999 அன்று அறிவிக்கப்பட்ட தேசிய நெடுஞ்சாலையின் நீளம் 1200 கிலோ மீட்டர். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, நாங்கள் எங்கே இருந்தாலும் திட்டங்களைத் தீட்டுவதிலே இங்கே இருக்கக்கூடிய அமைச்சர்கள், எந்த அளவுக்கும் சளைத்தவர்கள் அல்ல. கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னால் நீங்கள் தினமலர் பத்திரிகையிலே படித்திருப்பீர்கள். மத்திய அமைச்சர்களெல்லாம் என்ன செய்துகொண்டிருக்கிறார்கள் என்று தெளிவாக எழுதியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மத்தியிலே இருக்கிற தொழில் துறை அமைச்சர் முதல் அங்கிருக்கக்கூடிய எங்கள் மாவட்டத்தைச் சார்ந்த அமைச்சர் வரை இந்த நாட்டிலே என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்று தெளிவாக பத்திரிகையிலே எழுதியிருக்கிறார்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சருக்கு அமைச்சரே குறுக்கீடா? சரி, சொல்லுங்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் நான் டெல்லியிலே அமைச்சராக இருந்தபோது 1200 கிலோ மீட்டர் சாலைகளை அறிவித்ததாகச் சொன்னார்கள். அதுமட்டுமல்ல. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது, ஏதோ நாங்கள் - அவர்கள் ஆட்சி என்று திட்டங்களைச் செய்யவில்லை என்று குறைபட்டுச் சொன்னார்கள். இவர்கள்தான், தி.மு.க.வில்தான் திட்டங்கள் செயல்பட்டன என்று சொன்னார்கள். குறிப்பாக ஒரு நிகழ்ச்சியைச் சொல்கிறேன். தருமபுரியில் கலெக்டர் ஆபீஸ் மெயின் ரோடில் National Highways ரோடு போடுவதற்கு 7.50 கோடி ரூபாயை நான் அமைச்சராக இருந்தபோது தமிழகத்திற்கு ஒதுக்கித் தந்தபோது, மூன்று முறை tender வைக்கப்பட்டது. மூன்று முறை tender வைக்கப்பட்டும், யாரால் அந்த tender நடைபெறாமல் தடுக்கப்பட்டது என்று அவர்கள் சொல்லத் தயாராக இருக்கிறார்களா? மூன்று முறை. ஏதோ tender-ல் நாங்கள் தலையிடுகிறோம், மேலே சொல்கிறார்கள் என்று சொன்னதாகச் சொன்னார்கள். மேலேயிருந்து ஒன்றும் வருவதில்லை. தவறான ஒரு தகவலைத் தந்து, அதனால் ஏதோ



tender form கொடுத்தார்கள் என்று கூறினார்கள். அப்படியெல்லாம் கிடையாது. கொடுக்கப்பட்ட 7.50 கோடி ரூபாய்க்கு மூன்று முறை tender வைக்கப்பட்டும், எந்த அமைச்சரால் அந்தத் திட்டம் தடுக்கப்பட்டது என்று சொல்ல முடியுமா? (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தொடரலாம்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில நெடுஞ்சாலையைப்பற்றி ஒன்றே ஒன்று. மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் வந்தபோது என்ன நடந்தது என்பதை நான் இங்கே கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். சாலையில் நாளுக்கு நாள் வாகனப் போக்குவரத்து பெருகி வருகிறது. சாலையில் classification மாறுதல் செய்ய அவசியம் வருகிறது. இதனைக் கருத்தில்கொண்டு 2968 கிலோ மீட்டர் மாவட்ட முக்கிய சாலைகளை மாநில நெடுஞ்சாலைகளாக வகைப்படுத்தி, 16-8-2001 அன்று மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணை வழங்கினார்கள். இதனால் இச்சாலைகளின் தரம் மேலும் உயரும். மாநில நெடுஞ்சாலையின் நீளம் 4168 கிலோ மீட்டரிலிருந்து 7136 கிலோ மீட்டராக உயர்ந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால ஆட்சியிலே, அதாவது 1991 முதல் 1996 வரை எங்களுடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே சாலைகளைச் செப்பனிடுவதற்கு கிட்டத்தட்ட எத்தனை கிலோ மீட்டர் என்றால் 57,193 கிலோ மீட்டர். ஆனால் கடந்த ஆட்சியிலே சாலைகளைப் போட்டோம் என்று கூறினார்கள். அவர்களால் கடந்த ஐந்தாண்டுகளிலே புதிதாக அமைக்கப்பட்ட மற்றும் மீண்டும் புதுப்பிக்கப்பட்ட சாலையின் நீளம் 22,376 கிலோ மீட்டர். எனவே இந்தச் சாலைகளைப் புதுப்பிப்பதிலே இவர்கள் எந்த அளவிற்கு கடந்த ஐந்தாண்டு காலத்தில் ஆட்சி நடத்தினார்கள் என்பதற்கு இந்த ஒன்றே எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிறது.

*பிற்பகல் 2-25*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பல்வேறு உறுப்பினர்கள் தங்களுடைய தொகுதி வாரியாக சில திட்டங்களை எல்லாம் இங்கே கூறியிருக்கிறார்கள். மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர்

[திரு. ந. தளவாய் சுந்தரம்] [2001 செப்டம்பர் 8

புரட்சித் தலைவி அவர்கள், எந்தத் திட்டமாக இருந்தாலும் சரி, அவர்கள் யார் ஆட்சி செய்தாலும் சரி, எந்தச் சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும் சரி, திட்டங்கள் கண்டிப்பாக நிறைவேற்றப்பட வேண்டுமென்ற நல்ல எண்ணத்துடன் புரட்சித் தலைவியின் நல்லாசியுடன் இங்கே நான் சில திட்டங்களை அறிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திட்டத்தின் பெயர்**

1. தருமபுரி மாவட்டம், இராமகொண்டஹள்ளி அருகே மத்தளபள்ளம் ஆற்றின் குறுக்கே ஒரு கண்மாய்.

2. கடலூர் மாவட்டம், பெரும்பட்டு கிராமம் அருகில் கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே ஒரு அணைக்கட்டு.

3. தருமபுரி மாவட்டம், படத்தலார் கண்மாய் முதல் வெண்ணம்பள்ளி கண்மாய் மற்றும் கீழே உள்ள 10 கண்மாய்களுக்கு நீர் கொண்டு செல்ல புதிய கால்வாய்கள்.

4. கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தாலுகா கடஞ்சேரி புதுக்கடை இறவைப் பாசனத் திட்டம்.

5. தேனி மாவட்டம், தொப்பம்பட்டி கிராமம், வெள்ளப்பாறை ஓடையின் குறுக்கே புதிய கண்மாய்.

**திட்டங்களின் எண்ணிக்கை – 10**

1. வேலூர் மாவட்டம், பாஞ்சூர் கிராமத்தைச் சார்ந்த பாப்பநாயக்கன் பேட்டையில் குட்டை அமைத்தல்.

2. வேலூர் மாவட்டம், சேமபள்ளி கிராமத்தில் மலை ஓடையின் குறுக்கே குட்டை அமைத்தல்.

3. நாமக்கல் மாவட்டம், உன்னநத்தங்கல் கிராமத்தில் குட்டை அமைத்தல்.

4. தருமபுரி மாவட்டம், பெரிய மனமுட்லு கிராமத்தில் புது ஏரியினைப் புனரமைத்தல்.

5. திருச்சி மாவட்டம், பிள்ளைப்பாளையம் கிராமத்தில் குட்டை அமைத்தல்.

6. திருச்சி மாவட்டம், முல்லப்பாடி கால்வாய் மூலம் முல்லப்பாடி ஏரிக்கு நீர் வழங்குத் திட்டம்.



2001 செப்டம்பர் 8] [திரு. ந. தளவாய் சுந்தரம்]

7. கரூர் மாவட்டம், மேல் முனாயனூர் கிராமத்தில் குட்டை அமைத்தல்.

8. புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டம், ராஜகிரி கிராமத்தில் நல்ல கால்வாய்கள் ஏற்பட ஒரு திட்டம்.

9. திண்டுக்கல் மாவட்டம், கக்கம்பட்டி கிராமத்தில் புதிய குளம் அமைத்தல்.

10. திண்டுக்கல் மாவட்டம், வாடிப்பட்டி கிராமத்தில் குளம் அமைத்தல்.

மேலும், இங்கே சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் எந்த அளவிற்கு அவர்கள் தங்கள் தொகுதிவாரியாக சில திட்டங்களையெல்லாம் தீட்ட வேண்டுமென்று கோரியிருக்கிறார்கள்.

அதில் கீழ்க்கண்ட 10 பாசனத் திட்டங்கள் ரூ.36.00 கோடி மதிப்பீட்டில் இந்த ஆண்டில் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது:

1. தூத்துக்குடி மாவட்டம், திம்மராஜபுரம் கிராமத்தில் புதிய ஏரி.

2. தூத்துக்குடி மாவட்டம், சின்னூர் கிராமத்தில் புதிய ஏரி அமைத்தல்.

3. தூத்துக்குடி மாவட்டம், நம்பிபுரம் ஏரிக்கு நீர் கொண்டு வருவதற்காக வைப்பாற்றின் குறுக்கே அணைக்கட்டு கட்டுதல்.

4. திருநெல்வேலி மாவட்டம், கங்கைகொண்டான் கிராமத்தில் புதிய ஏரி அமைத்தல்.

5. விருதுநகர் மாவட்டம், பெரிய புளியம்பட்டி கிராமத்தில் புதிய ஏரி அமைத்தல்.

6. இராமநாதபுரம் மாவட்டம், கன்னிராஜபுரம் கிராமத்தில் புதிய ஏரி அமைத்தல்.

7. மதுரை மாவட்டம், திருமங்கலம் தாலுகா, பேய்குளம் கிராமத்தில் உப்போடையின் குறுக்கே புதிய ஏரி அமைத்தல்.

8. சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் பெரிய குளத்தின் உபரி நீர்ப்போக்கின் குறுக்கே அணைக்கட்டு கட்டி கண்மாய் அமைத்தல்.

9. திருவள்ளூர் மாவட்டம், லட்சுமிபுரம் கிராமத்தில் ஆரணியாற்றின் குறுக்கே மேற்குப் பகுதியில் லட்சுமிபுரம் அணைக்கட்டு கட்டுதல்.

10. திருவள்ளூர் மாவட்டம், இடையஞ்சாவடி கிராமத்தில் கொசஸ்தலையாற்றில் இடதுபுறத்தில் தரைமட்ட அணை கட்டுதல்.

மேற்கண்ட பணிகளுக்காக நபார்டு வங்கியை அணுகி ரூ.36.00 கோடிக்கு திட்டம் தீட்டியுள்ளார்கள்.

## கடற்கரை பாதுகாப்புப் பணி

கீழ்க்கண்ட மாவட்ட வாரியான கடற்கரை பாதுகாப்புப் பணிகளை ரூ.28.37 கோடி அளவில் செயல்படுத்த நபார்டு வங்கியுடன் பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது:

1. கன்னியாகுமரி மாவட்டம்: 12763.50 மீட்டர் நீளம் அளவிலே அங்கே தூண்டில் வளைவு அமைப்பதற்காக ரூ.16.20 கோடி.

2. தூத்துக்குடி மாவட்டம்: 1610 மீட்டர் நீளம்

3. இராமநாதபுரம் மாவட்டம்: 1100 மீட்டர் நீளம்

குறிப்பாக நெல்லை, கன்னியாகுமரி, இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் இந்தக் கோரிக்கையை வைத்தார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஒரு வாரத்திற்கு முன்னாலே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. சந்தானம் அவர்கள், அசுவமா நதி அணைக்கட்டுத் திட்டத்தை நீங்கள் செயல்படுத்துவீர்களா என்று கேட்டார்கள். அந்தத் திட்டம் பற்றி அவர்களிடம் நான் விளக்கம் அளிக்கும்போதுகூட, "நீங்கள் சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறீர்கள், அங்கே சட்டம்–ஒழுங்கு கெடாமல் இருக்க வேண்டும். நீங்களே போய் அதைத் தீர்த்து வைக்க வேண்டும்" என்று கூறினேன். உடனடியாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நேரடியாகச் சென்று, அந்தச் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மக்களையெல்லாம் சமாதானம் செய்து, அங்கேயிருந்து மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக ஒரு கடிதத்தைப் பெற்று, இங்கே இருக்கக்கூடிய அதிகாரிகளுக்கு உடனடியாக அனுப்பி, இந்தத் திட்டத்தை நீங்கள் கண்டிப்பாக நிறைவேற்ற வேண்டும் என்று கூறினார்கள். அதுமட்டுமல்லாமல், அங்கே இருக்கக்கூடிய பல்வேறு தொலைக்காட்சிகள் மூலமாக இந்தத் திட்டத்தினுடைய பயன்கள் என்ன,



இந்தத் திட்டத்தினால் எந்தவிதமான சட்டம் ஒழுங்குப் பிரச்சினையும் வராது என்பதையும் தெள்ளத் தெளிவாகக் காண்பிக்கப்பட்டது. இங்கே உள்ள சட்டமன்ற உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அசுவமா நதி அணை கட்டும் திட்டம், மதுரை மாவட்டம் உசிலம்பட்டி வட்டம், தொட்டப்பநாயக்கனூர் கிராமம் அருகில் அசுவமா ஆற்றின் குறுக்கே புதிய கண்மாய் அமைக்கும் திட்டம், ரூ.344 இலட்சம் மதிப்பீட்டில் நடப்பு ஆண்டிலே எடுத்துக் கொள்ளப்பட இருக்கிறது. இந்தத் திட்டத்தினால்...

*பிற்பகல் 2–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சந்தானம் அவர்கள் பேச முடியவில்லை என்று வருத்தத்தோடு இருக்கிறார். அவருக்கு இந்த அறிவிப்பு பெரிய ஆறுதலாக இருக்கும்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** இந்தத் திட்டத்தினால் 379 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும். இந்தத் திட்டத்திற்காக 2001–2002-லே ரூ.20 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மேலும் இந்தத் திட்டத்திற்காக சந்தானம் அவர்கள் நேரடியாகப் பல முறை அனைத்து அதிகாரிகளையும் சந்தித்து இருக்கிறார். உடனடியாகத் திட்டத்தை தீட்ட வேண்டுமென்பதற்காக நேற்று சாயங்காலம்தான் நாங்கள் நிதித் துறைச் செயலாளரைப் பார்த்து, அந்தத் திட்டத்திற்கு வழி வகுத்திருக்கிறோம். இங்கே சட்டமன்ற உறுப்பினர் பேசும்போதுகூட, 2 3/4 கோடி ரூபாய் – கடலரிப்புக்கென உருவாக்கிய திட்டம் – மத்திய அரசிடமிருந்து வந்த திட்டம் என்று கூறினார்கள். மன்னிக்க வேண்டும்; 1 கோடிதான். இங்கே இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர் ஆறுமுகம் அவர்கள் ஒரு வேண்டுகோள் வைத்தார்கள், அங்கே கடலரிப்பு ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது, உடனடியாக அதற்கு நீங்கள் உதவி செய்ய வேண்டும் என்றார். நான் நேரடியாக அந்த இடத்தைச் சென்று பார்த்து இங்கே இருக்கக்கூடிய அவை முன்னவர் அவர்கள், Budget preparation–ல் இருந்தபோதுகூட, நானே கதவைத் தட்டி இந்தக் கோப்பிலே கையெழுத்திட வேண்டுமென்று கூறினேன். என்ன சிறு குழந்தையாய் இருக்கிறாய், நான் Budget Preparation–ல் இருக்கிறேன் என்று கூறினார்கள். இருந்தாலும் நான் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் அங்கே கடலரிப்பு ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது என்கிறார், மக்கள் வேதனைப்படுகிறார்கள். இந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்று கூறினேன். இங்கே இருக்கக்கூடிய அவை முன்னவர்

அவர்கள் உடனடியாகக் கையெழுத்திட்டு, அந்தத் திட்டம் இப்போது வந்திருக்கிறது. ஆக, அந்தத் திட்டத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறாகப் புரிந்துகொண்டார்கள். 183 கோடி ரூபாய் தமிழக அரசு பங்காக இதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அளித்திருக்கிறார்கள் என்பதை இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

உலக வங்கி உதவியுடன் - மாண்புமிகு முன்னாள் பொதுப் பணித் துறை அமைச்சருக்கு நன்றாகத் தெரியும் - பாலாறு, தாமிரபரணியாறு மற்றும் வைகை வடிநிலங்களுக்கு 620 ஏரிகளை ரூ.106.26 கோடி மதிப்பீட்டில் தூர் வாரும் பணி இங்கே மிகவும் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இந்தத் திட்டத்தை எந்தக் காலத்திலும் நாங்கள் கெடுத்தது கிடையாது. கெடுக்கவும் மாட்டோம் என்பதை ஆணித்தரமாக நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால், இந்தத் திட்டத்தைப்பற்றி நன்கு தெரிந்தவர்களுக்குத்தான் தூர் வாருவது ஒரு மிகப் பெரிய கஷ்டமான திட்டம் என்பது தெரியும். இந்தத் திட்டத்திலே எல்லோரும் எதிர்பார்த்தது, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தவுடனே, tender எல்லாம் முடிந்துவிட்டதே, இந்தத் திட்டத்தை நீடிக்க விடமாட்டார்கள் என எதிர்பார்த்தார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் இந்தத் திட்டத்தை நன்றாக நடத்த வேண்டும். அதுமட்டுமல்லாமல் பல பேர் கோரிக்கைகளை வைத்தாலும் இந்தத் திட்டத்தை மக்களுக்காகச் செய்ய வேண்டுமென்ற அடிப்படையிலே இந்தத் திட்டப் பணிகள் இப்போது சீரும் சிறப்புமாக நடைபெற்று வருகின்றன. இந்தத் திட்டம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் காலத்திலே ஆரம்பிக்கப்பட்ட திட்டம் என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நபார்டு வங்கி உதவியுடன் 44 ஏரிகளை சுமார் ரூ.14.06 கோடி மதிப்பீட்டில் நவீனப்படுத்தும் திட்டம் தீட்டப்பட்டு இப்போது பணிகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன. ஆக, நபார்டு வங்கி உதவியுடன் ரூ.34 கோடி மதிப்பீட்டில் 300 பாசன ஏரிகளை நவீனப்படுத்தும் திட்டம் செயல்படுத்தப்பட இருக்கிறது. கடந்த ஆட்சியிலே நீங்கள் கூறினீர்கள், கண்டிப்பாக சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எல்லாம் தொகுதிக்கு ஒரு ஏரி என்று சொன்னீர்கள். அது எத்தனை ஆண்டுகள் நடந்தன என்பது



மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நன்றாகத் தெரியும். அதன் விளைவு என்ன? ஓர் ஆண்டு நடந்திருக்கிறது. ஓர் ஆண்டுதான் அந்தத் திட்டத்தைத் தீட்டி இருக்கிறீர்கள் என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இதைச் சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே கூறியிருக்கிறார்கள். இந்தத் திட்டம் 300 பாசன ஏரிகளைத் தூர் வாரும் திட்டமாக அமைந்திருக்கிறது. இதற்கு ரூ.34 கோடி. ரூ.34 கோடி திட்டத்தை நபார்டு வங்கியுடன் தொடர்புகொண்டு வகுத்திருக்கிறோம்.

மேலும் கடலூர் மாவட்டம், கடலூர் நகரம், திருப்பாதிரிப்புலியூர் நகா எல்லையில் கெடிலம் ஆற்று வலதுபுறம் அண்ணா பாலத்தின் கீழ்ப்புறம் வெள்ளக்கரை அமைக்கும் பணி, மதிப்பீட்டுத் தொகை ரூபாய் 32 இலட்சம். விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை வட்டத்திலுள்ள புத்தனந்தல் அணைக்கட்டு, வாய்க்கால், வாய்க்கால் மூலம் நீர்வரத்து பெறும் ஏரிகள், மதிப்பீட்டுத் தொகை ரூபாய் 30 இலட்சம். விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் வட்டத்திலுள்ள கிடங்கல் ஏரி மற்றும் வரத்துக் கால்வாயினைப் புதுப்பித்தல், மதிப்பீட்டுத் தொகை ரூ.45 இலட்சம்; தருமபுரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், சிங்காரப்பேட்டை பகுதியில் ஜவ்வாது மலையில் உற்பத்தியாகும் அங்குத்தி சுனையிலிருந்து வரும் தண்ணீரை சிறிய தடுப்பு அணை கட்டி பல ஏரிகளுக்குத் திருப்பிவிட்டு நிரப்புதல், மதிப்பீட்டுத் தொகை ரூ.60 இலட்சம்; ஆக, கிட்டத்தட்ட மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்தத் திட்டங்களைத் தீட்ட வேண்டுமென்று, அது பொதுப் பணித் துறையாக இருந்தாலும் சரி, நெடுஞ்சாலைத் துறையாக இருந்தாலும் சரி, எந்த அளவிற்கு 1991-லிருந்து 1996 வரை சிறப்பாகப் பணி நடந்ததோ, அதே பணி இந்த ஆட்சியிலும் நடக்கும் என்பதை நான் ஆணித்தரமாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 2-35*

தேசிய நெடுஞ்சாலையை எடுத்துக்கொண்டால், மொத்தமுள்ள கிலோ மீட்டர் 3865. இந்த 3865 கிலோ மீட்டர் எப்படி வந்தது என்றால், இங்கே இருக்கக்கூடிய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் நல்லாசியாலே அங்கே அமைச்சராக இருந்த காரணத்தால் இந்தத் திட்டம் வந்திருக்கிறது. N.H.- தேசிய நெடுஞ்சாலை. ஆனால் இங்கே இருப்பவர்கள், நாங்கள்தான் கொண்டுவந்தோம் என்று சொன்னார்கள். இதற்குத் தெளிவான கருத்துகள் இங்கே இருக்கின்றன. எந்தெந்த ஆண்டுக் காலத்தில், எந்தெந்த இடத்தில் செய்தார்கள் என்பதற்கு விவரம்

இருக்கிறது, படிக்க நேரமில்லை. யாராக இருந்தாலும் – தமிழகத்தில் நாங்கள் அப்போது ஆட்சி செய்யவில்லை. நாங்கள் மத்தியிலே அவர்களுடன் கூட்டணி வைத்தபோதுகூட, மாநிலத்தில் நீங்கள் ஆட்சி செய்தபோதுகூட, இந்தத் திட்டத்தை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் புரட்சித் தலைவி அவர்களுடைய நல்லாசியால் தீட்டியிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நீங்கள் எடுத்தவுடனேயே, திட்டத்தை நிறுத்திவிடாதீர்கள் என்று சொல்லுகிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர், மத்தியிலே ஆட்சி செய்தால் இந்தியா முழுவதும் ஆட்சி செய்வதாகத்தான் பொருள்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மத்தியிலே ஆட்சி செய்தாலும்கூட, அவர்கள் தவறான கருத்தை எடுத்துக்கொண்டார்கள். அதற்காக நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாநிலச் சாலைகள் 7136. மாவட்ட பெரிய சாலைகள் 7408. மாவட்ட இதர சாலைகள் 40853. கரும்புச் சாலைகள் 1366. ஆக மொத்தம் 60628 கிலோ மீட்டர் சாலைகள். இந்தச் சாலைகள், முக்கியமாக நெடுஞ்சாலைத் துறைக்கு அமைந்த சாலைகள் 60628 கிலோ மீட்டர் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்ததனால்தான் இந்தச் சாலைகளினுடைய கிலோ மீட்டரின் ஏரியா உயர்ந்திருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைத் துறை சம்பந்தமான அறிவிப்புகள்: மாநில நெடுஞ்சாலைகள், முக்கிய மாவட்டச் சாலைகள், ஏனைய மாவட்டச் சாலைகள் ஆகியவற்றை மேம்படுத்துவதை முக்கிய நோக்கமாகக் கொண்ட தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டத்தை – TNRSP – மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 1995 ஆம் ஆண்டு தொடங்கி வைத்து, அதற்கு உதவிடுமாறு உலக வங்கியைக் கேட்டுக் கொண்டதற்கிணங்க, ஐந்தாண்டு இடைவெளிக்குப் பின்னர், மீண்டும் இத்திட்டத்தைப் புதிய எழுச்சியுடன் மேற்கொள்ளும் வாய்ப்பு தற்போது கிடைத்துள்ளது. இதற்கு மொத்தம் திட்டச் செலவு ரூபாய் 1900 கோடி ஆகும். இத்திட்டத்தின் பணிகளை உலக வங்கி விரைவில் ஆய்வு செய்ய உள்ளது.

நம் நாடு விடுதலை அடைவதற்கு முன்பு காவிரி வடிநில மாவட்டங்களில் கட்டப்பட்ட பல பாலங்கள் பெருகிவரும்



போக்குவரத்தைத் தாங்க இயலாத நிலையில் உள்ளன. இத்தகைய 204 பாலங்களை உடனடியாகச் சரிசெய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன், நபார்டு வங்கியின் உதவியுடன் ரூ.200 கோடி செலவில் திரும்பக் கட்ட இவ்வரசு உத்தேசித்துள்ளது. இதில் தஞ்சையில் 45, நாகையில் 50, திருவாரூரில் 96, கடலூரில் 4 மற்றும் திருச்சியில் 9 என பாலங்கள் இடம்பெறும். நிதிநிலை அறிக்கையில் அறிவித்த திட்டங்களுக்குச் செயல்வடிவம் அளித்திட தக்க முன்நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன.

அடிப்படை கட்டுமான வசதிகளான சாலைகள், குடிநீர் வசதி, மின்சார வசதி போன்ற பணிகளின் செயலாக்கம் மற்றும் மேம்பாடு குறித்து ஒருங்கிணைந்த முறையில் ஆய்வுகள் நடத்தி மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தலைமையில் உயர்மட்டக் குழுமம் ஒன்று அமைக்கப்படும்.

நெடுஞ்சாலைத் துறையின் சொத்துக்களைப் பாதுகாத்திடவும், சாலையோர ஆக்கிரமிப்பைக் கட்டுப்படுத்திடவும் வழிவகைகள் அடங்கிய தமிழ்நாடு நெடுஞ்சாலைச் சட்டத்திற்கு குடியரசுத் தலைவரின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

வருங்காலங்களில் பொது மற்றும் தனியார் இணைந்தே திட்டங்களைச் செயல்படுத்திடும் நிலை உருவாகியுள்ளது. இதன் தொடக்கமாக, தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் – TIDCO மற்றும் IL & FS என்ற நிறுவனம் ஆகியவை சேர்ந்து, தமிழ்நாடு சாலை மேம்பாட்டுக் கம்பெனி – TNRDC – Tamil Nadu Road Development Corporation என்ற கூட்டு நிறுவனம் ஒன்றினைத் தொடங்கியுள்ளது. சாலை மேம்பாட்டுப் பணிக்கான முதலீடு சுங்க வசூல் மூலம் ஈடுகட்டப்படும் என்ற திட்டத்தின்கீழ் கிழக்குக் கடற்கரைச் சாலையை – ECR – மேம்படுத்தும் பணிகள் இந்நிறுவனம் மூலம் நடைபெற்று வருகின்றன.

அரசின் நிதி ஆதாரத்தை மட்டுமே கொண்டு பொது மக்களின் எதிர்பார்ப்புகளை முழுமையாக நிறைவேற்ற இயலாது. தனியார் முதலீட்டிற்கு வழிவகை செய்யவும், இந்தியச் சுங்கச் சட்டத்திற்கு – Indian Tolls Act – திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. இதன் அடிப்படையில் கடந்த ஆண்டு மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்ட நாமக்கல் மாவட்டம், மோகனூர், கரூர் மாவட்டம், வாங்கல் காவிரி ஆற்றுப் பாலம், தஞ்சை மாவட்டம், கும்பகோணம் நீலத்தநல்லூர், பெரம்பலூர் மாவட்டம், கொள்ளிடம் ஆற்றுப் பாலம் மற்றும் திருச்சி

மாவட்டம், செங்கரையூருடன் இணைத்திடும் கொள்ளிடம் ஆற்றுப் பாலம் ஆகிய திட்டங்களுக்கு முன்னிலை ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. இப்பாலங்களைத் தவிர, சென்னை-கும்பகோணம்-தஞ்சாவூர் சாலை கிலோ மீட்டர் 249/8-ல் அணைக்கரையில் உள்ள கொள்ளிடம் ஆற்றில் ரெகுலேட்டர் பாலம். நாமக்கல் மாவட்டம், கொக்கராயன் பேட்டையையும், ஈரோடு மாவட்டம் லக்காபுரத்தையும் இணைத்திட காவிரியாற்றின் குறுக்கே பாலம்.

*பிற்பகல் 2-40*

பழனியிலிருந்து கொடைக்கானலை இணைத்திடும் மலைச் சாலை மேம்பாட்டுத் திட்டத்திற்கு தனியார் முதலீடு அடிப்படையில் முன்னிலை ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முழுமையாக ஆய்வு செய்து பணிகளுக்கு மதிப்பீடு தயார் செய்திட ஆய்வுச் செலவினத்திற்காக ஒரு சுழல் நிதி ஏற்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. சென்ற ஆண்டு மானியக் கோரிக்கையின்போது அறிவிக்கப்பட்டது. இதற்கான ஆணை முந்தைய அரசால் 7-9-2000 அன்று வழங்கப்பட்டாலும் இடைக்கால நிதிநிலை அறிக்கையில்கூட நிதி ஒதுக்கீடு அளித்திடவில்லை. ஆனால் தற்பொழுது ரூபாய் 5 கோடி நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். முன்னுரிமைப்படி செயலாக்கப்பட வேண்டிய பணிகளின் தொகுப்பு தயார் செய்யப்பட்டு, அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டிருக்கிறது. மேலும் இதற்கு விரிவான மதிப்பீடுகள் தயார் செய்யும் நிலையிலே இருக்கிறது.

மாவட்டத் தலைநகரங்களில் நெரிசலைத் தவிர்த்திட ஈரோடு, இராமநாதபுரம், நாகர்கோவில், தேனி மற்றும் திருவள்ளூர் நகரங்களுக்கு புறவழிச் சாலைகள் அமைப்பது குறித்து வழிவகைகள் ஆய்வு செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

புதிதாகத் தொடங்கப்பட்டுள்ள எண்ணூர் துறைமுகத்திற்கு சென்னை-கொல்கத்தா தேசிய நெடுஞ்சாலையிலிருந்து அணுகு சாலைகளை உருவாக்கவும் திட்டம் வகுக்கப்படுகிறது. நெடுஞ்சாலைத் துறையினரால் செயலாக்கப்படும் பணிகள் தரமுடன் இருக்க வேண்டும் என்ற முனைப்புடன் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய இயக்குநரின்கீழ் தனியாக ஒரு தரக் கட்டுப்பாட்டுப் பிரிவு நிறுவ ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாநில கட்டுமானக் கழகத்தின் செயல்பாடுகள் ஆய்வு செய்யப்பட்டு அதற்குப் புத்துயிரூட்டத் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. நெடுஞ்சாலைத் துறைச் செயலகத்தின் பணிகளில்



செயலருக்கு உதவியாக தொழில்நுட்பம் தொடர்பான பணிகளைத் திறம்பட நடத்திட தலைமைப் பொறியாளர் நிலையிலே ஒரு சிறப்புச் செயலர் பதவி ஏற்படுத்தப்படும். இதற்கு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நேற்றையதினமே ஒரு உத்தரவை அளித்து இதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்தில் போடப்பட்ட சாலைப் பணியாளர்களைப் பற்றியெல்லாம் இங்கே பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். இந்த சாலைப் பணியாளர்களின் நிலை என்ன, இவர்கள் எப்படி வேலைக்கு அமர்த்தப்பட்டார்கள் என்பதையெல்லாம் நேரமில்லாத காரணத்தால் சொல்ல முடியவில்லை. (குறுக்கீடு) இந்தியத் திருநாட்டில் யாரை வேலைக்கு வைக்கலாம், யாரை வைக்கக்கூடாது என்று, சட்டத்திலே இடமிருந்தாலும்கூட, சட்டத்தையெல்லாம் மீறி, (மேசையைத் தட்டும் ஒலி) உச்ச நீதிமன்ற நீதிபதியினுடைய உத்தரவையெல்லாம் மீறி, சாலைப் பணியாளர்களைக் குலுக்கல் முறையிலே தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். தேர்ந்தெடுத்ததன் விளைவு என்ன? இவர்களுக்குச் சம்பளம், படி வழங்கும் வகையில் மட்டும் ஆண்டுச் செலவு ரூபாய் 75 கோடி ஆகிறது. சாலைப் பணியாளர்களுக்கு மட்டும் ரூபாய் 75 கோடி ஆகிறது. சாலைப் பணியாளர்களை நியமனம் செய்யும்போதுகூட, 8 கிலோ மீட்டருக்கு 2 சாலைப் பணியாளர்கள் என்ற முறையிலே நியமனம் செய்தார்கள். கடந்த ஆட்சிக்கு முன்னாலும் சரி, எந்தக் காலத்திலேயும் சாலைப் பணியாளர்கள் நிரந்தரமாக்கப்படாத நிலையிலே அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று, கிட்டத்தட்ட 300 பேர் நீதிமன்றத்திலே உத்தரவினைப் பெற்றிருக்கிறார்கள். கடந்த ஆட்சிக் காலத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த கிட்டத்தட்ட 12 ஆயிரம் பேர், அவர்கள் கழகத்துக்காக என்ன பணிகளைச் செய்தார்களோ, தேர்தல் நேரத்திலே என்ன பணியைச் செய்தார்களோ, அந்தப் பணிக்காகத்தான் அவர்களுக்கு அந்தப் பதவி வழங்கப்பட்டது என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) பணி அமர்த்துவதில் ஒரு முறை இருக்கிறது. ஆனால் தவறான முறையிலே நடத்தியிருக்கிறார்கள். தவறான முறை மட்டுமல்லாமல், எந்த அடிப்படையிலே தேர்வு செய்ய வேண்டுமோ, அந்த அடிப்படைக்கு மாறாகத் தேர்வு செய்திருக்கிறார்கள் என்பதை ஆணித்தரமாக நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால ஆட்சியில் நெடுஞ்சாலைத் துறையினுடைய பல்வேறு திட்டங்களைப் பற்றியெல்லாம் பலர் இங்கே கூறியிருக்கிறார்கள். 1991-லேயிருந்து 1996 வரை சில

திட்டங்கள் தீட்டப்பட்டு, அந்தத் திட்டங்களுக்கு, அதுவும் குறிப்பாக, Tamil Nadu Road Development Project திட்டத்திற்கு புத்துயிர் அளிக்கும் விதமாக மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உலக வங்கியை அணுகி பல்வேறு நலத் திட்டங்களைத் தீட்டியிருக்கிறார்கள். ஆக, கடந்த ஆட்சியிலே எத்தனை திட்டங்கள் தீட்டியிருந்தாலும் அத்தனையையும் இந்த ஆட்சியிலே கண்டிப்பாக நாங்கள் நிறைவேற்றுவோம் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் இங்கே நேரமின்மை காரணமாக சுருக்கமாக சில விஷயங்களைச் சொன்னார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் ஐந்து நிமிடத்திலே முடித்துவிட வேண்டும் என்று கூறியதற்காக சிலருக்கு அதிலே வருத்தமிருந்தாலும்கூட, காலத்தையும், நேரத்தையும் கருதி சுருக்கமாகச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் என்னென்ன கோரிக்கைகளைச் சொன்னார்களோ, அந்தக் கோரிக்கைகள் எல்லாம் கண்டிப்பாக நிறைவேற்றப்படும். திரு. பழனிசாமி, நீங்கள் எப்போதும் கோபப்படமாட்டீர்கள். இன்றையதினம் ஏதோ பொதுப் பணித் துறைமீது உங்களுக்கு கோபம் வந்துவிட்டது. உங்களுடைய கோபம் எதுவாக இருந்தாலும் அந்தக் கோபத்தை நாங்கள் ஏற்கிறோம். உங்களைப் போன்றவர்களுக்கு நன்றாகத் தெரியும். அசுவமா நதித் திட்டத்தைத் தீட்ட வேண்டும் என்று கேட்டீர்கள். உடனடியாக நானே சட்டமன்ற உறுப்பினரோடு நேரடியாகச் சென்று அங்குள்ளவர்களைச் சந்தித்தோம். உங்கள் கோரிக்கை எதுவாக இருந்தாலும் சரி, அந்தக் கோரிக்கையை மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் கண்டிப்பாக நிறைவேற்றுவார்கள் என்று ஆணித்தரமாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 2–45*

பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே பலர் பல வெட்டுத் தீர்மானங்களை எல்லாம் கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு அரசுக்குக் கோரிய தொகையை வழங்கிட வேண்டுமென்று கேட்டு, மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொடுக்கும்படி பேரவையைக் கேட்டுக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சாமிநாதன் இருங்கள், கூப்பிடுகிறேன். திரு. திருஞானசம்பந்தம், உங்களுடைய கோரிக்கையைச் சொல்லலாம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், கல்லணைக் கால்வாய் கடைமடைப் பகுதியாக இருக்கிற பேராவூரணி, பட்டுக்கோட்டை பகுதிகளிலே தண்ணீர் திறக்கப்பட்டு 3 மாத காலமாகியும் இதுவரை தண்ணீர் வராத சூழ்நிலையால், அந்தப் பகுதிகளிலே உள்ள விவசாயிகளுடைய நிலை கேள்விக்குறியாக இருக்கிறது. அடுத்து, பட்டுக்கோட்டை ஒன்றியப் பகுதியிலே இருக்கிற ராஜமடை வாய்க்கால் பகுதியிலே ஏறக்குறைய 15 ஊராட்சிகள் இருக்கின்றன. இந்த 15 ஊராட்சிப் பகுதிகளிலும் இதுவரை தண்ணீர் வரவில்லை. அந்தப் பகுதிகளிலே இருக்கின்ற விவசாயிகள் நலன் கருதி, அங்கு செல்கிற காட்டாறு அணையில் மகாராஜ சமுத்திரம் ஆற்றிலே pumping scheme ஏற்படுத்தி, அந்த 15 ஊராட்சிப் பகுதிகளிலே இருக்கிற விவசாயிகளுடைய வாழ்க்கைத் தரம் உயருவதற்காக இந்தத் திட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தருவாரா என்பதை இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை கண்டிப்பாகப் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு.பெ. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 4 நாட்களுக்கு முன்னாலே ஒத்திவைப்புத் தீர்மானமாகக் கொடுத்திருந்தேன். கீழ்பவானி அணையிலிருந்து காவிரி டெல்டாப் பகுதிக்குத் தண்ணீர் திறந்துவிடுகிற பிரச்சினை. அங்கே விவசாயிகள் மத்தியிலே பெரிய பதட்ட நிலை உருவாகியிருக்கிறது. அது சம்பந்தமாக பதிலுரையிலே அமைச்சர் அவர்கள் குறிப்பிடுவார்கள் என்று நீங்களும் சொன்னீர்கள். அதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக அறநிலையத் துறை அமைச்சரே நேரடியாக வந்து மனுக்களைக் கொடுத்தார். உண்மைக்கு மாறான தகவல் பத்திரிகையிலே வந்திருக்கிறது என்று சொல்லி என்னிடம் காண்பித்தார். கண்டிப்பாக நீங்கள் சொல்வதுபோல அங்கு ஒன்றும் நடக்காது. நடக்கவும் முடியாது என்று ஆணித்தரமாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் குறுகிய நேரத்திலே தன்னுடைய இலாகாவிற்கு உரிய பதிலை அளித்திருக்கிறார்கள். ஆனால் பொதுப் பணித் துறையில் பொதுவாக இவற்றை எல்லாம் மீறிய ஒரு பிரச்சினை, இன்றைக்குத் தலையாய பிரச்சினையாக இருக்கக்கூடிய காவிரிப் பிரச்சினை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, துரைமுருகன். (குறுக்கீடு)

**திரு. துரைமுருகன்:** நான் சொல்லிவிடுகிறேன். நான் சொல்லி விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், (குறுக்கீடு) இல்லை, வேண்டாம் துரைமுருகன், அனைத்துக் கட்சிக் கூட்டம் கூடும் நேரத்தில் வேண்டாம், வேண்டாம். *(கூச்சல்) (குறுக்கீடுகள்)* சரி, சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** காவிரிப் பிரச்சினையிலே ஒரே ஒரு விளக்கத்தை மாண்புமிகு அமைச்சரிடத்திலே இருந்து நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இந்த அரசு பிரதமர் தலைமையில் போட்டிருக்கிற ஆணையத்தை ஏற்றுக்கொள்கிறதா? அதற்கான நடவடிக்கையை எடுத்திருக்கிறதா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். *(கூச்சல்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், பேசுங்கள். அமைச்சர் அவர்கள் இதற்குப் பதில் சொல்ல வேண்டிய தேவையில்லை. அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெற இருக்கிறது. திரு. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *(குறுக்கீடு)* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. துரைமுருகன்:** அப்படியானால் மிகப் பெரிய ஒரு பிரச்சினை குறித்து, அதுவும் இன்றைக்கு தலையாய பிரச்சினையாக இருக்கக்கூடிய... *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெளிநடப்பா? (குறுக்கீடு) வெளிநடப்பா?



**திரு. துரைமுருகன்:** மிகப் பெரிய ஒரு பிரச்சினை குறித்து, இந்த அவையில் காவிரி ஆணையம் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறதா இந்த அரசால் அல்லது இல்லையா என்பதைக்கூடத் தெரிந்துகொள்ள முடியாத அளவிற்கு இந்த நிலைமை இருக்கிற காரணத்தால் நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம். *(கூச்சல்)*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்)*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திற்குத் தண்ணீர் தருவதிலே மைய ஆட்சியிலே இடம் பெற்றிருக்கிற தி.மு.க. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரியான பசி நேரத்தில்... *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைய ஆட்சியிலே இடம் பெற்றிருக்கிற தி.மு.க. தலைவர் அவர்களே, மைய ஆட்சியிலே இடம் பெற்றிருக்கிற பிரதமரை வற்புறுத்தி, மைய அரசை வற்புறுத்தி, அங்கு இருக்கிற பிரதமரை வற்புறுத்தி, தமிழகத்திற்குத் தண்ணீர் கொண்டு வருவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அவர்கள், தங்களுடைய குறையை அவை வெளிக்கொண்டு வந்துவிட்டது என்ற ஆத்திரத்தில் வெளிநடப்புச் செய்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, நான் நினைக்கிறேன். காவிரிப் பிரச்சினையில் தமிழகத்திற்கு உரிய நியாயம் வழங்கப்படா விட்டால் இப்போது அவையை விட்டு இவர்கள் வெளியேறியதைப்போல, அவர்களும் அமைச்சரவையை விட்டு வெளியேறக்கூடிய சூழ்நிலைக்கு அவர்கள் தயாராக இருக்கிறார்கள் என்று நான் எண்ணுகிறேன். அது விரைவில் நிறைவேறும் என்று கருதுகிறேன். திரு. ஞானசேகரன்.

*பிற்பகல் 2-50*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்தில் இருக்கக்கூடிய – எல்லாக் கட்சிகளுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒன்றுகூடி – தமிழகத்தைச் சார்ந்த யாரெல்லாம் மத்திய அமைச்சரவையிலே அங்கம் வகித்துக் கொண்டிருக்கிறார்களோ, அவர்கள் அத்தனை பேரும் நம்முடைய தமிழகத்தில் விவசாயிகள் வாடிக்கொண்டிருக்கின்ற காரணத்தால், காவிரி

ஆணையத்தினுடைய தலைவராக இருக்கக்கூடிய மாண்புமிகு பிரதமர் அவர்களை வற்புறுத்தி, எங்களுக்கு 205 T.M.C. தண்ணீரை கர்நாடகா விடாவிட்டால் அமைச்சரவையிலே ஒரு நிமிடம்கூட நாங்கள் அமைச்சராக இருக்கமாட்டோம் என்று சொல்லி அவர்கள் ராஜினாமா செய்தாக வேண்டும். அந்த நிலைக்கு நிச்சயமாக அவர்கள் வருவார்கள் என்று நம்புகிறோம். இல்லையென்றால் மக்களும் அவர்களை விடமாட்டார்கள். (குறுக்கீடு) என்னுடைய கேள்விக்கு வந்துவிடுகிறேன். ஒரே ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரமாகிவிட்டது. விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

### (அ) கோரிக்கை எண் 35—பாசனம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 35—பாசனம். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஆர். சக்ரபாணி, இருக்கையில் இல்லை.

திரு. ஆர். சக்ரபாணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை.

திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மே.ப. காமராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி, இருக்கையில் இல்லை.

திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரா. ஈஸ்வரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கே. ஆறுமுகம், இருக்கையில் இல்லை.

திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. துரை. கி. சரவணன், இருக்கையில் இல்லை.

திரு. துரை. கி. சரவணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. மு.பெ. சாமிநாதன், இருக்கையில் இல்லை.

திரு. மு.பெ. சாமிநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே.என். சேகரன், இருக்கையில் இல்லை.

திரு. கே.என். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. டி. சுதர்சனம், இருக்கையில் இல்லை.

திரு. டி. சுதர்சனம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. மீ.அ. வைதியலிங்கம், இருக்கையில் இல்லை.

திரு. மீ.அ. வைதியலிங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எ.வ. வேலு, இருக்கையில் இல்லை.

திரு. எ.வ. வேலு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கு. பிச்சாண்டி, இருக்கையில் இல்லை.

திரு. கு. பிச்சாண்டி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஆஸ்டின், இருக்கையில் இல்லை.

திரு. ஆஸ்டின் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், இருக்கையில் இல்லை.

திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. வி.கே. லட்சுமணன், இருக்கையில் இல்லை.

திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"பாசனம் பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.4,17,87,64,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

ஆகக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## (ஆ) கோரிக்கை எண் 36 பொதுப் பணிகள் கட்டடங்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 36 பொதுப் பணிகள்-கட்டடங்கள். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஆர். சக்ரபாணி, இருக்கையில் இல்லை.

திரு. ஆர். சக்ரபாணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை.

திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு.எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மே.ப. காமராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி, இருக்கையில் இல்லை.

திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரா. ஈஸ்வரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கே. ஆறுமுகம், இருக்கையில் இல்லை.

திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. துரை. கி. சரவணன், இருக்கையில் இல்லை.

திரு. துரை. கி. சரவணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. மீ.அ. வைதியலிங்கம், இருக்கையில் இல்லை.



திரு. மீ.அ. வைதியலிங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கு. பிச்சாண்டி, இருக்கையில் இல்லை.

திரு. கு. பிச்சாண்டி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஆஸ்டின், இருக்கையில் இல்லை.

திரு. ஆஸ்டின் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. அன்பில் பெரியசாமி, இருக்கையில் இல்லை.

திரு. அன்பில் பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"பொதுப் பணிகள்—கட்டடங்கள் பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.91,62,63,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## (இ) கோரிக்கை எண் 38 சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 38–சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. மீ.அ. வைதியலிங்கம், இருக்கையில் இல்லை.

திரு. மீ.அ. வைதியலிங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை.

திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. டி.பி.எம். மைதீன்கான், இருக்கையில் இல்லை.

திரு. டி.பி.எம். மைதீன்கான் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், இருக்கையில் இல்லை.

திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. க. பாரமலை, இருக்கையில் இல்லை.

திரு. க. பாரமலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. இ. புகழேந்தி, இருக்கையில் இல்லை.

திரு. இ. புகழேந்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கு. பிச்சாண்டி, இருக்கையில் இல்லை.

திரு. கு. பிச்சாண்டி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை.

திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. மு. அப்பாவு.



**திரு. மு. அப்பாவு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஆஸ்டின், இருக்கையில் இல்லை.

திரு. ஆஸ்டின் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கோவை தங்கம், இருக்கையில் இல்லை.

திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திருமதி எஸ். மகேஸ்வரி.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி எஸ். மகேஸ்வரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. துரை. கி. சரவணன், இருக்கையில் இல்லை.

திரு. துரை. கி. சரவணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி, இருக்கையில் இல்லை.

திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரா. ஈஸ்வரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. டி. சுதர்சனம், இருக்கையில் இல்லை.

திரு. டி. சுதர்சனம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஆர். சக்ரபாணி, இருக்கையில் இல்லை.

திரு. ஆர். சக்ரபாணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே. ஆறுமுகம், இருக்கையில் இல்லை.

திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ. இரா. மலையப்பசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.இரா. மலையப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. அ. அசோகன், இருக்கையில் இல்லை.

திரு. அ. அசோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எ.வ. வேலு, இருக்கையில் இல்லை.

திரு. எ.வ. வேலு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜெ. அன்பழகன், இருக்கையில் இல்லை.

திரு. ஜெ. அன்பழகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து பற்றிய 38 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.4,36,30,99,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

**([illegible]) கோரிக்கை எண் 54—பாசனம் குறித்த மூலதனச் செலவு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 54-பாசனம் குறித்த மூலதனச் செலவு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை.

திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி, இருக்கையில் இல்லை.

திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரா. ஈஸ்வரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. கே. ஆறுமுகம், இருக்கையில் இல்லை.

திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. செல்வி க. பாலபாரதி, இருக்கையில் இல்லை.

செல்வி க. பாலபாரதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"பாசனம் குறித்த மூலதனச் செலவு பற்றிய 54 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.5,21,31,56,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

### (உ) கோரிக்கை எண் 55-பொதுப் பணிகள் – கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 55-பொதுப் பணிகள் – கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு: வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.



**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை.

திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி, இருக்கையில் இல்லை.

திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரா. ஈஸ்வரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மே.ப. காமராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

"பொதுப் பணிகள் - கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு புற்றிய 55 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.2,20,69,32,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

**(ஊ) கோரிக்கை எண் 56-சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 56-சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி, இருக்கையில் இல்லை.

திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.



**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மே.ப. காமராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி, இருக்கையில் இல்லை.

திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ரா. ஈஸ்வரன்.

**திரு. ரா. ஈஸ்வரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரா. ஈஸ்வரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

"சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு பற்றிய 56 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.4,89,67,37,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 10-9-2001 காலை 10-00 மணிக்குக் கூடும்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-56 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும் ஆணைகளும்

-ஏதுமில்லை-

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

*90.* மானியக் கோரிக்கை எண் 35, 36, 54 மற்றும் 55 – பாசனம் மற்றும் கட்டடங்கள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 2001-2002. (தமிழ், ஆங்கிலம்)

*91.* மானியக் கோரிக்கை எண் 38 – சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து மற்றும் மானியக் கோரிக்கை எண் 56 – சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு, 2001-2002. (தமிழ், ஆங்கிலம்)



*92.* பொதுப் பணித் துறையின் திட்டச் சாதனை, 2001-2002. (தமிழ், ஆங்கிலம்)

*93.* நெடுஞ்சாலைத் துறையின் நிதிநிலை செயலாக்கச் சாதனைகள், 2001-2002. (தமிழ், ஆங்கிலம்)

— —

## இணைப்பு - I

(360 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

**கோரிக்கை எண் 35 – பாசனம்**

**கோரிக்கை எண் 36 – பொதுப் பணிகள்—கட்டடங்கள்**

**கோரிக்கை எண் 54 – பாசனம் குறித்த மூலதனச் செலவு**

**கோரிக்கை எண் 55 – பொதுப் பணிகள், கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு**

### கொள்கை விளக்கக் குறிப்பு, 2001–2002

**முன்னுரை**

பழமையும், பெருமையும் வாய்ந்த பொதுப் பணித் துறையின் "பாசனம் மற்றும் கட்டடங்கள்" மீதான கோரிக்கையை இம்மாமன்றத்தின்முன் வைப்பதில் நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன்.

பொதுப் பணித் துறையானது, பெரியதும், நடுத்தரமானதும், சிறிய அளவிலானதுமான பாசனத் திட்டங்களை வகுத்துச் செயல் படுத்துவதற்கும், அவற்றைப் பராமரிப்பதற்கும், மாநில அரசுத் துறைகளுக்கும் அரசின் இதர முகமைகளுக்கான கட்டடங்களைக் கட்டிக் கொடுப்பதற்கும், பராமரிப்பதற்குமான பொறுப்பை வகிக்கின்றது. நீர்த் தேவையைக் கோரும் எல்லாப் பகுதியினரும் பயன்பெறும் வகையில் நில மேற்பரப்பு நீரையும், நிலத்தடி நீரையும் நன்கு நிர்வகித்து, அறிவார்ந்த அறிவியல் ரீதியில் பங்கிடு செய்து அதன் மூலம் வேளாண்மை உற்பத்தியையும், உற்பத்தித் திறனையும் பெருக்குவதே பொதுப் பணித் துறையின் நீர்வள ஆதார அமைப்பின் நோக்கமாகும். நல்ல தரமான கட்டடங்களை சிறந்த தொழில்நுட்ப உதவியின் துணையோடு குறைந்த செலவில் கட்டுவதும், கட்டிய கட்டடங்களை நிறைவு தரும் வகையில் பராமரிப்பதும் கட்டட அமைப்பின் நோக்கமாகும்.

[2001 செப்டம்பர் 8

3. தலைமைப் பொறியாளர், வடிவமைப்பு, ஆராய்ச்சி மற்றும் கட்டுமான ஆதாரம், சென்னை

4. தலைமைப் பொறியாளர், இயக்கம் மற்றும் பராமரிப்பு, சென்னை

5. தலைமைப் பொறியாளர், நிலத்தடி மற்றும் நிலமேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம், சென்னை

6 தலைமைப் பொறியாளர், சென்னை மண்டலம், சென்னை

7. தலைமைப் பொறியாளர், திருச்சிராப்பள்ளி மண்டலம், திருச்சிராப்பள்ளி

8. தலைமைப் பொறியாளர், பொள்ளாச்சி மண்டலம், கோவை

9. தலைமைப் பொறியாளர், மதுரை மண்டலம், மதுரை

10. இயக்குனர் மற்றும் தலைமைப் பொறியாளர், நீர் ஆய்வு நிறுவனம், தரமணி, சென்னை

11. இயக்குனர் மற்றும் தலைமைப் பொறியாளர், பாசன மேலாண்மைப் பயிற்சி நிலையம், திருச்சிராப்பள்ளி.

**பாசன நீர் பயன்பாட்டில் சிக்கனம்**

மாநிலத்தின் மேற்பரப்பு நீர் அநேகமாக முழுவதும் பயன்படுத்தப்பட்டுவிட்ட நிலையில், பெரியது மற்றும் நடுத்தர பாசனத் திட்டங்களுக்கான வாய்ப்புகள் இப்போது மிகவும் குறைவாகவே உள்ளன. இந்தச் சூழலில், தற்போதைய கால்வாய்ப் பாசன முறையையும், ஏரிப்பாசன முறையையும் நவீனப்படுத்துவதன் மூலம் நீர் வீணாகாமல் தடுப்பதுடன், நீரைச் சீரான வகையில் உரிய அளவிற்கு மட்டுமே பயன்படுத்துவதிலும் தற்போது அதிகக் கவனம் செலுத்தப்படுகிறது. இம்முயற்சியால் சேமிக்கப்படும் நீரைக் கொண்டுதான் புதிய பகுதிகளில் பயிர் சாகுபடி செய்யவும், ஏற்கெனவே சாகுபடி செய்யப்படும் பகுதிகளில் கூடுதலாகச் சாகுபடி செய்யவும் இயலும்.

இந்நோக்கத்துடன் பெரியாறு – வைகை பாசன அமைப்பை நவீனப்படுத்தும் பணி உலக வங்கி நிதி உதவியுடன் மேற்கொள்ளப்பட்டது. இதேபோல், தேசிய நீர் மேலாண்மைத் திட்டத்தின்கீழ், உலக வங்கி



2001 செப்டம்பர் 8]

உதவியுடன் சாத்தனூர், கோதையாறு, தாமிரபரணி, கம்பம் பள்ளதாக்கு, அமராவதி. பழைய கால்வாய்கள், சேத்தியாத்தோப்பு, மருதா நதி போன்றவற்றுடன் இதர பாசனப் பரப்பு அமைப்புகளின் செயல் திறனை மேம்படுத்த பாசன கட்டுமானங்களைப் புனரமைத்தும், நவீனப்படுத்தியும், நீர் விநியோக அளவை முன்கூட்டியே அறிந்துகொள்ளும் வகையிலும், ஆயக்கட்டு முழுமைக்கும் சரிசமமாகப் பாசன நீர் வழங்கும் முறையைப் பின்பற்றியும் உற்பத்தியளவையும் பண்ணை வருவாயையும் பெருக்கும் நோக்கத்தோடு செயல்படுத்தப்பட்டது. தேசிய நீர் மேலாண்மைத் திட்டத்தைப் போலவே பொறியியல் சிறப்பியல்புகளும் வேறு பல சிறப்பியல்புகளும் கூடுதலாக உள்ள தமிழ்நாடு நீர் வளத் தொகுப்புத் திட்டமானது, 1995–96 முதல் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

நிதி ஒதுக்கீடு

பெரியது மற்றும் நடுத்தர பாசனத் திட்டங்களுக்கு 2000–2001 ஆம் ஆண்டில் ரூ.430.22 கோடி ஒதுக்கப்பட்டது. தமிழ்நாடு நீர் வள ஆதாரத் தொகுப்புத் திட்டத்திற்கான ஒதுக்கீடு ரூ.217.87 கோடியும் இதில் அடங்கும். 2001–2002 ஆம் ஆண்டிற்கு, தமிழ்நாடு நீர் வளத் தொகுப்புத் திட்டத்திற்கு ரூ.374.08 கோடி உட்பட ஒதுக்கப்பட்ட நிதியளவு ரூ.510.77 கோடி ஆகும்.

பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள்

மாநிலத்தில் மேற்பரப்பு நீர் அநேகமாக முற்றிலும் பயன்படுத்திவிட்ட நிலையில், பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் எதுவும் தற்போது செயலாக்கத்தில் இல்லை.

மாநில திட்டப் பணிகள்

நடுத்தர மற்றும் சிறுபாசனத் திட்டங்கள்

2001–2002 ஆம் ஆண்டு தொடக்கத்தில் பின்வரும் நடுத்தர மற்றும் சிறிய பாசனத் திட்டங்கள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வந்தன:

(1) பெரியாறு அணையை வலுப்படுத்துதல் (பீர்மேடு, கேரள மாநிலம்)

(2) நங்கஞ்சியாறு நீர்த்தேக்கம் (திண்டுக்கல் மாவட்டம்)

(3) இருக்கன்குடி நீர்த்தேக்கம் (விருதுநகர் மாவட்டம்)

[2001 செப்டம்பர் 8

**பாசனம்**

**பாசன நிலை**

புவியியல் அடிப்படையில் 130 இலட்சம் எக்டேர் நிலப்பரப்பளவு கொண்டுள்ள தமிழ்நாடு, இந்திய மாநிலங்களில் 11 ஆம் இடத்தை வகிக்கிறது. தமிழ்நாட்டில் பயிரிடப்படும் நிலத்தின் பரப்பு சுமார் 60 இலட்சம் எக்டேர் ஆகும். இதில் சுமார் 30 இலட்சம் எக்டேர் பரப்பு, அதாவது 50 விழுக்காடு கீழே குறிப்பிட்டுள்ள நீர் ஆதாரங்களிலிருந்து பாசன வசதியைப் பெறுகிறது.

(1) கால்வாய்கள் : 9.50 இலட்சம் எக்டேர்

(2) ஏரிகள் : 9.00 இலட்சம் எக்டேர்

(3) கிணறுகள், குழாய்க் கிணறுகள் : 11.50 இலட்சம் எக்டேர்

**தமிழ்நாட்டின் பாசன வளர்ச்சி**

தமிழ்நாட்டில் பெரியது மற்றும் நடுத்தரமான நீர் ஆதாரங்களிலிருந்து பாசன வசதி பெறக்கூடிய பாசனப் பரப்பானது 15 இலட்சம் எக்டேர் என தேசிய வேளாண்மைக் குழு 1976 ஆம் ஆண்டில் மதிப்பிட்டுள்ளது. முதல் ஐந்தாண்டு திட்டத் தொடக்கத்தில் 23 பெரியது மற்றும் நடுத்தரத் திட்டங்களின் மூலம் 11 இலட்சம் எக்டேர் பகுதிகளுக்குப் பாசன வசதி அளிக்கப்பட்டது. ஒன்பதாவது திட்டக் காலத்தில் 2000–2001 முடிய பாசனம் பெறும் பகுதி 26.26 இலட்சம் எக்டேராக உயர்ந்தது.

2001–2002 ஆம் ஆண்டில் 1763 எக்டேர் கூடுதல் நிலங்களுக்குப் பாசன வசதி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**அண்டை மாநில நதிகளிலிருந்து தமிழ்நாட்டிற்கு நீர் திருப்பி விடுதல்**

தமிழ்நாடு, அநேகமாக தனது மேற்பரப்பு நீர்வளம் முழுவதையும் பயன்படுத்திவிட்டது. ஆனால், அண்டை மாநிலங்களான கர்நாடகம், கேரளம், ஆந்திரப்பிரதேசம் ஆகியவை நல்ல நீர்வளம் பெற்றுள்ளன. தமிழ்நாட்டின் நீர்வளத்தை மேலும் பெருக்குவதற்கு அண்டை மாநில வடிநிலப் பகுதிகளில் உள்ள மிகை நீரையே நம்பியிருக்க வேண்டியுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு அண்டை மாநிலங்களின் வடிநில மிகை நீரைத் தமிழ்நாட்டுக்குத் திருப்பிவிடுவதற்கு மத்திய அரசு உருவாக்கிய தேசிய நீர்வள மேம்பாட்டு முகமையைத் தமிழ்நாடு அணுகியுள்ளது.



2001 செப்டம்பர் 8]

தேசிய நீர்வள மேம்பாட்டு முகமையானது, இந்திய தீபகற்பத்திலுள்ள ஆற்று நீர்வள மேம்பாட்டுத் திட்டங்களை ஆய்வு செய்கிறது. மதுரை, இராமநாதபுரம், விருதுநகர் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களின் வறட்சியான பகுதிகள் பயன்பெறும் வகையில் கேரள மாநிலத்தில் மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளான பம்பா மற்றும் அச்சன்கோவில் ஆறுகளின் மிகை நீரைத் திருப்புதலும் இதில் அடங்கும். இவ்வரசு இதுபற்றி கேரள அரசுடனும், மத்திய அரசுடனும் தொடர்பு கொண்டு மேல் நடவடிக்கை எடுத்து வருகிறது.

மகாநதி – கோதாவரி – கிருஷ்ணா – பெண்ணாறு – பாலாறு – காவிரி – வைகை இணைப்புகளில் மிகுதியான நீரைத் திருப்புதல் குறித்தும் தேசிய நீர்வள மேம்பாட்டு முகமையின் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, அத்திட்டங்களின் சாத்தியக் கூறுகள் பற்றிய முன்னோடி அறிக்கையும் தயாரிக்கப்பட்டிருக்கிறது. இதனையன்றி, பாண்டியாறு–புன்னம்புழா ஆறுகளில் பாசனம் மற்றும் புனல் மின் உற்பத்தித் திட்டத்தை நிறைவேற்ற கேரள அரசுடன் முழு மூச்சாகத் தொடர்பு கொண்டு வருகிறது.

**நீர்வள ஆதார அமைப்பு**

நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டத்தைச் செயலாக்குவதில் முதற்படியாகவும், அதனைத் திறம்படச் செயலாக்குவதன் பொருட்டும், தனித்தன்மையுடன் செயல் புரியவும் பொதுப் பணித் துறை, நீர்வள ஆதார அமைப்பு எனவும், கட்டடங்கள் அமைப்பு எனவும் 1995 டிசம்பர் முதல் மாற்றியமைக்கப்பட்டது.

இம்மாநிலத்தின் நீர்ப் பங்கீட்டு நிர்வாகம், நீர்வள ஆதார அமைப்பின்கீழ் வடிநில வாரியாகப் பிரித்து பரவலாக்கப்பட்டு, சென்னை, திருச்சிராப்பள்ளி, பொள்ளாச்சி, மதுரை என நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மண்டலமும் ஒரு வடிநில மேலாளர் என்பவரைத் தலைவராகக் கொண்டுள்ளது. இவர் தலைமைப் பொறியாளர் பதவி நிலையில் பணியாற்றுகிறார்.

நீர்வள ஆதார அமைப்பானது, கீழே குறிப்பிட்டுள்ள தலைமைப் பொறியாளர்களுடன் செயல்படுகிறது.

1. முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு, சென்னை
2. தலைமைப் பொறியாளர், திட்ட உருவாக்கம், சென்னை

[2001 செப்டம்பர் 8

(4) சண்முகாநதி நீர்த்தேக்கம் (தேனி மாவட்டம்)

(5) மலட்டாறு அணைக்கட்டுத் திட்டம் (இராமநாதபுரம் மாவட்டம்)

(6) உசிலம்பட்டி வட்டத்தில் 58 கிராமங்களுக்குப் பாசன வசதி அளித்தல் (மதுரை மாவட்டம்)

(7) ஆண்டியப்பனூர் ஓடை நீர்த்தேக்கம் (வேலூர் மாவட்டம்)

(8) செண்பகத்தோப்பு நீர்த்தேக்கம் (திருவண்ணாமலை மாவட்டம்)

(9) வரட்டாறு-குப்பத்து ஓடை நீர்த்தேக்கம் (திருநெல்வேலி மாவட்டம்)

(10) பத்தலபள்ளி-மலட்டாறு நீர்த்தேக்கத் திட்டம் (வேலூர் மாவட்டம்)

(11) குப்பநத்தம் நீர்த்தேக்கத் திட்டம் (திருவண்ணாமலை மாவட்டம்)

(12) வரட்டாறு – வள்ளிமதுரை நீர்த்தேக்கத் திட்டம் (தர்மபுரி மாவட்டம்)

(13) கால்வாய்-சடையநேரித் திட்டம் (தூத்துக்குடி மாவட்டம்)

(14) நாராயண காவேரி வாய்க்கால் (இராமநாதபுரம் மாவட்டம்)

(15) உப்பாறு ஓடையின் குறுக்கே புதிய குளம் அமைத்தல் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்)



2001 செப்டம்பர் 8]

(16) முதலை முத்துவாரியின் குறுக்கே புதிய குளம் அமைத்தல் (தஞ்சாவூர் மாவட்டம்)

(17) கடனா விரிவாக்கத் திட்டம் (திருநெல்வேலி மாவட்டம்)

(18) நாயோடையின் குறுக்கே புதிய குளம் அமைத்தல் (திண்டுக்கல் மாவட்டம்)

(19) இராமக்கல் ஓடை மற்றும் ஆனைவிழுந்தான் ஓடைகளின் குறுக்கே புதிய குளம் (திண்டுக்கல் மாவட்டம்)

(20) நல்லதங்காள் ஓடையின் குறுக்கே குளம் அமைத்தல் (ஈரோடு மாவட்டம்)

(21) ஆண்டி ஓடையின் குறுக்கே அணை கட்டுதல் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்)

(22) சாஸ்தாகோயில் அருகே நகரியாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் (விருதுநகர் மாவட்டம்)

(23) வெள்ளக்கால் கானாறு நீர்த்தேக்கம் (வேலூர் மாவட்டம்)

(24) சிறுமலையாற்றின் குறுக்கே புதிய குளம் அமைத்தல் (திண்டுக்கல் மாவட்டம்)

(25) கொடகனார் நீர்த்தேக்கத்திலிருந்து வெள்ளியணை மற்றும் மூன்று கண்மாய்களுக்குப் பாசன வசதி அளித்தல்

(26) நீர்த்தேக்கங்களில் உள்ள பூங்காக்களை மேம்படுத்தி அழகுபடுத்துதல்

(27) வண்டியூர் குளத்தைத் தூர் எடுத்து நவீனப்படுத்துதல் (மதுரை மாவட்டம்)

(28) தேனி மாவட்டம் உத்தமபாளையம் வட்டம் 18 ஆம் கால்வாய் அமைக்கும் திட்டம்

[2001 செப்டம்பர் 8

(29) திருச்சிராப்பள்ளி மாவட்டம் காவிரி மேலணையில் (முக்கொம்பு) மேற்புறம் மற்றும் கீழ்புறம் கான்கிரீட் சுவர்கள் மற்றும் தூண்கள் பலப்படுத்துதல்

(30) கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டத்தில் மாம்பழத்துறையாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம்

(31) நிலையூர் கால்வாய் நீட்டித்தல் (மதுரை மாவட்டம்)

(32) பாலையூர் மற்றும் வாளமழையாற்றின் குறுக்கே உள்ளாறு நீர்த்தேக்கம் (திருநெல்வேலி மாவட்டம்)

(33) மிருகண்டா நதியின் குறுக்கே நீர்த்தேக்கம் (திருவண்ணாமலை மாவட்டம்)

(34) கீழ்பவானி பாசன அமைப்பைப் புனரமைத்து நவீனப்படுத்துதல் மற்றும் கீழ்பவானி பாசனப் பரப்பில் 23,000 ஏக்கர் நிலங்கள் சேர்த்தல்

(35) கூடுதல் நிதியில் கும்பகோணம் நகர எல்லைக்குள் உள்ள நான்கு வாய்க்கால்களைப் புனரமைத்தல்

(36) உய்யக்கொண்டான் வாய்க்கால், குடமுருட்டி ஆறு, அரியாறு, கோரையாறு தூர்வாருதல் மற்றும் திருச்சி நகரத்தில் வெள்ளச் சேதத்தைப் பாதுகாக்க கரைகளை வலுப்படுத்துதல்

(37) திருச்சியிலிருந்து கரூர் வரை காவிரியில் கருவேல மரங்கள் மற்றும் காட்டாமணக்குச் செடிகளை அகற்றுதல்

(38) மாசுபட்ட நொய்யல் ஓரத்துப்பாளையம் நீரைத் திருப்பிவிட புகலூர் கால்வாயில் நீர்க்குழி கட்டுதல்

(39) கரூர் மாவட்டம், பள்ளப்பட்டி அருகே நங்காஞ்சியாறு ஓடையின் குறுக்கே உள்ள அணைக்கட்டு புனரமைத்தல்



2001 செப்டம்பர் 8]

(40) திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள கதிரியின்குளம் மற்றும் அதன் வாய்க்கால்கள் தூர் வாருதல்

(41) சென்னம்பட்டி அணைக்கட்டுத் திட்டக் கால்வாயில் உள்ள எஞ்சிய பணிகள்

(42) மேலூரிலிருந்து மரவன்மங்கலம் குளம் வரை பெரியார் பிரதானக் கால்வாயில் உள்ள எஞ்சிய பணிகள்

(43) குழித்துறை ஆற்றின் விளாத்துறை நீரேற்றுப் பாசனத் திட்டத்தைப் புனரமைத்தல் (நீ.ஆ.தொ.தி)

(44) திருச்சி மாநகரத்தில் வெள்ளத் தடுப்புத் திட்டம்

(45) பொய்கையாறு நீர்த்தேக்கம் (நீ.ஆ.தொ.தி) (கன்னியாகுமரி மாவட்டம்)

(46) நம்பியாறு நீர்த்தேக்கம் (நீ.ஆ.தொ.தி) (திருநெல்வேலி மாவட்டம்)

(47) இராஜாதோப்புகானாறு நீர்த்தேக்கம் (நீ.ஆ.தொ.தி) (வேலூர் மாவட்டம்)

(48) கவுண்டின்யா நதி (மோர்தானா) நீர்த்தேக்கம் (நீ.ஆ.தொ.தி) (வேலூர் மாவட்டம்)

(49) அடவிநயினார்கோயில் நீர்த்தேக்கம் (நீ.ஆ.தொ.தி) (திருநெல்வேலி மாவட்டம்)

(50) அத்திக்குளம் கிராமத்தில் கிருதமால் ஆற்றின் குறுக்கே அணை கட்டுதல் (நீ.ஆ.தொ.தி) (விருதுநகர் மாவட்டம்)

(51) வடக்குப் பச்சையாறு நீர்த்தேக்கம் (நீ.ஆ.தொ.தி) (திருநெல்வேலி மாவட்டம்)

[2001 செப்டம்பர் 8

*(52)* கொடுமுடியாறு நீர்த்தேக்கத் திட்டம் (நீ.ஆ.தொ.தி) (திருநெல்வேலி மாவட்டம்)

*(53)* (வராகநதி) சோத்துப்பாறை நீர்த்தேக்கம் (மதுரை மாவட்டம்) (நீ.ஆ.தொ.தி)

குறிப்பு: மொத்தம் 53 திட்டங்களில் 9 திட்டங்கள், (வரிசை எண் 45 முதல் 53 வரை) நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டத்தின்கீழ் "நடைபெறும் நீர்த்தேக்கத் திட்டப் பணிகள் முடிவாக்கம்" என்ற தலைப்பின்கீழ் செயலாக்கப்படுகின்றன.

**நடைபெற்றுவரும் நடுத்தர பாசனத் திட்டப் பணிகளின் செயலாக்க நிலை**

*(1)* பெரியாறு அணையை வலுப்படுத்துதல்

பெரியாறு நீர்த்தேக்கத் திட்டமானது ஒரு வடிநிலப் பரப்பிலிருந்து மற்றொரு வடிநிலப் பரப்பிற்கு நீரைத் திருப்புவதற்காக மேற்கொண்ட துணிவான முயற்சியாகும். இம்முயற்சியானது மேற்கு நோக்கிப் பாயும் பெரியாறு நீரை கிழக்கு நோக்கித் திருப்பி, வைகை வடிநிலப் பரப்பின் பாசனத்திற்காக கர்னல் பென்னி குவிக் அவர்களால் நிறைவேற்றப்பட்டது. இத்திட்டம் 1895 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டது.

திருவிதாங்கூர் அரசிற்கும் சென்னை மாகாணத்திற்கும் இடையே ஏற்பட்ட நீண்ட காலக் குத்தகை ஒப்பந்தத்தின் அடிப்படையில் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டது. இந்தக் குத்தகை ஒப்பந்தம் 1886 ஆம் ஆண்டு உருவாகியது. இதற்குப் பிறகு 1970 ஆம் ஆண்டில் தமிழ்நாடு – கேரள அரசுகளுக்கிடையே பெரியாறு நீரைக் கொண்டு மின் உற்பத்தி செய்வது பற்றி ஓர் ஒப்பந்தம் உருவாகியது. பெரியாறு அணையில் நான்கு பகுதிகள் அதாவது, (1) பிரதான அணை (2) சிற்றணை (3) மண்ணணை மற்றும் (4) உபரி நீர் வழிந்தோடி மதகு ஆகியவை உள்ளன.

பெரியாறு அணையின் பாதுகாப்பு குறித்த கவலையை 1979 ஆம் ஆண்டில் கேரள அரசு எழுப்பியது. மத்திய அரசின் அறிவுரைகளுக் கிணங்க, மத்திய நீர்க் குழுமத்தின் தலைவரான திரு. கே.சி. தாமஸ், அக்குழுமத்தின் அதிகாரிகள் மற்றும் தமிழ்நாடு – கேரள அரசுப் பொறியாளர்கள், பெரியாறு அணையை 23–11–1979 அன்று ஆய்வு செய்தனர். 25–11–1979 அன்று திருவனந்தபுரத்தில் நடைபெற்ற கூட்டத்தில்



2001 செப்டம்பர் 8]

நவீன வடிவமைப்புப்படி அணையைப் பலப்படுத்துதல், அணையில் ஏற்படக்கூடிய அழுத்தம் மற்றும் நில நடுக்கத்தினால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் ஆகியவை குறித்து கலந்துரையாடப்பட்டன. மத்திய நீர்க் குழுமத்தின் தலைவர் ஒரு சில பலப்படுத்துதல் பணிகளை அதாவது அவசர கால நடவடிக்கைகள், இடைக்கால நடவடிக்கைகள் மற்றும் நீண்ட கால நடவடிக்கைகள் என்றவற்றை மேற்கொள்ளலாமென்று தெரிவித்தார். இதற்கிடையில் பெரியாறு அணையின் பிரதான அணையைப் பலப்படுத்துவதன் பொருட்டு அணையின் முழு நீர் மட்டமான152 அடியிலிருந்து 136 அடிக்கு தற்காலிகமாகக் குறைக்கலாம் என பரிந்துரைக்கப்பட்டது. மத்திய நீர்க் குழுமத்தின் பரிந்துரைகளின்படி, தமிழ்நாடு அரசு பணிகளைச் செய்து முடித்துள்ளது. பின்னர், மார்ச் 1986 ஆம் ஆண்டில் மத்திய நீர்க் குழுமம் கீழ்க்கண்ட பலப்படுத்தும் பணிகளைச் செய்து முடிக்கலாமென்றும், அவ்வாறு பணிகள் செய்து முடிக்கப்பட்டவுடன் அணையில் நீரை 152 அடி வரையில் தேக்கி வைக்க முடியுமென்றும் தெரிவித்தது.

*(அ)* சிற்றணையின் கைப்பிடிச் சுவர் 160 அடிக்கு உயர்த்தப்படலாம்.

*(ஆ)* பிரதான அணை மற்றும் சிற்றணையின் கைப்பிடிச் சுவர் ஆகியவை இணைக்கப்பட வேண்டும்.

*(இ)* பிரதான அணை மற்றும் சிற்றணைக்கு மேற்பகுதியில் உள்ள திவு, பிரதான அணை மற்றும் உபரி நீர் வழிந்தோடி மற்றும் நீர்த் தேக்கத்தின் விளிம்பு ஆகியவற்றின் இரு பக்கங்களிலும் 165 அடி வரையில் உயர்த்தப்பட வேண்டும்.

*(ஈ)* புதிய மூன்று கூடுதல் மதகின் கீழ் நீர்ச் சக்தி வெளியேற்றும் பணி மற்றும் தடுப்புச் சுவர் கட்டும் பணி.

கேரள அரசு கைப்பிடிச் சுவரை உயர்த்துவதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளதால், இந்தப் பணி முடிக்கப்படவில்லை. நீர்ச் சக்தி வெளியேற்றும் பணியை முடிப்பதற்குக் காலதாமதமாகியது. குத்தகைக்கு அளிக்கப்பட்ட இடத்திலிருந்து கற்களை வெட்டி பணிகளை நிறைவேற்றி வந்துகொண்டிருந்த நிலையில், வன விலங்குப் பாதுகாப்புச் சட்டம், 1972 மற்றும் பிற சட்டங்களைச் சுட்டிக்காட்டி, நீர்ச் சக்தி வெளியேற்றும் பணியை நிறைவேற்ற கேரள அரசு மறுப்புகளை தெரிவித்ததினால், இப்பணியை நிறைவேற்றுவதில் காலதாமதம் ஆகியது. கேரள உயர் நீதிமன்றத்தின் தலையீட்டினால், இப்பணி மீண்டும் தொடங்கப்பட்டு,

[2001 செப்டம்பர் 8

பணிக்கான கற்கள் வேறு இடத்திலிருந்து கொண்டுவரப்பட்டு, இப்பணி தற்பொழுது முடிக்கப்பட்டுள்ளது.

மத்திய நீர்க் குழுமம் பரிந்துரைத்துள்ளவாறு, சிற்றணையை கான்கிரீட் பூச்சு பூசி பலப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. சிற்றணையைப் பலப்படுத்த கேரள அரசு அதன் இசைவை அளிக்க முன்வரவில்லை. எனினும், இந்தப் பலப்படுத்தும் பணியைத் தொடங்குவதைத் தவிர, தமிழ்நாட்டிற்கு வேறு வழி இல்லை. இந்தப் பணி தொடங்கவிருந்தபொழுது, 5–8–1999 அன்று கேரள அரசின் வனத் துறை அதிகாரிகள் எந்தவிதமான காரணத்தையும் தெரிவிக்காமல், இந்தப் பணி தொடங்குவதைத் தடை செய்தனர். இந்தப் பணிக்கான ஒப்பந்தக்காரர் கேரள உயர் நீதிமன்றத்தில் ஒரு வழக்கைத் தாக்கல் செய்துள்ளார். அவ்வழக்கில், இந்தப் பணியை நிறைவேற்ற கேரள அரசு அனுமதிக்க வேண்டுமென்று முறையீடு செய்துள்ளார். இந்த வழக்கு கேரள உயர் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

பெரியாறு அணையில் நீரைத் தேக்கி வைப்பது குறித்து மாறுபட்ட கருத்துக்களைக் கொண்ட நீதிப் பேராணைகள் கேரள மற்றும் சென்னை உயர் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டன. தமிழ்நாடு அரசு 14–12–1998–ல் இவ்விரு நீதிமன்றங்களில் உள்ள நீதிப் பேராணைகளை உச்ச நீதிமன்றத்திற்கு மாற்ற வேண்டி மனுவினை உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது. தமிழ்நாடு அரசு மற்றும் பிறர் தாக்கல் செய்த மாற்றல் மனுவை 1–2–1999 அன்று விசாரித்தபொழுது, தமிழ்நாடு அரசு முறையீடு செய்தவாறு இவ்விரு நீதிமன்றங்களின் முன் நிலுவையில் உள்ள வழக்குகளை மேற்கொண்டு விசாரிக்க தடையாணை வழங்கியது. இந்த மாற்றல் மனு 13–12–1999 அன்று மீண்டும் உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தபொழுது, இவ்வழக்கை எட்டு வார காலத்திற்குத் தள்ளிவைத்து, இந்த இடைப்பட்ட காலத்திற்குள் சம்மந்தப்பட்ட மாநிலங்களிடையே ஓர் ஒருமித்த கருத்து ஏற்படக் கூடுமென்று நம்பிக்கை தெரிவித்தது.

உச்ச நீதிமன்றத்தின் கருத்திற்கேற்ப, 5–4–2000 அன்று தமிழ்நாடு – கேரள முதலமைச்சர்களிடையே நடைபெற்ற பேச்சு வார்த்தையில் ஓர் ஒருமித்த கருத்தும் ஏற்படவில்லை. உச்ச நீதிமன்றம் 28–4–2000 அன்று விழைந்ததற்கிணங்க, 19–5–2000 அன்று மத்திய நீர் ஆதார அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு – கேரள அரசுகளின் முதலமைச்சர்களது கூட்டத்தினைக் கூட்டினார். மத்திய நீர் ஆதார அமைச்சர் அவர்கள் இரு மாநிலங்களின் கருத்துக்கள் மற்றும்



2001 செப்டம்பர் 8]

வல்லுநர்களின் கருத்துக்களைக் கேட்டறிந்த பின்னர் இரண்டு மாநிலங்களைக் கலந்தாலோசித்து, பெரியாறு அணையை ஆய்வு செய்து அவ்வணையில் நீரைப் படிப்படியாக உயர்த்துவதற்குப் பரிந்துரை செய்வதற்காக சிறந்த பொறியாளர்களைக் கொண்ட ஒரு குழு ஏற்படுத்தப்படுமென்று முடிவு செய்தார். இம்முடிவிற்கிணங்க சூன் 2000–ல் ஒரு குழு ஏற்படுத்தப்பட்டது.

இந்த வல்லுநர் குழு அதன் இறுதி அறிக்கையை மார்ச் 2001–ல் மத்திய நீர் ஆதார அமைச்சகத்திற்கு அளித்துள்ளது. அதன்மீது இவ்வரசின் கருத்துக்களை அனுப்புமாறு மத்திய நீர் ஆதார அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார். இதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்த மாற்றல் மனுக்கள் உச்ச நீதிமன்றத்தின் முன் நிலுவையில் இன்னமும் உள்ளன.

(2) நங்காஞ்சியாறு நீர்த்தேக்கத் திட்டம் (திண்டுக்கல் மாவட்டம்)

திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், இடையன்கோட்டை கிராமத்தினருகில் அமராவதியாற்றின் கிளையாறான நங்காஞ்சியாற்றின் குறுக்கே இந்நீர்த்தேக்கம் ரூ. 20.70 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினால் திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் வட்டத்திலுள்ள இடையன்கோட்டை, வளயபட்டி, சின்னக்காமாபட்டி கிராமங்களிலும் மற்றும் கரூர் மாவட்டம், கரூர் வட்டத்திலுள்ள சேந்தமங்கலம் கிராமத்திலும் 24 எக்டேர் பழைய பாசன நிலம் பாசன உறுதியும், 2530 எக்டேர் புதிய நிலம் பாசன வசதியும் பெறும்.

இத்திட்டத்தில் தடையிலா நீர்வழிந்தோடி அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. மண் அணை மற்றும் வழிந்தோடி அமைக்கும் பணியும், பிரதானக் கால்வாய் வெட்டும் பணியும் முடிவடையும் நிலையில் உள்ளன. இத்திட்டத்திற்கான திருத்திய மதிப்பீடு ரூ.37.36 கோடிக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. புதிய ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு அநேக பணிகளுக்கு ஒப்பந்தக்காரர்கள் நியமிக்கப்பட்டு விட்டனர். பணிகள் நடைபெற்று வருகின்றன.

(3) இருக்கன்குடி நீர்த்தேக்கம் (விருதுநகர் மாவட்டம்)

விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம், இருக்கன்குடி கிராமத்தினருகே வைப்பாற்றின் குறுக்கே ரூ.28.70 கோடி மதிப்பீட்டில்

இந்நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் தூத்துக்குடி மாவட்டம், விளாத்திக்குளம் வட்டத்தில், இராஜாபட்டி, மாசர்பட்டி, சக்கிகாப்பட்டி, தப்பாத்து, கீழநாட்டுக்குறிச்சி, மேல்கரண்டை, செங்கோட்டை, கீழ்கரண்டை, வடமலாபுரம், வெளவால் தொத்தி, வேடப்பட்டி ஆகிய கிராமங்களில் மொத்தம் 3,705 எக்டேர் புன்செய் நிலத்திற்குப் புதிய பாசன வசதியும், 254 எக்டேர் நிலத்திற்குப் பாசன உறுதியும், 255 எக்டேர் விடுபட்ட நிலத்திற்குப் பாசன வசதியும் கிடைக்க வழிவகை செய்கிறது.

அர்ஜுனா மற்றும் வைப்பாறு நதிகளின் குறுக்கே கல்லணை கட்டும் பணி பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளது. கால்வாய் கட்டும் பணி 75 விழுக்காடும், கிளைக் கால்வாய்ப் பணிகளில் 95 விழுக்காடும் முடிவடைந்துள்ளது. கால்வாயில் குறுக்கு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மண் அணை (வலது புறம் 1300 மீ – 1850 மீ) அமைக்கும் பணி தரைமட்டம் அளவுக்கு முடிவுற்றது. ஆழமற்ற பகுதி மண் அணை அமைக்கும் பணி விரைவில் எடுத்துக்கொள்ளப்படும். எல்லாப் பணிகளும் மார்ச் 2002–ல் முடிக்கப்படும்.

*(4) சண்முகாநதி நீர்த்தேக்கம் (தேனி மாவட்டம்)*

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டத்திலுள்ள இராயப்பன்பட்டி கிராமத்தருகே சண்முகாநதியின் (வரட்டாறு) குறுக்கே நீர்த்தேக்கம் அமைப்பதற்கு இத்திட்டம் வகை செய்கிறது.

இத்திட்டத்தினால் கம்பம் வட்டத்திலுள்ள இராயப்பன்பட்டி கிராமம் உத்தமபாளையம் வட்டத்திலுள்ள மல்லிங்கபுரம், சின்னஓவலாபுரம், இரசக்குநாயக்கனூர், கன்னிசேர்வைப்பட்டி, அழகாபுரி, ஓடைப்பட்டி மற்றும் சீபாலகோட்டை கிராமங்களில் 664 எக்டேர் புதிய புன்செய் நிலங்களுக்குப் பாசன வசதியளிக்கப்படும்.

அரசு இத்திட்டத்திற்கான மதிப்பீட்டிற்கு ரூ. 6.95 கோடி ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டத்தில் மண் அணை, கல்லணை, வழிந்தோடா பிரிவு, தடையில்லா நீர்வழிந்தோடி, தலை மதகு மற்றும் தேவையான கட்டமைப்புகளுடன்கூடிய கால்வாய்கள் அடங்கும்.

இத்திட்டத்தில் மண் அணை அமைக்கும் பணி பெரும் பகுதி முடிவடைந்துள்ளது. கல்லணை கட்டுமானப் பணி 85 விழுக்காடும், குறுக்கு கட்டுமானப் பணிகள் 80 விழுக்காடும், காரைப் பூசுதல் 65 விழுக்காடும் முடிவுற்றுள்ளன. தடையில்லா நீர் வழிந்தோடி, தலை





மதகு கட்டுதல் ஆகிய பணிகள் நடைபெற்று வருகின்றன. 1998 அக்டோபர் திங்களில் அரசு இப்பணிக்கான திருத்திய மதிப்பீட்டிற்கு ரூ.14.70 கோடி ஒப்புதல் வழங்கியுள்ளது. நடப்பு நிதியாண்டில் எல்லாப் பணிகளும் முடிக்கப்படும்.

*(5) மலட்டாறு அணைக்கட்டுத் திட்டம் (இராமநாதபுரம் மாவட்டம்)*

இராமநாதபுரம் மாவட்டம், கமுதி வட்டம், செங்கப்பாடி கிராமம் அருகில், கமுதி நீர்க் கட்டுப்பாட்டு மதகிற்குக் கீழ்ப்புறமாக கிருதமால் மற்றும் பரளையாறுகள் மலட்டாற்றுடன் சங்கமிக்கும் இடத்திற்குக்கீழ் மலட்டாற்றின் குறுக்கே அணை கட்ட இத்திட்டம் வகை செய்கிறது.

இத்திட்டத்தின் மூலம் கடலாடி மற்றும் கமுதி வட்டங்களிலுள்ள ஓ.கரிசல்குளம், வேப்பங்குளம் (கமுதி வட்டம்), பம்மனேந்தல், அரியமங்கலம், புன்னவாசல், வேப்பங்குளம் (கடலாடி வட்டம்), மீனன்குடி, ஓரிவாயல் மற்றும் கடுகுசந்தை கிராமங்களில் உள்ள 1758 எக்டேர் நிலங்களுக்கு நிலையான பாசனமும், கமுதி மற்றும் கடலாடி வட்டங்களில் 54 கண்மாய்களின்கீழ் 156 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்குப் பாசன வசதியும் அளிக்க வகை செய்யப்பட்டுள்ளது.

அரசு இத்திட்டத்திற்கான மதிப்பீட்டிற்கு ரூ.15.40 கோடி ஒப்புதல் வழங்கியுள்ளது. கல்லணை, இரண்டு தலை மதகுகள், கட்டமைப்புகளுடன்கூடிய வலது மற்றும் இடது பிரதானக் கால்வாய்கள் இத்திட்டத்தின் முக்கிய அங்கங்களாகும்.

இத்திட்டத்தில் எல்.எஸ்.0 மீ. முதல் 200 மீ. மற்றும் 200 மீ. முதல் 385 மீ. வரை அணைத் தடுப்புச் சுவர் கட்டும் பணி முடிவுற்றது. வலதுபுற தலை மதகு கட்டும் பணி மற்றும் மணல்போக்கி மதகு கட்டும் பணி, மண் அணை அமைத்தல் மற்றும் இதர பணிகள் நடைபெற்று வருகின்றன. இடதுபுற தலை மதகு, மணல்போக்கி ஆகிய பணிகளுக்கான ஒப்பந்தங்கள் முடிவு செய்யப்பட்டுள்ளன. அனைத்து பணிகளும் 2001–2002–ல் முடிக்கப்படும்.

*(6) உசிலம்பட்டி வட்டத்தில் 58 கிராமங்களுக்குப் பாசன வசதி அளித்தல் (மதுரை மாவட்டம்)*

உசிலம்பட்டி வட்டத்தில் 58 கிராமங்களுக்குப் பாசன வசதி அளிக்கும் பொருட்டு வைகை அணையின் வழிந்தோடியிலிருந்து 2425 மீட்டர் தொலைவில் வைகை அணையின் வலது கோடியில் ஓர்

உயர்மட்டக் கால்வாய் 27.26 கி.மீ. நீளத்திற்கு அமைக்க இத்திட்டம் வகை செய்கிறது. கற்காரைப் பூசப்படாத இக்கால்வாய், இராமநாதபுரம் பெரிய கண்மாய் மற்றும் வைகை அணை நிரம்பி வழியும்போது உபரி வெள்ள நீரைப் பயன்படுத்தி உசிலம்பட்டி வட்டத்தில் உள்ள 58 கிராமங்களுக்குப் பாசன வசதியளிக்க உள்ளது. இத்திட்டத்தில் மூன்று புதிய கண்மாய்கள் அமைப்பதும் அடங்கியுள்ளது. இத்திட்டத்திற்கு அரசு ரூ.33.81 கோடி அனுமதி அளித்துள்ளது. இத்திட்டச் செயலாக்கத்தினால் 570 எக்டேர் நன்செய் நிலத்திற்கு நிலையான பாசன வசதி கிடைக்கிறது. மேலும் உசிலம்பட்டி வட்டத்தில் உள்ள மூன்று கசிவு நீர்க் குட்டைகள், 29 கண்மாய்களின்கீழ் உள்ள 128 எக்டேர் விடுபட்ட நன்செய் நிலங்கள் பயனடையும். இவை தவிர புதிதாக உருவாக்கப்படவுள்ள 3 கண்மாய்கள் மூலமாக 227 எக்டேர் புதிய நன்செய் நிலமும் பாசன வசதி பெறும்.

இத்திட்டத்தில் நிலம் கையகப்படுத்தும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. பதினான்கு பணிகளில் 12 பணிகளுக்கு ஒப்பந்தப் புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. கட்டடப் பணிகள் முடிவடைந்தன. 3 பணிகள் நிலச் சொந்தக்காரர்களின் ஆட்சேபத்தால் தாமதமாகின்றன. இரண்டு பணிகளுக்கு ஒப்பந்தம் கோரப்பட்டுள்ளது. நிலம் கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

*(7) ஆண்டியப்பனூர் ஓடை நீர்த்தேக்கம் (வேலூர் மாவட்டம்)*

வேலூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டத்தில் ஆண்டியப்பனூர் கிராமத்தினருகே ஆண்டியப்பனூர் ஓடையின் குறுக்கே 112 மில்லியன் கன அடி கொள்ளளவில் ஒரு நீர்த்தேக்கம் அமைக்க இத்திட்டம் வகை செய்கிறது.

அரசு இத்திட்டத்தை நிறைவேற்ற ரூ.18.28 கோடிக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. அரசு இத்திட்டத்திற்கு ரூ.27.38 கோடிக்கு திருத்திய நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் வாணியம்பாடி வட்டத்தில் ஆண்டியப்பனூர் மற்றும் இருனாப்பட்டு கிராமங்களின் 810 எக்டேர் நிலம் நேரடியாக இருபோக புன்செய் சாகுபடியின் கீழ் வரும். நிலம் கையகப்படுத்தும் பணிகள் நடைபெறுகின்றன.

இணைப்புகள் 499

2001 செப்டம்பர் 8]

இத்திட்டத்திற்கு 39.69 எக்டேர் வனத் துறை நிலம் பொதுப் பணித் துறைக்கு மாற்றவும், 15 எக்டேர் புறம்போக்கு நிலம் மற்றும் 100.245 எக்டேர் பட்டா நிலம் கையகப்படுத்தவும் வேண்டியுள்ளது.

நிலம் கையகப்படுத்தும் பணி முன்னேற்றத்தில் உள்ளது. முதற்கட்டப் பணிகளான அணுகுசாலை அமைத்தல் மற்றும் முகாம் காலனி பணிகள் முடிவுற்றன. கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன. பிரதானப் பணிக்கு ஒப்பந்தக்காரர் நியமிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

*(8) செண்பகத்தோப்பு நீர்த்தேக்கம் (திருவண்ணாமலை மாவட்டம்)*

திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டத்தில் செண்பகத்தோப்பு கிராமத்தில் க[illegible]ற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைக்க இத்திட்டம் வகை செ[illegible]து.

இத்திட்டத்தினை ரூ.21.3[illegible] கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

இத்திட்டத்தினால் போளூர் வட்டத்திலுள்ள வள்ளூர், கங்காரமந்தல், இலுப்பகுப்பம், பார்வதி சகரம், அலியாபாத், சாந்தவாசல், நாரமங்கலம், எந்துவம்பாடி கிராமங்களிலும், ஆரணி வட்டத்திலுள்ள குப்பம், காமாடுக்கூர், ஆரணி, மாமண்டூர், கல்பூண்டி, முன்னிப்பட்டு, பையூர் கிராமங்களிலும், ஆற்காடு வட்டத்திலுள்ள வாழப்பந்தல், மேல்புதுப்பாக்கம், மாம்பாக்கம், மேல்பலந்தை, அரூர், சுரையூர் மற்றும் பொன்னம்பலம் கிராமங்களிலும், செய்யாறு வட்டத்திலுள்ள திருமணி, முனுக்கப்பட்டு, மேல்புத்தூர் மற்றும் மேல் சேவுமங்கலம் கிராமங்களிலும், வந்தவாசி வட்டத்தில் அன்மருதை கிராமத்திலும் மொத்தம் 2067 எக்டேர் நிலங்களுக்கு நிலையான பாசன வசதியும், 642 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்குப் பாசன வசதியும் கிடைக்கும். இத்திட்டம் நிறைவேற்றப்படுவதால் இந்த பிற்பட்ட பகுதியின் பாசன வசதிக்கான நீண்ட நாள் கோரிக்கை நிறைவேறும்.

நிலம் கையகப்படுத்தும் பணி மற்றும் வனத் துறை நிலங்கள் பொதுப் பணித் துறைக்கு மாற்றப்பட வேண்டிய பணி முடிவுற்றவுடன் கட்டுமானப் பணிகள் தொடங்கப்படும். முதற்கட்டப் பணிகளான சேமிப்புக் கிடங்கு கட்டும் பணி, அலியாபாத்தில் வேலி அமைக்கும் பணி உள்ளிட்ட இதர பணிகள் முடிவுற்றன.

இத்திட்டத்திற்கு 99.02 எக்டேர் வனத் துறை நிலமும், 21.50 எக்டேர் தனியார் பட்டா நிலமும் மற்றும் 3.25 எக்டேர் புறம்போக்கு நிலமும் தேவைப்படுகின்றன.

நிலம் கையகப்படுத்தும் பணி இறுதிகட்ட நிலையில் உள்ளது. பணி விரைவில் தொடங்கப்படும்.

(9) வரட்டாறு–குப்பத்து ஓடை குறுக்கே நீர்த்தேக்கம் (திருநெல்வேலி மாவட்டம்)

இத்திட்டம் திருநெல்வேலி மாவட்டத்தில் வரட்டாறு மற்றும் குப்பத்து ஓடை என்ற காட்டாறுகளின் குறுக்கே ரூ.8.78 கோடி மதிப்பீட்டில் ஒரு நீர்த்தேக்கம் அமைக்க வகை செய்கிறது.

இத்திட்டம் நிறைவேற்றப்படுவதால் தென்காசி வட்டத்தில் கிருஷ்ணாபுரம் மற்றும் சொக்கம்பட்டி கிராமங்கள் மற்றும் வி.கே.புதூர் வட்டத்தில் மடத்துப்பட்டி கிராமம் ஆகியவற்றில் 165 எக்டேர் விடுபட்ட நிலம் பாசன வசதியும், 77 எக்டேர் நிலம் பாசன உறுதியும் பெறும். மேலும் நிலத்தடி நீர்ப் பெருக்கத்தால் 375 எக்டேர் நிலமும் பயனடையும்.

இத்திட்டத்திற்கான விரிவான ஆய்வுப் பணிகளை மேற்கொள்ள சிலர் எதிர்ப்புத் தெரிவித்து நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர். வழக்கு அரசுக்குச் சாதகமாக அமைந்த போதிலும் உள்ளூர் ஆயக்கட்டுதாரர்கள் மீண்டும் வழக்கு தொடர்ந்துள்ளதால் பணி மேற்கொள்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

(10) பத்தலப்பள்ளி – மலட்டாறு நீர்த்தேக்கத் திட்டம் (வேலூர் மாவட்டம்)

இத்திட்டமானது வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டம், பத்தலப்பள்ளி கிராமம் அருகே மலட்டாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைப்பதற்கு வகை செய்கிறது. அரசு இத்திட்டத்திற்கு ரூ.29.55 கோடிக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

இத்திட்டத்தினால் குடியாத்தம் வட்டத்தில் பாலூர் மச்சம்பட்டு, வசனம்பள்ளி, நரியாம்பட்டு, ரெட்டிமான்குப்பம், சாரங்கல், கைலாசகிரி, ஆயுதம்பட்டு, சாதம்பாக்கம், ராஜக்கால், ஆளியங்குப்பம், மால்முருங்கை, மேல்பட்டி, குளித்திகை, சின்ன தொட்டாளம், உள்ளி, கோதகுப்பம், அரங்காநல்லூர், ஓகடசி மற்றும் சிட்லாத்தூர் கிராமங்களில் மொத்தம் 1064 எக்டேர் நிலங்களுக்குப் பாசன உறுதியும் 61 எக்டேர் விடுபட்ட



தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
224480
சென்னை-600 008



பாசன நிலங்களுக்குப் பாசனமும் கிடைக்கப் பெறும். இத்திட்டத்தில் பேரணாம்பட்டு நகரம் மற்றும் வழியில் அமைந்துள்ள கிராமங்களுக்குக் குடிநீர் வசதியும் மற்றும் தொழிற்சாலைகளுக்கு நீர் வழங்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும் தோல் பதனிடும் தொழிற்சாலைகளினால் பாதிக்கப்பட்ட கிணறுகள் காலப்போக்கில் மீண்டும் நல்ல நீரை வழங்க ஏற்றதாக மாறும்.

மண் அணை, உபரி நீர்வழிந்தோடி, ஆற்று மதகு, அபிவிருத்தி அணைக்கட்டு மற்றும் நீர்த்தணிவு அமைத்தல் இத்திட்டத்தின் அங்கங்களாகும்.

இத்திட்டத்திற்கு 36.98 எக்டேர் பட்டா நிலமும், 17.81 எக்டேர் வனத் துறை நிலமும் மற்றும் 11.32 எக்டேர் புறம்போக்கு நிலமும் தேவைப்படுகின்றன. நிலம் கையகப்படுத்தும் பணி மற்றும் திட்டச் செயலாக்கத்தின் தொடக்கப் பணிகள் பெரும்பாலானவை முடிவுற்றன. இத்திட்டப் பணிகள் நடப்பு நிதியாண்டில் தொடங்கப்படும்.

(11) குப்பநத்தம் நீர்த்தேக்கத் திட்டம் (திருவண்ணாமலை மாவட்டம்)

இத்திட்டமானது திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், குப்பநத்தம் கிராமம் அருகே செய்யாற்றின் குறுக்கே ஒரு நீர்த்தேக்கம் அமைப்பதாகும். இத்திட்டத்திற்கு அரசு ரூ.35.46 கோடிக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

இத்திட்டத்தினால் செய்யாற்றின் குறுக்கே உள்ள ஐந்து அணைகளின் கீழுள்ள 22 ஏரிகள் மற்றும் இரண்டு நேரடிக் கால்வாய்களின் மூலம் செங்கம் வட்டத்தில் காயம்பட்டு, வளையம்பட்டு, தண்டப்பட்டு, கரையமங்கலம், வடங்குப்பம், மேல்வணக்கம்பாடி, மேல்புழுதியூர், பெரும்பட்டம், பக்கிரிபாளையம், துக்கப்பேட்டை, மேமலூர், காயம்பட்டு, கங்காரவரன், சென்னசமுத்திரம், பொன்னேரி, சின்னசமுத்திரம், படியகரம், நரசிங்கநல்லூர், தொரப்பாடி, முன்னூர்மங்கலம், நாச்சிப்பட்டு, குஞ்சிலம், பெரிய ஏரி, உண்ணாமலைபுரம், புதுச்செங்கம், அன்வர்பாத், ஆலப்புதூர், தாமரைப்பாக்கம், மற்றும் அரிதாரைமங்கலம் கிராமங்களிலும் திருவண்ணாமலை வட்டத்தில் முன்னூர்மங்கலம், கரியாந்தல், ஆனந்தாள், மேல்புஞ்சை, வாசுதேவன்பட்டு, மற்றும் கிழித்தூர் கிராமங்களிலும், போளூர் வட்டத்தில் கடலாடி, குணத்தூர், கீழத்தூர் கிராமங்களிலும் மொத்தம் 2528 எக்டேர் நிலங்களுக்குப் பாசன உறுதியும், 580 எக்டேர் விடுபட்ட பாசன நிலங்களுக்குப் பாசன வசதியும் கிடைக்கப் பெறும்.

மண் அணை, கற்கட்டு நீர்வழிந்தோடி, ஆற்று மதகு ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய அங்கங்கள் ஆகும்.

இத்திட்டத்திற்கு 190.42 எக்டேர் புன்செய் பட்டா நிலமும், 103.75 எக்டேர் புறம்போக்கு நிலமும், 13.34 எக்டேர் வனத் துறை நிலமும் கையகப்படுத்த வேண்டியுள்ளது. வனத் துறை நிலங்களுக்கு ஈடாக இழப்பீடு நிலங்கள் கண்டறியப்பட்டுள்ளன. நியமப்படி மத்திய அரசிடமிருந்து அனுமதி பெறப்பட்டுள்ளது. பட்டா நிலம் கையகப்படுத்தும் பணி மற்றும் புறம்போக்கு நிலம் மாற்றும் பணி நடைபெற்று வருகிறது.

தொடக்கப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

(12) வரட்டாறு–வள்ளிமதுரை நீர்த்தேக்கத் திட்டம் (தர்மபுரி மாவட்டம்)

தர்மபுரி மாவட்டம், அரூர் வட்டம், வள்ளிமதுரை கிராமம் அருகே வரட்டாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைக்க இத்திட்டம் வகை செய்கிறது. அரசு இத்திட்டத்திற்கு ரூ.19.20 கோடி ஒப்புதல் வழங்கியுள்ளது. ரூ.35.95 கோடிக்கு திருத்திய ஆட்சி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினால் அரூர் வட்டத்தில் உள்ள வள்ளிமதுரை, தத்தவளசி, சோமநாதன், கீரைப்பட்டி, குடிமியாம்பட்டி, அச்சல்வாடி மற்றும் சோமநாதம்புதூர் கிராமங்களில் கீரைப்பட்டி அணைக்கட்டு, எல்லப்புடயாம்பட்டி அணைக்கட்டு மற்றும் மாங்குப்பம் ஏரி ஆகியவற்றின்கீழ் பாசனம் பெறும் 110 எக்டேர் நஞ்சை நிலங்களுக்குப் பாசன உறுதி மற்றும் 1047 எக்டேர் ஒரு போக புன்செய் பயிர் செய்வதற்கான பாசன வசதியும் கிடைக்கப் பெறும்.

இத்திட்டமானது மண் அணை, உபரி நீர்ப்போக்கி, தலை மதகுகள் மற்றும் கால்வாய் அமைக்கும் பணிகளை உள்ளடக்கியதாகும்.

இத்திட்டத்திற்கு 94.31 எக்டேர் புன்செய் பட்டா நிலமும் 24.87 எக்டேர் வனத் துறை நிலமும் மற்றும் 23.82 எக்டேர் புறம்போக்கு நிலமும் கையகப்படுத்த வேண்டியுள்ளது. மைய அரசு 22–12–2000–ல் வனத் துறை நில மாற்றத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது. பணிகளுக்கான ஒப்பந்தம் பரிசிலனையில் உள்ளது. ஜனவரி 2001–ல், இத்திட்டத்திற்கான திருத்திய மதிப்பீடு ரூ.35.95 கோடிக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. பணிகள் விரைவில் தொடங்கப்படும்.





(13) கால்வாய் சடையனேரி திட்டம் (தூத்துக்குடி மாவட்டம்)

இத்திட்டத்தின் பணிகளுக்காக அரசு ரூ.12.33 கோடி ஒப்புதல் வழங்கியுள்ளது.

ஏற்கெனவேயுள்ள கால்வாய் சடையனேரி வாய்க்காலை கால்வாய் ஏரி வரை அகலப் படுத்துதல் மற்றும் ஏற்கெனவேயுள்ள சடையனேரி வாய்க்காலை அகலப்படுத்துதல், சடையனேரி நீட்டிப்பு வாய்க்கால் வெட்டுதல், கருமேனியாற்றிலிருந்து வைரவன்தருவை வரையில் ஏற்கெனவேயுள்ள முதலூர் ஓடையை மேம்படுத்துதல் மற்றும் வைரவன்தருவை முதல் புத்தன்தருவை வரையில் ஓர் இணைப்புக் கால்வாய் வெட்டுதல் ஆகியன இத்திட்டத்தில் அடங்கும்.

இத்திட்டத்தின் மூலம் தாமிரபரணி ஆற்றின் உபரி நீரைக் கொண்டு சடையனேரிக் கால்வாயின் கீழுள்ள 12 ஏரிகள் மற்றும் தஞ்சைக் குளத்தின்கீழ் 314 எக்டேர் நிலங்களுக்கு நீர் வழங்கவும், இரு ஏரிகளை நிரப்புவதன் மூலம் 4 கிராமங்களில் உள்ள 634 கிணறுகளில் நிலத்தடி நீர் அதிகரிப்பதால் 875 எக்டேர் தென்னந்தோப்புகளும் பயன்பெறும். இத்திட்டத்தினால் திருச்செந்தூர் மற்றும் சாத்தான்குளம் வட்டங்களில் கால்வாய், வெள்ளூர், உடையார்குளம், வெள்ளமடம், பிடனேரி, எழுவாரிமுக்கி, மங்கைமொழி, சாத்தான்குளம், சாஸ்தாவிநல்லூர், குமடிக்கோட்டை, திருப்பணிபுத்தன்தருவை, பாட்டக்குறிச்சி ஆகிய கிராமங்கள் பயன் பெறும்.

இத்திட்டம் மாநில நிதி தொகுப்பின்கீழ் தற்போது எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான பணிகளில் 70 விழுக்காடு முடிவுற்றன. எஞ்சிய பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. இப்பணிக்கு "நபார்டு" வங்கி கடன் உதவி செய்துள்ளது.

(14) நாராயண காவேரி வாய்க்காலைப் புனரமைத்துச் சீர் செய்தல் (இராமநாதபுரம் மாவட்டம்)

இராமநாதபுரம் வட்டத்தில் உள்ள நாராயண காவேரி வாய்க்கால் மற்றும் அதன்கீழ் உள்ள சாயல்குடி மற்றும் 33 கண்மாய்களுக்குப் பாசன வசதி அளிக்கும் மண்டலமாணிக்கம் அணைக்கட்டு புனரமைத்துச் சீர்செய்ய ரூ. 5.74 கோடி மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளித்தது.

இத்திட்டம் கமுதி வட்டத்திலுள்ள மண்டலமாணிக்கம், கமுதி, மண்டல்நாடு, கே.நெடுங்குளம், சீமானேந்தல், குண்டுக்குளம்,

கே.வேப்பங்குளம், ஓ.கரிசல்குளம், கோவிலாங்குளம், கூம்பூதி, எம்.புதுக்குளம் மற்றும் வில்லாநேந்தல் கிராமங்களிலும், திருச்சுழி வட்டத்திலுள்ள கல்லகரி கிராமத்திலும், கடலாடி வட்டத்திலுள்ள சாயல்குடி, எம்.கரிசல்குளம், என்.கரிசல்குளம், எ. உசிலங்குளம், எஸ். வாகைகுளம், பிள்ளையார்குளம், எஸ்.கிரண்டை மற்றும் கீழஅல்லிக்குளம் ஆகிய கிராமங்களிலும் 1942.97 எக்டேர் நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கும்.

90 விழுக்காடு பணிகள் முடிவுற்றன. எஞ்சிய பணிகள் நடப்பு நிதியாண்டில் முடிக்கப்படும்.

(15) உப்பாறு ஓடையின் குறுக்கே புதிய குளம் அமைத்தல் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்)

திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி வட்டம், கானக்கிளிய நல்லூர் உள்கிடைக் கிராமமான சிறுவயலூர் அருகே உப்பாறு ஓடை நந்தியாற்றுடன் கலக்கும் இடத்திற்கு மேலே, ஓடையின் குறுக்கே ரூ. 4.18 கோடி மதிப்பீட்டில் புதிய குளம் அமைக்க ஒப்புதல் அளித்தது.

இத்திட்டம் கானக்கிளிய நல்லூர் கிராமத்தில் 152 எக்டேர் புதிய புன்செய் நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கும்.

மண் அணை, உபரி நீர்ப்போக்கி, மூன்று பாசன மதகுகள் மற்றும் மூன்று கால்வாய்கள் இத்திட்டத்தின் அங்கங்கள் ஆகும்.

பணிகள் நடைபெற்று வருகின்றன.

(16) முதலைமுத்துவாரியின் குறுக்கே ஒரு குளம் அமைத்தல் (தஞ்சாவூர் மாவட்டம்)

தஞ்சாவூர் மாவட்டம் மற்றும் வட்டத்தில் உள்ள சென்னம்பட்டி கிராமத்தில் முதலை முத்துவாரியின் குறுக்கே ரூ. 9.73 கோடி மதிப்பீட்டில் ஒரு புதிய குளம் அமைக்கும் பணிக்கு ஒப்புதல் அளித்தது.

இத்திட்டத்தினால் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள சென்னம்பட்டி, வல்லம்புதூர் கிராமங்கள் மற்றும் புதுக்கோட்டை மரவட்டத்திலுள்ள கரும்பூண்டி கிராமம் இவைகளில் 110 எக்டேர் நிலங்களுக்கு நிலையான பாசன வசதியும், 9 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்குப் பாசன வசதியும் மற்றும் 364 எக்டேர் புதிய புன்செய் நிலங்களுக்குப் பாசன வசதியும் கிடைக்கும்.





2300 மீட்டர் நீளத்திற்கு மண் கரை, தடையில்லா நீர்வழிந்தோடி மற்றும் 4 மதகுகள் இத்திட்டத்தின் அங்கங்கள் ஆகும். பணிகள் நடைபெற்று வருகின்றன.

(17) கடானா விரிவாக்கத் திட்டம் (திருநெல்வேலி மாவட்டம்)

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டத்தில் ஏற்கெனவே உள்ள கடனா அணையின் வலதுபுறத்தில் ரூ. 18.82கோடி மதிப்பீட்டில் ஒரு விரிவாக்க நீர்த்தேக்கத்தை அமைக்க அனுமதி அளித்தது.

இத்திட்டம் அம்பாசமுத்திரம் வட்டத்தில் உள்ள சிவசைலம், மேல் ஆம்பூர், கீழ் ஆம்பூர், மன்னார்கோவில் ஆகிய கிராமங்களில் 511 எக்டேர் நிலங்களுக்குப் பாசன உறுதியும், 187 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்குப் பாசன வசதியும் மற்றும் 67 எக்டேர் நிலங்களுக்குப் புதிய பாசன வசதியும் அளிக்கும்.

930 மீட்டர் நீளத்திற்கு மண் கரை, ஒரு பாசன தலை மதகு, 18.71 மீட்டர் நீளத்தில் 3 கிளைக் கால்வாய்களுடன் பிரதானக் கால்வாய், உபரி நீர்வழிந்தோடியிலிருந்து 120 மீட்டர் நீளத்திற்கு இணைப்பு நீர்வழி ஆகியவை இத்திட்டத்தின் அங்கங்கள் ஆகும்.

இத்திட்டப் பணிகளில் 20 விழுக்காடு முடிவுற்றன. எஞ்சிய பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்திற்கு "நபார்டு" வங்கி கடனுதவி செய்துள்ளது.

(18) நாயோடையின் குறுக்கே ஒரு புதிய குளம் அமைத்தல் (திண்டுக்கல் மாவட்டம்)

திண்டுக்கல் மாவட்டம் மற்றும் வட்டத்தில் உள்ள கன்னிவாடி கிராமத்தில் மங்கறியாற்றின் உபநதியான நாயோடையின் குறுக்கே ரூ.3.50 கோடி மதிப்பீட்டில் ஒரு புதிய குளம் அமைக்க அனுமதி அளித்தது. திருத்திய மதிப்பீடு ரூ.7.20 கோடிக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

இத்திட்டத்தினால் திண்டுக்கல் மாவட்டம் மற்றும் வட்டத்திலுள்ள கன்னிவாடி, ஆலாந்துரான்பட்டி, வீரப்புடையான்பட்டி மற்றும் தெட்டுபட்டி கிராமங்களிலுள்ள 118 எக்டேர் நிலங்களுக்குப் புதிய பாசன வசதி கிடைக்கும்.

[2001 செப்டம்பர் 8

*620 மீட்டர் நீளத்திற்கு மண் கரை, 30 அடி நீள அதிவேக நீர்ப்போக்கி, ஒரு தலை மதகு மற்றும் 4120 மீட்டர் நீளம் கண்ணி வாய்க்கால் இவை இத்திட்டத்தின் அங்கங்கள் ஆகும்.*

இத்திட்டத்திற்கான ஒப்பந்தப்புள்ளி பரிசீலனையில் உள்ளது. பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளன.

*(19) இராமக்கால் ஓடை மற்றும் ஆனைவிழுந்தான் ஓடைகளின் குறுக்கே ஒரு புதிய குளம் அமைத்தல் (திண்டுக்கல் மாவட்டம்)*

திண்டுக்கல் மாவட்டம் மற்றும் வட்டத்திலுள்ள எ.வெள்ளோடு மற்றும் கிழக்கோட்டை கிராமங்களில் குடகனாற்றின் உபநதிகளான இராமக்கால் ஓடை மற்றும் ஆனைவிழுந்தான் ஓடை இவற்றின் குறுக்கே ரூ. 3.55 கோடி மதிப்பீட்டில் புதிய குளம் அமைக்கும் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்தது. திருத்திய மதிப்பீடு ரூ.5.65 கோடிக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

இத்திட்டம் திண்டுக்கல் மாவட்டம் மற்றும் வட்டத்திலுள்ள எ.வெள்ளோடு மற்றும் கிழக்கோட்டை கிராமங்களில் 107.65 எக்டேர் புதிய புன்செய் நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கும்.

*480 மீட்டர் நீளத்திற்கு மண் கரை, இராமக்கால் ஓடையில் உள்ள உபரி நீர்ப்போக்கியுடன் இணைக்க உபரி நீர்க் கால்வாயுடன் ஓர் உபரி நீர்ப்போக்கி, தலை மதகு, ஆற்று நீர்ப்போக்கி மதகு மற்றும் கண்ணி வாய்க்கால்கள் இத்திட்டத்தின் அங்கங்கள் ஆகும்.*

ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலனையில் உள்ளன. விரைவில் பணிகள் தொடங்கப்பட உள்ளன.

*(20) நல்லதங்காள் ஓடையின் குறுக்கே புதிய நீர்த்தேக்கம் (ஈரோடு மாவட்டம்)*

ஈரோடு மாவட்டம், தாராபுரம் வட்டம் பொன்னிவாடி கிராமத்தில் ஈஸ்வரன் கோயில் அருகே நல்லதங்காள் ஓடையின் குறுக்கே ரூ. 31.01 கோடி மதிப்பீட்டில் புதிய நீர்த்தேக்கம் அமைக்க ஒப்புதல் அளித்தது. திருத்திய மதிப்பீடு ரூ.42.70 கோடிக்கு அரசு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. பாலம் கட்டும் பணிக்கான ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலனையில் உள்ளன.

இத்திட்டம் ஈரோடு மாவட்டம், தாராபுரம் வட்டத்திலுள்ள நல்லான்பாளையம், ஆலம்பாளையம், பொறாமியம்தூரம்பாடி, மூலனூர்



2001 செப்டம்பர் 8]

மற்றும் பொன்னிவாடி கிராமங்களில் 1919.87 எக்டேர் புதிய புன்செய் நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கும்.

*3450 மீட்டர் நீளம் மண் கரை, தடையிலா நீர்வழிந்தோடி, தலை மதகு மற்றும் ஆற்று மதகு இவை இத்திட்டத்தின் அங் [illegible] ஆகும்*

குடியிருப்புக் கட்டடங்கள், உபகோட்ட அலுவலகக் கட்டடப் பணிகள் முடிவடையும் நிலையிலுள்ளன. மண் அணை மற்றும் மிகை நீர்வழிந்தோடி பணிகள் நடைபெற்று வருகின்றன. பால வேலைக்கான ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலனையில் உள்ளன.

*(21) ஆண்டி ஓடையின் குறுக்கே ஓர் அணை கட்டுதல் திருச்சிராப்பள்ளி மாவட்டம்)*

திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி வட்டம், கல்லகம் கிராமத்திற்கு அருகே ஆண்டி ஓடையின் குறுக்கே ரூ. 1.21 கோடி மதிப்பீட்டில் ஓர் அணை கட்ட அரசு ஒப்புதல் அளித்தது.

இத்திட்டம் திருச்சிராப்பள்ளி மாவட்டம், லால்குடி வட்டத்திலுள்ள கல்லகம் கிராமம் மற்றும் பெரம்பலூர் மாவட்டம், அரியலூர் வட்டத்திலுள்ள பூண்டி கிராமம் இவற்றில் 82 எக்டேர் நஞ்சை நிலங்களுக்குப் பாசன உறுதியும் 84 எக்டேர் புன்செய் நிலங்களுக்குப் புதிய பாசன வசதியும் அளிக்கும்.

*36 மீட்டர் நீளம் கல்லணை, தலை மதகு, 3350 மீட்டர் நீளம் குறுக்கு கட்டுமானப் பணிகளுடன் பிரதான வாய்க்கால் (இடதுபுறம்) மற்றும் 700 மீட்டர் நீளம் வெள்ளத் தடுப்புக் கரை ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய அங்கங்கள் ஆகும்.*

பணிகள் நடைபெற்று வருகின்றன.

*(22) சாஸ்தாகோவில் அருகே நகரியாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் (விருதுநகர் மாவட்டம்)*

விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் வட்டம், சாஸ்தா கோவில் அருகே நகரியாற்றின் குறுக்கே ரூ.7.97 கோடி மதிப்பீட்டில் ஒரு நீர்த்தேக்கம் அமைக்கும் பணிக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

இத்திட்டம் இராஜபாளையம் வட்டத்திலுள்ள வடக்கு தேவதானம், தெற்கு தேவதானம், சேத்தூர், முத்துசாமிபுரம், கோவிலூர், நல்லமங்கலம் மற்றும் செட்டியார்பட்டி கிராமங்களில் 13 கண்மாய்களின் மூலம்

[2001 செப்டம்பர் 8

ஏற்கெனவே பாசனம் பெறும் 1016 எக்டேர் நிலங்களுக்குப் பாசன உறுதியும் 184 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்குப் பாசன வசதியும் அளிக்க வகை செய்கிறது.

1600 மீட்டர் நீள மண் கரை, தடையிலா நீர்வழிந்தோடி, ஆற்று மதகு மற்றும் உபரிநீர்க் கால்வாய் ஆகியவை இத்திட்டத்தின் அங்கங்களாகும்.

பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. அனைத்து பணிகளும் நடப்பு நிதியாண்டில் முடிக்கப்படும். இத்திட்டத்திற்கு "நபார்டு" வங்கி கடனுதவி அளித்துள்ளது.

*(23) வெள்ளக்கால் கானாறு நீர்த்தேக்கம் (வேலூர் மாவட்டம்)*

வேலூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டம், விண்ணமங்கலம் கிராமத்தினருகே வெள்ளக்கால் கானாறின் குறுக்கே ரூ.7.70 கோடி மதிப்பீட்டில் ஒரு நீர்த்தேக்கம் அமைக்கும் பணிக்கு அரசு ஒப்புதல் அளித்தது.

இத்திட்டம் வாணியம்பாடி வட்டத்திலுள்ள கண்ணாடிகுப்பம், பெரியன்குப்பம், சானார்குப்பம், மேல்கிருஷ்ணாபுரம், ஆம்பூர், சாமளாபுரம், கருணவரம், வடபுதுப்பட்டு, கீழ்முருகி, தொட்டாலம் மடமூர் மற்றும் காட்டாம்பாக்கம் ஆகிய கிராமங்களில் 431 எக்டேர் நிலங்களுக்குப் பாசன உறுதியும் 57 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்குப் பாசன வசதியும் அளிக்கும்.

320 மீட்டர் நீளம் மண் அணை, 40 மீட்டர் நீள உபரிநீர்ப்போக்கி, ஆற்று மதகு ஆகியன இப்பணியின் அங்கங்களாகும்.

இத்திட்டத்திற்கு 3982 எக்டேர் வனத் துறை நிலம் தேவைப்படுகிறது. வனத் துறை நிலங்களுக்கு ஈடாக இழப்பீடு நிலங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

வன நிலம் கையகப்படுத்தும் பணிக்கு மத்திய அரசின் முதல்நிலை அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது. பணிகள் நடப்பு நிதியாண்டில் தொடங்கப்படும்.



2001 செப்டம்பர் 8]

*(24) சிறுமலையாற்றின் குறுக்கே ஒரு புதிய குளம் (திண்டுக்கல் மாவட்டம்)*

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டம், இராஜதானிக்கோட்டை அருகில் சிறுமலையாற்றின் குறு[illegible] மதிப்பீட்டில் ஒரு புதிய குளம் அமைக்கும் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்தது. திருத்திய மதிப்பீடு ரூ.8.87 கோடிக்கு அரசு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

இத்திட்டம், நிலக்கோட்டை வட்டத்திலுள்ள ஒரு தட்டு கிராமத்தில் 128 எக்டேர் புதிய புன்செய் நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கும்.

975 மீட்டர் மண்கரை, 40 மீட்டர் நீளம் உபரிநீர்ப்போக்கி, ஒரு தலை மதகு மற்றும் 60 மீட்டர் நீளம் உபரிநீர்க் கால்வாய் ஆகியவை இத்திட்டத்தின் அங்கங்களாகும்.

பணி நடைபெற்று வருகிறது.

*(25) குடகனாறு நீர்த்தேக்கத்திலிருந்து வெள்ளியணை மற்றும் மூன்று கண்மாய்களுக்குப் பாசன வசதி அளித்தல் (கரூர் மாவட்டம்)*

குடகனாறு நீர்த்தேக்கத்திலிருந்து கரூர் மாவட்டம் மற்றும் வட்டத்தில் உள்ள வெள்ளியணை மற்றும் மூன்று கண்மாய்களுக்கு ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் பாசன வசதி அளிக்க அரசு ஒப்புதல் அளித்தது.

இத்திட்டம் கரூர் மாவட்டம் மற்றும் வட்டத்திலுள்ள வெள்ளியணை, உப்பிடமங்கலம், வீரராக்கியம் மற்றும் வளையல்காரன் புதூர் கிராமங்களில் 440 எக்டேர் நிலங்களுக்குப் பாசன உறுதியும் 116 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்குப் பாசன வசதியும் அளிக்கும்.

53.50 கி.மீ. நீளமுள்ள வலது பிரதானக் கால்வாயைப் புனரமைத்து மேம்படுத்துதல், ஏற்கெனவே உள்ள குறுக்கு கட்டுமானப் பணிகளைப் பழுதுபார்த்தல் மற்றும் ஐந்து உள்வரத்து மதகுகள் கட்டுதல் ஆகியவை இத்திட்டத்தின் அங்கங்கள் ஆகும்.

இத்திட்டத்தின் பணிகள் 75 விழுக்காடு முடிவடைந்துள்ளன. எஞ்சிய பணிகள் நடைபெறுகின்றன.

[2001 செப்டம்பர் 8

**(26) நீர்த்தேக்கங்களில் உள்ள பூங்காக்களை மேம்படுத்தி அழகுபடுத்துதல்**

நீர்த்தேக்கங்களில் உள்ள பூங்காக்களை மேம்படுத்தி அழகுபடுத்துவதற்கான திட்டத்தை ரூ.3.00 கோடி மதிப்பீட்டில் கிருஷ்ணகிரி, சாத்தனூர், அமராவதி, வைகை, ஆழியாறு, பவானிசாகர், மணிமுத்தாறு, வீடூர் மற்றும் முக்கொம்பு ஆகிய அணைப் பகுதிகளில் செயல்படுத்த அரசு ஒப்புதல் அளித்தது.

கிருஷ்ணகிரி, சாத்தனூர், வைகை, வீடூர், அமராவதி, பவானிசாகர், ஆழியார் மற்றும் முக்கொம்பு ஆகிய அணைப் பகுதிகளின் பூங்காக்களை மேம்படுத்தி அழகுபடுத்தும் பணி முடிவடைந்துள்ளது. மணிமுத்தாறு அணைப் பகுதியில் இப்பணி நடைபெற்று வருகின்றது. இப்பணி விரைவில் முடிக்கப்படும்.

**(27) வண்டியூர் குளத்தைத் தூர் எடுத்து நவீனப்படுத்துதல் (மதுரை மாவட்டம்)**

வண்டியூர் குளத்தை ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் தூர் எடுத்து நவீனப்படுத்தி பூங்கா அமைத்து அழகுபடுத்தும் பணிக்கு ஒப்புதல் அளித்தது.

தூர் வாரும் பணி முடிவடைந்துள்ளது. பூங்கா மேம்படுத்தும் பணி நடைபெற்று வருகின்றது.

**(28) தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம் 18 ஆம் கால்வாய் அமைக்கும் திட்டம்**

தேனி மாவட்டம் உத்தமபாளையம் வட்டத்தில் ரூ.26.52 கோடி மதிப்பீட்டில் 18 ஆம் கால்வாய் அமைக்கும் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தது.

இத்திட்டத்தினால் உத்தமபாளையம் வட்டம், தெம்புச்சேரி, டி.சிந்தளச்சேரி, பண்ணைபுரம், கோம்பை, சங்கராபுரம், வெம்பக்கோட்டை, தேவாரம், லட்சுமிநாயக்கன்பட்டி, போத்தைபுரம், மீனாட்சிபுரம், கூடலூர் மற்றும் உத்தமபாளையம் கிராமங்களில் 511.16 எக்டேர் நிலங்களுக்குப் பாசன உறுதியும், 73.90 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்குப் பாசன வசதியும் மற்றும் 22.81 எக்டேர் நிலங்களுக்குப் புதிய பாசன வசதியும் ஏற்படும்.



2001 செப்டம்பர் 8]

தலைப்பு மதகு கட்டுதல், 38.90 கி.மீ. நீளமுள்ள கால்வாய் வெட்டுதல் மற்றும் 4 புதிய ஏரிகள் அமைத்தல் ஆகியவை இத்திட்டத்தின் அங்கங்கள் ஆகும். இதற்கான மதிப்பீடு ரூ.26.52 கோடியாகும்.

இப்பணி மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு அரசின் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. அதில் இரண்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

**(29) திருச்சிராப்பள்ளி மாவட்டம், காவிரி மேலணையில் (முக்கொம்பு) மேற்புறம் மற்றும் கீழ்புறம் கான்கிரீட் சுவர்கள் மற்றும் தூண்கள் பலப்படுத்துதல்**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், காவிரி மேலணையில் (முக்கொம்பு) மேற்புறம் மற்றும் கீழ்புறம் கான்கிரீட் சுவர்கள் மற்றும் தூண்களை ரூ.6.00 கோடி மதிப்பீட்டில் பலப்படுத்த ஒப்புதல் அளித்தது.

பணிகள் முடிவடைந்தன.

**(30) கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டத்தில் மாம்பழத்துறையாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம்**

கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டத்தில் வில்லுக்குறி கிராமத்தின் அருகே மாம்பழத்துறையாற்றின் குறுக்கே ரூ.9.50 கோடி மதிப்பீட்டில் நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்தது.

இத்திட்டத்தினால் கல்குளம் வட்டம், கல்குளம் மற்றும் வில்லுக்குறி கிராமங்களில் 3.57 எக்டேர் நிலங்களுக்கு பாசன உறுதியும், 25.82 எக்டேர் ஒரு போக பயிர் மற்றும்18.14 எக்டேர் இருபோக பயிர் விடுபட்ட நிலங்களுக்குப் பாசன வசதி மற்றும் 308.98 எக்டேர் நிலங்களுக்குப் புதிய பாசன வசதியும் ஏற்படும்.

295 மீ. நீளம் மண் அணை, 50 மீ. நீளம் உபரி நீர்வழிந்தோடி, மதகு கட்டுதல் மற்றும் வலது மற்றும் இடதுபுறக் கால்வாய்கள் வெட்டுதல் ஆகியவை இத்திட்டத்தின் அங்கங்கள் ஆகும்.

விரிவான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது.

**(31) நிலையூர் கால்வாய் நீட்டித்தல் (மதுரை மாவட்டம்)**

மதுரை, விருதுநகர் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் உள்ள கம்பிக்குடி கண்மாய் தொடர்குளங்களுக்கு நீர் வழங்க ரூ.8.91 கோடி

மதிப்பீட்டில் பெருங்குடி மேல்ஓடையிலிருந்து நிலையூர் கால்வாய் நீட்டிக்கும் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்தது.

இத்திட்டத்தினால் மதுரை தெற்கு வட்டம், வலையப்பட்டி, தோதியப்பட்டி, சின்ன உலகானி, வளையன்குளம், நெடுமதுரை, குடகோவில், வெள்ளாரகுளம், பெரிய ஆலங்குளம், சம்பாகுளம், கொம்பாடி, அய்யம்பட்டி, எலியார்பட்டி, மொச்சிபட்டி, பாறைபட்டி, புளிச்சங்குளம், ஆனைக்குளம், சங்குமடை, சல்லாங்குரினி, நல்லூர், வடக்குபீரிக்குளம், பாப்பானோடை, இராமன்குளம், கலுவன்குளம், விரதனூர், முத்தான்குளம், பனைக்குளம், எம்.ஆலங்குளம், நெடுங்குளம், சாத்தான்குளம், சகடதட்டி, சின்னஉடப்பு, குதிரைகுட்டி, கோடல்செங்குளம், கொசரன்குண்டு, உடைக்குளம், கொசரபட்டி மற்றும் கொன்தாகுளம் கிராமங்களிலும், திருமங்கலம் வட்டம், சின்ன உலகானி, விருசன்குளம், விடாதகுளம் மற்றும் கீலஉப்பலிகுண்டு கிராமங்களிலும், கரியபட்டி வட்டம், கடம்பன்குளம், ஆவியூர், பூலப்பட்டி, மாங்குளம், குராதி, உடைக்குளம், அரசகுளம், இராயர்பட்டி, கம்பிகுடி, பாப்பன்குளம், எஸ்.ஆலங்குளம், அன்மால்பெருக்கி, சத்திரம்பூலம்குளம், பண்ணைவளத்தான்பட்டி, வெற்றிலைமுறிச்சான்பட்டி மற்றும் அல்லாலப்பேரி கிராமங்களிலும், மானாமதுரை வட்டம், கன்சரன்குளம், வலையன்குளம், சூரம்பட்டி, திரலியார், முக்குடி, இலந்தைகுளம், வதுரன்குளம் கரன்கலகுடி, இராக்கன்குளம், செங்குளம், வடக்கூர், பரையன்குளம் மற்றும் உசலன்குளம் கிராமங்களிலுள்ள [illegible]6.53 எக்டேர் நிலங்களுக்கு பாசன உறுதியும், மற்றும் 1126.03 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்குப் பாசன வசதியும் ஏற்படும்.

தலைப்பு மதகுடன் கூடிய ரெகுலேட்டர், 7.850 கி.மீ. நீளம் பிரதான கால்வாய் வெட்டுதல், குறுக்கு கட்டுமானங்கள் உட்பட 3.00 கி.மீ நீளம் கிளைகால்வாய் வெட்டுதல் ஆகியவை இத்திட்டத்தின் அங்கங்கள் ஆகும்.

பிரதான கால்வாயில் பணிகள் நடைபெற்று வருகின்றன. நிலம் கையப்படுத்தும் பணி நடைபெறுகிறது.

*(32) பாலையூர் மற்றும் வாளமழையாற்றின் குறுக்கே உள்ளாறு நீர்த்தேக்கம் (திருநெல்வேலி மாவட்டம்)*

திருநெல்வேலி மாவட்டம், சிவகிரி வட்டம் மற்றும் கிராமத்தின் அருகே பாலையூர் மற்றும் வாளமழையாற்றின் குறுக்கே ரூ.39.20 கோடி மதிப்பீட்டில் உள்ளாறு நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தது.



இத்திட்டத்தின் மூலம் சிவகிரி வட்டம், இராயகிரி, சிவகிரி, தென்மலை, திருமேலபுரம், நாரணபுரம், கோட்டையார், சிந்தாமணிப்பேரி, கூடலூர் மற்றும் இராமநாதபுரம் கிராமங்களிலும், சங்கரன்கோயில் வட்டம், பனையூர், வயலி, மரதோணி, திருவேங்கடம், சத்திரபட்டி மற்றும் கரிசாத்தான் கிராமங்களிலும் 971.95 எக்டேர் நிலங்களுக்கு பாசன உறுதியும் மற்றும் 595.18 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்கு பாசன வசதியும் ஏற்படும்.

மண் அணை, நீர்வழிந்தோடி, இரண்டு மதகுகள் கட்டுதல், இராசிங்க பெரியாறு மற்றும் குலசேகர பெரியாறு பகுதிகளாகப் பிரிக்கும் சுவர் கட்டுதல் மற்றும் கண்மாய்கள், அணைகள், மேம்படுத்துதல் போன்ற பணிகள் இத்திட்டத்தின் அங்கங்கள் ஆகும்.

விரிவான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது.

*(33) மிருகண்டா நதியின் குறுக்கே நீர்த்தேக்கம் (திருவண்ணாமலை மாவட்டம்)*

திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், மேல் சோழங்குப்பம் கிராமம் அருகே மிருகண்டா நதியின் குறுக்கே ரூ.16.79 கோடி மதிப்பீட்டில் நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தது.

இத்திட்டத்தின் மூலம் திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், மேல் சோழங்குப்பம், கங்காவரம், சேனேந்தல், நல்லான்பிள்ளைபெற்றான், கங்கமலதேவி, கேட்டவரம்பாளையம், சிறுவல்லூர், எர்ணாமங்கலம் மற்றும் சோளவரம் கிராமங்களிலுள்ள 778.05 எக்டேர் நிலங்களுக்கு பாசன உறுதியும், 81.10 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்கு பாசன வசதியும் ஏற்படும்.

670 மீ. நீளம் மண் அணை, கட்டுப்பாடில்லா உபரிநீர் வழிந்தோடி, ஒரு தலைப்பு மதகு மற்றும் ஓர் ஆற்று மதகு கட்டுதல் ஆகியவை இத்திட்டத்தின் அங்கங்கள் ஆகும்.

இத்திட்டத்திற்கு 80.82 எக்டேர் பட்டா நிலமும் மற்றும் 23.37 எக்டேர் புறம்போக்கு நிலமும் கையகப்படுத்த தேவைப்படுகிறது.

தனியார் நிலம் கையகப்படுத்தும் பணிக்கு அரசு அனுமதி அளித்துள்ளது. திட்டப் பணிகள் நடப்பு ஆண்டில் தொடங்கப்படும்.

[2001 செப்டம்பர் 8

*(34)* கீழ்பவானி பாசன அமைப்பை புனரமைத்து நவீனப்படுத்துதல் மற்றும் கீழ்பவானி பாசனப் பரப்பில் 23,000 ஏக்கர் நிலங்கள் சேர்த்தல்–மதிப்பீடு ரூ.55.00 கோடி

கீழ்பவானி பாசனப் பரப்பில் 23,000 ஏக்கர் நிலத்தினைச் சேர்க்க அரசு ஆணை வழங்கியுள்ளது.

ரூ.7.00 கோடி செலவில் கீழ்பவானி திட்டக் கால்வாய்களில் 313 கி.மீ. நீளத்திற்குத் தூர்வாரும் பணி செய்து முடிக்கப்பட்டது. 2000–2001–ல் ரூ.10.27 கோடி செலவில் கீழ்பவானி திட்டக் கால்வாய்களில் தூர்வரும் பணிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. 277.8 கி.மீ. நீளத்திற்குத் தூர்வாரும் பணி முடிவடைந்துள்ளது. 2001–2002 நிதியாண்டிற்கு ரூ. 5.00 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

*(35)* கூடுதல் நிதியில் கும்பகோணம் நகர எல்லைக்குள் உள்ள நான்கு வாய்க்கால்களை புனரமைத்தல்–மதிப்பீடு ரூ.1.91 கோடி

பணி முன்னேற்றத்தில் உள்ளது.

*(36)* உய்யக்கொண்டான் வாய்க்கால், குடமுருட்டி ஆறு, அரியாறு, கோரையாறு தூர் வாருதல் மற்றும் திருச்சி நகரத்தில் வெள்ள சேதத்தைப் பாதுகாக்க கரைகளை வலுப்படுத்துதல்–மதிப்பீடு ரூ.2.50 கோடி

பணிகள் முடிவடைந்தன.

*(37)* திருச்சியிலிருந்து கரூர் வரை காவிரியில் கருவேல மரங்கள் மற்றும் காட்டாமணக்குச் செடிகளை அகற்றுதல்–மதிப்பீடு ரூ.10 இலட்சம்

பணிகள் முடிவுற்றன.

*(38)* மாசுபட்ட நொய்யல் ஒரத்துப்பாளையம் நீரை திருப்பிவிட புகலூர் கால்வாயில் நீர்க்குழி கட்டுதல்–மதிப்பீடு ரூ.35 இலட்சம்

ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டு, பணி தொடங்கப்படவுள்ளது.

*(39)* கரூர் மாவட்டம் பள்ளப்பட்டி அருகே நங்காஞ்சியாறு ஓடையின் குறுக்கே உள்ள அணைக்கட்டு புனரமைத்தல்–மதிப்பீடு ரூ.33 இலட்சம்

பணிகள் நடைபெற்று வருகின்றன.



2001 செப்டம்பர் 8]

*(40)* திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள கதிரியின்குளம் மற்றும் அதன் வாய்க்கால்கள் தூர் வாருதல் – மதிப்பீடு ரூ. 50 இலட்சம்

25 விழுக்காடு பணி முடிவடைந்துள்ளது. எஞ்சிய பணிகள் நடைபெறுகின்றன.

*(41)* சென்னம்பட்டி அணைக்கட்டு திட்ட கால்வாயில் உள்ள எஞ்சிய பணிகள் –மதிப்பீடு ரூ.15 இலட்சம்

பணி முடிவுற்றது.

*(42)* மேலூரிலிருந்து மரவன்மங்கலம்குளம் வரை பெரியார் பிரதான கால்வாயில் உள்ள எஞ்சிய பணிகள் – மதிப்பீடு ரூ.1.00 கோடி

20 விழுக்காடு பணி முடிவடைந்துள்ளது. எஞ்சிய பணிகள் நடைபெறுகின்றன.

*(43)* குழித்துறை ஆற்றின் விளாத்துறை நீரேற்றுப் பாசன திட்டத்தை புனரமைத்தல் –மதிப்பீடு ரூ.5.00 இலட்சம் (நீர்வளத் தொகுப்பு திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டது)

பணி முடிவடைந்தது.

*(44)* திருச்சி மாநகரத்தில் வெள்ளத் தடுப்புத் திட்டம்

திருச்சிராப்பள்ளி மாநகரத்தில் 1999 நவம்பர் மாதத்தில் வெள்ளப் பெருக்கினால் ஏற்பட்ட சேதம் மீண்டும் ஏற்படாமல் தவிர்க்க ரூ.50.00 கோடி மதிப்பீட்டில் வெள்ளத் தடுப்புத் திட்டத்தினை செயல்படுத்த அரசு அனுமதி வழங்கியுள்ளது.

குடமுருட்டியாறு காவிரி நதியில் சேரும் பகுதியில் உள்ள தடைகளை நீக்குதல், அரியாறு, கோரையாறு, கொடிங்கல் வடிகால் கால்வாய்களை அகலப்படுத்துதல் மற்றும் உய்யகொண்டான் கால்வாயின் கரைகளை பலப்படுத்துதல் ஆகிய பணிகள் இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும்.

இத்திட்டத்திற்கு நபார்டு வங்கியின் நிதி உதவியினைப் பெற ஒருங்கிணைந்த நடவடிக்கை எடுக்குமாறு முதன்மைத் தலைமைப் பொறியாளர், தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்) மற்றும் பொறியாளர், தலைமைப் பொறியாளர், திருச்சி மண்டலம் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

[2001 செப்டம்பர் 8

ஊரக உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (R.I.D.F.) VI-ன்கீழ் இத்திட்டத்திற்கான நிதி உதவி பெறுவதற்கான கருத்துரு நபார்டு வங்கிக்கு 8-2-2001 அன்று அனுப்பப்பட்டுள்ளது. நபார்டு வங்கியின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

இத்திட்டப் பணிகளுக்கான மதிப்பீடுகள் தயாரிக்கும் பணி பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளது.

ஆரம்பக்கட்ட பணிகளுக்காக இதுவரை ரூ.1.54 இலட்சம் செலவிடப் பட்டுள்ளது.

**1999-2000 ஆம் ஆண்டில் பகுதி II திட்டத்தின்கீழ் ஒப்பளிக்கப்பட்ட சிறுபாசனத் திட்டங்களின் முன்னேற்ற விவரம்**

*(1) ராஜகம்பீரம் ஏரியும் மற்றும் அதன்கீழ் அமைந்துள்ள 15 இதர ஏரிகளும் நீர் வசதி பெற வைகை வெள்ள நீரை திருப்பிவிடும் திட்டம் (சிவகங்கை மாவட்டம்)*

அரசு சிவகங்கை மாவட்டம் மானாமதுரை வட்டத்திலுள்ள ராஜகம்பீரம் ஏரியும் மற்றும் அதன்கீழ் அமைந்துள்ள 15 இதர ஏரிகளும் ரூ.3.09 கோடி மதிப்பீட்டில் நீர் வசதி பெற வைகை வெள்ள நீரை திருப்பிவிடும் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தது.

இத்திட்டம் மானாமதுரை வட்டத்திலுள்ள எம்.கரிசல்குளம், சின்னக்கண்ணனூர், ராஜகம்பீரம், கிளங்காட்டூர், அன்னவாசல் மற்றும் அரிமண்டபம் ஆகிய கிராமங்கள் மற்றும் பரமக்குடி வட்டத்திலுள்ள வேலனேரி, கள்ளிகுடி மற்றும் பிடாரிசேரி கிராமங்களில் 1039.61 எக்டேர் நிலங்களுக்கு பாசன உறுதியும், 198.99 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்கு பாசன வசதியும் மற்றும் 8.25 எக்டேர் புதிய புன்செய் நிலங்களுக்கு பாசன வசதியும் கிடைக்கும்.

வைகையாற்றின் எல்.எஸ். 32.050 கிமீட்டரில் தலைப்பு ரெகுலேட்டர் கட்டுதல், வலது பிரதான கால்வாய் எல்.எஸ். 32,050 மீ. முதல் 33,900 மீ. வரை அடித்தளம் மற்றும் பக்கங்களுக்கு அகவுறை செய்தல், எல்.எஸ். 33,885 மீட்டரில் ரெகுலேட்டர் கட்டுதல் மற்றும் வலது பிரதான கால்வாய் எல்.எஸ். 33,870 மீட்டரில் தலைப்பு மதகு கட்டுதல், வழங்கு வாய்க்கால் 2.20 கி.மீ. வெட்டுதல் மற்றும் குறுக்கு வடிகால் கட்டுமானப் பணிகள் ஆகியவை இத்திட்டத்தின் அங்கங்கள் ஆகும்.

15 குளங்களின் கரைகள் சீரமைக்கப்பட்டன. எஞ்சிய பணிகள் நடைபெறுகின்றன.



2001 செப்டம்பர் 8]

*(2) வெள்ளாற்றின் குறுக்கே அணை கட்டி பஞ்சாத்தி மற்றும் தொடர் கண்மாய்களுக்கு நீர் வசதி அளித்தல் (புதுக்கோட்டை மாவட்டம்)*

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி வட்டம், ஆளப்பிறந்தான் கிராமத்தில் வெள்ளாற்றின் குறுக்கே அணை கட்டி பஞ்சாத்தி மற்றும் தொடர் கண்மாய்களுக்கு ரூ.141.00 இலட்சம் மதிப்பீட்டில் நீர் வசதி அளிக்கும் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

இத்திட்டம் பஞ்சாத்தி, அமான்ஜி, குண்டகவயல், கீழச்சேரி, சிவந்தன்காடு மற்றும் பெருனாவலூர் கிராமங்களில் 672.14 எக்டேர் நிலங்களுக்கு பாசன உறுதியும் மற்றும் 35.11 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்கு பாசன வசதியும் கிடைக்கும்.

அணை கட்டுதல், வழங்கு கால்வாய் வெட்டுதல், வெள்ளக்கரை அமைத்தல் மற்றும் கண்மாய்கள் மேம்பாடு செய்தல் ஆகியவை இத்திட்டத்தின் அங்கங்கள் ஆகும்.

இப்பணிகளுக்கு ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. விரைவில் பணிகள் தொடங்கப்படும். இத்திட்டத்திற்கு "நபார்டு" வங்கி கடன் உதவி செய்துள்ளது.

பகுதி II திட்டத்தின்கீழ் ஒப்பளிக்கப்பட்ட சிறப்பு சிறுபாசனத் திட்டங்களின் முன்னேற்ற விவரம்

**1999-2000**

| | |
|---|---|
| மொத்த வேலைகளின் எண்ணிக்கை | 16 |
| வேலைகள் முடிவுற்றவை | 5 |
| வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருப்பவை | 6 |
| வேலைகள் ஆரம்பிக்கப்படவேண்டியவை | 5 |

**2000-2001**

| | |
|---|---|
| மொத்த வேலைகளின் எண்ணிக்கை | 3 |
| வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருப்பவை | 2 |
| வேலைகள் ஆரம்பிக்கப்படவேண்டியவை | 1 |

## 2001–2002 ஆம் ஆண்டில் எடுத்துக் கொள்ளப்படும் புதிய திட்டங்கள்

### பகுதி II திட்டங்கள்

#### (1) சிறுபாசன திட்டங்கள்

| வ. எண் | திட்டத்தின் பெயர் | விவரம் |
|---|---|---|
| 1. | தருமபுரி மாவட்டம் பென்னகரம் தாலூகா ராமகொண்டஹள்ளி அருகே மத்தளபள்ளம் ஆற்றின் குறுக்கே ஒரு கண்மாய் அமைத்தல் | மதிப்பீடு ரூ.1415 இலட்சம்<br>பயனடையும் பாசனபரப்பு<br>முதல் பயிர் - 700 ஏக்கர்<br>இரண்டாவது பயிர் - 400 ஏக்கர் |
| 2. | கடலூர் மாவட்டம் சிதம்பரம் தாலூகா பெரும்பட்டு கிராமம் அருகில்கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே அணைக்கட்டு கட்டுதல் | மதிப்பீடு மதிப்பீடு 162 லட்சம் புதிய பாசனபரப்பு 460 ஏக்கர் |
| 3. | தருமபுரி மாவட்டம் கிருஷ்ணகிரி தாலூகா படத்தலார் கண்மாய் முதல் வெண்ணம்பள்ளி கண்மாய் மற்றும் கீழே உள்ள 10 கண்மாய்களுக்கு நீர் கொண்டு செல்ல புதிய வழங்கு கால்வாய் அமைத்தல் | மதிப்பீடு ரூ.700 இலட்சம்<br>ஆயக்கட்டு இடைவெளி - 84074 ஏக்கர்<br>புதிய ஆயக்கட்டு 500 ஏக்கர் |
| 4 | கன்னியாகுமரி மாவட்டம் விளவங்கோடு தாலூகா, கடஞ்சேரி(புதுக்கடை) இறைவை பாசனத் திட்டம் | மதிப்பீடு ரூ.219 இலட்சம்<br>புதிய ஆயக்கட்டு - 572.50 ஏக்கர் |
| 5 | தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டி தாலூகா தெப்பம்பட்டி கிராமம் வெள்ளப்பாறை ஓடையின் குறுக்கே புதிய கண்மாய் அமைத்தல் | மதிப்பீடு ரூ.119 லட்சம்<br>புதிய ஆயக்கட்டு - 104.28 ஏக்கர் |





#### (2) சிறப்பு சிறுபாசன திட்டங்கள்

| | | |
|---|---|---|
| (1) | வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், பாச்சூர்கிராமத்தைச் சார்ந்த பாயப்ப நாயக்கன் பேட்டையில் குட்டை அமைத்தல் | மதிப்பீடு - ரூ.12.00 இலட்சம்<br>பயனடையும் புதிய பாசன பரப்பு - 15.80 ஏக்கர்<br>பாசன உறுதி - 4.08 ஏக்கர் (இடைவெளி)<br>கூடுதல் உற்பத்தி - 17.36 டன் |
| (2) | வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டம், சேமபள்ளி கிராமத்தில் மலை ஓடையின் குறுக்கே குட்டை அமைத்தல் | மதிப்பீடு - ரூ.13.00 இலட்சம்<br>பயனடையும் புதிய பாசன பரப்பு - 33.39 ஏக்கர் இருபோகம்<br>கூடுதல் உற்பத்தி - 30.88 டன் |
| (3) | நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் வட்டம், உனன்தங்கல் கிராமத்தில் சர்வே எண்.123ல் குட்டை அமைத்தல். | மதிப்பீடு- ரூ.25.00 இலட்சம்<br>பயனடையும் புதிய பாசன பரப்பு - 37.3580 ஏக்கர்<br>பாசனஉறுதி - 19.19 ஏக்கர்<br>கூடுதல் உற்பத்தி - 21.07 டன் |
| (4) | தர்மபுரி மாவட்டம். கிருஷ்ணகிரி வட்டம். பெரிய பனமுட்லு கிராமத்தில் புது ஏரியினை புனரமைத்தல் | மதிப்பீடு- ரூ.15.00 இலட்சம்<br>பயனடையும் புதிய பாசன பரப்பு - 65.10 ஏக்கர்<br>கூடுதல் உற்பத்தி - 32.55 டன் |
| (5) | திருச்சி மாவட்டம், முசிறி வட்டம் பிள்ளைப்பாளையம் கிராமத்தில் சர்வே எண்.724ல் புதிய குட்டை அமைத்தல் | மதிப்பீடு - ரூ.23.00 இலட்சம்<br>பயனடையும் புதிய பாசன பரப்பு - 15.00 ஏக்கர்<br>கூடுதல் உற்பத்தி -23.93 டன் |
| (6) | திருச்சி மாவட்டம், முசிறி வட்டத்தில் முல்லப்பாடி கால்வாய் மூலம் முல்லப்பாடி ஏரிக்கு நீர் வழங்க ஆகாச குமுளியாற்றின் குறுக்கே அணைக்கட்டு கட்டுதல் | மதிப்பீடு - ரூ.32.00 இலட்சம்<br>பாசன உறுதி - 58.95 ஏக்கர்<br>பழைய பாசனப்பரப்பு - 244.34 இடைவெளி)<br>கூடுதல் உற்பத்தி - 342.42 டன் |
| (7) | கரூர் மாவட்டம் குளித்தலை வட்டம். மேல் முனாயனூர் கிராமத்தில் வாரியன் குறுக்கே புதிய குட்டை அமைத்தல் | மதிப்பீடு - ரூ.13.00 இலட்சம்<br>பழைய பாசனப் பரப்பு - 103.00 ஏக்கர்<br>கூடுதல் உற்பத்தி - 44.00 டன் |

[2001 செப்டம்பர் 8

| | | |
|---|---|---|
| (8) | புதுக்கோட்டை மாவட்டம் குளத்தூர் வட்டம், ராஜகிரி கிராமத்தில் நல்ல மங்கான் குளம் மற்றும் நான்கு ஏரிகளுக்கு நீர் வழங்க கோரையாற்றின் குறுக்கே அணை கட்டுதல். | மதிப்பீடு - ரூ.47.00 இலட்சம் பயனடையும் புதிய பாசன பரப்பு - 33.11 ஏக்கர் பழைய பாசனப் பரப்பு - 87.29 +7.83 ஏக்கர் கூடுதல் உற்பத்தி - 109.06 டன் |
| (9) | திண்டுக்கல் மாவட்டம், வேடசெந்தூர் வட்டம், சுக்கம்பட்டி கிராமத்தில் புதிய குளம் அமைத்தல் | மதிப்பீடு - ரூ.38.00 இலட்சம் பயனடையும் புதிய பாசன பரப்பு - 37.00 ஏக்கர் கூடுதல் உற்பத்தி - 43.42 டன் |
| (10) | திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், வாடிப்பாடி கிராமத்தில் சர்வே எண். 73, 74 மற்றும் 75ல் புதிய குளம் அமைத்தல் | மதிப்பீடு - ரூ.14.00 இலட்சம் பயனடையும் புதிய பாசன பரப்பு -37.50 ஏக்கர் (இருபோகம்) கூடுதல் உற்பத்தி - 35.82 டன் |

(3) கடலரிப்பு தடுப்புத் திட்டம்

வடசென்னையில் கடல் ஓரப் பகுதியில் கடல் அரிப்பைத் தடுப்பதற்கு தடுப்புச் சுவர் கட்டுதல் மதிப்பீடு ரூ.283.00 இலட்சம்

**கூடுதல் பாசன வசதி**

2001–2002 ஆம் ஆண்டில் நடுத்தர மற்றும் சிறுபாசனத் திட்டங்களால் (அணைக்கட்டுகள்/நீர்த்தேக்கங்கள்) 1213 எக்டேர் நிலங்களுக்குக் கூடுதல் பாசன வசதி அளிக்கவும், சிறுபாசனக் குளங்கள் மூலம் 550 எக்டேர் நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டம் (நீ.வ.ஆ.தொ.தி.)**

(i) தமிழ்நாடு நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டமானது ரூ.840.84 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு உலக வங்கியால் 1995 ஆம் ஆண்டு



2001 செப்டம்பர் 8]

அங்கீகரிக்கப்பட்டது. தமிழக அரசு இத்திட்டத்திற்கு 1995 செப்டம்பர்த் திங்களில் அடிப்படை விலையின்படி ரூ.807.49 கோடிக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

(ii) இத்திட்டம் மாநிலம் தழுவிய பகுதி முதலீட்டுத் திட்டமாக நடைமுறைபடுத்தப்படும். இத்திட்டம் தமிழ்நாட்டுப் பாசனப் பிரிவின் நீடித்த வளர்ச்சி மூலம் உற்பத்தியைப் பெருக்க உதவும். பாசனப் பிரிவின் நீடித்த வளர்ச்சியானது வேளாண் மக்களை பாசன மேலாண்மையில் ஈடுபடுத்துதல், நீர்வள மேம்பாடு, நீர் மேலாண்மை மற்றும் நீர்வளத் திட்டமிடல் போன்றவற்றில் நிறுவனம் மற்றும் தொழில்நுட்பத் திறனை வலுப்படுத்துதல் ஆகியவற்றிற்குப் பெரிதும் உதவும்.

(iii) இத்திட்டம் 40 இலட்சம் வேளாண் மக்களுக்கு நேரடி பயனளிக்கும். இத்திட்டம் 6 இலட்சம் எக்டேர் நிலத்தில் வேளாண் உற்பத்தியைப் பெருக்கும். (இது இம்மாநிலத்தின் பாசனப் பரப்பில் 50 விழுக்காடாகும்.) பாசன ஆதாரங்களைப் புனரமைத்து நவீனப்படுத்துவதன் மூலமும், மேம்பட்ட பராமரிப்பு மற்றும் நீர் மேலாண்மை இவற்றில் வேளாண் மக்களை இணைப்பதன் மூலமும் பாசனம் ஒரு நீடித்த வளர்ச்சியிலான அடித்தளத்தில் அமையும்.

(iv) இத்திட்டம் காவிரி வடிநிலப் பாசன வடிநிலப் பகுதியைத் தவிர்த்து ஏனைய பாசனத் திட்டங்கள், திட்டங்களின் புனரமைப்பு மற்றும் நவீனப்படுத்தலுக்கும் வழிகோலும். மேலும் சிறுபாசனத் திட்டங்களான பொய்கையாறு, நம்பியாறு, சோத்துப்பாறை, மோர்தானா, ராஜாதோப்புகானாறு, கொடுமுடியாறு, வடக்குப் பச்சையாறு, அடவிநயினார் கோயில், கிருதமால் ஆகிய நிறைவேறி வரும் பாசனத் திட்டங்களை முடிப்பதற்கும் வழிகோலும்.

(v) அரசு இத்திட்டத்திற்கு முக்கியத்துவம் அளித்து மார்ச் 2001 முடிய ரூ.1081.54 கோடி மதிப்பீட்டில் 2348 பணிகளுக்கு (சிப்பங்கள் உட்பட) ஒப்புதல் வழங்கியுள்ளது. இந்த மதிப்பீடுகளின் விவரம் பின்வருமாறு:

[2001 செப்டம்பர் 8

| வ. எண் | பணிகளின் விவரம் | ஒப்பளிக்கப்பட்ட சிப்பங்கள் (Packages) ன் எண்ணிக்கை | மதிப்பு (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| 1. | (அ) பாசன ஏற்பாடுகளின் மேம்பாடு மற்றும் புனரமைப்பு, வேளாண் பெருமக்களுக்கு பயிற்சி அளித்தல், திட்டங்களை முடித்தல் உட்பட | 343 (சிப்பங்கள் உட்பட) | 661.76 |
| | (ஆ) குறைந்த அளவு புனரமைப்பு பணிகள் | 946 | 54.89 |
| 2. | விவசாய சங்கங்கள் அமைத்தல் மற்றும் ஒப்படைத்தல் | 15 | 3.80 |
| 3. | இயக்கம் மற்றும் பராமரிப்புக்கான தளவாடங்கள் | 3 | 14.71 |
| 4. | பாசன மேலாண்மை பயிற்சி நிலையம் | 14 | 12.78 |
| 5. | நீர்திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சி | 68 | 33.25 |
| 6. | சுற்றுப்புறச் சூழல் நிர்வாகம் | 12 | 9.98 |
| 7. | நில எடுப்பு மற்றும் பொருளாதார புனர்வாழ்வு | 4 | 17.78 |
| 8. | நிறுவனங்கள் வலுப்படுத்துதல், மற்றும் கட்டடங்கள், கணிப்பொறிகள், வாகனங்கள், அலுவலக தளவாடங்கள், தொலைபேசிகள் முதலியன மற்றும் பிணைப்பு ஆலோசனை போன்ற பொதுவானவைகள் | 311 | 123.58 |
| 9. | கூடுதல் திட்டப் பணிகள் | | |
| | (அ) முறையில்லா பாசன கண்மாய்கள் புனரமைத்தல் | 620 | 106.26 |
| | (ஆ) அணை பாதுகாப்புத் திட்டப்பணிகளில் மீதமுள்ள பணிகள் (கோமுகி, சாத்தனூர், வெலிங்டன், வீடூர், சேத்தியாதோப்பு) | 5 | 35.70 |
| | (இ) இந்நிறுவனங்களை வலுப்படுத்துதல் மேலாண்மை மற்றும் தகவல் தொடர்பு பணிகள் கணிணி மயமாக்குதல் | 6 | 7.05 |
| | மொத்தம் | 2348 | 1081.54 |



2001 செப்டம்பர் 8]

(vi) 2001–2002 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்கு ரூ. 374.08 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

2001–2002 ஆம் ஆண்டு தொடக்கத்தில் நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டத்தின்கீழ் பின்வரும் பெரிய மற்றும் நடுத்தர பாசனத் திட்டங்கள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன.

*(1) பொய்கையாறு நீர்த்தேக்கம் (நீ.ஆ.தொ.தி.) (கன்னியாகுமரி மாவட்டம்)*

இந்நீர்த்தேக்கம் கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை வட்டம், ஆரல்வாய்மொழி கிராமத்தின் அருகே பொய்கையாற்றின் குறுக்கே அமைக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தினால் தோவாளை வட்டத்தில் செண்பகராமன்புதூர், ஆரல்வாய்மொழி கிராமங்களிலும், இராதாபுரம் வட்டத்தில் பழவூர் கிராமத்திலும் மொத்தமாக 202 எக்டேர் புதிய புன்செய் நிலம் பாசன வசதியும், 192 எக்டேர் நிலம் பாசன உறுதியும், 57 எக்டேர் விடுபட்ட நிலம் பாசன வசதியும் பெறும். இதுதவிர தோவாளை ஊராட்சி ஒன்றியத்தின் கீழ்வரும் 4 கிராமங்களுக்குக் குடிநீர்த் தேவைக்காக 20 மி.க.அடி தண்ணீர் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது.

மண் அணையின் ஒரு பகுதி மாநில நிதியுடன் செயலாக்கப்பட்டது. மண் அணை அமைப்பதில் நிலுவையிலுள்ள பணிகள், குறுக்கு

[2001 செப்டம்பர் 8

கட்டுமானப் பணிகள் உட்பட புதிய பிரதானக் கால்வாய், உபரி நீர்க்கால்வாய், இணைப்புக் கால்வாய் வெட்டுதல் ஆகிய பணிகள், சாலை அமைத்தல், கைப்பிடிச் சுவர் கட்டுவது போன்ற பணிகள் நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டத்தின்கீழ் ரூ.9.46 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தில் மண் அணை, உபரி நீர்வழிந்தோடி, கால்வாய் மதகு, ஆற்றின் மதகு, உபரி நீர்ப்பாதையில் மட்டம் தாழ்த்தும் மதகுகளில் முதல் நான்கு பணிகள் முடிவுற்றன. புதிய பிரதானக் கால்வாய் வெட்டுதல் மற்றும் கற்காரை பூசுதல், குறுக்குக் கட்டுமானப் பணிகள், அணுகுசாலை அமைத்தல், கைப்பிடிச் சுவர் கட்டுதல் ஆகியவை முடிவுற்றன. எல்.எஸ். 330 மீட்டரில் ஒற்றைப் பாதை பாலம் கட்டுதல் உட்பட எல்.எஸ். 280 மீட்டர் முதல் 330 மீட்டர் வரை உபரி நீர்க் கால்வாய் வெட்டும் பணி மற்றும் ஆற்றுப் பகுதியில் மண் அணை கட்டுவதில் உள்ள எஞ்சிய பணிகள் நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டத்தின்கீழ் நடைபெற்று வருகின்றன. நீர்வழிந்தோடி மற்றும் சுங்கன் ஓடை பணிகளுக்கான ஒப்பந்தம் கோரப்பட்டுள்ளது. அனைத்துப் பணிகளும் டிசம்பர் 2001-ல் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

*(2) நம்பியாறு நீர்த்தேக்கம் (நீ.ஆ.தொ.தி.) (திருநெல்வேலி மாவட்டம்)*

திருநெல்வேலி மாவட்டம் இராதாபுரம் வட்டத்தில் நம்பியாற்றின் குறுக்கே இந்நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தினால், இராதாபுரம் வட்டத்தில் கோட்டை கருங்குளம், உருமாங்குளம், இராமநாதபுரம், கரைசிட்டிப்புதூர், கஸ்தூரி ரங்கபுரம், குமாரபுரம், முத்து மோதுமொழி மற்றும் திசையன்விளை கிராமங்களில் மொத்தமாக 152 எக்டேர் புதிய புன்செய் நிலத்திற்குப் பாசன வசதியும், 185 எக்டேர் விடுபட்ட நிலத்திற்குப் பாசன வசதியும், 369 எக்டேர் நிலத்திற்குப் பாசன உறுதியும் கிடைக்கும்.

இத்திட்டத்தில் மண் அணை அமைத்தல், வலதுபுறக் கால்வாய் மதகு கட்டுதல் மற்றும் வலதுபுற பிரதான கால்வாய் வெட்டுதல் போன்ற பணிகள் முடிவடைந்துள்ளன. எஞ்சிய பணிகள் நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டத்தின்கீழ் ரூ.14.28 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. மணல் போக்கியுடன் கூடிய தடையிலா நீர்வழிந்தோடி, இடதுபுற பிரதானக் கால்வாய் மதகு கட்டுதல் ஆகிய பணிகள் முடிவுற்றன. மண் அணை அமைத்தல், தடையிலா நீர்வழிந்தோடி, இடதுபுற பிரதானக் கால்வாய் வெட்டும் பணி, அதன்



2001 செப்டம்பர் 8]

குறுக்கு கட்டுமானப் பணிகள், வலதுபுற பிரதானக் கால்வாய் குறுக்கு வடிகால் கட்டுமானப் பணிகள், கிளை கால்வாய் மற்றும் அதனுடைய பிரிவுக் கால்வாய்கள், வெட்டும் பணிகள், அகவுறை செய்யும் பணிகள் ஆகியவை நடைபெற்று வருகின்றன. அனைத்து பணிகளும் மார்ச் 2002-ல் முடிக்கப்படும்.

*(3) இராஜாத்தோப்புகானாறு நீர்த்தேக்கம் (நீ.ஆ.தொ.தி.) (வேலூர் மாவட்டம்)*

வேலூர் மாவட்டத்தைச் சார்ந்த குடியாத்தம், வட்டத்தில் செஞ்சி கிராமத்திற்கு அருகில் இராஜாத்தோப்புகானாறு ஆற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைக்க இத்திட்டம் வகை செய்கிறது.

இத்திட்டத்தினால் குடியாத்தம் வேலூர், மற்றும் வாணியம்பாடி வட்டங்களில் செஞ்சி, லத்தேரி, விழுந்தக்கால், ஓய்யாத்தூர் மற்றும் சேனூர் கிராமங்களில் மொத்தம் 202 எக்டேர் நிலப் பரப்பிற்குப் பாசன உறுதியும், 17 எக்டேர் விடுபட்ட நிலப்பரப்பிற்குப் பாசன வசதியும் ஏற்படும்.

இத்திட்டத்தில் மண் அணை, உபரி நீர்ப் போக்கி, உபரி நீர்ப் பாதை, கால்வாய் மதகு 0 மீ. முதல் 5000 மீ. வரை குறுக்கு வடிகால், கட்டுமானப் பணி உட்பட கால்வாயில் கற்காரை பூசும் பணி மாநில நிதியில் ஏற்கெனவே முடிக்கப்பட்டுள்ளது.

நிலுவையிலுள்ள அணை கட்டும் பணி, லத்தேரி, விழுந்தக்கால், ஓய்யாத்தூர் ஏரிகளுக்கு நீர் வழங்கும் இணைப்புக் கால்வாய் மற்றும் கால்வாயில் 5,000 மீட்டர் நீளத்திற்கு கற்காரை பூசுதல், குறுக்கு வடிகால் பணிகள் ஆகியவை நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டத்தின்கீழ் ரூ.2.56 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட உள்ளன.

இத்திட்டப் பணிகள் அனைத்தும் 31-7-2000-ல் முடிவடைந்தன.

*(4) கவுண்டின்யா நதி (மோர்தானா) நீர்த்தேக்கம் (நீ.ஆ.தொ.தி.) (வேலூர் மாவட்டம்)*

வேலூர் மாவட்டம் குடியாத்தம் வட்டத்தில் மோர்தானா கிராமத்திற்கு அருகே கவுண்டின்யா நதியின் குறுக்கே இந்நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினால் குடியாத்தம், வேலூர் வட்டங்களில் 34 கிராமங்களில் 1152 எக்டேர் நிலங்களுக்குக் கூடுதல் பாசன வசதி அளிப்பதுடன், 2585 எக்டேர் நிலங்களுக்கு நிலையான பாசன வசதியும், 285 எக்டேர் விடுபட்ட நிலத்திற்குப் பாசன வசதியும் ஏற்படும்.

[2001 செப்டம்பர் 8

1990–91–ல் கல் அணையாகக் கட்ட திட்டமிடப்பட்டது. பிறகு 1–7–94–ல் திட்டம் நிறைவேற்றுதலின்கீழ் நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, திட்டத்தில் புதிய வலது மற்றும் இடது புறக் கால்வாய் வெட்டும் வகையில் மாற்றியமைக்கப்பட்டது. நீர்த்தேக்கப் பணிகள் முடிவடைந்தது.

எஞ்சிய பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் 31–3–2002–க்குள் முடிவடையும்.

(5) அடவிநயினார்கோவில் நீர்த்தேக்கம் (நீ.ஆ.தொ.தி.) (திருநெல்வேலி மாவட்டம்)

திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்திலுள்ள மேக்கரை கிராமத்தில் அனுமநதி ஆற்றின் குறுக்கே இந்நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தினால் செங்கோட்டை மற்றும் தென்காசி வட்டங்களில் வடகரை கீழ் பிடாகை, வடகரை மேல் பிடாகை, பன்மொழி, அச்சன் புதூர், நெடுவயல், கொடிக்குறிச்சி, நயினார் அகரம், கிழங்காடு மற்றும் ஆய்க்குடி கிராமங்களில் 1562 எக்டேர் நிலத்திற்கு நிலையான பாசன வசதியும், 616 எக்டேர் விடுபட்ட நிலத்திற்குப் பாசன வசதியும், 93 எக்டேர் நிலத்திற்குப் புதிய பாசன வசதியும் ஏற்படும்.

கல்லணை, கால்வாய் பணிகள் குடியிருப்புகள் மற்றும் சாலை அமைக்கும் பணிகள் ஆகியவை நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டத்தின்கீழ் ரூ.61.50 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட உள்ளன.

கல்லணை கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

கால்வாய் வெட்டும் பணி மற்றும் கட்டடங்கள் கட்டும் பணி முடிந்துள்ளன. அணுகுசாலை அமைக்கும் பணி முக்கிய பணிகள் முடிந்ததும் எடுத்துக்கொள்ளப்படும். அனைத்துப் பணிகளும் மார்ச் 2002–ல் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

(6) அத்திக்குளம் கிராமத்தில் கிருதமால் ஆற்றின் குறுக்கே அணை கட்டுதல் (நீ.ஆ.தொ.தி.) (விருதுநகர் மாவட்டம்)

இத்திட்டம் விருதுநகர் மாவட்டம் அத்திக்குளம் கிராமத்தின் அருகிலுள்ள கிருதமால் ஆற்றின் குறுக்கே நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டத்தின்கீழ் ரூ.3.47 கோடி மதிப்பீட்டில் அணை கட்டி இடது, வலது புறக் கால்வாய்கள் வெட்டும் திட்டமாகும்.



2001 செப்டம்பர் 8]

இத்திட்டம் திருச்சுழி வட்டத்தில் இருஞ்சிறை, உலக்குடி மற்றும் இதர ஆறு கண்மாய்கட்கு நீர் வழங்கி அதன் மூலம் அத்திக்குளம், மானூர், மறையூர், உலக்குடி, நரிக்குடி, இருஞ்சிறை, ஆதித்தனேந்தல் மற்றும் வரிசையூர் கிராமங்களில் 943 எக்டேர் நன்செய் நிலங்களுக்கு நிலையான பாசன வசதியும் 323 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்குப் பாசன வசதியும் அளிக்கும்.

அணைக்கட்டு பணி மற்றும் இடதுபுற பிரதானக் கால்வாய்ப் பணிகள் முடிவடைந்தது. வலதுபுற பிரதானக் கால்வாய் வெட்டும் பணி நடைபெற்று வருகிறது. நடப்பு நிதியாண்டில் இப்பணிகள் முடிவு பெறும்.

(7) வடக்குப் பச்சையாறு நீர்த்தேக்கம் (நீ.ஆ.தொ.தி.) (திருநெல்வேலி மாவட்டம்)

இத்திட்டம் திருநெல்வேலி மாவட்டம் நாங்குனேரி வட்டத்திலுள்ள மஞ்சுவிளை கிராமம் அருகே பச்சையாற்றின் குறுக்கே ஒரு நீர்த்தேக்கம் அமைப்பது ஆகும்.

இத்திட்டத்தினால் நாங்குனேரி வட்டத்தில் உள்ள களக்காடு, நாங்குனேரி, உள்ளாங்குளம், இல்லான்குளம் மற்றும் புறப்பாடி கிராமங்களில் 574 எக்டேர் நிலத்திற்கு நிலையான பாசனமும், 464 எக்டேர் விடுபட்ட நிலத்திற்குப் பாசன வசதியும் மற்றும் 45 கண்மாய்களின்கீழ் உள்ள 769 எக்டேர் நிலங்களுக்கு புதிய பாசன வசதியும் செய்ய வழி வகுக்கப்பட்டுள்ளது. மேலும் ஒரு போகமே விளையும் 1568 எக்டேர் நிலங்களுக்கு இரண்டாவது போகமாக புன்செய் பயிர்கள் சாகுபடி செய்யவும் பாசன வசதி செய்யப்படும்.

பச்சையாற்றின் குறுக்கே திருப்பு மதகு, நீர் ஊட்டுக் கால்வாய், மண் அணை, தடையில்லா நீர்வழிந்தோடி, உபரி நீர்ப்பாதை, கால்வாய் மதகு, ஆற்றைக் கடக்கும் ஏற்பாடு உட்பட இணைப்புக் கால்வாய் இவற்றுடன் நாங்குனேரிகால், சீவலப்பேரிகால், பாதனேரிகால், தேவநல்லூர் கால்வாய் இவற்றைச் செப்பனிட்டு சீரமைத்தல், மடத்து அணைக் கால்வாயிலிருந்து இணைப்புக் கால்வாய் அமைத்தல், தேவநல்லூருக்குக் கீழே ஒரு புறவழிக் கால்வாய் வெட்டுதல், 45 ஏரிகளுக்கு நீர் வழங்க நாங்குநேரி ஏரிக்குக் கீழே ஒரு புறவழிக் கால்வாய் வெட்டுதல், இணைப்புச் சாலை அமைத்தல் மற்றும் கட்டடங்கள் கட்டும் பணிகள் நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டத்தின்கீழ் ரூ.56 கோடி திருத்திய மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட உள்ளன.

பச்சையாற்றின் குறுக்கே திருப்பு மதகு அமைக்கும் பணி மற்றும் ஊட்டுக்கால்வாய் வெட்டும் பணி, இணைப்புச் சாலை, கட்டடங்கள்

கட்டும் பணி, பாதுளேரி கால்வாய், தேவநல்லூர் கால்வாய், பாலம்பத்து கால்வாய் இவற்றைச் செப்பனிட்டு சீரமைத்தல், மடத்து அணைக்கட்டு கால் கடைக்கோடியிலிருந்து பீச்சாலம்குளம் கால்வாய் பிரியும் இடம் வரை இணைப்புக் கால்வாய் வெட்டும் பணிகள் முடிவுற்றன. இணைப்புச் சாலை, களப்பணி அலுவலகக் கட்டடம், தரக் கட்டுப்பாடு ஆய்வு மையக் கட்டடப் பணிகள் முடிவுற்றன.

தலை மதகு கட்டுதல், மண் அணை அமைத்தல், நீர்வழிந்தோடி. கால்வாய் மதகு, இணைப்புக் கால்வாய் மற்றும் குறுக்குக் கட்டுமானம், தேவநல்லூருக்குக் கீழே ஒருபுற வழிக் கால்வாய் வெட்டுதல் ஆகிய பணிகள் நடைபெற்று வருகின்றன.

நாங்குனேரிக் கால்வாய், சிவலப்பேரி கால்வாய், மடத்தூர் அணைக்கட்டு கால்வாய்கள் புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. நடப்பு நிதியாண்டில் அனைத்துப் பணிகளையும் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

(8) கொடுமுடியாறு திட்டம் (நீ.ஆ.தொ.தி.) (திருநெல்வேலி மாவட்டம்)

திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டத்தில் திருக்குறுங்குடி கிராமத்தில், கொடுமுடியாறும், கோம்பையாறும் கூடுமிடத்தில் இந்நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தினால் இராதாபுரம், நாங்குநேரி வட்டங்களில் உள்ள மயிலாடி, எருவாடி, நம்பித் தலைவன் பட்டயம், வடக்கு வள்ளியூர், தெற்கு வள்ளியூர், இராஜாக்கமங்கலம், அச்சம்பாடு, தலைக்குளம், ஆனைக்குளம், தெற்கு கனிக்குளம், சண்முகரெங்காபுரம், கும்பிகுளம், ஆழாங்கிணறு திருமாலபுரம் மற்றும் இராதாபுரம் கிராமங்களில் 791 எக்டேர் நிலையான பாசன வசதியும், 779 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்கு பாசனமும் 193 எக்டேர் ஒருபோக நிலங்களுக்கு இருபோக பாசன வசதியும் கிடைத்திட வழிசெய்யப்பட்டுள்ளது.

மண் அணை அமைத்தல், தடையில்லா நீர் வழிந்தோடி, கால்வாய் மதகு, ஆற்று மதகு, உபரி நீர்ப் பாதை, தாமரை அணைக்கட்டை மேம்படுத்துதல், ஏற்கெனவே உள்ள அலுவலர் குடியிருப்புகளுக்கு மின் வசதி செய்தல், ஆனையடி கோவிலை இடப்பெயர்ச்சி செய்தல் ஆகிய





பணிகள் நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டத்தின்கீழ் ரூ. 24.60 கோடி திருத்திய மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட உள்ளன.

கால்வாய் மேம்பாட்டுப் பணிகள் அக்குயுடக்ட் மற்றும் மிகை நீர்ப்போக்கிப் பணிகள் முடிவடைந்துவிட்டன. மண் அணை கட்டுதல் தடையிலா உபரிநீர் வழிந்தோடி, கால்வாய் தலைப்பு மதகு மற்றும் ஆற்றின் தலைப்பு மதகு, தாமரை அணை மேம்படுத்தும் பணி ஆனையடி கோவிலை அப்புறப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன. அனைத்து பணிகளும் நடப்பு நிதியாண்டில் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

(9) வராக நதி – சோத்துப்பாறை நீர்த்தேக்கம் (நீ.ஆ.தொ.தி) (தேனி மாவட்டம்)

தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டத்திலுள்ள தென்கரை கிராமத்தின் அருகில் வராக நதியின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைப்பதற்கு இத்திட்டம் வகை செய்கிறது.

இத்திட்டத்தினால் பெரியகுளம் வட்டத்தில் உள்ள தென்கரை மற்றும் தாமரைக்குளம் கிராமங்களில் 739 எக்டேர் நன்செய் நிலத்திற்கு நிலையான பாசனமும், 27 எக்டேர் விடுபட்ட நிலத்திற்குப் பாசனமும், 405 எக்டேர் புன்செய் நிலத்திற்கு புதிய பாசன வசதியும் அளிக்கப்படும்.

இத்திட்டத்தில் மாநில நிதித் தொகுப்பின்கீழ் கல்லணை கட்டும் பணி ஒரு பகுதி முடிவடைந்துள்ளது. கல்லணையில் எஞ்சிய பணிகள், கால்வாய்கள், வாய்க்கால்கள், கட்டடப் பணிகள் ஆகியவை நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டத்தின்கீழ் ரூ.30.42 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன,

கட்டடப் பணிகளும், இணைப்புச் சாலைப் பணிகளும் முடிவுற்றன.

கல்லணை கட்டும் பணி, கால்வாய் வெட்டும் பணி, குறுக்கு கட்டுமானப் பணிகள், கிளைக் கால்வாய்கள் வெட்டும் பணி ஆகியவை நடைபெற்று வருகின்றன. அணைக்கட்டு வளாகத்தில் திட்ட விடுதி கட்ட உலக வங்கியின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது. அனைத்துப் பணிகளும் நடப்பு நிதியாண்டில் முடிக்கப்படும்.

நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் பல்வேறு முக்கிய பணிகளின் முன்னேற்றம் குறித்த விவரங்கள்

[2001 செப்டம்பர் 8

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | சிப்பங்களின் மொத்த எண்ணிக்கை | முடிக்கப்பட்ட சிப்பங்களின் எண்ணிக்கை | முன்னேற்றத்தில் உள்ளவை | எடுத்துக் கொள்ளப்பட வேண்டியவை |
|---|---|---|---|---|---|---|
| | சென்னை மண்டலம் | | | | | |
| 1 | செய்யார் அணைக்கட்டு ஏற்பாடு புனரமைப்பு பணிகள் | 597 | 7 | 6 | - | 1 |
| 2 | பாலார் அணைக்கட்டு ஏற்பாடு புனரமைப்பு | 1866 | 18 | 15 | 2 | 1 |
| 3 | பொய்னி அணைக்கட்டு ஏற்பாடு புனரமைப்பு | 619 | 8 | 7 | 1 | - |
| 4 | திருக் கோவிலூர் அணைக்கட்டு ஏற்பாடு புனரமைப்பு பணி | 937 | 7 | 6 | 1 | - |
| 5 | தொழுதூர் மற்றும் பெலாந்துரை அணைக்கட்டு ஏற்பாடு புனரமைப்பு பணி | 469 | 9 | 8 | 1 | - |
| 6 | சிறு பணிகள் | 2398 | 14 | 13 | 1 | - |
| 7 | சாத்தனூர் சிப்டம் புனரமைப்பு பணிகள் | 1890 | 19 | 17 | 2 | - |



2001 செப்டம்பர் 8]

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) | சிப்பங்களின் மொத்த எண்ணிக்கை | முடிக்கப்பட்ட சிப்பங்களின் எண்ணிக்கை | முன்னேற்றத்தில் உள்ளவை | எடுத்துக் கொள்ளப்பட வேண்டியவை |
|---|---|---|---|---|---|---|
| 8 | சேத்தியா தோப்பு அணைக் கட்டு ஏற்பாடு புனரமைப்பு பணிகள் | 989 | 10 | 5 | 3 | 2 |
| 9 | மோர்தானா நீர்த்தேக்கத் திட்டம் | 8080 | 11 | 5 | 6 | - |
| 10 | ராஜாதோப்பு கானாறு நீர்த்தேக்கத் திட்டம் | 133 | 3 | 3 | - | - |
| | பொள்ளாச்சி மண்டலம் | | | | | |
| | பரம்பிக்குளம் ஆளியாறு திட்டம் | 15214 | 61 | 49 | 9 | 3 |
| | மதுரை மண்டலம் | | | | | |
| 1 | சித்தார் அணைக்கட்டு ஏற்பாடு மேம்பாடு பணிகள் | 705 | 10 | 6 | 4 | - |
| 2 | மஞ்சளாறு நீர்த்தேக்கத் திட்டம் புனரமைப்புப் பணிகள் | 102 | 5 | 4 | - | 1 |
| 3 | வைகை பழைய ஆயக்கட்டு புனரமைப்புப் பணிகள் | 5867 | 21 | 15 | 5 | 1 |
| 4 | சிறிய பணிகள் | 1188 | 15 | 11 | 4 | - |
| 5 | கம்பம் பள்ளத்தாக்கு ஏற்பாடு | 468 | 11 | 10 | - | 1 |

[2001 செப்டம்பர் 8

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 6 | கோதையாறு ஏற்பாடு புனரமைப்புப் பணிகள் | 3121 | 36 | 22 | 14 | - |
| 7 | மருதாநதி நீர்த்தேக்கத் திட்ட புனரமைப்புப் பணிகள் | 115 | 3 | 2 | - | 1 |
| 8 | தாம்பரபரணி ஏற்பாடு புதுப்பித்தல் மற்றும் புனரமைப்பு பணிகள் | 3474 | 23 | 12 | 11 | - |
| 9 | பெரியார் வைகை ஏற்பாடு புனரமைப்பு | 2758 | 8 | 4 | 3 | 1 |
| 10 | அடவிநயினார் கோவில் நீர்த்தேக்கத் திட்ட மீதமுள்ள முடிக்கவேண்டிய பணிகள் | 6103 | 4 | 2 | 1 | 1 |
| 11 | இருதமால் அணைக்கட்டு ஏற்பாடு கட்டுமான பணிகள் | 347 | 3 | 3 | - | - |
| 12 | கொடுமுடியார் நீர்த்தேக்கத் திட்டப் பணிகள் | 3050 | 5 | 2 | 3 | - |
| 13 | நம்பியாறு நீர்த்தேக்கத் திட்டப் பணிகள் (மீதமுள்ள பணிகள்) | 2050 | 9 | 5 | 3 | 1 |



2001 செப்டம்பர் 8]

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 14 | பொய்கையாறு நீர்த்தேக்கத் திட்டம் முடிக்கப்பட வேண்டிய மீதமுள்ள பணிகள் | 1175 | 10 | 5 | 3 | 2 |
| 15 | சோத்துப் பாறை நீர்த்தேக்க திட்ட மீதமுள்ள பணிகள் | 3285 | 4 | 4 | - | - |
| 16 | வடக்கு பச்சையாறு நீர்த்தேக்கத் திட்ட பணிகள் (மீதமுள்ள பணிகள்) | 3061 | 9 | 6 | 3 | - |
| | | 70061 | 343 | 247 | 80 | 16 |

**நீர்வள ஆதார தொகுப்புத் திட்டம் – இரண்டாம் கட்டம்**

இரண்டாவது கட்டத்தில் உலக வங்கி கடனுதவி திட்டத்தின் மூலம் பணிகள் மேற்கொள்ள திட்ட அறிக்கைக்கான கீழ்க்கண்ட வழிமுறைகள் பின்பற்றப்படவுள்ளது:—

(1) நதிநீர்ப் படுகை வாரியாக திட்டம் தயாரித்து அதில் அனைத்து பயனடையும் நீர் உபயோகிப்பாளர்களை ஒருங்கிணைத்தல்.

(2) ஒவ்வொரு நதிநீர்ப் படுகைக்கும் நீர் இருப்பு விவரங்கள் கண்டறிதல்.

ஒவ்வொரு நதிநீர்ப் படுகைக்கும் கீழ்க்கண்ட நெறிமுறைகளைக் கண்டறிந்து அதனை பரிந்துரைத்தல்.

(அ) திட்டங்கள் ஒருங்கிணைப்பு கமிட்டி மூலமாக பல்வேறு துறைகளின் கருத்தினைக் கண்டறிந்து வழி முறைப்படுத்துதல்.

(ஆ) நதிநீர்ப் படுகை மேலாண்மை மற்றும் செயலாக்க வாரியத்தின் ஒப்புதல் பெற ஒவ்வொரு துறையின் மூலமாகத் தெரிவு செய்யும் திட்டங்களைத் தயாரித்தல்.

(இ) முதலாவதாக பாலார் மற்றும் தாமிரபரணி நதிநீர் வாரியம் அமைக்கப்பட்டு ஒருங்கிணைந்த திட்டம் தயாரித்தல்.

(ஈ) இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ.1500 கோடியாகும். தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்) அவர்களால் இதனை வழிமுறைப்படுத்தி உலக வங்கிக்கு அனுப்ப திட்டம் தயாரித்தல்.

[2001 செப்டம்பர் 8

(உ) திட்டப் பணிகள் குறித்த அறிக்கை மாநில மற்றும் மத்திய திட்டக்குழு மூல்மாகவும், மத்திய நீர் ஆணையகம் மூலமாகவும் பரிந்துரை செய்து உலக வங்கிக்கு அனுப்புதல்.

**விவசாயிகளின் பாசன அமைப்புகளும், இயக்கம் மற்றும் பராமரிப்புப் பொறுப்புகளை ஒப்படைத்தலும்**

உலக வங்கியின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் நீர்வள ஆதாரங்களின் ஒருங்கிணைப்புத் திட்டத்தின்கீழ், தமிழ்நாட்டில் 52 நீர்ப்பாசன அமைப்புகளின் மூலமாக சுமார் 6 இலட்சம் ஹெக்டேர் பாசனப் பரப்பிற்கு பாசன உறுதி அளிக்கப்பட்டு வருகிறது. இந்த ஒருங்கிணைப்புத் திட்டத்தின் மிக முக்கிய அம்சம் பாசன அமைப்புகளை மேம்பாடு செய்து பயன்பெறும் விவசாயிகளினால் அமைக்கப்பட்டுள்ள சங்கங்களிடம் மேலாண்மை பணிகளின் பொறுப்புகளை ஒப்படைத்தலாகும். மேம்பாட்டுப் பணிகளுக்கான பணிகள் யாவும் முடியும் தருவாயில் உள்ளன.

பாசன மேலாண்மைப் பணிகளின் பொறுப்புகளை விவசாயச் சங்கங்களிடம் ஒப்படைப்பதற்கு ஏதுவாக வகை செய்யும் பொருட்டு, "தமிழ்நாடு விவசாயிகள் நீர்ப்பாசன அமைப்பு முறை மேலாண்மைச் சட்டம் – 2000" என்கிற மசோதா மாநில சட்டசபையினால் 18–05–2000 அன்று ஏற்றுக் கொள்ளப்பட்டு, மாட்சிமைப் பொருந்திய இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களின் ஒப்புதலும் கிடைக்கப் பெற்றுள்ளது. இச்சட்டம், பொதுப் பணித் துறையின் நீர்வள ஆதார அமைப்பின் மேலாண்மையின்கீழ் தற்போதுள்ள சுமார் 15.00 இலட்சம் ஹெக்டேர் பாசனப் பரப்புகளிலும் அமல்படுத்தப்படும்.

இன்றைய நிலையில் நீர்வள ஆதார அமைப்புத் திட்டத்தில் 1078 விவசாயச் சங்கங்கள் அமைக்கப்பட்டு, தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975–ன்கீழ் பதிவு செய்யப்பட்டு இயங்கி வருகின்றன. மேலும் 88 விவசாயச் சங்கங்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதுவரையில் நீர்வள ஆதார அமைப்புத் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டுள்ள அனைத்து விவசாய சங்கங்களும் பொதுப் பணித் துறையின் நீர்வள ஆதார அமைப்பும், இணைந்து இயக்கம் மற்றும் மேலாண்மைப் பணிகளைச் செயல்படுத்துவதில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றன. இணை இயக்கத்தின் ஒரு முக்கிய பணியாக பகிர்மான



2001 செப்டம்பர் 8]

வாய்க்கால்களின் மேம்பாட்டுப் பணிகள் பற்றிய முடிவுகளை எடுப்பதில், விவசாயிகளும் நீர்வள ஆதார அமைப்பின் பொறியாளர்களும் ஒன்றிணைந்து செயல்பட்ட நடவடிக்கையாகும். இந்த மேம்பாட்டுப் பணிகளின் செயலாக்கத்தில் சங்கப் பொறுப்பாளர்கள் ஈடுபட்டு, பணிகளைச் சிறப்பாகச் செயல்படுத்துவதில் பங்குகொள்ள வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. இவ்வனைத்து மேம்பாட்டுப் பணிகளையும் வரும் செப்டம்பர் 2001 ஆம் மாதத்திற்குள் முடித்து வைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

பகிர்மான வாய்க்கால்களின் அனைத்து மேம்பாட்டுப் பணிகளும் முடிவடைந்த நிலையில் அக்டோபர் 2000 மாதத்தில் தொடங்கி இயக்கம் மற்றும் பராமரிப்புப் பணிகளின் பொறுப்புக்களை விவசாயச் சங்கங்களிடம் ஒப்படைக்கும் பணிகள் தொடங்கப்படும். இப்பணிகள் அனைத்தும் டிசம்பர் 2001–க்குள் முடிக்கப்பட்டுவிடும்.

மாட்சிமை பொருந்திய இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களின் ஒப்புதலும் பெறப்பட்டு விட்டது. "தமிழ்நாடு விவசாயிகள் நீர்ப்பாசன அமைப்பு முறை மேலாண்மைச் சட்டத்தினை" அமலாக்கம் செய்வதற்கான முதல் பணியான அரசின் அறிவிக்கை ஒன்று வெளியிடப்படும். மேலும், இந்தச் சட்டத்தின் முக்கிய அம்சங்கள் பற்றிய செய்திகள் அனைத்து விவசாயிகளையும் பொதுமக்களையும் சென்றடையும் வண்ணம் பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி செய்திப்படங்கள், சுவரொட்டிகள், மாவட்ட அளவிலான பிரச்சாரங்கள் ஆகிய நடவடிக்கைகள் எடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளன.

இந்த மேலாண்மைச் சட்டத்தினைச் செயல்படுத்தத் தேவையான வரைபடங்கள், ஆவணங்கள், ஆயக்கட்டுதாரர்கள் பட்டியல் ஆகியவற்றை வெகு அதிக அளவில் தயாரிக்க வேண்டியுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. சட்ட அமலாக்கத்திற்கான தமிழ்நாடு அரசின் அறிவிக்கை வெளிவந்தவுடன், மாவட்ட அளவிலான தேர்தல்களை இரகசிய ஓட்டெடுப்பின் மூலமாக நடத்தி, நீரினைப் பயன்படுத்துவோர் சங்கம், பகிர்மானக் குழு மற்றும் திட்டக்குழு ஆகிய பல மட்ட விவசாயச் சங்கங்களின் பொறுப்பாளர்களைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. மேலும், இவ்வாறு தேர்ந்தெடுக்கப்படும் பொறுப்பாளர்களுக்குத் தேவையான பயிற்சிகளையளிக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

[2001 செப்டம்பர் 8

நடப்பு ஆண்டு 2001–2002–க்குத் தேவையான நிதி ஆதாரம்

| | | |
|---|---|---|
| 1. | ஆலோசகர்களுக்குத் தேவையான நிதி | ரூ. 4.30 இலட்சம் |
| 2. | விவசாயிகள் மற்றும் பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த | ரூ. 103.97 இலட்சம் |
| 3. | அரசுசாரா நிறுவனங்களுக்கு அளிக்க வேண்டிய நிலுவைத் தொகை | ரூ. 13.23 இலட்சம் |
| 4. | நீர்வள ஆதார அமைப்பு மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர்களுக்கான பயிற்சிக்காக | ரூ.51.60 இலட்சம் |
| 5. | ஆவணங்கள் தயாரித்தல் | ரூ. 22.90 இலட்சம் |

நடப்பாண்டிற்குத் தேவையான மொத்த நிதி ரூ.196.00 இலட்சம்

நடப்பாண்டு வரவு–செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ.120.21 இலட்சம்

இந்த தேவையான நிதி ரூ.196.00 இலட்சமானது அதிகாரப்படுத்தப் பட்ட குழு அங்கீகரித்த நிதியான ரூ.380.03 இலட்சத்தில் முறைப்படுத்தப் படும்.

தமிழ்நாடு விவசாயிகள் நீர்ப்பாசன அமைப்பு முறை மேலாண்மைச் சட்டம் 2000–ஐ நிறைவேற்றுவதற்காக நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டத்தின் எந்தவித நிதி ஆதாரமும் கொடுக்கப்படவில்லை. இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்காக தனி நிதி ஆதாரம் தேவைப்படுகிறது.

தமிழ்நாடு விவசாயிகள் நீர்ப்பாசன அமைப்பு முறை மேலாண்மைச் சட்டத்தை நிறைவேற்றுவதற்காக விதிகள் நிர்ணயிக்கப்பட்ட பின் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களால் மந்தன வாக்கெடுப்பு முறையில் தேர்தல்கள் நடத்தப்படும். இந்த நடப்பாண்டின் மூன்றாவது அல்லது நான்காவது காலாண்டில் தேர்தல்கள் நடைபெறுவதை எதிர்நோக்கி தோராயமாக ரூ.600.00 இலட்சம் நிதி தேவைப்படுகிறது.



2001 செப்டம்பர் 8]

**உலக வங்கி நிதி உதவியுடன் நீர்வள ஆதாரத் தொகுப்புத் திட்டத்தின்கீழ், பாலாறு, தாமிரபரணி மற்றும் வைகை வடிநிலப் பகுதியில் உள்ள 620 மானாவாரி சிறுபாசன ஏரிகளை ரூ.106.26 கோடி செலவில் புனரமைக்கும் திட்டம்.**

உலக வங்கியின் பத்தாவது மேற்பார்வை குழு 2000 ஆம் ஆண்டு நவம்பர் 15 ஆம் தேதியிலிருந்து 24 ஆம் தேதி வரை சென்னை மற்றும் கோயம்புத்தூர் மண்டலங்களில் நேரடி ஆய்வு செய்து, ரூபாய் மதிப்பு குறைவினால் நீர்வள ஆதார அமைப்புத் திட்டத்தில் கிடைத்த சேமிப்பிலிருந்து கூடுதல் திட்டப் பணிகள் மேற்கொள்வது குறித்து ஆய்வு மேற்கொண்டது.

மனித உழைப்பின் பயனைக் கருத்தில் கொண்டும், நடுத்தர விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்கும், ஓரளவிற்கு குடிநீர் பிரச்சினையினைத் தீர்ப்பதற்கும், உலக வங்கிக் குழு, மானாவாரி சிறுபாசன ஏரிகளை மேம்படுத்தும் திட்டத்தினைப் பரிசீலித்தது. இத்திட்டத்தின்கீழ் பாலாறு வடிநிலப் பகுதியில் உள்ள 63002 எக்டேர் பாசனப் பரப்பு கொண்ட 462 மானாவாரி சிறுபாசன ஏரிகள் ரூ.81.90 கோடி மதிப்பீட்டிலும், தாமிரபரணி வடிநிலப் பகுதியில் உள்ள 10,140 எக்டேர் பாசனப் பரப்பு கொண்ட 77 ஏரிகள் ரூ.13.18 கோடி மதிப்பீட்டிலும், வைகை வடிநிலப் பகுதியில் உள்ள 8502 எக்டேர் பாசனப் பரப்பு கொண்ட 81 ஏரிகள் ரூ.11.18 கோடி மதிப்பீட்டிலும், மொத்தம் 620 ஏரிகள் ரூ.106.26 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படவுள்ளன.

ரூ.106.26 கோடி மதிப்பீட்டில் 620 ஏரிகள் புனரமைப்புப் பணிக்கு அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது.

உலக வங்கி தனது 6–6–2001 கடிதத்தில் தடையில்லாச் சான்று வழங்கியுள்ளது.

தமிழ்நாடு அரசு மேற்கண்ட 525 கண்மாய்களுக்கு ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்ய ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி 525 கண்மாய்களுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் இறுதியாக்கப்படவுள்ளன.

72 கண்மாய்களுக்கு பணி மேற்கொள்ளப்படின் கிடைக்கக்கூடிய பலன் கணக்கிட்டு மறுமதிப்பீடு செய்து உலக வங்கிக்கு

அனுப்பப்பட்டுள்ளது. உலக வங்கியின் அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது. மீதமுள்ள நிதியை பயன்படுத்திக்கொள்ள புதிய பிரேரணைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

மேற்கண்ட புனரமைப்புப் பணிகள் மார்ச் 2002-ல் முடிவடையும்.

**தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி ('நபார்டு' வங்கி) நிதி உதவியின் மூலம் சிறுபாசன ஏரிகளை நவீனப்படுத்துதல் மற்றும் பாசன மேலாண்மைப் பணிகளுக்கான திட்டம் – ஊரக உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதி–V**

**நபார்டு ஊ.ஒ.வ.நி. V – முதல் கட்டம்**

தமிழ்நாட்டில் 23 மாவட்டங்களில் உள்ள 44 சிறுபாசன ஏரிகளை ரூ.14.66 கோடி மதிப்பீட்டில் 5054 எக்டேர் நிலங்கள் பயன்பெறும் நபார்டு வங்கி நிதி உதவியின் மூலம் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. நபார்டு வங்கி அதன் 34–வது திட்ட ஒப்புறுதி வழங்கும் குழுக் கூட்டத்தில் 44 சிறுபாசன ஏரிகளை நவீனப்படுத்த ஒப்புறுதி வழங்கியது.

இத்திட்டத்தின் குறிக்கோளானது ஏரிகளை நவீனப்படுத்தி, தரத்தை உயர்த்தி, நீர்ப்பாசனத் திறனை உயர்த்துவதன் மூலம், வாய்க்கால்களுக்கு அகவுறை அமைத்தல், மதகுகளை மேம்பாடு செய்து, கலிங்குகளை மேம்படுத்துதல் மற்றும் உள்வரத்து வாய்க்கால்களைச் சீரமைத்தல் போன்றவை ஆகும்.

அரசு ரூ.14.66 கோடி மதிப்பீட்டில் இத்திட்டத்திற்கு ஒப்புதல் அளித்து, இப்பணியினை, நீர்வள ஆதார அமைப்பைச் சார்ந்த மண்டலங்கள் மூலம் செயல்படுத்த ஆணை வழங்கியது.

மேற்கண்ட பணிகள் இவ்வருடம் (2001–2002–ல்) செயலுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

மேலும் தமிழ்நாட்டில் உள்ள 340 சிறுபாசன மானாவாரி ஏரிகளை 57663 எக்டேர் நிலங்கள் பயன்பெறும்பொருட்டு, ரூ.44.85 கோடி மதிப்பீட்டில், நவீனப்படுத்தத் திட்டம் தயாரிக்கப்பட்டு நபார்டு வங்கியின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டது.

நபார்டு வங்கியின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றதும், திட்டப் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.





**நபார்டு வங்கி உதவியுடன் மேற்கொள்ளப்படும் பாசனத் திட்டங்கள் மற்றும் சிறப்பு சிறுபாசனத் திட்டம்**

2000–2001 ஆம் ஆண்டில் சிறப்பு சிறுபாசனத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கீட்டுத் தொகை ரூ.676.68 இலட்சம். (ரூ.676.67 இலட்சம் மாநில திட்ட ஒதுக்கீடு மற்றும் 0.01 இலட்சம் 'நபார்டு' உதவி) இதனால் 550 எக்டேர் நிலங்கள் பாசன வசதி பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

2000–2001–ல் இத்திட்டத்தின்கீழ் 30 நிலுவையிலுள்ள பணிகள் செயலாக்கத்தில் இருந்தன. அரசு 2000–2001–ல் 3 புதிய பணிகளுக்கு 2001–2002 திட்ட மதிப்பீடு ரூ.15 கோடி நபார்டு வங்கி கடன் மூலமும் மேற்கொள்ளப்படவுள்ளது. மேலும் நபார்டு வங்கி 45 திட்டங்களுக்கு (5 சிறுபாசனத் திட்டங்கள், 40 சிறப்பு சிறுபாசனத் திட்டங்கள்) ரூ.59.58 கோடி அனுமதியளித்துள்ளது. இப்பணிகள் பல கட்டங்களில் முன்னேற்றத்தில் உள்ளன. ஆர்.ஐ.டி.எப்.2, ஆர்.ஐ.டி.எப்.5 பகுதி I, ஆர்.ஐ.டி.எப். 6 பகுதி எண் 1 மற்றும் 2–ல் உள்ள திட்டப் பணிகள் முடிவு பெற்றன. ஆர்.ஐ.டி.எப். 5 உள்ள பணிகளும் முன்னேற்றத்தில் உள்ளன. பிற திட்டப் பணிகள் விரைவில் எடுத்துக்கொள்ளப்பட்டு முடிக்கப்படும்.

**ஜப்பான் பன்னாட்டு கூட்டுக் குழு நிதி உதவியுடன் சிறுபாசன ஏரிகளை மேம்படுத்தும் திட்டம்**

சிறுபாசன ஏரிகளைப் புனரமைக்கும் திட்டத்திற்கு திட்ட அறிக்கை தயாரிப்பதற்கான கருத்துருவை, ஜப்பான் பன்னாட்டு கூட்டுக் குழுவின் உதவி பெற டில்லியில் உள்ள ஜப்பான் தூதரகத்திற்கு அனுப்பி வைக்க, மைய அரசு நிதி அமைச்சகத்தைச் சார்ந்த பொருளாதாரத் துறைக்கு ஜூன் 1995–ல் அனுப்பி வைக்கப்பட்டது.

தொழில்நுட்ப ஒத்துழைப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக உள்ள "ஜப்பான் இண்டர்நேஷனல் கோவாபரேஷன் ஏஜன்ஸி" (ஜெபிக்) ஜூலை 1996–ல் தனது பார்வையாளர்கள் குழுவை அனுப்பி வைத்தது. அக்குழு இத்திட்டத்தின் நோக்கத்திற்கு ஒப்புதல் அளித்தது. மைய அரசு மற்றும் "ஜப்பான் இண்டர்நேஷனல் கோவாபரேஷன் ஏஜன்ஸி" ஆகஸ்டு 1996–ல் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டன. ஜப்பான் ஆய்வுக் குழுவானது முதல் கட்ட ஆய்வினை டிசம்பர் 1996–ல் தொடங்கி பிப்ரவரி 1997–ல் முடித்தது. இத்திட்டத்தின் முன்னேற்ற அறிக்கை எண் 1–ஐ பிப்ரவரி 1997–ல் அளித்தது. ஆய்வுக் குழு இரண்டாம் கட்ட ஆய்வினை நடத்தி முன்னேற்ற அறிக்கை எண் 2–ஐ ஜூலை 1997–ல் அளித்தது.

[2001 செப்டம்பர் 8

ஜப்பானிய ஆய்வுக் குழு தல ஆய்வுகளை முடித்து கீழ்க்கண்ட 5 மாவட்டங்களில் 2093 ஏரிகளைச் சீரமைப்பு செய்ய ரூ.890 கோடிக்கு திட்டக் கருத்துருவினைத் தயாரித்து அனுப்பியள்ளது.

1. காஞ்சிபுரம்
2. திருவள்ளூர்
3. சிவகங்கை
4. இராமநாதபுரம்
5. விருதுநகர்

மேற்கண்ட கருத்துருவினை பன்னாட்டு பொருளாதாரக் கூட்டு நிதி (ஜப்பான்) உதவிபெற தமிழக அரசு நிதித் துறை செப்டம்பர் 97–ல் மைய அரசின் நீர்வள ஆதார அமைச்சகத்திற்கு அனுப்பி உள்ளது. அதன்பிறகு, 2000–2001 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்க, பரிசீலனை செய்ய பன்னாட்டு பொருளாதாரக் கூட்டு நிதிக் குழு நினைவூட்டப்பட்டுள்ளது.

**மாநில ஏரிப் பாசனத் திட்டம்**

தமிழ்நாட்டில் 8939 பொதுப் பணித் துறை ஏரிகளும் 9850 முன்னாள் ஜமீன் கண்மாய்களும் உள்ளன. ஏரிகளைத் தரப்படுத்தவும், நவீனப்படுத்தவும் மட்டுமே தமிழ்நாடு அரசு 1995–96–ல் இத்திட்டத்தினை அமல்படுத்தியது.

இத்திட்டம் இரு பிரிவுகளைக் கொண்டது. முதல் பிரிவு முன்னாள் ஜமீன் ஏரிகளைத் தரப்படுத்தி மேம்படுத்துவது ஆகும். இரண்டாவது பிரிவு பொதுப் பணித் துறையின் பொறுப்பில் உள்ள மற்ற ஏரிகளைத் தரப்படுத்துவதும், மேம்படுத்துவதும் ஆகும். அனைத்து முன்னாள் ஜமீன் ஏரிகளையும் தரப்படுத்திய பிறகு தொடர் பராமரிப்பிற்காக ஊராட்சி ஒன்றியங்களுக்கோ அல்லது பொதுப் பணித் துறைக்கோ பாசனப் பரப்பிற்குத் தகுந்தாற்போல் ஒப்படைக்கப்படும்.

இத்திட்டத்திற்கு 2001–2002 ஆம் ஆண்டு ரூ.9.00 கோடி கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது:–

மாநில ஏரிப் பாசனத் திட்டம்

முன்னாள் ஜமீன் ஏரிகள் .. ரூ.4.50 கோடி



2001 செப்டம்பர் 8]

மாநில ஏரிப் பாசனத் திட்டம்

பொதுப் பணித் துறை ஏரிகள் .. ரூ.4.5 கோடி

1999–2000 ஆண்டில் ரூ.3.94 கோடி மதிப்பீட்டில் 199 பொதுப் பணித் துறை ஏரிகளும் ரூ.3.48 கோடி மதிப்பீட்டில் 187 முன்னாள் ஜமீன் ஏரிகளும் தரப்படுத்தி மேம்படுத்த செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

மேலும் 2000–2001 ஆம் ஆண்டில் ரூ.4.54 கோடி மதிப்பீட்டில் 219 பொதுப் பணித் துறை ஏரிகளும், ரூ.4.06 கோடி மதிப்பீட்டில் 236 முன்னாள் ஜமீன் ஏரிகளும் தரப்படுத்தி மேம்படுத்த வகை செய்யும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்**

பழங்குடி மக்களின் தரத்தை உயர்த்தவும், அவர்களுக்கு மேம்பட்ட பாசன வசதிகளை அளிப்பதற்காகவும், ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தை மத்திய அரசு உதவியுடன் மாநில அரசு தொடங்கியுள்ளது. தமிழ்நாடு அரசு வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், சேலம், நாமக்கல், தர்மபுரி, திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் உள்ள மலைப் பகுதிகளை "பழங்குடியினர் பகுதியாகக்" கண்டறிந்துள்ளது.

இத்திட்டத்தின்கீழ் மலைப்பகுதிகளில் பாசன வசதியை மேம்படுத்த தடுப்பு அணைகள் கட்டுதல், கசிவுநீர்க் குட்டைகள் அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2001–2002 ஆம் ஆண்டில் இப்பணிக்கு ரூ.6.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்**

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் நீலகிரி மாவட்டத்தில் 1978–79 ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் மத்திய அரசின் 100 சதவிகித நிதி உதவியுடன் காட்டோடைகளின் குறுக்கே தடுப்பு அணைகள் கட்டப்படுகின்றன.

1999–2000 ஆண்டில் ரூ.67.90 இலட்சம் மதிப்பீட்டில் நீலகிரி மாவட்டத்தில் 14 பணிகள் செயலாக்கத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டதில்,

[2001 செப்டம்பர் 8

12 பணிகள் முடிக்கப்பட்டன. 2000--2001 ஆம் ஆண்டில் ரூ.45.30 இலட்சம் மதிப்பீட்டில் 12 பணிகள் ஒப்பளிக்கப்பட்டு தற்போது செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

**மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்**

1986–87ஆம் ஆண்டு முதல் கோயம்புத்தூர், ஈரோடு, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் 24 வட்டங்களைத் தெரிந்தெடுத்து மேற்குத் தொடர்ச்சிமலை மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. தடுப்பு அணைகள் கட்டுதல், குட்டைகள் அமைத்தல், வரத்துக் கால்வாய்களை மேம்படுத்துதல் போன்ற பணிகள் இத்திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படுகின்றன.

இத்திட்டத்திற்கு 2000–2001 ஆம் ஆண்டின் நிதி ஒதுக்கீடு ரூ.3.00 இலட்சம் ஆகும்.. 6 பணிகள் (கோவை மாவட்டத்தில் 3, திருநெல்வேலி மாவட்டத்தில் 3) முன்னேற்றத்தில் உள்ளன.

2001–2002 ஆம் ஆண்டிற்கு ரூ.0.01 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**ஏரிகள் தூர்வாரும் திட்டம்**

தமிழக அரசு 200 கண்மாய்களை தூர்வாரி மேம்படுத்தும் பணிக்கு 1997–98ல் ஒப்புதல் அளித்தது. ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் குறைந்த பட்சம் ஒரு கண்மாய் என்ற அடிப்படையில் கீழ்க்கண்ட வழிமுறையைப் பின்பற்றி கண்மாய்கள் தூர் வாருவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டன. அதாவது, (1) பாசனப் பரப்பு 150 ஏக்கருக்கு குறையாமல் உள்ள கண்மாய்கள் (2) பொருத்தமான இயந்திரங்களைக் கொண்டே தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். (3) இப்பணிக்கான மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்குக் குறையாமலும் ரூ.10.00 இலட்சத்திற்கு மிகாமலும் இருக்க வேண்டும். (4) கண்மாய்கரை, மதகு, மறுகால் வலிமைப் படுத்தப்பட வேண்டும். (5) மதகின் நீர்ப்போக்கி மட்டத்திற்கே மதகின் அருகில் தூர் வாரப்பட வேண்டும். (6) வெட்டி எடுக்கப்பட்ட மண் சாலை அமைக்கவும் மற்றும் கரை வலுப்படுத்தவும் பயன்படுத்தப்பட வேண்டும்.

1997–98 ஆம் ஆண்டில் 200 கண்மாய்களை தூர்வாரும் பணிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.19.91 கோடி ஆகும். இப்பணிகள் செப்டம்பர் 1997ல் தொடங்கப்பட்டது.



2001 செப்டம்பர் 8]

இப்பணிகள் அதிகபட்சமாக பொருத்தமான கனரக இயந்திரங்களின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 1997–98ல் ஒப்பளிக்கப்பட்ட 200 கண்மாய்களில் தூர்வாரும் பணியில் 198 கண்மாய்களில் பணிகள் முடிக்கப்பட்டன. எஞ்சியுள்ள கண்மாய்களில் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

1998–99 ஆம் ஆண்டில் மேலும் 200 புதிய கண்மாய்களில் தூர்வாரும் பணி (ஏற்கெனவே ஒப்புதல் அளிக்கப்பட்ட 200 கண்மாய்களில் தூர்வாரும் பணிகள் அல்லாமல்) செய்யப்படும் என்று அரசு அறிவித்து அதற்கான ஒப்புதலையும் வழங்கியுள்ளது. 1998–99ல் ஒப்புதல் அளிக்கப்பட்ட இந்த 200 கண்மாய்களில் தூர்வாரும் பணியில் 184 கண்மாய்களில் பணிகள் முடிக்கப்பட்டன. எஞ்சியுள்ள கண்மாய்களின் பணிகள் நடைபெற்று வருகின்றன. அப்பணிகள் 2001–02 நடப்பு ஆண்டில் முடிக்கப்படும்.

**காவிரி டெல்டா பகுதிகளில் கனரக இயந்திரங்களைக் கொண்டு தூர்வாரும் பணி**

காவிரியாற்றின் டெல்டா பகுதிகளில் ஆறுகள், கால்வாய்கள் மற்றும் வடிகால்களில் அவ்வப்போதைய வெள்ள நீர்வரத்து காரணமாக தூர் சேர்ந்து விடுகிறது. மேலும் நெய்வேலி காட்டாமணக்குச் செடிகளின் அபரிமிதமான வளர்ச்சியும் நீர் ஆதாரங்களின் பாசன மேலாண்மையிலும், வெள்ளக்கட்டுப்பாடுப் பணிகளிலும் சிக்கல்களை ஏற்படுத்துகின்றன. இந்தத் தடங்கல்களினால் பாசனக் காலங்களில் கடைகோடிப் பகுதிக்கு பாசன நீர் கிடைப்பதில் குறைவும், வெள்ளக் காலங்களில் பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கிவிடும் நிலைமையும் இருந்து வருகிறது.

எனவே, ஒவ்வோர் ஆண்டும் வேளாண்மைப் பொறியியல் துறையிலிருந்தும் மற்றும் தனியார் நிறுவனங்களிடமிருந்தும் 'புல்டோசர்களை' வாடகை அடிப்படையில் தருவித்து தூர் வாருவதும், காட்டாமணக்குச் செடிகளை அகற்றுவதும் வாடிக்கையாய் உள்ளது.

இவ்வாறான பணிகளுக்கு ஆகும் செலவினை ஆண்டுதோறும் ஒதுக்கீடு செய்யப்படும் பராமரிப்பு நிதியில் செய்ய இயலாததால் 1997–98 ஆம் ஆண்டு முதல் அரசால் இதற்கு சிறப்பு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1997–98 ஆம் ஆண்டில் தஞ்சாவூர் டெல்டா பகுதிகளில் உள்ள ஆறுகள், கால்வாய்கள், வடிகால்கள் மற்றும் ஏரிகளைத் தூர் வாரவும் அவற்றில் உள்ள நெய்வேலி காட்டாமணக்குச் செடிகளை அகற்றவும்,

அரசு ரூ.12.14 கோடி நிதி ஒதுக்கீடு செய்து அப்பணிகள் 1997–98-லேயே முடிக்கப்பட்டன.

காவிரி வடிநிலப் பகுதியைத் தூர் வாரும் பணிக்கு ரூ.119.74 கோடி 1997–98 ஆம் ஆண்டு முதல் 2001–2002 வரை ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி, நதிகளில் 1352 கி.மீ. தூரமும், கழிவுநீர் வாய்க்கால்களில் 3667 கி.மீ. தூரமும், கால்வாயில் 4092 கி.மீ. தூரமும் தூர் வாரும் பணி மேற்கொள்ளப்பட்டது. இதைத் தவிர நதிகள் 74 கி.மீ. தூரமும், கழிவு வாய்க்காலில் 528 கி.மீ. தூரமும், கால்வாயில் 856 கி.மீ.தூரமும் நடப்பு வருடத்தில் தூர் வாரும் பணி மேற்கொள்ளப்பட உள்ளது. இந்தப் பணிகள் யாவும் பெரிய இயந்திரங்களைக் கொண்டு விரைவில் முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இதுதவிர 2001–2002 ஆம் ஆண்டில் காவிரி வடிநிலப் பகுதியில் தூர் வாரும் பணிக்கு ரூ.20.00 கோடியும் மற்ற வடிநிலப் பகுதிகளில் தூர் வாரும் பணிகளுக்கு ரூ.15.00 கோடியும் அரசு நிர்வாகம் அனுமதி அளித்துள்ளது. இப்பணிகள் விரைவில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**காவிரி டெல்டா பாசனத் திட்டத்தை நவீனப்படுத்துதல்**

காவிரி டெல்டா பாசனம் சுமார் 2000 ஆண்டுகள் பழமையானது. இதிலுள்ள அடிப்படை வசதிகள் நவீனப்படுத்தப்பட்டால்தான் இப்பாசனத் திட்டம் திறம்படச் செயல்படும். முதன்முதலில் 1970 ஆம் ஆண்டில் தமிழக அரசு வெள்ளக் கட்டுப்பாடு மற்றும் வடிகால்கள் புனரமைப்பு உள்ளிட்ட காவிரி டெல்டா பாசனத் திட்ட நவீனமயமாக்கும் பணிக்கு மாஸ்டர் பிளான் தயாரித்தது. இருப்பினும் மாநிலங்களுக்கிடையே பிரச்சினை உள்ளதால் இத்திட்டத்திற்கு மைய அரசின் நீர்வள அமைச்சகத்தின் இசைவு கிடைக்கவில்லை. இருப்பினும் பாசனம், வெள்ளக் கட்டுப்பாடு மற்றும் வடிகால்கள் இவற்றின் அவசரத் தேவைகளுக்காக காவிரி டெல்டாப் பகுதிகளில் சிறு பணிகள் மாநில அரசு நிதி ஒதுக்கீட்டின் மூலம் நிறைவேற்றப்படுகின்றன. இருப்பினும் காவிரி டெல்டா பாசனத் திட்டத்தின் தேவைகளை முழுமையாக நிறைவு செய்ய முடியவில்லை.

எனவே காவிரி டெல்டா பாசனப் பகுதி நவீனமயமாக்கும் திட்டத்தை மூன்று பகுதிகளாக நிறைவேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது. தற்போது இதன் முதற்பகுதியாக 460 கோடி. ரூபாய்க்கு ஒரு திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மத்திய அரசுக்கு உலக வங்கி உதவிக்காக



அனுப்பும்பொருட்டு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்த முதற்பகுதியில் பின்வரும் பணிகள் உள்ளடங்கியுள்ளன:

1. காவிரி டெல்டா பாசனப் பகுதியில் 70,000 ஹெக்டேர் பாசனப் பரப்பு பயனடையும் வகையில் 10 ஆறுகளைப் புனரமைப்பு செய்து நவீனமயமாக்குதல்.
2. 323 கால்வாய்களைப் புனரமைப்பு செய்து நவீனமயமாக்குதல்
3. 109 வடிகால்களை மேம்படுத்துதல்
4. ரூ.23.02 கோடி மதிப்பில் வெள்ளத் தடுப்புப் பணிகளை நிறைவேற்றுதல்
5. பிற பணிகளை நிறைவேற்றுதல்

**காவிரி நதிநீர் தாவா**

காவிரி நதிநீர் உபயோகமானது மாநிலங்களுக்கிடையேயான 1892 மற்றும் 1924ஆம் ஆண்டு ஒப்பந்தங்களின் அடிப்படையில் முறைப்படுத்தப்பட வேண்டும்.

1950–60ஆம் ஆண்டுகளிடையே ஹேமாவதி, ஹாரங்கி, கபினி மற்றும் இதர உபநதிகளில் நீர்த் தேக்கங்கள் கட்ட கர்நாடகா வழிவகைகளை மேற்கொண்டது. ஆரம்ப காலக்கட்டங்களில் கபினி நீர்த் தேக்கத்திற்கு ஒப்பந்த விதிகளை மைசூர் கடைபிடித்து தமிழ்நாட்டின் இசைவினைப் பெற்றது. 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின்படி தமிழ்நாட்டிற்குக் கிடைக்க வேண்டிய நிர்ணயம் செய்த நீருக்கு உத்தரவாதம் அளிக்க வேண்டும் என்று தமிழ்நாடு மைசூரைக் கேட்டுக் கொண்டது. கர்நாடகாவிலிருந்து இதுகுறித்து சாதகமான பதில் இல்லாத காரணத்தினாலும், மைசூரிலிருந்து தமிழ்நாட்டிற்கு எந்தவிதமான உறுதிமொழியும் கிடைக்காததாலும், ஒப்பந்தத்தின்படி அப்படிப்பட்ட உறுதிமொழி முக்கியம் என்பதாலும், சென்னை மாகாணம் மைசூரின் புதிய திட்டங்களுக்கு இசைவினை அளிக்கவில்லை. மத்திய திட்டக் குழு மற்றும் மத்திய அரசு ஒப்புதலை வழங்கவில்லை. இருப்பினும், சென்னை மாநிலத்திற்குப் பாதகத்தை ஏற்படுத்தும் வகையில் கர்நாடகா அரசு காவிரியின் எல்லா நீரையும் கர்நாடகத்திலேயே உபயோகப்படுத்திக் கொள்ள அதன் புதிய திட்டங்களைத் தொடர்ந்து நிறைவேற்றி வந்தது.

ஒப்பந்தத்தின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டுதான் திட்டங்கள் தீட்டப்பட்டு வருகின்றன என எப்பொழுதும் கர்நாடகா கூறி வந்தது.

[2001 செப்டம்பர் 8

1971–க்குப் பிறகு அந்த நிலையிலிருந்து மாறுபட்டு 1981–ல், 1924 ஆம் ஆண்டைய ஒப்பந்தம் 1974–ல் காலாவதியாகிவிட்டதால் அந்த ஒப்பந்தம் கர்நாடகா அரசைக் கட்டுப்படுத்தாது என்று வெளிப்படையாகக் கூறியது.

மத்திய அரசின் வேண்டுகோளுக்கு இணங்க இரண்டு மாநிலங்களுக்கிடையே 31 முறை பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்பட்டும், இதற்கு ஒரு தீர்வோ, ஒப்பந்தமோ எட்டப்படவில்லை.

நடுவர் மன்றத்தை அமைக்கக் கோரி மத்திய அரசை தமிழ்நாடு அரசு தொடர்ந்து கேட்டுக் கொண்ட பிறகு காலதாமதமாக, அதுவும் 1990 ஆம் ஆண்டு மே மாதம் உச்ச நீதிமன்றம் அளித்த உத்தரவிற்கிணங்க 1990 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் 1950 ஆம் ஆண்டைய மாநிலங்களுக்கிடையேயான நதிநீர் தாவா சட்டத்தின்கீழ் நடுவர் மன்றத்தை மத்திய அரசு ஏற்படுத்தியது.

காவிரி நடுவர் மன்றத்தில் தமிழ்நாடு தாக்கல் செய்த பல பல்வகை மனுக்களை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு கடைசியாக 25–6–1991 அன்று தமிழ்நாட்டின் கோரிக்கையை ஏற்று ஓர் இடைக்கால ஆணையைப் பிறப்பித்தது.

நடுவர் மன்றம் கீழ்க்கண்டவாறு அதன் இடைக்கால ஆணையைப் பிறப்பித்தது—

(அ) கீழ்க்கண்ட விவரப்படி ஆண்டு ஒன்றுக்கு ஜூன் முதல் மே வரையிலான 12 மாதங்களில் மேட்டூர் நீர்த் தேக்கத்திற்கு 205 டி.எம்.சி. நீரை கர்நாடகா தனது நீர்த் தேக்கங்களிலிருந்து ஜூலை 1991–லிருந்து விடுவிக்க வேண்டும்.

| மாதம் | டி.எம்.சி |
|---|---|
| ஜூன் | 10.16 |
| ஜூலை | 42.76 |
| ஆகஸ்டு | 54.72 |
| செப்டம்பர் | 29.36 |
| அக்டோபர் | 30.17 |
| நவம்பர் | 16.05 |
| டிசம்பர் | 10.37 |
| சனவரி | 2.51 |
| பிப்ரவரி | 2.17 |
| மார்ச் | 2.40 |
| ஏப்ரல் | 2.32 |
| மே | 2.01 |
| மொத்தம் | 205.00 |



2001 செப்டம்பர் 8]

மாதாந்திர அளவான நீர், வாராந்திர அடிப்படையில் சமமாகப் பிரித்து வழங்கப்பட வேண்டும். ஏதாவது ஒரு வாரத்தில் நீரின் அளவு குறையுமானால் அதை அடுத்த வாரத்தில் ஈடுகட்ட வேண்டும்.

மேலே கூறிய நீரின் அளவில் பாண்டிச்சேரிக்கு 6 டி.எம்.சி. நீரை தமிழ்நாடு விடுவிக்க வேண்டும்.

(ஆ) கர்நாடகா அதன் கூற்றின்படி மே மாதம் 1991 ஆம் ஆண்டு பயிரிடப்பட்ட பாசனப் பரப்பான 11.2 இலட்சம் ஏக்கருக்கு மேல் பாசனப் பரப்பை விரிவாக்கம் செய்யக் கூடாது.

நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையைச் செயல்படுத்தாத தற்கான அநேக வழிகளை கர்நாடக அரசு மேற்கொண்டது. உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தும், இடைக்கால ஆணை செல்லாது எனவும், காவிரியில் கிடைக்கும் நீரை அவர்களுடைய தேவைக்கு முழுவதுமாகப் பயன்படுத்திக்கொள்ளும் வகையிலும் ஓர் அவசரச் சட்டத்தை (Ordinance) இயற்றியது. குடியரசுத் தலைவர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க உச்ச நீதிமன்றம் சம்பந்தப்பட்ட மாநிலங்களை விசாரித்து கர்நாடகா அரசின் அவசரச் சட்டம் அரசியல் சட்டத்திற்குப் புறம்பானது என்றும், அச்சட்டம் அவ்வரசின் சட்டம் இயற்றும் வரம்பிற்கு உட்பட்டு இயற்றப்படவில்லை என்றும் தீர்ப்பளித்தது. மேலும், இடைக்கால ஆணையை வழங்குவதற்கு நடுவர் மன்றத்திற்கு அதிகாரம் உள்ளது என்றும், இடைக்கால ஆணையை மத்திய அரசு அதன் அரசிதழில் வெளியிட்டு சம்பந்தப்பட்ட மாநிலங்கள் அந்த ஆணைக்குக் கட்டுப்பட வேண்டும் என்று உத்தரவிட்டது. இதனடிப்படையில், வேறு வழியின்றி நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையை மத்திய அரசு அதன் அரசிதழில் 10–12–1991–ல் வெளியிட்டது.

இத்துடன் பிரச்சனை தீரவில்லை. இடைக்கால ஆணையைச் செயலாக்க கர்நாடகா மறுத்து விட்டது. 1956 ஆம் ஆண்டைய மாநிலங்களுக்கு இடையேயான நதிநீர் தாவா சட்டம், பிரிவு 6ஏ–ன்கீழ் நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையைச் செயல்படுத்துவதற்காக மத்திய அரசு ஒரு திட்டத்தைத் தீட்டியிருக்க வேண்டும். ஆனால் மத்திய அரசு முன்வரவில்லை. எனவே 1992 மே மாதத்தில், இடைக்கால ஆணையை அமலாக்குவதற்கு கர்நாடகா அவ்வாறு செய்ய மத்திய அரசிற்கு ஒரு ஆணையையும், இந்த இடைக்கால ஆணைக்கு செவ்வனே செயலாக்கத்திற்குக் கொண்டுவரும்பொருட்டு ஒரு திட்டத்தை மத்திய

[2001 செப்டம்பர் 8

அரசு நிட்டுவதற்கும் உத்தரவிடுவதற்கு ஒரு சிவில் வழக்கினை உச்ச நீதிமன்றத்தில் தொடுக்க தமிழ்நாடு உந்தப்பட்டது.

உச்ச நீதிமன்றத்தில் இவ்வழக்கு பலமுறை விசாரிக்கப்பட்டு, ஒத்திவைக்கப்பட்டு, அரசியல் சட்டப் பிரிவை முன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டபோது 9–4–1997 அன்று மத்திய அரசு ஒரு திட்டத்தைத் திட்டும் என்று மத்திய அரசின் தலைமை வழக்கறிஞர் உச்ச நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

6–8–1998 மற்றும் 7–8–1998 ஆகிய நாட்களில் பிரதமர் அவர்கள் காவிரி படுகை மாநில முதலமைச்சர்களின் கூட்டத்தைக் கூட்டி விவாதித்து அதனடிப்படையில் ஒரு திட்டம் இறுதி செய்யப்பட்டது. "காவிரி நீர் (நடுவர் மன்றத்தின் 1991 ஆம் ஆண்டு ஆணை மற்றும் அதன் தொடர்பாக பின்னர் வெளியிடப்பட்ட ஆணைகள் செயலாக்க) திட்டம் 1998" என்ற திட்டமானது மத்திய அரசிதழில் 11–8–1998 அன்று பிரசுரிக்கப்பட்டது.

12–8–998 அன்று உச்ச நீதிமன்றம் இத்திட்டத்தைப் பதிவு செய்து கொண்டு 1–8–1998 அன்று இவ்வழக்கை இறுதி விசாரணைக்காக ஒத்திவைத்தது. 17–8–1998 அன்று நடந்த இறுதி விசாரணையில், மத்திய அரசு திட்டத்தைத் தீட்டி அரசிதழில் வெளியிடப்பட்டதால், தமிழ்நாடு அரசால் தொடுக்கப்பட்ட வழக்கு முடிவுற்றதாக உச்ச நீதிமன்றம் ஆணை பிறப்பித்தது.

இத்திட்டத்தின்கீழ் காவிரி நதிநீர் ஆணையம் என்ற ஓர் ஆணையம் அமைக்கப்படும். இதில் கீழ்க்கண்டவர்கள் உறுப்பினர்கள் ஆவார்கள்:

| | |
|---|---|
| பாரத பிரதமர் | தலைவர் |
| கர்நாடகா, கேரளா, தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி முதலமைச்சர்கள் | உறுப்பினர்கள் |
| மத்திய நீர்வள அமைச்சக செயலர் | செயலர் |



2001 செப்டம்பர் 8]

இந்த ஆணையத்தின்கீழ் கீழ்கண்ட உறுப்பினர்களை கொண்ட ஒருகண்காணிப்புக் குழு அமைக்கப்படும்:

| | |
|---|---|
| மத்திய அரசின் நீர்வள அமைச்சகத்தின் செயலர் | தலைவர் |
| கர்நாடகா, கேரளா, தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி தலைமைச் செயலர்கள் | உறுப்பினர்கள் |
| தலைவர், மத்திய நீர்க் குழுமம் | உறுப்பினர் |
| கர்நாடகா, கேரளா, தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி ஆகிய மாநிலங்களால் நியமனம் செய்யப்படும் தலைமைப் பொறியாளர் அளவில் ஒருவர் | உறுப்பினர்கள் |
| தலைமைப் பொறியாளர், மத்திய நீர்க் குழுமம் | உறுப்பினர் செயலர் |

28–10–1998 மற்றும் 14–7–2000 ஆகிய நாட்களில் காவிரி நதிநீர் ஆணையம் இரண்டு முறை கூடியது. 7–10–1998, 4–3–1999, 5–7–1999, 24–9–1999, 16–2–2000, 18–9–2000, 30–1–2001 மற்றும் 7–6–2001 ஆகிய நாட்களில், எட்டு முறை காவிரி கண்காணிப்புக் குழுவின் கூட்டங்கள் நடைபெற்றன. மேற்படி கூட்டங்களில் தமிழ்நாட்டின் பிரதிநிதிகள் கலந்துகொண்டு நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையைத் திறம்பட கர்நாடகா செயல்படுத்த வேண்டும் என்று வற்புறுத்தினர்.

இதற்கிடையில், காவிரி நடுவர் மன்றத்தின்முன் காவிரி நதிநீர் தாவா விசாரணையில் இருந்து வருகிறது. தமிழ்நாட்டைச் சேர்ந்த 9 சாட்சிகள், பாண்டிச்சேரியைச் சேர்ந்த 1 சாட்சி மற்றும் கர்நாடகாவைச் சேர்ந்த 6 சாட்சிகள் மீதான குறுக்கு விசாரணை முடிவுற்றன. கேரள அரசு 4 சாட்சிகளை நிறுத்தி உள்ளது. 3 சாட்சிகளின் குறுக்கு விசாரணை முடிவுற்று நான்காவது சாட்சியின் குறுக்கு விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கடைசி சாட்சியின் குறுக்கு விசாரணை முடிவடைந்தவுடன் சம்பந்தப்பட்ட மாநிலங்களின் விவாதம் காவிரி

[2001 செப்டம்பர் 8

நடுவர் மன்றத்தின்முன் மேற்கொள்ளப்படும். இவ்விவாதம் முடிவுற்றவுடன், காவிரி நடுவர் மன்றத்தின் இறுதி முடிவு வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

காவிரிப் படுகையிலுள்ள தமிழக விவசாயிகளின் நலனைப் பாதுகாப்பதற்காக காவிரி நதிநீர் தாவா ஏற்பட்ட காலத்திலிருந்து இதற்கு ஒரு நல்ல தீர்ப்பைக் காணும்பொருட்டு தமிழ்நாடு அரசு தொடர்ந்து முயற்சி மேற்கொண்டு வருகிறது.

**கிருஷ்ணா குடிநீர் வழங்கு திட்டம்**

1983 ஆம் ஆண்டு ஏப்ரல் 18 ஆம் நாள் தமிழக அரசு ஆந்திரப் பிரதேச அரசிடம் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டது. அதன்படி, சென்னைப் பெருநகர் குடிநீர் வசதிக்காக கிருஷ்ணா நதியிலிருந்து ஓராண்டில் 8 மாத காலங்களில் வழியில் ஏற்படும் இழப்பான 3 டி.எம்.சி. போக 12 டி.எம்.சி. நீர் ஆந்திர அரசால் தமிழ்நாடு – ஆந்திர எல்லையில் வழங்கப்படும். தமிழ்நாடு எல்லைக்குட்பட்ட பணிகள் "கிருஷ்ணா குடிநீர் வழங்கல் திட்டம்" என்றும் ஆந்திர எல்லைக்குட்பட்ட பணிகள் "தெலுங்கு கங்கை திட்டம்" என்றும் அழைக்கப்படுகின்றன.

கிருஷ்ணா குடிநீர் வழங்கு திட்டத்தில் தமிழ்நாடு எல்லையில் செய்யப்படும் பணிகளுக்காக, அரசு முதன்முதலில் ஒப்பளித்த மதிப்பீட்டின் தொகை ரூ.46.44 கோடியாகும். இத்திட்டத்தின் திருத்திய மதிப்பீட்டின் தொகை 1996–97 ஆம் ஆண்டுக்குரிய விலைப்பட்டியலின்படி ரூ.196.04 கோடியாகும். மார்ச் 2001 வரை ரூ.182.00 கோடி இத்திட்டத்திற்காகச் செலவு செய்யப்பட்டுள்ளது.

தெலுங்கு கங்கை திட்டப் பணிகளின் மொத்த மதிப்பீடு 9/95 திட்ட அறிக்கையின்படி ரூ.2311 கோடியாகும். இதில் தமிழ்நாட்டின் பங்கு ரூ.554.13 கோடியாகும். இதுவரை ஆந்திரப் பிரதேச அரசு ரூ.1814.60 கோடி செலவு செய்துள்ளது. தமிழக அரசு தன் பங்காக ரூ.512 கோடி ஆந்திரப் பிரதேச அரசுக்குக் கொடுத்துள்ளது. 29–12–2000 அன்று ஹைதராபாத்தில் நடைபெற்ற 37வது இணைப்புக் குழுக் கூட்டத்தில் 1997 செப்டம்பர் மாதத்திய விலைவீதப்படி திருத்திய திட்ட மதிப்பீடு ரூ.2544.80 கோடி என்றும் இதன்படி தமிழ்நாட்டின் பங்கு ரூ.639.40 கோடி என்றும் ஆந்திரப் பிரதேச அரசு குறிப்பிட்டுள்ளது.



2001 செப்டம்பர் 8]

கண்டலேறு அணையிலிருந்து திறந்துவிடப்பட்ட நீரின் அளவும் மற்றும் தமிழ்நாட்டு எல்லையில் பெறப்பட்ட நீரின் அளவும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| ஆண்டு | கண்டலேறு அணையிலிருந்து கே.பி. கால்வாயில் திறந்து விடப்பட்ட நீரின் அளவு | தமிழ்நாட்டின் எல்லையில் பெறப்பட்ட நீரின் அளவு | பெறப்பட்ட நீர் அளவின் விழுக்காடு. |
|---|---|---|---|
| 1996 | 0.610 டி.எம்.சி. | 0.076 டி.எம்.சி. | 12.50 % |
| 1997 | 4.339 டி.எம்.சி. | 2.290 டி.எம்.சி. | 52.80 % |
| 1998 | 4.077 டி.எம்.சி. | 2.810 டி.எம்.சி. | 69.00 % |
| 1999 | 3.990 டி.எம்.சி. | 1.830 டி.எம்.சி. | 45.86 % |
| 2000 | 9.580 டி.எம்.சி. | 3.610 டி.எம்.சி. | 37.59 % |

1999 ஆம் ஆண்டில் 10–7–1999 அன்று கண்டலேறு அணைதிறக்கப்பட்டு 17–7–1999 அன்று தண்ணீர் தமிழ்நாட்டின் எல்லையை அடைந்தது. 11–11–1999 முடிய 1.83 டி.எம்.சி. தண்ணீர் தமிழ்நாட்டின் எல்லையில் பெறப்பட்டது.

கண்டலேறு பூண்டி கால்வாயில் தலை மதகின் அடி மட்டத்திலிருந்து கண்டலேறு அணையின் நீர் மட்டம் 3.50 மீட்டர் உயரத்தில் இருந்தாலும், தலை மதகிற்கு வரக்கூடிய கால்வாயில் தடைகள் இருப்பதால் தமிழ்நாடு எல்லையில் போதுமான அளவு நீர் பெறமுடியவில்லை. இந்த விவரங்களை ஆந்திர பிரதேச அரசின் ஆலோசனை அலுவலர் அவர்கள் 7–12–1999–ல் கண்டலேறு அணையைப் பார்வையிடும்போது எடுத்துரைக்கப்பட்டு, கால்வாயில் உள்ள தடைகளைச் சரிசெய்ய ரூ.46 இலட்சத்திற்கான மதிப்பீடு இறுதியாக்கப்பட்டது. மேலும் 29–12–1999 அன்று ஹைதராபாத்தில் நடைபெற்ற 36வது இணைப்புக் குழுக் கூட்டத்தில், கண்டலேறு நீர்த்தேக்கத்திலிருந்து தண்ணீர் வெளியேறுவதை எளிதாக்கும் வண்ணம் கண்டலேறு அணை வரத்துக் கால்வாயை தூர்வாரிட ஆந்திர அரசின் அதிகாரிகள் ஒப்புக்கொண்டனர்.

மார்ச் மற்றும் ஏப்ரல் 2000 ஆண்டில் வரத்துக் கால்வாயினை சீரமைத்த பிறகு கண்டலேறு அணையிலிருந்து மே 2000 ஆண்டில் நீர் திறந்து விடப்பட்டு நீர் வரத்து 26–6–2000 வரை தொடர்ந்தது. இதனால் தமிழ்நாட்டு எல்லையில் 0.5 டி.எம்.சி. நீர் கிடைக்கப் பெற்றது. மேலும் 30–8–2000 முதல் 6.58 டி.எம்.சி. நீர் வரப்பெற்றது.

[2001 செப்டம்பர் 8

தண்ணீர்த் தேவையினைக் கருதி 2001 மே மாதம் முடிய தண்ணீர் திறந்துவிட ஆந்திர அரசை அணுகப்பட்டது. ஆந்திர முதல்வர் அவர்கள் 30–4–2001 வரை தொடர்ச்சியாக நீர் திறந்து விடுவதாக வாக்களித்தார்கள். கண்டலேறு அணையில் திறந்து விடப்படும் நீரின் அளவு வினாடிக்கு 250 முதல் 300 கன அடி என்றாலும் வழி நெடுகிலும் நீர் திருடப்பட்டு, எடுக்கப்படுவதால் தமிழ்நாட்டு எல்லையில் வினாடிக்கு 60 கன அடி மட்டும் வரப்பெற்றது. வழிநெடுகிலும் நீர் திருடுவதைத் தவிர்க்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆந்திர அரசு ஏற்கெனவே கோரப்பட்டுள்ளது.

தமிழ்நாடு எல்லையில் பெறப்படும் கண்டலேறு அணை தண்ணீர் கே.பி.கால்வாய், பூண்டி நீர்த்தேக்கம், இணைப்புக் கால்வாய் மற்றும் ஊட்டுக் கால்வாய் மூலம் செங்குன்றத்தில் உள்ள சென்னைப் பெருநகர நீர் விநியோகக் கிணற்றுக்குக் கொண்டு செல்லப்படுகிறது. பூண்டி நீர்த் தேக்கத்தில் 300 மில்லியன் கன அடி குறைவாக இருந்தால், பூண்டி நீர்த் தேக்கத்தில் எவ்வளவு நீர் பெறப்படினும் (100 கன அடிக்கு குறைவாக இருப்பினும்) அதனை செங்குன்றம் ஏரிக்கு சிறிய கால்வாய், மேல் ஊட்டுக் கால்வாய், சோழவரம் ஏரி, கீழ் ஊட்டுக் கால்வாய் மூலம் எடுத்துச் செல்லப்படுகிறது.

இப்பருவத்தில் மேற்சொன்ன அமைப்பில் நீர் கொண்டு செல்வதிலான இழப்பு இயல்பு மீறிய வறட்சியின் தாக்கத்தினால் மிகவும் அதிகமாக இருக்கிறபடியால், நாள் ஒன்றுக்கு 13.50 மி.க.அடி (அல்லது விநாடிக்கு 155 கன அடி) எதிர்வரும் பருவத்தில் இவ்விழப்பினைத் தவிர்க்கும்பொருட்டு கீழ்க்கண்ட தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது.

1. கண்டலேறு பூண்டி கால்வாய், பூஜ்யம் பகுதியிலிருந்து பூண்டி நீர்த் தேக்கம் வரை சேதமடைந்த பகுதிகளை மராமத்து செய்யவும், மண் மேட்டினை அகற்றவும் நீர் தடையின்றிச் செல்லவும் ரூ.1.20 கோடிக்கு கிருஷ்ணா நீர் வழங்கு திட்டத்தின் மதிப்பீட்டில் செயல்படுத்துதல்.

2. சென்னைப் பெருநகர் நீர் வழங்கு வாரியம் அதன் நிதியாதாரத்தில் சிறிய கால்வாயை ரூ.3.65 கோடியில் புனரமைப்பு செய்தல்.

3. ஊட்டுக் கால்வாய்கள் கடைமடைப் பகுதியில் உள்ள மக்களின் கால்வாய்ப் படுகையை அகவுறை இடுதல் (லைனிங்) மற்றும் மக்களின் கால்வாய்ப் படுகையில் உட்கால்வாய் அமைத்தல் போன்ற பணிகளை ரூ.11.00 இலட்சம் மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கு வாரியத்தின் நிதியுதவியுடன் வைப்புநிதிப் பணியாக செயலாக்குதல்.



2001 செப்டம்பர் 8]

1991 ஆம் வருடம், ராமன்சேரி மற்றும் திருக்கண்டலத்தில் புதிதாக இரண்டு நீர்த் தேக்கங்கள் அமைத்து கிருஷ்ணா நதி நீர் மற்றும் வெள்ள நீரைச் சேமித்து வைக்க ஒரு திட்டம் உருவாக்கப்பட்டது. அதன்படி ராமன்சேரி நீர்த் தேக்கத்திற்கு ரூ.300 கோடியும், திருக்கண்டலம் நீர்த் தேக்கத்திற்கு ரூ.400 கோடியும் உத்தேச மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டன.

ஆனால் மேற்கண்ட நீர்த் தேக்கம் அமையவிருக்கும் கிராமங்களில் உள்ள நில உரிமையாளர்களின் தீவிர எதிர்ப்பினால் தொடர் நடவடிக்கை இல்லாமல் போனது. இதற்கு பதிலாக கீழ்க்காணும் இடங்களில் நீர்த் தேக்கங்கள் அமைக்கும் பணிகள் 2001–2002ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்களாக பகுதி இரண்டு திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்பட உள்ளன.

| | | கொள்ளளவு | இறுதிநிலை செலவு |
|---|---|---|---|
| 1. | வயலூர் படுகைப் பாலம் - பாலாற்றுக்குக் குறுக்கே பாலம் - பாலாற்றுக்குக் குறுக்கே பொறி மதகு அமைத்தல் 0.5 டி.எம்.சி. | 0.500 டி.எம்.சி. | ரூ.77.00 கோடி |
| 2. | கூவம் ஜமீன் கொராட்டூர் ஆற்றுக் குறுக்கே நீர்த்தேக்கம் அமைத்தல் 0.2 டி.எம்.சி. | 0.200 டி.எம்.சி. | ரூ.22.00 கோடி |
| 3. | பள்ளிக்கரணை சதுப்பு நிலம் - 0.5 டி.எம்.சி. | 0.500 டி.எம்.சி. | ரூ.55.00 கோடி |
| 4. | திருநீர்மலையில் அடையாறுக்கு குறுக்கே நீர்த்தேக்கம் அமைத்தல் | | |

திருநீர்மலையில் நீர்த் தேக்கம் அமைக்கும் பணியினை விரைவாக செயல்படுத்தும் பொருட்டு, இத்திட்ட சாத்தியக்கூறு அறிக்கை தயாரிக்கும் பணியிலும் மற்றும் திட்டப் பணிகள் செயல்படுத்தும் பணியிலும் கலந்தறி நிறுவனத்தை ஈடுபடுத்தலாம். என சென்னை மாநகர வளர்ச்சிக் குழுமம் கருத்து தெரிவித்துள்ளது.. இது தொடர்பாக அரசு மேல் நடவடிக்கை எடுத்து வருகிறது.

## புதிய வீராணம் திட்டம்

புதிய வீராணம் திட்டம் ஆகஸ்டு 1993 ஆம் ஆண்டு உலக வங்கித் திட்டமாக "இரண்டாவது சென்னைக் குடிநீர் வழங்கும் திட்டம்" என்ற பெயரில் ரூ. 464.00 கோடிக்கு ஒப்பளிக்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் சென்னைக்கு ஒரு நாளைக்கு 190 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது.

[2001 செப்டம்பர் 8

இவ்வொப்பளிப்பில் ரூ.60 கோடி, கீழ்க்கண்ட நீர் ஆதார மேம்பாட்டு வேலைகளை உள்ளடக்கியது.

(1) கீழ்க்கொள்ளிடம் அணைக்கட்டிலிருந்து வீராணம் ஏரிக்கு நீர் எடுத்து செல்லும் வடவாறு கால்வாயை மேம்படுத்துதல்

(2) வீராணம் ஏரியில் உள்ள திட்டுகளை அகற்றுதல்; ஏரியின் உயரத்தை 2 அடி உயர்த்தி தற்போதைய கொள்ளளவான 935 மி.கன அடியிலிருந்து 1485 மி. கன அடியாக அதிகப்படுத்துதல்

(3) ஏரியின் மேற்கரையினைப் பலப்படுத்துதல்

திருத்திய ஆட்சி ஒப்பளிப்பில் வடவாறு (1996 ஏப்ரல்) கால்வாயிலிருந்து பாசனத்திற்காக நீர் எடுத்துச் செல்லும் மற்ற கால்வாய்களை நவீனப்படுத்தும் உறுப்பும் இணைக்கப்பட்டு ரூ.110.95 கோடி நீர்வள ஆதார மேம்பாட்டு வேலைகளுக்கு ஒதுக்கப்பட்டது. இதன்மூலம் 56,034 ஏக்கர் (வடவாற்றின் 11,178 ஏக்கரும், வீராணம் ஏரியின் 44,856 ஏக்கரும் உள்ளடக்கியது) நிலத்திற்குத் தடையின்றி பாசன வசதி செய்திட எதிர்நோக்கப்பட்டது.

முதலில் இப்பணி உலக வங்கியின் உதவியுடன் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டது. ஆனால் ஏரியிலிருந்து சென்னைக்கு நீர் எடுத்து வர ஆகும் செலவு மிகவும் அதிகமாக இருந்ததாலும், சென்னை நகருக்கு கிருஷ்ணா குடிநீர்த் திட்டத்தின்மூலம் 12 டி.எம்சி. (12.00 மி.கன அடி ) எதிர்நோக்கப்பட்டதாலும், அரசு இத்திட்டத்தின் நோக்கத்தினை மாற்றி கடலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் உள்ள வீராணம் ஏரியின் சார் நகரங்களுக்கு குடிநீர் வழங்கும் திட்டமாகச் செய்து மாநில நிதியிலிருந்தே செயல்படுத்திட 1996 செப்டம்பரில் முடிவு செய்தது. இத்திட்டத்தில் 25 தொகுப்புகள் உள்ளன. அவற்றின் மதிப்பீடுகளும் தற்போதைய நிலையும் கீழே தரப்பட்டுள்ளன:



2001 செப்டம்பர் 8]

| வ. எண் | பணிகளின் விவரம் | தொகுப்புகளின் எண்ணிக்கை | மதிப்பு ரூபாய் கோடியில் | தற்போதைய நிலை |
|---|---|---|---|---|
| 1. | வடவாறு கால்வாயினை மேம்படுத்துதல் | 6 | 27.15 | 3 தொகுப்புகளிலுள்ள வேலைகள் முடிவுற்றன. 3 தொகுப்புகளிலுள்ள பணிகளில் 80 விழுக்காடு முடிவுற்றன. |
| 2. | வீராணம் ஏரியின் முழு நீர்த்தேக்க மட்டத்தினை 2 அடி உயர்த்தி அதன் முக்கிய கரையினை பலப்படுத்துதல் | 4 | 12.58 | அனைத்து தொகுப்புகளிலும் வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. |
| 3. | தற்போதைய மேல்புறக் கரையினை பலப்படுத்துதல் மற்றும் புதிய மேற்புறக் கரை அமைத்தல் | 4 | 9.67 | அனைத்து தொகுப்புகளிலும் வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. |
| 4. | வடவாற்றின் 24 பாசனநீர் எடுத்துச் செல்லும் கால்வாய்களையும் வீராணம் ஏரியின் 34 கால்வாய் களையும் நவீனப் படுத்துதல் | 2 | 24.65 | மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. |
| 5. | வீராணத்தின் முக்கிய கரையின் மேல் தார் சாலை அமைத்தல் | 2 | 4.58 | மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. |
| 6. | கீழ் அணைக்கட்டு மதகுகளை சீர் செய்தல் | 1 | 0.75 | பணி நடைபெற்று வருகிறது. |

| | | | | |
|---|---|---|---|---|
| 7. | வீராணத்தின் கீழ்மட்ட கலிங்கு, கோதாவரி வடிகால் மற்றும் மிகை போக்கி மதகு மற்றும் யு.என்.எஸ்.எஸ். மதகுகளை மேம்படுத்துதல், வடவாற்றின் குறுக்கே புதிய மதகினை அமைத்தல் | 4 | 30.83 | 2 தொகுப்புகளுக்கு மதிப்பீடு தயாரித்தலும், 2 தொகுப்புகளுக்கு ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்ய வேண்டிய நிலையில் உள்ளது. |
| 8. | பணியாளர் இல்லங்களை சீர்செய்தல் மற்றும் புதிய ஆய்வு மாளிகை கட்டுதல் | 2 | 0.74 | பணி கட்டடங்கள் அமைப்பினால் செய்யப்பட்டு வருகிறது. |
| | மொத்தம் | 25 | 110.95 | |

மேற்கண்ட 25 தொகுப்புகளில், 15 தொகுப்புகளில் ரூ.48.57 கோடிக்கான வேலைகள் நடைபெற்று வருகின்றன. 5 தொகுப்புகளுக்கு ரூ.10.45 கோடிக்கான பணிகள் முடிவுற்றன. மீதமுள்ள ரூ.51.93 கோடிக்கான 5 தொகுப்புகளுக்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு வருகின்றன.

**பரம்பிக்குளம் ஆழியாறு திட்டம் – ஒப்பந்தம் புதுப்பித்தல்**

தமிழ்நாடு மற்றும் கேரளா ஆகிய இரண்டு மாநிலங்களும் ஆனை மலையாறு, நீராறு, சோலையாறு, பரம்பிக்குளம், பாலாறு, ஆழியாறு மற்றும் இவற்றில் இணையும் ஆறுகளின் நீரை மின்சாரம் தயாரிக்கவும், பாசனத்திற்கும், குடிநீர் விநியோகத்திற்கும், தொழிற்சாலைகளுக்கும் பயன்படுத்த இவ்விரு அரசுகளுக்கு இடையே 9–11–1958 முதல் செயல்படுத்தக்கூடிய ஓர் ஒப்பந்தம் 29–05–1970–ல் கையெழுத்தானது. ஒப்பந்த விதிகளின்படி 9–11–1958 முதல் ஒவ்வொரு 30 ஆண்டுகளுக்குப் பிறகும் அக்கால அனுபவத்தின் அடிப்படையில் இருசாரார் ஒப்புதலின் பேரில் ஒப்பந்தம் மறுபரிசீலனைக்குட்பட்டது. இந்த ஒப்பந்தம் 9–11–1988–ல் மறு ஆய்வு செய்யப்பட வேண்டும்.

இதன்படி இரு அரசுகளும் 21–9–1989 அன்று தங்களது ஆவணங்களை பரிமாறிக்கொண்டு அமைச்சர்கள் மட்டத்தில் பலமுறை பேச்சுவார்த்தைகள் நடத்தின. பரம்பிக்குளம் ஆழியாறு ஒப்பந்தத்தை ஆய்வு செய்து ஒரு விவரமான அறிக்கை தயாரிக்க இரு மாநில அரசு அலுவலர்களைக் கொண்ட ஒரு குழுமம் அமைக்கப்பட்டது. இக்குழுமம் திருவனந்தபுரம் மற்றும் அட்டகட்டி ஆகிய இடங்களில் கூடி பேசியபோதிலும் எந்த முடிவுக்கும் வர இயலவில்லை.





**கேரள அரசு பரிசீலிக்க வேண்டியவை:–**

1. இடமலையாறு புனல் மின் திட்டத்தினைச் செயலாக்கியதன் மூலமாக, ஒப்புக் கொண்டபடி 2.5 டி.எம்.சி தண்ணீரை ஆனைமலையாற்றிலிருந்து பரம்பிக்குளம் ஆழியாறு பாசன அமைப்பிற்குத் திருப்பி விடுவதை ஏற்க வேண்டும்.
2. ஒப்பந்தத்தின்படி இடமலையாறு மற்றும் இடுக்கி திட்டங்கள் நிறைவேற்றப்பட்டதால் மேல் நீராறு தண்ணீர் முழுவதையும் எவ்விதத் தடையுமின்றி அக்டோபர் முதல் ஜனவரி முடிய தமிழகத்தில் பயன்படுத்த அனுமதிக்க வேண்டும்.
3. மனக்கடவு மதகிற்கு சேமித்து பாசன உறுதி செய்திடும் வகையில் ஒரு சமநிலை நீர்த்தேக்கம் அமைக்க கேரளம் இசைவு அளிக்க வேண்டும். மேல் நீராறு நீரை ஒரு குகைப்பாதை வழியாக நல்லாறுக்கு கொண்டுவந்து அங்கு ஒரு புனல் மின்நிலையம் அமைத்து வெளிவரும் நீரை திருமூர்த்தி அணைக்குத் திருப்புவதற்கான புதிய திட்டத்திற்கு இசைவு அளிக்க வேண்டும்.
4. கேரளத்தில் சித்தூர்புழா வடிநிலத்தின் தேவைக்குத் தமிழகத்திற்குரிய 2.5 டி.எம்.சி.–க்கு மேல் உள்ள நீரை ஆனைமலையாற்றிலிருந்தோ அல்லது தேக்கடி ஆறிலிருந்தோ திருப்பிக்கொள்ள வேண்டும்.

கடந்த 28–11–1996–ல் மாநில அமைச்சர்கள் மட்டத்தில் சென்னையில் இருதரப்பு பேச்சுவார்த்தை நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் மேற்கண்ட கோரிக்கைகளின்மீது எந்த முடிவும் எடுக்கப்படாததால் மீண்டும் கூடிப் பேச தீர்மானிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து தமிழக அரசு மீண்டும் கூடிப் பேச தீவிர முயற்சி எடுத்து வருகிறது. இதுவரை கேரள அரசு இக்கூட்டத்திற்கு நாள் நிர்ணயிக்கவில்லை. இதுகுறித்து தமிழக அரசு தொடர்ந்து முயற்சி எடுத்து வருகிறது.

**பாண்டியாறு – புன்னம்புழா திட்டம்**

பன்னாட்டு நதியான பாண்டியாறு புன்னம்புழா தமிழ்நாட்டில் தோன்றி கேரள மாநிலத்தில் உள்ள சாளியாற்றில் கலக்கிறது. மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளான பாண்டியாறு – புன்னம்புழா நீலகிரி மலையில் உள்ள உயர்ந்த சிகரங்களில் தோன்றி கூடலூர் நகரத்திற்கு 5 கி.மீ. மேற்கே இணைகின்றன. இந்த இணைப்புக்குக்கீழ் இந்த ஆறு

புன்னம்புழா என்று அழைக்கப்படுகிறது. இந்த ஆறு கேரள மாநிலத்தில் நீலாம்பூர் அருகே சாளியாற்றுடன் கூடுகிறது. கடைசியாக இந்த ஆறு "பேபூர்" என்ற இடத்தில் அரபிக்கடலில் கலக்கிறது. இந்தத் திட்டத்திற்கான தளம் ஊட்டி–மைசூர் நெடுஞ்சாலையில் அமைந்த கூடலூர் நகரம் ஆகும்.

தமிழ்நாடு மற்றும் கேரள மாநிலங்கள் 1965 ஆம் ஆண்டு இணைந்து சம்மதித்தபடி பாண்டியாறு–புன்னம்புழா நீர் மின் திட்டம் மேற்கு நோக்கிப் பாயும் பாண்டியாறு–புன்னம்புழா ஆறுகளின் 171.38ச.கி.மீ. (66.20 சமைல்) பரப்புடைய நீர்ப்பிடிப்புப் பரப்பிலிருந்து கிடைக்கப்பெறும் சராசரி 14 டி.எம்.சி. தண்ணீரை 500.60 மீ. (1642 அடி) உயரத்திலிருந்து கிடைக்கும் நீர் விசையை பயன்படுத்தி முதல் கட்டமாக 100 மெ.வா.(2X50 மெ.வா) மின்சாரம் தயாரிக்கவும், இறுதியாக 150 மெ.வா. மின்சாரம் தயாரிக்கவும் திட்டம் தீட்டப்பட்டது. இதனால் 409 மி.யூ. ஆண்டு சராசரி மின்சாரம் கிடைக்கும். திட்டக் குழுமம் இத்திட்டத்திற்கு 1968–ல் ஒப்புதல் அளித்தது.

அதன் பிறகு, கோவை மாவட்ட விவசாயிகள் பாண்டியாறு – புன்னம்புழா திட்டத்தினால் கிடைக்கும் தண்ணீரை தமிழ்நாடு பயன்பெறும்வண்ணம் பவானி ஆற்றின் கிளையாறான மோயாற்றில் இணைக்கும் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயக் கேட்டுக் கொண்டதன்பேரில், பரிசீலனை செய்ததில் இந்தத் திட்டமும் செயல்படுத்த முடியும் என்று தெரிந்தது. தமிழ்நாடு குறைந்தபட்சம் 7 டி.எம்.சி தண்ணீரையாவது தமிழ்நாட்டிற்குத் திருப்பிவிட விரும்பியது.

கடந்த 28–11–1996–ல் சென்னையில் நடைபெற்ற கேரளம் மற்றும் தமிழ்நாடு பாசனத் துறை அமைச்சர்களின் பேச்சுவார்த்தையின்போது, பாண்டியாறு–புன்னம்புழா திட்டத்தில் மின் உற்பத்திக்குப் பிறகு வெளியேறும் நீரில் கோயம்புத்தூர் – ஈரோடு மாவட்டங்களில் வறட்சிப் பகுதிகளில் குடிநீர் மற்றும் பாசனத்திற்குத் தேவையான நீரை எதிர்நோக்கி குறைந்தது 7 டி.எம்.சி.–யாவது தமிழ்நாட்டிற்குத் திருப்ப அனுமதிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டது. திட்டத்திற்கான அறிக்கையைப் பரிசீலித்த பிறகு அதன்மீது கருத்து தெரிவிப்பதாக கேரளா தெரிவித்தது.

பாண்டியாறு – புன்னம்புழா திட்டத்தை தமிழ்நாடு மின்வாரியம் இரண்டு கட்டங்களாக நிறைவேற்ற தயாரித்துள்ளது. முதல் கட்டத்தில் கிடைக்கும் 14 டி.எம்.சி நீரில் 50 விழுக்காடான 7 டி.எம்.சி.–யைப் பயன்படுத்தி 2 X 50 மெகாவாட் மின்சாரம் தயாரித்தபின் அந்த நீரை





கேரளத்திற்குத் திருப்பிவிடுவது. அப்போதே 7 டிஎம்.சி நீரை தமிழ்நாட்டிற்குத் திருப்பிவிடும் பணி தொடங்கப்படும். இரண்டாவது கட்டத்தில் திருப்பிவிடப்பட்ட 7 டி.எம்.சி நீரை தமிழ்நாட்டில் சிகூர் வடிநிலத்தில் 2 X 30 மெகாவாட் மின்சாரம் தயாரிக்க உத்தேசிக்கப்பட்டது. மின் உற்பத்திக்குப்பின் வெளியேறும் நீர் தமிழ்நாட்டில் மோயார் ஆற்றில் கலக்கும். இத்திட்டத்திற்கான செலவு 1998 ஆம் ஆண்டு விலைப்படி ரூ.904 கோடியாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மின்வாரியம் இதற்கான திட்ட அறிக்கையைத் தயார் செய்து, இத்திட்டச் செயலாக்கத்திற்கு கேரள அரசின் ஒத்திசைவிற்காக 1998 செப்டம்பரில் அனுப்பியது. கேரள அரசு தனது இசைவினைத் தெரிவிக்காததோடு, கிழக்கு நோக்கி 7 டி.எம்.சி தண்ணீரைத் திருப்பிவிடுவதற்கும் ஒத்துக்கொள்ளவில்லை. தமிழ்நாடு அரசு தொடர்ந்து முயற்சி செய்து வருகிறது.

**தேசிய தொலைநோக்குத் திட்டத்தில் தீபகற்ப ஆறுகள் இணைப்புத் திட்டம்**

மகாநதி – கோதாவரி – கிருஷ்ணா – பெண்ணாறு – காவிரி – வைப்பார் இணைப்புகள்

தென்னிந்திய நதிகளான மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா, பெண்ணாறு, பாலாறு, காவிரி, வைகை மற்றும் குண்டாறு ஆறுகளை இணைக்கும் கருத்து மத்திய அரசு தயாரித்துள்ள தேசிய தொலைநோக்குத் திட்டத்தில் தீபகற்ப ஆறுகள் இணைப்புத் திட்டத்தில் இடம் பெறுகிறது. இவ்விணைப்புப் பணிகளுக்கான ஆய்வு அறிக்கைகளை தேசிய நீர்வள குழுமம் தயாரித்து வருகின்றது.

இதுவரை மகாநதி – கோதாவரி, கோதாவரி– கிருஷ்ணா, கிருஷ்ணா– பெண்ணாறு, பெண்ணாறு–காவிரி இணைப்புகளுக்கான முதல்நிலை அறிக்கையினை தேசிய நீர் அபிவிருத்தி முகமை தயாரித்துள்ளது. இம்முகமை உபரி மற்றும் பற்றாக்குறை படுகைகளைத் தெரிந்தெடுத்து மகாநதி மற்றும் கோதாவரி ஆறுகளிலிருந்து உபரி நீரை கிருஷ்ணா, பெண்ணாறு, காவிரி மற்றும் வைகை படுகைகளுக்குத் திருப்பிவிடலாம் என்று தெரிவித்துள்ளது.

இத்திட்டத்தின்படி, மகாநதி மற்றும் கோதவரி ஆறுகளின் உபரி நீர் ஆந்திர பிரதேசத்திலுள்ள பெண்ணாற்றுக்கு திருப்பிவிடப்படும். பெண்ணாற்றிலிருந்து காவிரிக்குத் திருப்பிவிடப்படும் நீர் சுமார் 534 கி.மீ. நீளமுள்ள இணைப்புக் கால்வாய் வழியாக சோமசிலா

அணைக்கட்டிலிருந்து சுமார் 9455 மி.க.மீ. (334 டி.எம்.சி.) பெண்ணாற்றின் உபரிநீர் காவிரி ஆற்றின் குறுக்கே அமைந்துள்ள கல்லணை வரை திருப்பப்படும். இணைப்புக் கால்வாய் ஆரம்பிக்கும் சோமசிலா அணை முதல் தமிழகத்தின் கல்லணை வரை இடைப்பட்ட ஆந்திரம் மற்றும் தமிழ்நாட்டுப் பகுதிகளின் பாசனம், குடிநீர் போன்ற தேவைகளைப் பூர்த்தி செய்யும். மேலும் சுமார் 3855 மி.க.மீ. (136.1 டி.எம்.சி.) அளவு நீர் கல்லணைப் பகுதியில் விடப்படும். அது காவிரி வடிநிலப்பகுதி மற்றும் காவிரிப் படுகைக்குத் தெற்கே அமைந்துள்ள பகுதிகளில் பாசனத் தேவைகளுக்குப் பயன்படுத்தப்படும்.

காவிரி – வைகை–குண்டாறு இணைப்பானது இணைப்புத் திட்டத்தின் கடைசி அங்கமாகும். இந்த இணைப்பின் நோக்கம் காவிரியில் கிடைக்கப்பெறும் 3,855 மி.க.மீ.(136.1 டி.எம்.சி.) அளவு நீரில் 2,252 மி.க.மீ. (79.5 டி.எம்.சி.) அளவு நீரை காவிரியின் தெற்கில் குண்டாறு வரையில் உள்ள பகுதிகளின் பாசனம் மற்றும் குடிநீர் வசதிகளுக்காகத் திருப்புவதே ஆகும்.

தீபகற்ப நதிகளின் இணைப்புத் திட்டத்தினை விரைவில் செயலாக்க தமிழ்நாடு அரசு மிகுந்த ஆர்வம் காட்டுகிறது. தீபகற்ப நதிகளின் இணைப்புத் திட்டத்தினை விரைவில் செயல்படுத்த தமிழக அரசு இந்திய அரசினைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

### மேற்கு நோக்கிப் பாயும் கேரள ஆறுகளின் உபரி நீரைத் தமிழ்நாட்டிற்குத் திருப்புதல்

நீர்வள மேம்பாட்டுக்காக மைய அரசால் தயாரிக்கப்பட்டுள்ள தேசிய தொலைநோக்குத் திட்டத்தில் தீபகற்ப ஆறுகளை இணைத்தல் ஓர் அங்கமாக உள்ளது. அதில் மேற்கு நோக்கிப் பாயும் கேரள ஆறுகளின் உபரி நீரைத் தமிழகத்திற்குத் திருப்பும் திட்டமும் அடங்கியுள்ளது. தீபகற்ப ஆறுகளை இணைக்கும் பணிக்காக திட்ட ஆய்வுகளை மேற்கொள்வதற்காக தேசிய நீர்வள குழுமத்தை மைய அரசு அமைத்துள்ளது.

இதன்படி தேசிய நீர்வளக் குழுமம் ஆறுகள் அனைத்திலும் ஆய்வினை மேற்கொண்டு இணைப்புத் திட்டத்திற்கான அறிக்கைகளைத் தயாரித்து வருகிறது. இதுவரை மேற்கொண்ட ஆய்வுகளின் அடிப்படையில் கேரளத்தில் பம்பா மற்றும் அச்சன்கோவில் ஆறுகளில் உபரி நீர் வளத்தை தமிழ்நாட்டிற்குத் திருப்பும் பம்பா–அச்சன்கோவில்–





வைப்பாறு இணைப்புத் திட்டத்தை தேசிய நீர்வளக் குழுமம் தயாரித்துள்ளது.

பம்பா–அச்சன்கோவில்–வைப்பாறு இணைப்புத் திட்டத்தின்படி இரண்டு இயல்பான நீர்த்தேக்கங்கள், ஒரு விசை இறைப்பானால் நிரப்பப்படும் நீர்த்தேக்கம், மின்உற்பத்திக் கேந்திரங்கள் மற்றும் தமிழ்நாட்டுக்கு நீரைக் கொண்டு வருவதற்கு சுமார் 50 கி.மீ. நீளமுள்ள கால்வாய் ஆகியவை அமைக்கப்படும். திட்டத்தின்படி சுமார் 22 டி.எம்.சி. அளவு நீர் தமிழ்நாட்டிற்குத் திருப்பப்பட்டு, அதனால் கோவில்பட்டி, சங்கரன்கோவில், சிவகிரி, திருவில்லிபுத்தூர், ராஜபாளையம், சாத்தூர் மற்றும் தென்காசி வட்டங்களில் சுமார் 91400 எக்டேர் நிலம் பாசன வசதி பெறும். தமிழ்நாட்டிற்குப் பாசன வசதியுடன் ஆண்டுக்கு சுமார் 1114 மில்லியன் யூனிட் மின்உற்பத்தியும் கேரளத்திலுள்ள வெம்பாடு ஏரியின் உப்புத்தன்மையை போக்கவும் மற்றும் கேரளத்தில் குடிநீர் வசதியும் இத்திட்டத்தில் சொல்லப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கு சுமார் ரூ.1398 கோடி செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினைத் தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொண்டதுடன் இத்திட்டத்திற்கு தேசிய நீர்வளக் குழுமத்தில் ஒப்புதலைப் பெற நடவடிக்கை எடுத்துள்ளது.

இத்திட்டத்தினைக் கேரள அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. கேரள ஆறுகளில் உபரிநீர் ஏதும் இல்லையென்றும் கேரள ஆறுகளிலிருந்து நீரை வெளியே கொண்டு சென்றால் அதனால் கேரளத்தின் வளமும் சுற்றுச்சூழல் நிலையும் கெட்டுவிடும் என்றும் கேரளம் கருதுகின்றது.

ஆறுகளின் இணைப்புக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் மாநிலங்களின் கருத்தை மாற்றவும் இணைப்புத் திட்டங்களுக்கு சம்பந்தப்பட்ட மாநிலங்களின் ஒப்புதலைப் பெறவும் மத்திய அரசு ஒரு "துணைக் குழுவை" அமைத்துள்ளது. அக்குழுமம் பம்பா–அச்சன்கோவில்–வைப்பாறு இணைப்புக்கு கேரளத்தின் ஒப்புதலைப் பெற நடவடிக்கை எடுக்கும் என தமிழ்நாடு அரசு எதிர்பார்க்கின்றது. இந்த இடைக்காலத்தில் கேரள அரசு இத்திட்டம் குறித்து தேசிய நீர்வளக் குழுமத்திற்கு தன்னுடைய அதிருப்தியை தெரியப்படுத்தியுள்ளது. மேலும் கேரள அரசு தேசிய நீர்வள குழுமத்தின் அறிக்கையில் உயிரின வாழ்க்கை, சுற்றுச்சூழல் மாசுபடுதல் பற்றிய விவரங்கள் கருத்தில் கொள்ளப் படவில்லை என தெரியப்படுத்தியுள்ளது. மேலும், கேரள அரசு 2051 ஆம் ஆண்டு வாக்கில் பம்பா அச்சன்கோயில் – வைப்பார் இணைப்புத்

திட்டத்திற்கு உபரி நீர் இருக்காது எனத் தெரிவித்துள்ளது. இதனை வலியுறுத்தும் வகையில் கேரள அரசின் நீர்வள ஆதாரத் துறை மற்றும் மேலாண்மை அமைப்பு (சி.டபிள்யூ.ஆர்.டி.எம்.) மூலமாக அறிக்கை தயாரித்து தேசிய நீர்வளக் குழுமத்திற்கு அனுப்பியுள்ளது. தமிழக அரசு தேசிய நீர்வள குழுமத்திடம் மேற்கண்ட திட்டத்தை விரைவில் அமல்படுத்த வலியுறுத்தி வருகிறது.

**மாநில நிலநீர் மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம்**

நிலநீர் வளத்தினை பல்வேறு வகைகளில் பெருக்குகின்ற மாநிலங்களில் முன்னோடி மாநிலமாக தமிழ்நாடு திகழ்கின்றது. பொதுப் பணித் துறையில் நீர்வள ஆதார அமைப்பின்கீழ் உள்ள மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையத்தின்கீழ், முறையான மற்றும் அறிவியல்பூர்வமான நிலநீர் ஆய்வு மற்றும் ஆய்வுப் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும் இம்மையம் விரிவான அறிவியல் ரீதியான நிலநீர் ஆய்வினை மேற்கொண்டு தமிழ்நாட்டில் நிலநீர் வளத்தினைத் தொடர்ந்து கணித்து வருகின்றது. இவ்வகையில் சூலை 1997 வரை சுமார் 63 விழுக்காடு நிலநீர் வளம் பயன்படுத்தப் பட்டுள்ளது. இக்கருத்தினைக் குறிக்கோளாகக் கொண்டு பொதுப் பணித் துறையின்கீழ் இயங்கும் மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம், நிலத்தடிநீர் வளங்களை அவ்வப்போது மதிப்பிடவும் பயன்படுத்தவும் நிலத்தடி நீர் நிர்வாகம் மற்றும் அதன் பெருக்கத்திற்கான ஆய்வுப் பணிகளை முறையாகவும் அறிவியல் அடிப்படையிலும் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

இத்துறையினால் நடத்தப்பட்டு வரும் பலவகைப்பட்ட பணிகள் உள்ளடக்கிய நிலநீர் ஆய்வு பற்றிய விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:

(1) தமிழ்நாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 1671 கிணறுகளில் நீர் மட்டளவுகள் எடுக்கப்பட்டு நீர் மட்ட ஏற்ற இறக்கம் பற்றிய அறிக்கைகள் டி.எச்.வி. கன்சல்டன்ஸி உதவியுடன் தயாரித்தல். தமிழகத்தில் நிலநீரின் நிலைமை மற்றும் நீரின் தன்மை அறிவதற்காகவும், தொழிற்சாலை கழிவுநீர் மற்றும் விவசாயத்திற்கு உபயோகப்படுத்தும் உரம், பூச்சி மருந்து ஆகியவற்றால் நிலநீர் பாதிப்படைவதைக் கண்டறியவும், ஒட்டுமொத்த நிலநீர் தன்மை கண்டறியும் அமைப்பான "மெப்ட் ஐட்ராலிக்ஸ் வோன் கன்சல்டன்ட்"-ன் கலந்தாலோசனையுடன் இறுதி செய்யப்பட்டுள்ளது. அடிப்படை ஆய்விற்கு வருடத்திற்கு ஒரு முறையும், நிலநீர் பாதிக்கப்பட்ட பகுதிகளில் 3 மாதத்திற்கு ஒரு முறையும் நீர் மாதிரி சேகரிக்கப்பட்டு ஆய்வு செய்யப்படுகிறது.



(2) தமிழகத்தில் நிலநீரின் நிலைமை மற்றும் அதன் தன்மைகளைக் (3400 நீர் மாதிரிகள்) கண்காணித்தல்.

(3) தமிழகத்தில் மண் பரிமாணத்திற்கு ஏற்ப 15 இடங்களில் நிறுவப்பட்ட நீர்ப்பிரி முகடுகளில் இருந்து நீரியல் மற்றும் வானிலை தொடர்பான விவரங்களைத் தொகுத்தல்.

(4) மாநிலத்தின் பல்வேறு இடங்களில் உள்ள 400 மழையளவு நிலையங்களிலிருந்து காலந்தோறும் மழையளவு விவரங்களைச் சேகரித்து, மழை நீர் வரத்திற்கும் பூமியில் நீர் இழப்பிற்கும் உள்ள தொடர்பினைக் கண்டறிதல்.

(5) புவியியல், புவிபௌதீகம், மற்றும் புவி மேற்பரப்பியல் ஆய்வுகளின் மூலமாக நிலநீர் வளம் உள்ள பகுதிகளைக் கண்டறிதல். (தீவிர ஆய்வு 85 ஒன்றியங்களில்)

(6) வேளாண் மக்கள் அரசுத் துறைகள் மற்றும் அரசு நிறுவனங்களுக்கு நிலநீர் எடுப்பதற்கான அமைப்புகளை கட்டுமானம் செய்யத் தகுந்த ஆலோசனைகள் வழங்குதல்.

(7) சிறுபாசனத் திட்டங்களை நிறைவேற்ற நிலநீர் அனுமதிச் சான்று வழங்கல்.

(8) கடலோரப் பகுதிகளில் உள்ள நீர்ப் படிவங்களில் (920 கி.மீ. அளவிற்கு) கடல் நீர் ஊடுருவலை சிறப்பாய்வு மூலம் கண்காணித்தல்.

(9) நிலநீர் ஆய்விற்கான ஆழ் துளைக் கிணறுகள் (110 எண்கள்) துளையிடுதல்.

(10) தமிழகத்திலுள்ள சுமார் 17,000 கிராமங்களில் நிலநீர் வளத்தினை மதிப்பிடும் பணியை தொடர்பணியாகச் செய்தல்.

2001–2002 ஆம் ஆண்டில் மேற்கண்ட பணிகளுக்காக ரூபாய் 1.13 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2001 செப்டம்பர் 8

**உலக வங்கி நிதியுதவியில் தமிழகத்தில் "நீரியல் திட்டம்"**

தமிழகம் உட்பட எட்டு மாநிலங்கள் மற்றும் ஐந்து இந்திய அரசு நிறுவனங்களுக்கு நீரியல் திட்டம் ஒன்றினை உருவாக்கிச் செயல்படுத்த உலக வங்கி நிதி உதவ முன்வந்துள்ளது. இத்திட்டத்தின் குறிக்கோள் இந்திய அரசு நிறுவனங்கள் மற்றும் பங்கு பெறும் மாநிலங்களில் உள்ள நீரியல் சுழற்சி சம்பந்தப்பட்ட மேற்பரப்பு மற்றும் நிலத்தடி நீரின் அளவு மற்றும் தன்மை பற்றிய விவரங்களையும் சேர்த்து விஞ்ஞானப்பூர்வமான எல்லா விவரக் குறிப்புகளையும் மேம்படுத்தி பயன்படுத்துவோர்க்கு பயன்பெறும் வகையில் கிடைக்கச் செய்வதாகும். இத்திட்டத்தினை தமிழகத்தில் செயல்படுத்த திட்டமிட்ட மதிப்பீடு ரூ.38.647 கோடி ஆகும். உலக வங்கியுடன் நடத்தப்பட்ட விரிவான பேச்சு வார்த்தைகளுக்குப் பிறகு தமிழ்நாடு அரசுக்கும் உலக வங்கிக்குமிடையே ஓர் ஒப்பந்தம் 22–9–1995 அன்று கையெழுத்தானது. 21–12–1995 முதல் இத்திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இத்திட்டத்தினைச் செயல்படுத்த ரூ.51.149 கோடிக்கு அரசு திருத்திய நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டம் (1) மேற்பரப்பு நீர்ப் பகுதி, (2) நிலத்தடி நீர்ப் பகுதி என இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

**மேற்பரப்பு நீர்ப் பகுதி**

தமிழகத்தில் உள்ள ஆற்றுப் படுகைகளில் நீர்ப் போக்கு விவரங்களைச் சேகரிக்க 112 நீரளவு நிலையங்கள் அமைத்தல், 116 பெரிய ஏரிகளில் கொள்ளளவு மற்றும் நீரளவு அறிய தானியங்கி நீரளவு பதிப்பான் கருவிகள் பொருத்துதல், வானியல் தொடர்பான விவரங்களைச் சேகரிக்க 22 வானிலை தட்ப வெப்ப நிலையங்கள், 57 மழை அளவு நிலையங்கள், 6 தானியங்கி வானிலை நிலையங்கள் ஆகியவை அமைத்தல், நீரின் தன்மை சோதனை செய்ய 15 நீர்த் தன்மை பரிசோதனைச் சாலைகள் மற்றும் 17 வண்டல் மண் ஆய்வு நிலையங்கள் அமைத்தல். மேற்பரப்பு நீர் ஆய்வு செய்ய 71 இடங்கள் தேர்வு செய்யப்பட்டு நீர் மாதிரிகள் மாதம் ஒரு முறை ஆற்று நீர் பாயும் காலங்களில் சேகரிக்கப்பட்டு ஆய்வு செய்தல், அலுவலகக் கட்டடங்கள் (4 கோட்டங்கள், 12 உப கோட்டங்கள் மற்றும் 60 பிரிவு அலுவலகங்கள்) கட்டுதல், 43 தள கருவி பண்டகசாலை கட்டடங்கள் கட்டுதல், 24 வாகனங்கள் வாங்குதல் போன்றவை நீரியல் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படவுள்ளன.



2001 செப்டம்பர் 8]

**நிலத்தடி நீர்ப் பகுதி**

இத்திட்டத்தின்கீழ் தற்போதுள்ள ஆய்வுக் கிணறுகளில் நீர் மட்ட அளவுகளை சேகரிப்பது மற்றும் புதிதாக கடினப் பாறைப் பகுதிகளில் 692 ஆழ்துளைக் கிணறுகள், படிவப் பாறை பகுதியில் 168 ஆழ்துளைக் கிணறுகள் அமைத்தல், 10 தட்ப வெப்ப நிலையங்களை மேம்படுத்தி நீர்நிலை மாற்றங்களில் விவரம் சேகரித்தல். 4 ஆற்றுப் படுகைகளில் தட்ப வெப்ப நிலையங்கள் ஏற்படுத்துதல். நீரின் தன்மை அறிய 4 புவிவேதியியல் ஆய்வகக் கட்டடங்கள் அமைத்தல், ஒருங்கிணைந்த புள்ளிவிவர மையக் கட்டடம் அமைத்தல், 30 வாகனங்கள் வாங்குதல் போன்றவை இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படவுள்ளன.

**சாதனை விவரம்**

**மேற்பரப்பு நீர் பகுதி**

மொத்தமாக அமைக்கப்படவுள்ள 112 நீரளவு நிலையங்களின் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மொத்தம் 116 ஏரிகள் நீர்மட்டம் கொள்ளளவு விவரம் சேகரிக்க ஏரிகளில் தானியங்கி நீரளவு பதிப்பான் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. அனைத்து மழையளவு நிலையங்கள், தட்ப வெப்ப நிலையங்கள், 65 தானியங்கி வானிலை நிலையங்கள் அமைக்கும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 20 வானிலை நிலையங்கள் அமைக்கும் பணி நடைபெற்று வருகின்றது. நீரியல் திட்டத்தின்கீழ் எல்லா (15) நீரின் தன்மை மற்றும் (15) வண்டல் மண் ஆய்வு நிலையங்களும், 41 தள பண்டகசாலைகளும் அமைக்கப் பட்டுள்ளன.

நீரியல் திட்டத்தின்கீழ் இதுவரை 4 கோட்ட அலுவலகங்கள் 12 உப கோட்டங்கள், 60 பிரிவு அலுவலகக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு இயங்கி வருகின்றன. பூண்டி நீரியல் ஆய்வு மையத்தில் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 25 வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன. வெள்ளக்கணிப்பு ஆய்வுப் பணி வேப்கோஸ் (WAPCOS) அமைப்பிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

**நில நீர்ப் பகுதி**

கடினப் பாறை பகுதியில் 692 ஆழ்துளைக் கிணறுகளில் 669 பணிகள், படிவப் பாறை பகுதிகளில் 160 ஆழ்துளைக் கிணறுகளில் 133

[2001 செப்டம்பர் 8

ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டு, எஞ்சிய ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. ஆழ்துளைக் கிணறுகளில் நீர்மட்டம் கவனிப்பதற்காக 723 தானியங்கி நீரளவு பதிப்பான் கருவிகள் வாங்கப்பட்டு 455 ஆழ்துளைக் கிணறுகளில் பொருத்தப்பட்டுள்ளன. மீதி 268 கருவிகள் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. நீரியல் திட்டத்தின்கீழ் 4 புவிவேதியியல் பரிசோதனைச்சாலைக் கட்டடங்கள் முடிக்கப்பட்டு, இயங்கி வருகின்றன. பரிசோதனைச் சாலைகளில் தூய்மைக் கேடு பற்றி ஆராய உரிய கருவிகள் வைக்கப்பட்டுள்ளன.

2000–2001 ஆம் ஆண்டின் நிதி ஒதுக்கீடு ரூ.9.36 கோடி. சிவில் பணிகள், கருவி தளவாடங்கள் மற்றும் தொடர் செலவினம் ஆகிய பணிகளுக்கு ரூ. 8.01 கோடி செலவிடப்பட்டுள்ளது. இதுவரை நீரியல் திட்டத்தில் மொத்தமாக ரூ. 35.43 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது.

**2001 – 2002 திட்டம்**

நீரியல் திட்டத்தின்கீழ் கீழ்குறிப்பிட்டுள்ள பணிகள் நிலநீர்த் தொகுதி மற்றும் மேற்பரப்பு நீர்ப் பகுதிகளுக்கும் மேற்கொள்ளப்படும்.

**நில நீர்ப் பகுதி**

27 ஆழ்துளைக் கிணறுகள் கடினப் பாறை மற்றும் படிவ மண் பகுதிகளில் ரூ.0.5 கோடி மதிப்பில் அமைக்கப்படவுள்ளன. செயற் பொறியாளர் அலுவலகம், 9 செயற் பொறியாளர்களுக்கான குடியிருப்பு மற்றும் 30 உதவி செயற் பொறியாளர் அலுவலகக் கட்டடங்கள் ரூ3.50 கோடி செலவில் நடப்பு ஆண்டில் கட்டப்படும்.

**மேற்பரப்பு நீர்ப் பகுதி**

ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பணிகளின்கீழ் அணைகளின் வண்டல் தன்மை, வெள்ளத்தை முன்கணிப்பது ஆகிய பணிகள் 2001–2002–ல் மேற்கொள்ளப்படும். செயற் பொறியாளர் குடியிருப்பு மற்றும் ஆராய்ச்சி மையத்திற்கான கட்டடங்கள் ரூ.0.768 கோடி செலவில் கட்டப்படும்.

**கொள்முதல் (நிலநீர் மற்றும் மேற்பரப்பு நீர்ப் பகுதி)**

டி பிரிவு கணினிகள் 26 எண்கள், ஒரு பி பிரிவு கணினி, ஓர் ஆராய்ச்சிக் கருவி ரூ.6.25 கோடியில் வாங்கப்படவுள்ளது.



2001 செப்டம்பர் 8]

உலக வங்கி கடிதம் நாள் 26–6–2001–ல் மேற்கண்ட கொள்முதலை இத்திட்டம் முடிவடைகின்ற நாள் 31–3–2002–க்குள் நிறைவேற்ற வேண்டுமென தமிழக அரசுக்கு தெரியப்படுத்தியுள்ளது. இதன்பின் காலதாமதமானால் மாநில அரசு நிதியில்தான் இது மேற்கொள்ளப்பட வேண்டும்.

இத்திட்டம் முடிவுறும் காலமான 31 மார்ச் 2002 வரை மட்டுமே உலக வங்கி நிதியுதவி கிடைக்குமென உலக வங்கி தனது 26–6–2001 தேதியிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளது. எஞ்சிய பணிகள் ஏதேனுமிருப்பின் அவை மாநில நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்கு திருத்திய நிர்வாக ஒப்புதல் ரூ.51.15 கோடி வழங்கப்பட்டு, 31–3–2001 வரை ரூ.35.43 கோடி கட்டடப் பணிகள், கருவிகள், கணினிகள் முதலியவற்றிற்கு செலவிடப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகை ரூ.15.72 கோடி 31–3–2002–க்குள் செலவிடப்படும்.

கீழ்க்கண்ட பணிகள் செயலாக்குவதற்கு ரூ. 15.194 கோடி 2001–2002 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:

| | | கோடியில் |
|---|---|---|
| 1. | சிவில் பணிகள் (மேற்பரப்பு நீர் பகுதி) | 0.768 |
| 2. | சிவில் பணிகள் (தரைநீர் பகுதி) | 4.690 |
| 3. | கொள்முதல் (மேற்பரப்பு நிலநீர் பகுதி) | 6.252 |
| 4. | தொடர் செலவினம் | 3.484 |
| | மொத்தம் | 15.194 |

**அணை பாதுகாப்புத் திட்டம்**

தமிழ்நாட்டில் அணை பாதுகாப்புத் திட்டம் 1991 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. கட்டுமான விதிமுறைகளுக்கு ஏற்ப அணைகளின் தரத்தை உயர்த்தும் நோக்கத்துடன் இத்திட்டம் தொடங்கப்பட்டது. செப்டம்பர், 1997–க்குள் முடிப்பதாக இத்திட்டம் திட்டமிடப்பட்டது. இத்திட்டம் உலக வங்கியின் நிதி உதவியுடன் எடுத்துக்கொள்ளப்பட்டது. ரூ.41.85 கோடிக்கான இத்திட்டம் தமிழக அரசினால் 1992 ஆம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்டது.

இத்திட்டம் கீழ்க்கண்ட மூன்று பகுதிகளைக் கொண்டதாகும்:

1. அணை பாதுகாப்பு இயக்ககத்தினை பலப்படுத்துதல்

2. அணைகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுத்தல்

3. அணைகளைப் புனரமைத்தல்

அணை பாதுகாப்பு இயக்ககத்தினை பலப்படுத்தலின்கீழ் உலக வங்கியின் பரிந்துரைகளின்படி தொழில்நுட்ப மற்றும் இதர அலுவலர்களுடன் இயக்ககம் உருவாக்கப்பட்டது. இந்த நிறுவனத்தின் முக்கியப் பணிகள், உள்ளமைப்பு வசதிகள், பருவ கால அறிக்கைகள் மூலம் அணைக்கட்டுகளின் நிலைமைகளைப் பரிசீலித்தல் மற்றும் செலயல்படுத்தப்படும் புனரமைப்புப் பணிகள் குறித்து பரிசீலித்து ஆலோசனை வழங்குதல் மற்றும் தீர்வு செய்தல் ஆகும்.

அணைகளுக்கு அடிப்படை வசதிகள் செய்தலின்கீழ் அணைகளுக்குக் கூடுதல் மின் வசதி செய்தல், அணுகு சாலைகள் அமைத்தல் விரைவு மற்றும் அதிவிரைவு தொலைத் தொடர்பு வசதிகள் செய்தல், நவீன பாதுகாப்பு மற்றும் சோதனைக் கருவிகளைப் பொருத்துதல் ஆகியவை செய்யப்பட்டன.

அணைகளைப் புனரமைத்தலின்கீழ் அணை பாதுகாப்பு மற்றும் மறு ஆய்வுக் குழுவின் பரிந்துரைகளின்படி நீரியல் மற்றும் கட்டுமான தேவைகளுக்கேற்ப புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

செப்டம்பர் 1998 முடிய ரூ.22.82 கோடி அணை பாதுகாப்பு நிர்வாகச் செலவுகள், விரைவு மற்றும் அதி விரைவு தொலைத் தொடர்பு இணைப்புகளை அலுவலகங்கள் மற்றும் அணைகளுக்குக் கொடுத்தல், கூடுதல் மின்வசதி மற்றும் கால நிலை அறியும் நிலையங்கள் மற்றும் கருவிகள் அமைத்தல் மற்றும் புனரமைப்புப் பணிகள் செய்தல் ஆகியவற்றிற்காகச் செலவு செய்யப்பட்டது.

அணை பாதுகாப்புத் திட்டத்திற்கான உலக வங்கியின் நிதி உதவி செப்டம்பர் 1998 வரை நீட்டிக்கப்பட்டது.

கோமுகி, சாத்தனூர், வீடூர், விலிங்டன், சேத்தியா தோப்பு அணைகளில் மீதம் உள்ள தொடர் புனரமைப்புப் பணிகள் மாநில நிதி உதவியினால் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.





இந்நிலையில் மத்திய நீர் ஆணையம் (CWC) கேட்டுக் கொண்டபடி அணை பாதுகாப்பு மற்றும் புனரமைப்புப் பணிகளை ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ள உலக வங்கியில் நிதி உதவி கோரி, ரூ.118.50 கோடிக்கான திட்டம் தமிழக அரசினால் மத்திய நீர் ஆணையத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

30–11–1999 தேதியிட்டு ஓர் கடிதம் மத்திய நீர் ஆணையத்திலிருந்து வரப்பெற்றது. அதில் அணை பாதுகாப்புத் திட்டம் I–ஐத் திருத்தியமைக்கப்பட்டபோது, உலக வங்கியால் நிதி அளிக்கப்படாத 10 அணைகளில் செய்யப்பட வேண்டிய புனரமைப்புப் பணிகளைச் செய்ய தேவைப்படும் தொகை மற்றும் இரு அணைகளில் செய்து முடிக்கப்பட வேண்டிய புனரமைப்புப் பணிகளின் தொகையையும் சேர்த்து ஒரு மதிப்பீட்டினை அனுப்பி வைத்தால் அணை பாதுகாப்புத் திட்டம் II–ல் சேர்க்க ஏதுவாக இருக்கும் என்று தெரிவித்தது. அதன்படி ரூ.60 கோடிக்கு ஓர் கருத்துரு 24–12–1999–ல் மத்திய நீர் ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேற்கொண்டு உத்தரவு எதிர்பார்க்கப்படுகிறது.

உலக வங்கி 10–வது மிஷன் தமிழ்நாட்டிற்கு நவம்பர் 2000–ல் வந்தபோது ரூ.35.70 கோடிக்குக் கடனுதவி வழங்க ஒப்புக் கொண்டது. மீதமுள்ள பணிகள் நடப்பு ஆண்டில் முடிக்கப்படும். அரசின் ஆட்சி ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இதுவரை இப்பணிக்கு ரூ.3.00 கோடி செலவிடப்பட்டுள்ளது. ரூ.118.50 கோடி மதிப்பிற்கு அணை பாதுகாப்புத் திட்டத்தின் இரண்டாவது தொகுப்பின்கீழ் ஓர் கருத்துரு மத்திய நீர் ஆணையத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

**சென்னைப் பெருநகர நீர் வழிகளைச் செப்பனிட்டுச் சீரமைக்கும் திட்டம்**

தமிழக அரசு சென்னையின் நீர்வழிகளான அடையாறு, கூவம் ஆறு, பக்கிங்காம் கால்வாய், ஓட்டேரி நல்லா, காப்டன் காட்டன் கால்வாய் மற்றும் சிறிய வடிகால்களிலிருந்து மணற்படிமங்கள் மற்றும் சேறு ஆகியவற்றை அகற்ற முடிவு செய்தது. இத்திட்டத்தின் நோக்கம் நகரத்தின் நீர்வழிகளைச் சுத்தப்படுத்தி தொடர்ந்து சுத்தமாக வைத்தலும் மற்றும் கழிவுநீர் ஆற்றில் கலந்துவிடாமல் செய்வதும் ஆகும்.

மேற்காணும் நோக்கத்தினை நிறைவேற்ற கீழ்க்கண்ட பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன:

(1) கீழ்க்கண்ட நீர்வழிகளில் தூரெடுத்தல், வெள்ளத் தடுப்பு மற்றும் புனர் வடிவமைக்கும் பணி மேற்கொள்ளுதல்.

அ) சென்னை மாநகர எல்லைகளில் உள்ள பெரிய வடிகால்கள் – 50 விழுக்காடு பணிகள் முடிவுற்றன.

ஆ) எண்ணூரிலிருந்து முட்டுக்காடு வரை நீளமுள்ள பக்கிங்காம் கால்வாய் – 60 விழுக்காடு பணிகள் முடிவுற்றன.

இ) அடையாறு – 30 விழுக்காடு பணிகள் முடிவுற்றன.

ஈ) கூவம் அறு – 2001–2002 ஆம் ஆண்டில் எடுத்துக் கொள்ளப்படும்.

31–12–2000 முடிய மேற்கண்ட பணிகளுக்கான செலவு ரூ.30.73 கோடியாகும்.

(2) அடையாறு மற்றும் கூவம் ஆறு கடலோடு கலக்கும் இடங்களில் ஏற்பட்டுள்ள மணல் மேடுகளை அகற்றி மீண்டும் மணல் மேடு ஏற்படாவண்ணம் செய்தல்.

தேசிய கடல் தொழில்நுட்ப நிறுவனம் (இந்திய அரசு நிறுவனம்) கூவம் ஆற்று முகத்துவாரம், நீண்டகாலம் தொடர்ந்து மண் படியாமல், போக்குவரத்துக்குப் பயனுறும் வண்ணம் 'கிரேயான்ஸ்' கட்டும் திட்டத்தினை அளித்துள்ளது. கூவம் ஆற்றின் தென்கரையில் "கிரேயான்ஸ்" அமைப்பதற்கு அரசு ரூ.75 லட்சம் ஒப்புதல் அளித்துள்ளது. மொத்தம் 170 மீட்டர் நீளத்தில் இது வரை 125 மீட்டர் நீளத்திற்கு 'கிரேயான்ஸ்' கட்டப்பட்டுள்ளது.

(3) சென்னை நீர்வழிகளில் நீர்வழிப் போக்குவரத்து, கரைகளில் பொழுதுபோக்கு, நில உடைமைகள் முதலியன மேம்படுத்துதல். ஒருங்கிணைந்த மூலத்திட்டம் தயாரிக்கும் நிறுவனத்தைத் தேர்ந்தெடுக்க உலகளாவிய ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு அவற்றின் தொழில்நுட்பப் புள்ளிகள் மதிப்பாய்வு செய்யப்பட்டு முடிக்கப்பெற்றது. இப்புள்ளிகளின் நிதிப்புள்ளிகளை திறப்பதற்கான பரிந்துரைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன. இப்பணி "கட்டி – செயலாக்கி – மாற்றம்" (BOT) செய்யும் முறையின் மூலம் மேற்கொள்ளப்படும்.



## கடலரிப்புத் தடுப்புத் திட்டங்கள்

தமிழ்நாட்டின் கடற்கரையின் நீளம் சுமார் 960 கி.மீ ஆகும். இதில் 900 கி.மீ வங்காள விரிகுடா கரையோரமாகவும், 60 கி.மீ அரபிக் கடலோரமாகவும் அமைந்துள்ளது. கிழக்குக்கடற்கரை தொடர்ந்து கடலரிப்பிற்கு உள்ளாகிறது. சமீப ஆண்டுகளில் கடலரிப்பின் தாக்கம் அச்சம் தரும் விதமாக உள்ளது. இப்பிரச்சினையினைத் தீர்க்க அரசு பல பாதுகாப்பு முறைகளை அமல்படுத்தி வருகிறது.

மீன்பிடித் துறைமுகத்திலிருந்து எண்ணூர் வரை செல்லும் எண்ணூர் விரைவுப் பாதை சுமார் 9.08 கி.மீ. நீளத்திற்குக் கடுமையாக கடலரிப்பினால் பாதிக்கப்பட்டுள்ளது. இவ்விரைவுச் சாலையில் ஏற்படும் கடலரிப்பைத் தவிர்க்க பெருங்கற்களைக் கொண்டு கற்சுவர் அமைக்கும் பணி பல கட்டங்களில் நடைபெற்று வருகிறது.

கன்னியாகுமரி மற்றும் சென்னையில் மேற்கொள்ளப்பட்ட கடலரிப்பு தடுப்புப் பணிகள் முடிவு பெற்றுவிட்டன. இந்த நிதியாண்டில் (2001–2002–ல்) ரூ5.43 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ரூ. 169.39 கோடிக்கான "கடலரிப்பு தடுப்புப் பணிகள்" திட்டக் கருத்துரு அரசினால் தேசிய கடற்கரை பாதுகாப்புத் திட்டத்தில் இணைப்பதற்காக மத்திய நீர்வளத் துறை அமைச்சகத்திற்கு அனுப்பப்பட்டு வெளிப்புற நிதி உதவிக்காக இந்திய அரசின் பரிசீலனையில் உள்ளது.

எண்ணூர் நெடுஞ்சாலையில் கடலரிப்பைத் தடுக்க ஒரு நிரந்தரத் தீர்வு காண நெதர்லாந்து அரசிடமிருந்து தொழில்நுட்பம் மற்றும் நிதி உதவி பெறுவதற்கான ஒரு திட்டக் கருத்துரு நெதர்லாந்து அரசின் ஒப்புதலை எதிர்நோக்கி உள்ளது.

## பாசன மேலாண்மை பயிற்சி நிலையம்

திருச்சி, துவாக்குடியில் அமைந்துள்ள பாசன மேலாண்மை பயிற்சி நிலையம் இந்நாட்டிலுள்ள பதினோரு பயிற்சி நிலையங்களில் ஒன்றாகும். இந்நிறுவனம் 1984–ல் பன்னாட்டு நிதி உதவியுடன் தொடங்கப்பட்டது. இந்நிறுவனத்தில் விவசாயிகள், நீர்வளத் துறை, விவசாயப் பொறியியல் துறை மற்றும் விவசாயத் துறையைச் சார்ந்த களப்பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

[2001 செப்டம்பர் 8

(1) பயிற்சிகள்

உலக வங்கி உதவியுடன் நீர்வள ஆதார அமைப்பினால் செயல்படுத்தப்படும் நீர்வள ஆதார ஒருங்கிணைப்புத் திட்டத்தின்கீழ் பயிற்சிகள் அளிப்பதற்கு இந்தப் பயிற்சி நிலையம் முனைப்புடன் ஒருங்கிணைந்து செயல்படுகிறது. உலக வங்கியின் ஆலோசனையின்படி, தற்சமயம் இந்நிலையம் நீர்வள ஆதார நிறுவன அலுவலர்கள், களப்பணியாளர்கள் மற்றும் விவசாயிகளுக்கான பாசன மேலாண்மை குறித்த சிறப்புப் பயிற்சிகளை அளித்து வருகின்றது.

நடப்பு ஆண்டில் 184 உள்நாட்டு பயிற்சிகளும் 12 அயல்நாட்டு பயிற்சிகளும் 5 கல்வி பயணங்களும் மேற்கொள்ளப்பட உள்ளன. இந்தத் திட்டங்களினால் 2500 விவசாய பெரு மக்களும் 2080 நீர்வள ஆதார அமைப்பு அலுவலர்களும் பயன் பெற உள்ளார்கள்.

(2) நீர்ப்பாசன விவசாய முனைப்புத் திட்டம்

பாசன நீர் தேவை ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்து கொண்டே வருகிறது. பாசன நீரை நீர் உபயோகத்திறனை அதிகரிப்பதன் மூலம் நிலையான அதிகப்படி உற்பத்திக்கு வழிவகுக்கும். மேற்கண்ட குறிக்கோளை அடைவதற்கு விவசாயிகளுக்கு நீரைச் சிக்கனமாகவும் திறமையாகவும் பயன்படுத்த உரிய பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.

இந்தக் குறிக்கோளை கருத்தில் கொண்டு நீர்வள ஆதார ஒருங்கிணைப்பு திட்டத்தின்கீழ் நீர்ப்பாசன விவசாய முனைப்புத் திட்டத்திற்காக அரசு ரூ.555 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. இந்தத் திட்டத்தினால் மாநில அளவில் 400 செயல் விளக்கப் பண்ணைகள் தெரிவு செய்யப்பட்டு விவசாயப் பெருமக்களுக்கு சிக்கன நீர் உபயோகத்தின் மூலம் உற்பத்தி திறனை அதிகப்படுத்துவதற்கு பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தப் பணியில் நீர்வள ஆதார அமைப்பு, விவசாயப் பொறியியல் துறை, விவசாயத் துறை, தமிழ்நாடு விவசாயப் பல்கலைக்கழகம் மற்றும் பாசன மேலாண்மை பயிற்சி நிலையம் ஆகியவை இணைந்து செயல்பட உள்ளன. இதன் மூலம் 2001–2002–ல் 8 இலட்சம் விவசாயிகள் நீர்ப்பாசன முறையில் பயிற்சி பெற உள்ளனர். இத்திட்டத்திற்கு 2001–2002–ல் ரூபாய் 330 இலட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.



2001 செப்டம்பர் 8]

(3) நீர்வள ஆதார ஒருங்கிணைப்புத் திட்டத்தின்கீழ் நடைபெற உள்ள பயிற்சிகள்.

| வரிசை எண் | பயிற்சி விவரம் | எண்ணிக்கை | தொகை லட்சத்தில் |
|---|---|---|---|
| I 1.<br>2.<br>3. | தேசிய அளவிலான பயிற்சி<br>பயிற்சி பயணத்துடன் கூடிய அயல்நாட்டு பயிற்சிகள்<br>நீர்ப்பாசன விவசாய முனைப்பு திட்டம் பயிற்சி செயல் விளக்கம் | 184<br>12 + 5 = 17 | 300<br>350<br>330 |
| II | பயிற்சி நிறுவன மேம்பாடு | | 135 |
| III | புத்தக வெளியீடுகள் | | 15 |
| IV | தள ஆராய்ச்சி<br>அ. ஆராய்ச்சி ஆலோசனைக் குழுவின் ஒப்புதல் பெறப்பட்ட ஆராய்ச்சி பணிகள்<br>ஆ. மத்திய நீர்வளக் குழுவின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டுள்ள முன்னீடு | 2 | 10 |
| V | எம்.ஐ.எஸ். மென்பொருள் மேம்படுத்துதல் | 2 | 16 |
| | மொத்தம் | | 1166 லட்சம் |

## நீர் ஆய்வு நிறுவனம்

(1) நீர் வள ஆதாரங்கள் கண்டறிதல் ஆய்வு

சென்னை தரமணியில் உள்ள நீர் ஆய்வு நிறுவனம் தமிழகத்தின் நீர் வளத்தினைத் திட்டமிடும் பணிக்கு மையமாக அமையும் நிறுவனம் ஆகும். மேலும் இந்நிறுவனம் தமிழக அரசின் நீர் வள ஆதார அமைப்பின் தொழில்நுட்பச் செயலகமாகவும் விளங்குகிறது, நீர்வளத்தை விஞ்ஞான முறையிலே திட்டமிடவும், மதிப்பிடவும், மேலாண்மைக்கு வழிவகுக்கவும் இந்நிறுவனம் செயல்படுகிறது.

[2001 செப்டம்பர் 8

தமிழ்நாட்டில் உள்ள ஆற்றுவடிநிலங்கள் 17 ஆற்றுப்படுகைகளாக பிரிக்கப்பட்டுள்ளன. காவிரி ஆற்று வடிநிலம் தவிர மற்ற ஆற்றுப்படுகைகளுக்குப் பரந்த அளவிலே நீர் வளத்திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இவ்வறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு, மாநில நீர் வளத் திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டது. இத்திட்ட அறிக்கையுடன் தமிழ்நாட்டில் உள்ள ஆறுகளின் இணை அறிக்கைகளும் தயாரிக்கப்பட்டன. இவ்வறிக்கைகளில் தமிழ்நாட்டில் ஓடும் அனைத்து ஆற்று படுகையிலும் கிடைக்கக்கூடிய நில மேற்பரப்பு நீர் மற்றும் நிலத்தடி நீர் ஆகியவற்றை கணக்கிடப்பட்டுள்ளது. மேலும், குடிநீர், விவசாயம், தொழிற்சாலைகள், கால்நடைகள், மின் உற்பத்தி போன்ற உபயோகத்திற்கு 1999 ஆம் ஆண்டில் நீர் தேவை மற்றும் 2004, 2019, 2025, 2044, 2050 ஆகிய ஆண்டுகளில் தேவைப்படும் நீரின் அளவு ஆகியவை கணக்கிடப்பட்டுள்ளது. இவ்வாறு கணிக்கப்பட்ட கிடைக்கின்ற நீர் மற்றும் நீர் தேவை ஆகியவை ஒப்புநோக்கப்பட்டு, நீர் குறை ஆற்றுப்படுகைகள் அல்லது நீர் மிகு ஆற்றுப்படுகைகள் கண்டறியப்பட்டு, இப்படுகைகளில் நீரைச் சிக்கனமாகச் சேமிப்பது பற்றியும், நீர் மேலாண்மை பற்றியும் எடுக்க வேண்டிய கருத்துக்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு ஆற்றுப்படுகையிலும் உள்ள முக்கிய நகரங்களில் நீர் உரிமையாளர்களை அழைத்து கூட்டங்கள் நடத்தி, அவர்களின் கருத்துகளையும், நீர் தேவைகளையும் கருத்தில் கொண்டு, இத்திட்ட அறிக்கையில் தேவையான மாற்றங்களும் செய்யப்பட்டுள்ளது. மேலும், அரசு சாரா நிறுவனங்களும், அரசுத் துறை உள்ளூர் அதிகாரிகளும் இக்கூட்டங்களில் கலந்து கொண்டு கூறிய கருத்துக்களும் இவ்வறிக்கைகளில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. இதுபோன்ற 16 கூட்டங்கள் மொத்தத்தில் வெவ்வேறு ஆற்றுப்படுகைகளில் நடத்தப்பட்டுள்ளது. மேலும் நீர் உபயோகம் மற்றும் மேலாண்மை சம்பந்தபட்ட பிற அரசுத் துறை அதிகாரிகள் மற்றும் பல்கலைக்கழகப் பேராசிரியர்களை அழைத்து ஒரு நாள் கருத்தரங்கு இரண்டு தடவை நடத்தி அவர்களின் கருத்துக்களையும் கேட்டறிந்து இவ்வறிக்கை மேம்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இக்கருத்தரங்கில் உலக வங்கி வல்லுநர்கள் கலந்து கொண்டு கூறிய ஆலோசனைகளின்படி தேவையான மற்ற விவரங்களும் சேகரிக்கப்பட்டு இவ்வறிக்கை மேம்படுத்தப்பட்டிருக்கின்றது.

உலக வங்கிக் குழுவினரின் வேண்டுகோளுக்கிணங்க துல்லிய அளவிலே ஒவ்வோர் ஆற்றுப்படுகையிலும் நீரின் இருப்பு, தேவை போன்றவற்றை அறிய திட்டமிடப்பட்டுள்ளது, இதன்படி பாலாறு மற்றும்



2001 செப்டம்பர் 8]

வைகை ஆற்றுப்படுகைகளுக்கான அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இவ்வாய்வில், கிடைக்கின்ற நில மேற்பரப்பு நீரும், நிலத்தடி நீரும் விஞ்ஞான முறையிலே கணக்கிடப்பட்டிருக்கின்றது. மற்றும் குடிநீர், விவசாயம், கால்நடைகள், தொழிற்சாலைகள், மின் உற்பத்தி ஆகியவற்றிற்கு 1995–96 ஆம் ஆண்டிற்கு தேவைகளையும் மேலும் வருங்கால ஆண்டுகள் 2000, 2005, 2020, 2045 ஆகிய ஆண்டுகளில் தேவையான நீரும் கணக்கிடப்பட்டுள்ளது. இவ்வாண்டுகளில் நீர் மிகுதியும், நீர்ப் பற்றாக்குறையும் கொண்ட ஆற்றுப்படுகைகள் கண்டறியப்பட்டுள்ளன. இதனால் வருங்காலத் திட்டங்கள் வகுக்க வழிவகைகள் ஏற்படுகின்றன. நீர் பற்றாக்குறையான ஆற்றுப்படுகைகளில் நீரைச் சேமிக்கவும், மாற்று வழிகளில் நீரைக் கொண்டுவரவும் ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன. பாலாறு ஆற்றுப்படுகையின் துல்லிய அளவிலான நீர் இருப்பு அறிக்கை இஸ்ரேலிய நாட்டைச் சேர்ந்த "தகால் கன்சல்டண்ட்" உடன் கலந்தாலோசித்து மேலும் மேம்படுத்தப்பட்டிருக்கிறது. இதேபோன்ற அறிக்கை வைப்பாறு ஆற்றுப்படுகைக்கும் தயாரிக்கப்பட்டு வருகிறது.

நீர் வள ஆதாரத் திட்டத்தின்கீழ் தமிழக அரசு நீர் வள ஆய்வு மேற்கொள்வதற்காக இஸ்ரேல் நாட்டில் "திருவாளர்கள் தகால் கன்சல்டண்ட்" என்ற ஒரு வல்லுநர் குழுவினர் நிறுவனத்திற்கு ரூ.26.83 கோடிக்கு அனுமதித்துள்ளது. அந்த வல்லுநர் குழு பாலாறு ஆற்றுப்படுகைக்கான விரிவான ஆய்வு மேற்கொள்ள உதவுகிறது. இதனைத் தொடர்ந்து வைப்பாறு மற்றும் கோதையாறு ஆற்றுப்படுகைகளுக்கும் இவ்வல்லுநர் குழுவின் உதவியுடன் ஆய்வுகள் நடத்தப்பட உள்ளது.

*(2) சுற்றுச்சூழல் பிரிவு*

நீர் வள ஆதாரங்களில் சுற்றுச்சூழல் தொடர்பான பிரச்சினைகளில் அரசுக்கு ஆலோசனை அளிக்கவும், மத்திய மற்றும் மாநில அமைப்புகளுடன் இணைப்பாகச் செயல்படவும், சுற்றுச்சூழல் பாதிப்புகளை கணிக்கவும், நீர் ஆய்வு நிறுவனத்தில் சுற்றுச்சூழல் பிரச்சினைகள் தகவல் சேமிக்கவும், நீர் வள மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவும் ஒரு சுற்றுச்சூழல் பிரிவு செயல்பட்டு வருகிறது.

*(3) நீர் வள ஆராய்ச்சி நிதி*

நீர் வள மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நீர் வளப் பிரிவிற்குத் தேவையான நடைமுறை சீர்திருத்தங்களுக்கான ஆராய்ச்சிகளை மேற்கொண்டு செயல்படுத்துவதற்காக நீர் வள ஆராய்ச்சி நிதி

[2001 செப்டம்பர் 8

ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஓர் ஆராய்ச்சி ஆலோசனைக் குழு ஆராய்ச்சிக்கான தலைப்பைத் தேர்ந்தெடுப்பதற்காக அமைக்கப்பட்டுள்ளது.

நீர் சார்ந்த தலைப்புகளில் 16 ஆராய்ச்சிப் பணிகள், ரூ.202.4 இலட்சத்துக்கு மேற்கொள்ளப்பட்டு, அண்ணா பல்கலைக்கழகம், விவசாய பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், ஐ.ஐ.டி போன்ற ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு இப்பணிகள் வழங்கப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

*(4)மழை நீர் சேமிப்பு மற்றும் நிலத்தடி நீர் மாசுபடாமல் பாதுகாத்தலுக்கான வல்லுநர் குழு*

நீர் வளத்தினை பெருக்கவும், வருங்கால நீர் தேவைக்காக நீரைச் சேமிக்கவும் தக்க திட்டங்கள் மேற்கொள்ள ஏற்ற ஆலோசனைகள் வழங்க வல்லுநர் குழு ஒன்று அமைப்பப்பட்டு இயங்கி வருகின்றது. இக்குழுவிற்கு நீர் ஆய்வு நிலையத்தின் இயக்குநர் உறுப்பினர் – செயலாளராக உள்ளார். இக்குழு இதுவரை பதினோரு முறைகள் கூடி கலந்தாய்ந்து தேவையான விபரங்களை வெவ்வேறு துறைகளிடமிருந்தும் சேகரித்து வருகின்றது. சென்னை நகரத்தின் குடிநீர் வினியோகத்திற்குத் தேவையான நீர் வளத்தைப் பெருக்குவதற்கான பல திட்டங்களை இக்குழு அரசுக்கு சமர்பித்துள்ளது.

*(5) நீர் வளக் கட்டுப்பாடு மற்றும் ஆய்வு அவை*

தமிழ்நாட்டின் கிடைத்தற்கரிய நீர் வளத்தை அனைத்துத் துறைகளில் நீர் உபயோகத்தைக் கணக்கில்கொண்டு பகிர்ந்தளிக்க நீர் வளக் கட்டுப்பாடு மற்றும் ஆய்வு அவை ஒன்று மாண்புமிகு தமிழக முதல்வரைத் தலைவராக கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. இதன்கீழ் 5 உப அமைப்புகள் விவசாயம், நிலத்தடி நீர், குடி நீர், சுற்றுச்சூழல் முதலிய பிரிவுகளில் அமைக்கப்பட்டு தேவையான கருத்துரைகள் இவ்வாய்வு அவைக்கு வழங்க ஏற்படுத்தப்பட்டு இயங்கப்படுகின்றன.

23–11–98 அன்று நடந்த அவைக் கூட்டத்தில் "நீர் மேலாண்மையில் விவசாயிகள் பங்கேற்பு மற்றும் தமிழ்நாட்டின் பாசன முறைகளின் இயக்கம்" பற்றியும், "நிலத்தடி நீர் எடுப்பை தொடர் வரைமுறைப்படுத்துதல் மற்றும் கட்டுப்படுத்துதலுக்கான சட்டமியற்றுதலின் அவசியம்" பற்றியும் கருத்து பரிமாறப்பட்டது. இதன் அடிப்படையில், "நீர் மேலாண்மையில் விவசாயிகளின் பங்கேற்பு"க்கான மசோதா சட்டப் பேரவையில் அங்கீகரிக்கப்பட்டு இந்திய குடியரசுத்



2001 செப்டம்பர் 8]

தலைவர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டு 'நீர் மேலாண்மையில் விவசாயிகளின் பங்கேற்பு சட்டம் 2000' தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது. "நிலத்தடி நீர் கட்டுப்பாடு மற்றும் மேலாண்மை" பற்றிய மசோதாவினை மீண்டும் தமிழக சட்ட மன்றத்தில் முன் வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

*(6) நீர் ஆய்வு நிறுவனத்தினை மேம்படுத்துதல்*

உலக வங்கியின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் நீர் வளத் தொகுப்புத் திட்டத்தின்கீழ் நீர் ஆய்வு மையத்திற்குத் தேவையான கணிப்பொறிகள் மற்றும் அதனைச் சார்ந்த சாதனங்கள் வாங்கப்பட்டு மேம்படுத்தப்பட்டுள்ளது.

நீர் ஆய்வு நிறுவனத்தில் இயங்கி வரும் தொலையுணர்வுப் பிரிவு, நவீன தொலையுணர்வு மற்றும் நிலவியற்பியல் தகவல் அமைப்பு மென்பொருள்களான, எர்டாஸ், எல்விஸ், இன்டர்கிராப், ஆர்க்கின்போ மென்பொருள்களைப் பெற்றதன் மூலம், (பலப்படுத்தப்பட்டுள்ளது) உயர்நிலை பெற்றுள்ளது.

தொலையுணர்வுப் பிரிவு, மாநில திட்டக் குழுவின் மாநில நில உபயோக வாரியத்தினால் வழங்கப்பட்ட நிதி மூலம், தொலையுணர்வு நுணுக்கங்களைப் பயன்படுத்தி, மேல் பாலாற்றில், நில நீரின் தூய்மைக் கேடு மற்றும் மாசுபட்டதால் விவசாயத்திற்குப் பயனிலா வீணாய்ப் போன விளைநிலங்கள் கண்டறியப்பட்டன. அதைச் சீராக்க ஆலோசனைகள் வழங்க அரசு ஆணை மூலம் குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. தமிழகத்தின் அனைத்து ஆற்றுப்படுகைகளுக்கான, விண் செயற்கைக்கோள் மூலம் பெறப்பட்ட சமீபத்திய வண்ணப் படங்களை தேசியத் தொலையுணர்வு நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டு, நிலவியல், நிலவியற்பியல், நில வள மாறுபாடுகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. மாநில திட்டக் குழு அளித்த நிதி மூலம், செங்கம் கருமை ஒன்றியத்தில், நில நீர்த் தேக்க தகுதியான இடங்களைத் தேர்வு செய்யும் பணியை, இப்பிரிவு மேற்கொண்டுள்ளது.

## தமிழ்நாடு கொதிகல ஆய்வகம்

இந்திய கொதிகலன்கள் சட்டம், 1923ஐ மாநில அரசுகளால் இணைப் பொறுப்பின்கீழ் அமலாக்கப்பட வேண்டியிருப்பதையொட்டி, மேற்படிச் சட்டத்தினை தமிழகத்தில் செயல்படுத்தும் பொறுப்பினை தமிழ்நாடு கொதிகலன்கள் ஆய்வகம் முக்கியமான பொறுப்பாக மேற்கொண்டு

இயங்கி வருகின்றது. கொதிகலன்கள் பாதுகாப்பாக இயக்கப்படுவதையும் பொது மக்களின் உயிர், உடைமைகளுக்கும், பொதுச் சொத்துக்களுக்கும் இழப்பு நேராவண்ணம், இந்திய கொதிகலன்கள் சட்டம், 1923–ன்படி பாதுகாப்பு விதி நெறிமுறைகளைச் செயல்படுத்தும் முக்கிய பொறுப்பும் இக்கொதிகல ஆய்வகக் கட்டுப்பாட்டின்கீழ் வருகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழ்நாட்டில் தயாரிக்கப்படும் கொதிகலன்கள், கொதிகலன்களின் உதிரி பாகங்கள் மற்றும் எக்னாமைசர்கள், இந்திய கொதிகலன்கள் ஒழுங்குமுறை விதிகள் 1950–ல் வரையறுத்துள்ளபடி நல்ல தரத்துடன் தயாரிக்கப்படுவதை உறுதி செய்வதும், இக்கொதிகல ஆய்வகத்தின் முக்கியமான பணிகளில் ஒன்றாகும். இதன் பணி சட்ட ரீதி மற்றும் தொழில்நுட்ப வகையினைச் சார்ந்ததாகும்.

இந்தியாவிலேயே உயர் அழுத்தக் கொதிகலன்கள் உள்ளிட்ட கொதிகலன்கள் மற்றும் கொதிகலன்களுக்குத் தேவையான உயர் அழுத்த உதிரி பாகங்கள் தயாரிப்பில் தமிழகம் முதல் நிலையில் இருந்து வருகின்றது. இந்த மாபெரும் வளர்ச்சிக்குத் தமிழ்நாடு கொதிகலன்கள் ஆய்வகம் உறுதுணையாக இருந்து வந்து கொண்டிருக்கிறது.

தமிழ்நாட்டில் பல்வேறு நிறுவனங்களில் இயங்கிவரும் கொதிகலன்கள் அனைத்தும் தேர்ச்சி பெற்ற கொதிகலன் பணியாளர்களாலும், தேர்ச்சி பெற்ற கொதிகலன் பொறியாளர்களாலும் இயக்கப்படுவது தொடர்பாக, தமிழ்நாடு கொதிகலப் பணியாளர் விதிகள் 1964 மற்றும் தமிழ்நாடு கொதிகல இயக்கப் பொறியாளர்கள் விதிகள் 1965 ஆகிய விதிகளைச் செயல்முறைப்படுத்தும் பொறுப்பும் இவ்வாய்வகத்தின் முக்கியப் பொறுப்புகளில் ஒன்றாக அமைந்துள்ளது.

கொதிகலன்கள் தயாரிப்பு நிறுவனங்கள், பழுதுபார்க்கும் நிறுவனங்கள் மற்றும் அனல்மின் நிலையங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் உயர் அழுத்த பற்றவைப்பாளர்கள் உரிய தரத்துடன் இருப்பதை உறுதி செய்யும் பொருட்டு, பற்றவைப்பாளர்களுக்கான தேர்வுகளை நடத்தி, அதற்கான சான்றிதழ்கள் வழங்கும் பொறுப்பினையும் இவ்வாய்வகம் மேற்கொண்டு வருகின்றது.

கொதிகலன்கள் மற்றும் அதன் உதிரி பாகங்கள் தயாரிக்கும் போது, அவற்றின் பல்வேறு பாகங்களும் தரமான பொருட்களைக் கொண்டும், தரமான வேலைத்திறன் கொண்ட பணியாளர்களைக் கொண்டும் நல்ல



தரத்துடன் தயாரிக்கப்படுவதை உறுதி செய்ய, இந்திய கொதிகலன்கள் ஒழுங்கு முறை விதிகள் 1950 அடிப்படையாக அமைகின்றது. இவ்விதிமுறைகளின்படி, கொதிகலன்கள் மற்றும் அதன் உதிரிபாகங்கள் வடிவமைத்து தயாரிக்கப்படுவதை உறுதி செய்யும் விதமாக, இவ்வாய்வகம், கொதிகலன்கள் மற்றும் உதிரி பாகங்கள் வடிவமைப்புகளுக்கு ஒப்புதல் வழங்குவதுடன், தயாரிப்பில் ஒவ்வொரு நிலையிலும், நிலை ஆய்வுகள் மேற்கொண்டு அவற்றின் தரத்திற்கு உத்தரவாதம் அளிக்கின்றது. இத்தகைய நிலை ஆய்வுகள், ஒவ்வொரு தயாரிப்பிலும் கச்சாப் பொருள் நிலையிலிருந்து, இறுதி வடிவம் பெறும் நிலை வரையிலும், பல்வேறு நிலைகளில் ஆய்வுகள் இவ்வாய்வகத்தினால் சீரிய முறையில் மேற்கொள்ளப்பட்டு அவற்றின் தரத்திற்கு சான்றிதழ்கள் அளிக்கப்படுகின்றன.

இத்தகைய கொதிகலன்கள் தயாரிப்பு நிறுவனங்கள், புதியதாக கொதிகலன்களைத் தயாரிக்க அனுமதி கோரி விண்ணப்பிக்கும்போது, இவ்வாய்வகம் அத்தகைய விண்ணப்பதாரர்களுக்குத் தேவையான அனைத்துவித உதவிகளையும் வழங்கி, உரிய தொழில்நுட்ப நெறிமுறைகளையும் வழிகாட்டுவதன் மூலமாக, மேற்படி நிறுவனங்கள் எந்தவித இடர்பாடுமின்றி தொழிற்சாலைகளைத் தமிழகத்தில் தொடங்கவும், அவ்வாறு தொடங்கப்படும் தொழிற்சாலைகள் வெகு விரைவாக உற்பத்திப் பணிகளை தொடங்கவும், இவ்வாய்வகம் அனைத்து உதவிகளையும் செய்து ஊக்குவித்து வருகின்றது. குறிப்பாக, தமிழ்நாட்டில் தொழில் தொடங்க முனைவோரின் எண்ணிக்கையை அதிகப்படுத்த பல்வேறு மாநிலங்களில் இயங்கி வந்த பல கொதிகலன்கள் தயாரிப்பு நிறுவனங்கள், தற்போது தமிழகத்தில் தங்கள் தயாரிப்புகளுக்கான தொழிற்சாலைகளைத் தொடங்கி உற்பத்தி செய்து வருவது இதன் தொடர்பாக சிறப்பு அம்சமாக குறிப்பிடப்படுகிறது.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக்கு அடிப்படைத் தேவையான தடைபடாத மின்சார விநியோகம் மிகவும் அவசியம் என உணர்ந்துள்ள தமிழக அரசு தொலைநோக்குப் பார்வையுடன் தமிழகத்தில் மின்சார உற்பத்தியை பல மடங்கு உயர்த்த, பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவது அனைவரும் அறிந்த ஒன்றாகும். இது தொடர்பாக பல்வேறு தனியார் அனல்மின் நிலையங்களுக்குத் தமிழக அரசு ஒப்புதல் அளித்து, அவற்றின் ஆக்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இம்மின்நிலையங்கள் அமைப்பில், கொதிகலன்கள் பெரும்பங்கு வகிப்பதால், இவற்றின் நிர்மாணத்திற்குக் கொதிகல ஆய்வகம் அனைத்து

[2001 செப்டம்பர் 8

உதவிகளையும் நல்கி வருகின்றது. இவ்வாறு கொதிகல ஆய்வகத்தின் ஒப்புதலுடன் தொடங்கப் பெற்றுள்ள தனியார் அனல்மின் நிலையங்களில் குறிப்பிடத்தக்கவை திருவாளர்கள் தமிழ்நாடு கெமிக்கல் புராடக்ட்ஸ் நிறுவனத்தாரால் கும்மிடிப்பூண்டியில் அமைக்கப்பட்டு தற்போது 63.75 மெகாவாட் திறன் உற்பத்தியுடன் தொடங்கப்பட்டுள்ள அனல்மின் நிலையம் குறிப்பிடத்தக்கதொன்றாகும். இம்மின் நிலையத்திற்குத் தேவையான கொதிகலன் தென் ஆப்பிரிக்க நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. தற்போது இந்நிறுவனம் தன் சுய தேவைக்கான மின் சக்தியை பெற்றுக் கொள்வதுடன், கூடுதலாக உற்பத்தியாகும் மின்சக்தியை தமிழ்நாடு மின் வாரியத்திற்கும் விநியோகித்து உதவி செய்து வருகிறது. இதேபோன்று மேட்டூரில் திருவாளர்கள் மெட்ராஸ் அலுமினியம் கம்பெனி நிறுவனத்தாரால் அமைக்கப்பட்டு வரும் 25 மெகாவாட் மின் உற்பத்தி செய்யக்கூடிய 3 கொதிகலன்கள் முதன் முறையாக சீன மக்கள் குடியரசிலிருந்து கொள்முதல் செய்யத் திட்டமிடப்பட்டு, இக்கொதிகலன்களுக்கு வடிவமைப்புக்குக் கடந்த ஆண்டு ஒப்புதல் வழங்கப்பட்டது. இதனையடுத்து கொதிகலன்கள் நிறுவப்பட்டு தற்போது நல்ல நிலையில் இயங்கி வருகின்றன.

இக்கொதிகல ஆய்வகம், 2000–2001 ஆம் ஆண்டில் தமிழகத்தில் புதியதாக 167, கொதிகலன்களுக்கும், அவற்றுக்கான நீராவிக் குழாயமைப்புகளுக்கும் ஒப்புதல் வழங்கி, அவற்றைப் பதிவு செய்ததன் மூலம் உற்பத்திப் பணிகள் தொடங்கப்பட்டு, தமிழகத்தில் தொழில் முன்னேற்றத்தில் பெரும்பங்கு வகித்து வருகின்றது.

மேற்படி கொதிகலன்கள் அரிசி ஆலைகள், எண்ணெய் ஆலைகள், துணியாலைகள், சாயத் தொழிற்சாலைகள், எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள், சர்க்கரை ஆலைகள், உரத் தொழிற்சாலைகள், மருந்து பொருள் தயாரிப்பு நிறுவனங்கள், உருக்காலைகள், அனல்மின் நிலையங்கள், பொறியியல் கல்லூரிகள், மருத்துவமனைகள், நட்சத்திர உணவு விடுதிகள் போன்ற பல்வகைப்பட்ட நிறுவனங்களில் நிறுவப்பட்டுள்ளதிலிருந்து தமிழகத்தின் ஒட்டுமொத்த தொழில் வளர்ச்சியில் கொதிகல ஆய்வகம் பெரும்பங்கு வகிக்கிறது.

கொதிகலன்கள் தயாரிப்பு நிறுவனங்களைத் தவிர, கொதிகலன்கள் உதிரி பாகங்களான உயர் அழுத்த அடைப்பான்கள், குழாய்கள் பற்றவைப்பு கம்பிகள் போன்ற உபகரணங்களைத் தயாரிக்கும் பெரும்பாலான நிறுவனங்களும் தமிழகத்தில் அமைக்கப்பட்டுள்ளதால், மேற்படி தொழிற்சாலைகளில் தயாரிக்கப்படும் உதிரி பாகங்கள்



2001 செப்டம்பர் 8]

அனைத்தும் பல்வேறு நிலைகளில் ஆய்வு செய்யப்பட்டு அவற்றிற்கு தரச் சான்றிதழ் வழங்கும் பணியினையும் இவ்வாய்வகம் மேற்கொண்டு வருகிறது இவ்வாறு தயாரிக்கப்படும் உபகரணங்கள் நம் நாட்டின் மொத்தத் தேவையில் பெரும்பங்கு வகிக்கின்றன என்பது குறிப்பிடத்தக்க தொன்றாகும்.

2000–2001 ஆம் நிதியாண்டில், கொதிகலன் உதிரி பாகங்கள் தயாரிப்பு நிறுவனங்களில் ஆய்வு மேற்கொண்டு, சுமார் 1,42,059 அடைப்பான்களுக்கான தரச் சான்றிதழ்களையும், நீராவிக் குழாய் அமைப்புச் சாதனத்தில் பொருத்தப்படும் சில வகை உபகரணங்களுக்கான 1,06,220 தரச் சான்றிதழ்களையும் மற்றும் புதிய கொதிகலன்கள் உட்பட அதன் பல்வேறு பாகங்களுக்கும் மற்றும் உபரி பாகங்களுக்காக 3905 சான்றாவணங்களுக்கு ஒப்புதலையும் இந்திய கொதிகலன்கள் ஒழுங்குமுறை விதிகள், 1950– ன்கீழ் வழங்கியுள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும்.

தமிழகத்தில் தயாரிக்கப்படும் கொதிகலன்கள் மற்றம் அதன் உதிரி பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள், பழுது பார்க்கும் நிறுவனங்கள், கொதிகலன்கள் மற்றும் நீராவிக் குழாய் அமைப்பு நிறுவும் பணியை மேற்கொள்ளும் நிறுவனங்கள் ஆகியவற்றில் பணிபுரியும் பற்றவைப்பாளர்கள், அதற்குரிய முறையான தகுதி பெற்றிருப்பதன் மூலம் மேற்படி நிறுவனங்களில் தயாரிப்புகள் வரையறுக்கப்பட்ட தரத்தில் இருப்பதை உறுதி செய்யும் பொருட்டு இவ்வாய்வகம், உயர் அழுத்த பாகங்கள் பற்றவைப்பாளர்களுக்குத் தேர்வுகள் நடத்தி, தேர்ச்சி பெறும் பற்றவைப்பாளர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கி வருகின்றது. இதன்படி 2000–2001 ஆம் ஆண்டில் சுமார் 1190 பற்றவைப்பாளர்களுக்குத் தேர்வு நடத்தி, அதில் தேர்ச்சி பெற்ற 1103 பற்றவைப்பாளர்களுக்கு தரம் வாரியாக (பைப், ட்யூப் மற்றும் பிளேட் ஆகியவற்றில் அலாய் ஸ்டீல் மற்றும் கார்பன் ஸ்டீல்) சான்றிதழ்கள் வழங்கியுள்ளது. இதன் மூலம் கொதிகலன்கள் தயாரிப்பு நிறுவனங்களிலும், உதிரி பாகங்கள் தயாரிப்பு நிறுவனங்களிலும் தயாரிக்கப்படும் பொருட்களின் தரம் உறுதி செய்யப்படுகின்றது.

தமிழகத்தின் தொழில் வளர்ச்சியில் பெரும்பங்கு வகிப்பதுடன், இந்திய கொதிகலன்கள் சட்டம் 1923–ன் விதிகளை கொதிகலன்களைப் பயன்படுத்துவோர் பின்பற்றி கொதிகலன்கள் முறையாக இயக்கப்பட்டு வருவதை உறுதி செய்வதன் மூலம், பொதுமக்களின் உயிர், உடைமைகளுக்கும், பொதுச் சொத்துகளுக்கும் பேரிழப்பு ஏற்படாமல்

கண்காணிக்கும் மிக முக்கியப் பணியினையும் இவ்வாய்வகம் மேற்கொண்டு வருகின்றது. பல்வேறு தொழிற்சாலைகளில் அமைக்கப்பட்டுள்ள கொதிகலன்களை ஆண்டிற்கு ஒரு முறை சீரிய முறையில் ஆய்வு செய்து அவற்றின் இயக்கத்திற்கு வருடாந்திரச் சான்றிதழ்களை வழங்குவதன் மூலம் மேற்படி பணியினைத் தமிழ்நாடு கொதிகல ஆய்வகம் செவ்வனே நிறைவேற்றி வருகிறது.

ஆண்டாய்வின் போது பழுதடைந்து இயக்கத்திற்கு அனுமதிக்கப்பட இயலாத கொதிகலன்களுக்குச் சான்றிதழ்கள் மறுக்கப்பட்டு உரிய பழுதுகள் சீர் செய்யும் பணி முடிக்கப்பட்ட பின் மீண்டும் ஆய்வுகள் மேற்கொண்டு அதன் பின்னரே அவற்றின் இயக்கத்திற்கு உரிய சான்றிதழ்களை இவ்வாய்வகம் வழங்கி வருகிறது. இவ்வகையில் 2000-, 2001 ஆம் ஆண்டில் 2942 கொதிகலன்கள் ஆய்வு செய்யப்பட்டு, அவற்றின் இயக்கத்திற்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளது. இத்தகைய ஆய்வுகள் மேற்படி நிறுவனங்களில் உற்பத்தி பாதிப்பிற்கு இடமளிக்காத வகையில் மேற்கொள்ளப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்க அம்சமாகும். கொதிகலன்கள் ஆண்டாய்வின்போது பழுதடைந்ததாக காணப்பட்ட சுமார் 98 கொதிகலன்கள் பழுதுகள் நீக்கப்பட தலைமைக் கொதிகலன்கள் ஆய்வாளர் அவர்கள் நிலையில் பழுதுகள் ஒப்பளிக்கப்பட்டு அவற்றில் சுமார் 72 கொதிகலன்களின் பழுதுகள் சீர்செய்யப்பட்டு அவை இயக்கத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

கொதிகலன்கள் நிறுவப்படவும், குழாய் அமைப்புப் பணிகள் அமைக்கப்படவும், பழுதுகள் சீர் செய்யப்படவும், தகுதிவாய்ந்த பல்வேறு நிறுவனங்களுக்கு ஒப்புதல் வழங்கும் பணியினையும் இவ்வாய்வகம் மேற்கொண்டு வருகிறது. மேற்படி நிறுவனங்களில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளையும், தகுதிவாய்ந்த உயர் அழுத்த பாகங்கள் பற்றவைப்பாளர்கள் பணியமர்த்தப்பட்டிருப்பதையும், மேற்படி நிறுவனங்களின் கொதிகலன்களின் தொழில்நுட்ப அனுபவத்தினையும் கருத்தில் கொண்டு பல்வேறு தரங்களில் இதற்கான ஒப்புதல்கள் அளிக்கப்படுகின்றன.

இந்திய கொதிகலன்கள் சட்டம், 1923-ன் விதிமுறைகளின்படி தேர்ச்சி பெற்ற கொதிகலப் பணியாளர்களே கொதிகலன்களை இயக்க அனுமதிக்கப்பட வேண்டும். இது தொடர்பாக தமிழ்நாடு அரசு கொதிகலன்கள் பணியாளர்கள் விதிகள், 1964 மற்றும் தமிழ்நாடு கொதிகலன்கள் இயக்கப் பொறியாளர்கள் விதிகள், 1965 ஆகியவற்றைச் செயல்படுத்தும் அமைப்பாகவும் இவ்வாய்வகம் செயல்பட்டு வருகின்றது.





இதற்காக இந்த ஆய்வகம் கொதிகலப் பணியாளர்களுக்கெனவும் (நிலை – 1 , நிலை – 2 மற்றும் நிலை – 3), கொதிகலன்கள் இயக்கப் பொறியாளர்களுக்கெனவும் தேர்வுகளை நடத்தி, தேர்ச்சி பெறும் பணியாளர்கள் மற்றும் பொறியாளர்களுக்கு தகுதிச் சான்றிதழ்களை வழங்கி வருகின்றது.

தமிழகத்திலிருந்து கொதிகலப் பணியாளர்கள் மற்றும் கொதிகலப் பொறியாளர்கள் தேர்வுச் சான்றிதழ்களைப் பெறுபவர்கள் வெளிநாடுகளிலும் வரவேற்பைப் பெறுவதிலிருந்து இவ்வாய்வகம் நடத்தும் இத்தகைய தேர்வுகளின் தரம் எளிதில் விளங்கும். இவ்வாறு தேர்ச்சி பெற்ற கொதிகலப் பணியாளர்கள் மற்றும் கொதிகலப் பொறியாளர்களால் கொதிகலன்கள் பாதுகாப்பாக இயக்கப்படுகின்றனவா என்பதை கொதிகலன்கள் ஆண்டாய்வின்போது இவ்வாய்வகம் உறுதி செய்கின்றது.

பதிவு பெற்றுள்ள கொதிகலன்களைத் தவிர பதிவு பெறாமலும், சான்றிதழின்றியும் இயக்கப்படும் கொதிகலன்களை கண்டறிந்து, அவற்றின் இயக்கத்தை தடை செய்வதுடன் அத்தகைய கொதிகலன்களைப் பயன்படுத்துவோர்மீது இந்திய கொதிகலன்கள் சட்ட விதிகளுக்கு முரணாக பொதுமக்களின் உயிர் மற்றும் உடைமைகளுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் கொதிகலன்களை அங்கீகாரமின்றி இயக்கி வருவதற்காக குற்றவியல் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பணியினையும் இவ்வாய்வகம மேற்கொண்டு வருகின்றது.

இவ்வாய்வகத்தைப் பொறுத்தமட்டில் அரசுக்கு வருவாய் ஈட்டும் வகையில் கொதிகலன்கள் மற்றும் உதிரி பாகங்கள் உற்பத்தி நிலை ஆய்வுகள் தொடர்பாகவும் கொதிகலன்களை ஆய்வு செய்வது தொடர்பாகவும் கொதிகலன்கள் தொடர்பான வரைபடங்களுக்கு ஒப்புதல் வழங்குதல் தொடர்பாகவும் பற்றவைப்பாளர்கள் தேர்வுகள் நடத்தி சான்றிதழ்கள் வழங்குதல் தொடர்பாகவும் தமிழ்நாடு கொதிகலன்கள் இயக்கப் பொறியாளர்கள் தேர்வு மற்றும் தமிழ்நாடு கொதிகலன்கள் பணியாளர்கள் தேர்வு ஆகியவைகள் தொடர்பாகவும் மற்றும் பல .நிலை ஆய்வுகளுக்காக ஆய்வுக் கட்டணங்கள் வசூலிக்கப்படுகின்றன. 2000-2001 நிதியாண்டில் இந்த வகையில் தமிழக அரசுக்கு தமிழ்நாடு கொதிகலன்கள் ஆய்வகம் மூலமாக 2,75,30,000/– ரூபாய் வருவாயாக கிடைத்துள்ளது. இதே கால கட்டத்தில் இவ்வாய்வகத்தின் இயக்கத்திற்காக சுமார் ரூ.71,15,500/- மட்டுமே செலவிடப்பட்டுள்ளது என்பதும் கவனத்தில் கொள்ளத் தக்கதாகும். இவ்வகையில் செலவினத்தைக் காட்டிலும் பன்மடங்கு வருவாய் அரசிற்கு கிடைக்கப்பெற்றுள்ளது.

தமிழகத்தில் தற்போதுள்ள தொழில் முன்னேற்றம் வரும் ஆண்டுகளில் மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதால் தமிழ்நாடு கொதிகலன்கள் ஆய்வகத்தின் வருவாய் மேலும் கணிசமான அளவிற்கு வெகுவாக உயரக்கூடிய சாத்தியக்கூறு உள்ளது. நடப்பு நிதியாண்டில் தமிழ்நாடு கொதிகலன் இயக்ககம் ரூ.350.00 இலட்சம் வருவாய் ஈட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த ஆண்டு இக்கொதிகல ஆய்வகத்திற்கென கணிப்பொறிகள் நிறுவவும் அவற்றையும் கொதிகல தயாரிப்பு நிறுவனங்களின் கட்டமைப்பின் உதவியுடன் முழு செலவினத்தையும் நிறுவனங்களே மேற்கொள்ளும் வகையில் அரசிற்கு பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டு அரசின் ஆணைகள் பெறப்பட்டுள்ளன.

இவ்வாய்வகத்தின் முக்கிய நோக்கமே இந்திய கொதிகலன்கள் சட்டம் 1923–ன் விதிமுறைகளைச் செயலாக்குவதைத் திறம்பட கண்காணித்து பொதுமக்களின் உயிர் மற்றும் உடைமைகளை பாதுகாப்புடன் பொதுச் சொத்துகளுக்கு சேதம் நிகழாவண்ணம் கொதிகலன்கள் பாதுகாப்புடன் இயங்குவதை உறுதி செய்வதுமே ஆகும். திறமையான மற்றும் சிறப்பான செயல்பாட்டினால் மேற்படி அடிப்படைக் கோட்பாட்டினை இக்கொதிகல ஆய்வகம் முழுமையாக நிறைவேற்றி வருகின்றது.

இந்த நிர்வாக அறிக்கைக்குட்பட்ட கால அளவில் தமிழகத்தில் பதிவு செய்யப்பட்டு இயக்கத்திலுள்ள எந்தவொரு கொதிகலனும் விபத்துக்குள்ளாகாமல் இயங்கி வருவது இவ்வாய்வகம் சிறப்பாக செயல்பட்டு வருவதற்குச் சான்றாகும்.

இந்திய கொதிகலன்கள் ஒழுங்குமுறை விதிகள் 1950–ன்கீழ் இந்தியாவிலேயே கொதிகலன்கள் மற்றும் உதிரி பாகங்கள் தயாரிப்பில் தொடர்ந்து தமிழகம் முதல்நிலை வகித்து வருவதால், தமிழ்நாடு கொதிகலன்கள் ஆய்வகம் தனது சிறப்பான செயல் திறனால் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சி மேலும் உத்வேகம் பெற உதவி, தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியில் ஒரு முக்கிய அங்கமாக திகழ்கின்றது.

## கட்டடங்கள் அமைப்பு

பொதுப் பணித் துறை கட்டடங்கள் அமைப்பு 01.04.1996 முதல் 16 வட்டங்கள் அடங்கிய தனிப் பிரிவாக 52 கோட்டங்களுடன், புது டில்லியில் ஒரு கோட்ட அலுவலகம் உட்பட மாற்றியமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.





தமிழ்நாடு பொதுப் பணித் துறை கட்டட அமைப்பு, அரசு துறைகளான வருவாய், சுகாதாரம் மற்றும் குடும்ப நலம், கல்வி உள் துறையை சார்ந்த நீதி, காவல், சிறை மற்றும் தீயணைப்பு ஆகியவற்றுக்காக கட்டடங்கள் கட்ட திட்டமிடுதல் மற்றும் வடிவமைத்தல், நிலம் கையகப்படுத்தல் மற்றும் கட்டுமானப் பணிகளை மேற்கொண்டு திறம்பட செயல்பட்டு வருகிறது.

மேலும், மத்திய மற்றும் மாநில அரசுத் துறையைச் சார்ந்த கழகங்களான ஈஎஸ்ஐ., பல்கலைக் கழகங்கள், மலைவாழ் மேம்பாட்டு திட்டம், ஆடு வளர்ப்பு மேம்பாட்டு திட்டம், டேனிடா திட்டம், ஐரோப்பிய பொருளாதார திட்டம், உலகத் வங்கி திட்டம், ஐயுடிபி மற்றும் ஐடிஎம்எஸ்டி பணிகள் ஆகியவை செலுத்து தொகை மற்றும் வைப்பு தொகை மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், இக்கட்டட அமைப்பு, மாவட்ட ஆட்சித் தலைவரால் வழங்கப்படும். நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் பரிந்துரை செய்யும் தொகுதி மேம்பாட்டுப் பணிகள் மற்றும் மாவட்ட சார்பு நிதியிலிருந்து அளிக்கப்படும் நிதி சார்பு பணிகளையும் மேற்கொள்கிறது. இதை தவிர, இத்துறை, அரசு நினைவு இல்லங்கள், ஸ்தூபிகள் கட்டும் பணிகளையும் நிறைவேற்றுகிறது.

இத்துறை அரசு கட்டடங்கள், நினைவுச் சின்னங்கள், அரசினர் தோட்டம், ஆளுநர் மாளிகை, அமைச்சர்கள் மற்றும் மிக முக்கியமானவர்கள் இல்ல கட்டட பராமரிப்புப் பணிகளையும் மேற்கொள்கிறது. தமிழகத்தில் உள்ள பொதுப் பணித் துறை ஆய்வு மாளிகைகள், சுற்றுலா மாளிகைகளின் பராமரிப்பு மற்றும் மெரினா கடற்கரை பராமரித்தல் போன்ற பணிகளையும் மேற்கொள்கிறது. மேலும், புயல், வெள்ளம் மற்றும் இயற்கை சீற்றத்தால் அரசு கட்டடங்களுக்கு ஏற்படும் பாதிப்புகளை செப்பனிடும் பணிகளையும் துரிதமாக மேற்கொண்டு செயல்படுத்துகிறது.

மேலும், கட்டட பிரிவு அலுவலர்கள், காவல் துறை புலனாய்வு குழுமம், நீதி மன்றங்கள் கோரும் வழக்கு சார்ந்த கட்டடங்கள் மற்றும் சொத்துக்களின் மதிப்பீடுகளை தயார் செய்து தருகிறார்கள். மேலும், இக்கட்டட அமைப்பு, திரை அரங்குகள், பொது கட்டடங்கள் ஆகியவற்றுக்கான உறுதிசான்றிதழ் வழங்குதல மற்றும் அரசு அலுவலகங்களுக்கான வாடகை நிர்ணய சான்றிதழ் ஆகியவை வழங்குவதிலும் ஈடுபடுகிறது. மேலும், இவ்வமைப்பு மிக மிக

முக்கியமானவர்கள் வருகையின்போது செய்யப்பட வேண்டிய சாலை ஓரம் தடுப்பு, கம்பி வேலி அமைப்புகள், மேடை அமைப்பு, ஒளி மற்றும் ஒலியமைப்புகளையும் செய்து வருகின்றது.

சென்னையில் தரமணியில் உள்ள கட்டட ஆராய்ச்சி மையம் கீழ்வரும் பணிகளை பொது மக்களுக்கு அளித்து வருகிறது:

1. பொதுப் பணித் துறை கட்டடமையம் மூலம் பொறியாளர் மற்றும் கட்டட தொழில் வினைஞர்கள் பயிற்சி வகுப்புகளை நடத்துகிறது.
2. பொதுப் பணித் துறை கட்டட மையம், கட்டட பணிகள் மற்றும் தொழில் நுட்ப ஆலோசனை வழங்கும் பணிகளையும் மேற்கொள்கிறது. கட்டட கட்டுமானப் பணிகளுக்கு தேவையான விலை குறைந்த தரம் வாய்ந்த கட்டுமான பொருள்கள், கருவிகள் தயார் செய்து சந்தைக்கு கொண்டு வருவது மற்றும் கட்டுமான பணிகளில் உபயோகிப்பது ஆகிய பணிகளிலும் ஈடுபடுகிறது.
3. கட்டுமானப் பொருள்கள் தரப் பரிசோதனை செய்தல், அடிப்படை ஆய்வுப் பணி மற்றும் பயனீட்டு ஆய்வுப் பணிகளையும் நடத்துகிறது.
4. பழுதடைந்த கட்டடங்களை கூர்ந்து ஆய்வு செய்தல், தேவையான புனரமைப்பு பணிகள் சிபாரிசு செய்தல் மற்றும் அவற்றை பணி நிலைமைக்கு கொண்டுவரத் தேவையான யுக்திகளை கையாளுதல்.

**தலைமைக் கட்டடக் கலைஞர் பிரிவின் பணிகள்**

தலைமைப் பொறியாளர் மட்டத்தில், தலைமை கட்டடக் கலைஞரின் தலைமையில் கட்டட வரைகலைப் பிரிவு தனியாக இயங்கி கொண்டிருக்கிறது. இப்பிரிவு, பொதுப் பணித் துறையில் கட்டப்பட்டுவரும் அனைத்து அரசு கட்டடங்களுக்குத் தேவையான வரைபடங்களை தயாரிக்கிறது. மேலும், இப்பிரிவு புதிய கட்டடங்களுக்கான, முகப்புத் தோற்றம் மற்றும் வெட்டுத் தோற்றங்களை கொண்ட வரைபடங்களையும் தயாரிக்கிறது. இக்கட்டடங்களுக்குத் தேவையான வண்ணப்பூச்சு பற்றிய விவரங்களையும் அறிவிக்கின்றது.





**நடைபெற்றுவரும் மற்றும் தொடங்கப்படவுள்ள பணிகளின் விவரம்**

**சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை**

| முன்னேற்றத்தில் உள்ள பணிகள் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | |
|---|---|---|
| 1. தூத்துக்குடி மருத்துவக் கல்லூரி புதிய கட்டடம் கட்டுதல் | 1540.00 | அறிவியல் கூடப் பிரிவு தவிர இதர பணிகள் 31.12.2001ல் முடிக்கப்படும். அறிவியல் கூடம் 31.7.2002க்குள் முடிக்கப்படும். |
| புதிய திட்டங்கள் | | |
| 1. சென்னை அரசினர் பொது மருத்துமனையில் புதிய கட்டடங்கள் டவர்-12 மற்றும் அதிநவீன சமையலறை பிரிவு கட்டுதல் | 10,447.00 | 160 வருடம் முடிவுற்ற பழைய கட்டடத்தை இடித்து விட்டு, ஹட்கோ மூலம் கடன் பெற்று. நவீன, தொழில்நுட்ப, தனித் தன்மையுடன் கூடிய புதிய அடுக்கு மாடிக் கட்டடம் கட்டுதல் |
| 2. சென்னை ஸ்டான்லி மருத்துவ மனையில் புதிய கட்டடம் கட்டுதல் | 1150.00 | ஒப்பந்தப்புள்ளிகள், ஒப்பந்தப் புள்ளி ஏற்பளிப்பு குழுமம் ஒப்புதலுக்காக வைக்கப் பட்டுள்ளன. |
| (அ) கை உருவக சிகிச்சை பிரிவு | | திட்டப்பணிகள் ஹட்கோ மூலம் கடன் பெற்று ரூ.950 இலட்சத்திற்கும், மீதமுள்ள ரூ.200.00 இலட்சம் பாராளு மன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் நிதியிலிருந்து பெற்றும் நிறைவேற்றப்பட உள்ளது. |
| (ஆ) புற நோயாளிகள் பிரிவு | | |

| | | |
|---|---|---|
| 3 கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் மருத்துவக் கல்லூரி கட்டுதல் | 3113.00 | அரசின் பரிசீலனையில் உள்ளது. |
| 4· நாகர்கோவில் ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனையில் சில மாற்றங்கள் செய்வதுடன், புதுப்பிக்கும் பணி | 130.00 | 2001-2002ம் ஆண்டில் மாணவர்களை சேர்ப்பதற்காக கட்டடம் புதுப்பிக்கும் பணி எடுக்கப்பட்டு முன்னேற்றத்தில் உள்ளது. |
| 5. வேலூரில் மருத்துவக் கல்லூரி கட்டுதல் | 2347.00 | அரசின் பரிசீலனையில் உள்ளது. |
| 6. வேலூரில் உள்ள அரசு மருத்துவ மனை கட்டடத்தில் மாறுதல்கள் செய்யும் பணி | 99.80 | 2001-2002ம் ஆண்டில் மாணவர்களின் சேர்க்கைக்காக மாறுதல் பணிகள் மேற் கொள்ளப்பட்டு, பணி முன்னேற்றத்தில் உள்ளது. |

உள் துறை

நீதித்துறை

முன்னேற்றத்தில் உள்ள பணிகள்

| | | |
|---|---|---|
| 1· விருதுநகரில் ஒருங்கிணைந்த நீதி மன்ற கட்டடம் கட்டுதல் | 310.00 | கட்டுமானப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன |
| 2.சென்னை உயர்நீதி மன்ற வளாகத்தில் சட்ட வல்லுநர் அறை கட்டுதல் | 1145.00 | கட்டுமானப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. |
| 3. சென்னையில் நீதிபதிகள் மாளிகை 30 எண்கள் கட்டுதல் | | ஹட்கோ கடன் உதவி பெற்று பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. |



| | | |
|---|---|---|
| 4. மதுரையில் உயர்நீதி மன்ற அமர்வு நீதிமன்றம் அமைக்கும் பணி | 5645.00 | பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன |

காவல்

முன்னேற்றத்தில் உள்ள பணிகள்

| | | |
|---|---|---|
| 1. சென்னை, எழும்பூரில், நவீன கட்டுப்பாட்டு அறை கட்டும் பணி | 80.00 | பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. |
| 2. 10 காவல் நிலையக் கட்டடங்கள் கட்டுதல் | 200.00 | அனைத்துப் பணிகளும் முன்னேற்றத்தில் உள்ளன. |
| 3. 10 காவல் நிலையக் கட்டடங்கள் கட்டுதல் | 203.20 | அனைத்துப் பணிகளும் முன்னேற்றத்தில் உள்ளன. |

சிறை

முன்னேற்றத்தில் உள்ள பணிகள்

| | | |
|---|---|---|
| 1. புழல் மத்திய சிறைச் சாலையில் வலுவூட்டிய கான்கிரீட் வெளிப்புற சுற்றுச் சுவர் கட்டுதல் | 390.00 | 60 விழுக்காடு பணிகள் முடிவு பெற்றுள்ளன. இதர பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. |

தடய அறிவியல் துறை

புதிய திட்டங்கள்

| | | |
|---|---|---|
| 1. சென்னை தடய ஆய்வுக்கூடக் கட்டடம் புதுப்பித்தல் | 60.00 | |
| 2. சென்னை நூலகக் கட்டடம் 2ம் பகுதி கட்டடம் கட்டுதல் | 111.00 | |
| 3. சென்னையில் தடய அறிவியல் துறைக்காக புதிய கட்டடம் கட்டுதல் | 600.00 | அரசின் பரிசீலனையில் உள்ளது |

பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை
முன்னேற்றத்தில் உள்ள பணிகள்

| | | |
|---|---|---|
| 1. பிற்படுத்தப்பட்ட மிகவும் பிற்படுத்தப் பட்ட மற்றும் மலைவாழ் இன மாணவர்களுக்கு புதியதாக தங்கும் விடுதி கட்டுதல் | 1730.26 | அரசு, 68 விடுதிகள் கட்டுவதற்கு ஒப்புதல் அளித்துள்ளது. அதில் 47 விடுதிகள் கட்டி முடிக்கப்பட்டு, 21 விடுதிகள் கட்டும் பணி முன்னேற்றத்தில் உள்ளது. |

சட்டமன்ற உறுப்பினர் அலுவலகக் கட்டடம்
முன்னேற்றத்தில் உள்ள பணிகள்

| | | |
|---|---|---|
| 1. 234 சட்டமன்ற உறுப்பினர் தொகுதிகளில் அலுவலகக் கட்டடம் கட்டுதல் | 649.00 | 132 தொகுதிகளில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 43 தொகுதிகளில் பணி முன்னேற்றத்தில் உள்ளது. 59 தொகுதிகளில் பணிகள் எடுக்கப்பட உள்ளன. |

தமிழ் வளர்ச்சித் துறை
முன்னேற்றத்தில் உள்ள பணிகள்

| | | |
|---|---|---|
| 1. சென்னை, எழும்பூரில் ஆணையர், தமிழ்வளர்ச்சித் துறை அலுவலக வளாகம் கட்டுதல் | 200.00 | பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. |

செய்தி தொடர்பு மற்றும் சுற்றுலாத்துறை நினைவகங்கள்
முன்னேற்றத்தில் உள்ள பணிகள்

| | | |
|---|---|---|
| 1. சென்னை கன்னியாகுமரி காயிதே மில்லத் மணிமண்டபம் | 50.00 | பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. |
| 2. தூத்துக்குடி மாவட்டம் காட்டராங்குளம் வீரன் அழகு முத்துக்கோன் மணி மண்டபம் | 35.00 | பணிகள் எடுக்கப்பட உள்ளன. |





பொதுத் துறை
முன்னேற்றத்தில் உள்ள பணிகள்

| | | |
|---|---|---|
| 1. புது டில்லியில் கூடுதல் விருந்தினர் இல்லம் கட்டுதல் | 2207.00 | ஹட்கோவினால் பண உதவி செய்யப்பட்டுள்ளது. பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. |
| புதிய திட்டங்கள்<br>1. சென்னை, ராஜ் பவனில் தர்பார் மண்டபத்தை கூட்ட மண்டபமாக மாற்றுதல் | 80.00 | ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது |

நபார்டு பண உதவித் திட்டங்கள்
கல்வித் துறை
முன்னேற்றத்தில் உள்ள பணிகள்

| | | |
|---|---|---|
| 1. அரசுப் பள்ளிகளில் கூடுதல் வகுப்பு அறைகள், ஆய்வுக் கூடங்கள், கழிவறைகள் கட்டுதல் | 2976.00 | நபார்டு நிதி உதவிப் பெற்று பணிகள் எடுக்கப்படவுள்ளன. |

பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துகள் இயக்ககம்
புதிய திட்டங்கள்

| | | |
|---|---|---|
| 1. 500 எண்கள் சுகாதார துணை மையங்கள் கட்டுதல் | 3000.00 | நபார்டு நிதி உதவிக்காக பணி மதிப்பீடு சமர்ப்பிக்கப்பட்டு, ஆணை எதிர்பார்க்கப்படுகிறது. |

வைப்பு நிதிப் பணிகள்
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறை
அண்ணா நிர்வாக பயிற்சி மையம், சென்னை
முன்னேற்றத்தில் உள்ள பணிகள்

| | | |
|---|---|---|
| 1. சென்னை அண்ணா மேலாண்மை பயிற்சி மையத்திற்காக பெருந்திட்ட வளாகம் கட்டுதல் | 1000.00 | முதன்மை ஒப்பந்தப் புள்ளி பெறப்பட்டது. |

[2001 செப்டம்பர் 8

| | | |
|---|---|---|
| மாவட்ட ஊரக வளர்ச்சித் துறை புதிய திட்டங்கள் | | |
| 1. சென்னை, வள்ளுவர் கோட்டம் அருகே பூமாலை விற்பனை வளாகம் கட்டுதல் | 1250.00 | முதன்மை ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. |
| மாவட்ட ஆரம்ப கல்வித் திட்டம் முன்னேற்றத்தில் உள்ள பணிகள் | | |
| 1. உலக வங்கி மூலம் நிதி உதவி பெற்று, மாவட்ட தொடக்க கல்வி திட்டத்தின்கீழ் ஏழு மாவட்டங்களில் இரண்டு வகுப்பறைகள் (357), மூன்று வகுப்பறைகள் (48) தொகுதி முன்னேற்ற மையம் (1) ஆகியவை கட்டுதல் | 2390.00 | பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. மேலும் அனைத்து பணிகளும் 30.09.2001க்குள் முடிக்க திட்டமிடப் பட்டுள்ளன. |
| உள்ளூர் நூலக அங்கீகாரம் முன்னேற்றத்தில் உள்ள பணிகள் | | |
| 1. தமிழ்நாடு முழுவதும் (80) 'அ' மாதிரி நூலகம் அமைக்க கட்டடம் கட்டுதல் | 950.00 | பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. |
| வேளாண் விற்பனைத் துறை | | |
| 1. சென்னை கிண்டியில் தமிழ் நாடு மாநில வேளாண் விற்பனை மையம் மற்றும் வேளாண் விற்பனை ஆணையர் அலுவலகக் கட்டங்கள் கட்டுதல் (1 + 3 தளங்கள்) (அடித்தளம், தரைத்தளம் முதல் தளம் மற்றும் இரண்டாம் தளம்) | 193.50 | பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. |



2001 செப்டம்பர் 8]

| | | |
|---|---|---|
| 2. கோவை மாவட்டம் திருப்பூர் ஒழுங்கு முறை விற்பனை வளாகத்தில் விற்பனை மையம் கட்டுதல் | 230.00 | பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன |
| 3. மதுரை,மாட்டுத்தாவணியில் நெல் விற்பனை மையம் கட்டுதல் | 1260.00 | பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. |
| 4. திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன் சத்திரத்தில் ஒழுங்கு முறை விற்பனை வளாகத்தில் குளிர்பதனபிரிவு அமைக்கும் பணி | 353.00 | ஒப்பந்தப்பள்ளி பரிசீலனையில் உள்ளது |
| 5. திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன் சத்திரத்தில் ஒழுங்குமுறை விற்பனை வளாகத்தில் பெரும் உழவர் சந்தை கட்டும் பணி | 258.00 | ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி ஏற்பளிப்பு குழுமம் முன்பு ஒப்புதலுக்காக வைக்கப்பட்டுள்ளது |
| 6. சேலம் மாவட்டம் உத்தம சோழபுரத்தில் தங்கும் விடுதியுடன் கூடிய பயிற்சி மையம் கட்டுதல் | 100.00 | பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. |
| 7. சேலம் மாவட்டம், உத்தர சோழ புரத்தில் விற்பனை வளாகம் மற்றும் விற்பனை குழுமம் அலுவலகம் கட்டுதல் | 214.50 | ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி ஏற்பளிப்பு குழுமம் முன்பு ஒப்புதலுக்காக வைக்கப்பட்டுள்ளது |

[2001 செப்டம்பர் 8

**உலக வங்கி நிதியுதவியின்கீழ் நீர்வள ஆதார அமைப்புத் திட்டம் மற்றும் நீரியல் கட்டடப் பணிகள்**

நீர்வள ஆதார அமைப்பு கட்டடப் பணிகளுக்கு திட்ட மதிப்பீடு கருத்துருவின்படி ரூ.4373.50 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. அவற்றில் ரூ.4256.50 இலட்சம் மதிப்புள்ள கட்டடப் பணிகள் கட்டி முடிக்கப்பட்டன. மேலும் ரூ.998.30 இலட்சம் மதிப்புள்ள பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. ரூ.644.80 இலட்சம் மதிப்புள்ள பணிகளுக்கு ஒப்பந்தப் புள்ளிகள் பரிசீலனையில் உள்ளன. ரூ.78.00 இலட்சம் மதிப்புள்ள பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படவுள்ளன. மீதமுள்ள ரூ.289.00 இலட்சம் மதிப்புள்ள பணிகளுக்கு அந்த அந்த மண்டலத்தைச் சார்ந்த தலைமைப் பொறியாளர்களால் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

| முன்னேற்றத்தில் உள்ள பணிகள் | ரூ. இலட்சத்தில் |
|---|---|
| 1. வேலூர் மாவட்டம் காட்பாடி பொதுப் பணித்துறை வளாகம் கட்டுதல் | 217.80 |

**புதிய கருத்துரு**

| | |
|---|---|
| 1. தலைமைப் பொறியாளர் மற்றும் கண்காணிப்புப் பொறியாளர்களுக்கு குடியிருப்புக் கட்டுதல் - இரண்டு பகுதிகள் | 140.00 |
| 2. சென்னை சிவானந்த சாலையில் திட்ட இல்லம் கட்டுதல் | 200.00 |

**நீரியியல் கட்டடங்கள்**

தமிழ்நாடு நீரியியல் திட்ட கட்டடங்களுக்காக 1999–2000 ம் ஆண்டில் ரூ.728.20 இலட்சம் ஒதுக்கப்பட்டிருந்தது. இவ்வொதுக்கீட்டில் நான்கு ஆய்வகம், நான்கு கோட்ட அலுவலகம், 10 துணை கோட்ட அலுவலகம் மற்றும் 58 பிரிவு அலுவலக கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இரண்டு துணை கோட்ட அலுவலகம் மற்றும் இரண்டு பிரிவு அலுவலக கட்டடங்கள் முடியும் நிலையில் உள்ளன.

ரூ.210.00 இலட்சம் மதிப்பில் நிலத்தடி நீர் கோட்ட அலுவலகம் கடலூர், வேலூர், திருநெல்வேலி, சேலம் மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் கட்டுவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.



2001 செப்டம்பர் 8]

| முன்னேற்றத்தில் உள்ள பணிகள் | ரூ. இலட்சத்தில் |
|---|---|
| 1. திருச்சி நிலத்தடி நீர் கோட்ட அலுவலகம் கட்டுதல் | 55.00 |
| 2. செயற் பொறியாளர்கள் குடியிருப்பு 13 எண்கள் மற்றும் உதவி செயற் பொறியாளர்கள் குடியிருப்பு 30 எண்கள் கட்டுதல் | 374.00 |

**மின்னியல் பணிகள்**

மாசு கட்டுப்பாடு செய்யும் பொருட்டு பத்து அரசு மருத்துவமனைகளில் இன்சினிரேட்டர்ஸ் நிறுவப்பட்டுள்ளன. மேற்கொண்டு இவ்வருடம் எட்டு மருத்துவ மனைகளில் நிறுவ வேண்டுமென கருத்துரு உள்ளது.

**2001–2002 ஆம் ஆண்டில் எடுத்துக் கொள்ளப்படும் புதிய திட்டங்கள் (பகுதி II திட்டங்கள்)**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | கன்னியாகுமரி மாவட்டத்தில் தோவாளையில் ஓர் ஆய்வு மாளிகை கட்டுதல் | 18.50 |
| 2. | காஞ்சிபுரம் மாவட்டம் பன்னிப்பட்டு என்ற இடத்தில் உள்ள ஆய்வு மாளிகையை சுற்றிலும் சுற்றுப்புறச் சுவர் கட்டுதல் | 7.23 |
| 3. | தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளில் அமைந்துள்ள ஆய்வு மாளிகைகள் மற்றும் சுற்றுலா மாளிகைகளின் வளாகங்களில் ஓட்டுநர்கள் தங்குவதற்கு 10 ஆய்வறைகள் கட்டுதல் | 12.35 |
| 4. | தர்மபுரியில் உள்ள சுற்றுலா மாளிகையில் முதல் மாடி கட்டுதல் | 29.79 |
| | மொத்தம் | 67.87 |

[2001 செப்டம்பர் 8

*2001–2002 ஆம் நிதி ஆண்டில் திட்டம் சாரா பணிகளின்கீழ் கீழ்க்கண்ட கட்டடப் பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட உள்ளது.*

| | | |
|---|---|---|
| 1. | சென்னை தலைமைச் செயலகத்திற்காக கூடுதல் கட்டடம் கட்டும் பணி | 1000.00 |
| 2. | உயர் நீதிமன்ற வளாகத்தில் நூலகம், தபால் அலுவலகம், கணினி மையம் ஆகியவற்றுக்காக கட்டடம் கட்டும் பணி | 100.00 |
| 3. | அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் 6 உட்பட தமிழ்நாட்டில் 26 இடங்களில் காவல் நிலையங்களுக்கு கட்டடம் கட்டும் பணி | 364.00 |



2001 செப்டம்பர் 8]

## இணைப்பு-II

(360 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

**கோரிக்கை எண் 38 – சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து**

**கோரிக்கை எண் 56 – சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு**

### கொள்கை விளக்கக் குறிப்பு, 2001-2002

### I தொடக்க உரை

நிலையான பொருளாதார வளர்ச்சி, போதிய கட்டமைப்பு வசதியினையே சார்ந்திருக்கிறது. சிக்கனமான, பாதுகாப்புள்ள மிகத் துரிதமான பயணத்திற்கும், சரக்குப் போக்குவரத்திற்கும் சாலை வசதி இன்றியமையாததாகும். தமிழகத்தில் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் சீரிய தலைமையிலான அரசு உள்கட்டமைப்பு வளர்ச்சிக்குத் தேவையான முன்னுரிமை அளித்து வருகிறது. குறிப்பாக பொருளாதாரப் பயன்களை அதிகரிக்கச் செய்யும் வேளாண்மைத் தொழில், கனிம வளம், மின்சாரம், காடுகள் மற்றும் பால்வளம் போன்ற மற்ற துறைகளின் வளர்ச்சிக்கு சாலைக் கட்டமைப்பு முக்கிய பங்கு வகிக்கிறது. இத்துறைகள் சாலைப் பின்னலின் பராமரிப்பு வளர்ச்சி மற்றும் சிறந்த போக்குவரத்து முறையினை சார்ந்துள்ளன. இவற்றைக் கண்ணுறும்போது தமிழகம் விரிவான சாலைக் கட்டமைப்பு வளர்ச்சிக்குக் கணிசமான முதலீடு செய்துள்ளதோடு, தேசிய நெடுஞ்சாலைகள், மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட பெரிய சாலைகள், மாவட்ட இதர சாலைகள் மற்றும் கரும்புச் சாலைகள் என்ற வகையில் 60628 கி.மீ. நீளச் சாலைகளை, தனது பங்காக அளித்து சாதனை புரிந்துள்ளது.

மேலும், ஏற்கெனவே அமைந்துள்ள சாலைகளை மேம்படுத்தி பராமரித்து பாதுகாப்பதோடு, உள்ளடங்கிய கிராமங்களுக்குச் சாலை வசதி செய்து தருவதிலும் நெடுஞ்சாலைத் துறை முனைந்துள்ளது. பெருகி

[2001 செப்டம்பர் 8

வரும் போக்குவரத்தை ஈடு செய்வதற்கு சாலைகளை அகலப்படுத்தி, உறுதிப்படுத்துவதும், காலமுறை பராமரிப்பு செய்வதும் அவசியமாகும். சாலை வசதிகள் முக்கிய அடித்தளமாக விளங்குவதால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சாலைகள் மேம்பாடு குறித்து விரிவான கொள்கைத் திட்டம் ஒன்றினை வகுத்துள்ளார்கள். இக்கொள்கை, நெடுஞ்சாலைகளின் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு குறித்த பொறியியல் மற்றும் பொருளாதாரக் கூறுகள் மட்டுமல்லாது, சுற்றுச்சூழல் மற்றும் சமூக நலன்களை உள்ளடக்கியதாகவும் இருக்கும்.

1) சமூக–பொருளாதாரப் பயன்களை அதிகரிக்கும் வகையில் சாலை மேம்பாடு.

2) அரசு மற்றும் தனியார் பங்கேற்புடன் நிதி ஆதாரங்களுக்கு வலுவூட்டுதல்.

3) நவீன தொழில் நுட்பங்கள் மூலம் சாலைகளின் கட்டுமானம், வடிவமைப்பு, திட்டமிடல் மற்றும் செயலாகத்தின் தரத்தினை உயர்த்துதல்.

4) நெடுஞ்சாலைச் சொத்துக்களையும் ஆதாரங்களையும் சிறந்த முறையில் நிர்வகித்தல்.

புதிய வழிமுறைகள், மேலான நடைமுறை வழக்கம், தகுந்த தொழில் நுட்பம் மற்றும் உள்நாட்டு, பன்னாட்டு வள ஆதாரங்களை பொறுப்புடன் மேலாண்மை செய்தல் மூலம் தமிழக மக்களுக்கு, சுற்றுச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படாவண்ணம் உயர்தரமான, நம்பகமான, பாதுகாப்பான சாலைப் பின்னலை நியாயமான செலவில் ஏற்படுத்தி மாநிலத்தின் பொருளாதார, சமூக நல வளர்ச்சிக்கு வழிவகுப்பது நெடுஞ்சாலைத் துறையின் பெரும்பங்காகும்.

துறைமுகத் துறையைப் பொறுத்தவரையில் கடல்வழிப் போக்குவரத்து வளர்ச்சி பெருமளவு முக்கியத்துவம் பெற்று வருகிறது. தமிழகத்தில் சிறு துறைமுகங்களை மேம்படுத்த தமிழ்நாடு கடல்சார் வாரியம் அமைக்கப்பட்டது. ஏற்கெனவே உள்ள இரண்டு பெரிய துறைமுகங்களான சென்னை மற்றும் தூத்துக்குடியுடன் எண்ணூர் துறைமுகமும் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களால் நாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. துறைமுக வளர்ச்சியிலும் தனியார் துறையினர் ஈடுபாட்டினை ஈர்க்கும்வண்ணம் துறைமுகக் கொள்கை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. அதன்படி தனியார் தொழில் முனைவோரின் உதவியுடன் சில துறைமுகங்கள் மேம்படுத்தப்படுகின்றன. இவை தவிர



2001 செப்டம்பர் 8]

சில துறைமுகங்கள் தனியார் பயன்படுத்துத் துறைமுகங்களாக(CAPTIVE PORTS) அறிவிக்கப்பட்டுள்ளன. தாராளமயமாக்கலினால் இத்துறை பெரும் வளர்ச்சியடையும்.

## II சாலைகளும் பாலங்களும் – கொள்கை வரைமுறைகள்

நெடுஞ்சாலைத் துறை தனது கட்டுப்பாட்டில் உள்ள சாலைக் கட்டமைப்பில் சாலைகள் அமைத்தல், மேம்படுத்துதல், புதுப்பித்தல், பராமரித்தல் போன்ற பணிகளை செய்து வருகிறது. இந்த சாலைக் கட்டமைப்பில், பாலங்கள், தரைப் பாலங்கள், சிறு பாலங்கள், இருப்புப் பாதை மேம்பாலங்கள் மற்றும் இருப்புப் பாதை கீழ்ப் பாலங்கள் ஆகியவையும் அடங்கும்.

சாலைக் கட்டமைப்பின் வகைப்பாடுகள் பின்வருமாறு பிரிக்கப்பட்டுள்ளன:

அ. தேசிய நெடுஞ்சாலைகள்
ஆ. மாநில நெடுஞ்சாலைகள்
இ. மாவட்ட பெரிய சாலைகள்
ஈ. மாவட்ட இதர சாலைகள்
உ. பாலங்கள், தரைப் பாலங்கள், சிறு பாலங்கள், இருப்புப்பாதை மேம்பாலங்கள் மற்றும் இருப்புப் பாதை கீழ்ப் பாலங்கள்

மேற்கூறிய ஒவ்வொரு வகைப்பாட்டுக்கும் கடைபிடிக்கப்படும் நெறிமுறைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

### அ) தேசிய நெடுஞ்சாலைகள்

இச்சாலைகள் பெரும் துறைமுகங்கள், மாநிலத் தலைநகரங்கள், பெரிய தொழிற்சாலைகள் மற்றும் சுற்றுலா மையங்கள் ஆகியவற்றை இணைக்கும் வண்ணம் நாட்டின் நீளவாக்கிலும் அகலவாக்கிலும் சென்றிடும் மிக முக்கியமான சாலைகளாகும்.

நாட்டின் தொழில் வளர்ச்சி விரைவுபடுத்தப்பட்டு வருவதால், தேசிய நெடுஞ்சாலைகளில் போக்குவரத்து பெருகி வருவதைக் கருத்தில் கொண்டு மைய அரசு இப்போக்குவரத்தின் பெருக்கத்திற்கு சமமாக தேசிய நெடுஞ்சாலை நேர்ப்பாடுகளில் தடைகளற்ற துரிதமான போக்குவரத்தை உறுதி செய்வதற்காக நவீன தொழில் நுட்பங்களையும் மேலாண் தொழில் நுணுக்கங்களையும் கடைபிடித்து தேவைப்படும் இடங்களில் இடவசதிகேற்றபடி ஓடுதளங்களை அகலப்படுத்துதல், போக்குவரத்துத்

தரங்களை பிரித்தனுப்புதல், புறவழிச்சாலைகள் அமைத்தல், பாலங்கள் கட்டுதல், இருப்புப் பாதை கடவுகளில் மேம்பாலம் அல்லது கீழப்பாலம் அமைத்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாடு அரசும் இப்பணிகளின் செயலாக்கத்திற்கு உதவிடும் வகையில் தேவையான அடிப்படை விவரங்களை மைய அரசுக்கு தருவதோடு, தேசிய நெடுஞ்சாலை நேர்ப்பாடுகளில் இடவசதிக்கேற்றபடி நான்கு வழிப்பாதையாக, ஆறு வழிப்பாதையாக சாலையை அகலப்படுத்திட, சிமெண்ட் கான்கிரீட் ஓடுதளம் போட ஆலோசனைகளையும் வழங்கி வருகிறது. தேசிய நெடுஞ்சாலைகளின் பெருக்கத்திற்கு தமிழ்நாடு அரசு மிகுந்த ஆர்வம் காட்டி தூண்டுகோலாக இருந்து வருகிறது. தற்போது தேசிய நெடுஞ்சாலைகளின் நீளம் 3865 கி.மீ. அளவில் உள்ளது.

## ஆ) மாநில நெடுஞ்சாலைகள்

மாவட்டத் தலைமையிடங்கள், மாநிலத்தின் முக்கிய நகரங்கள், மாநிலத்திலுள்ள தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் அண்டை மாநிலங்களில் உள் நெடுஞ்சாலைகள் ஆகியவற்றை இணைக்கும் முக்கிய நெடுஞ்சாலைகள் இதில் அடங்கும்.

மாநில நெடுஞ்சாலைகளின் மொத்த நீளமான 7136 கி.மீ.-ல் 3916 கி.மீ. நீளச் சாலைகள் இருவழித் தட அகலமாகவும், 878 கி.மீ. நீளச சாலைகள் இடைவழித் தட அகலமாகவும் 134 கி.மீ. பல வழித் தட அகலமாகவும் உள்ளன. ஒருவழித் தடமாக மீதமுள்ள 2178 கி.மீ. நீளச் சாலைப் பகுதிகளை இருவழித தட அகலமாகவோ அல்லது பலவழித தட அகலமாகவோ அகலப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## இ) மாவட்ட பெரிய சாலைகள்

மாவட்டத்தின் உற்பத்தி மையங்கள் மற்றும் சந்தை மையங்கள் ஆகியவற்றிற்குச் செல்லும் சாலைகள், இந்த மையங்களை ஒன்றோடொன்று மற்றும் முக்கியமான நெடுஞ்சாலைகளோடு இணைக்கும் சாலைகள் ஆகியவை இதில் அடங்கும். மாவட்ட பெரிய சாலைகளின் மொத்த நீளமான 7408 கி.மீ. சாலைகளில் 4946 கி.மீ. ஒருவழித் தட அகலமாகவும், 725 கி.மீ. இடைவழித் தட அகலமாகவும், 1708 கி.மீ. இருவழித் தட அகலமாகவும், 29 கி.மீ. பலவழித் தட அகலமாகவும் உள்ளன. மாவட்ட பெரிய சாலைகள் மாவட்ட அளவில் வள ஆதாரங்களை மேம்படுத்த பெரிதும் உதவுவதால் தமிழ்நாடு அரசு ஒருவழித் தட அகலமாக உள்ள மாவட்ட பெரிய சாலைகளை இடவசதிக்கேற்றபடியும் நிதி நிலைமைகேற்றபடியும் படிப்படியாக



இருவழித் தட அகலமான சாலைகளாக விரிவுபடுத்த நடவடிக்கை எடுத்து வருகிறது.

## ஈ) மாவட்ட இதர சாலைகள்

கிராமப்புற உற்பத்தி மையங்களையும் சந்தை மையங்களையும் இணைக்கும் சாலைகள், வட்டத் தலைமையிடங்களை இணைக்கும் சாலைகள், ஊராட்சி ஒன்றியங்களின் தலைமையிடங்கள் மற்றும் இதர பிரதான சாலைகளை இணைக்கும் சாலைகள் ஆகியன இதில் அடங்கும். இன்றைய நிலைமையில் மாவட்ட இதர சாலைகளின் மொத்த நீளமான 40853 கி.மீ. மிகக் குறைந்த அளவேயான 671 கி.மீ. சாலைகள் மட்டும் இருவழித் தட அகலமாகவும் 846 கி.மீ. இடைவழித் தட அகலமாகவும் 38 கி.மீ. சாலைகள் பலவழித் தட அகலமாகவும் உள்ளன. கிராமப்புறப் பகுதிகளில் இச்சாலைகள் வளமான பொருளாதார மேம்பாட்டினை தூண்டுவதாக அமைந்திருப்பதால் தமிழ்நாடு அரசு இச்சாலைகளை அகலப்படுத்திடவும், மேம்படுத்திடவும் மிகுந்த ஆர்வம் காட்டி வருகிறது. இதற்காக நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் வசதி பெறுவதோடு அரசின் பங்காக குறிப்பிட்ட விழுக்காடு நிதி ஒதுக்கீடும் செய்து வருகிறது.

## உ) பாலங்கள், தரைப் பாலங்கள், சிறு பாலங்கள், இருப்புப் பாதை மேம்பாலங்கள் மற்றும் இருப்புப் பாதை கீழ்ப் பாலங்கள்

சாலைகளின் நேர்ப்பாடுகளில் நீராதாரங்களோ புகைவண்டிப் பாதைகளோ குறுக்கிடுவது இயற்கையானதாகும். எனவே இந்த இடர்பாடுகளைத் தவிர்ப்பதற்காக நெடுஞ்சாலைத் துறை சாலையின் நேர்ப்பாட்டில் பாலங்கள், தரைப் பாலங்கள், சிறு பாலங்கள், இருப்புப் பாதை மேம்பாலங்கள் மற்றும் இருப்புப் பாதை கீழ்ப் பாலங்கள் ஆகியவற்றை இடவசதிக்கேற்றபடி கட்டும் பணியையும் செய்து வருகிறது. அரசு சாலைகளில் பல்லாண்டுகட்கு முன்னர் கட்டப்பட்டுள்ள பல பாலங்கள் மிகவும் பழுதடைந்து திரும்பக் கட்டப்பட வேண்டிய நிலையில் உள்ளதென ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. இப்பாலங்களை நிதி நிலைமைக்கேற்றபடி திரும்பக் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இவை தவிர மக்கள் பிரதிநிதிகள் வேண்டுகோளின்படியும் ஏராளமான பாலங்கள் கட்டப்படவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்பு, காவிரி வடிநில மாவட்டங்களில் கட்டப்பட்ட பல பாலங்கள் தற்போதுள்ள போக்குவரத்தைச் சமாளிக்கப் போதுமானதாக இல்லை. பல்முனை அச்சுக்களை கொண்ட கனரக வாகனங்கள் அதிக அளவில் செல்ல வேண்டியுள்ளதால், பாலங்களை

அதற்கேற்றவாறு அகலப்படுத்தி, பலப்படுத்த வேண்டியுள்ளது. பெரும்பாலான பாலங்கள் ஒரு வழிப்பாதையைக் கொண்டதாகவும், காலாவதியான வடிவமைப்பைக் கொண்டதாகவும் உள்ளன. இக்காரணங்களினால் சமீப காலங்களில் சில பாலங்கள் ஒன்றன் பின் ஒன்றாக விழுந்து வருகின்றன. ஆதலின் பழமையான பாலங்களைப் படிப்படியாக திரும்பக் கட்ட வேண்டியது மிகவும் அவசியம். விரிவான தல ஆய்விற்குப் பின் 204 பாலங்களை ரூ.200 கோடி செலவில் தனியார் பங்குடனும், நபார்டு வங்கிக் கடனுதவியுடனும் திரும்பக் கட்ட இவ்வரசு தீர்மானித்து, முதல் கட்டமாக மாவட்ட இதர சாலைகளில் உள்ள 94 பாலங்களை ரூ.50 கோடி. மதிப்பீட்டில் திரும்பக் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அரசு சாலைகளில், ஒரு இலட்சம் மற்றும் அதற்கும் மேற்பட்ட இரயில் ஊர்தி அலகுகள் கொண்ட இருப்புப் பாதைக் கடவுகட்குப் பதிலாக இருப்புப் பாதை மேம்பாலங்கள்/கீழ்ப்பாலங்கள் கட்டும் பணிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. நிதிவளம் மற்றும் பணிகளின் முக்கியத்துவம் ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு, முன்னுரிமை அடிப்படையில் இருப்புப் பாதைப் பணிகள் திட்டத்தில் இப்பணிகள் சேர்க்கப்படுகின்றன. அணுகு சாலைகள் உட்பட இருப்புப் பாதை மேம்பாலங்கள்/கீழ்ப்பாலங்கள் கட்டுவதற்காகும் செலவை மாநில அரசும் மைய அரசின் இருப்புப் பாதைகள் அமைச்சகமும் சமமாக 50:50 என்ற விகிதத்தில் ஏற்கின்றன. மைய அரசின் இருப்புப் பாதை பாதுகாப்புப் பணிகள் நிதியிலிருந்து. பணியாளர் நியமிக்கப்படாத இருப்புப் பாதைக் கடவுகளை பராமரித்தல், தற்போது உள்ள இருப்புப் பாதைக் கடவுகளுக்குப் பதிலாக மேம்பாலங்கள்/கீழ்ப்பாலங்கள் கட்டுதல் ஆகிய பணிகளுக்காக மாநில அரசுக்காகும் செலவினங்களை மாநில அரசு திரும்பப் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்நிதியிலிருந்து 8% தொகை தற்போதுள்ள இருப்புப் பாதை கடவுகட்குப் பதிலாக இருப்புப் பாதை மேம்பாலங்கள்/கீழ்ப்பாலங்கள் கட்டுதல் மற்றும் பணியாளர் நியமிக்கப்படாத இருப்புப் பாதைக் கடவுகட்குப் பணியாளரை நியமித்தல் முதலிய பணிகளுக்காக மாநில அரசுக்கு வழங்குவதற்காக ஒதுக்கப்படுகின்றது.

## III சாலைகளும் பாலங்களும் – நடைபெற்று வரும் திட்டங்கள்

கொள்கை வரைமுறைப் பகுதியில் விளக்கப்பட்ட நோக்கத்தினை அடையும் பொருட்டு பின்வரும் திட்டங்களை 2001–2002 ல் செயல்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது.





## 1. தேசிய நெடுஞ்சாலைகள்

### தேசிய நெடுஞ்சாலைகள் – மூலப் பணிகள் மற்றும் பராமரிப்பு

தமிழகத்தில் தேசிய நெடுஞ்சாலைகளின் மொத்த நீளம் 3865 கி.மீ. ஆகும். மைய அரசால் ஒதுக்கீடு செய்யப்படும் நிதியினைக் கொண்டு மாநிலத்திலுள்ள தேசிய நெடுஞ்சாலைகளில் முன்னேற்றப் பணிகள், பராமரிப்பு மற்றும் புதுப்பித்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப் படுகின்றன.

தேசிய நெடுஞ்சாலை மூலப் பணிகளில் 1–4–2001 ஆம் நாளன்று ரூ.76.12 கோடி மதிப்பிலான 61 நிலுவைப் பணிகள் வெவ்வேறு முன்னேற்ற நிலைகளில் இருந்தன. 2001–2002 ஆம் ஆண்டில் ரூ.172 கோடி மதிப்பீட்டில் திட்டப் பணிகளை மேற்கொள்ள மத்திய அரசு இசைவு தெரிவித்துள்ளது. இவற்றுள் இதுவரை ரூ.50.74 கோடி மதிப்பீட்டில் 27 பணிகளுக்கு மத்திய அரசு அங்கீகாரம் வழங்கியுள்ளது. நடப்பு 2001–2002 ஆம் ஆண்டு வரவு செலவு மதிப்பீட்டில் இத்திட்டப் பணிகளுக்கு ரூ.95 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தங்க நாற்கரம் மற்றும் வடக்கு தெற்குப் பகுதிகளை இணைக்கும் திட்டங்களின்கீழ், தமிழ்நாட்டில் உள்ள கீழ்க்காணும் தேசிய நெடுஞ்சாலைகளில், நான்கு/ஆறு வழிப் பாதையாக அகலப்படுத்தும் பணி தேசிய நெடுஞ்சாலைக் குழுமத்தால் தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது.

நான்கு பெருநகரங்களை இணைக்கும் தங்க நாற்கர திட்டம்

| | |
|---|---|
| 1. தே.நெ. 4 (மதுரவாயில்—இராணிப்பேட்டை) | 111 கி.மீ. |
| 2. தே.நெ. 46 (கிருட்டிணகிரி—இராணிப்பேட்டை) | 146 கி.மீ. |
| 3. தே.நெ. 5 (சென்னை—கொல்கத்தா இணைப்பு) | 52 கி.மீ. |
| மொத்தம் | 309 கி.மீ. |

இத்திட்டப் பணி 6 தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டு அவற்றில் 2 தொகுகளில் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. 8 தொகுதிகளிலும் பணிகளைத் தொடங்குவதற்கு முன் முடிக்கப்பட வேண்டிய பூர்வாங்கப் பணிகள் யாவும் முடிவடையும் தருவாயில் உள்ளன.

வடக்கு தெற்கு பகுதிகளில் காஷ்மீரையும், கன்னியாகுமரியையும் இணைக்கும் திட்டம்

| | | |
|---|---|---|
| 1. தே.நெ. 7 (பெங்களூர்–சேலம்–மதுரை பிரிவு) | 57 | கி.மீ. |
| 2. தே.நெ. 7 (மதுரை–கன்னியாகுமரி பிரிவு) | 232 | கி.மீ. |
| 3. தே.நெ. 7 (ஹொசூர்–கிருட்டிணகிரி) | 61 | கி.மீ. |
| 4. தே.நெ. 47 (சேலம்–கொச்சின்) | 182 | கி.மீ. |
| மொத்தம் | 832 | கி.மீ. |

இத்திட்டப் பணியில், சேலம் புறவழிச் சாலையை நான்கு வழித்தடமாக அமைக்கும் பணி முடிவுற்றுள்ளது. தேசிய நெடுஞ்சாலை எண் 7–ஐ நான்கு வழித் தடமாக அமைத்தல், கரூர் புறவழிச் சாலையை நான்கு வழித் தடமாக அமைத்தல், கரூர் புறவழிச் சாலையில் இரயில்வே மேம்பாலம் கட்டுதல் மற்றும் நாமக்கல் புறவழிச் சாலையை நான்கு வழித் தடமாக அமைத்தல் ஆகிய பணிகள் நடைபெற்று வருகின்றன.

இவற்றைத் தவிர தேசிய நெடுஞ்சாலைக் குழுமம் உலக வங்கி கடனுதவியுடன் பின்வரும் தேசிய நெடுஞ்சாலைகளையும் நான்கு வழித் தடமாக அமைக்கத் திட்டமிட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. தே.நெ.45 (புக்கத்துறை–திண்டிவனம்) | 55 | கி.மீ. |
| 2. தே.நெ.45 (திண்டிவனம்–திருச்சி) | 200 | கி.மீ. |
| 3. தே.நெ.45ஆ (திருச்சி–மேலூர்–மதுரை) | 135 | கி.மீ. |
| மொத்தம் | 390 | கி.மீ. |

ஆக, தற்போது தமிழ்நாட்டில் மொத்தம் உள்ள 3865 கி.மீ. தேசிய நெடுஞ்சாலைகளுள் சுமார் 1531 கி.மீ. நீளமுள்ள தேசிய நெடுஞ்சாலைகள் நான்கு/ஆறு வழிப்பாதையாக மேம்பாடு செய்யப்பட உள்ளது. இவற்றுள் சுமார் 400 கி.மீ. நீள சாலைகளில் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இந்த தேசிய நெடுஞ்சாலை முன்னேற்றப் பணிகளுக்காக தேசிய நெடுஞ்சாலைக் குழுமம், 803 கி.மீ. நீள தேசிய நெடுஞ்சாலைகளை தன்வசம் எடுத்துக்கொண்டுள்ளது.





வாகனப் போக்குவரத்து அதிகரிப்பு மற்றும் முக்கியத்துவம் அடிப்படையில், அடிப்படைத் தகுதிகளை பூர்த்தி செய்யும் வகையில், 1226.30 கி.மீ. நீள மாநில சாலைகள் மற்றும் மாவட்ட முக்கிய சாலைகளை தேசிய நெடுஞ்சாலைகளாக உயர் நிலை மாற்றம் செய்வதற்கு மத்திய அரசிற்கு பரிந்துரை செய்யப்பட்டு, மத்திய அரசின் ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

தே.நெ. 4 மற்றும் தே.நெ. 45 ஆகியவற்றை இணைக்கும் சென்னை புறவழிச் சாலையானது ரூ.60 கோடியில் செயல்படுத்தப்பட்டு பணி முடிவடையும் தருவாயில் உள்ளது.

2. மாநில நெடுஞ்சாலைகள்

இன்றைய நிலவரப்படி மாநில நெடுஞ்சாலைகளின் மொத்த நீளம் 7136 கி.மீ. ஆகும். 2001–2002 ஆம் ஆண்டு பகுதி 2 திட்டத்தின்கீழ் ரூ.2.43 கோடி மதிப்பீட்டில் 2 சாலைப் பணிகளும் மற்றும் 6 பாலங்கள் அமைக்கும் பணிகளும் மேற்கொள்ள ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இப்பணிகளுக்கென 2001–2002 ஆம் ஆண்டு திருத்திய வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.4.42 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

3. மாவட்ட பெரிய சாலைகள்

இன்றைய நிலவரப்படி மாவட்ட பெரிய சாலைகளின் மொத்த நீளம் 7408 கி.மீ. ஆகும். 2001–2002 ஆம் ஆண்டு பகுதி 2 திட்டத்தின்கீழ் ரூ.1.27 கோடி மதிப்பீட்டில் மூன்று சாலைப் பணிகள் மேற்கொள்வதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. 2001–2002 ஆம் ஆண்டு திருத்திய வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.6.60 கோடி நிலுவையில் உள்ள பணிகளுக்கும் புதிய பணிகளுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4. மாவட்ட இதர சாலைகள்

இன்றைய நிலவரப்படி மாவட்ட இதர சாலைகளின் மொத்த நீளம் 40853 கி.மீ. ஆகும். 2001–2002 ஆம் ஆண்டு பகுதி 2 திட்டத்தின்கீழ் ரூ.0.73 கோடி மதிப்பீட்டில் இரு சாலைப் பணிகள் மேற்கொள்வதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. 2001–2002 ஆம் ஆண்டு திருத்திய வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.3.54 கோடி நிலுவையில் உள்ள பணிகளுக்கும் புதிய பணிகளுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2001 செப்டம்பர் 8

5. பாலங்கள்

அரசு சாலைகளில் பழுதடைந்த பாலங்களைத் திரும்பக் கட்டுதல்

முந்தைய ஆண்டுகளில் எடுக்கப்பட்டு நிலுவையில் உள்ள பாலப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. இத்திட்டத்திற்கென நடப்பு ஆண்டில் (2001–2002) திருத்திய வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.0.67 கோடி நிலுவையில் உள்ள பணிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஹட்கோ கடனுதவியுடன் 60 பாலங்களை கட்டுதல்/திரும்பக் கட்டுதல் திட்டம்

ஹட்கோ கடனுதவியுடன் ரூ.60 கோடி மதிப்பீட்டில் 60 பாலங்கள் கட்டுவதற்கு ஜனவரி 2001 இல் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. இப்பாலங்களுக்கு நேர்ப்பாடு இறுதி செய்யப்பட்டுள்ளது. புலனாய்வு வடிவமைப்பு மற்றும் மதிப்பீடு தயாரித்தல் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

தற்போதுள்ள இருப்புப் பாதை கடவுகளுக்குப் பதிலாக இருப்புப் பாதை மேம்பாலங்கள்/கீழ்ப்பாலங்கள் கட்டுதல்

காஞ்சிபுரம் மாவட்டம், புனித தோமையர் இரயில் நிலையம் அருகில் கட்டப்பட்டு வரும் இரயில்வே கீழ்ப்பாலம் நல்ல முன்னேற்றத்தில் உள்ளதோடு முடிவுறும் தருவாயிலும் உள்ளது. திருச்சி மாநகராட்சி எல்லையில், திருச்சி மாநகராட்சிக்காக இத்துறையால் செயல்படுத்தப்பட்டு வரும் 3 இரயில்வே மேம்பாலப் பணிகளான தென்னூர் சாலையில் இருப்புப் பாதை கடவு எண் 84-ல் இரயில்வே மேம்பாலம், ஹீபர் சாலையில் இருப்புப் பாதை கடவு எண் 85-ல் இரயில்வே மேம்பாலம் மற்றும் உத்தமர்கோயில் அருகே இருப்புப் பாதை கடவு எண் 246-ல் இரயில்வே மேம்பாலம் கட்டும் பணிகள் 2001–2002ல் முடிவடையும். திருச்சியில் அரசு சாலையில் இருப்புப் பாதை கடவு எண் 241-ல் இரயில்வே மேம்பாலம் கட்டும் மற்றொரு பணியும் முன்னேற்றத்தில் உள்ளது. இவ்வேலையும் 2001–2002-ல் முடிவடையும்.

குரோம்பேட்டை இரயில் நிலையம் அருகில் எம்.ஐ.டி. கேட் அருகில், இருப்புப் பாதை கடவு எண் 28-ல் ரூ.20 கோடி மதிப்பில் நடைபெற்று வரும் சாலை மேம்பாலப் பணி நல்ல முன்னேற்றத்தில் உள்ளது.



2001 செப்டம்பர் 8]

மேற்கண்ட 6 சாலை மேம்பாலங்களும்/கீழ்ப்பாலங்களும் ஹட்கோ கடனுதவியுடன் செயலாக்கப்பட்டு வருகின்றன. இப்பணிகளுக்காக ஹட்கோ நிறுவனம் ரூ.62.04 கோடி கடன் அனுமதித்துள்ளது. இதுவரை முதல் தவணையாக ரூ.28.40 கோடி பெறப்பட்டுள்ளது.

இவ்வேலைகளுக்காக திருத்திய வரவு செலவு மதிப்பீடு 2001–2002-ல் ரூ.15.75 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் 37 இடங்களில் தற்போதுள்ள இருப்புப் பாதைக் கடவுகளுக்குப் பதிலாகச் சாலை மேம்பாலங்கள்/கீழ்ப்பாலங்கள் கட்ட ரூ.526.87 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இப்பணிகளில் சென்னை கடற்கரைச் சந்திப்பு–தாம்பரம் இரயில் நிலையங்களுக்கிடையே 6 இடங்களில் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ள சாலை மேம்பாலங்களும்/கீழ்ப்பாலங்களும் அடங்கும். ஏற்கெனவே அரசால் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்ட இப்பணிகளுக்காக ரூ.200 கோடி அளவில் ஹட்கோ கடனுதவியை பெற அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

இந்த 37 பணிகளில், 6 பணிகளை ரூ.58 கோடி செலவில் செயல்படுத்த ஹட்கோ நிறுவனத்திடம் கடன் விண்ணப்பம் அளிக்கப்பட்டு அது பரிசீலனையில் உள்ளது. மீதமுள்ள பணிகள் ஆரம்ப நிலையிலேயே உள்ளதால், இவற்றிற்கான கடன் விண்ணப்பம் விரைவில் ஹட்கோ நிறுவனத்திடம் அளிக்கப்படும். கடலூர்–திருக்கோவிலூர்–அணைக்கட்டு சாலையில் திருப்பாதிரிப்புலியூர் இரயில் நிலையம் அருகில் இரயில்வே மேம்பாலம் அமைக்கும் பணியும் மேற்கண்ட திட்டத்தின் ஓர் அங்கமாகும். இப்பணி விரைவில் தொடங்கப்படும்.

இப்பணிகளுக்கு திருத்திய வரவு–செலவு மதிப்பீடு 2001–2002–ல் ரூ.20.20 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கியின் கடனுதவியுடன் அரசு சாலைகளை மேம்பாடு செய்தல் மற்றும் புதிய பாலங்களைக் கட்டுதல்/பழுதடைந்த பழைய பாலங்களை திரும்பக் கட்டுதல்

கடந்த ஆண்டுகளில் நபார்டு வங்கியின் கடனுதவியுடன் ஊரக உள் கட்டமைப்பு வளர்ச்சி நிதி எண் II முதல் VI வரையில், முக்கிய மாவட்ட சாலைகள் மற்றும் இதர மாவட்ட சாலைகள் மேம்படுத்தும் பணிகளும் மற்றும் இச்சாலைகளில் புதிய பாலங்கள் கட்டும் பணிகள்/பழைய பாலங்களைத் திரும்பக் கட்டும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.

இதுவரை, ரூ.271.09 கோடி மதிப்பீட்டில் 4149.93 கி.மீ. நீள சாலைகளை மேம்படுத்தும் பணிகளும், ரூ.152.28 கோடி மதிப்பீட்டில் 197 பாலங்கள் கட்டுதல்/திரும்பக் கட்டுதல் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவற்றில் கடந்த 2000–2001 ஆம் ஆண்டு வரை 3929.93 கி.மீ. நீளத்திற்கான சாலைகளை மேம்படுத்தும் பணிகளும், 80 பாலங்கள் கட்டுதல்/திரும்பக் கட்டுதல் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய சாலை மற்றும் பாலப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

இப்பணிகளுக்கென 2001–2002 ஆம் ஆண்டு திருத்திய வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.85 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் 106 பாலப் பணிகள் திட்டம்

நபார்டு வங்கியின் ஊரக உள் கட்டமைப்பு வளர்ச்சி நிதி II மற்றும் III–ன்கீழ் தமிழகத்தின் 25 மாவட்டங்களில் 54 பாலப் பணிகளுக்கு ரூ.99.19 கோடிக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. 1997–98–இல் ஹட்கோ கடன் நிதியுதவியுடன் ரூ.260.71 கோடி மதிப்பீட்டிலான 50 பாலங்கள் கட்டுதல்/திரும்பக் கட்டுதல் எனும் மிகப் பெரும் திட்டம் எடுத்துக் கொள்ளப்பட்டது. 1998–99 ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தில் ரூ.1.10 கோடி மதிப்பீட்டிலான 2 பழுதடைந்த பாலங்களை திரும்பக் கட்டும் பணி எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

நபார்டு வங்கியின் கடனுதவியுடன் கட்டப்படும் மேற்குறிப்பிடப் பட்டுள்ள 54 பாலங்கள், ஹட்கோ கடனுதவியுடன் செயல்படுத்தப்படும் 50 பாலங்கள், 1998–99 ஆம் ஆண்டு பகுதி 2 திட்டத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட 2 பாலங்கள் சேர்த்து மொத்தம் 106 பாலங்களின் மதிப்பீட்டுத் தொகை ரூ.361 கோடி ஆகும். இந்த 106 பாலங்களும் 17 தொகுப்புகளாகப் பிரித்து ஒருங்கிணைத்து, டர்ன் கீ (TURN KEY) அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு செயலாக்கத்திற்கு விடப்பட்டது. 2000–2001 ஆம் நிதியாண்டு முடிய 65 பாலங்கள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள பாலப் பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. இவை 30–6–2002–ல் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இப்பணிகளுக்கென 2001–2002 ஆம் ஆண்டு திருத்திய வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.78.77 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.





### 6. சிறப்புப் பகுதிகளில் சாலைகள்

ஹட்கோ கடன் உதவியுடன் சென்னை மாநகரை வந்தடையும் ஆரச் சாலைகள் மேம்படுத்தும் திட்டம்

சென்னையிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் காணப்படும் போக்குவரத்து நெரிசலின் காரணமாக சென்னை மாநகரத்தைச் சுற்றி அமைந்து, மாநகரத்தை வந்தடையும் அனைத்து ஆரச் சாலைகளையும் உறுதிப்படுத்துவதும் அகலப்படுத்துவதும் அத்தியாவசியமாகிவிட்டது. சாலைகளின் மேம்பாடானது தொழில் வளர்ச்சிக்கு இன்றியமையாததாக உள்ளதால், தமிழக அரசு, சென்னை மாநகரைச் சுற்றி அமைந்து மாநகரை வந்தடையும் 251.60 கி.மீ. நீள அரசு சாலைகளை மேம்படுத்தவும் 26 பாலங்களைக் கட்டவும் ரூ.212.54 கோடி செலவில் மேம்படுத்தும் திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்திற்காக வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி கழகத்தில் (HUDCO) கடன் நிதி உதவியாக 70 விழுக்காடு (ரூ.148 கோடி) பெறப்பட்டுள்ளது.

இப்பணி 11 தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டு பணி செயல்படுத்த ஒப்படைக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட சாலைகளில் 195.75 கி.மீ. நீள சாலைப் பணிகள் மற்றும் 18 பாலப் பணிகள் முடிக்கப் பட்டுள்ளன. இத்திட்டம் வரும் நவம்பர் 2001–இல் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், மத்திய கைலாஷ் ஆலயத்திலிருந்து வி.எஸ்.ஐ. எஸ்டேட் வரை உள்ள சாலையை ஏற்கெனவே அகலப்படுத்தி உறுதிப்படுத்தி தகவல் தொழில்நுட்ப பெருஞ்சாலையாக மாற்றப்பட்டுள்ள பழைய மாமல்லபுரம் சாலை கி.மீ.13/3–ல் இணைப்பதற்கு தோராய மதிப்பீடு ரூ.19.50 கோடிக்கு தயாரிக்கப்பட்டு சென்னை மாநகர வளர்ச்சிக் குழுமத்திற்கு ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதற்காக மத்திய கைலாஷ் ஆலயத்திலிருந்து வி.எஸ்.ஐ. எஸ்டேட் வரையுள்ள சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான சாலையை நெடுஞ்சாலைத் துறைக்கு மாற்ற பரிசீலனையில் உள்ளது.

இப்பணிகளுக்கென 2001–2002 ஆம் ஆண்டு திருத்திய வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.21.27 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மதுரை நகரை வந்தடையும் ஆரச் சாலைகளை மேம்படுத்துதல்**

இத்திட்டத்திற்கு 2000–2001 ஆம் ஆண்டில் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இதன்படி ஹட்கோ கடனுதவியுடன் ரூ.112 கோடி மதிப்பீட்டில் 121.80 கி.மீ. நீள 12 சாலைகளை மேம்பாடு செய்யவும், வைகை ஆற்றின் குறுக்கே சக்குடியில் உயர்மட்ட பாலம் கட்டவும் மற்றும் எல்லீஸ் நகரில் இரயில்வே மேம்பாலம் கட்டவும் பணி மேற்கொள்ளப் படும். அதற்கு ஹட்கோ ரூ.100 கோடி கடன் வழங்க உள்ளது. ஹட்கோவிடம் இந்தக் கடனைப் பெற 25–6–2001 அன்று ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிகளுக்கு முன் தகுதி ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு பரிசீலனையில் உள்ளன.

இப்பணிகளுக்கென 2001–2002 ஆம் ஆண்டு திருத்திய வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.30 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**புறவழிச் சாலைகள்**

போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்கு புறவழிச் சாலைகள் அமைப்பது அத்தியாவசியமாகிறது. புறவழிச் சாலைகள் அமைக்க நிலங்கள் கையகப்படுத்த வேண்டியிருப்பதால் ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் புறவழிச் சாலைகள் அமைக்க நிலங்கள் கையகப் படுத்துவதற்காக ரூ.2.18 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் கும்பகோணம், பழநி மற்றும் செய்யார் ஆகிய நகரங்களில் புற வழிச் சாலைகள் அமைக்க நிலங்கள் கையகப்படுத்த ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இவற்றில், கும்பகோணம் புறவழிச் சாலை அமைக்கத் தேவையான நிலத்தை கையகப்படுத்தும் பணி முடிக்கப்பட்டுள்ளது. பழநி மற்றும் செய்யார் புறவழிச் சாலைகள் அமைத்திட தேவைப்படும் நிலங்களை கையகப்படுத்தும் பணிகள் முடியும் நிலையில் உள்ளன. இது தவிர சேலம் புறவழிச் சாலை பணி முடிவுற்றுள்ளது. கரூர் மற்றும் நாமக்கல் நகரங்களில் தேசிய நெடுஞ்சாலைகளில் புறவழிச் சாலை அமைக்கும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. சென்னை புறவழிச் சாலைப் பணி முடிவுறும் தருவாயில் உள்ளது. திருநெல்வேலி புறவழிச் சாலைக்கு நிலங்களைக் கையகப்படுத்தும் பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளன.

கட்டுதல், இயக்குதல் மற்றும் ஒப்படைத்தல் அடிப்படையில் கோயம்புத்தூர் புறவழிச் சாலைப் பணி மற்றும் மதுரை சுற்றுச் சாலைப் பணி முடிவுற்று போக்குவரத்துக்கு திறந்து விடப்பட்டுள்ளது.





**தொழிற்சாலைப் பகுதிகளில் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்**

தரமான நெடுஞ்சாலைகள் தொழில் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கின்றன. எனவே, இத்திட்டத்தின்கீழ் கடலூர் மாவட்டத்தில் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் மற்றும் திருவாளர்கள் நாகார்ஜுனா எண்ணெய் கார்ப்பரேசன் லிமிடெட், ஐதராபாத் நிறுவனத்தோடு கூட்டு முயற்சியாக தொடங்கப்படவிருக்கும் நாகார்ஜுனா சுத்திகரிப்பு ஆலை அமையவிருக்கும் இடத்தில் மொத்த நீளம் 3.50 கி.மீ. அளவிற்குச் செல்கின்ற ஆலப்பாக்கம் இரயில்வே ஊட்டுச்சாலை (0/0–0/524) மற்றும் திருச்சோபுரம் வழியாகச் செல்லும் ஆலப்பாக்கம் பெரியகுப்பம் சாலை (0/0–2/8) ஆகியவற்றை ஓர் உயர்மட்டப் பாலம் அமைத்து மேம்பாடு செய்வதற்காக ரூ.3.65 கோடி மதிப்பீட்டில் பணி செயலாக்கப்படுகிறது. இப்பணிக்காகும் செலவில் நாகார்ஜுனா சுத்திகரிப்பு ஆலை தனது 50 விழுக்காடு பங்கினை வழங்க இசைவு தெரிவித்துள்ளது.

நாகார்ஜுனா சுத்திகரிப்பு ஆலை தனது பங்கான ரூ.1.83 கோடியில் இதுவரை ரூ.25 இலட்சங்கள் அளித்துள்ளது.

**பொருளாதார மற்றும் பன்மாநில முக்கியத்துவம் வாய்ந்த திட்டத்தின்கீழ் திருப்பூர் நகரில் சாலை உள் கட்டமைப்பு வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளுதல்**

நெசவு மற்றும் பின்னலாடை ஏற்றுமதிக்குப் பெயர் பெற்ற திருப்பூர் நகரில் முதல் கட்டமாக, திருப்பூர் நகருக்குள்ளும் அதனைச் சுற்றியும் அமைந்துள்ள சாலைகளை மேம்படுத்தும் பணி ரூ.16.31 கோடி மதிப்பில் செயல்படுத்தப்பட்டு முழுவதுமாக முடிக்கப்பட்டுள்ளது. இப்பணி 50 விழுக்காடு மைய அரசின் கடனுதவியுடன் செயல்படுத்தப்பட்டுள்ளது.

திருப்பூர் நகருக்குள்ளும் அதனைச் சுற்றியும் அமைந்துள்ள சில சாலைகளை ரூ.50 கோடி மதிப்பீட்டில் இரண்டாம் கட்டமாக, பொருளாதார மற்றும் பன்மாநில முக்கியத்துவம் வாய்ந்த திட்டத்தின்கீழ் எடுத்து செயல்படுத்தத் தேவையான திட்ட அறிக்கை மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்படவுள்ளது.

**சிறப்புச் சாலைத் திட்டங்கள்**

*தமிழ்நாடு சாலை மேம்பாட்டுத் திட்டம்*

1995–ல் முன்னிடைத் திட்ட ஆய்வு அறிக்கையின்படி 23 இடைவழிகளில் 3238 கி.மீ. அரசு சாலைகள் தொழில் நுட்ப மற்றும்

பொருளாதார மதிப்பாய்விற்கு அடையாளம் காணப்பட்டது. திட்ட அறிக்கை தயார் செய்யவும், திட்டத்தைச் செயலாக்கவும் உலக வங்கி நிதி உதவி அளிக்க முன்வந்துள்ளது. அதன் அடிப்படையில் பொருளாதார மதிப்பாய்விற்குப் பிறகு சுமார் 1280 கி.மீ. நீளச் சாலைகளை, மேம்பாடு செய்யவும், அகலப்படுத்தவும் பல்வேறு பகுதிகளாக (phases) எடுத்துக் கொள்ளப்பட்டது. இத்திட்டத்தின் பகுதி I-ல் 375 கி.மீ. சாலையும், பகுதி Iஏ-ல் 375 கி.மீ. சாலையும், பகுதி Iபி-ல் மேற்கண்ட சாலையின் பல்வேறு இடங்களில் 87 கி.மீ. நீளமுள்ள புறவழிச்சாலைகளும் அமைந்துள்ளன. 732 கி.மீ. சாலைக்கு விரிவான பொறியியல் வடிவமைப்பு முடிக்கப்பட்டுள்ளது.

பகுதி I-ல் நாகப்பட்டினம் முதல் தூத்துக்குடி வரை உள்ள சாலையும், பகுதி Iஏ-ல் ஆற்காடு–உளுந்தூர்பேட்டை, போளூர்–செங்கம், விருத்தாசலம்–கும்பகோணம்–திருவாரூர், அரியலூர்–ஜெயங்கொண்டம் சாலையும் மற்றும் பகுதி Iபி-ல் புறவழிச் சாலைகளும் இடம்பெற்றுள்ளன. சாலைக் கட்டுமானத்திற்கு அமெரிக்க டாலர் 250 மில்லியன் (ரூ.1125 கோடி) மற்றும் சாலை பராமரிப்பிற்கு அமெரிக்க டாலர் 100 மில்லியன் (ரூ.450 கோடி) உலக வங்கியின் கடன்தொகை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒப்பந்தம் 2, 3, 4-ன் மதிப்பு ஒவ்வொன்றும் சுமார் 100 கோடியாகும். ஒப்பந்தக்காரர்களின் முன் தகுதி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்க ஒப்பந்த நமூனாக்கள் தயார் செய்யப்பட்டு வருகின்றன. ஒப்பந்தம் I-ன் மதிப்பு சுமார் 520 கோடியாகும். இதறகான ஒப்பந்தக்காரர்களின் முன் தகுதி நிர்ணயம் செய்ய ஜூலை 2001 வரை முன் தகுதிகாண் நமூனாக்கள் பெறப்பட்டு மதிப்பாய்வு செய்யப்பட்டு வருகிறது.

ஒப்பந்தம் 2, 3 மற்றும் 4-க்கான மேற்பார்வை ஆலோசகர் நியமனம் முடிவடைந்துள்ளது. ஒப்பந்தம் I-க்கான மேற்பார்வை ஆலோசகர் நியமனம் செய்ய பட்டியல் உலக வங்கியின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

மத்திய அரசின் சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் சுற்றுச்சூழல் பாதிப்பின்மைக்கான ஒப்புதல் 6–7–2000 அன்று பகுதி I-க்கும் 18–9–2000 அன்று பகுதி Iஏ-க்கும் பெறப்பட்டுள்ளது.

நெடுஞ்சாலைத் துறையின் நிர்வாக சீரமைப்புக்கான ஆய்வு, அமெரிக்க நிறுவனமான பூஸ் ஆலன் ஹேமில்டன் என்ற ஆலோசகர் மூலம் ரூ.2.80 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு அறிக்கை





பெறப்பட்டுள்ளது. இவ்வறிக்கையில் உள்ள பரிந்துரைகளை ஆய்வு செய்து செயல்படுத்த கொள்கை அளவில் அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

இத்திட்டத்திற்கான நிலம் கையகப்படுத்தவும், திட்டத்தால் பாதிக்கப்படுபவர்களுக்கு மறுகுடியேற்றம் மற்றும் மறுவாழ்விற்கான செயல் திட்டங்களை மேற்கொள்ளவும் தனி வருவாய் அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இத்திட்டத்தில் மரவகைகள் மற்றும் விலங்குகளைப் பாதுகாக்க தனி வன அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். சுற்றுச்சூழல் பாதிப்பின்மையை உறுதி செய்ய துறைக்கு அப்பாற்பட்ட சுற்றுச்சூழல் சிறப்பு அலுவலர் மற்றும் நிதி மேலாளர் நியமிக்கப்பட உள்ளனர். உலக வங்கியின் முன் கணிப்புக் குழு கடந்த ஏப்ரல் மாதம் 2001-இல் திட்டத்தைப் பார்வையிட வந்தபோது, திட்டத் தயாரிப்புப் பணிகள் முடியும் தருவாயில் உள்ளதால் உலக வங்கியின் திட்ட செயலாக்க ஒப்புதல் விரைவில் அளிக்கப்படும் என கூறியுள்ளது. இத்திட்டத்தின் செயலாக்கம் பிப்ரவரி 2002-ல் தொடங்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இத்திட்டத்தின் 2001–2002 ஆம் ஆண்டிற்கான திருத்திய வரவு செலவுத் திட்ட மதிப்பீடு ரூ.30.75 கோடியாகும்.

## தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டப் பணிகள் உலக வங்கியின் கடன் உதவியுடன், சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, தூத்துக்குடி, திருப்பூர், சேலம், ஈரோடு மற்றும் வேலூர் ஆகிய பத்து நகரங்களில் செயலாக்கப்பட்டன. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டக் கூறுகளில் சாலைத் தொடர்பு மற்றும் சரக்குப் போக்குவரத்துக்கான மேலாண்மை செயல் திட்டமும் (tramp) ஒன்றாகும். இத்திட்டங்கள் நெடுஞ்சாலைத் துறையின் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டப் பிரிவில் 1988-89 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டது. இதற்கு உலக வங்கியின் நிதியுதவி 30–9–1997-ல் முடிந்துவிட்டது. எனவே, மீதமுள்ள பணிகள் தமிழ்நாடு அரசின் நிதி ஒதுக்கீட்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தில் உள்வட்டச் சாலையின் வடக்குப் பகுதி மற்றும் உள் வட்டச் சாலையின் தெற்குப் பகுதி (தில்லை கங்கா நகரில் கட்டப்பட்டு வரும் சாலை கீழ்ப் பாலப் பணியை உள்ளடக்கியது) தவிர

[2001 செப்டம்பர் 8

மற்ற அனைத்துப் பணிகளும் முடிவுற்றன. இவ்வேலைகளில் உள் வட்டச் சாலையின் வடக்குப் பகுதி மற்றும் உள் வட்டச் சாலையின் தெற்குப் பகுதியில் உள்ள தில்லை கங்கா நகரில் கட்டப்பட்டு வரும் சாலை கீழ்பாலப் பணி 2001–2002–ல் முடிக்கப்படும். இப்பணிகள் உலக வங்கித் திட்டத்தின்கீழ் முதலில் செயல்படுத்தப்பட்டன. பின்னர் அரசு நிதியிலிருந்தும், தற்போது ஹட்கோ கடனுதவியுடனும் செயல் படுத்தப்படுகின்றன. இதற்காக ஹட்கோ நிறுவனம் ரூ.65 கோடி அளவில் கடனுதவி அளிக்க ஒப்புதல் அளித்துள்ளது. அதில் முதல் தவணையாக ரூ.19.45 கோடி கடன் பெறப்பட்டுள்ளது.

திருத்திய வரவு செலவு மதிப்பீடு 2001–2002–ல் ரூ.13.10 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**கிராமச் சாலைகள் திட்டம்**

கிராமங்களே நமது நாட்டின் உயிர் நாடி. கிராமச் சாலைகளே அக்கிராமங்களின் உயிர்த் துடிப்பு. தமிழ்நாட்டில் உள்ள பல கிராமங்களில் முக்கிய தொழில் விவசாயமே. எனவே இக்கிராம மக்கள் தங்கள் விவசாய விளைபொருட்களை அருகில் உள்ள விற்பனை நகரங்களுக்கு விரைவாக எடுத்துச் செல்ல வசதியாக கிராமச் சாலைகள் அனைத்தையும் தார்ச் சாலைகளாக மேம்படுத்துவது மிகவும் முக்கியமானதும் அவசியமானதும் ஆகும். இதன் மூலம் கிராம மக்கள் விவசாய விளைபொருட்களை அருகிலுள்ள நகரங்களுக்கு விரைவாக எடுத்துச் செல்ல ஏதுவாகும். கிராமச் சாலைகள் கீழ்க்கண்ட மூன்று திட்டங்களின்கீழ் தார்ச் சாலைகளாக மேம்படுத்தப்படுகின்றன.

அ) கிராமச் சாலைகள் திட்டம்.
ஆ) சிறப்பு உறுப்புத் திட்டம்.
இ) பேருந்து வழித்தட மேம்பாட்டுத் திட்டம்.

**அ) கிராமச் சாலைகள் திட்டம் (நபார்டு கடனுதவி மூலமாக)**

இத்திட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்படும் வேலைகளுக்கு கீழ்க்கண்ட நிபந்தனைகள் ஏற்புடையதாக இருக்க வேண்டும்:

1. கிராமத்தின் மொத்த மக்கட்தொகை 500–க்கு மேல் இருக்க வேண்டும்.
2. அமைக்கப்பட வேண்டிய சாலைகளின் நீளம் 1.60 கி.மீ நீளத்திற்கு மேல் இருக்க வேண்டும்.



2001 செப்டம்பர் 8]

3. ஏற்கெனவே மேற்படி கிராமங்கள் தார்ச் சாலைகளினால் இணைப்பு பெற்று இருத்தல் கூடாது.

1991 ஆம் ஆண்டின் மக்கட்தொகை கணக்கீட்டின்படி 500 முதல் 1000 வரை மக்கட்தொகை கொண்ட கிராமங்களுக்கு இணைப்புச் சாலை வசதி செய்து கொடுக்கும் பணி 1–4–1999 முதல் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. 2000–2001 ஆம் ஆண்டு நபார்டு கடனுதவியுடன் 390 கி.மீ. சாலைகள் அமைக்கவும், 22 பாலங்கள் கட்டவும் ரூ.40.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதன் மூலம் மக்கட்தொகை 500 முதல் 1000 வரையுள்ள 94 கிராமங்கள் இணைப்புச் சாலை வசதி பெறும். இவற்றில் மொத்த நீளமான 390 கி.மீ. சாலைகள் மேம்பாடு செய்யப்பட்டு 13 பாலங்கள் முடிக்கப்பட்டுவிட்டன. மீதமுள்ள 9 பாலங்கள் 31–12–2001–க்குள் முடிக்கப்படும்.

நடப்பு ஆண்டில் (2001–2002) நபார்டு கடனுதவியுடன் ஆர்.ஐ.டி.எப். VI–ன்கீழ் 500–1000 மக்கட் தொகையுள்ள 110 கிராமங்களுக்கு இணைப்புச் சாலை வசதி செய்ய 560 கி.மீ. நீள சாலைகளையும் ஒரு பாலத்தையும் மேம்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

நடப்பு ஆண்டில் (2001–2002) ஆர்.ஐ.டி.எப்.VII–ன்கீழ் 130 கிராமங்களுக்கு இணைப்புச் சாலை வசதி வழங்க 413 கி.மீ. நீள சாலைகளை மேம்படுத்தவும் 9 பாலங்கள் கட்டவும் மேலும் ஒரு புதிய திட்டப் பிரேரணை தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான நிர்வாக ஒப்புதல் விரைவில் அளிக்கப்படும்.

2001–2002 ஆம் ஆண்டில் இதற்கான நிதி ஒதுக்கீடு ரூ.50 கோடியாகும்.

**ஆ) சிறப்பு உறுப்புத் திட்டம் (நபார்டு கடனுதவி மூலமாக)**

கிராம மக்கட் தொகையில் 50 விழுக்காட்டிற்கு அதிகமாக ஆதிதிராவிடர் மக்கட்தொகை கொண்ட கிராமங்களுக்கு தார்ச் சாலை வசதி செய்திட இத்திட்டம் வழிவகுக்கிறது.

2000–2001 ஆம் ஆண்டு நபார்டு கடனுதவியுடன் 46 கிராமங்களுக்கு, தார்ச் சாலை வசதி செய்ய 220 கி.மீ. நீளச் சாலைகளை மேம்படுத்தவும் 10 பாலங்கள் கட்டவும் ரூ.18.90 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவற்றில் மொத்த நீளமான 220 கி.மீ. சாலைகள் மேம்படுத்தப்பட்டும், 6 பாலங்கள் கட்டப்பட்டும் உள்ளன. மீதமுள்ள பாலங்கள் அனைத்தும் 31–12–2001–க்குள் முடிக்கப்பட்டுவிடும்.

நடப்பு ஆண்டில் (2001–02) ஆர்.ஐ.டி.எப்.VI-ன்கீழ் 50 கிராமங்களுக்கு இணைப்புச் சாலை வசதி செய்ய 210 கி.மீ. நீளச் சாலைகள் மேம்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

நடப்பு ஆண்டில் (2001–2002) ஆர்.ஐ.டி.எப். VII-ன்கீழ் 50 கிராமங்களுக்கு இணைப்புச் சாலை வசதி செய்ய 147 கி.மீ. நீளச் சாலைகள் மேம்பாட்டிற்கு மேலும் ஒரு புதிய திட்டப் பிரேரணை தயாரிக்கப் பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான ஒப்புதல் விரைவில் வழங்கப்படும்.

2001–2002 ஆம் ஆண்டில் இதற்கான நிதி ஒதுக்கீடு ரூ.20 கோடியாகும்.

இ) பேருந்து வழித்தட சாலைகள் மேம்பாட்டுத் திட்டம் (நபார்டு கடனுதவி மூலமாக)

இத்திட்டத்தின்கீழ் 3 ஆண்டுகளுக்கு மேல் பேருந்துகள் இயங்கும் ஊராட்சி ஒன்றிய சாலைகள் எடுத்துக் கொள்ளப்பட்டு மாவட்ட இதர சாலைகளின் தரத்திற்கு தார்ச் சாலைகளாக மேம்படுத்தப்படுகின்றன.

2000–2001 ஆம் ஆண்டில் நபார்டு கடன் உதவியுடன் 440 கி.மீ. நீள சாலைகளை மேம்பாடு செய்யவும் 16 பாலங்கள் கட்டவும் ரூ.21.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இவற்றில் 368 கி.மீ. சாலைகள் மேம்படுத்தப்பட்டும், 6 பாலங்கள் கட்டப்பட்டும் உள்ளன. மீதமுள்ள சாலைகள் மற்றும் பாலங்கள் அனைத்தும் 31-12-2001-க்குள் முடிக்கப்படும்.

நடப்பு ஆண்டின் (2001–2002) ஆர்.ஐ.டி.எப்.-ன்கீழ் 230 கி.மீ. நீளச் சாலைகள் மேம்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

நடப்பு ஆண்டில் (2001–2002) ஆர்.ஐ.டி.எப். VI-ன்கீழ் 247 கி.மீ. நீள சாலைகளை மேம்பாடு செய்யவும் 2 பாலங்கள் கட்டவும் மேலும் ஒரு புதிய திட்டப் பிரேரணை தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு ஒப்புதல் விரைவில் வழங்கப்படும்.

2001–2002 ஆம் ஆண்டில் இதற்கான நிதி ஒதுக்கீடு ரூ.20 கோடியாகும்.

மேற்கண்ட மூன்று திட்டங்களில் எடுக்கப்படும் சாலைகள் மாவட்ட இதர சாலைகள் தரத்திற்கு மேம்படுத்தப்படுகின்றன.





தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின்கீழ் அங்காடி மையங்களுக்குச் செல்லும் ஊரகச் சாலைகள் மேம்பாடுத் திட்டம்

1992 ஆம் ஆண்டு இத்திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டமானது காஞ்சிபுரம், வேலூர், சேலம், விழுப்புரம், பெரம்பலூர், தஞ்சாவூர், திருவாரூர், திருச்சிராப்பள்ளி மற்றும் நாகப்பட்டினம் ஆகிய ஒன்பது மாவட்டங்களில் உள்ள 23 அங்காடி மையங்களை உள்ளடக்கி ரூ.109 கோடி மதிப்பீட்டில் 859 கி.மீ. நீளச் சாலைகளை உலக வங்கி நிதி உதவியுடன் மேம்பாடு செய்ய வழிகோலுகிறது. 23 அங்காடி மையங்களில், 22 அங்காடி மையங்களுக்கு சாலை இணைப்புப் பணிகள் முடிவடைந்துள்ளன. மீதமுள்ள ஒரு அங்காடி மையத்திற்கு சாலை இணைப்புப் பணிகள் முடியும் தருவாயில் உள்ளன.

புயல் மற்றும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட சாலைகள் மற்றும் பாலங்கள் தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் புனரமைத்தல்

1994 ஆம் ஆண்டு இத்திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 12 சாலைகள் மற்றும் 24 பாலங்கள் புனரமைக்கும்/புதுப்பிக்கும் பணிகள் ரூ.21 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டன. இத்திட்டம் முடியும் தருவாயில் உள்ளது.

8. சிறப்புச் சாலைப் பணிகள்

கரும்புச் சாலைகள் அபிவிருத்தித் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் சர்க்கரை ஆலைகள் அமைந்துள்ள பகுதிகளில் கரும்புத் சாலைகள் அமைத்தல் மற்றும் மேம்படுத்துதல் ஆகிய பணிகளை தீர்வை நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்டன. இதுவரையில் மொத்தம் 1366 கி.மீ. சாலைகள் அமைத்து மேம்படுத்தப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகின்றன. இச்சாலைகள் மாவட்ட இதர சாலைகளாக வகைப்படுத்தப் பட்டு பராமரிப்பிற்கு நெடுஞ்சாலைத் துறை வசம் எடுத்துக்கொள்ளப் பட்டுள்ளன. இதில் 403 கி.மீ. சாலை 2000–2001-ல் ரூ.20 கோடி மதிப்பில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

மேற்குத் தொடர்ச்சி மலைச் சாலைகள் வளர்ச்சித் திட்டம்

ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் மைய அரசின் முதலீட்டு உதவி இத்திட்டத்திற்கென, ரூ.50.07 இலட்சம் என மைய அரசால்

நிர்ணயிக்கப்பட்டு, அதன்படி இந்த ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டக் காலம் முழுமைக்கும் ரூ.86.65 இலட்சத்திற்கான கருத்துருக்களை அனுப்பி வைக்குமாறு தமிழக அரசை மைய அரசு கேட்டுக் கொண்டுள்ளது. இத்திட்டம் ஈரோடு, கோயம்புத்தூர், மதுரை, திண்டுக்கல், தேனி, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய எட்டு மாவட்டங்களில் செயலாக்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின்கீழ் 2000–2001 ஆம் நிதி ஆண்டில் ரூ.55 இலட்சம் மதிப்பீட்டில் 2 சாலைப் பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

இப்பணிகளுக்கு 2001–2002 ஆம் நிதியாண்டிற்கான திருத்திய வரவு செலவுத் திட்ட மதிப்பீடு ரூ.0.57 கோடி ஆகும்.

### மலைப்பகுதி வளர்ச்சித் திட்டம்

ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் நீலகிரி மாவட்டத்தில் பல்வேறு அம்சங்கள் அடங்கிய மலைப் பகுதி வளர்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்திட சிறப்பு நிதி உதவியாக ரூ.124.05 கோடி தொகையை மைய அரசு நிர்ணயித்துள்ளது. இதில் ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டக் காலம் முழுமைக்கும் சாலைப் பணிகளுக்கான ஒதுக்கீடு ரூ.17.97 கோடி ஆகும். இத்திட்டத்திற்கு இதுவரை ரூ.10.41 கோடி செலவிடப்பட்டுள்ளது.

## 9. கருவிகளும் தளவாடங்களும்

நெடுஞ்சாலைத் துறையைச் சார்ந்த இயந்திர அலகு பல்வேறு கருவிகள் மற்றும் தளவாடங்களின் பராமரிப்பை கவனித்து வருகிறது. சென்னை, புதுக்கோட்டை மற்றும் கோவை ஆகிய இடங்களில் உள்ள பணிமனைகளில் தளவாடங்களில் பெரும் பழுதுகள் நிவர்த்தி செய்யப்படுகின்றன. மேலும், சென்னையிலுள்ள பண்டகம் மற்றும் கொள்முதல் கோட்டமானது கட்டுமானப் பணிகளுக்கு இரும்புக் கம்பிகள் வாங்கி, தேவைப்படும் கோட்டத்துக்கு வழங்குதல், கருவிகளும் தளவாடங்களும் மட்டுமின்றி, விஞ்ஞானக் கருவிகள் மற்றும் அவற்றிற்கான உதிரி பாகங்களையும் கொள்முதல் செய்து வழங்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. மேலும், இக்கோட்டத்தால், ஆயுட்காலம் முடிவடைந்த தளவாடங்கள் மற்றும் வாகனங்கள் பயனற்றதெனக் கழிக்கப்பட்டு காலமுறையில் புதியன வாங்கப்படுகின்றன.

கருவிகள் மற்றும் தளவாடங்கள் கொள்முதல் செய்தல் மற்றும் அவற்றின் பராமரிப்பு ஆகியவற்றிற்கான நிதி ஒதுக்கீட்டின் நிர்வாகம்





தலைமைப் பொறியாளர் (நெடுஞ்சாலை) இயந்திரம் அவர்களின் பொறுப்பில் உள்ளது.

2001–2002 ஆம் ஆண்டு திருத்திய வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.19.00 இலட்சங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

## 10. நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம்

1957 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் டெல்லியிலுள்ள மத்திய சாலை ஆராய்ச்சி நிலையத்திற்கு இணையாக முழுமை பெற்றுள்ளது. இந்த ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாட்டில் அமையப் பெறும் சாலைகள், பாலங்களுக்கான கட்டுமானம், பராமரிப்பு தொடர்பான செயல்முறை ஆராய்ச்சிகளை ஏற்றுக்கொண்டு செயல்படுகிறது.

நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் கீழ்க்கண்ட பிரிவுகளில் தன்னிறைவு பெற்ற ஆய்வகங்களைக் கொண்டுள்ளது:

1. மண் மற்றும் அடித்தளப் பொறியியல்
2. கற்கலவை மற்றும் கட்டுமானம்
3. நிலக்கீல் மற்றும் சரளைக் கற்கள்
4. போக்குவரவு மற்றும் போக்குவரத்து

நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பணிகளை விரைவுபடுத்தவும், கட்டுமானத்தின்போது தரக்கட்டுப்பாட்டைப் பராமரிக்கவும், சோதனை செய்வதற்கும் தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் மண்டல ஆய்வகங்கள் நிறுவப்பட்டுள்ளன. இத்துறையின் பணிகளின் தரத்தை கண்காணித்து உறுதிப்படுத்தும் அலுவலராக, நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய இயக்குநர் நியமிக்கப்பட்டுள்ளார்.

2001–2002 இல் நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய திட்டப் பணிகளுக்காக ரூ.0.13 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுப் பணிகளை தீவிரப்படுத்தும் பொருட்டு, தொழில் நுட்பரீதியாக அனுமதிக்கப்பட்ட திட்ட மதிப்பீட்டில் தரக் கட்டுப்பாட்டுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையில் பாதியை நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்திற்குப் பகிர்ந்தளிப்பதன் மூலம் நிதி ஆதாரங்களைப் பெருக்க முடியும் என்பது உணரப்படுகிறது. இது பரிசீலனையில் உள்ளது.

[2001 செப்டம்பர் 8

சாலைகள் மற்றும் பாலங்களின் தொழில் நுட்ப விவரங்களையும், புள்ளி விவரங்களையும் சேகரித்து விவர வங்கி அமைக்கும் பணி முன்னேற்ற நிலையில் உள்ளது. பால விவரங்களும் அனைத்துச் சாலைகளிலுள்ள போக்குவரத்துக் கணக்கெடுப்பு விவரங்களும் ஏற்கெனவே திரட்டப்பட்டு நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய கணினியில் பதிவு செய்யப்பட்டு வருகிறது. சாலை மேற்பரப்பு, ஓடுதளத்தின் தரம், மண்ணின் தன்மை முதலான விவரங்கள் திரட்டப்பட்டுள்ளன.

புதிதாகப் பணி அமர்த்தப்பட்ட 170 உதவிப் பொறியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மேலும் 109 உதவிப் பொறியாளர்களுக்கு 2001–2002–ல் பயிற்சி அளிக்கப்படும்.

## 11. சாலையோரங்களில் நிழல் தரும் மரங்கள்

தமிழ்நாடு, பல ஆண்டுகளாக சுற்றுச்சூழலை பராமரித்திடவும் வருவாயைப் பெருக்கிடவும் சாலையோரங்களில் மரங்கள் நடப்படுவதை முன்னிலைப்படுத்தி வருகிறது. 1998–99–ல், 92 இலட்சம் பனை விதைகளும் 3,18,000 நிழல் தரும் மரக் கன்றுகளும் நடப்பட்டுள்ளன. மரங்களை நல்ல முறையில் பராமரித்து பாதுகாக்கவும் மரங்களின் ஆயுட்காலம் அதிகரிப்பதை உறுதி செய்யவும் மரக்கன்றுகளை தொகுப்பு வளர்ப்பு முறையில் தொழில்நுட்ப நுணுக்கத்துடன் நடுகின்ற முறை பின்பற்றப்படுகின்றது.

இதுவரை சாலைப் புருவங்களில்தான் மரங்கள் நடப்பட்டு வந்தன. சாலை நில ஓரங்களில் அல்ல. சாலையினை அகலப்படுத்திடும்போது தவிர்க்க முடியாமல் மரங்களை வெட்டுவதால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்பு இந்த நடைமுறையால் வருங்காலங்களில் தவிர்க்கப்படும். இதுவன்றி மழைக்காலங்களில் மரக் கிளைகள் மற்றும் இலைகளிலிருந்து நீர்த்துளிகள் சொட்டுவதால் ஓடுதளம் பாதிக்கப்படுகிறது. மேலும், ஆக்கிரமிப்பிற்கும் சுற்றுச்சூழல் தூய்மை பாதிப்பிற்கும் வழிகோலுகிறது.

மேற்கண்ட சூழ்நிலையில் வருங்காலங்களில் நெடுஞ்சாலைத் துறையால் சாலை நில ஓரங்களில் ஒன்று அல்லது இரண்டு வரிசைகளில் நடப்படும் மரங்கள் சாலையின் இருபுறமும் தகுந்த முறையில் இயற்கையாக ஆக்கிரமிப்பினை தடைப்படுத்தி விடும். ஊராட்சிகள்/ தன்னார்வ இளைஞர் குழுக்கள் ஏனையோரை மரங்கள் நடுவதிலும் பாதுகாப்பதிலும் ஈடுபடுத்திடத் திட்டமிடப்பட்டுள்ளது.



2001 செப்டம்பர் 8]

சாலைப் பணிகளைச் செயல்படுத்திடும் தனியார் முதலீட்டாளர்களும் இதனைக் கடைப்பிடிக்க மாநில அரசு வலியுறுத்தும். 2001–2002 ஆம் ஆண்டில் நான்கு இலட்சம் நிழல் தரும் மரக் கன்றுகள் நட ரூ.70 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 12. மத்திய சாலை நிதித் திட்டம்

அண்மையில் மாற்றியமைக்கப்பட்ட மத்திய சாலை நிதித் திட்டத்திற்கு முன் எடுத்துக்கொள்ளப்பட்ட மத்திய சாலை நிதித் திட்டப் பணிகள் தேசிய நெடுஞ்சாலைப் பிரிவால் செயலாக்கப்பட்டு வருகின்றன. இவற்றில் 2000–2001–ல் ரூ.2.31 கோடி மதிப்பிலான மூன்று பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. ரூ.4.49 கோடி மதிப்பிலான மீதமுள்ள மூன்று பணிகள் பல்வேறு முன்னேற்ற நிலைகளில் உள்ளன.

இந்திய அரசு, பாராளுமன்றத்தில் நிறைவேற்றிய ஒரு சட்டத்தின் மூலம் பெட்ரோல் மற்றும் டீசல் ஆகியவற்றின் மீது சிறப்புத் தீர்வை விதிப்பதன் மூலம் திரட்டப்படும் நிதியைக் கொண்டு மத்திய சாலை நிதி என்ற ஒரு நிதியத்தை அமைத்துள்ளது. இந்நிதியிலிருந்து மாநிலங்களுக்கு தோராயமாக 15 விழுக்காடு பகிர்ந்தளிக்கப்படுகிறது. 2000–2001 ஆம் நிதியாண்டிற்கு மைய அரசு தமிழக அரசுக்கு ரூ.67.03 கோடி நிதி ஒதுக்கீடு அளித்துள்ளது.

மைய அரசு 2000–2001 ஆம் நிதியாண்டிற்கு மத்திய சாலை நிதித் திட்டத்தின்கீழ் 254 பணிகளுக்கு ரூ.149.50 கோடி நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. இவற்றில் தமிழக அரசு 251 பணிகளுக்கு ரூ.148.97 கோடிக்கான நிதி ஒப்புதலை பிப்ரவரி 2001–ல் அளித்துள்ளது. இதனோடுகூட, தேசிய நெடுஞ்சாலை 45–ஏ நீட்சி (பாண்டிச்சேரி–நாகப்பட்டினம் பிரிவு) கி.மீ. 186/6–8–ல் வெட்டாற்றின் குறுக்கே இடிந்து விழுந்த பாலத்தை திரும்பக் கட்டும் பணிக்கு ரூ.6.00 கோடி நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இப்பணிகளுக்கு 2001–2002 ஆம் நிதியாண்டில் திருத்திய வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு ரூ.75 கோடி ஆகும்.

## 13. அரசு சாலைகள் பராமரிப்பு

பொருள்கள் விலை உயர்வு மற்றும் சாலைப் பராமரிப்புப் பணியில் ஈடுபட்டுவரும் சாலைப் பணியாளர்களின் ஊதியம் மற்றும் படிகள் உயர்வு போன்ற காரணங்களினால் சாலைகளைப் பராமரிக்கும் செலவு

தொடர்ந்து அதிகரித்து வருகிறது. எனவே, நடப்பு நிதியாண்டிற்கான பராமரிப்பு நிதி ஒதுக்கீடு ரூ.182.64 கோடியிலிருந்து 2001–2002 ஆம் ஆண்டிற்கான திருத்திய வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.207.47 கோடியாக அதிகரித்து அளிக்கப்பட்டுள்ளது.

### 14. சாலைப் பாதுகாப்புத் திட்டம்

தேசிய நெடுஞ்சாலை மற்றும் மாநில நெடுஞ்சாலைகளில் விபத்தில் காயமடைந்தவர்களுக்கு உடனடி மருத்துவ சிகிச்சை அளிக்கும் மையங்கள் 50–75 கி.மீ. இடைவெளியில் அமைக்கப்பட்டு உள்ளன. இதன் முன்னோடி நடவடிக்கையாக, விபத்தில் காயமடைந்தவர்களுக்கு உடனடி சிகிச்சை அளிக்கும் பொருட்டு சில மையங்கள் தேசிய நெடுஞ்சாலை எண் 45 மற்றும் தேசிய நெடுஞ்சாலை எண் 4–ல் அமைக்கப்பட உள்ளன. இதற்கான அவசர மருத்துவ ஊர்தி மற்றும் பளுதூக்கும் வாகனங்கள் (கிரேன்) மைய அரசின் சாலைப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகத்தின் நிதி உதவி பெற்று மாநில அரசால் செயல்படுத்தப்பட உள்ளது.

### 15. தமிழ்நாடு சாலை மேம்பாட்டுக் கம்பெனி

சாலை அமைக்கும் தனியார் தொழில் நிறுவனம் நெடுஞ்சாலைத் துறையின் எதிர்பார்ப்பிற்கேற்றவாறு தொழில் முறையில் வளர்ச்சி அடையவில்லை. இத்துறையானது உட்கட்டமைப்பிற்கு அதிக நிதி உதவி அளித்து வருகிற தருணத்தில், அதன் நடவடிக்கை பெரும் பங்குடையதாக இருக்கவேண்டும். மாறி வரும் இந்த சூழ்நிலையில் பொது மற்றும் தனியார்களின் பங்கு உள்கட்டமைப்பின் வளர்ச்சிக்கு மிகவும் அவசியமாகிறது. இந்த நோக்குடன் ஒரு கூட்டு முயற்சி நிறுவனமாக தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (TIDCO) மற்றும் ஐஎல் & எப்எஸ். (I.L. & F.S.) இவற்றிற்கு இணையான வணிக ரீதியில் சாலை மேம்பாட்டுத் திட்டங்களைக் கண்டறிதல், திட்டமிடல், வடிவமைத்தல் மற்றும் செயலாக்கத்தினை மேற்பார்வையிடல் ஆகியவற்றிற்காக தமிழ்நாடு சாலை மேம்பாட்டுக் கம்பெனி நிறுவப்பட்டது.

தமிழ்நாட்டு சாலை மேம்பாட்டுக் கம்பெனி தற்போது கிழக்குக் கடற்கரைச் சாலையினை சோழிங்கநல்லூரிலிருந்து (கி.மீ. 22/3) பாண்டிச்சேரி (கி.மீ.135/5) வரையிலும் மேம்படுத்தி பராமரிக்கும் பணியினை கட்டுதல், இயக்குதல், மாற்றுதல் (BOT) அடிப்படையில் மேற்கொண்டுள்ளது. இச்சாலையில் மேம்பாட்டுப் பணிகள் மூன்று



கட்டங்களாக முன்னேற்றத்தில் உள்ளன. மேலும் இப்பணிகள் டிசம்பர் 2001–க்குள் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

### 16. ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்

சாலைக் கட்டமைப்புகளில் முக்கிய சீர்திருத்தங்களை ஏற்படுத்த ஏதுவாக, இத்துறையினால் அறிமுகப்படுத்தப்பட்ட நெடுஞ்சாலை மசோதா 2001–க்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதற்கு இந்தியக் குடியரசுத் தலைவரின் ஒப்புதலைப் பெற்றுத்தர மைய அரசிடம் கோரப்பட்டுள்ளது. நெடுஞ்சாலை ஆக்கிரமிப்புகளை அப்புறப்படுத்துவது, நெடுஞ்சாலை மேம்பாடு மற்றும் பராமரிப்புப் பணிகளுக்காகத் தனியாரிடம் ஒப்பந்தம் செய்துகொள்வது, சாலை அமைப்புக்குத் தேவைப்படும் நிலம் கையகப்படுத்தும் பணிகளை எளிமைப்படுத்துவது போன்ற நடவடிக்கைகளை எடுக்க, துறை அலுவலர்களுக்குப் போதிய அதிகாரங்களை இச்சட்டம் அளிக்கும். பல்வேறு சாலைகளின் வகைப்பாட்டை நிர்ணயிக்கவும், பல நிலைகளில் உள்ள அலுவலர்களுக்குத் தேவைப்படும் அதிகாரங்களை உயர்நிலை அலுவலர்கள் அளிக்கவும் இச்சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

### IV சாலைகளும் பாலங்களும் – பகுதி II திட்டம் (2001–2002)

| வ. எண் | பணியின் பெயர் | மொத்த மதிப்பீடு (ரூபாய் இலட்சங்களில்) | 2001—2002 ஆண்டிற்கான ஒதுக்கீடு (ரூபாய் இலட்சங்களில்) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | I மாநில நெடுஞ்சாலைகள் (சாலைகள்) | | |
| 1. | தொப்பூர்—மேட்டூர்—பவானி—ஈரோடு சாலை கி.மீ. 74/0—78/8 வரை உறுதிப்படுத்துதல் (4.8 கி.மீ.) (மா.நெ.20) | 40.00 | 20.00 |
| 2. | ஆரல்வாய்மொழி—நெடுமங்காடு சாலையில் கி.மீ.10/0—11/6, 12/0—13/0 வரை அகலப்படுத்துதல் மற்றும் கி.மீ. 11/6—12/0ல் உறுதிப்படுத்துதல் (3 கி.மீ.) (மா.நெ.45) | 65.00 | 32.50 |
| | மொத்தம் | 105.00 | 52.50 |

II மாநில நெடுஞ்சாலைகள் (பாலங்கள்)

| | | | |
|---|---|---|---|
| 1. | கிருஷ்ணகிரி—இராணிப்பேட்டை சாலை கி.மீ. 115/4—ல் உள்ள குறுகிய பாலத்தைத் திரும்பக் கட்டுதல் | 20.00 | 10.00 |
| 2. | கள்ளக்குறிச்சி—திருவண்ணாமலை சாலை கி.மீ.4/2—ல் உள்ள சிறு பாலத்தைத் திரும்பக் கட்டுதல் (மா.நெ.6) | 25.00 | 12.50 |
| 3. | தஞ்சாவூர் புறவழிச் சாலை கி.மீ. 7/4—ல் சமுத்திரம் ஏரியில் உள்ள சிறுபாலத்திற்குப் பதிலாக புதிய சிறுபாலம் திரும்பக் கட்டுதல் | 5.00 | 2.50 |
| 4. | ஆரல்வாய்மொழி—நாகர்கோவில்—இராஜாக்கமங்கலம்—குளச்சல் சாலையில் கி.மீ.16/4—ல் உள்ள பாலத்தைத் திரும்பக் கட்டுதல் (மா.நெ.46) | 45.00 | 22.50 |
| 5. | ஆரல்வாய்மொழி—நாகர்கோவில்—இராஜாக்கமங்கலம்—குளச்சல் சாலையில் கி.மீ.14/2—ல் உள்ள பாலத்தைத் திரும்பக் கட்டுதல் (மா.நெ.46) | 30.00 | 15.00 |
| 6. | ஆரல்வாய்மொழி—நாகர்கோவில்—இராஜாக்கமங்கலம்—குளச்சல் சாலையில் கி.மீ.9/8—ல் உள்ள பாலத்தைத் திரும்பக் கட்டுதல்(மா.நெ.46) | 13.00 | 6.50 |
| | மொத்தம் | 138.00 | 69.00 |



III மாவட்ட பெரிய சாலைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | சித்தூர்—திருத்தணி சாலை கி.மீ.33/0—39/0 வரை அகலப் படுத்தி உறுதிப்படுத்துதல் (6 கி.மீ) | 50.00 | 25.00 |
| 2. | பெரம்பலூர்—துறையூர் சாலை கி.மீ.95/0—123/8—ல் தேவைக்கேற்ப ஒருவழிப் பாதையை இடைவெளி தடைப் பாதையாக அகலப் படுத்துதல் (4.6 கி.மீ) | 32.00 | 16.00 |
| 3. | அஞ்சுகிராமம் சாலை கி.மீ.5/8—6/8, 7/2—8/0—ல் அகலப்படுத்தி உறுதிப்படுத்துதல் மற்றும் கி.மீ. 6/8—7/2—ல் உறுதிப்படுத்துதல் (2.2 கி.மீ) | 45.00 | 22.50 |
| | மொத்தம் | 127.00 | 63.50 |

IV மாவட்ட இதர சாலைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. | மாடம்பாக்கம் சாலை கி.மீ. 0/0—5/0 வரை அகலப் படுத்துதல் (5 கி.மீ.) | 50.00 | 25.00 |
| 2. | மஞ்சாலுமூடு—முக்கூட்டுக்கல்—கிழ்மாங்கோடு சாலையில் கி.மீ.0/0—5/2—ல் உறுதிப் படுத்துதல் (5.2 கி.மீ.) | 23.00 | 11.50 |
| | மொத்தம் | 73.00 | 36.50 |

V கருவிகளும் தளவாடங்களும்

| | | | |
|---|---|---|---|
| 1. | தலைமைப் பொறியாளர் (பொது) (நெ) அலுவலகத்திற்கு என்லார்ஜருடன் கூடிய தானியங்கி ஒளிக்கதிர் இயந்திரம் வாங்குதல் | 2.50 | 2.50 |
| 2. | தலைமைப் பொறியாளர் (பொது) (நெ) மற்றும் தலைமைப் பொறியாளர் (தே.நெ) அலுவலகங்களுக்கு உள்ளமைப்பு பேசி வசதிகள் செய்தல் | 2.00 | 2.00 |
| 3. | நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலைய கணினி மையத்தில் லைன் பிரிண்டர் வசதி செய்தல் | 2.00 | 2.00 |
| 4. | தலைமைப் பொறியாளர் (தே.நெ) மற்றும் தலைமைப் பொறியாளர் (தே.நெ) மற்றும் தலைமைப் பொறியாளர் (நெ) திட்டம்—2 அலுவலகங்களுக்கு ஒளிக்கதிர் இயந்திரங்கள் வாங்குதல் | 3.00 | 3.00 |

தமிழ்நாட்டில் உள்ள சிறு துறைமுகங்களின் மேம்பாட்டிற்கான முதலீட்டு வாய்ப்புகளுக்காக துறைமுகக் கொள்கை இவ்வாரியத்தால் உருவாக்கப்பட்டு அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

காட்டுப்பள்ளி துறைமுகம் திருவாளர்கள் ஓபக் சிக்கால் டெர்மினல்ஸ் லிமிடெட் அவர்களால் அவர்களது மிகப் பெரிய அளவிலான பெட்ரோகெமிக்கல் பூங்காவிற்குத் தேவைப்படும் திரவ எரிவாயுப் பொருள்களைக் கையாள்வதற்கான கடல்சார் கட்டுமான வசதிகளை நிறுவுவதற்காக சிறு துறைமுகமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

திருவாளர்கள் கெம்ப்ளாஸ்ட் சன்மார் லிமிடெட் அவர்களால் அவர்களது பி.வி.சி. தயாரிக்கும் தொழிற்சாலைக்கான வினைல் குளோரைடு மோனமர் (விசிஎம்) கையாள்வதற்கான கடல்சார் வசதிகளை நிறுவுவதற்காக கடலூர் துறைமுகத்தின் தெற்கு எல்லைகள் விரிவுபடுத்தப் பட்டுள்ளன. கடல்சார் கட்டுமானங்களை அமைப்பதற்கான சுற்றுப்புறச் சூழல் தடையின்மைச் சான்றிதழ் எதிர்பார்க்கப்படுகிறது.

திருவாளர்கள் எஸ்.வி. சுகர் மில்ஸ் லிமிடெட், பழைய சீவரம், காஞ்சிபுரம் மாவட்டம் அவர்கள் கடலூர் துறைமுகத்தில் சர்க்கரைப் பாகை ஏற்றுமதி செய்ய உத்தேசித்துள்ளது. அதற்காக 3.55 ஏக்கர் துறைமுக நிலம் மேற்படி நிறுவனத்திற்கு ஆண்டு உரிம அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கடலூருக்கருகே முழுவதுமாக கடலில் அமையப் பெற்றுள்ள பிஓய்3 எண்ணெய் வளப்பகுதி என்னும் இத்துறைமுகம் இங்குள்ள எண்ணெய்க் கிணறுகளிலிருந்து எடுக்கப்படும் கச்சா எண்ணெயை ஏற்றுமதி செய்வதற்காக சிறு துறைமுகமாக பிரத்யேகமாக அறிவிக்கப்பட்டுள்ளது. இத்துறைமுகம் 1997, அக்டோபர் முதல் செயல்பட்டு வருகிறது. 1998–99 ஆம் ஆண்டில் இத்துறைமுகத்தில் 3,93,620 மெட்ரிக் டன் கச்சா எண்ணெய் கையாளப்பட்டது. எண்ணெய்க் கிணறுகளிலிருந்து எடுக்கப்படும் கச்சா எண்ணெய் நாளுக்கு நாள் குறைந்து வருவதால் 2000–2001 ஆம் ஆண்டில் 1,61,325 மெட்ரிக் டன் கச்சா எண்ணெய் மட்டுமே கையாளப்பட்டது.

திருச்சோபுரம் துறைமுகம் திருவாளர்கள் நாகார்ஜுனா ஆயில் கார்ப்பரேஷன் லிமிடெட் அவர்களால் நிறுவப்படவுள்ள எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைக்காக கச்சா எண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய்ப் பொருட்கள் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக்காக சிறு துறைமுகமாக அறிவிக்கப்பட்டுள்ளது.





திருக்கடையூர் துறைமுகம் திருவாளர்கள் பி.பி.என். பவர் ஜெனரேட்டிங் கம்பெனி லிமிடெட் அவர்களால் பிள்ளைபெருமாள் நல்லூரில் உள்ள அவர்களது 330 மெகாவாட் கேஸ் கம்பைண்ட் சைக்கிள் பவர் திட்டத்திற்குத் தேவைப்படும் எரிபொருள் நாப்தா மற்றும் இயற்கை வாயுவை பிரத்யேகமாகக் கையாள்வதற்காக அறிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி நிறுவனம் தனது மின் நிலையத்திற்காக ஒரு முனை நங்கூர மிதவைத் திட்டம், நிலையான தோணித் துறை, நீர்க் குழாய் மற்றும் நாப்தா குழாய் அமைப்பு வசதிகளை நிறுவியுள்ளது. இத்துறைமுகத்தில் 14–01–2001 அன்று முதற் கப்பல் வருகை புரிந்து 15,020 மெட்ரிக் டன் எடையுள்ள நாப்தாவை இறக்குமதி செய்தது. இத்துறைமுகத்தில் ஆண்டடொன்றுக்கு சுமார் 4.00 இலட்சம் மெட்ரிக் டன் அளவுள்ள நாப்தா இறக்குமதி செய்யப்படும்.

நாகப்பட்டினம் துறைமுகத்திற்குப் புத்துயிர் ஊட்டும் வகையில் திருவாளர்கள் புட்ஸ், பேட்ஸ் மற்றும் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட் அவர்களால் சமையல் எண்ணெய் கையாள்வதற்கான சேமிப்புக் கலத்தை நிறுவுவதற்கு தமிழ்நாடு கடல்சார் வாரியம் 1999–ல் ஒப்புதல் அளித்தது.

2000–2001 ஆம் ஆண்டில் இத்துறைமுகத்திற்கு 32 கப்பல்கள் வந்து 70,267 மெட்ரிக் டன் சமையல் எண்ணெய் மேற்படி நிறுவனத்தால் இறக்குமதி செய்யப்பட்டது. சமையல் எண்ணெய் கப்பல்கள் தொடர்ந்து இத்துறைமுகத்திற்கு வருகை புரிகின்றன. துறைமுக நடவடிக்கைகளை மேலும் மேம்படுத்துவதற்காக சமையல் எண்ணெய் கையாள்வதற்கான கடல்சார் வசதிகளை நிறுவுவதற்காக தனியார் நிறுவனங்களுக்கு துறைமுக நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கட்டுமானப் பணிகள் அந்நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திருவாளர்கள் சென்னை பெட்ரோலியம் கார்ப்பரேஷன் லிமிடெட், அவர்களது பனங்குடி எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைக்காக ஆண்டொன்றுக்கு 4 முதல் 5 இலட்சம் மெட்ரிக் டன் கச்சா எண்ணெய்யைக் கையாள்வதற்காக நாகப்பட்டினம் துறைமுகத்தில் அணுகு பாலத்துடன் கூடிய கான்கிரீட்டிலான தோணித் துறையை கட்டுவதற்கு உத்தேசித்துள்ளனர். அதற்கான சுற்றுப்புறச்சூழல் தடையின்மைச் சான்றிதழ் மைய அரசின் சுற்றுப்புறச் சூழல் மற்றும் வன அமைச்சகத்தால் 29–5–2001 அன்று வழங்கப்பட்டுள்ளது. தோணித் துறை கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. 2002 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் மேற்படி நிறுவனம் கச்சா எண்ணெய்யைக் கையாள உத்தேசித்துள்ளது.

[2001 செப்டம்பர் 8

| | | | |
|---|---|---|---|
| 5. | தலைமைப் பொறியாளர் (தே.நெ) அலுவலகத்திற்கு தானியங்கி படிப்பெருக்கி இயந்திரம் ஒன்று வாங்குதல் | 0.50 | 0.50 |
| 6. | தலைமைப் பொறியாளர் (நெ), இயந்திரம், தலைமைப் பொறியாளர் (நெ), திட்டம்—2 மற்றும் தலைமைப் பொறியாளர் (நெ), நபார்டு அலுவலகங்களுக்கு பிரிண்டருடன் கூடிய கணினிகள் வாங்குதல் | 6.00 | 6.00 |
| 7. | கோட்டப் பொறியாளர் (நெ) புலனாய்வு அலுவலகத்திற்கு விஞ்ஞானக் கருவிகள் வாங்குதல் | 1.00 | 1.00 |
| 8. | தலைமைப் பொறியாளர் (பொது) (நெ) மற்றும் தலைமைப் பொறியாளர் (தே.நெ) அலுவலகங்களுக்கு தானியங்கி தொலைபேசியகம் அமைத்தல் | 2.00 | 2.00 |
| | மொத்தம் | 19.00 | 19.00 |
| VI | ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி | | |
| 1. | கற்கலவை சாலை மற்றும் பாலத்தின் ஓடு தளங்கள் மீது கடின மேற்தளம் அமைத்தல் பற்றிய ஆய்வு | 5.00 | 5.00 |
| 2. | மணற்கப்பி கலவையில் பெரு மணல் பங்கினால் குழைவுக் குறியீடு மாறுவதைப் பற்றிய ஆய்வு | 8.00 | 8.00 |
| | மொத்தம் | 13.00 | 13.00 |
| | ஆக மொத்தம் | 475.00 | 253.50 |

## துறைமுகங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து மேம்பாடு

### தமிழ்நாடு கடல்சார் வாரியம்

தமிழ்நாட்டில் சுமார் 1000 கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரைப் பகுதியில் சென்னை, எண்ணூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய 3 பெரிய துறைமுகங்களும் காட்டுப்பள்ளி, எண்ணூர் சிறு துறைமுகம், கடலூர், திருச்சோபுரம், பி.ஒய்.3 எண்ணெய் வளப்பகுதி, திருக்கடையூர், நாகப்பட்டினம், பாம்பன், இராமேசுவரம், வாலிநோக்கம், புன்னக்காயல், மணப்பாடு, கன்னியாகுமரி மற்றும் குளச்சல் ஆகிய 14 சிறு துறைமுகங்களும் அமைந்துள்ளன.



2001 செப்டம்பர் 8]

தமிழ்நாடு கடல்சார் வாரியச் சட்டம், 1995 (தமிழ்நாடு சட்டம் 4/96)-ன்கீழ் 18-3-1997 முதல் தமிழ்நாடு கடல்சார் வாரியம் அமைக்கப்பட்டது. இவ்வாரியம் தமிழக அரசின் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையின்கீழ் தமிழ்நாட்டிலுள்ள சிறு துறைமுகங்களை நிர்வகித்து, கட்டுப்படுத்தி, முறைப்படுத்தி மேலாண்மை செய்து வருகின்றது.

தமிழ்நாடு கடல்சார் வாரியம் மாநிலத்தில் தொழிற்சாலைகளை அமைப்பதற்கு முன்னுரிமை அளித்து துறைமுகத்தை அடிப்படையாகக் கொண்ட எண்ணெய் தொழிற்சாலைகள்/மின் உற்பத்தி நிலையங்கள் ஆகியவற்றுக்காக தனியார் துறைமுகங்கள்/தோணித் துறைகள்/மிதவைகள் ஆகியவை நிறுவப்படுவதற்கு ஊக்கமளித்து வருகிறது. கட்டுதல், தனதாக்குதல், இயக்குதல் மற்றும் ஒப்படைத்தல் (BOOT) அடிப்படையில் பல்வகைச் சரக்குகளை கையாளும் துறைமுகங்களைக் கட்டவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள பதினான்கு சிறு துறைமுகங்களுள் காட்டுப்பள்ளி, எண்ணூர் சிறு துறைமுகம், திருச்சோபுரம், பி.ஒய்.3 எண்ணெய் வளப்பகுதி, திருக்கடையூர், புன்னக்காயல் மற்றும் மணப்பாடு ஆகிய ஏழு துறைமுகங்கள் தனியார் பங்கேற்பின்கீழ் பிரத்யேகத் துறைமுகங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. இங்கு அனைத்து கடல்சார் வசதிகளும் சம்பந்தப்பட்ட நிறுவனத்தினராலேயே அமைக்கப்படும். இந்த ஏழு தனியார் துறைமுகங்களில் எண்ணூர் சிறு துறைமுகம், பி.ஒய்.3 எண்ணெய் வளப்பகுதி மற்றும் திருக்கடையூர் ஆகியவை தற்சமயம் இயங்கி வருகின்றன. ஏனைய நான்கு தனியார் துறைமுகங்களை அபிவிருத்தி செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

சிறு துறைமுகங்களில் கீழ்க்காணும் சரக்குகள் கையாளப்படுகின்றன:

| ஏற்றுமதி | இறக்குமதி |
|---|---|
| கச்சா எண்ணெய் | சமையல் எண்ணெய் |
| பொது சரக்குகள் | திரவ அமோனியா |
| | நாப்தா |
| | திரவ இயற்கை வாயு |
| | ப்ரப்பிலின் திரவ வாயு |
| | வினைல் குளோரைடு மோனமர் |
| | பொது சரக்குகள் |

வாலிநோக்கத்தில் அமைந்துள்ள அமைதியான கடல் மற்றும் சரிவான கடல் நிலப்பகுதியின் காரணமாக இத்துறைமுகம் கப்பல் உடைப்புப் பணிக்கு உகந்ததென குறிப்பிடப்பட்டுள்ளது. திருவாளர்கள் நந்த் ஷிப் பிரேக்கிங் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட், 50 கப்பல் உடைப்புத் தளங்கள் மற்றும் அதனைச் சார்ந்த தொழிற்சாலைகளை இங்கு அமைப்பதற்கு கொள்கை அளவில் ஒப்புதல் அளித்துள்ளது.

திருவாளர்கள் இந்தியன் பவர் பிராஜெக்ட் லிமிடெட் அவர்களால் வேம்பாரில் நிறுவப்படவுள்ள 2000 மெகாவாட் கேஸ் டர்பைன் பவர் பிராஜெக்ட்டிற்கு ஆண்டொன்றுக்குத் தேவைப்படும் திரவ இயற்கை வாயுவைக் கையாளுவதற்காக தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள மணப்பாடு, சிறு துறைமுகமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மலேசிய அரசு கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள குளச்சல் துறைமுகத்தினை சரக்குப் பெட்டகங்களை கையாளும் துறைமுகமாக உருவாக்குவதற்கு ஆர்வம் காட்டியது. அதன் தொடர்பாக இத்துறைமுகத்தின் பொருளாதாரம் மற்றும் ஆற்றலை அறிவதற்கான சாத்தியக்கூறு அறிக்கை ஒன்றைத் தயாரித்து தமிழக அரசிடம் ஜூன் 2001 முதல் வாரத்தில் சமர்ப்பித்தது. அவ்வாய்வறிக்கை தற்சமயம் மதிப்பாய்வு செய்யப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் இலட்சியமானது துறைமுகங்களுக்கும், தொழிற்சாலைகளுக்கும் இடையே இணைப்புகள் உருவாக்குவதும் மற்றும் தொழிற்சாலைகளுடன் நட்புறவோடு இருப்பதுமாகும். தனியார் பங்கேற்பின் மூலம் அதிக அளவிலான பிரத்யேகத் துறைமுகங்களை உருவாக்கி, மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியினை ஊக்குவிப்பதனை இவ்வாரியம் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. கப்பல் உடைப்பு மற்றும் கப்பல் பழுதுபார்த்தல் ஆகிய தொழில்களின் வளர்ச்சி, தற்போதுள்ள பெரிய துறைமுகங்களின் இட நெருக்கடியினை குறைத்தல், ஓய்வு நேர மற்றும் நீர் விளையாட்டிற்கான வசதிகளை செய்து கொடுப்பது ஆகியன தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் கொள்கைகளில் அடங்கப்பெற்றவையாகும்.

## சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டம்

சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டம் இராமேசுவரம் அருகில் பாக் ஜலசந்தியையும் மன்னார் வளைகுடாவையும் கப்பல் செல்லும் வகையில் இணைக்கப்படவுள்ள கால்வாய்த் திட்டமாகும். இந்தியாவின் கிழக்கு





கடற்கரையினையும் மேற்கு கடற்கரையினையும் இணைக்கும் கடல் வழியில் சுமார் 400 கடல் மைல் தூரத்தினைக் குறைக்கும் வகையில் இத்திட்டம் அமையும். மேலும் அதனால் 36 மணி நேர கப்பல் பயண நேரமும் குறையும்.

இத்திட்டத்திற்காக மைய அரசு ரூ.5 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இந்நிதி உதவியின் மூலம் புதிதாக பொருளாதார தொழில் நுட்ப ஆய்வறிக்கை ஒன்றினைத் தயார் செய்து சேது சமுத்திரக் கால்வாய் செல்லும் வழி முடிவு செய்யப்படவுள்ளது.

மைய அரசு தூத்துக்குடி துறைமுகத்திடம் இப்பொருளாதார தொழில் நுட்ப அறிக்கையைத் தயார் செய்ய வேண்டிய ஒப்பந்தப் புள்ளிகளைக் கோருமாறு கேட்டுக்கொண்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவதற்கான நடவடிக்கையை தூத்துக்குடி துறைமுகப் பொறுப்புக் கழகம் மேற்கொண்டு வருகிறது. நாட்டின் நீண்ட கால வளர்ச்சியைக் கருத்தில் கொண்டும் மாநிலத்தின் முன்னேற்றத்திற்காகவும் இவ்வரசு இத்திட்டத்தினை விரைவில் செயல்படுத்திடுமாறு மத்திய அரசை கேட்டுக்கொண்டுள்ளது.

## பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம்

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் 11–4–1974–ல் கம்பெனிகள் சட்டம், 1956–ன்படி தமிழக மின்சார வாரியத்திற்குச் சொந்தமான அனல் மின் நிலையங்களுக்குத் தேவையான நிலக்கரியை ஏற்றி வருவதற்காக நிறுவப்பட்டது. இக்கழகமானது தமிழக மின்சார வாரியத்திற்குத் தேவையான நிலக்கரியை ஹால்டியா–பாரதீப் மற்றும் விசாகப்பட்டினம் துறைமுகங்களிலிருந்து ஏற்றி சென்னை மற்றும் தூத்துக்குடி துறைமுகங்களுக்குக் கொண்டு வந்து இறக்குகிறது. நிலக்கரியைக் கொண்டுவரும் தேவை ஒவ்வொரு வருடமும் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. இந்தக் குறிக்கோளைப் பூர்த்தி செய்வதற்காக பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகமானது 40,000 டன் கொள்ளளவுள்ள குறைந்த ஆழத்தில் செல்லத் தக்கவாறு வடிவமைக்கப்பட்ட மூன்று கப்பல்களை சொந்தமாக வாங்கி அவற்றை முழுமையாக மின்வாரியத்திற்கு நிலக்கரி கொண்டு வர உபயோகப்படுத்துகிறது. இவை தவிர, கழகமானது 12 முதல் 16 கப்பல்கள் வரை இந்தியக் கப்பல் கம்பெனிகள் மற்றும் அயல் நாட்டு கப்பல் கம்பெனிகளிடமிருந்து வாடகைக்குப் பெற்றும், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குத் தேவையான நிலக்கரியைக் கொண்டுவர பயன்படுத்தி வருகிறது.

[2001 செப்டம்பர் 8

கழகமானது கடந்த ஐந்து வருடங்களில் கையாண்ட நிலக்கரியின் அளவு, ஈட்டிய சரக்குக் கட்டணம் மற்றும் ஈட்டிய இலாப/நட்ட விவரங்கள் பின்வருமாறு:-

| வருடம் | நிலக்கரியின் அளவு (மெட்ரிக் டன்) இலட்சங்களில் | சரக்குக் கட்டணம் (ரூபாய் இலட்சத்தில்) | நிகர இலாபம்/நட்டம் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1996-1997 | 113.91 | 35,915.43 | 322.18 |
| 1997-1998 | 136.55 | 34,549.63 | (-)613.94 |
| 1998-1999 | 131.78 | 28,040.92 | (-)786.89 |
| 1999-2000 | 117.56 | 27,582.10 | (-)798.63 |
| 2000-2001 | 151.44 | 33,372.74 | (-)543.75 |

1999–2000 ஆம் ஆண்டு கையாண்ட நிலக்கரியின் அளவைவிட 2000–2001 ஆம் வருடம் 33.88 இலட்சம் மெட்ரிக் டன் (29%) அதிகமாகியுள்ளது. 2000–2001 ஆம் ஆண்டில் கையாண்ட நிலக்கரியின் அளவுதான் கடந்த காலங்களில் கையாளப்பட்ட நிலக்கரியின் அளவைவிட அதிகமாகும். இக்கழகம் நட்டத்தில் இயங்குவதற்கு முக்கிய காரணம் 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார வாரியம் கொடுத்த குறைந்த சுமைக் கட்டண விகிதமேயாகும். ஒப்பந்தப்படி, மின்சார வாரியம் அனைத்து இயக்கச் செலவினங்களையும் ஈடு செய்ய வேண்டும். ஆனால் மின்சார வாரியம், கழகத்தின் சொந்தக் கப்பல்களின் இன்றைய மதிப்புக்குரிய தேய்மானத் தொகையை ஈடு செய்யாமல் கப்பல்கள் வாங்கப்பட்ட தேதியன்று உள்ள மதிப்பு தேய்மானத் தொகையை மட்டும் சுமைக் கட்டணத்தில் ஈடு செய்கிறது. மேலும் நீண்ட காலக் கடனுக்குரிய வட்டித் தொகையை ஈடு செய்வதில்லை.

2000–2001–ல் கழகமானது 153.80 இலட்சம் மெட்ரிக் டன் நிலக்கரியை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு கொண்டுவர உத்தேசித்துள்ளது.



2001 செப்டம்பர் 8]

கடந்த 5 ஆண்டுகளாக இக்கழகம் ஈட்டிய இயக்க/நிகர இலாப நட்ட விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

| வருடம் | இயக்க லாபம் (ரூபாய் கோடியில்) | நிகர இலாபம்/நட்டம் (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 1996-1997 | 11.45 | (+) 3.22 |
| 1997-1998 | 7.24 | (-) 6.14 |
| 1998-1999 | 0.21 | (-) 7.87 |
| 1999-2000 | 2.12 | (-) 7.98 |
| 2000-2001 | 3.30 | (-) 5.44 |

நிகழும் 2001–2002 ஆம் ஆண்டில் இக்கழகம் இயக்க இலாபமான ரூ.411.00 இலட்சம் ஈட்டும் என்றும், நிகர நஷ்டம் ரூ.344.65 இலட்சம் ஏற்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ்நாடு மின்சார வாரியம் நீண்ட காலக் கடனுக்குண்டான வட்டியை ஈடு செய்யாததும், சுமைக் கட்டணத்தில் கப்பல்கள் வாங்கப்பட்ட தொகையின் தேய்மானத்தை மட்டுமே ஈடு செய்வதும் இக்கழகம் நஷ்டத்தில் செயல்படக் காரணங்களாகும்.

எண்ணூர் துறைமுகம் 2001 ஆம் ஆண்டு பிப்ரவரி முதல் நாள் அன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களால் நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டது. இத்துறைமுகம் குறிப்பாக பாரதீப்–எண்ணூர் பாதையில் நிலக்கரியைக் கையாள்வதற்காக அமைக்கப்பட்டது. எண்ணூர் துறைமுகத்தில் நிலக்கரி இறக்கும் பணியைக் கையாள்வதற்காக, தானியங்கி அதி நவீனக் கப்பல் ஒன்றை வாடகைக்கு அமர்த்துமாறு தமிழ்நாடு மின்சார வாரியம் கழகத்தைக் கேட்டுக் கொண்டுள்ளது. அவ்வாறே பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் தானியங்கி அதி நவீனக் கப்பல் ஒன்றை (Self Unloader) வாடகைக்கு எடுக்க ஆணை வழங்கியுள்ளது. இக்கப்பல் அக்டோபர் 2001–ல் வந்து சேர்ந்துவிடும். இதுபோலவே கிரேன் இல்லாத இரண்டு அதிநவீன பெரிய கப்பல்களை வாடகைக்கு எடுப்பதற்கான செயற்குறிப்பும் பரிசிலனையில் உள்ளது.

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகமானது அனல் மின் நிலையங்களுக்குத் தேவையான நிலக்கரியைக் கடல் மார்க்கமாக எடுத்துவரும் சீரிய பணியோடு, குமரிமுனையிலிருந்து விவேகானந்தர் நினைவுப் பாறைக்கு படகுப் போக்குவரத்தினையும் நடத்தி வருகிறது.

[2001 செப்டம்பர் 8

ஒவ்வொரு வருடமும் சுமார் 16 இலட்சம் பயணிகள் இந்தப் படகுத் துறையின் மூலம் நினைவுப் பாறைகுப் பயணம் செய்கிறார்கள். 2000 ஆம் ஆண்டு, அக்டோபர்த் திங்கள் 2 ஆம் நாள் முதல், இப்படகுப் போக்குவரத்து திருவள்ளுவர் சிலைக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கடல்சார் பயிற்சி நிறுவனம் தூத்துக்குடியில் இயங்கி வருகிறது. இந்த நிறுவனம் கடல் மாலுமிகள் மற்றும் பொறியாளர்களுக்கான பயிற்சி வகுப்புகளை நடத்துகிறது. அங்கு STCW 1995 விதிகளின்படி தொடக்க முதலுதவி பயிற்சி, தண்ணீரில் தன்னைத்தானே பாதுகாத்துக்கொள்ளும் பயிற்சி, சுய பாதுகாப்பு மற்றும் சமூகப் பொறுப்புகள் பற்றிய பயிற்சி, எண்ணெய்க் கப்பலைப் பற்றித் தெரிந்து கொள்ளுதல் மற்றும் தீ தடுப்பு மற்றும் தீ அணைப்பு பயிற்சி ஆகிய ஐந்து பயிற்சிகள் பயிற்றுவிக்கப்படுகின்றன. இதுதவிர, கப்பல் இயக்கும் இயந்திர அறை கண்காணித்தல் பயிற்சி வகுப்பு மற்றும் அனுபவம் பெற்ற மாலுமிகளுக்கான கப்பல் செலுத்தும் கண்காணிப்பு பயிற்சி வகுப்பு போன்ற வகுப்புகள் டைரக்டர் ஜெனரல் ஆப் ஷிப்பிங் அவர்களது ஒப்புதல் பெற்றதும் விரைவில் தொடங்கப்பட உள்ளன.

## VII. நிறைவுரை

ஒரு நாட்டின் அல்லது பகுதியின் முன்னேற்றத்தைக் காண்பதற்கு சாலைகள் கண்கூடான அடையாளமாகும். எனவே சாலைப் பணிகளில் தரத்தை உயர்த்தி அதன் மூலம் முன்னேற்றப் பாதைக்கு சேவையாக உதவிடும் வகையில் சாலை குறித்த கொள்கை வடிவமைப்பில் பல சிறப்பான சீர்திருத்தங்களைச் செய்திட மாநில அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது. பொதுத் துறை நிறுவனத்தின் முயற்சியிலும், பொது மற்றும் தனியார் இணைந்து செயல்படும் முயற்சியிலும் சாலைக் கட்டமைப்பின் தரத்தை உயர்த்திட மேற்கூறிய கொள்கை முடிவு சிறந்த தூண்டு கோலாகவும், தகுதியை உயர்த்துவதாகவும் அமைந்துள்ளது.

ஒட்டுமொத்த தொழில் துறை மேம்பாட்டிற்கு உகந்த வகையில் மாநில அரசு பல்வேறு திட்டங்களின் மூலம் துறைமுகத் துறையையும் முன்னேற்றிட தகுந்த நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

மேற்கூறிய கொள்கைகளை முழுமையாக நிறைவேற்றினால் இப்புத்தாயிரம் ஆண்டில் உன்னத நிலையை நாம் அடைந்திட முடியும்.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
2-4480
சென்னை-600 008

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
816, Anna Salai,
Chennai-600 002.

©
Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing. Chennai-600 002.